# தமிழ் இலக்கிய வரலாறு

பேராசிரியர்:
மு. சு. அருள்சாமி. எம். ஏ

-Eswari-

# தமிழ் இலக்கிய வரலாறு

பேராசிரியர் மு. சு அருள்சாமி எம். ஏ.
தமிழ்த்துறைத் தலைவர்
இலயோலாக் கல்லூரி, சென்னை-34.

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1

முதற் பதிப்பு: சூன் 1969.
இரண்டாம் பதிப்பு: ஆகஸ்ட், 1970

விலை. ரூபா. 4-00

ஆசிரியரின் உரிமை நூல்கள்

**நாடகம்**

சேரிப் பெண்

வாழ்வரசி

**கடிதம்**

காதலிக்கு

தோழர்க்கு

**கதைகள்**

ஈசாப் நீதிக் கதைகள் (மூன்று பகுதிகள்)

புறநானூற்றுச் சிறு கதைகள் (இரண்டு பகுதிகள்)

**உரை**

நீதி நூல்கள்

அச்சிட்டோர்:
ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ்,
81-5, பாண்டி பஜார்,
தி. நகர், சென்னை-17

# முன்னுரை

சுமார் ஓர் ஆண்டிற்கு முன் இரண்டாம் ஆண்டுப் பட்ட வகுப்பில் மாணவர் ஒருவர் எழுந்துநின்று ''நீங்களும் ஓர் இலக்கிய வரலாறு நோட்ஸ் போடுங்களேன், ஐயா'' என்ருர். எனக்கும் அவ் ஆசை தோன்றியது. தமிழ் இலக்கிய வரலாறு எழுத நினைத்தேன்.

ஆனல் மாணவர் 'நோட்ஸ்' என்று குறிப்பிட்டது நெஞ்சில் உறுத்திக் கொண்டே இருந்தது. மாணவர் மதிப்பீட்டில் தவறு காண்பதற்கில்லை. பட்ட வகுப்பிற்கென வெளி வந்துள்ள இலக்கிய வரலாறுகள் பலவும் நோட்ஸ் நிலையிலே உள்ளன. நோட்ஸுக்கு நோட்ஸாகவும் சில தோன்றியுள்ளன. இந்த இலக்கிய வரலாறுகளைப் பார்த்தபோது வேறு உண்மைகளும் புலப்பட்டன.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை போல் இலக்கிய வரலாறு எழுதத் தொடங்கிச் சிலர் இலக்கிய இன்கவித் திரட்டாக்கியுள்ளனர். நூலின் வரலாற்றை விளக்குவதற்குப் பதிலாக நூலின் பாடல்களைத் தொகுத்து இலக்கிய வரலாறெனக் காட்டியுள்ளனர். 'பாநலம் பாராட்டல்' என்பதற்

குரிய முயற்சியும் அதில் காணப்படுகிறதே யொழிய இலக்கிய வரலாறு தோன்றவில்லை.

இன்று இலக்கியமானது, இலக்கியம், இலக்கியக் கொள்கை, இலக்கிய வரலாறு, திறனய்வு, மொழியியல், ஒலியியல், இலக்கணம் போன்ற பிரிவுகளாகப் பகுத்துப் பார்க்கப்படுகிறது. இலக்கிய வரலாறு தனித்துறையாக விளங்குகிறது. இலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சியில் குறித்த இலக்கியம் நிற்கும் நிலையும் பெறும் இடமும் அதனல் ஏற்பட்ட மாற்றம் அல்லது வளர்ச்சியும் விளக்கப்படல் வேண்டும். இதனல் இலக்கிய வரலாறு எழுதுவார்க்கு மிகுந்த பொறுப்புணர்ச்சி வேண்டும் என்பது தெளிவாகிறது.

ஒருவர் மூல நூல்களிலிருந்தோ ஆராய்ச்சி நூல்களிலிருந்தோ முயன்று திரட்டி எழுதிய செய்திகளை மற்றவர் கூச்சமின்றித் தனதுடைமையாக்கி யிருப்பதைக் காண்கிறேம். பிற புதிய வெளியீடுகள் வந்த போதெல்லாம், அவற்றில் புதிதாக வந்தவற்றைத் தொகுத்துக் கொண்டே தம் நூலைப் பெருக்கியிருப்பதைக் காண்கிறேம். அதனைப் பார்க்கும் போதெல்லாம் சூளைமேட்டுக் காட்சி யொன்று தான் நினைவுக்கு வருகிறது. வழி நடந்து செல்லும் சிறுவர் காலினின்று விழுந்தகாலணியை அக்கணமே எடுத்தோடுவர் சிறு திருட்டாளர். மறுநாள் அம் மிதியடி பிறர் காலில் இருக்கக் கண்டாலும் 'நமதென'க் கேட்க முடியாது. சொல்லவும் முடியாது.

எழுத எடுத்துக்கொண்ட ஆசிரியர் இயற்றியது நூலா, பாடலா என்ற வேறுபாடு கூடத் தெரியாமல் எழுதியிருக்கின்றனர். மூல நூலைக் கண்ணுலாவது பார்க்கும் முயற்சியுமின்றி இலக்கிய வரலாற்ருளர் ஆகியிருக்கின்றனர் என்பது வெளிப்படுகிறது.

பத்து ஆண்டுகட்கு மேலாக இலக்கிய வரலாறு பயிற்றி வந்த அனுபவங்கள், திரட்டிய குறிப்புக் களோடு ஓராண்டுக் காலமாக மூலநூல்கள் இலக் கிய ஆராய்ச்சிகளைப் படித்துச் சேர்த்த செய்திகளை யும் பயன்படுத்தி இந்நூல் எழுதியுள்ளேன். கா. சு. பிள்ளை, மயிலை சீனி வேங்கடசாமி, மு. கோவிந்த சாமி, இலங்கை சிவத்தம்பி, க. கைலாசபதி முதலியோர் நூல்களும் அண்ணுமலைப் பல்கலைக்கழக இலக்கிய வரலாற்று வெளியீடுகளும் சைவ சித்தாந் தக் கழக இலக்கிய மாநாட்டுச் சொற்பொழிவுகளும் பெரிதும் பயன்பட்டன. அவர்கட்கு என் நன்றி உரியது.

இந்நூல் பல்கலைக் கழகத்தாரின் பாடத் திட்டம், தேர்வு விஞக்களுக்கிசையும்படி அளவான அமைப்புடையது.

இலக்கிய வளர்ச்சி அல்லது மாற்றத்தில் ஒவ் வொரு நூலும் பெறும் இடத்தை விளக்கும் முயற் சியை இதில் காணலாம்.

புறநானூறு, சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்றவற்றிற்கு முற்றிலும் புதிய முறையில் வரலாறு தரப் பெற்றுள்ளது.

சங்கம் உண்மை, சங்க இலக்கியப் பெருமை இவற்றிற்குத் தெளிவான விளக்கங்கள் உள்ளன.

முன்ஞேர் கண்ட வரலாற்ருேடு புதிய செய்தி களும் தரப்பெற்றிருப்பதை ஆங்காங்கே காணக் கூடும்.

அடிக்கடி கேட்கப்படும் விஞக்கட்கு உரிய விடைகளைச் செப்பமான கட்டுரை வடிவில் சேர்த் துள்ளேன்.

தற்காலப் பகுதிகள் வேண்டிய அளவு விளக்க முடன் தரப்பட்டுள்ளன.

எளியதும் தெளிந்ததுமான நடையில் மாணவர் விரும்பிப் படிக்கும்படி சுவையுடையதாகச் செய்திகள் தரப்பட்டுள்ளன.

தமிழ் உணர்வின் அடிப்படையில் நின்று அனைத்தும் எழுதப் பெற்றுள்ளது.

பேராசிரியர்களும் மாணவர்களும் ஆதரவு நல்குமாறு அன்புடன் வேண்டுகிறேன். பாரி நிலைய அதிபர் தமக்கே உரித்தான அன்போடு இந்நூல் வெளிவருவதற்கு துணைபுரிந்துள்ளார். அவ் அரிய நண்பர்க்கு என் நன்றி.

அன்புள்ள

**மு. சு. அருள்சாமி**

# நூற்பொருள்

**சங்ககாலம்**


| | | |
|---|---|---|
| 1. | பழந்தமிழகமும் தமிழின் தொன்மையும் | 9 |
| 2. | முச்சங்கங்கள் | 13 |
| 3. | சங்கம் உண்மைக்கு மறுப்பும் விடையும் | 18 |
| 4. | சங்ககாலம் தமிழினுக்குப் பொற்காலம் | 23 |
| 5. | அகத்தியம் | 27 |
| 6. | தொல்காப்பியம் | 30 |
| 7. | அகம் புறம் | 35 |
| 8. | சங்க இலக்கியம் | 39 |
| 9. | எட்டுத் தொகை | 40 |
| 10. | அகத்தொகை நூல்கள் ஐந்து | 42 |
| 11. | பரிபாடல் | 62 |
| 12. | புறத்தொகை நூல்கள் | 66 |
| 13. | பத்துப்பாட்டு | 75 |
| 14. | ஆற்றுப்படைப் பாட்டுக்கள் | 76 |
| 15. | மாநகர்ப் பாட்டுக்கள் | 85 |
| 16. | காதல் பாட்டுக்கள் | 91 |
| 17. | சங்க இலக்கியச் சிறப்பியல்புகள் | 97 |


**சங்க மருவிய காலம்**


| | | |
|---|---|---|
| 1. | பதினெண் கீழ்க் கணக்கு | 105 |
| 2. | முத்தொள்ளாயிரம் | 122 |
| 3. | பெருங்காப்பியத் தோற்றம் | 124 |
| 4. | இரட்டைக் காப்பியங்கள் | 126 |
| 5. | பெருங்கதை | 135 |

## பக்தி இலக்கியகாலம்

1. சைவப் பக்தி இலக்கியங்கள் 141
2. வைணவப் பக்தி இலக்கியங்கள் 147
3. பன்னிருதிருமுறைகள் 157

## சோழர் காலம்

1. ஐம்பெருங்காப்பியங்கள் 159
2. ஐஞ்சிறு காப்பியங்கள் 166
3. சைவ வைணவக் காப்பியங்கள் 168
4. பிற காப்பியங்கள் ; புராணங்கள் 175
5. இலக்கண நூல்கள் 178
6. உரையாசிரியர்கள் 185
7. பௌத்தர் தமிழ்த் தொண்டு 189
8. சமணர் தமிழ்த் தொண்டு 193
9. காப்பிய வளர்ச்சி 197

## பிற்காலம்

1. பிரபந்தங்கள் 204
2. தனிப்பாடல் திரட்டுப் புலவர்கள் 221
3. பிற்காலச் சமயப் புலவர்கள் 229
4. மடங்கள் 237
5. தல புராணங்கள் 239

## தற்காலம்

1. மேனாட்டுத் தமிழ் அறிஞர்கள் 241
2. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் 247
3. தற்காலப் புலவர் பெருமக்கள் 251
4. தற்காலக் கவிஞர்கள் 272
5. கிறித்தவர் தமிழ்த் தொண்டு 281
6. இசைத் தமிழ் வரலாறு 285
7. நாடகத் தமிழ் 289
8. உரை நடை வளர்ச்சி 296
9: புனை கதை : i சிறுகதை ii நாவல் 301
பல்கலைக் கழக வினாக்கள் 316

# சங்க காலம்

## 1. பழந் தமிழகமும் தமிழின் தொன்மையும்

பழந்தமிழகம் குமரி முனைக்குத் தெற்கே வெகு தொலைவு வரை பரவிக் கிடந்தது. இன்றைய தென்கடல் அன்று நிலமாக இருந்தது. குமரிமலையினின்று குமரி ஆறும் பன்மலை அடுக்கத்தினின்று பஃறுளி ஆறும் தோன்றி அந் நிலத்தை வளம் செய்தன. பஃறுளி ஆற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடைப்பட்ட நிலம் பெருவளநாடு எனப்பட்டது. பஃறுளியாற்றங்கரையில் இருந்த தென்மதுரை பாண்டியன் தலைநகராய் விளங்கியது. பெருங் கடற்பெருக்கு ஏற்படவே குமரியாற்றிற்குத் தெற்தில் இருந்த நிலப்பகுதி கடலினுள் ஆழ்ந்தது. பின்னுமொரு கடற்பெருக்கு நிகழக் குமரியாறும் குமரிமலையும் கடலுள் மறைந்தன. அன்று முதல் இன்று வரை குமரிமுனை தமிழகத்தின் தென் எல்லையாய் உள்ளது. நெடுங்காலமாக வடவேங்கடம் தமிகத்தின் வட எல்லையாய் இருந்து வந்தது. பழந்தமிழ் நூல்களும் அவற்றின் உரைகளும் 'ஸ்காட் எலியட்' என்னும் அறிஞரின் 'இழந்த லெமூரியா' என்னும் நூலும் இக்கடற் பெருக்குக் கொள்கைக்குத் துணைபுரிகின்றன.

தமிழர் பிறநாடுகளிலிருந்து இங்கு வந்தனர் என்பதற்குத் தக்க வரலாற்றுச் சான்றுகள் இல்லை. தொன்று தொட்டே இந்நிலப்பகுதியைப் பிறப்பிடமாகக்கொண்டு காலப்போக்கில் இயல்பாகவே நாகரிக வளர்ச்சியுற்றுச் சிறந்தனர் என்று கருதலாம். இதனாலேயே 'பழங்குடி' என்பதற்குப் பரிமேலழகர் 'படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் குடி' என்று பொருள் உரைத்தார்.

கி. மு. ஐந்தாம் நூற்றுண்டுக்குப் பிற்படாத நூல் எனக் கருதப்படும் தொல்காப்பியம் அதற்கு முற்பட்ட தமிழர் பற்றி வரையறுத்துக் கூறியிருக்கிறது. மலைநிலத்தில் குறவரும் காட்டகத்தே ஆயரும் வயலிடத்தில் உழவரும் கடலோரம் பரதவரும் வாழ்ந்தனர் என்று அறிகிறோம். அவர் வகுத்துக் கூறிய தொழில்கள் இன்றும் நடைபெறுகின்றன. அவர் குறிப்பிட்ட விலங்கு, பறவை, மரம், செடி, கொடி முதலியன இன்றைய தமிழகத்திலும் காணப்படுகின்றன. இதனால் தமிழர் இந்நிலப் பகுதியிலேயே ஒன்றிய வாழ்வினர் என்பது உண்மையாகிறது.

அப்பழங்காலத்திலேயே தமிழர் மிக்க நாகரிகம் வாய்ந்தவராய் விளங்கினர். அரசன், அந்தணன், வணிகன், வேளாளன் என்ற பிரிவுகளைக் கொண்ட சமுதாயம் இருந்தது. தமிழர் காதலும் வீரமும் வாழ்க்கையாய்க் கொண்டு ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த குடும்ப வாழ்க்கையைப் போற்றினர். கல்வியறிவு போற்றிக் கலையின்பம் துய்த்து உழவுத் தொழில் நடத்திச் சிறப்புற்றுத் திகழ்ந்தனர்.

தமிழரை உள்ளடக்கிய திராவிட இனம் வகுத்த வரலாற்றறிஞர் திராவிடர் தென்னிந்தியாவிற்கே உரியவர் என்கின்றனர்; ஆரியர் இந்நாட்டிற்கு வருவதற்கு முன்னரே நாகரிகத்தோடு திகழ்ந்தனர் என்று கூறுகின்றனர். திராவிட நாகரிகம் ஆரிய நாகரிகத்திற்கு முற்பட்ட சிந்து வெளி நாகரிகத்தோடு தொடர்புடையது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பழங்காலந்தொட்டே தென்னிந்தியாவிற்கும், சிந்துவெளிக்கும் சுமேரியா நாட்டிற்கும் தொடர்பிருந்தது. தென்னாட்டிற்கும் சுமேரியாவுக்குமிடையே இருந்து வந்த வாணிபம் பின்னர்ப் பாபிலோனியா, எகிப்து வரை பரவியது. 'சாலமன்' மன்னன் கட்டிலுக்குத் தமிழ் நாட்டு யானைத் தந்தம் அழகு செய்தது. அசீரியர் தாம் செய்த போர்களில் இந்நாட்டு யானைகளைப் பயன் படுத்தினர். சுமேரியர் தமிழ்த் தேக்குமரத்தைக் கட்டிடங்களுக்குப் பயன்படுத்தினர். கிரேக்கரும் உரோமானியரும்

தமிழரோடு செய்த வாணிபம் பற்றி மேலை நாட்டு வரலாற்றுக் குறிப்புக்களாலும் சங்க நூல்களாலும் சற்று விரிவாக அறிய முடிகிறது. இதனால் பண்டைக் காலத்தில் நாகரிகத்தோடு சிறந்து விளங்கிய சுமேரியர், பாபிலோனியர், கிரேக்கர், உரோமர் போன்ற இனத்தவருள் தமிழரும் ஓர் இனத்தவர் ஆவர் என்பது தெளிவாகிறது.

தமிழர் பெருமையைக் கணிப்பதற்குத் தொன்மை நலமும் சிறப்பியல்புகளும் வாய்ந்த தமிழே சிறந்த அளவுகோலாக அமைந்துள்ளது. தமிழின் தொன்மை, திட்ப நுட்பம், இயற்கை, வளம் முதலியவற்றை அறிவதற்குத் தொல்காப்பியமே சிறக்கப் பயன்படுகிறது. 25 நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ் முப்பது மூல ஒலிகளையும் அவற்றின் கலப்பால் தோன்றும் பல சார்பொலிகளையும் கொண்டு விளங்கியது. தமிழின் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் தெளிவும் செப்பமும் நிறைவும் வாய்ந்தவை. மக்களின் வாழ்க்கையை விளக்குவதே இலக்கியம் என்னும் கொள்கை சிறக்குமாறு பொருளதிகாரம் என்ற வாழ்க்கை இலக்கணம் வரையறுத்த இலக்கிய மரபுகளை உடையதாய் அமைந்துள்ளது.

வரலாறு காணா மிக்க பழங்காலம் தொடங்கியே இயற்கைச் சூழலில் தோன்றித் தமிழ் இனத்தாரின் சிந்தனை வளம், செயல்திறன்களுக்கிசைய இயல்பாகவே வளர்ந்து அயலார் தொடர்பால் வரம்பும் வலிமையும் நிரம்பப்பெற்று வளர்ந்தேறி வந்துள்ளது தமிழ் மொழி. இந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் ஒலி, உள்ளம் முதலியவற்றைத் தமிழ்ச் சொல்லில் காணலாம். இம்மண்மேல் உள்ள விலங்கு, பறவை முதலிய இயற்கைப் பொருளோடு தமிழ்ச்சொற்கள் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன, இக்கருத்தையே தொல்காப்பியர் ‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’ என்பதில் காட்டுகிறார்; தமிழ் இயற்கை மொழி; இதனால்தான் இன்றும் அழியாமல் இயங்கி வருகிறது; நம்மை இயக்கியும் வருகிறது.

ஆரிய வேதத்தைத் தமிழர் எழுதாக் கிளவி என்றனர்; இதனால் அக்காலத்தில் ஆரிய மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை என்பது வெளிப்படையாகும். ஆரிய மொழியிற் காணப்படும் எழுத்துக்களும் பிறவும் அம்மொழிக்கு இனமாகிய இலத்தீனம், கிரேக்கம், எபிரேயம் முதலிய மொழிகளில் இல்லாமையால் இந்தியாவை அடைந்த ஆரியர் அங்கு வாழ்ந்த தொல் குடிகளான தமிழரின் எழுத்து முறைகளைப் பின்பற்றியதுடன் லிபிகளையும் ஆக்கிக் கொண்டார்கள் என்பது திண்ணம் (**Dravidian India**). சமக்கிருதம், எபிரேயம், கிரேக்கம் என்ற மூன்று பழைய இலக்கிய மொழிகளில் தமிழ்ச்சொற்கள் காணப்படுகின்றன. (**Rheys Davids**) 'இந்து — ஐரோப்பிய மொழிகளின் சொற்கள் பலவற்றின் மூலங்கள் தமிழில் காணப்படுகின்றன என்பது யூகமன்று; அகன்ற ஆராய்வின் பின் கொண்ட முடிபு' என்பார் நல்லூர் ஞானப்பிரகாசர்; மேலும் அப்பெரியார் ''சுமேரிய மொழி மிக்க பழமை வாய்ந்தது; தமிழ்மொழியில் உள்ள மிகப் பழைய சொல் வடிவங்களோடு பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த சுமேரிய சொல் வடிவங்களை ஒப்பிடும் போது சுமேரிய மொழி தமிழுக்கு இளமையுடையதாய்க் காணப்படும்'' என்று கூறுகிறார். வட இந்தியாவில் வாழ்ந்த மொகஞ்சொதாரோ மக்கள் திராவிட மொழியை வழங்கினர். அவர்கள் வழங்கிய சொற்கள் பெரிதும் தமிழில் காணக்கிடக்கின்றன. இதனால், இப்பொழுது வழங்கும் மொழிகள் எல்லாவற்றுள்ளும் தமிழ் மிகப் பழமை வாய்ந்தது என்னும் கொள்கை வலு வாய்ந்ததாகிறது. தோகை (மயில்) என்ற சொல் துக்கி என்று எபிரேய மொழியில் வழங்குகிறது. தமிழ் அரிசியினின்று கிரேக்க ஒரிசி வந்தது. திராவிடமொழியினம் வகுத்த மொழி நூல் அறிஞர்கள் அவ்வினமொழியினத்தில் தமிழே முதன்மை பெற்று விளங்கியது என்கின்றனர். இதனால் தமிழ் மிக்க தொன்மையுடைய மொழி என்பது நன்கு விளங்குகிறது.

உலகச் செம்மொழிகளிலே தமிழ் ஒரு மொழியாகும். எத்தனையோ நூற்றாண்டுகட்கு முன்னர்த் தோன்றியதாயினும் இன்றும் பேசவும் எழுதவும் சிறந்த மொழியாய்.

விளங்குகிறது. காலப்போக்கில் நேரும் மாற்றங்கட்கிசைய நெகிழ்ச்சி உடையதாகித் திட்ப நுட்பமான கருத்துக்களை விளக்கவல்லதாய் இருந்து வருகிறது. பேச்சுக்கும் எழுத்துக்கு முள்ள இடைவெளி குறுகி முன்னோர் சிந்தனையைப் பின்னவர் தெளிவுறத் தெரிந்துகொள்ளுமாறு நிலையான வரம் புடையது.

தமிழ் சொல்வளம் பொருள்வளத்தோடு இலக்கிய வளமும் நிறைந்தது. தொல்காப்பியம், பாட்டு முதலாக ஏழு வகையான நூல்கள் இருந்தன என்று கூறுகிறது. முதலிரு சங்கங்களில் இருந்து மாய்ந்தனவாகக் கூறப்படும் நூல்கள் பலவாகும். கடைச்சங்கப் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் தமிழின் இலக்கிய வளத்திற்கும் மாட்சிமைக்கும் போதுமான சான்றுகளாக உள்ளன.

மங்காமல் வழி வழியாய் வளர்ந்து வரும் பெருமை வாய்ந்த மொழி தமிழ். சங்க நூல்களுக்குப் பின் சங்க மருவிய காலத்தில் பதினெண்கீழ்க்கணக்கும் இரட்டைக் காப்பியங்களும் எழுந்தன. அடுத்துள்ள சமய எழுச்சிக் காலத்தில் ஆழ்வார் நாயன்மார்களால் பக்திப் பாடல்கள் தழைத்தன. சோழர்காலத்தில் சிந்தாமணி, பெரிய புராணம், கம்ப ராமாயணம் முதலான பெருங் காவியங்கள் உருவா யின. பிற்காலத்தில் பற்பல பிரபந்தங்கள் தோன்றின. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் பாரதியார், பாரதிதாசன் போன்ற புதுமைக் கவிஞர்கள் பிறந்தனர். இன்று தமிழ், உரை நடை இலக்கியங்கள், சிறுகதை, நாவல், நாடகம் முதலிய பல்வகைத் துறைகளிலும் வளர்ந்து வருகிறது.

## 2. முச்சங்கங்கள்

சங்கம் என்பது தமிழ்ப் புலவர்களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தாரகமந்திரமாகவே இருந்து வருகிறது. வெவ்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களும் சங்கம் என்ற அமைப்பின் நினைப்பில் பொங்கிய உணர்ச்சியினைக் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளனர்; சங்கத்தையும் அதில் வளர்த்த தமி

மையும், சங்கப்புலவரையும் அதனைப் புரந்த அரசரையும், சங்கம் விளங்கிய மதுரையையும் குறிப்பிட்டுள்ளனர்.

இடைக்காலப் புலவரான ஔவையார் சங்கத்தில் இயல், இசை நாடகம் ஆய முத்தமிழும் வளர்ந்தமையை நினைவில் நிறுத்தியே ''சங்கத் தமிழ் மூன்றும் தா'' என்று கரிமுகக் கடவுளை வேண்டினார். அகத்தியர், தலை இடை ஆய சங்கங் களோடு கொண்ட உறவை விளக்கும் வகையில் கம்பர் 'தென் தமிழ் நாட்டகன் பொதியில், திரு முனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்' என்று பாடினார். சேக்கிழாரின் சங்கம் பற்றிய நம்பிக்கை 'தலைச்சங்கப் புலவர் தம் முன்' என்பதில் வெளிப்படுகிறது, சங்கத்தில் இயல் த்மிழ் இசைத் தமிழ் ஆராய்ச்சி நிகழ்ந்ததை நினைந்து வியந்த மாணிக்கவாசகர் தம் திருக்கோவையார்ப் பாடலில் இறைவனை நோக்கி ''உயர் மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின் துறைவாய் நுழைந் தனையோ, அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ'' என்று வின விஞர். திருமங்கையாழ்வார் தம் திருவாய் மொழியில் 'சங்க மலிதமிழ்', 'சங்க முகத் தமிழ்' என்று சிறப்பித்துள்ளார். சிவபக்தியோடு இரண்டறக் கலந்த தமிழ்ப்பக்தி மயக்கம் காரணமாகச் சிவனாரையே சங்கப் புலவராக்கிவிட்டனர். இதனைத் திருநாவுக்கரசர் 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி, நற்கனகக் கிழிதருமிக்-கருளினேன் காண்' என்ற அடி களில் காட்டுகின்றார்.

இடைக்காலப் புலவர்களே அல்லாமல் முற்காலப் புலவர் களும் சங்கம்பற்றிய குறிப்புக்களைத் தந்துவிட்டுச் சென்றிருக் கின்றனர். சங்கம் பாண்டியன் தலைநகரமான மதுரையில் இருந்ததும் அச்சங்கத்தால் மதுரை புகழ் பெற்றதும் தமிழ் இடையீடின்றி அதில் வளர்ந்ததும் 'தமிழ் கெழு கூடல் தண் கோல் வேந்தே' (புறம். 58) என்ற அடியாலும் 'தமிழ் நிலை பெற்ற தாங் கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை' என்ற சிறுபாணாற்றுப்படை அடிகளாலும் விளங்குகின்றன. பாண் டிய மன்னன் சங்கத்திற்குப் புரவலனாய் இருந்தாலும் சங்கப் புலவர்க்குத் தனித்தலைவர் உண்டென்றும் சங்கப் புலவர்கள் மன்னனைப் பாடவோ பாடாமலிருக்கவோ தன்னுரிமை பெற்றிருந்தனர் என்றும் அறிவதற்கு,

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை (புறம். 72)

என்ற அடிகள் துணையாகின்றன.

முறையாக ஆசிரியரிடம் கற்றுக் கேள்வியறிவு பெற்றுப் பழந்தமிழ் நூல்களில் பயிற்சி நிரம்பி மதியமைச்சர் போன்ற வல்லமை வாய்ந்தவரே சங்கத்தில் அமர்ந்து அரங்கேற்றப் பெறும் புதிய செய்யுட்களைக் கேட்டுப் பாராட்டு வழங்கினர் என்பதற்குச் சான்றாக,

மதுமொழி யிடன்மாலை வினைவர் போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர (கலி, 68)

என்னும் அடிகள் அமைந்துள்ளன. ஆண்டின் முதற் பருவமான இளவேனில் காலத்தில் தமிழகத்தின் வெவ்வேறு இடங்களிலிருந்தும் புலவர்கள் மதுரைக்கு வந்து தாம் பாடிய புதுப் பாடல்களை அரங்கேற்றினர் என்றும் அவ் அரங்கேற்றம் மதுரை மக்களுக்குப் பெருந்திருநாளாய் இருந்தது என்றும் விளக்குவனபோல்,

நிலனாவிற் றிரிதரூஉ நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ
(கலி. 35)

என்னும் அடிகள் அமைந்துள்ளன. இன்று இளவேனில் பருவத்தில் சித்திரைத் திங்களில் முழுமதி நாளன்று மதுரையில் நடைபெறும் திருவிழாவுக்கும் புதுப்பாடல் அரங்கேற்ற விழாவுக்கும் தொடர்புண்டோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

சங்கம் மூன்றாவதற்குக் கடல் கோள்களே காரணமாயிருந்தன. நாட்டைக் கடல்கொள்ள, தென்னவன் மிக்க திரைமேல் நீந்தி வந்து சேரன் சோழன் இருவர் தம் நாடுகளின் பகுதிகளை வென்று பெற்று நாடு அமைத்து அரசியல்

நடத்தினன் என்பதை, ''மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின், மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம் படப் புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த கிளர் கெண்டை, வலியினன் வணக்கிய வாடாச் சீர்த் தென்ன வன்'' என்னும் கலித்தொகை அடிகள் கூறுகின்றன. இரு முறை கடல்கோள் நிகழ்ந்தன என்பதற்குச் சிலப்பதிகாரத் தில் வரும் அடிகள் சான்றாக உள்ளன.

'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கமும்,

குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள' என்னும் சிலப் பதிகார அடிகளால் பஃறுளியாற்றொடு பன்மலை யடுக்கம் முதல் கடல்கோளிலும் குமரிக்கோடு இரண்டாம் கோளிலும் மறைந்தன என்று கொள்ளவேண்டும்.

தலைச்சங்கத்துக்கு இடமான தென்மதுரை இருந்த பஃறுளியாறு பாண்டியனுக்குரியதாய் விளங்கியதை,

'முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' (புறம்)

என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. இடைச்சங்கத்திற்கு இடமான கபாடபுரம் பாண்டியன் தலைநகரம் என்பதற்கு வான்மீகி இராமாயணத்தில் சான்று உளது.

(ஓ வானர வீரர்களே! பாண்டியர்க்குத் தக்கதானதும் வளமான பொன் கொண்டு முத்து மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதுமான கவாடத்தை அடைந்து சீதையைத் தேடுக; கிஷ்) என்பதில் கபாடபுரத்தின் சிறப்பு விளங்குகிறது. கௌடல்யரின் அர்த்தசாத்திரம் பாண்டிய கவாடம் முத்துக் குப் பேர்போன இடம் என்று கூறியிருக்கிறது.

முக்சங்கம் பற்றிய இச்செய்திகள் பல்வேறு காலத்து இலக்கியங்களில் குறிப்புக்களாய்ச் சிதறிக்கிடந்தாலும் இறை யனார் அகப்பொருளுரையில் வரலாற்று வரையறைகளுடன் விளங்குகின்றன. கடல் கொண்ட தென் மதுரையில் இருந்த தலைச்சங்கத்தில் அகத்தியர், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்தமுருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் முதலான 549 புலவர் வீற்றிருக்க, அகத்தி

யம் இலக்கண நூலாய் விளங்க, பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலான நூல்கள் பாடப்பெற்றன என்று கூறப்பட்டுள்ளது. 89 பாண்டிய மன்னரின் ஆட்சிக் காலமான 4440 ஆண்டுகள் அச்சங்கம் நிலவியதாம்.

கபாடபுரத்தில் இருந்த இடைச்சங்கத்தில் அகத்தியனுர், தொல்காப்பியனுர், இருந்தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க்காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன்மாறன், துவரைக்கோமான், கீரந்தை முதலான 59 பேர் வீற்றிருக்க, அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூத புராணம் முதலான இலக்கண நூல்கள் விளங்க, கலி, குருகு, வெண்டாழி, வியாழ மாலை அகவல் முதலான நூல்கள் தோன்றின என்று அகப்பொருள் உரை கூறுகிறது. அச்சங்கம் 59 பாண்டியரின் ஆட்சிக்காலமான 3700 ஆண்டுகள் நிகழ்ந்ததாம்.

இன்றைய மதுரையில் இருந்த கடைச்சங்கத்தில் சிறுமேதாவியார், சேந்தம் பூதனுர், அறிவுடை அரனுர், பெருங்குன்றூர்கிழார், இளந்திருமாறன், மதுரையாசிரியர் நல்லந்துவனுர், மதுரை மருதன் இளநாகனுர், கணக்காயர் மகனுர் நக்கீரர் முதலான 49 பேர் வீற்றிருக்க, அகத்தியமும், தொல்காப்பியமும் இலக்கண நூல்களாக விளங்க, நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலி, பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலான நூல்கள் பாடப்பெற்றன என்று உரை கூறுகிறது. 49 பாண்டியரின் காலமான 1850 ஆண்டுகள் அது நீடித்ததாம்.

'இறையனுர் அகப்பொருள்' என்னும் இலக்கண நூல் சிவபெருமானுல் இயற்றப்பெற்றது என்பது உண்மையன்று. தொல்காப்பியத்தில் விரிவாகக் கூறப்பட்ட அகப்பொருளைச் சுருக்கமாகக் கூற விரும்பிய ஒரு புலவரால் கடைச்சங்க இறுதியில் இயற்றப்பெற்ற நூல் என்று கொள்ளலாம். அப்புலவரின் பெயர் 'இறையனுர்' என்றதாய் இருந்திருக்கக்கூடும். அதன் உரை நக்கீரரால் எழுதப்பட்டது என்றும் அவ்வுரை வாய் வழி உரையாகக் கூறப்பட்டு வந்து, எட்டாம் நூற்ருண்டில் ஏட்டில் எழுதப்பட்டது என்றும் அறிகிருேம்.

இறையனார் அகப்பொருள் உரை' எழுதிய ஆசிரியர் சங்கம் பற்றித் தம் காலத்து வழங்கிய செய்திகளையும் தாம் கண்டாய்ந்த செய்திகளையும் திரட்டி வரையறை செய்து தந்திருக்கிறார். முதலிரு சங்கங்களின் செய்திகளைக் குறிப் பிடுங்கால் 'என்ப, என்ப' என்றே கூறுகிறார். கடைச்சங்க நூல்களைத் தாம் நேரில் கண்டாராதலின் 'என்ப' என்று கூற வில்லை. இதனால் உரையாசிரியர் வரலாற்றுணர்வுடனேயே எழுதினார் என்பது தெளிவாகிறது. கடவுளரும் சங்கங்களில் வீற்றிருந்தனர் என்பது போன்ற கற்பனைகளையும், சங்கங் களின் நீண்டகால வரம்பு, புலவர் எண்ணிக்கை முதலியன போன்றவற்றில் உள்ள மிகைகளையும் களைந்து அடிப்படை உண்மைகளைக் காணமுடியும்; "மூன்று சங்கங்கள் இருந்தன; பாண்டியர் அச்சங்கங்களின் புரவலராய் விளங்கினர்; அகத்தி யமும், தொல்காப்பியமும் ஆதி இலக்கண நூல்கள்; புலவர் கள் பலர் பாடல்களைப் பாடினர்; இன்று கைக்குக் கிடைத் துள்ள சங்க நூல்களே அல்லாமல் பல இலக்கண இலக்கிய நூல்கள் இருந்து பின் மாய்ந்தொழிந்தன' என்பன போன்ற வற்றை முச்சங்கம் பற்றிய உண்மைகளாகக் கொள்ள லாம். முற்கால இடைக்கால இலக்கியங்களில் காணப்படும் சங்கம் பற்றிய குறிப்புக்களும் இறையனார் அகப்பொருள் உரையும் சங்கம் உண்மைக்குத் தக்க சான்றுகளாகவே உள்ளன.

## 3. சங்கம் உண்மைக்கு மறுப்பும் விடையும்

'சங்கம் உண்டு' என்பதற்குத் தடையாக வர லாற்றறிஞரும், தமிழ் அறிஞர்களும் சிற்சில கார ணங்களைக் கூறுகின்றனர். ஒரு சாரார் முதலிரு சங்கங்கள் இருந்ததில்லை என்பர்; பிறிதொரு சாரார் மூன்று சங்கங் களுமே இருந்ததில்லை என்று கூறுவர். முதலிரு சங்கங்கள் இல்லை என்று உரைப்பவருள் குறிப்பிடத்தக்கவர்கள் **T. R.** சேஷகிரி சாஸ்திரி **V. R.** இராமசந்திர தீட்சதர், **K. A.** நீலகண்ட சாஸ்திரி, **S.** வையாபுரி பிள்ளை முதலியோர் ஆவர். தங்கள் கருத்தை நிலைநிறுத்த அவர்கள் கூறுங் கார ணங்களாவன.

1. தொல்காப்பியம் தவிர, தலை, இடைச்சங்க நூலாக எதுவும் கிடைக்கவில்லை.

2. முடிநாகராயர், வான்மீகியார், மார்க்கண்டேயனார், கோதமனார் போன்ற புலவர்களின் பாடல்கள் கடைச் சங்ககாலத்துத் தொகை நூலான புறநானூற்றில் இருக்க அவர்களை முதற் சங்கப் புலவர்கள் எனல் பொருந்தாது.

3. பனம்பாரனாரின் பாடல் கடைச்சங்கத்துக் குறுந் தொகையிலும் முடத்திருமாறன் பாடல் நற்றிணையிலும் இருக்க இருவரையும் இடைச் சங்க காலத்தவர் எனல் எப் படிப் பொருந்தும்?

4. கடைச் சங்க நூல்களிங் ஒன்பது பாண்டிய மன்னர், ஆறு சோழ அரசர் ஆகியோரின் பாடல்கள் இருக்க, அகப் பொருள் உரையில் 'பாடிய பாண்டிய மன்னர்' மூவர் எனல் முரணானது.

5. தமிழ்நாட்டில் உள்ள கி. மு. மூன்றாம் நூற்றாண்டுப் பௌத்தக் கல்வெட்டு வடமொழிக் கலப்புடைய பிராமி வடிவில் உள்ளது. இது திருந்திச் செப்பம் பெற்றே தமிழ் வரி வடிவம் ஏற்பட்டுப் பின்னரே தமிழ் இலக்கியங்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆதலால் முதலிரு சங்கங்கள் இருந்திருக்கக் காரணமில்லை. கடைச்சங்கம் என்பதும் கி. பி.. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில்தான் இருந்திருக்க முடியும்.

மூன்று சங்கங்களுமே இருந்ததில்லை என்பாரும் உண்டு. இவர்களுள் P. T. சீனிவாச ஐயங்கார், K. N. சிவராஜ பிள்ளை, கா. நமசிவாய முதலியார் போன்றோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர். தங்கள் கருத்தை வலியுறுத்த அவர்கள் கூறுங் காரணங்களாவன ;

1. சங்கம் என்ற சொல் தமிழ்ச்சொல் அன்று.

2. சங்க நூல்கள் எனக் கருதப்படும் இலக்கியங்களில் சங்கம் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை.

3. புலவர்கள் கூடிப் புலமையை நிலைநிறுத்தல் பிற் காலக் கருத்தாகும்.

4. போரும் பூசலும் மிக்குப் போராட்டமே நிலவிய நாளில் பலநாட்டுப் புலவர் ஓரிடத்தில் கூடித் தமிழ் ஆய்ந்தனர் என்பது உண்மையாகாது.

5. சமணரும் பௌத்தரும் சங்கம் அமைத்துச் சமயம் வளர்த்ததை முன் வைத்துத் தமிழ் பரப்பவும் சங்கம் வைத்திருந்தனர் என்ற கருத்தைப் பரப்பவே முச்சங்கக் கதையினைத் தோற்றுவித்தனர்.

6. (i) களவியல் உரை நம்பத்தக்கதாய் இல்லை. ஆதி இலக்கணமான அகத்தியருக்கு முற்பட்ட இலக்கியங்கள் பற்றி அவ்வுரைஎதுவும் குறிப்பிடவில்லை. (ii) சிவன், முருகன், குபேரன் முதலான கடவுளர் கலந்து கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (iii) முச்சங்கங்களில் குறிக்கப் பெற்றுள்ள அரசர், அவர்தம் ஆட்சி ஆண்டுகள், சங்ககால நீட்சி, புலவர்களின் எண்ணிக்கை முதலியன நம்பத் தக்கனவாய் இல்லை. (iv) வட மொழி எழுத்தெண்ணிக்கையான நாற்பத்தொன்பதை ஒட்டியே, கடல் கொண்ட நாடு 49 என்பதும் கடைச்சங்கப் புலவர் 49 என்பதும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

7; சங்கத்தின் இருப்பிடமாய்க் கூறப்படும் ஊரின் பெயரான 'மதுரை' என்பது வட சொல்; அவ்வூரில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்பது ஏற்கத்தக்கது அன்று.

இங்ஙனம் முதலிரு சங்கங்கள் இல்லை என்பாரும் மூன்று சங்கங்களுமே இல்லை என்பாரும் வேறு பல காரணங்களையும் கூறிச் சங்கம் உண்மைக்கு மறுப்புரை கூறியுள்ளனர். சங்கம் உண்மைக்கு மறுப்புக் கூறுவோரை இருவகையினராகப் பிரிக்கலாம். ஆங்கிலேயர் எழுதிய வரலாற்று நூல்களைக் கற்று அவர்கள் வகுத்த, மரபு வழி நின்று, ஆங்கிலப்பாணியில் உண்மை காண விரும்பி, இலக்கியக் குறிப்புக்களை முழு உண்மையெனக் கொளல் பொருந்தாது என்று வரலாற்றுச் சான்றுகளான கட்டிடம், கருவி, நாணயம் முதலான தடயங்கள் எங்கே என்று கேட்போர் ஒரு பிரிவினர். மற்றொரு பிரிவினர் வடமொழி தமிழுக்கு

முந்தியது எனவும், தமிழ் வட மொழியைப் பின்பற்றியே எழுத்து முதல் எல்லாம் வகுத்து வளம் பெற்றிருத்தல் வேண்டும் என்றும் கூறும் மயக்கக் கொள்கையால் பிணிப்புண்டவர் ஆவர்.

தமிழ் வடமொழிக்கு முந்தியது: தமிழ் எழுத்துருவம் பெற்று இலங்கிய நாளில் வடமொழியின் ஆதி நூல்களான நான்கு வேதங்கள் எழுத்து வடிவம் பெருமையால் 'எழுதாக் கிளவி' எனப்பட்டன. ''ஆரிய மொழியிற் காணப்படும் எழுத்துக்களும் பிறவும் அம்மொழிக்கு இனமாகிய இலத்தீனம், கிரேக்கம், எபிரேயம் முதலான மொழிகளில் இல்லாமையால் இந்தியாவை அடைந்த பின்னரே ஆரியர் இங்கு உறைந்த தொல்குடிகளான தமிழரின் எழுத்து முறைகளைப் பின்பற்றியதுடன் லிபிகளையும் ஆக்கிக் கொண்டனர் என்பது திண்ணம்'' என்று திராவிட இந்தியா (**Dravidian India**) கூறுகிறது. 'தமிழருடைய பழமையை நோக்குங்கால் ஆரியருடைய பழமை கணப் பொழுதிற்கு முந்திய ராய்ட்டர் (**Rüeter**) தந்திச் செய்தியை ஒக்கும்' என்று சென்னை முன்னுள் கவர்னர் சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கூறியுள்ளார்.

மறுப்புரை கூறும் தமிழ் வரலாற்றறிஞர் எல்லோரும் பழந் தமிழ்ப்புலவரின் உண்மை நாட்ட மனப்பாங்கினை உணரத் தவறிவிட்டனர். ஆரிய இலக்கியங்கள் பொய்யும் புனைவும் இயல்பிறந்த கற்பனையும் நிறைந்தவை. தமிழர் வாழ்வில் கண்ட உண்மைகளையே பாடியிருக்கின்றனர். பாரியை யிழந்த கபிலர் சேரனை அணுகியபோது 'உண்மையினையே பாடுவேன்' என்ற உறுதி மொழியோடு உறவைத் தொடங்கினர்; கனவிற்பாடாது நனவிற்பாடும் கபிலன் என்று பாராட்டப் பெற்றுள்ளார். ஆதலால் கடைச்சங்க நூல்களில் காணும் சங்கம் பற்றிய குறிப்புக்களெல்லாம் தக்க வரலாற்றுச் சான்றுகளாகக் கொள்ளத் தக்கவைகளே யாகும்.

அகப்பொருள் உரை வெறுங்கற்பனை எனல் ஆராய்ச்சியாகாது. அதனை ஆய்ந்து காண்பார்க்கு உரையாசிரியரின்

வரலாற்றுணர்வு விளங்கும். செவி வழிச் செய்திகளாக வந்தவற்றில் கற்பனையும் மிகையும் கலந்திருக்கக் கூடு மென்றே அச்செய்திகளைக் கூறுங்கால் 'என்ப' என்ப' என்று எழுதி யுள்ளார். 'அக்காலத்துப் போலும் பாண்டியநாட்டைக் கடல் கொண்டது' என்பதில் கால உண்மையை வரை செய்து கண்டுரைக்க முடியவில்லையே என்ற ஏக்கம் தொனிக்கிறது. கடைச்சங்க நூல்களைக் கண்டாராதலின் 'என்ப' என்ற சொல் எழவில்லை. உரையில் கலந்துள்ள கற்பனைகளையும் மிகைகளையும் நீக்கி உண்மை காணுங்கால், உரை முச்சங்க உண்மைக்கு வரலாற்றுச் சான்ருகவே நிற்கும்.

சங்கம் வட சொல்லாக இருத்தல், சங்கம் இருந்தது என்பதற்குத் தடையாகாது. சங்கம் என்ற பொருள் தரும் சொற்களான தொகை, கூடல், அவை, கழகம், முதலியன சங்க இலக்கியங்களில் உள்ளன; 'சங்கம்' என்ற சொல் சமணர் பௌத்தர்களால் பயன்படுத்தப்பட்டு வழக்கத்தில் வந்துவிட்டதால் மற்றச் சொற்கள் வழக்கற்றுப் போயின.

நூல் அரங்கேற்றம் என்பது நெடுங்காலமாக இருந்து வந்த தமிழ் மரபாகும்; இதனுல் நூலில் அவையடக்கம் கூறுதல் இலக்கணமாகிவிட்டது. தொல்காப்பியத்தின் அரங்கேற்றம் பற்றிய குறிப்பு அதன் பாயிரத்தில் உள்ளது. இளவேனில் காலத்தில் புதிய பாக்களை அரங்கேற்றியபோது பழந்தமிழ் நூலறிவு வாய்ந்த புலவர் கேட்டுப் பாராட்டினர் என்று கலித்தொகைப்பாடல் கூறுகிறது. நூல் அரங்கேற்றமே சங்கத்தின் தலையாய பணியாகும்; தமிழ்ப் பாடலின் பழமை எவ்வளவோ அவ்வளவு பழமை வாய்ந்தது சங்கம் என்று கருத இடமுண்டு.

ஓரிடத்தில் திரட்டி வைக்கப் பெற்ற பாடல்களிலிருந்தே பத்துப் பாட்டு, எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்தனர். சங்கம் என்ற அமைப்பு இருந்திருந்தாலன்றிப் பல்வேறு காலத்து வெவ்வேறிடத்துப் புலவர்கள் பாடிய பாடல்களை ஓரிடத்தில் திரட்டிப் பாதுகாத்து வைக்க

முடியாது. 'சங்கம் என்ற அமைப்பு சமணரோ பௌத்தரோ தமிழர்க்குக் காட்டிய அமைப்பு அன்று. தமிழர் பல்வேறு அமைப்புக்களைக் கொண்டிருந்தனர். அரசு, அமைச்சு, படை முதலியவை அமைப்புடன் விளங்கின. அவையறிதல், அவையஞ்சாமை என்ற திருக்குறள் அதிகாரங்களில் அவை முறைகளைக் காணலாம். ஊரின் மன்றம், வழக்குத் திர்க்கும் பஞ்சாயத்து முதலியனவும் தமிழர் வாழ்வில் உள்ள அமைப்புணர்வைக் காட்டும். மதுரையில் நீதிமன்றம் இருந்ததை மதுரைக் காஞ்சி கூறுகிறது. சங்கம் அல்லது அமைப்பு என்பது பழந்தமிழர் வாழ்வோடு ஒன்றிய ஒன்றாகும். ஆதலால் சங்கம் என்ற அமைப்பும் பாண்டியர் ஆட்சியில் அங்கமாய்த் தனித் தன்மையும் உரிமையும் விளங்க இருந்து வந்தது என்று கொள்ள வேண்டும்.

## 4. சங்க காலம் தமிழனுக்குப் பொற்காலம்

தமிழ் 2500 ஆண்டுக்கால இலக்கிய வாழ்வு உடையது. தமிழின் பழங்காலம் சங்ககாலம் எனப்படும். தொல் காப்பியத்தை இலக்கணமாகக் கொண்டு அகம் புறம் எனப்பட்ட இரு பிரிவில் நின்று பாடப் பெற்ற பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்களில் அடங்கிய பாடல்கள் தோன்றிய காலம் அது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டு சங்க காலத்தின் பின் எல்லை என்பர். இச்சங்ககாலமே தமிழ் வரலாற்றில் பொற்காலமாய்த் திகழ்ந்தது.

இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி என்பர். சங்க இலக்கியங்கள் மக்களின் இயல்பான வாழ்க்கையை இலங்கச் செய்கின்றன. அக்கால மக்களின் பல்வேறு வாழ்க்கை நிலைகளையும் இயல்பு குன்றாமல் விளக்குகின்றன. கடவுளரைப் பாடுதலையும் இயல்பிறந்த கற்பனைகளைக் கையாள்தலையும் சங்கப் பாடல்களில் காணுதல் அரிது. இயற்கையூடே வாழ்ந்த மக்களின் வாழ்க்கை அழகுகளைச் சொல்லோவியமாக அமைக்குங்கால், அவ்வியற்கை எழில்களைப் பின்னணிக் காட்சிகளாகக் கொண்டு அழகுக்கு அழகு பயப்பதுபோல்

அமைத்துச் சுவைமிகு இலக்கியமாக்கியுள்ளனர். ஆதலால் தமிழ் வரலாற்றில் சங்க இலக்கியம் தலையாய இடம் பெற்று விளங்குகிறது.

இலக்கியம் இலக்காகிய குறிக்கோளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பர். பாடப் பெறுவதற்கே அமைந்தாற் போன்ற தமிழர் வாழ்க்கை, அன்பையும் ஆண்மையையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நலங்கள் நிரம்பி விளங்கியது. ஆதலால் தமிழ்ப்புலவர் ஆண்மையை இடமாகக் கொண்ட வீரத்தையும் அன்பை நிலையாகக் கொண்ட காதலையும் பாடுதலையே குறிக்கோளாகக் கொண்டனர், புறப்பொருள் என்ற பெயரில் போரின் பல்வகை நிலைகளால் வீரத்தின் மேம்பாட்டை விளங்கச் செய்தனர். அறப்போர் செய்தலே ஆண்மை என்ற கருத்தில் போர் முறையில் கைக் கொள்ள வேண்டிய அறநெறிகள் வகுக்கப்பட்டன. வெறும் உடல் இன்பத்தைப் பெருக்கிக் காட்டும் வழிகளைக் கொள் ளாமல் காதல் இரு நெஞ்சம் ஒன்றப் பிறந்த புத்தன்பின் அழகைக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டனர். போரைப் போலவே காதலும் அறத்து வழிப்பட்டதாக அமைக்கப் பட்டது. சங்ககாலத்துப் புறப்பாடல்களிலே போராண்மைக் கனலின் பொறி பறக்க, அகப்பாடல்களில் காதலன்பின் தண்மை கனிந்தொழுகுவதைக் காணலாம். வீரமும் காதலும் இவ்வளவு மேம்பாடான நிலையில் உலகில் வேறு எந்த இலக்கியத்திலும் பாடப்பெறவில்லை என்று துணிந்து கூறலாம்.

சங்ககாலத்தில் தலைமைப்பேறு வாய்ந்த தக்க மன்னர்கள் நடத்திய அரசியல், தமிழ் வளம் பெருகித் திகழ்வதற்கு வாய்ப்பாய் அமைந்திருந்தது. தமிழகம் சேர சோழ பாண்டிய நாடுகளாகப் பிரிந்து, முப்பெரு வேந்தர்களின் அமைப்புடைய ஆட்சியில் அமைதி நிலவத் திகழ்ந்தது. கரிகாலன், நெடுஞ்செழியன், செங்குட்டுவன் போன்றோர் ஆற்றலும் அறிவும் ஒருங்கே அமையப்பெற்று உலகுக்குத் தலைமை இலக்கணம் விளக்குவார்போலத் தன்னேர் இல்லாத தலைவர் களாய்த் திகழ்ந்தனர். புலவர், பாணர், விறலி, கூத்தர் முத

லான கலைஞர்களைப் புரந்து கலைவளர்த்தனர். அரசர்களே புலமை நலங் கொழிக்கப்பாடும் திறன் பெற்றிருந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன், கடலுள்மாய்ந்த இளம் பெரு வழுதி, பாலை பாடிய பெருங்கடுங்கோ, சோழன் நல்லுருத் திரன் முதலியோரின் பாடற்சிறப்பை நாம் அறிவோம். அரசர் புலவர்க்கு உரிமையும் பெருமையும் வழங்கி அவர்தம் கூட்டுறவைப் பெரிதும் வேண்டினர். நெடுஞ்செழியனுக்கும் மாங்குடி மருதனுருக்கும், ஔவையாருக்கும் அதிகமானுக் கும், பாரிக்கும் கபிலருக்கும் உள்ள உறவை உலகம் அறியும். பாட்டுடைத் தலைவராயிருக்கவே பிறந்தவர் என வியக்கும் படியான அரசத் தலைவர்களின் நல்லாதரவில் தமிழ் இலக்கி யக்கலையும் சிறந்தோங்கி உச்ச நிலை எய்தியது.

சங்க காலப் பாவலர் புலவர்க்குரிய பெருந்தகுதி யாவும் நிரம்பப் பெற்றிருந்தனர். பழந்தமிழ் மரபில் பழகி நூல் பல பயின்று, ஆழ்ந்த உலகியல் அறிவொடு இயற்கையினையும் மக்கள் வாழ்க்கையினையும் கூர்ந்து நோக்கிக் கவி நெஞ்சம் வாய்ந்து பாடல் இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தனர். மனத் தூய்மையும் நல்லொழுக்கமும் உடையவராய்ப் பேருள்ளமும் பரந்தமனப்பான்மையும் வாய்க்கப் பெற்று மக்கள் நலத்தில் நாட்டங்கொண்டு பாடினர். பொருளைப் பெரிதெனக் கருதா மல் சுதந்திர உணர்வு மிக்கவராய் உண்மையெனப் பட்டதை அஞ்சாது எடுத்துரைத்தனர். வாழ்வியல் உண்மைகளை அனு பவவாயிலாகஅறிந்து உறுதிப்பொருள் உரைத்தனர். காணுக் கற்பனைகளில் நெஞ்சை அலையவிடாமல் கண்ணுரைக்கண்டதை உணர்ச்சியும் சுவையும் சேர்த்துப் பாடுவதில் வல்லவராய் விளங்கினர். அஞ்சா நெஞ்சமும் அன்புணர்ச்சியும் நட்புணர் வும் நடுநிலைப் பாங்கும் அவர் தம் பாடல்களுக்கு அழகும் உறுதியும் ஊட்டின. மக்கட்பண்பில் பல விந்தைகளைக்கண்டு வெளிப்படுத்தினர். கபிலர், பரணர், ஔவையார், கோவூர் கிழார், பூங்குன்றனுர் போன்ற புலவர் திலகங்களைக் கொண் டிருந்த காலம் பொற்காலமன்றோ?

இயற்கை யூடு வளர்ந்த தமிழர் வாழ்வு இயல்பாகச் செப்பமுற்றுச் சீர்மை எய்தி மனிதகுல வாழ்க்கைக்கே நல்ல

தோர் எடுத்துக்காட்டாய் விளங்கியது. அகமெனப்பட்ட குடும்ப வாழ்விலும் புறமெனப்பட்ட பொது வாழ்விலும் மக்கள், உணர்ச்சியும் ஆர்வமும் பொங்க ஈடுபாடு கொண்டிருந்தனர். புறவாழ்வில் உயிரைப் பொருட்படுத்தாமல் மானமும் புகழுமே கருதினர். முன்னாட்போரில் தன் கணவனை யிழந்தும், போரொலி கேட்டுப் பொங்கித் தன் ஒரே மகனை சிறுவன் கையில் வேல் கொடுத்து அனுப்பிய மறத்தி போன்ற மங்கையர் வாழ்ந்தனர். வினையே ஆடவர்க்கு உயிரெனக்கொண்ட வினையாளர் விளங்கினர். காதலுக்காகச் செல்வத் தந்தையின் வீட்டைத் துறந்து எளிய காதலன் இல்லத்துக் கூவல் நீரை உவகையுடன் பருகும் தியாக நங்கையர் வாழ்ந்தனர். செப்புலப் பெயல் நீர்போல் அன்புடை நெஞ்சங்கள் தாம் கலந்த வாழ்வையே அறிஞர் போற்றினர். தமிழகம் வீரமும் காதலும் விளையாடும் வினைக்களமாக. மக்கள் வாழ்க்கை பாடுவதற்கெனறே அமைந்தாற்போல் வனப்புடன் விளங்கியது. விருந்தோம்பிக் கொடை வழங்கி, நண்பர் கொடுத்தால் நஞ்சும் உண்டு அமையும் பண்பும் நாகரிகமும் கொண்டு, சிற்பம், ஓவியம் போன்ற கலைகளைச் சுவைத்துத் தொழில் பல செய்து, ஊர், மன்றம், அம்பலம் போன்ற சமுதாய அமைப்புக்கண்டு, கலை நலங் கொழிக்க வாழ்ந்த தமிழர்வாழ்க்கையைப் பாடல்களில் கண்டு இன்புறுகிறோம்.

தமிழ் தெளிவும்வரையறையும் வாய்ந்த எழுத்து, சொல், பொருள் இலக்கணம் உடையது. செய்யுள் இலக்கணம் செப்பமும் திட்பமும் பெற்றுள்ளதால் நால்வகைப் பாக்களை இன்னோசை ஒழுகப் பாடும் திறனை வழி வழியாகப் புலவர் பெற்று வந்தனர். மனவளம் வாய்ந்த புலவர் ஆழ்ந்ததும் அரியதும் நுட்பமானதுமான எண்ணங்களையும் அக உணர்ச்சிகளையும் புறக்காட்சிகளையும் நெஞ்சத்தில் கருதியதுபோல் விளக்கமுற வெளியிடுவதற்குச் சொல்வளம் இருந்தது. இதனால்தான் பற்பல புலவரும் பொன்னான பாடல்களைப் பாடிச் சென்றனர்.

சங்க கால இலக்கியத்தின் வளத்தையும் சிறப்பையும் எண்ணும்போதெல்லாம் இதயம் பெருமிதத்தால் பூரிக்கிறது.

காதலெனும் அன்புணர்ச்சியின் அழகு இலங்கப் பாடப் பெற்ற பாக்கள் அளவிறந்தன. வீரத்தை வருணிக்கும் பாடல்கள் பல பல. தத்துவக் கருத்துக்களைத் தெரிவிக்கும் பாடல்களும் பல உண்டு. இயற்கை பின்னழகு காட்ட மக்கள் வாழ்வை மனக்கண்ணால் கண்டபடியே சொல்லோ வியமாக்கியுள்ளனர். அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் போன்ற இனிய ஓசைகள் கொண்ட பாக்கள் செவிக்கு இன்பம் பயக்கின்றன. உவமையும் உருவகமும் சங்க காலப் புலவர்கே உரிய உடைமை எனும்படி அவை பாடல் அழகுக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் அமைந்துள்ளன. பத்துப்பாட்டின் ஆற்றுப்படைகள் வரலாற்றுச் சிறுகாவியம் எனத்தக்க அமைப்புடையவை. முல்லைப் பாட்டும், குறிஞ்சிப் பாட்டும், நெடுநல் வாடையும் காதல் சிறு காவியங்களாகும். பட்டினப்பாலையும் மதுரைக் காஞ்சியும் மாநகர் அழகு கூறும் சிறு காவியங்கள். நற்றிணையும் குறுந்தொகையும் அகநானூறும் அன்பின் ஐந்திணை ஒழுக்கங்களை, உணர்ச்சி பொங்கித் ததும்பக்கூறும் அமுதப்பாக்களின் தொகுப்பு நூல்கள். ஐங்குறுநூறு உருவகத்தின் வழியே உணர்ச்சியையும் சிந்தனையையும் தூண்டும். காதல் உள்ளத்தின் துள்ளல் உணர்ச்சியைக் கனிந்த ஓசையிலே கலித்தொகை காட்டுகிறது. கோணிக் குறுகிய கூனல் உள்ளத்தை நிமிர்த்தும் பாடல்களைக் கொண்டது புறநானூறு. சேர மன்னரின் வரலாற்றைத் தொகுத்துக் கூறுகிறது பதிற்றுப்பத்து. பண்கனிந்த பாடல்களைக் கொண்டது பரிபாடல். சங்க காலம் தமிழினுக்குப் பொற்காலமே ஆகும்.

## 5. அகத்தியம்

அகத்தியம் என்பது அகத்தியரால் எழுதப்பட்ட ஆதி இலக்கண நூலாகும். அதுவே தலைச் சங்கத்திற்கு இலக்கண நூலாக இருந்தது. இடைச் சங்கத்தில் தொல்காப்பியம் தோன்ற, இரண்டுமே இலக்கண நூல்களாக விளங்கின, கடைச்சங்கத்திற்குத் தொல்காப்பியம் சிறந்த நூலாக விளங்கியது. தொல்காப்பியத்தோடு அகத்தியம்

போட்டியிடமாட்டாமல் மெல்ல மெல்ல வழக்கிழந்து அழிந்துபட்டது என்று கொள்ளலாம்.

அகத்தியம் 12000 சூத்திரங்களை உடையதாய்ப் பேரகத்தியம் என்ற பெயரில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பனவியல், சோதிடம், கந்தருவம், கூத்து போன்றவற்றைக் கொண்டு இயல், இசை, நாடகம் பற்றிய முத்தமிழ் இலக்கண நூலாய் விளங்கியது என்பர்.

அகத்தியரிடம் தொல்காப்பியர் முதலாகப் பன்னிரு மாணவர் கற்றனர் என்றும் அப்பன்னிருவரும் பாடிய நூலே பன்னிரு படலம் என்றும் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. அகத்தியத்தோடு மன நிறைவு கொள்ளாமல் அதனிலும் சிறந்த இலக்கணம் படைக்கும் முயற்சி அக்காலத்திலேயே நிலவியது என்று அறிகிறோம். அகத்தியம் அழிந்து போயிற்று. பவானந்தம் பிள்ளை, உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியவற்றில் 103 சூத்திரங்களைத் தொகுத்துப் பேரகத்தியத் திரட்டு என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்.

அகத்தியர் மாணவராகக் கருதப்படும் பன்னிருவர் தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன் கழாரம்பன், அவிநயன், பெரிய காக்கை பாடினி, நத்தத்தன், வாமனன் (சிகண்டி) ஆவர். இவர்களுள் தொல்காப்பியர் தொல்காப்பியத்தாலும், பனம்பாரனார் தொல்காப்பியப்பாயிரம் பாடினார் என்பதாலும், அதங்கோட்டாசான் தொல்காப்பியம் கேட்டார் என்பதாலும், அறியப்படுகின்றனர். காக்கை பாடினி காக்கை பாடினீயம் என்ற இலக்கண நூல் பாடியதாகத் தெரிகிறது. பிறரைப் பற்றிய விவரங்கள் தெரியவில்லை.

ஏழியன் முறையது எதிர்முக வேற்றுமை
வேறெனை விளம்பான் பெயரது விகாரமென்று
ஓதிய புலவனும் உளன் ஒருவகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன் — என்பது

அகத்தியர் சூத்திரமாகச் சங்கரநமச்சிவாயர் உரையில் காட்டப்படுகிறது. இது உண்மையாயின் தொல்காப்பியர் இதன் கருத்தோடு மாறுபட்டுள்ளார். அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையின் மேற்கோள்களில் இசை, கூத்து பற்றிய சூத்திரங்கள் அகத்தியர் கருத்தைத் தழுவிச் செய்யப்பட்டனவாக உள்ளன. ''என்றைந்து பாலைத் திறமென்றூர் பூந்தாரகத்தியனூர்'' என்பதும் ''சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்று ஆய்ந்துற வகுத்தனன் அகத்தியன்தானே', என்பதும் முறையே இசை, கூத்து பற்றியன ஆகும். ஆதலால் அகத்தியரால் செய்யப்பட்ட முத்தமிழ் இலக்கண நூல் இருந்தது என்பது தெளிவாகிறது.

'அகத்தியம்' இயற்றிய அகத்தியர் யார்? அகத்தியர் என்ற பெயர் தமிழ் நாட்டிலும் வட நாட்டிலுமன்றிக் கம்போடியா, சாவகம் முதலிய நாடுகளிலும் கேட்கப்படுகிறது. வடநாட்டில் வேதகால அகத்தியர், இராமாயண கால அகத்தியர், பாரதகால அகத்தியர் எனப் பலர் இருந்தனர் என்று தெரிகிறது. தமிழ் நாட்டிலும் அகத்தியர் பலர் இருந்தனர் என்று கருதுகின்றனர். அவர்களுள் தமிழ் அறிந்து இலக்கணம் இயற்றிய அகத்தியர் எவர் என்று காண்பது அரிது.

மணிமேகலை தொடங்கிப் பிற்காலத் தமிழ் நூல்கள் வரை அகத்தியக்கதைகள் பலவற்றைக் கொண்டுள்ளன. பிற்காலத்தவர் அவற்றை ஒன்றேடொன்று பின்னிப் பிணைத்து எழுதி விட்டனர். ஆதலின் தமிழ் இலக்கண அகத்தியர் வரலாற்றைத் தனியே பிரித்துக் காணுதல் எளிதன்று. ஆயினும் சங்க நூல்களில் அகத்தியர் பற்றிக் காணப்படும் குறிப்புக்களை இணைத்துக்காண முயல்வதில் தவறில்லை.

அகத்தியர் பொதிய மலையை இருப்பிடமாகக் கொண்டவர்; ஒழுக்கத்தால் உயர்ந்தோராகப் போற்றப்பட்டவர்; இசையில் வல்லமை வாய்ந்தவர்; பாண்டிய மன்னனுக்குப் பெருந்துணையாயிருந்தவர். வான்மீகி இராமாயணத்தின் கிஷ்கிந்தா காண்டத்திலிருந்து, தென்கடலோரத்து மலைய

பருவத்தையடுத்து இம்முனிவர் தவச்சாலையுள்ளதென்றும் அறியப்படுகிறது. ''அந்த மலையின் சிகரத்திலே ஆதித்த னுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனிசிரேஷ்ட ரான அகத்தியரைக் காண்பீர்கள்'' என்று கிஷ்கிந்தா காண் டத்தில் காணப்படுகிறது.

அகத்தியருக்கு முன்னரே தமிழ்நாட்டில் செய்யுள்கள் சிறந்து விளங்கின. ஆதலால் தமிழ்ச் செய்யுள் வகைகளின் பல பெயர்களையும் தமிழ் மரபு வழக்குகளையும் இவர் தொகுத்தார் என்று கொள்ள வேண்டுமேயல்லாமல் படைத் தார் எனல் பொருந்தாது.

## 6. தொல்காப்பியம்

தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் தொன்மையானது. இதன் ஆசிரியர் தொல்காப்பியர் ஆவர். தொல்காப்பியம் இயற்றி யதால் தொல்காப்பியர் ஆனார் என்றும் தொல்காப்பியர் இயற்றிய நூல் தொல்காப்பியம் எனப்பட்டது என்றும் இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

தொல்காப்பியத்தின் காலம் பற்றி மிக்க வேறுபாடு உடைய கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் கி. மு. 5000 ஆண்டு வரை முன்னுக்குக் கொண்டு செல்வர். கி. பி. 500 ஆண்டு வரை பின்னுக்கு இழுத்து வருவாரும் உண்டு. ஆனால் அது கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்படாத நூல் என்று கொள்ளலாம். கடைச்சங்க நூல்களுக்கெல் லாம் தொல்காப்பியமே இலக்கணமாகத் திகழ்ந்தது. சங்க நூல்களில் சகர, ஞகரங்களில் தொடங்கும் சொற் களுக்குத் (சட்டி, ஞமலி) தொல்காப்பியத்தில் விதிகள் இல்லையாதலின் தொல்காப்பியம் சங்க நூல்களுக்கு முற்பட் டது என்பது தெளிவாகிறது.

தொல்காப்பியர் காலத்தில் தமிழ் எழுத்துருவம் பெற்றிருந்தது. தமிழில் பாட்டு, உரை, நூல், வாய் மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என எழுவகை நூல்கள் இருந்தன. உலக வழக்கான பேச்சு மொழிக்கும் செய்யுள்

வழக்கான எழுத்து மொழிக்கும் வேறுபாடு இருந்தது. தொல்காப்பியரே உடன்பட்டு ஏற்கும்படியான பல இலக் கண நூல்கள் இருந்தன என்பதை ''என்ப, என்மனுர்'' என்று சுமார் 287 இடங்களில் அவரே சுட்டிக் காட்டியுள்ளார். ஆனுல் தொல்காப்பியர் முன்னைய இலக் கிய இலக்கணங்களைக் கற்றதோடு தன் காலத்துப் பேச்சு வழக்கையும் எழுத்து வழக்கையும் ஆய்ந்து இயற்றிய அரிய இலக்கணம் தொல்காப்பியம். 'நாடக வழக்கினும் உலகி யல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கு.'' என்று தொல்காப்பியரே குறிப்பிடுதல் நம் கருத்துக்குத் துணை செய்வதாகும்.

பனம்பாரனுர் தொல்காப்பியத்துக்கு அளித்த பாயிரத் தில் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பதால் தொல்காப்பியர் 'ஐந்திரம்' என்ற வடமொழி இலக்கணத்தி லும் நிரம்பிய புலமை வாய்ந்தவர் என்பது வெளியாகிறது. வடமொழியில் 'ஐந்திரம்' என்ற பேரிலக்கணம் இருந்தது என்றும் கி. மு. 4-ஆம் நூற்ருண்டில் தோன்றிய பாணினி இலக்கணம் செல்வாக்குப் பெற அது அழிந்தது என்றும் கூறுவர். சிலப்பதிகாரத்துக் காடுகாண் காதையில் மறை யோன் கூற்ருக வரும் 'புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின், விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்' என்ப தில் இந்திரன் எழுதிய நூலான ஐந்திரமும் அது வழக்கற்றி ருந்தமையும் குறிப்பிடப்பட்டுள்ளன. தொல்காப்பியர் வட மொழியிலும் வல்லவராயினும் தமிழ் மரபு வழி நின்றே இலக்கணம் செய்தார். தொல்காப்பியம் இன்றும் நின்று வழங்குவதற்கு இஃதோர் காரணமாகும். வடசொல் தமிழில் கலப்பதற்கு வழி கூறுங்கால் 'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ. எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே'' என்ருர். இதனுல் தொல்காப்பியர் தமிழ் ஒலி மரபைக் காப்பதில் மிக்க ஆர்வங் கொண்டிருந்தார் என்று தெரிகிறது.

நூலின் அமைப்பு; தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையுடையதாய்

அகவல்பாக்களாலாகிய 1610 சூத்திரங்களைக் கொண்ட தாகும். ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது. அதிகாரத்தின் முதலில் பொது விதியையும் பின்னர்ச் சிறப்பு விதியையும் கூறி இறுதியில் புறனடை யைக் கூறிச் செல்கிறார்.

எழுத்ததிகாரம்: இது நூல் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என ஒன்பது இயல்புகளை உடையது. எழுத்துக்களின் வரிவடிவங்களை ஒலி வடிவங்சளின் குறியீடுகளாகக் கொண் டும் எழுத்துக்களையெல்லாம் ஒலி வடிவங்களாகக் கருதியும் இலக்கணம் வகுத்திருப்பது தொல்காப்பியரின் கூர்மதியினைக் காட்டுகிறது. அரிய முயற்சியின்றி எளிதாகச் சொல்லின் ஒலியெல்லாம் தெளிவாகப் புலப்பட ஒலிக்கும் வகையில், எழுத்தொலிகள் இயல்பாக இணைந்து நிற்கும் நிலையினைக் கண்டறிந்து இலக்கணம் வகுத்திருப்பது தனிச் சிறப்பாகும். 2500 ஆண்டுகள் கழிந்த பின்னரும் ஒலி மாற்றம் தேவை யில்லாத வகையில் அன்றே மூல ஒலிகள் முப்பதென வரை யறை செய்திருப்பது விந்தையேயாகும். பேச்சொலிகளை யுடைய எல்லா மொழிகளின் எல்லாச் சொற்களையும் தமிழ் எழுத்துக்களின் உதவியால் எழுதுதல் கூடுமென்று ஒலியியலில் வல்ல பா. வே. மாணிக்க நாயக்கர் கூறியிருக் கிறார். எழுத்து சார்ந்து நிற்கும் நிலையால் தோன்றும் சார்பொலிகட்கு வரிவடிவம் வகுக்காதது தொல்காப்பியர் நுண்ணறிவைக் காட்டுகிறது.

சொல்லதிகாரம்: சொற்றொடர் அல்லது வாக்கிய அமைப்பின் வழி நின்று சொல் இலக்கணம் வகுத்திருப்பது சிறந்த முறையாகும். வேற்றுமைக்கு உருபு வரையறையும் பொருளும் தந்து விரிவாக விளக்கியிருப்பது வாக்கியத்தில் வேற்றுமையின் இன்றியமையாமையைக் காட்டுகிறது. வேற்றுமை மயக்கம் கூறியிருப்பதால் வேற்றுமை உருபினும் வேற்றுமைப் பொருளுக்கே முதலிடம் அளிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. இது சிறந்த முறையாகும்.

'கடி சொல் இல்லை காலத்துப் படினே' என்பதால், தொல்காப்பியர், வளர்ந்து வரும் மொழியின் இலக்கண விதியில் மாற்றம் நிகழக்கூடும் என்ற எதிர்நோக்கு வாய்ந்த வர் என்று அறிகிறோம். வடசொல் தமிழில் கலப்பதற்குத் தொல்காப்பியர் வகுத்திருக்கும் இலக்கணம் எந்த அயல் மொழிச் சொல்லும் தமிழில் கலப்பதற்கு வகுத்த விதியா யிருப்பதோடு தமிழின் தனித்தன்மையைக் காக்கும் அரணு கவும் உள்ளது.

பொருளதிகாரம் : இது அகத்திணையியல், புறத்திணை யியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல் களைக் கொண்டது. எம்மொழிக்கும் எழுத்தும் சொல் லுமே இலக்கணமாயிருக்க, தமிழ் மட்டுமே பொருள் இலக்கணமும் உடையது. தொல்காப்பியர், அகம்புறமென இரு கூருய் அமைந்த வாழ்க்கையைப் பொருளாகக்கொண்டு அவ்விரண்டும் பற்றி விரிவான இலக்கணம் வகுத்துள்ளார். இலக்கியத்திற்குக் கருவியான செய்யுளை வெண்பா, அகவல்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடல், மருட்பா என்னும் ஆருக ஓசையால் வகைப்படுத்தியது தமிழின் இலக்கியச் சிறப்புக்குக் காரணமாய் இருந்தது. இலக்கியம் இடையருமல் தொடர்ச்சிகொண்டு நெடிது நின்றியங்க வேண்டுமாயின், மரபு போற்றப்படல் வேண்டும் என்பதை மரபியலில் காண்கிறோம். பொருளதிகாரத்தின் தெளிவான வரையறைகளையும் உறுதியான மரபுகளையும் இலக்கணமாகக் கொண்டு சங்கச் சான்ருேர்கள் பாடியமையால்தான் இன்றும் நாம் அப்பாடல்களை எளிதாக அறிந்து கொள்கிறோம்.

நூலின் சிறப்பு : தொல்காப்பியம், தமிழின்தொன்மை யினையும் இலக்கியச் சிறப்பையும் அறிவதற்கு உதவுவதோடு பழங்காலத் தமிழரின் சமுதாயம், அரசியல், சமயம் முதலியவற்றைக் காட்டும் வரலாற்றுக் கண்ணுடியாகவும் இலங்குகிறது. தமிழ் 2500 ஆண்டுகளாக அழி வின்றிக் கருதத்தக்க மாற்றம் எதுவுமின்றி வழிவழியாய் வளர்ந்தோங்கி வந்து இன்றும் இலக்கிய மொழியாய்

விளங்குவதோடு பேச்சு மொழியாகவும் திகழ்கிறது என்றால் தொல்காப்பியர் வகுத்த செப்பமான இலக்கணமே காரணமாகும்.

உரை : நாளடைவில் தொல்காப்பியப் பயிற்சி அரிதாகவே உரையாசிரியர் விளக்கம் கூறத் தொடங்கினர். இளம்பூரணர் மூன்று அதிகாரங்களுக்கும் உரை எழுதியுள்ளார். இன்றும் எழுத்துக்கு இளம்பூரணர் உரையே சிறந்ததெனப்படுகிறது. சேனவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உரை எழுதினர். சொல்லுக்குச் சேனவரையம் என்று பாராட்டுவர். பொருளதிகாரத்தின் நான்கு இயல்களுக்கு மட்டுமே பேராசிரியர் உரை கிடைத்துள்ளது. நச்சினர்க்கினியர் மூன்று அதிகாரங்கட்கும் உரையெழுதியிருக்கின்றனர். கல்லாடர், தெய்வச்சிலையார் போன்றவரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியிருக்கின்றனர். தற்காலப் புலவர்களுள் அரசஞ் சண்முகனர், சோமசுந்தர பாரதியார், பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, இராகவ ஐயங்கார், வெள்ளை வாரணனர், இலக்குவனர் போன்றோர் தொல்காப்பிய உரைக்குச் சிறந்தவர் ஆவர்.

ஆசிரியர் வரலாறு : தொல்காப்பியர் காப்பியக் குடியைச் சார்ந்தவராகக் கருதப்படுகிறார். இவர் ஜமதக்னி முனிவரின் புதல்வரான திவணதூமாக்கினி என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை. இவரை அகத்தியரின் பன்னிரு மாணவருள் முதல்வராகக் கொள்வர். இவர் நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்தவர் என்பதும் அதங்கோட்டாசானும் பனம்பாரனரும் அவர் காலத்துப் புலவர்கள் என்பதும் தொல்காப்பியப்பாயிரத்தில் விளங்குகிறது. இவர் தமிழ்ப் புலமையுடன் வடமொழிப் புலமையும் வாய்ந்து இலக்கண இலக்கியங்கற்றுத் தெளிந்தவர். நுட்பமும் திட்பமும் செறிந்த மொழியாராய்ச்சி வல்லுநர். தேர்ந்த இலக்கண அறிஞர்; புலமை மிக்கவர்; தத்துவஞானி; வரலாற்றறிஞர்; சமூகவியலாளர்.

## 7. அகம், புறம்

பொருள் : பழந்தமிழர் வாழ்க்கையினையே பாடுவதற் குரிய பொருளாகக் கொண்டனர். அப்பொருள் அகம், புறம் என்ற இரு பிரிவினுள் அடங்கும். அன்பை முதலாகக் கொண்டது அகம். புறமோ வீரத்தை அடிப்படையாகக் கொண்டது. அன்பும் வீரமும் ஒன்றையொன்று தழுவிச் சிறக்கின்றன. அவற்றுள் ஒன்று மற்றொன்றை நிறை வுறுத்தி, அவ்விரு பண்பும் இணையுங்கால், முழுமை கனிந்த மனித வாழ்க்கையைக் காண முடிகிறது. ஆதலால் அகம் புறம் என்ற இரு பிரிவில் மனிதகுல முழு வாழ்க்கையுமே அடங்கி விடுகிறது.

அகம் : பல்வகைக் குணங்களால் நிரம்பப் பெற்றுத் தலைமைப் பண்பு தோன்ற விளங்கும் காதலனும் காதலியும் கூடிப் பெறும் இன்பம் பிறர்க்குப் புலனாகாமல் தம் நெஞ்சு (அகம்) உணர்வால் மட்டும் உணரத்தக்கதாய் உள்ளது. ஆதலால் அவ்வின்பத்தை அடிப்படையாகக் கொண்ட காதல் வாழ்வாம் அகவாழ்வை அகம் என்றனர்... தொல் காப்பியர் அகப்பொருளை ஏழு திணைகளாகப் பகுத்தார். உயர்ந்த இன்ப ஒழுக்கங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆய ஐந்துமே இறையனாரால் அகப்பொரு ளாகக் கொள்ளப்பட்டு, அன்பின் ஐந்திணை என்று சிறப் பிக்கப்பட்டன. தொல்காப்பியரால் தாழ்ந்த இன்ப ஒழுக்கங் களாக வகுக்கப்பட்ட கைக்கிளையும் பெருந்திணையும் பின்னோரால் புறப்பொருளாகக் கருதப்பட்டன.

அகத்திணைகள் : ஐவகையான அன்பு ஒழுக்க நிகழ்ச்சி களுக்குக் களனும் காலமும் வகுத்துள்ளனர். திணை என்பது ஒழுக்கமாகும். குறிஞ்சித்திணை என்பது தலைவனும் தலைவியும் தனியே நேர்ந்து கூடி இன்புறுதலாகும். இந்த ஒழுக்கமும் இதனோடு சார்புடைய நிகழ்ச்சிகளும் மலையிலோ மலைசார்ந்த இடத்திலோ நடைபெறும். கூதிர், முன் பனிப் பருவங்களான ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் நடுச்சாமத் தில் இவ் ஒழுக்கம் நிகழ்தற்குரியது என்ற வரையறை செய்துள்

ளனர். முல்லைத்திணை, தலைவன் வினை காரணமாக வெளி யிடம் சென்றபோது தலைவி பிரிவுத் துன்பத்தைப் பொறுத் துக்கொண்டு வீட்டில் தங்கியிருத்தலாகும். இந்த ஒழுக்கமும் இதனோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும் காட்டிலோ காடு சார்ந்த இடத்திலோ நிகழ்தல் வேண்டும். கார்ப் பருவமான ஆவணி, புரட்டாசி மாதங்களின் மாலைப்பொழுது இவ் வொழுக்கத்திற்கு ஏற்ற காலமாகும். தலைவன் பரத்தை யொடு உறவுகொண்டான் என்று தலைவி பிணங்கி ஊடுதல் மருதத்திணையாகும். இத்திணை வயல் வளம் செறிந்த மருத நிலத்திற்குரியது. ஆண்டின் பன்னிரு திங்களின் விடியற் பொழுதெல்லாமே இதற்குரிய காலமாகும். தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி பிரிவுத் துயர் பொறுக்கமாட்டாமல் ஏங்கித் தவித்தல் நெய்தல் திணையாகும். கடலும் கடல் சார்ந்த இடமெல்லாம் இவ்வொழுக்க நிகழ்ச்சிகளுக்குரிய இடமாகும். ஆண்டு முழுவதும் காலைப்பொழுது அதற்குரிய காலமாகும். காதலர் பிரிதலும் அப்பிரிவை ஒட்டிய நிகழ்ச்சி களும் பாலைத்திணையாகும். மாசி முதல் ஆடி முடியப் பின் பனி, இளவேனில், முதுவேனில் ஆய பருவங்களில் நண்பகல் பொழுது இவ் ஒழுக்கத்திற்குரிய காலமாகும். அன்பின் வழிப்பட்ட ஐவகை இன்ப ஒழுக்க நிகழ்ச்சிகளுக்கு நிலமும் பொழுதும் கூறியதோடு அவற்றிற்கு அழகு ஊட்டவேண்டிக் கருப்பொருள் என்ற பெயரில் நில இயற்கையினையும் வரை யறுத்தனர். அவ்வவ் நிலத்திற்குரிய தெய்வம், உணவு, விலங்கு, பறவை, மரம், செடி, கொடி, மலர், நீர், பறை, யாழ், தொழில் முதலியவற்றால் அமைந்த இயற்கைச் சூழலைப் பின்னணிக் காட்சியாக்கி இன்ப ஒழுக்க நிகழ்ச்சிக்கு எழிலூட்டினர்.

**அகவாழ்வியல் :** இதனைக் களவியல் கற்பியல் என இரு பிரிவாகப் பகுத்துள்ளனர். தலைவனும் தலைவியும் மறை வாகக் காதல் புரிந்து வாழ்தல் களவியல். பெற்றோர் திரு மணம் செய்துவைக்க மணமக்களாய்க் கூடி இல்லறமேற்றல் கற்பியல். இவ்விரு கூறு வாழ்க்கையினையும் திட்ப நுட்பங் களுடன் அறிவியலுக்குப் பொருந்த, உலகியலுக்கிசைய அமைத்துள்ளனர். தலைவனும் தலைவியுமே இவ்வின்ப வாழ்வு

நாடகத்தில் முதலிடம் பெற்றிருக்கின்றனர். இவர்தம் காதல் வாழ்வு சிறக்கவே பாங்கி, பாங்கன், செவிலி, நற்றாய் முதலியோர் வருகின்றனர்.

**புறம் :** காதலை அடிப்படையாகக் கொண்ட தனிவாழ்வை அகமாகக் கொண்டால் வீரத்தை அடிப்படையாகக் கொண்ட பொது வாழ்வைப்புறம் எனக்கொள்ளலாம். காதலர் மட்டுமே உள்ளத்தால் உணர்வதான இன்பம் பற்றிய ஒழுக்கம் அகம். ஆனால் புறம் என்பதோ எல்லோரும் அனுபவித்துத் தம் அனுபவத்தை எடுத்துக் கூறத்தக்கதாய் அறம் பொருள் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கமாகும்.

**புறப்பொருள் :** தொல்காப்பியர் புறப்பொருளை ஏழு திணைகளாக வகுத்தார். அவற்றுள் ஆறு போர்பற்றியும், ஒன்று தலைவன் ஒழுகலாறு பற்றியும் உள்ள செய்திகளைக் கொண்டவை. ஆனால் புறப்பொருள் வெண்பா மாலையில் புறப்பொருள் பன்னிரு திணைகளாகக் கொள்ளப்பட்டன. தொல்காப்பியரின் போர்த்திணைகள் எட்டாக்கப்பட்டன; பொதுவியல் என்று புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான பகுப்புக் காணப்பட்டது. தொல்காப்பியத்தில் தாழ்ந்த இன்ப ஒழுக்கங்களாக அகத்தில் கொள்ளப்பட்ட கைக்கிளையும் பெருந்திணையும் புறத்திணைகளாக்கப்பட்டன.

**புறத்திணைகள் (i)** போர்த்திணைகள்: பழங்காலத்தில் மக்கள் உரிமையுடன் வாழவும் உறுதியான அரசியல் நடத்தவும் அடிக்கடி போராட நேர்ந்தது. ஆதலால் புறவாழ்க்கையின் பெரும்பகுதி போர் ஒழுக்கங்களாகவே அமைந்துவிட்டது. தமிழரின் போர் வாழ்க்கை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை என எட்டுத் திணைகளாகப் பகுக்கப்பட்டன. போர் தொடங்குமுன் வீரர் வெட்சிப் பூச்சூடிச் சென்று பிற நாட்டுப் பசுக்களைக் கவர்தலை வெட்சித் திணை என்றனர். பகைவர் கவர்ந்து செல்லும் பசுக்களை மீட்கவேண்டி வீரர் கரந்தைப்பூச்சூடிச்சென்று போர்செய்தல் கரந்தைத் திணை. பகைவர் நாட்டைக் கொள்ளக் கருதிப் படை திரட்டி வஞ்சிப் பூச்சூடிப் போர்க்கெழுந்து செல்லல் வஞ்சித்திணை. போர் குறித்து வருவோரை எதிர்க்கவேண்டிக்

காஞ்சிப் பூச்சூடிப் படை திரண்டு செல்லல் காஞ்சித்திணை. பகைவர் வந்து கோட்டையைச் சுற்றி வளைத்து முற்றுகை செய்யும்போது, உள்ளே இருப்பவர் நொச்சிப் பூச்சூடிக் கோட்டையைக் காத்து நிற்றல் நொச்சித்திணை. பகைவர் கோட்டையைக் கொள்ளக் கருதி உழிஞைப் பூச்சூடிச் செல்லல் உழிஞைத் திணையாகும். போர் தொடங்குங்கால் பகை கொண்டவர் தும்பைப் பூச்சூடி எதிரெதிர் நின்று தாக்கிப் போர் செய்தல் தும்பைத்திணை. போரில் வென்றவர் வாகைப் பூச்சூடி வெற்றி முழக்குடன் திரும்புதல் வாகைத்திணை.

**(ii) பாடாண்திணை :** இது தலைவனின் புறவாழ்க்கைச் சிறப்பை விளக்குகிறது. தலைவனின் புகழ்,வலிமை,கொடை, கருணை முதலான குணச் சிறப்புக்கள் எல்லாம் இத்திணையில் அடங்கும். உயர்ந்த பண்புகள் வாய்ந்தவரே பாட்டில் இடம் பெறத்தக்கவர் என்ற கருத்து போற்றற்குரியது. பொதுவியல் திணை என்பது போர்த்திணைகளிலோ, பாடாண்திணையிலோ அடங்காத சில செய்திகளைக் கூறவேண்டிப் பகுக்கப் பட்டதாகும்.

**(iii) அகப் புறத்திணைகள்:** தொல்காப்பியர் கைக்கிளையினையும் பெருந்திணையினையும் அகத்திணைகளாகவே கருதி இலக்கணம் வகுத்தார். காதலுக்குரியரான தலைவன் தலைவி இருவர்க்கும் ஒத்த காதலாக இல்லாமல் தலைவனோ தலைவியோ ஒருவர் காதலிக்க மற்றவர் மனங்கொளாதிருத்தல் கைக்கிளை. பொருந்தாக் காதலும் வரைகடந்த காமமும் பெருந்திணை. இவ்விரண்டும் தொல்காப்பியரால் தாழ்ந்த இன்ப நிலை ஒழுக்கங்களாக அகத்திணையியலில் சேர்க்கப்பட்டிருந்தன. இறையனார் அகப்பொருள் இலக்கணத்தை நோக்குங்கால், அன்பின் வழிப்பட்டு உயர்ந்த அகத்திணைகள் ஐந்துமே அகப்பொருள் என்று கருதும் கொள்கை வலுப்பெறவே, கைக்கிளையும் பெருந்திணையும் பிற்காலத்தில் புறப்பொருளில் சேர்க்கப்பட்டன. இதனால் தமிழரின் அகவாழ்வின் உயர்நோக்கம் நன்கு வெளிப்படுகிறது.

## 8 சங்க இலக்கியம்

சங்க இலக்கியம் என்பது கடைச்சங்க காலத்தில் பாடப் பெற்ற பாக்களின் தொகுப்பு நூல்களைக் குறிக்கும், முன்னைய சங்க காலங்களில் பாடப்பெற்றனவாகக் கூறப்படும் இரண்டொரு பாடல்களைத் தவிர எல்லாப் பாடல்களும் கடைச் சங்ககாலப் புலவர்களால் பாடப்பெற்றனவே யாகும்.

தொல்காப்பியத்தில் பாட்டு, உரை, நூல் வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்ற ஏழு வகையான நூல்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடைச் சங்க காலத்தில் தொல்காப்பியமே இலக்கண நூலாக இருந்தது. ஆயினும் கடைச் சங்ககாலப் புலவர்கள் பாடியனவாக 'பாட்டு' என்ற ஒருவகை யாப்பினைச் சார்ந்த பாடல்களே கிடைத்துள்ளன. பாட்டுக்குரியனவாக, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்குபாவகைகள் இருந்தாலும் பெரும் பாலும் ஆசிரியப்பாவிலே பாடினர். வஞ்சியடிகள் ஆசிரியப் பாவினிடையே வந்துள்ளன. கலித்தொகை என்னும் ஒன்று மட்டுமே கலிப்பாவினுல் பாடப்பெற்றது. பரிபாடல் என்னும் பாவகையின் பாடல்களைக் கொண்டது பரிபாடல் என்னும் தொகை நூலாகும்.

சங்ககாலப் பாடல்களில்மிகச் சிறியபாடல் மூன்றடிகளைக் கொண்டும், மிகப் பெரிய பாடல் 782 அடிகளைக் கொண்டும் உள்ளன. மதுரைச் சங்கத்தில் திரட்டிவைக்கப்பெற்ற பாடல் களைக் கடைச்சங்க இறுதியிலிருந்தே தொகுக்கத் தொடங் கினர். நூறு அடிகட்கு உட்பட்ட பாடல்களை எட்டுத் தொகை நூல்களாகத் தொகுத்தனர். எட்டுத்தொகையில் ஐந்து அகப்பொருள் பற்றியவை. இரண்டு புறப்பொருள் பற்றியவை. ஒன்று அகமும் புறமும் பற்றியது. ஐந்து அகப் பொருள் தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு மூன்றும் பொருளாலும், அடியளவாலும், ஒவ் வொன்றும் 400 பாடல்களைக்கொண்டும் தொகுக்கப்பட் டன. ஐந்நூறு சிறிய பாடல்களைக்கொண்டது ஐங்குறு நூறு. கலிப்பாவால் ஆய பாக்களைக் கொண்டது கலித்தொகை. புறப்பொருள்பற்றிய நானூறு பாக்களைக் கொண்டது

புறநானூறு என்றும் பத்துச் சேர அரசர்பற்றிப் பத்துப் பத்துப் பாக்களைக்கொண்டது பதிற்றுப்பத்து என்றும் தொகுக்கப் பட்டன. பரிபாடல் வகையில் பாடப்பெற்ற அகம் புறம் பற்றிய பாடல்களைக் கொண்டது பரிபாடல் என்னும் தொகை நூலாகும். நூறு அடிகட்கு மேம்பட்டதும் ஆயிரம் அடிகட்கு உட்பட்டதுமான பத்துப் பெரிய பாடல்களைப் 'பத்துப் பாட்டு' என்னும் தொகை நூலாக்கினர். இந்த ஒன்பது தொகை நூல்களும் சங்க இலக்கியம் என்று வழங்கப்படும்.

## 9. எட்டுத் தொகை

தொல்காப்பியப் பொருளதிகாரத்தை விளக்குவதற்கு உரையாசிரியர்களால் எட்டுத் தொகை நூல்களிலிருந்து பாடல்களும் பாடல் அடிகளும் மேற்கோள்களாகக் காட்டப் பட்டுள்ளன. மற்ற உரையாசிரியர்களும் எட்டுத் தொகைப் பாடல்களை எடுத்தாண்டுள்ளனர். ஆதலால் எட்டுத் தொகை நூல்கள் உரையாசிரியர் காலத்தில் நன்கு பயிலப் பட்டன என்று அறியலாம்.

திருத்தக்கதேவர், மாணிக்க வாசகர், தேவார மூவர், ஆழ்வார்கள் போன்றோர் அகப்பொருள் தொகை நூல்களை நன்கு பயின்றிருந்தனர் என்பது அவர்கள் பாடிய பாக்களி லிருந்து நன்கு விளங்குகிறது. ஆதலால் கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரே எட்டுத் தொகை நூல்கள் தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டுப் புலவர்களால் போற்றப்பட்டு வந்தன என்பது வெளிப்படுகிறது.

எட்டுத்தொகை நூல்களின் பெயர்களைத் தொகுத்துப் பாடப் பெற்ற பழம்பாடல் ஒன்று உள்ளது.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.

இப்பாடல் தோன்றிய காலம் வெளிப்படவில்லை. ஆயினும் இது இறையனார் அகப்பொருள் உரைக்குறிப்பிற்குப் பிற்

பட்டதேயாகும். எட்டுத்தொகை நூல்களின் பெயர்களை அறிவதற்கன்றி ஆராய்ச்சிக்கு எவ்வகையாலும் பயன் படாத பாடலாகவே உள்ளது. எட்டுத்தொகை நூல்கள் நல்ல பயிற்சியில் இருந்த காலத்தில் அத்தொகை நூல்களின் பெயர்களை எளிதாக நினைவில் வைப்பதற்கென்று பாடப் பெற்ற பாடலாதல் வேண்டும்.

எட்டுத் தொகை பற்றி இறையனார் அகப்பொருள் சிறிது விளக்கமாகக் கூறுகிறது. 'நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும்' என்பதாக அகப்பொருள் உரையில் தொகை நூல் ஒவ்வொன்றிலுமுள்ள பாடல்களின் எண்ணிக் கையும் கூறப்பட்டுள்ளது. அகப்பொருள் உரை எட்டாம்நூற் றுண்டில்தான் ஏட்டில் எழுதப்பட்டது என்று கொண்டா லும் அவ்வுரை தோன்றிய காலம் மூன்றும் நூற்றுண்டு என்பர். அப்படியானுல் அவ்வுரை தோன்றிய நூற்றுண் டிலேயே எட்டுத் தொகை நூல்களும் தொகுக்கப் பெற்றி ருந்தன என்று கொள்ள வேண்டும்.

பாடல்தொகை நானூறு எனக்கொண்ட நான்கு தொகை நூல்களுள் நற்றிணை என்பது பன்றுடு தந்த மாறன் வழுதியாலும் அகநானூறு உக்கிரப் பெருவழுதியாலும் தொகுப்பிக்கப்பட்டன. இவ்விரு மன்னருமே கடைச் சங்க காலத்தவராதலின் இவ்விரு நூல்களும் கடைச்சங்க கால இறுதியில் தொகுக்கப்பட்டன என்பது தெளிவாகிறது' மற்றிரு நூல்களான குறுந்தொகையும் புறநானூறும் அடுத்துள்ள காலங்களிலே தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும். தொகுப்பு முறையினை ஆராயுங்கால், நானூறு பாடல்களைக் கொண்ட தொகுப்பே அரிய முயற்சியாகும். இவை நான்கும் சங்ககால இறுதியில் தொகுக்கப் பெற்றன என்று கொள்ளல் வேண்டும்.

ஐங்குறுநூறு கோச்சேரமான் யானைக் கண் சேய் மாந் தரஞ் சேரல் இரும்பொறையின் ஆதரவில் தொகுக்கப்

பட்டது. பதிற்றுப்பத்தும் சேரமன்னர் ஆதரவில் தொகுக்கப்பட்ட தொகை நூலாதல் வேண்டும். ஐந்து புலவர்களைக் கொண்ட ஐங்குறுநூறும், பத்துப் புலவர்களால் பாடப் பெற்ற பாடல்களைக் கொண்ட பதிற்றுப்பத்தும் அரிய முயற்சியின்றித் தொகுக்கப்பட்டன என்றே கொள்ளவேண்டும். ஐங்குறுநூறு சங்ககாலச் சேரமன்னனால் தொகுக்கப் பட்டது; பதிற்றுப்பத்தும் சங்ககாலச் சேரமன்னனால் தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஐந்து புலவர்களின் பாடல்களைக்கொண்ட கலித்தொகையினை எளிதாகவே தொகுத்திருத்தல்கூடும். எழுபது பாடல்களைக் கொண்டது பரிபாடல். பலபாடல்கள் சிதைந்து போன காரணத்தால் அதனைப் பற்றிய தொகுப்பு முதலான விவரங்கள் கிடைக்கவில்லை. கலித்தொகையும் பரிபாடலும் தொகுக்கப்பெற்ற காலத்தை வரையறுப்பது அரிது என்றாலும், தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி தொடங்குவதன் முன்னர் தொகுக்கப்பெற்றிருத்தல் வேண்டும். கி. பி. 250 முதல் கி. பி. 550 வரை ஆண்ட களப்பிரர், பல்லவர் ஆட்சிக்காலத்தில் பௌத்த, சமணச் சமயங்கள் செல்வாக்குடன் திகழ்ந்தபோது இவ்விரு நூல்களும் தொகுக்கப் பட்டன என்பது கனவிலும் கருத முடியாத ஒன்று. ஆதலால் எட்டுத்தொகை நூல்கள் எல்லாம் கி. பி. 250க்கு முன் தொகுக்கப்பட்டன என்று கொள்ளல் தவறாகாது;

## 10. அகத்தொகை நூல்கள் ஐந்து

எட்டுத் தொகையில் அகப்பொருளாகிய காதல் வாழ்க்கை பற்றிய பாட்டுக்களைக் கொண்டவை ஐந்து ஆகும். அவ் ஐந்து தொகை நூல்களுள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு மூன்றும் அடிவரையறையுடன் ஒவ்வொன்றும் நானூறு பாடல்களைக் கொண்டுள்ளன. இவற்றின் பாக்கள் எல்லாம் ஆசிரியப்பாக்களாகவே உள்ளன. ஐங்குறுநூறு என்னும் அகத்தொகை நூலும் ஆசிரியப்பாக்களைக் கொண்டது என்றாலும் மூன்றடிச் சிற்றெல்லையையுடையதான குறுகிய அடிவரையறையைக் கொண்டது. கலித்தொகை என்னும் அகத்தொகை கலிப்பாக்களைக் கொண்டது.

(i) குறுந்தொகை ; இத்தொகை நூல் நான்கு முதல் எட்டு அடிகட்கு இடைப்பட்ட அளவான அகம் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. 205 புலவர்களின் பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இதனைத் தொகுப்பித்தவரின் பெயர் தெரியவில்லை. தொகுத்தவர் பூரிக்கோ என்பவர் ஆவர். இதில் பாடல்களுக்குத் திணை வரையறை குறிக்கப்படவில்லை. பத்துச் செய்யுள்களுக்குப் பாடலாசிரியர் பெயர் கிடைக்கவில்லை. செம்புலப் பெயல் நீரார், அணிலாடு முன்றிலார், ஓரேர் உழவனார், கங்குல் வெள்ளத்தார், கயமனார், குப்பைக் கோழியார் முதலியோரைப் போல் பாடலில் வரும் சிறப்புச் சொற்றொடரால் பெயர் பெற்ற புலவர் குறுந்தொகையில்தான் பலர் காணப்படுகின்றனர். காக்கை பாடினி நச்செள்ளையார்போன்ற பெயர்களைக் குறுந்தொகையில் உள்ளபடி பிற தொகை நூலாசிரியர் கொண்டிருக்கின்றனரே அன்றிப் பிற தொகை நூல்களில் கண்டபடி எப்பெயரும் குறுந்தொகையில்வரவில்லை. ஆதலால் குறுந்தொகையே முதன் முதல் தொகுக்கப் பெற்றிருக்கவேண்டும்,

குறுந்தொகையின் 380 பாடல்களுக்குப் பேராசிரியரும் எஞ்சிய 20 பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை எழுதினர் என்று நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுளில் காணப்படுகிறது. ஆனால் இவ் உரை கிடைக்கவில்லை. 29 உரையாசிரியர்கள் 237 இடங்களில் குறுந்தொகைச் செய்யுட்களை மேற்கோள்களாகக் காட்டியுள்ளனர். அகப்பொருள் சுவை நயம் கருதி இதனை மிகுதியாகப் பயின்றனர்போலும். உ. வே. சாமிநாத ஐயர் இதற்குச் செப்பமான உரை எழுதியுள்ளார்.

குறுந்தொகைப்பாக்கள் சிறியனவாதலின், அவற்றில் முதற் பொருளான நிலம் பொழுது வருணனையோ கருப்பொருளான இயற்கை வருணனையோ அதிகமாக இடம் பெறவில்லை. உரிப்பொருளான காதல் ஒழுக்கத்தின் நுண்ணிய உணர்ச்சி உள்ளங் கவரும் வண்ணம் சுவை ததும்பக் கூறப்பட்டுள்ளது. ஆழ்ந்த அன்பின் பெருக்கைச் சில அடிகளால் செப்பும் திறன் வியத்தற்குரியதாய் அமைந்துள்ளது.

சிறிய பாடலின் ஊடேயும் வரலாறு எனத்தகும் செய்தியினைக் கொண்டு வந்து உவமைபோல் நிறுத்திப் பாடலுக்குப் பொருட்சுவை பெருக்கும் முறையினைக் குறுந்தொகைப் பாடல்களில் காணலாம்.

''வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்'' (குறு 75)

''புனல்தரு பசுங்காய்......
பெண்கொலை புரிந்த நன்னன் போல'' (குறு. 292)

'பசும்பூண் பாண்டியன் வினைவ லதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்க ரார்ப்பினும் பெரிதே''
(குறு. 393)

பாண்டியன் போன்ற வேந்தர், ஆய், பாரி. எழினி, மலையன் ஓரி, நள்ளி முதலிய வள்ளல்கள், குட்டுவன், பொறையன், கட்டி முதலிய சிற்றரசர், அகுதை. அஞ்சி, அழிசி முதலான தலைவர், கொங்கர், கோசர், தொண்டையர், வடுகர், பூழியபு முதலிய இனத்தவர் ஆங்காங்கே குறுந்தொகைப் பாடல்களில் சுட்டப்படுகின்றனர்.

பண்டைத் தமிழரின் பழக்க வழக்க ஒழுக்கங்கள் ஆங்காங்கே அழகுற அமைக்கப்பட்டுள்ளன. சுடுகாட்டைக் கண்டு அகன்றுபோதல், முதியோர் சென்று மணம் பேசுதல், கன்னியர் பிறைதொழல்; அச்சத்தைப் போக்க நெற்றியைத் தடவுதல், துன்பத்தால் சுவரில் முட்டிக்கொள்ளல், கருவுற்ற பெண்கள் புளிச்சுவை விரும்புதல், வள்ளைப்பாட்டுப் பாடுதல் முதலியன குறிப்பிடத்தக்கவையாகும்.

இயற்கையில் காண்பதனை உவமையாகக் கொண்டு பொருளோடு ஒத்த தன்மையும் நெருக்கமும் தோன்றி உணர்ச்சி கொப்புளிக்கச் சுவையின்பம் பெருகும் வகையில் உவமை கூறும் ஆற்றலைக் குறுந்தொகையின் சிறு பாக்களில் காணலாம். கையில்லாத ஊமையன் கொதிக்கும் பாறை மேல் வைத்த வெண்ணெயைக் கண்ணால் காக்க முயல்வது போல் தன் காதல் நோய் பொறுத்தற்கரியது என்பதில் உள்ள உவமை இன்பத்தை சொல்லால் விளக்க முடியுமோ?

ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போல (குறு. 58)

காதல் ஒழுக்கச் செய்தியினை வெளிப்படையாகக் கூறாமல் கருப்பொருளான இயற்கை வருணனைக்குள் மறைந்து நிற்கும் படி பாடுதல் தமிழ் இலக்கிய மரபாகும். இங்ஙனம் குறிப் பாகக் கூறுவதில் நாகரிகம் விளங்குகிறது. பொருளை வெளிப் படுத்திக் காண்பதில் தனி இன்பமும் பொங்குகிறது. இவ் வகைச் சுவைகள் குறுந்தொகைப் பாடல்களில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன.

கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்
குன்றக நாடன் (குறு. 58)

காட்டு மயில் பாறையில் ஈன்ற முட்டைகளை வெயிலில் விளையாடும் குரங்குக் குட்டி உருட்டி விளையாடும் என்னும் இயற்கை வருணனையே இப்பாட்டின் வெளிப்படையான பொருள். ஆனால், உட்பொருள் ஒன்று உள்ளது. முட்டை அடை காக்கப்படாமல் தனித்துக் கிடப்பதன்றிக் குரங்குக் குட்டியால் அலைக்கழிக்கப்படுவதுபோல், தலைவனைப் பிரிந்து தலைவி தனித்திருந்து துன்புறுவது மட்டுமன்றி ஊரார் சிரிப் புக்காளாகி வருந்த நேரிட்டது என்னும் உட்பொருள் சிந்த னைக்குச் சுவையான விருந்தாகிறது.

காதலில் தோன்றிய அன்பு, துன்பம், காமம், நட்பு, ஆர்வம் முதலிய உணர்ச்சிகள் பேரெல்லையில் வைத்துப் பாடப் பெற்றிருத்தலைப் பல பாடல்களில் காணலாம். தலை வன் சூரியனும். தலைவி சூரியனை நோக்கி மலர்ந்து நிற்கும் நெருஞ்சிப்பூவாம். இந்த அன்பின் எல்லையை வரையறுக்க முடியுமோ?

ஞாயி றனையன் றோழி,
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத்தோளே (குறு.315)

கண் பார்க்கவே வந்த காமத் தீ எலும்பையும் தாக்குகிறது என்பதில் துன்ப உணர்ச்சியின் எல்லை தெரிகிறது.

கண்தர வந்த காம வொள்ளெரி
என்புற நலியினும் (குறு. 305)

காமச்சுவையுணர்ச்சியின் எல்லையைக் காட்ட விரும்பிய புலவரின் திறத்தைக் குறு. 280 இல் காணலாம்.

பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே.

பிறிதொன்றால் பிரிக்க முடியாதபடி காதல் நட்பு உறுதியாய் அமைந்துள்ளது என்பதை,

'அவிழ்த்தற் கரிதது முடிந்தமைந் தன்றே' (குறு. 313) என்னும் அடி விளக்குகிறது.

குறுந்தொகைப் பாக்கள் அகத்தே தோன்றும் ஐம்புலன் உணர்வை, உணர்ச்சியும் மெய்ப்பாடும் விளங்கித் தோன்ற நம் மனக் கண் முன் நிறுத்துகின்றன. உரிப் பொருளான காதல் ஒழுக்க நிகழ்ச்சியமைப்பில் புலவர் பாவிகம் ஒப்பற்று விளங்குகிறது. காம உணர்ச்சி பல்வேறு நிலைகளில் கைம்மிக்குக் கனிந்திலங்குவதைக் காணலாம், பாடல்கள் எல்லாம் உணர்ச்சியில் விளைந்து உள்ளத்தைத் தொட்டீர்ப்பனவாய் உள்ளன. காதல் பற்றிய மன இயலை ஆராய்வார்க்கு அன்போவியத் தொகுப்பு நூலாகக் காட்சியளிக்கும். சங்ககாலப் புலவரின் கவியாற்றலை அளந்து அறிவதற்குக் குறுந்தொகை சிறந்த ஒரு தொகை நூலாகும்.

**(ii) நற்றிணை :** இத்தொகைநூல் 9 முதல் 12 அடிகட்கு இடைப்பட்ட அளவான அகம் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. இதில் 175 புலவர்களின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இடைச் சங்க காலத்துப் பாண்டிய மன்னன் முடத் திருமாறனின் பாடல்கள்இரண்டு (105, 208) இதில் உள்ளன. இதனைத் தொகுத்தவர் பெயர் குறிக்கப் படவில்லை. பன்னாடு தந்த மாறன் வழுதி என்ற பாண்டியன் தொகுப்பித்தான் என்பதால் இத்தொகை நூல் கடைச் சங்கால இறுதியிலே தொகுக்கப்பட்டது என்று கொள்ளலாம். தேய்புரி பழங்கயிற்றனார், தனிமகனார், விழிக்கண்

பேதையார் போல் பாடலின் சிறப்புச் சொற்ருெடரால் பெயர் பெற்ற புலவர் சிலர் இதில் உள்ளனர். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இத்தொகை நூலின் பாடல்களுக்குத் திணை வகுத்து உரை எழுதியுள்ளார்.

நற்றிணைப் பாடல்களில் முதற் பொருளான நிலம் பொழுது வருணனையோ, கருப் பொருளான இயற்கை வருணனையோ அளவாகவும் இயல்புறவும் கூறப் பெற்றிருக்கும். உரிப்பொருளான ஒழுக்க நிகழ்ச்சியும் சுருக்கமோ பெருக்கமோ இன்றி இடை நிகர்த்தவாய்த் தெளிய உணரும்வண்ணம் கூறப்படுகிறது. நற்றிணைப்பாடல்கள் அகநானூற்றுப் பாடல்களைப் போல் மிகப் பெரியனவாய் இல்லையாதலின் திரண்ட கருத்தைத் தெளிவுற அறிவதற்கு மிக்க முயற்சி தேவைஇல்லை. குறுந்தொகைப் பாடல்களைப் போல் மிகச் சிறியனவாக இல்லையாதலால் பொருள் நுட்பம் காண்பதற்கு அரிய முயற்சி வேண்டியதில்லை. நடுப்பட்டதாய் அமைந்து இரண்டின் அழகையும் கொண்டு அகப் பாட்டின் அமைப்புக்கு நல்ல எடுத்துக் காட்டாய் அமைந்துள்ளது.

தடங்கோட் டாமான் மடங்கல் மாநிரைக்
குன்ற வேங்கைக் கன்ருெடு வதிந்தெனத்
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்
மாமலை நாட............................ (நற், 57)

பத்து அடிகளையுடைய இப்பாட்டில் ஆறு அடிகளில் இயற்கை வருணனை இடம் பெறுகிறது. சிங்கம் முதலான கொடிய விலங்குகள் உடைய மலையில் வேங்கை மரத்தடியில் காட்டுப்பசு தன் கன்ருேடு உறங்கும் சமயம் பார்த்துக் குரங்கு சென்று அப்பசுவின் மடியினின்று பாலைக் கறந்து குட்டிக்கு அளிக்கும் காட்சி இயல்புறக் கூறப்படுகிறது. தலைவன் பொருள் தேடிக்கொணர்ந்து தலைவியை மணந்து பாதுகாக்க வேண்டும் என்ற உட்கருத்தும் இதிலே உள்ளது.

வரலாற்றுச் சிறப்புடைய செய்திகளைச் சற்று விரிவாகக் கூறுதல் நற்றிணையில் காணப்படுகிறது. வயலோரம் வேங்கை மரத்துப் பரண் அருகில் அயலான் செய்த இழி செயலால் நேர்ந்த கவலை வருத்தத் தன் கொங்கையினை அறுத்த திருமாவுண்ணி (216) யின் செய்தி வந்துள்ளது. வல்வில் ஓரியின் கானம், திண்தேர்ப்பொறையனின் தொண்டி நகர், கொங்கரையடக்கப் 'பேர்' என்ற ஊரில் சோழர் பழையனைத் தலைவனாக வைத்திருந்தமை, போன்ற செய்திகள் குறிப்பிடத்தக்கவை.

நற்றிணைப் பாடல்களில் நாள் எண்ணிச் சுவரில் கோடு வரைதல், மகனுக்குத் தந்தை பெயரிடல், பந்தாடல், பல்லி குரல் கேட்டல், விழாக் காலத்தில் கண்டார் மயங்கத் தழை யுடையணிதல், காதலனைப் பெற வேண்டிக் காமன் நோன்பு நோற்றல் முதலான பழக்க வழக்கங்கள் அழகுறக் காட்டப் படுகின்றன.

திணைமயக்கத்திற்குத் தொல்காப்பியர் வகுத்த விதிப் படி ஒரு திணைக்குரிய முதற் பொருள், கருப்பொருள் வேறு திணையில் வரலாம். ஆனால் உரிப்பொருள் திணைமாறுதல் கூடாது. இவ்விதியினை மீறி உரிப்பொருள் திணைமாறி நிற்கும் பாடல்கள் ஒன்பது நற்றிணையில் உள்ளன. 'போராடிய புலி ஓடிவிடச் சினங்கொண்ட யானை சென்று பக்கத்தில் நிற்கும் வேங்கை மரத்தைச் சாய்க்கும் மலை நாட்டுத் தலைவன் இன்று என்னை மன்றாடி நிற்கும்படி ஊடல் புரிவேன்.' (நற். 217) என்கிறாள் தலைவி. குறிஞ்சி நிலத் தில் மருத ஒழுக்கமான ஊடல் நிகழ்கிறது. இது, சங்கத் தொகை நூற் பாக்கள் தொல்காப்பியத்திற்குப் பிந்தியன என்பதைக் காட்டுவதோடு சங்ககாலத் தமிழ்ப்புலவர் இலக்கணச் சிறையை நீங்கிப் புதுநெறி கண்டு புதுமை புகுத்தும் திறனும் உடையவர் என்பதையும் காட்டுகிறது.

விலங்கு, பறவை முதலியவற்றிடையே நிலவும் அன்புற வையும் சிற்றுயிர்களோடு மக்கள் உறவுகொண்டாடுவதை யும் நற்றிணைப் பாடல்களில் பார்க்கிறோம். குட்டி ஈன்று வயா நோயால் வருந்தும் பெண் புலிக்கு இரையாக

யானையைக் கொன்று முழங்குகிறது ஆண் புலி (380). கூட்டில் அடைகாத்துக் குஞ்சு பொரித்துக் காக்கும் பெண் புறவுக்குக் காட்டு நெற் கதிரைக் கொண்டு வருகிறது ஆண் புறு (384). தன் ஊர் நீர்த்துறைக்கு வந்து சினைக் கெளிற்று மீனைத் தின்று தலைவன் ஊர்க்குத் திரும்பும் குருகினை நோக்கி 'அனையஅன் பினையோ பெருமற வியையோ' (70) என்று பாசங்காட்டிப் பேசித் தன் துன்பத்தைத் தலைவனுக்குச் செப்பச் சொல்கிருள். இதுபோல் நாரை, கிளிகளிடமும் மகளிர் மனம் விட்டுப் பேசுவதைப் பார்க்கிறோம். தாய், பால் ஊற்றி வளர்த்த புன்னை மரம் தனக்குத் தமக்கையாகிவிட, அப்புன்னையாம் தமக்கை நிழலிலே தன் காதலனோடு நகையாடியதற்குத் தலைவிக்கு நாணம் வந்து விடுகிறது (172). தமிழ் நெஞ்சம் விரிந்து மரம் பறவை விலங்கோடும் உறவாடும் அழகை என்னென்பது!

சிந்தனைச் சுடர்களெனத் தக்க சீரிய தொடர்களும் கருத்து வரையறைகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. பழகிய பகையும் பிரிவினின்னாததே; இளமையிற் சிறந்த வளமையும் இல்லை; தமது செய் வாழ்க்கையின் இனிய துண்டோ? முதிர்ந்தோர் இளமை ஒழிந்தும் எய்தார்; வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை; சான்றோர் கடன் நிலை குன்றலும் இலர்; இவை போன்ற பல கருத்துச் சுடர் களைக் காணலாம். தஞ்சம் அடைந்தாரின் துன்பத்திற்கு அஞ்சும் மென்மைப் பண்பே செல்வம் என்பதும் முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் என்பதும் நற்றிணைப் பாடல்களில் வரும் அரிய கருத்து வரையறைகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள் ஆகும்.

உவமையினை விரித்து விளக்கமுறக் கூறுவதை நற்றிணை யில் காணலாம்.

கடன்மரங் கவிழ்ந்தெனக் கலங்கியுடன் வீழ்பு
பலர் கொள் பலகை போல (நற். 3)
ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல (நற். 284)

காதலன்பின் உறுதியினை நற்றிணைப் பாடல்களிலும் பார்க்கலாம். தலைவன்மீது தலைவி கொண்டுள்ள அன்பின் சிறப்பைப் பாருங்கள்.

சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
பிறப்புப்பிறி தாகுவது ஆயின்
மறக்குவென் கொல்லென் காதலன் எனவே (நற். 397)

ஒரே மகளுக்குத் தாய் தன் மகள் ஓர் இளைஞனோடு ஓடிப் போய்விட்டதற்கு வருந்துகிறாள். மறுநாள் ஊரார் வந்து 'உன் துன்பத்தைத் தாங்கிக்கொள்' என்கின்றனர். அத் தாயின் தாங்க முடியாத அருந்துயர் இயல்புற ஓவியம் போல் தீட்டப்பட்டுள்ளது. அறிவுரை கூறுவார்க்கு அவள் அளிக்கும் விடையைப் பாருங்கள்.

உள்ளின் உள்ளம் வேமே உண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னஎன்
அணியியல் குறுமகள் ஆடிய
மணியேர் நொச்சியுந் தெற்றியும் கண்டே (நற் 184)

இனிய ஓசையும் எளிய நடையும் வாய்ந்த நற்றிணைப் பாக்கள் முதல், கரு, உரிப்பொருள்களால் அளவான இயல்பு வருணனைகள் கொண்டு உள்ளுறை இறைச்சிகளாகிய நுண் பொருள்களின் சுவையூட்டிக் காதல் சுவையைக் கனிவாகக் கூறுகின்றன. அகப்பொருளைத் தெளிவுற உணர்வதற்குத் தக்க பாடல்களாதலின் இத்தொகை நற்றிணை எனப் பெற்றது. இதனால் தொல்காப்பிய உரையாசிரியர் இப்பாடல்களையே மிகுதியாக எடுத்தாண்டனர். அசுணமா போன்ற அரிய விலங்குகள், நில அமைப்பு, வாழ்க்கை நிலை, சொல்லாட்சி முதலியவற்றை அறிவதற்குத் துணையாக உள்ளது.

**(iii) அகநானூறு :** இத்தொகை நூல் இறையனார் அகப்பொருள் உரையில் நெடுந்தொகை எனப்பட்டது. ஆனால் பழம்பாடல் 'அகம்' என்கிறது, 13 முதல் 31 அடிகட்கு இடைப்பட்ட நானூறு அகப்பாடல்களைக் கொண்டது. இதில் 145 புலவர்களின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

இதனைத் தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மர் என்பவர். இதனைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி ஆவன். இவன், இந்நூலில் பாடலாசிரியனாக வரும் கானப்பேரெயில் உக்கிரப் பாண்டியனா என்பது ஆராய்ச்சிக்குரியது. இதில் சேர, பாண்டிய மன்னர் பாடியனவாகச் சில பாடல்கள் உள்ளன. இந்நூலுக்குப் பழைய குறிப்புரை உண்டு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரும் ஆர். வேங்கடாசலம் பிள்ளையும் சேர்ந்து இதற்கு உரை எழுதியிருக்கின்றனர்.

அகநானூறு தொகுப்பு முறையில் பிற தொகை நூல்களைவிடச் சிறந்து விளங்குகிறது. திணைப்பிரிவுகள் நன்கு வகுக்கப்பட்டுள்ளன. இருநூறு பாலைப்பாக்களும் ஒற்றைப்படை எண்களைக் கொண்டவை. எண்பது குறிஞ்சிப்பாக்களும் 2, 8, இல் முடியும் எண்களை உடையவை. ஒவ்வொன்றும் நாற்பது பாக்களைக் கொண்ட முல்லை, மருதம், நெய்தல் முறையே 4, 6, 10 இல் முடியும் எண் உடையவை. 400 பாடல்களின் நயத்தைச் சீர்தூக்கிக் களிற்றியானை நிரை (120). மணிமிடை பவளம் (180), நித்திலக் கோவை (100) எனப் பகுத்துள்ளனர்.

அகநானூற்றின் நெடும் பாடல்களில் திணைக்குரிய நிலம், பொழுது, இயற்கையமைப்பு, ஒழுக்கம் முதலியவை கலந்து நிரந்துவர விரிவும் விளக்கமும் சுவையும் மலிந்து தோன்றுகின்றன. பதினேழு அடிகளைக் கொண்ட பாடலைப் (அக. 2) பாருங்கள். வளமான இலை விரிந்து பெருங்குலை தொங்கும் வாழையின் பழுத்த பழச்சாறும் உண்டாரை வேறெதனையும் உண்ணவிடாத பழுத்த பலாப்பழத்தின் கனிந்த சுளைச்சாறும் பாறையின் சுனையில் தேங்கியிருக்க, அதனையறியாமல் உண்ட ஆண் குரங்கு மிளகுக் கொடி படர்ந்த சந்தன மரத்தில் ஏறமாட்டாமல் பூப்படுக்கையில் உறங்கி இன்புறும் குறிஞ்சி நிலம். இங்கே குறிஞ்சி நில அழகெல்லாம் திரண்டு சொல்லோவியமாகக் காட்சியளிக்கிறது.

இந்த இயற்கையழகினூடே உரிப்பொருளும் மறைந்து நிற்கிறது. தலைவன் மலையில் குரங்கே இவ்வளவு எளிதில் இன்பம் பெற, தலைவன் பெறக் கருதும் இன்பம் அரிதாகுமோ? என்ற வினா எழுப்பப் படுகிறது. நிறுத்த நில்லாது தலைவனிடம் ஓடும் நெஞ்சம் வாய்ந்த தலைவி' காவலாளர் சோர்ந்திருக்கும் வேளை பார்த்து வந்து காணுக' என்று காதலானை பிறப்பிக்கின்ருள். வேங்கை பூத்துத் தோன்ற நிலவு நிறையொளி வீசுதல் திருமணத்திற்கேற்ற சூழ்நிலை என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. மலைப் பக்கம் என்பதால் குறிஞ்சி நிலமும் பூத்த வேங்கை என்பதால் காலமும், நிலவொளியால் பொழுதும், மரம், விலங்கு, முதலான கருப்பொருளும் கலந்து நிரந்து கவினிய பின்னணியாய் அமைந்துள்ளன. தலைவியைப் பகலிலே காணுதல் அரிதென உரிப்பொருளைச் சுட்டிக் காட்டுவதாய்த் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யத் தூண்டுகிறது.

இதுவே அகத்தொகை நூல்களுள் அதிகமானவரலாற்றுக் குறிப்புக்களையுடையது. பரணர், மாமூலனார் போன்ருேர் அரிய வரலாற்றுச் செய்திகளை விளக்கமாகக் கூறிச் சென்றுள்ளனர். ஆதிமந்திவரலாறும் (222, 76) மிஞிலி வரலாறும் (262, 196) விளக்கமுறக் கூறப்பட்டுள்ளன. கங்கையில் நந்தர் பொன்னை ஒளித்து வைத்ததும் (265) மோரியர் வடுகர் துணையோடு படையெடுத்து வந்ததும் (281) சோழர் மோரியரை வல்லத்தில் தோற்கடித்து ஓட்டியதும், யவனர் வாணிபமும் பலவும் கூறப்படுகின்றன.

நெடும் பாடல்களாதலின் பழக்கவழக்கங்கள் விரிவாக உரைக்கப்படுகின்றன. திருமண வீட்டில் உழுத்தங்களி உண்ணல், பந்தல் போட்டுப் புது மணல் பரப்பல், வீட்டில் விளக்கேற்ற மலர்மாலை தொங்கவிடல், விடியற்காலத்தில் மங்கல மகளிர் நீர் கொணரல், வாழ்வரசியர் நால்வர் கூடி நின்று அலரியும் நெல்லும் இடப்பட்ட நீரால் மணமகளை நீராட்டல், சுற்றம் மணமகளை மணமகனோடு கூட்டி வைத்தல் முதலான நிகழ்ச்சிகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. (86), பருவப் பெண்ணை வீட்டு வாசலை விட்டு வெளியே

போகாதபடி கட்டுப்பாடு செய்தல், நீர் நிரம்பி அலை வீசும் குளத்தினைக் காவலாள் காத்தல், பழகிய பெண் யானையால் பெருங்களிற்றைப் பிடித்து வரல், பார்ப்பான் தூதோலை கொண்டு செல்லல் முதலியவற்றை விளக்கமுறக் கூறி யிருக்கின்றனர்.

நிலத்திற்குரிய மக்கள் வாழ்க்கை நன்கு சித்திரிக்கப்பட் டுள்ளது. நெய்தல் நில நங்கை புன்னை மரத்தடியில் இருந்து தந்தை கொண்டு வந்த மீனை உலரப் போட்டுக் காவல் காத்தல், நண்டு வளையைத் தோண்டி விளையாடல், புலிக்கொன்றை மரத்தில் தாழை நாரினால் ஊஞ்சல்கட்டி விளையாடல், மணலில் குரவையாடல், கடலில் தோழிய ரோடு நீராடல், தழையுடையணிதல் முதலிய எல்லாம் ஒரே பாடலில் (20) சித்திரிக்கப்படுகின்றன.

விலங்கு பறவைகளின் வாழ்க்கை முறைகூட விரித் துரைக்கப்படுகின்றது. மந்தையை விட்டுத் தெறித்தோடும் ஆட்டுக்குட்டியை அடித்துண்ணக் காத்திருக்கும் நரி அஞ்சி முள் நிறைந்த புதருக்குள் ஓடுதலும், தாயிழந்த யானைக் கன்று எருமையிடம் பால் குடித்தலும், எருவை என்னும் பறவை தன் குஞ்சுக்கு ஊட்டும்போது வழுவிய ஊன் துண்டு கிழட்டு நரிக்கு உணவாவதும் போன்ற செய்திகள் அழகுறக் காட்டப்பட்டுள்ளன.

தமிழரின் 'அகம்' எனப்பட்ட காதல் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விரிவாக அறிவதற்கு அகநானூறு உதவுகிறது. ஐவகை நிலங்களின் இயற்கை அமைப்பும், அவற்றில் வாழ்ந்த விலங்கு பறவை இனங்களும், அங்கு வளர்ந்த தாவர வகைகளும் மக்களின் தொழில், வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்களும் விரிவாக இடம் பெற்றிருக் கின்றன. ஆதலால் தமிழரின் அகவாழ்க்கைப் பண்பை அறிவ தற்கு இது அரிய கருவூலமாகத் திகழ்கிறது. மூவேந்தரின் முக்கிய போர்கள், மற்றும் தமிழகத்தில் நிகழ்ந்த போர்கள், அவை நிகழ்ந்த இடங்கள், வடவர், மோரியர் படையெடுப் புக்கள், யவனர் வாணிகம் முதலியவற்றைக் கொண்டு இத்

தொகை நூல் தமிழக வரலாற்றை வகுப்பதற்கு, புறநானூற்றுக்கு அடுத்தபடியாகச் சிறந்த சான்ருக அமையும். பரணர், மாமூலனர், நக்கீரர் போன்ற புலவர்கள் பாடல்தோறும். வரலாற்று உணர்வு தோன்றப் பாடியிருக்கின்றனர். நிமிர்ந்த நடையும் நேரான ஒழுக்கும் இனிய ஓசையும் செம் பொருளும் இயல்பான வருணனையும் உவமையும் சுவையும் நிரம்பி 'அகம்' என்ருல் இத்தொகை நூலே எனும்படியாக 'அகநானூறு' என்று பெயர் பெற்று விளங்குகிறது.

(iv) ஐங்குறுநூறு: இது குறைந்த அடியளவுடைய ஐந்நூறு பாடல்களைக் கொண்டது. இவை 3 முதல் 6 அடிகளுக்கு இடைப்பட்ட ஆசிரியப் பாக்களாகும். ஐந்திணைகளுள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு புலவர் ஒவ்வொரு நூறு பாடல்களால் பாடியிருக்கிருர். ஒவ்வொரு நூறும் தனித் தனிச் சிறுநூல் எனும்படி திணையின் பல துறைகள் அமையப் பாடப்பெற்றுள்ளன. பிற தொகை நூல்களைப்போல இதனைத் தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கொள்வதைவிட ஐஞ்சிறு நூல்களின் தொகுப்பாகக் கருதுவது பொருத்தமானதாகும்.

இதனைத் தொகுப்பித்தவன் கோச்சேரமான் யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஆவன். மலை நாட்டுப் புலவரான கூடலூர் கிழாரே இதனைத் தொகுத்தார். ஆதலால் சேரமன்னன் ஆதனவினியின் பெயர் வரும் மருதத்திணையை முதலில் வைத்துத் தொகுத்துள்ளார். திணைப் பாடல்களுள் ஒவ்வொருபத்தினையும் ஒவ்வொரு தலைப்பில் அமைத்துள்ளார். 'எருமைப் பத்து' என்பதுபோல் கருப்பொருளாலும் 'வேனில் பத்து' என்பது போல் முதற் பெருளாலும் 'வேட்கைப் பத்து' என்பது போல் உரிப் பொருளாலும் பாடல்களை வரையறுத்து வகுத்திருப்பது தொகுப்பு முறையின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

இதன் பழைய உரை பதவுரையாகவோ பொழிப்புரையாகவோ இல்லாமல் உள்ளுறை உவமம், இறைச்சி, பொருள் முதலியவற்றை நயமுற விளக்கித் திரண்ட பொருள் விளங்க எழுதப்பட்டுள்ளது. இவ்வுரையினை எழுதியவர் பெயர்

தெரியவில்லை. இதன் பாடல்களைப் பேராசிரியர், நச்சினார்க் கினியர் போன்றோர் மேற்கோள்களாக எடுத்தாண் டுள்ளனர்.

மருதத்திணை : இத்திணையைப் பாடியவர் ஓரம்போகியார் ஆவர். இவர் பாடிய மற்ற அகப்பாடல்கள் எட்டும் மருதத் திணையினவே. இதனால் இவர் மருத நில வளங்களைப் பாடு வதில் ஆர்வங் கொண்டவர் என்று தெரிகிறது. முதல் பத்தில் சேர மன்னனையும் நாடு முதலியவற்றையும் வாழ்த்து கிறார். ஓசை நயம் மிக்க பாடல்களில் உவமை, உள்ளுறை, இறைச்சி முதலிய நுண் பொருள் இலங்கப் பாடியுள்ளார்.

பரத்தையர் பலர் விரும்பும் தலைவன் மார்புக்குப் பலரும் படிந்துண்ணும் தண் கயத்தை உவமையாக்குகிறார். 'நறுவீ ஐம்பால் மகளிராடும் தைஇத் தண்கயம் போல' என்பதில் உவமை நயம் உள்ளது. 'மலர்ந்த பொய்கை முகைந்த தாமரை, தண்டுறையூரன், (6) என்பதில் இறைச்சி உள்ளது. அகன்ற பொய்கைக்கு அணியாக வுள்ள தாமரையுடைய ஊரன் என்பதில் அத்தண்துறை யூரன் தன் வீட்டுக்கு அணி யாகும் வண்ணம் தலைவியை மணப்பானாக என்னும் உட் பொருள் தோன்றி இன்பம் பயக்கிறது. 'பகன்றை வான் மலர் மிடைந்த கோட்டை, கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்' என்பது வருணனை. தலைவன் மாலையணியக் கண்டு அதனைப் பரத்தையர் காண வேண்டி அணிந்தான் என்று தலைவி அஞ்சுதலை, நுண்பொருளாக, அழகுறப் புலவர் புலப் படுத்துகிறார்.

நெய்தல்திணை : இது அம்மூவனாரால் பாடப் பெற்றது. இவர் பாடிய பிற அகப்பாடல்கள் பெரும்பாலும் நெய்தல் திணைபற்றியனவே. சேரநாட்டுத் தொண்டியைப் பாடியிருப் பதால் இவர் மலை நாட்டவராதல் கூடும். முன்னிற்பாரை நோக்கிக் கூறும் பான்மையில் நாடகப் பாங்கும் பேச்சாற் றலும் நிரம்பப் பாடுவதில் வல்லவர்.

'வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக், காணிய சென்ற மடநடை நாரை, மிதிப்ப நக்க கண்போல் நெய்தல், (151)' என்பதில் தலைவனுக்குப் பரத்தையும் குலமகளாகச்

சிறந்து தோன்றி, அவளைக் காணச் செல்லும் தலைவன் நடையால் (ஒழுக்கம்) தலைவியின் நெஞ்சம் புண்பட்டு இடையருது கசிந்துருகியது என்னும் நுண்பொருள் காட்டப்படுகிறது. 'நாரை நல்லினங் கடுப்ப மகளிர், நீர்வார் கூந்தல் உளரும் (180)' என்பதில் உவமைச் சுவை கனிந்திலங்குகிறது..

குறிஞ்சித்திணை : இதனைக் கபிலர் பாடினுர். இவர் குறிஞ்சியின் அழகைத் தீட்டுவதில் தனிச்சிறப்பு வாய்ந்தவர். இவர் பாடிய பிற பாக்களில் 91 குறிஞ்சி பற்றியவை. இத்தொகை நூலின் சிறிய பாடல்களிலும் குறிஞ்சியை வருணிக்கத் தவறவில்லை. குரங்கு அவரைக் கொட்டையைத் தின்று, வணிகன் கோணிப்பையைப் போல் இருக்கிறதாம். 'அவரை யருந்த மந்திப் பகவர், பக்கிற் தோன்றும். (271)' மற்ருேர் இடத்தில் குரங்கு மழையால் உண்டாகும் நீர்க்குமிழியைச் சிறு கோல் கொண்டு புடைத்து விளையாடும் அழகைக் காட்டுகிருர். (275). தலைவன் இலையைச் சூடிக் கொள்கிருன். அது தலைவிக்கும் தழையுடையாகிறது. பொன் போன்ற பூ அரும்பத் தொடங்குகிறது. அது என்ன மரம் என்று கேட்கிருள் தலைவி. இதனை,

'தானும் மலைந்தான் எமக்குந்தழை யாயின
பொன்வீ மணியரும் பினவே
என்ன மரங்கொல் சார லவ்வே'

என்பது தலைவியின் வெறும் வினவாக இல்லாமல் பூவரும்பைச் சுட்டித் திருமணத்திற்கு ஏற்பாடு செய் என்று தூண்டுவதாய் உள்ளது. தலைவியின் சாதுரியத்தை என்னென்பது!

பாலைத்திணை : இதனைப் பாடிய ஓதலாந்தையார் மேலைக் கடற்கரையில் குட்ட நாட்டில் ஓதலூரில் பிறந்தவர். பாலைத்திணையில் இயற்கை விளங்கப்பாடுவதில் வல்லவர். புதல்வி தலைவனோடு போய்விட்டபோது, பெற்றதாய் தன் மகள் விளையாடிய பாவையினையும் அவள் வளர்த்த கிளியையும் பார்த்துப் பார்த்து உள்ளம் உருகும் சோகக் காட்சியினைச் சிறுபாடலில் தீட்டியுள்ளார்.

*இதுவென் பாவை பாவை யிதுவென்*
*அலமரு நோக்கின் அலம்வரு சுடர்நுதல்*
*பைங்கிளி யெடுத்த பைங்கிளி யென்றிவை*
*காண்டொறும் காண்டொறும் கலங்க*
*நீங்கின ளோவென் பூங்க ணோளே* (ஐங். 375)

முல்லைத்திணை : இதனைப் பாடியவர் பேயனார் ஆவர். இவர் பாடிய குறுந்தொகைப் பாடல் நான்கில் மூன்று முல்லை பற்றியவை. இவர் முல்லைத் திணையைப் பாடுவதில் வல்லவர். இவரது பாடல்கள் இல்லற வாழ்வில் கணவன், மனைவி, புதல்வன் பற்றிய இனிய நிகழ்ச்சிகளைக் கொண்டு விளங்குகின்றன. பாடல்கள் ஓசைநயம் மிகுந்தனவாய்ச் சிறுகச் சிறுக வேனும் முல்லை வருணனைகளைக் கொண்டுள்ளன. புதல்வனை மையமாகக் கொண்ட அன்புக் குடும்பத்தின் அழகைக் காட்டும் திறனைக் காண்போம்.

*புதல்வற் கவையினன் தந்தை மென்மொழிப்*
*புதல்வன் தாயே விருவருங் கவையினள்*
*இனிது மன்ற வவர் கிடக்கை*
*கனியிரும் பரப்பினிவ் வுலகுட னுறுமே* (ஐங். 409)

ஒரு புலவரே ஒரு திணைபற்றித் தொடர்ந்து நூறு பாடல்களைப் பாடும் முயற்சியை இத்தொகை நூலில் பார்க்கிறோம். அரும்பொருள் பொதியச் சிறுபாடலைப் பாடுதலே அருந்திறனாகும். இத்தொகை பாடிய ஒவ்வொரு புலவரும் தாம் தேர்ந்த திணையில் சிறந்த பயிற்சியும் புலமையும் நிரம்பித் தம் புலமைத் திறனை அறிவிக்கவே பாடினர் எனல் பொருந்தும். கூர்த்த மதியினர்க்கே புலப்படும் இறைச்சியும் உள்ளுறை உவமும் பொதியப்பெற்ற பாடல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தமிழ்ப்புதையலாகக் கருதிப் பொருள்காணத் தக்கதாகும்.

**(v) கலித்தொகை :** இத்தொகைநூல் கடவுள் வாழ்த்தோடு *150* கலிப்பாக்களைக் கொண்டுள்ளது. பெருங்கடுங்கோ பாலையையும் கபிலர் குறிஞ்சியையும் மருதன் இளநாகனார் மருதத்தையும் சோழன் நல்லுருத்திரன் முல்லையை

யும் நல்லந்துவனார் நெய்தலையும் பாடியுள்ளனர்; முல்லையைப் பாடிய நல்லந்துவனாரே கடவுள் வாழ்த்தைப் பாடிப் பாலையை முதலாக வைத்து இந்நூலைத் தொகுத்துள்ளார். 'தண்பரங் குன்றத் தந்துவன் பாடிய' (அக. 59) என்று மருதன் இளநாகனார் குறிப்பிடுவதால் இவர் மதுரையைச் சார்ந்தவர் என்பதும் மருதன் இளநாகனாரின் காலத்தவர் என்பதும் விளங்குகிறது. இத்தொகை நூலுக்கு நச்சினார்க்கினியர் நயம் கனிந்த உரை எழுதியிருக்கிறார். நச்சினார்க்கினியரின் உரைகளில் கலித்தொகை உரையே சிறந்ததாகும்.

அமைப்பு: இத்தொகையில் பெரும்பாலன தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆயஉறுப்புக்களைக்கொண்ட ஒத்தாழிசைக் கலிகளாகும். முகப்பு, கருத்து, முடிப்பு என்று பகுத்துக் கட்டுரையால் கருத்தை விளக்குதல் போல முதலில் தரவுப் பகுதியில் கருத்தைத் தோற்றுவித்துப் பின் தாழிசைப் பகுதியில் கருத்தை மும்முறை கூறி விளக்கித் தனிச் சொல் வழியாக வடித்துச் சென்று சுரிதகமான முடிவுப்பகுதியில் பயனைத் தோன்றச் செய்தல் இக்கலிப்பாவின் இயல்பாகும். உதாரணமாகக் கலி. 9 ஒரு கட்டுரையின் அமைப்பினைக் கொண்டு விளங்குகிறது.

பாலைக்கலி: இது முப்பத்தைந்து பாடல்களை உடையது; இதனைப் பாடிய பெருங்கடுங்கோ சேரமன்னர் மரபினர். பாலைத்திணைபற்றியே பாடினாராதலின் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்றழைக்கப்பட்டார். பிரிவில் நேரும் துன்ப உணர்ச்சியைச் சித்திரமாக்குவதில் வல்லவர். இவரது பாடல்களில் சிந்தனை வளம், நிறை புலமை, அறநூலுணர்வு இயற்கையறிவு, கலையுணர்வு, வாழ்வியல் நுட்பம் முதலான நலங்கள் கலந்து இலக்கியச்சுவை மிளிர்வதைக் காணலாம். 'கட்டுத் தறியில் நில்லாக் களிறு யாழிசைக்குக் கட்டுப்பட்டு நிற்கும் (2). கையில் பொருள் இல்லா வழிப்போக்கரையும் வெட்டி உடல் துடிக்கக் கண்டு மகிழ்வர் பாலைக்கள்வர் (4). அக்கொடிய பாலை நடுவே அன்பைக் காட்டுகிறார் மற்றொரு பாடலில். பெற்றோரும் பருகவேண்டுமென்னும் கருத்திலா இளங்கன்று கலக்கிவிட்ட சிறிய நீரை முதலில் பிடிக்கு

ஊட்டிப் பின்னரே அக்களிறு பருகுமாம். (கலி. 11) 'செம்மை நெறி கடந்து தேடும் பொருள் தேடியவருக்கு இம்மைக்கும் மறுமைக்கும் பகையாகும் (கலி. 14)' என்று பொருளின் புன்மையைக் கூறுகிறார். ஒரே ஆடையைக் காத லிருவர் உடுத்து வாழும் நிலையில் இருந்தாலும் அன்புடன் கூடி வாழ்தலே சிறந்தது என்று புலவர் விளக்குவதைப் பாருங்கள்.

> ஒரோஒ கை தம்முள் தழீஇ யொரோஒ கை
> ஒன்றன்கூ றுடை யுடுப்பவரே யாயினும்
> ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை (கலி. 18)

பண்பை உவமையாக்கும் சிந்தனை முதிர்ச்சியைப் பல இடங்களில் காணலாம். ஆன்றவர் அடக்கம்போல்; நல்லவர் நுடக்கம்போல், வல்லவர் யாழ்போல்; முதலியன நல்ல எடுத் துக்காட்டுகள் ஆகும். சிவன் முதலான கடவுளரையும் அரக்கு மாளிகை எரித்தல்போன்ற பாரதக்கதை நிகழ்ச்சிகளையும், திருப்பரங்குன்றம், கூடல், வையை பெருமைகளையும் ஆங் காங்குக் குறிப்பிட்டுள்ளார். பாலை நடுவே அன்பின் வலி மையை அழகொழுகக் காட்டும் திறன் வியத்தகு முறையில் அமைந்துள்ளது.

குறிஞ்சிக்கலி : இது 29 பாடல்களை உடையது. குறிஞ் சித்திணை பாடுவதில் வல்ல கபிலர் இதனைப் பாடியுள்ளார். பெருந்திணையைச் சார்ந்ததாய்க் கருதப்படும் 'மடலேறுதல்' நயந்தோன்றப் பாடப் பெற்றுள்ளது. இயற்கை அழகும், அழகின் கொடுமையும் உரையாட்டு நயமும், வாழ்க்கை நுட்பமும் சுவை ததும்பப் பாடப் பெற்றுள்ளன.

எதிரெதிரான இரு குன்றினின்று அருவி பாய இடை நடுவே பரிதியொளி பட்டுத் தெறிக்கும் மாணிக்கப் பாறை மேல், பூத்துக்குலுங்கும் கிளைகள் அருவியில் தோய நிற்கும் வேங்கை மரம், இரு பெரு யானைகள் துதிக்கையால் நீர் பொழிய இடையே செந்தாமரைமேல் நிற்கும் திருமகள் போல் தோன்றுகிறதாம். (கலி. 44) கபிலர் காட்டும் இயற்கை வருணனைக்கு ஈடு உளதோ? வாரி முடித்து மலர்ச் சூடி மதி முகம் ஒளிர வருகிறாள். காண்கிறான் தலைவன்.

''வல்லவன் செய்த கொல்லிப்பாவையோ? மாதர் அழகெல்லாம் கூட்டி மயன், ஆடவர் உயிர் உண்ணப் படைத்த பெண் வடிவுக்கூற்றமோ?'' என்கிறான். ஆடை அணி பூண்டு வரும் அவளோடு உரையாடுகிறான். 'மயக்குகிறாய், அணங்காகிறாய், உயிர் வாங்குகிறாய்?' என்கிறான். அவள் பேசவில்லை. ''உன்மேல் தவறில்லை; வெளியே அனுப்பிய பெற்றோர்மீதும் தவறில்லை. 'அழகி வருகிறாள்; அப்பால் போ' என்று பறையறைந்தனுப்பாத இறைவனே தவறுடையவன்'' இவ்வாறு கன்னியழகின் கொடுமையைக் காதலன் காய்கிறான்.(கலி. 57)

தந்தை தன் புதல்வியின் நெஞ்சங்கொண்டானைக் கொல்லத் துடிக்கிறான். ஒருநாள் பொழுதில் அவன் மனம் மாறுகிறது. இந்த வாழ்க்கை நுட்பத்தைக் காட்டுவதைப் பாருங்கள்.

அவரும், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்து
ஒருபக லெல்லாம் உருத்தெழுந் தாறி
இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை (கலி. 39)

மற்றும் உரையாட்டும், நாடகப்பாங்கும், உளங்கவர் கற்பனையும் முதலான நயங்களைப் பாடல்தோறும் சுவைக்கலாம்.

மருதக்கலி : இது இளநாகனாரால் பாடப் பெற்ற 35 பாடல்களைக் கொண்டது. மருதம் பாடும் திறன்பற்றி மருதன் இளநாகனார் எனப்பட்டார். நெய்தல்கலி பாடிக் கலித்தொகையினையும் தொகுத்த நல்லந்துவனாரின் காலத்தவர். சிவன் பற்றிக் கூறுவதால் இவர் சிவ சமயத்தவர் என்பர். முருகன் விழா, காமன் விழா, தலைக்கோலம் முதலியன பற்றிக் கூறியுள்ளார். தலைவன் பரத்தமையையும் தலைவியின் பிணக்கையும் பிறரெல்லாம் இலைமறை காய் போல் மறைவாகக் கூறிச் சென்றிருக்க, இவர் உண்மையியல்பு மாறாமல் பச்சையாகவே கூறியிருக்கிறார்.

இவர் பாடல்களில் தலைவியின் கூர்மதி, விழிப்புணர்ச்சி, கருத்தாற்றல், திருத்தும்திறன், ஊடல் அழகு, (87, 82)

வாதாடு நயம்(90) முதலியவற்றைக் காணலாம். பரத்தமை காரணமாகத் தலைவன் தலைவி முன் திறனழிந்து நிற்பதைக் காணலாம். பரத்தையிடமிருந்து திரும்பும் தலைவன் கடவுளரிடம் (முனிவர்) சென்றிருந்தேன் என்று பொய் கூற, நெட்டிருங் கூந்தல் கடவுள் (பரத்தை) தானே என்று வருணித்துத் தலைவன் திறனழிக்கும் தலைவி ஆற்றல் பெரிது. பல பாடல்கள் ஓரங்க நாடகம்போல் அமைந்துள்ளன, குறளன் கூனி இவர்கள் உரையாடல் (94) நகைச்சுவை மலிந்த நாடகமாக உள்ளதோடு உயர் காதலினின்று தாழ் காதலை வேறுபடுத்திக் காட்டுகிறது.

முல்லைக்கலி: இது சோழன் நல்லுருத்திரனால் பாடப் பெற்ற 19 பாடல்களை உடையது. வேறு பாடல்களில் காணப்படாத முல்லை நிலச் சிறப்பும் பழக்க வழக்கங்களும் முல்லைக்கலியில் காட்டப்படுகின்றன. ஏறு தழுவுதலை அப்படியே நம் மனக்கண் முன் நிறுத்தி விடுகிறார். பாய்ந்து வரும் எருதுகள், தாவிப்பிடிக்கும் ஆயர், ஏறு கொம்பால் குத்துதல், வீரன் தழுவி வெற்றி பெறல் பரண் மேலிருந்து பார்ப்போர் உணர்ச்சி முதலியன நெஞ்சை விட்டு நீங்காக் காட்சிகளாக அமைக்கப் பெற்றுள்ளன. ஆயமகளிரின் மன உறுதியும் உளப் பாங்கும் நுட்பமுடன் கூறப்பட்டுள்ளன. கொல்லேற்றின் கொம்பிற்கு அஞ்சுவானை ஆயர் மகள் புல்லாள். கவலையால் காமனும் படைவிடும் வனப்பினள். பூங்கரை நீல ஆடை புடை தாள உடுப்பவள். ஆயர் மகளிர் கற்புடைமையை,

"அருநெறி யாயர் மகளிர்
இருமணங் கூடுதல் இல்லியல் பன்றே (கலி. 115)

என்பதால் விளங்கும்.

நெய்தல்கலி: இதனை நல்லந்துவனார் 33 பாடல்களில் பாடினார். இவர் திருப்பரங்குன்றத்தவர். பிரிவு ஆற்றாமையால் தோன்றும் உருக்கத்தைப் பாடுவதில் தன்னிகரற்றவர். அறவுணர்வும் சிந்தனைச் செறிவும் இவர் பாடல்களில் காணப்படும். காதலன் கனவில் புரிந்த

நிகழ்ச்சிகளைத் தலைவி தோழிக்கு உரைக்கும் கற்பனை சிறந்தது. (128). தலைவனுக்குத் தலைவி 'நீருள் நிழல்போல் கொளற் கரியள்' ''தலைவன் ஏகும் வழியில் பாலை வெப்பத்தால் நலியாதபடி, வறண்ட மேகம், காதலியின் கண்ணீர்க் கடலில் நீர் முகர்ந்து சென்று மின்னி முழங்கி மழை பெய்ய வேண்டு மாம். வானத்து மதியில் இருக்கும் குறுமுயல் காதலனைக் காட்ட வேண்டுமாம். இல்லையெனில் வேட்டை நாய் விட்டு அக்குறு முயலைக் கடிக்கச் செய்வாளாம் காதலி. என்னே அவள் துயர்!

கலித்தொகை நன்மக்களின் அன்பின் ஐந்திணை ஒழுக்கங்களையே பெரிதும் எடுத்துரைத்தாலும் ஏவலரின் தாழ்ந்த இன்ப நிலைகளையும் கூறுகிறது. காதலுள்ளக் கிளர்ச்சியையும் எழுச்சியையும்பாடத்துள்ளலோசை வாய்ந்த கலிப்பாவே சிறந்ததாகலின் தொல்காப்பியர் காதலைப் பாடக் கலிப்பாவே சிறந்தது என்றார். இதனைப் பாடிய ஐவரும் அவ்வத்திணையில் பாடவல்லவராய் விளங்கி அந்தந்தத் திணை அழகையெல்லாம் திரளக் காட்டி இனிய ஓசை பொங்கக் கலிப்பாவில் பாடியுள்ளனர். ஒவ்வொரு புலவரும் தக்க வரையறை செய்து தனித்தனி நூலெனக் கருதும் வண்ணம் திணையொழுக்கச் சிறப்பு, நுட்பம் முதலியவற்றைப் பாடியுள்ளனர். இப்பாடல்கள் பாண்டிய நாடு நன்னிலையில் இருந்த காலத்தில் பாடப் பெற்றவை. சேர, சோழ மன்னர் குலத்தவரும் தத்தம் நாட்டை மறந்து, தென்னவன், கூடல், வையை பற்றிப் புகழ்ந்து பாடியுள்ளனர். அகப்பொருள் சுவையில் ஆழ்ந்த பயிற்சி யுடையவரே இதன் அழகையெல்லாம் காண முடியும் என்ற கருத்தில் 'கற்றோர் ஏத்தும் கலி' என்று போற்றப்பட் டுள்ளது.

## 11. பரிபாடல்

கலித்தொகையைப் போலவே இதுவும் பாவகையால் பெயர் பெற்ற தொகை நூலாகும். தொல்காப்பியர் விதிப்படி பரிபாடல் காதலைப் பாடுவதற்குரியது. ஆயினும் கடவுள் வாழ்த்துப் போன்ற புறம் பற்றிய பரிபாடல்களும்

தோன்றின. ஆதலால் பரிபாடல் அகம் புறம் பற்றிய பாடல்களைக் கொண்டது.

பழம் பாடல் கூறுவதினின்று இத்தொகை நூல் 70 பாடல்களைக் கொண்டது என்று அறிகிறோம். திருமாலுக்கு எட்டு; முருகனுக்கு முப்பத்தொன்று; காளிக்கு ஒன்று; வையைக்கு இருபத்தாறு; மதுரைக்கு நான்கு; ஆனால் 22 பாடல்களே கிடைத்துள்ளன; மேலும் இரண்டு பாடல்கள் சிதைந்த உருவில் உள்ளன.

பெயர் கிடைத்துள்ள 13 புலவர்களுள் இளம்பெருவழுதி, நல்லந்துவனார் குறிப்பிடத்தக்கவர். கிடைத்துள்ள பாடல்களுக்குப் பத்துப்பேர் பண் வகுத்துள்ளனர். இதற்குப் பரிமேலழகர் உரை உள்ளது. இதில் உள்ள திருமால் பாடல்கள் திருமாலின் பத்து அவதாரமும் பாடிய முதலாழ்வார் மூவர் காலத்திற்கு முந்தியவை. பாண்டிய நாட்டிற் குட்பட்ட பரங்குன்றம், அழகர்மலை, மதுரை, வையை முதலியவை பற்றியே பாடியிருப்பதால் பாண்டிய நாடு செல்வாக்குடன் திகழ்ந்த காலத்தில்தான் இப்பாடல்கள் தோன்றியிருக்க வேண்டும். களப்பிரர் காலத்தில் தோன்றினவென்பது பொருந்தாது. ஆதலால் பரிபாடல் தொன்மை வாய்ந்த தொகை நூலேயாகும். இசை நூற்கள் அழிந்தாற்போல் இதன் பல பாடல்கள் அழிந்தன போலும்.

**திருமால் :** திருமால் பற்றிய பாடல்களுள் 7 கிடைத்துள்ளன. திருமால் பன்றி வடிவில் நிலத்தை நீரினின்று அகழ்ந்தெடுத்ததும், வானினின்று காற்று, தீ, நீர், நிலம் முறையே தோன்றி வளர்ந்ததும் பாடல்களில் காணக் கிடக்கின்றன. திருமால் முழுமுதல் என்பதும் அவர் தொழில் காத்தல் என்பதும் கூறப்படுகின்றன. காலங் கடந்த கடவுளாய்க் கருதப்படுகின்றார். எங்கும் நிறைந்து நிற்கும் செய்தி கூறப்படுவதைப் பாருங்கள்,

'கல்லினுள் மணியும்நீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினுள் அன்புநீ மறத்தினுள் மைந்துநீ
வேதத்து மறைநீ, பூதத்து முதலும்நீ

*வெஞ்சுடர் ஒளியும்நீ திங்களுள் அளியும்நீ*
*அனைத்தும்நீ அனைத்தின் உட்பொருளும்நீ'* (—பரி 3)

அவர் குணம் பற்றிக் கூறுங்கால் ஞாயிற்றின் வெம்மையும் விளக்கமும் மாரியின் தண்மையும் வண்மையும் ஞாலத்தின் புரத்தலும் நன்மையும் பூவின் நாற்றமும் ஒண்மையும் நீரின் தோற்றமும் அகலமும் மருத்தின் வருதலும் ஒழுக்கமும் உடையவராய்க் கூறப்படுகிறுர்.

திருமால் காயாம்பூமேனியன். சங்கு சக்கரம் முதலான படைக்கருவிகளைக் கொண்டவன். பூமி அவன் தேவி; பல தேவன் அவன் உடன் பிறப்பு. பாற்கடலில் அரவணையில் அறிதுயில் கொள்வான். சிலம்பாறும் நீர்ச்சுனைகளும் பூஞ்சோலைகளும் கொண்ட திருமாலிருங்குன்றத்தில் பொன்னுடை புனைந்த திருமால் அமர்ந்து நின்றருளும் திருக்கோலம் வருணிக்கப்பட்டுள்ளது. திருவேங்கடத்துத்திருமாலை வருணிக்கும் சிலப்பதிகாரத்திற்கு முற்பட்டன பரிபாடல்கள் என்றும் திருமால் தமிழ்க்கடவுள் என்றும் கருத இடமுண்டு.

செவ்வேள் : கிடைத்துள்ள செவ்வேள் பாடல்கள் எட்டும், திருப்பரங்குன்றம், முருகன் திருவிழா முதலியவை பற்றி அறிவதற்குச் செய்திக் கருவூலமாகத் திகழ்கின்றன. மலர்ச்சோலைகள் செறிந்து, வளநீர்ச்சுனைகள் மலிந்து அருவிகள் பாய, மயில்கள் ஆட, குயில்கள் பாட இயற்கை எழில் தவழும் இடமாகத் திருப்பரங்குன்றம் திகழ்ந்தது. செவ்வாடையும் மாலையும் வேற்படையும் அணி செய்ய செம்மேனியனுன முருகன் கடம்ப மரத்தடியில் அமர்ந்திருந்தான். காமன், இரதி, அகலிகை சாப வரலாறு பற்றிய சித்திர மண்டபம் அங்கு இருந்தது. தேவயானை, வள்ளி இரு தேவியரின் சேடியர் போர் நிகழ்த்தியதும், தேவயானை தோற்றேடியதும் சுவையுறக் கூறப்பட்டுள்ளன. முருகன் தாமரைப்பூவில் தோன்றியதும் சூரபன்மனை வென்றதும் அரி அரன் அயன் மூவரும் தேவரும் முருகனைக் காணக் காத்திருப்பதும் கூறப்படுகின்றன.

திருப்பரங்குன்றத்தில் முருக வழிபாடு சிறப்புற நடைபெறும். பாண்டியன், தேவியரும் சுற்றமும் சூழச் சென்று மலையேறி முருகனை வழிபடுவான். மதுரையினின்று மக்கள் பெருந்திரளாகச் சென்று வழிபட்டு வரம் பெறுவர். திருவிழா நாளில் குன்றத்தின் மீது ஆணையிடுவதால் பெருங் கேடு நிகழும் என்பது அன்றைய நம்பிக்கை.

குன்றத்தில் மயிலாடுவதை வேடன் நோக்க, அவன் காதலி பிணங்குகிறாள். 'உன்னைப்போல் அழகாக இல்லையே என்று மயில் வருந்துவதைத்தானே பார்த்தேன்' என்று கூறி அவளை அவன் ஊடல் தீர்க்கிறான். குன்றத்தில் விழாவென்று விறலியாட, அவள் அழகில் தலைவன் மயங்கி விடக்கூடாதே என்று அவனைத் தன் அழகால் கவரவேண்டித் தலைவி தன் அழகைத் திருத்துகின்றாள். திருவிழாக் கூட்டத்தில் பெற்றோரைப் பிரிந்த பேதைச் சிறுமி அவர்களைக் காணவேண்டிக் குரல் கொடுக்க, அக்குரல் எதிரொலிக்கப் பெற்றோர் குரலெனப் பேதித்தோடும் சிறுமியைக் காட்டும் திறன்தான் என்னே!

**வையை :** வையையின் புகழ்பாடும் பாடல்கள் எட்டே கிடைத்துள்ளன. மேம்பட்ட இனிமையும் தேர்ந்த இசையும் பொருந்திய பரிபாடலால் வாழ்த்தப்படும் வையை என்கிறார் நல்லந்துவனார். மான்கள் கலங்க மயில்கள் அகவ மழை பெய்ய, சையமலையினின்று வரும் வெள்ளம் மரங்களும் மலர்களும் ஏந்தி வந்து மதுரை மதிலை மோதி நாடெங்கும் பரந்து பாயுமாம். வையையில் குளிக்கப் பெண் யானைகள்மீது அணி அணியாய்ச் செல்லும் மைந்தரும் மகளிரும் நீராட்ட ஆடைஅணிந்து புனுகுத்துருத்தி, பனிநீர்க்கொம்பு, மிதவை, நெட்டித்தேர் முதலியவைகொண்டு யானை குதிரை மேல் ஏறிச்செல்லும் காட்சிகளைக் காணலாம். நீரில் நீந்தி விளையாடும் காட்சிகள் கண்ணுக்கு விருந்தளிக்கும். தொடி அழுந்த, வளையல் அலைய, மேகலை அற்று உதிர, பூசின சந்தனம் சிதைய நீர் விளையாடுவர். வாழைத்தண்டைப் புணையாக்கொண்டு நீர் விளையாடும் அழகும் கரையேறிக் காதலர் களிக்கும் காட்சிகளும் காட்டப்படுகின்றன. தைந் நீராடு வழக்கமும் கூறப்படுகிறது.

நீர் விழாவில் நிகழும் சுவையான காதல் காட்சிகள் பல பல. தன் நகையினைப் பரத்தையின் மேனியில் கண்ட தலைவி போய்க்கேட்க, தலைவன் பரத்தமைவெளிப்பட்டுத் தலைவியும் பரத்தையும் திட்டிக்கொள்வதும், ஊரார் வந்து சண்டை தீர்த்து அனுப்புவதும் இயற்கையான நிகழ்ச்சிகள். இளைஞர் மகளிரைப்பொருந்தாமுறையில்நோக்குதலைக்கண்டு 'ஓட்டை மன உரமிலி' என்பது வாழ்வுண்மையைப் படம் பிடித்துக் காட்டுதலாகும்.

மதுரை பற்றிய பாடல்கள் கிடைக்காமை பெருங்குறை யாகும். பரிபாடல் இனிமையும் இசையும் பொருந்திய பாக் களாய் மக்கள் இன்ப வாழ்க்கையையும் சமய வாழ்க்கையை யும் இயல்பு சிறிதும் குன்றாமல் சித்திரிக்கின்றன.

## 12. புறத் தொகை நூல்கள்

சங்க காலத்தில் புறப் பொருள்பற்றிப் பாடப்பெற்ற பாக்கள் இரண்டு தொகை நூல்களில் இடம் பெற்றன. சேர மன்னரையே பற்றிய நூறு பாடல்களும் பதிற்றுப்பத்து என்னும் பெயர் கொண்ட தொகை நூலானது. மன்னர், வள்ளல், வீரம் பற்றிய 400 பாடல்களையும் 'புற நானூறு' என்னும் தொகை நூலாக்கினர்.

(i) **பதிற்றுப்பத்து:** இது சேர மன்னர் பத்துப்பேர் பற்றிப் பத்துப் பத்துப் பாடல்களாகப் பாடப்பெற்ற நூறு பாடல்களைக்கொண்ட தொகை நூலாகும். முதற் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. தொலைந்த முதற்பத்து உதியனைப்பற்றியதென்றும் இறுதிப்பத்து யானைக்கண் மாந்த ரஞ்சேரல் இரும்பொறையைப் பற்றியது என்றும் கருது கின்றனர்.

தொகுத்தவர் தொகுப்பித்தவர் யார் யார் என்பது தெரியவில்லை. பாடல் ஒவ்வொன்றுக்கும் பாடலில் வரும் சிறந்த சொற்றொடரைத் தலைப்பாகச் சூட்டியிருப்பது தொகுப்பு முறையின் வளர்ச்சியைக் காட்டுகிறது. ஒவ்வொரு பத்திற்கும் அவ் அவ் அரசரின் வாழ்நாளில் நிகழ்ந்த

நிகழ்ச்சிகளைக் கொண்ட பதிகம் உள்ளது. பாடல்களைத் தொகுத்தவர் இப்பதிகங்களைப் பாடிச் சேர்த்திருக்கக்கூடும். இந்நூலுக்குப் பழைய உரை உண்டு. ஔவை சு. துரைசாமி ஓர் உரை இயற்றியுள்ளார்.

முதல் ஆறு பத்திற்குரிய அரசர் உதியன் சேரன் மரபினர். பின்னுள்ள நால்வரும் அந்துவன் சேரன் மரபினர். முன்னைய மரபினர் வஞ்சியைத் தலைநகராகக்கொண்டு முதன்மைவாய்ந்த சேர மன்னராய்த் திகழ்ந்தனர். பின்னைய மரபினர் தொண்டியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டனர். ஒவ்வொரு பத்திலும் நாடு, வளம், மக்கள் வாழ்க்கை, அரசர் வெற்றி, கொடை முதலியவற்றைக் காணலாம். உண்மையைக் கூறுதலே குறிக்கோளாய்ப் புலவர் பாடினராதலின், இத்தொகை நூல் சேரர் வரலாற்றைக் கணிப்பதற்கு அரிய துணையாகும்.

இரண்டாம் பத்து: இது இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்பற்றிக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய பத்துப் பாடல்களாகும். சேர வேந்தன் புலவர்க்கு உம்பர்க்காட்டிலுள்ள 500 ஊர்களைப் பிரமதாயமாக அளித்ததோடு 38 ஆண்டுகட்குத் தென்னாட்டு வருவாயில் ஒரு பகுதி அளித்தான். இமயம்வரை எதிரியிலானாகித் தமிழகம் விளங்கத் தனியாட்சி புரிந்தான். கடல்மேற் சென்று கடம்பினை வெட்டிப் பகை வென்றான். பகைவர் பேரூர்களையும் நிலங்களையும் பாழ் செய்தான். கரும்பும் நெல்லும் கழனிகளில் ஓங்கவும், கூலவாணிகம் பெருகவும், மக்கள் ஒழுக்கத்துடன் நோயின்றி வாழவும் வளம் பெருக்கி நிலையான ஆட்சி புரிந்தான். அரிய பெருமையும், மிக்க ஒளியும், ஆண்மையும், கைவண்மையும், ஆற்றலும், நல்ல இல்வாழ்வும் பொருந்திப் பாவலர்க்கு மாரிபோல் வழங்கினான்.

மூன்றாம் பத்து: இது பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பற்றிப் பாலைக் கௌதமனார் பாடியது. மன்னன் வழங்கிய பெரும் பொருளால் ஒன்பது வேள்வி செய்து பத்தாம் வேள்வியில் மனைவியோடு துறக்கம் எய்தினார் என்பர். இம்மன்னன் இமயவரம்பன் தம்பியும் உதியஞ்சேரலாதன் மகனுமாவன்.

பெரிய யானைப்படைஉடையவன். உம்பர்க்காட்டில் தன் ஆட்சியை நிறுவினான். சோழனும் பாண்டியனும் வேளிர் மன்னரும் எதிர்த்தபொழுது வென்றான். அகப்பா என்ற அரணை அழித்தான். ஆநிரை மிக்க கொங்கு நாட்டைக் கொண்டான். யானைப்படையால் பகைவர் நாட்டைப் பாழ் செய்தான். பூழியர்கோன், அயிரைமலைத் தலைவன் என்று பாராட்டப்பெற்றான். அவனது பேரியாறுபாயும் நாடு வாழ்த்துப் பெற்றது. பாணர், கூத்தர், பாவலர்முதலியோரின்பசியைப் போக்கினான். பெரும் பானைகளில் சமைத்து உணவும் ஊன் கறியும் வந்தவர்க்கெல்லாம் வயிறார அளித்து மகிழ்ந்தான்.

நான்காம் பத்து: இது களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது. இவ்வேந்தன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மகன் ஆவன். போர் பல கண்டவன், பூழி நாட்டை அழித்தான். நன்னனின் காவல் மரமான வாகையைத் தடிந்து அவனை அழித்தான். இவனைக் கண்டால் பகைவர் பொருதமாட்டாமல் விலகிச் செல்வர். பகைவரைக் கொல்லாது அவர்தம் மனக்கொடுமை அகற்றித் திருத்துவான். மாட்சிவாய்ந்த குணத்தோடு பொறையுடைமை மிக்கவன். படையழிவு நேராமல் தன் படையைப் பாதுகாப்பான். இப்பாடல்களில் பல போர்க் கள வருணனைகள் உண்டு.

ஐந்தாம் பத்து: கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியது. இவனே சிலப்பதிகாரச் செங்குட்டுவன் ஆவன். நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மகள் வயிற்றில் பிறந்தவன். சோழன், பாண்டியன், குறுநில மன்னர் முதலியோருடன் வந்த மோகூர் பழையனை வென்று அவன் வேம்பினை வெட்டி முரசு செய்து கொண்டான். பகைவர் எழுவர் மணிமுடிப் பொன்னால் செய்த ஆரத்தையுடையவன். கடலிடத்தினின்று போர் செய்து பகைவரை ஓட்டினான். செங்குட்டுவன் இமயப் போர் வென்று கண்ணகிக்குக் கல்லெடுத்து வந்த செய்தி பதிகத்தில் குறிக்கப்பட்டு இப் பத்தில் குறிக்கப்படவில்லை. ஆதலால் இப்பத்து அதற்குமுன் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். இப்பாடல்களில் இள

வேனில் விழா, புனலாடு விழா, பூத்த வேங்கையைப் புலி யெனக் கருதி யானை குத்துதல் போன்ற இயற்கை வருணனை கள் இடம் பெற்றுள்ளன.

**ஆறும் பத்து:** ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியது. நூறாயிரம் காணம் பொன்னும் பரிசிலும், மன்னன் அருகில் அமரும் பெரும் பேறும் பெற்றார். இம்மன்னனும் நெடுஞ்சேரலாதன் மகனே. இவன் கலைஞர்க்கு மெல்லியன். ஆனால் பகைவர்க்கு வல் லியன். அடைக்கலம் அளித்து அருள் காட்டுவதில் சிறந்தவன். மகளிர் ஊடல் சினத்தீ தன்னினும் பகைவர் துன்பம் கண்டு அஞ்சுபவன். இரவலர் வாராராயின் தேடி ஆள் அனுப்பித் தேரில் கொணர்ந்து பரிசில் வழங்குவான். கூத்துக்கலை பயின் றவன். கூத்தர்களுக்கு மிகுந்த பரிசில்கள் வழங்கி வந்தான். 'தேவி ஊடலில் சிறு குவளை கொண்டு தாக்கல்' போன்ற சுவை கனிந்த செய்திகளை இப்பத்தில் காணலாம்.

**ஏழாம்பத்து:** செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது; பாரி இறந்தமையால் பரிசில் பெற வரவில்லை என்றும் 'உண்மையையே கூறுவேன்' என்றும் கபிலரே பாட்டில் கூறியுள்ளார். ஓர் இலட்சம் பொற்காணம் பரிசில் பெற்றதோடு குன்றேறி நின்று பார்க்கக் கண்ணில் பட்ட இடமெல்லாம் பரிசில் பெற்றார். செல்வக் கடுங்கோ இரும்பொறை மரபினன். அந்துவன் மகன். பார்ப் பார்க்கு அஞ்சி ஒழுகுபவன். பெரும் பொருள் வழங்கல், சொல் தவறாமை, வென்றி, கொடை முதலியவற்றையும் புலவர் பாராட்டியுள்ளார்.

**எட்டாம் பத்து:** பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில் கிழார் பாடியது. இம்மன்னன் செல்வக் கடுங்கோ மகன் ஆவன். பெரிய யானைப்படை உடையவன். சோழன், பாண்டியனோடு வந்த அதிகனைக் கொன்று தகடூரை அழித்தான். 'ஆடுபரந்தன்ன மாவின் ஆபரந்தன்ன யானை யோன்' என்று புலவர் தகடூர்ப் போர்க்களத்தை வருணித்துள் ளார். இரு பெரு வேந்தரையும் வென்று அவர்தம் முரசு பிளந்து பட்டத்து யானை மருப்பால் அரியணை செய்து

கொண்டான். அயிரைமலையன், கொல்லிப் பொருநன், பூழியர் மெய்ம்மறை என்று பாராட்டப் பெற்றுள்ளான். அவன் வெற்றிச் சிறப்பும் ஆங்காங்கே கூறப்பெற்றுள்ளன.

ஒன்பதாம் பத்து: இதில் இளஞ்சேரல் இரும்பொறையை பெருங்குன்றூர் கிழார் பாடியுள்ளார். இம்மன்னன் பெருஞ்சேரலின் மகன் ஆவன். இரு பெரு வேந்தரையும் விச்சிக்கோவையும் வென்றான். ஐந்து எயில் அழித்தான். பொத்தியாண்ட பெருஞ் சோழனையும் இளம்பழையன் மாறனையும் வென்றான். இவனது முன்னோரின் வெற்றிகள் தொகுத்துக் கூறப் பெற்றுள்ளன. செல்வக் கடுங்கோவைக் கபிலர் உண்மையுறப் பாடியதை இப்புலவர் பாராட்டியுள்ளார். மன்னனின் வெற்றி வேட்கை, படைச் சிறப்பு, வானி ஆறு, வெள்ள வருணனை பாடல்களுக்கு அழகு ஊட்டுகின்றன. அயிரை மலையில் நிகழும் கொற்றவை வழிபாடு குறிக்கப் பெற்றுள்ளது. தன் குடி வழி நீளும் பொருட்டுப் புதல்வன் வேண்டிப் பெரு வேள்வி செய்தான்.

தனிச்சிறப்பு: சேர மரபினர் பற்றியே கூறும் தொகை நூல். கால வரிசை கருதித் தொகுக்கப்பெற்றது. அரசரும் உண்மையே விரும்பினராதலின், உண்மையான நிகழ்ச்சிகள் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. கபிலர் தாம் உண்மையே பாடுவதாகக் கூறியிருக்கிறார். மற்றொரு புலவர் அவரைக் கனவிற் பாடாது நனவிற் பாடும் கபிலன் என்று பாராட்டியுள்ளார். சோழ பாண்டிய வேந்தரில் பெருநற்கிள்ளியும் முதுகுடுமிப் பெருவழுதியுமே வேள்வி செய்தனராகச் சேரவேந்தர் அனைவருமே வேள்விக்குத் துணை நின்று அந்தணர்க்குப் புரவலராய்த் திகழ்ந்தனர். சேர நாட்டு வரலாற்றைச் செப்பமுறத் தீட்டுவதற்குப் பதிற்றுப் பத்து அரிய சான்றாக நிற்கும்.

**(ii) புறநானூறு:** புறப் பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட தொகைநூலாகும். தொகுத்தவர், தொகுப்பித்தவர் எவரெவர் என்பது தெரியவில்லை. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப்பா உள்ளது. 160 புலவர்களின்

பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இப்புலவர்கள் காலம், குலம், இனம், தொழில், இடம் முதலியவற்ருல் வேறுபட்டவர் ஆவர். மன்னர் பாடிய பாடல்கள் சில உண்டு; ஊன்பொதி பசுங்குடையார், தொடித்தலை விழுத் தண்டினூர் போலப் பாடலின் சொற்ருெடரால் பெயர் பெற்ற புலவரும் உண்டு.

இதற்குப் பழைய உரை உண்டு. அதன் ஆசிரியர் பெயர் கிடைக்கவில்லை. அவ்வுரை பதவுரையாக விளங்குகிறது. செய்யுளில் சொற்கள் ஆற்ருெழுக்காய் அமைந்திருப்பது போன்றே எளிய நடையில் உரை அமைந்துள்ளது. பொருள் மாறுபாடு காட்டும்போது பிறரைக் கண்டிக்காமல் கூறுகிருர். உரை சுருங்கவும் விளக்கமுறவும் உள்ளது, இவ்வுரையின் அமைதியும் நயமும் திறனும் நோக்க, இவ்வுரையாசிரியர் பேராசிரியர், நச்சினூர்க்கினியர் முதலானோர் போல் திறன் வாய்ந்தவர் என்று டாக்டர் உ. வே. சா. கூறுகிருர்.

இதனைத் தொகுத்தவர் கையாண்ட தொகுப்பு முறை எது என்று காணல் அரிது. ஆயினும் துருவிக் காணுங்கால் அவர் ஏதோ ஒரு முறையினைக் கையாண்டுள்ளார் என்பது வெளிப்படுகிறது. மூவேந்தர், வள்ளல், தலைவர், தத்துவம், துன்பியல், மறத்துறை, தலைவர் பெருமை முதலிய பகுதிகளாகப் பகுத்துக் காணுங்கால் புறநானூற்றுத் தொகுப்பு முறை சிறந்ததாகத் தோன்றும்.

**மூவேந்தர்:** *(2-85)* முற்பகுதியில் உள்ள பாடல்கள் மூவேந்தரைப் பற்றிக் கூறுகின்றன. பூதப்பாண்டியன் நெடுஞ்செழியன், நலங்கிள்ளி போன்ற மன்னர்களின் வஞ்சினப்பாட்டுக்களும் உள்ளன. மூவேந்தரின் ஆற்றல், ஆட்சி, பண்பு நலன்களை அறியவும் வெண்ணி, தலையாலங் கானம் முதலான வரலாற்றுச் சிறப்புடைய போர்கள் பற்றி அறியவும் பெருவேந்தரோடு நெருங்கிய நட்புறவுடன் வாழ்ந்த புலவர்களை அறியவும் பயன்படுகின்றன.

**வள்ளல்கள் :** *(87—165)* இவை கடையெழு வள்ளல்கள் பற்றிய பாடல்களாகும். அதிகன், பாரி, காரி, ஆய், பேகன்

நள்ளி, ஓரி என்னும் வரிசையில் பாடல்கள் வைக்கப்பெற்றுள் ளன. பின்னர், குமண வள்ளல் பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதன் வைப்பு முறை கால ஆராய்ச்சிக்குப் பயன்படுமா என்பது விளங்கவில்லை. ஆயினும் குமணன் கடையெழு வள்ளல்களுக்குப் பிற்பட்டவன் என்பது இவ் வைப்பு முறையில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. ஆயி னும் நாஞ்சில் வள்ளுவன் பற்றிய பாடல்கள் ஆய்வள்ளல் பற்றிய பாடல்களுக்கு அடுத்தாற்போல் இடம் பெற்றுள் ளன. நாஞ்சில் வள்ளுவனும் சிறந்த வள்ளலாகக் கருதப் பட்டான் போலும். கடையெழு வள்ளல்களின் கொடைப் பண்பையும் வீரவாழ்க்கையையும் இப்பாடல்கள் அழகுற உணர்த்துகின்றன. அதிகமானுக்கு ஆட்சித் துணையாய் விளங் கிய ஔவையாரையும் பாரிக்குத் தோழனாய்த் திகழ்ந்த கபிலரையும் அறிவதற்குத் துணையாகின்றன.

தலைவர்: *(166-181)* இப்பகுதியில் ஏனாதி திருக்கிள்ளி, பிட்டங் கொற்றன், பண்ணன், நாலைகிழான், மல்லிகிழான் முதலிய தலைவர்கள் பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்கள் இத்தலைவர்களின் பேராற்றல், பண்பு நலன் கள் பற்றிக் கூறுகின்றன.

தத்துவம்: *(182-195)* இவற்றைத் தத்துவப்பாடல் கள் எனலாம். இவை பொருண்மொழிக் காஞ்சித்துறைப் பாடல்களாகும். இவையெல்லாம் சான்றோர் உலக வாழ்க் கையினைக் கூர்ந்து நோக்கி அனுபவ முதிர்ச்சியில் கண்ட கருத்துக்களாகும். பிறர் நலம் பேணல், கல்வியின் உயர்வு, முறையான ஆட்சி, மக்கட் செல்வம், செல்வந்துய்த்தல், வாழ் வின் குறிக்கோள், கவலையிலா வாழ்க்கை, உலகை உறவாகக் கொள்ளல், அல்லது செய்யாமை போன்ற அரிய உண்மைகளை உளங்கவரும் பாடல் வடிவிலே தந்துள்ளனர். இவையெலாம் உலகம் சிறந்து விளங்குவதற்கு உறுதிப் பொருள்களாக நிற்பவையாகும்.

துன்பியல்: *(196-272)* இப்பகுப்பில் பல்வகைத் துன்பங்கள் பற்றிய பாடல்களைக் காணலாம். இலவந்திகைப் பள்ளியில் துஞ்சியோர் பற்றிய பாடல்களும் பரிசில் நீட்டித்

தலாகிய பண்பின்மை பற்றிய பாடல்கள் சிலவும் உண்டு. புலவர் சென்று தம் வறுமைத் துன்பத்தை விளக்கும் பாடல் களும் உள்ளன, கோப்பெருஞ்சோழன் மக்களோடு மாறுபட்டு மனமுடைந்து வடக்கிருந்ததும், பொத்தியாரும் பிசிராந்தை யாரும் வருந்தியதும் வடக்கிருந்ததுமான பாடல்கள் இப் பகுதியில் அடங்கியுள்ளன. நலங்கிள்ளி, கிள்ளிவளவன்,அதிக மான், வேள்பாரி மற்றும் பலர் இறந்தபோது புலவர் கண்டு கண்ணீர் சிந்திப்பாடிய கையறு நிலைப்பாக்கள் பல உள்ளன. சேரமாக்கோதை தேவி, பூதப்பாண்டியன்தேவி ஆகியோர் தீப்பாய்ந்தது கண்டு கலங்கிப் பாடிய பாக்கள் உள்ளன. முதுமைநிலை (தாபதவாகை), முதுபாலை (பிரிந்துழி ஆற் ருமை) முதலிய அல்லல் பாடல்களும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

மறத்துறைகள் : (273-373) இதனை வீரவாழ்வியல் பகுதியாகக் கொள்ளலாம். தனி வீரர்களின் பெயரைக் குறிக்காமல் அவ் வீரர் போர்க்களத்தில் பேராண்மை காட்டிப் பொருத அழகை இப்பாடல்களில் பார்க்கிருேம். இளஞ்சேட் சென்னி, நெடுஞ்செழியன், கிள்ளிவளவன் முதலியோர் பற்றிய வீரப்பாடல்களும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. பெரும்பாலும் மறத்துறைகள் பற்றிய பாக்கள் அந்தந்த துறையின் கீழ் ஒரு சேரத் தொகுக்கப் பெற்றுள்ளன. கோழையையும் குதித்தெழச் செய்யும் வீர உணர்ச்சி ததும்பும் இப்பாக்கள் தமிழ் வீரத்தைச் சுவைக்க விரும்புவார்க்கு நல்விருந்தாகும். 'எல்லாரும் மாவும் வந்தன...செல்வன் ஊரும் மா வாராதே' குதிரை மறம். ''முதியோள் சிறுவன், களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை, ஈன்ற ஞான்றினும் பெரிதே. உவகை. 'ஒரு மகனல்லதில்லோள், செருமுக நோக்கிச் செல்கென விடுமே' முதின் முல்லை. 'வேம்பும் ஆரும் போந்தையும் மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்......ஈகுவன் அல்லன்.' மகட்பாற்காஞ்சி. பெருங்காஞ்சியில் நிலையாமை கூறப் படுகிறது. மறக்களவேள்வியில் போர்க்கள அழிவு கூறப் படுகிறது. போரின் வீர நிகழ்ச்சிகள் இலக்கணத்தில்

மறத்துறைகளாக நின்று போகாதே, தமிழர் வாழ்வில் காணும் அன்றாட நிகழ்ச்சிகள் ஆயின என்பதை இப்பாடல்கள் உணர்த்துகின்றன.

முடிவு : இறுதியில் உள்ள பாடல்கள் மூவேந்தர் புகழை மீண்டும் நினைப்பூட்டும் முடிவுப் பகுதியாக உள்ளன. இவை பெரும்பாலும் பாடாண்திணை பற்றிய பாடல்களே. சேர, சோழ, பாண்டியர் மற்றும் பல தலைவர் முதலியோர் பற்றிய வாழ்த்துக்களாகவும் புலவர் பரிசில் வேண்டிப் பாடிய பாக்களாகவும் உள்ளன.

புறநானூற்றுப் பாடல்களிலிருந்து சங்க காலப் புலவர்களின் அரிய பண்புகள் வெளிப்படுகின்றன. பரந்த மனப்பான்மை வாய்ந்தவர். ஒற்றுமையையே விரும்பினர்; மன்னராலும் மக்களாலும் நன்கு மதிக்கப் பெற்றனர். தன்மானம் மிக்குப் பீடுநடையுடன் விளங்கினர். தொண்டுள்ளம் செறிந்தவர். நட்புணர்வும் நன்றியறிவும் நிரம்பிக் கல்விப் பெருக்கம் உடையவராய்த் திகழ்ந்தனர்.

மன்னர்களின் தலைமைப் பண்பையும் மற்றும் அவர்தம் வீரம், கொடை முதலான உயர் பண்புகளையும் பாடல்களில் காணலாம். கிள்ளிவளவன், நலங்கிள்ளி, நெடுஞ்செழியன், அதிகமான, பாரி போன்றோர் பாடப் பெறுவதற்கென்றே பிறந்த தலைவராகத் திகழ்ந்தனர். கோவூர் கிழார், மாங்குடி மருதனார், ஔவையார், கபிலர் முதலியோர் அத்தலைவர்களைப் பாடுவதற்கென்றே பிறந்தவர்களாக விளங்கினர். வீரம் முதலான மனிதப்பண்புகள் விளையாடும் களமாகத் தமிழகம் திகழ்ந்தது என்பதைப் புறநானூறு காட்டுகிறது.

இசை, நாட்டியம் முதலான கலைகள் பற்றியும் மோரியர் படையெடுப்புப் போன்ற வரலாறு பற்றியும் அறியத் துணை புரிகிறது. வாழ்ந்த தமிழகத்தின் மனவளம், பண்புவளம், வலி வளம், கலை வளம் முதலியன உணர்த்தும் கவினிய ஏடாகப் புறநானூறு காட்சியளிக்கிறது.

# 13. பத்துப் பாட்டு

இது பத்துப் பெரிய பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூலாகும். மிகச் சிறிய முல்லைப்பாட்டு 103 அடிகளையும் மிகப் பெரிய மதுரைக் காஞ்சி 782 அடிகளையும் உடையன. இறையனார் அகப்பொருள் உரையில் பத்துப்பாட்டு என்னும் தொகை நூல் குறிக்கப்பெறவில்லை. இதனால் பத்துப் பாட்டு தொகுக்கப்பட்டதற்கு முன் இறையனார் அகப்பொருள் தோன்றியிருத்தல் வேண்டும் என்பது உண்மையாகிறது.

பத்துப்பாட்டுக்கள் துவக்கத்தில் தனித்தனிச் சிறு நூல்களாகக் கருதப்பட்டுப் பின்னரே தொகை நூலாகத் தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும். ஆயினும் உரையாசிரியர் 'பாட்டும் தொகையும் கீழ்க்கணக்கும்' என்று பத்துப்பாட்டை முன் வைத்துப் போற்றியுள்ளனர்.

பத்துப் பாட்டின் வைப்பு முறையினைப் பழம் பாடல் ஒன்று கூறுகிறது.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி — மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

இப்பத்துப் பாட்டுக்களுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) ஐந்தும் ஆற்றுப்படைப் பாட்டுக்கள். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை மூன்றும் அகப்பாட்டுக்கள். நெடுநல்வாடையும் மதுரைக் காஞ்சியும் புறப்பாட்டுக்கள் ஆகும்.

பத்துமே வரலாற்றுப் பாட்டுக்கள் எனத்தகும். பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும் கரிகால் சோழனின் நாடு, நகர், போர், அரும்பண்புகள் முதலியன பற்றிக் கூறுகின்றன. மதுரைக் காஞ்சியும் நெடுநல் வாடையும் பாண்டிய நாடு, நெடுஞ்செழியன் பற்றிக் கூறுகின்றன. பெரும்பாணாற்றுப்படை தொண்டைமான் இளந்திரையனையும் சிறுபாணாற்றுப்படை நல்லியக் கோடனையும் மலைபடுகடாம்

நன்னனையும் திருமுருகாற்றுப்படை தமிழ்க் கடவுளான முருகனையும் வரலாறு விளங்கப் பாடுகின்றன. முல்லைப் பாட்டும் குறிஞ்சிப்பாட்டும் முல்லைத்திணையையும் குறிஞ்சித் திணையையும் விரித்துக் கூறி அகவொழுக்க வரலாறுகள் என்னும்படி அமைந்துள்ளன. ஆதலால் பத்துப்பாட்டினைத் தமிழக வரலாற்றைக் கூறும் பத்துச் சிறு காவியங்கள் என்று போற்றவேண்டும்.

## 14. ஆற்றுப்படைப் பாட்டுக்கள்

ஆற்றுப்படைப் பாடடுக்கள் ஐந்தும் பொதுவான அமைப்பை உடையன.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்

(தொல். புற 30)

என்பது ஆற்றுப்படைக்கு இலக்கணமாகும். கூத்தர், பாணர், பொருநர், விறலி இவர்களுள் வறியவனும் பரிசில் வளத்தோடு வருபவனும் வழியில் மாறுபட்ட நிலையில் சந்திக்கின்றனர். பரிசில் பெற்றவன் பெறாத வறியவனுக்கு வள்ளலிடம் தான் பரிசில் பெற்ற வகையினைக் கூறி வறியவனையும் அவ்வள்ளலிடம் போய்ப் பரிசில் வாங்கும்படி கூறுகிறான். ஆனால் திருமுருகாற்றுப்படைக்கு இத்தொல்காப்பிய விதியில் இலக்கணம் இல்லை. பன்னிரு பாட்டியலில் புலவராற்றுப் படைக்கும் சேர்த்து வகுத்த இலக்கணத்தைக் கொண்டு திருமுருகாற்றுப்படையைப் புலவராற்றுப்படையாகக் காண்பர்.

(i) திருமுருகாற்றுப்படை : நக்கீரர் முருகன்மீது பாடியது. இது ஆசிரியப்பாவில் 317 அடிகளைக் கொண்டது. இதனைப் புலவராற்றுப்படை எனவும் வழங்குவர்.

இது மற்ற ஆற்றுப்படைகளின்று வேறுபட்டது. பிற ஆற்றுப்படைகள் வழிப்படுத்தும் பாணன் முதலியோர் பெயரால் வழங்கப்படும். இது பரிசில் வழங்கும் முருகன் பெயரால் வழங்கப்படுகிறது. பிறவற்றில் பரிசில்பெற்றவன்,

பெற இருப்பவன் இவர்களின் பழையநிலை, வழியின் தன்மை, பரிசில் பெறு முறை முதலியன விரிவாக வருணிக்கப்பெறும். இதில் அவை குறிப்பாகக்கண்டு பொருள்கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளன. பிறவற்றில் வேந்தர், சிற்றரசர் முதலியோர் வழங்கும் பரிசில் பொன் முதலான பொருளாகும். இங்கு முருகன் தலைவன். அவன் வழங்கும் பரிசில் திருவருளாகிய வீடு பேறு.

திருமுருகாற்றுப்படை சிறந்த அமைப்புடையது. முன் பகுதியில் முருகனின் உருவ அழகும் அரும் பெருஞ் செயலும் கூறித் திருவருள் பெற விரும்பும் இரவலனை அவனிடம் அனுப்புகிறார். பின்னர் முருகனது ஆறுபடை வீடுகளையும் அங்கு நடைபெறும் வழிபாட்டு முறைகளையும் அழகுற வருணிக்கிறார்.

திருப்பரங்குன்றமே முருகன் படை வீடுகளுள் முதன்மை வாய்ந்தது. மதுரைக்கு அருகில் உள்ள அத்திருக்குன்றத்தில் முருகன் விரும்பிக் குடியிருக்க, வானவர் அங்கு வந்து வழி படுவர்.

திருச்சீர் அலைவாய் என்ற திருச்செந்தூர் இரண்டாம் படை வீடாகும். பிணிமுகம் என்ற யானைமேல் அமர்ந்து ஆறு முகங்களும் வரமருளல் முதலான அருள் காட்ட அவற்றிற்கேற்பப் பன்னிரு கைகளும் செயல் புரிய, இசைக் கருவிகள் ஒலிக்க, மயில்மேல் ஏறி வான் வழியே சென்று திருச்செந்தூரில் தங்குவான்.

பழனியாகிய திருவாவினன்குடி மூன்றும் படைவீடு. இங்கு முனிவரும் நோன்பிகளும் முன் செல்ல இசை முழங்க நன்மகளிர் திரண்டு வர, மூவரும் தேவரும், வான் வழி வந்து முருகனை வணங்கிச் செல்வர்.

திருவேரகமும் முருகன் விரும்பி உறையும் இடமாகும். தஞ்சை மாவட்டத்தில் உள்ள சுவாமிமலையே திருவேரகம் என்பர். கன்னடநாட்டில் ஏரகம் என்னும் ஊர் உள்ளது. இப்படை வீட்டில் அந்தணர் காலையிலே நீராடி ஈர உடையோடு தலைமேல் கை குவித்து முருகன் புகழ் பாடித் தூய் மலர் தூவி வழிபடுவர்.

பின்னர், குன்றவர் வழிபடும் முருகனைக் காட்டுகிறார். மலையெல்லாம் அவன் வீடு. மலைவாணரெல்லாம் அவன் பக்தர். வானவர்க்கும் முனிவர்க்கும் அடியார்க்கும் அரும் பொருளான முருகன் குறவர் வெறியாட்டுவிழாவிலும் குரவைக் கூத்திலும் கலந்து கொள்கிறான்.

பழமுதிர்சோலை ஆறும் படைவீடு. 'பழமுதிர் சோலை மலை கிழவோனே' என்று முருகனுக்குள்ள உரிமை வலியுறுத் தப்படுகிறது. இது அழகர்மலையே என்பர். இச்சோலை மலையின் வளம் அழகுற வருணிக்கப்பட்டுள்ளது.

முருகன் தமிழ்க் கடவுள். காடு, சோலை, ஊர், மன்றம், குளம் எதிலும் அவனை வழிபடலாம். விரும்பியவண்ணமே வந்து காட்சியளிப்பான். அவனை வணங்க எங்கே செல்வது என்றோ, எப்படி அவனை வழிபடுவது என்றோ ஐயங் கொள்ள வேண்டாம். 'ஏவலர் சென்று இரவலன் வந்துள்ளான்' என் பதற்குள் அச்சம் மறைத்து இளநலம் காட்டி 'அஞ்சாதே; அறிவேன் உன் வரவை' என்று கூறித் திருவருட் பரிசிலை வழங்குவான்.

பண்டைத் தமிழ்நாட்டில் முருகன் கோயில்கொண்ட இடங்களையும் நடைபெற்ற வழிபாட்டு முறைகளையும் அறி வதற்கு இப்பாட்டு பயனுடையதாய் அமைந்துள்ளது. இதனைப் பாடிய நக்கீரரே நெடுநல்வாடையையும் பாடி யுள்ளார்.

(ii) பொருநராற்றுப்படை: முடத்தாமக் கண்ணியார் பாடியது. பாட்டுடைத்தலைவன் கரிகாலன் ஆவன். இது 248 அடிகளால் தொல்காப்பியரின் ஆற்றுப்படை இலக்கணத் திற்கு இசைய அமைந்துள்ளது.

வறுமை வாட்டத்தால் வள்ளலைத்தேடும் பொருநன் பாலைக்காட்டில் கள்வர் கல் நெஞ்சையும் உருக்கவல்ல இசை யெழுப்பும் யாழினை மீட்டி மயிலனைய பாடினியோடு பாலைத் தெய்வத்தை வழிபடுங்கால் பரிசில் பெற்றுத் திரும்பும் பொருநன் அவனைக் கண்டு கரிகாலனிடம் வழிப்படுத்து வதாய் அமைந்துள்ளது.

வழிப்படுத்தும் முறையில் தன் அனுபவத்தை நயமுறக் கூறுகிறான். பழு மரம் நாடும் பறவைபோல் தேடிச்சென்றால் புத்தாடையும் மதுவும் வழங்கி அரண்மனையில் பல நாள் தங்கச் செய்து பல்வகை உணவு ஊட்டிப் பெரும் பரிசில் வழங்குவதைப் பரிசில் பெற்ற பொருநன் எடுத்துரைத்தான்.

பின்னர்க்கரிகாலன் பெருமைபற்றிப்பேசுகிறான். கரிகால் வளவன் இளஞ்சேட் சென்னியின் புதல்வன். தாய் வயிற்றிலிருந்தே அரசுரிமை எய்தியவன். வெண்ணிப் போரில் சேரனையும் பாண்டியனையும் வீழ்த்தியவன் என்றுரைத்தான்.

வறிய பொருநனின் ஆர்வத்தை மேலும் தூண்டுவதற்காக, கரிகால் வளவன் கந்தலாடைகளைவித்துக் கொட்டைக் கரையுடைய பட்டுடை கொடுத்துப் பொருநனுக்குப் பொற்றாமரையும் பாடினிக்குப்பொன்னரிமாலையும் அளித்து, வளவயலும் யானையும் நல்கி ஏழடி நடந்து பின் வந்து தேரில் ஏற்றிப் பொருநனை வழியனுப்புவான் என்று கூறினான். இறுதியில் நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி நால்வகை நிலங்கள் மயங்க மக்கள் நெருங்கிப் பழகச் செங்கோல் ஆட்சி நிலவிய சோழநாடு காவிரியால் வளம் பெறுதல் அழகுற வருணிக்கப்படுகிறது.

முடத்தாமக்கண்ணியார் பெண்பாற் புலவர் ஆவர். உறுப்புக் குறையால் இப்பெயர் பெற்றிருத்தல் கூடும். கரிகால்வளவன் பிறப்பு வளர்ப்பையும் சோழ நாட்டு வளத்தையும் வெண்ணிப் போரினையும் மற்றும் போர்ச் செய்திகளையும் பாடியுள்ளார். இப்பாட்டில் உவமைகள் நன்கு கையாளப் பெற்று நகைச்சுவையும் மிளிர்வதைக் காணலாம். வஞ்சியடி விரவப் பெற்ற ஆசிரியப் பாவால், ஓசை நயம் கனிய அமைந்து சிறந்த பாட்டாக விளங்குகிறது.

**(iii) சிறுபாணாற்றுப்படை:** நத்தத்தனார் ஓய்மானாட்டு நல்லியக்கோடன்பற்றி 249 அடிகளில் பாடியது ஆகும். சிறிய யாழையுடைய வறிய பாணன் பாலை வழியில் நடந்து வந்து அலுத்திருக்க நல்லியக் கோடனிடம் பரிசில்

பெற்றுத் திரும்பும் பாணன் கண்டு, தனக்களித்த வள்ளலின் நாடும் ஊரும் குணமும் விருந்தோம்பும் திறனும் கூறி அவனிடம் வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இது சிறந்த அமைப்பும் அழகிய வருணனையும் உடைய சிறு நூலாகும். வறியபாணன் வனப்புடைய விறலியோடும் குடும்பத்தோடும், பாலைவழியில் தங்கிச் சிறிய யாழினை மீட்டிக் கொற்றவையைப் பரவும் வேளையில் நல்லியக் கோடனிடம் பரிசில் பெற்றுத் திரும்பும் பாணன் வந்து கண்டு உரைக்கின்றான்.

வளமார்ந்த தமிழகத்தைக் காட்டினாலன்றிப் புலவர்க்கு மனம் நிறைவுறாது போலும். தொண்டை நாட்டின் சிறு பகுதியெனத் தகும் ஓய்மானாட்டை வருணிப்பதை விட்டுச் செங்கழுநீர் மேய்ந்த எருமை மிளகுக் கொடி படர்ந்த புலா மரத்தடியில் துயிலும் மலை வளத்தையும் வஞ்சி நகரையும் உடைய சேர நாட்டை வருணிக்கிறார். மந்தி கிளிஞ்சலில் முத்திட்டுச் சிறுவர்க்குக் கிலுகிலுப்பை யாட்டும் முத்து வளம் மிக்க கொற்கையையும் தமிழ் வளம் நிலை பெற்ற மதுரையையும் கொண்ட பாண்டிய நாடு பாடப் பெறுகிறது. பொய்கைத் தாமரைப் பொகுட்டில் பெண் வண்டுடன் சேர்ந்து ஆண் வண்டு சீகாமரம் பாடும் புனல் வளம் பொங்கும் உறந்தையைக் கொண்ட சோழ நாடும் வருணிக்கப் பெற்றுள்ளது. பின்னர், கடையெழு வ்ள்ளல்களின் வீரமும் புகழும் மனத்திரையில் வந்து வீழ்கின்றன. இவ்வாறு மூவேந்தர் நாட்டையும் கடையெழு வள்ளல்களையும் முன்னிறுத்தியே புலவர் நல்லியக்கோடனைப் பாடத் தொடங்குகிறார்.

செல்லரித்துச் சிதைந்த குடிசையில் உப்பில்லாக் கீரையுணவு உண்டு வருந்திய தன் வறிய நிலையையும் நல்லியக் கோடனை நாடிப் பெருஞ் செல்வம் பெற்றுத் திரும்பி வருதலையும் கூறி வறிய பாணனைத் தேற்றிச் செம்மல் உள்ளத்தோடு செல்லுமாறு வழிப்படுத்துகிறான்.

வழி கேட்கும் பாணனுக்கு வாயூறி நெஞ்சம் நிறையும் வண்ணம் வழியழகையும் பெறும் விருந்தினையும் விளக்கு

கிறன். பாடல் பெறத்தக்க வனப்புடைய நெய்தல் வழியில் நடந்து எயில் பட்டினம் கண்டு மதுவும் குழல் மீனும் உண்டு மகிழலாம். வளமிக்க முல்லை நில வழியே நடந்து வேலூர் எய்தி இனிய புளிஞ் சோறும் ஆமான் இறைச்சியும் உண்ணலாம். பொய்கை நிறைந்த வள வயல்கள் ஊடாகச் சென்று ஆமூர் அடைந்து அரிசிச் சோற்றை நண்டுக் குழம்புடன் உண்டு களிக்கலாம்.

வறிய பாணன் பெறப்போகும் சிறப்பினையும் செல்வப் பாணன் உரைக்கின்றன். விழா நிகழும் மாவிலங்கை வீதி வழியே சென்று அடையாப் பெரு வாயில் அடைந்து பன்மீன் நடுவில் பால் மதிபோல் வீற்றிருக்கும் நல்லியக் கோடனைக் கண்டு யாழிசைத்துப் பாடிப் புகழ்ந்து புத்தாடை பெற்றுப் பீமபாக உணவு உண்டு பொன் பொருளோடு நரை எருது பூட்டிய வண்டியில் ஏறி வரலாம் என்று வறிய பாணனைத் தூண்டுகிறன்.

நத்தத்தனர் இடைக்கழி நாட்டு நல்லூரைச் சார்ந்த வர். நல்லியக்கோடன் கடையெழு வள்ளல்களுக்குப் பிற் பட்டவன். திண்டிவனத்தை அடுத்தபகுதியான ஓய்மா ஞட்டின் 'மாவிலங்கை' என்பதனைக் கோநகராகக் கொண்டு ஆண்ட குறுநில மன்னன். அவனைப் பற்றிய பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது. புலவர் இப்பாடலில் மன்னன் குண நலன்களையும் நாட்டின் அழகையும் நன்கு காட்டியுள்ளார். காட்சிகளைச் சொல்லோவியமாகத் தீட்டு வதில் தன்னிகரற்று விளங்குகிறர். பலா மரத்தடியில் உறங்கும் எருமை; கடம்ப மரப் பொய்கை நடுவில் உள்ள செந்தாமரைப் பொகுட்டின்மீது பாடும் வண்டு ; காஞ்சி மரப் பொய்கையில் கெண்டை மீனைக் கொத்தி யெழும் சிச்சிலிப் பறவை முதலிய காட்சிகள் நெஞ்சை விட்டு நீங்காத்தன்மை வாய்ந்தவை.

**(iii)** பெரும்பாணற்றுப்படை : இது கடியலூர் உருத் திரங்கண்ணனர் காஞ்சி மன்னன் தொண்டைமான் இளந் திரையன் குறித்து 500 அடிகளில் பாடிய ஆற்றுப்படை நூலாகும். பாலை வழியில், ஆதரிப்பாரைக் காணமல்

அவலமுற்றிருக்கும் பேரியாழ்ப்பாணனைத் தொண்டைமான் இளந்திரையன் பெருமை உரைத்துக் காஞ்சிக்கு வழி கூறி அனுப்புவதாக அமைந்துள்ளது.

செல்லும் வழியில் திருடர் பயமோ காட்டு விலங்கு அச்சமோ இல்லை. வழியில் உப்பு வணிகர் சென்று கொண்டிருப்பர். மிளகுப் பொதி சுமந்த கழுதைகள் வந்து கொண்டிருக்கும். காவலாட்கள் காத்துத் திரிவர். காட்டில் எயினப் பெண்கள் புல்லரிசியும் ஊனும் கலந்து சமைத்த உணவு அளிப்பர். எயினர் குடில்களில் தங்கி அரிசிச் சோறும் உடும்புக் கறியும் உண்டு செல்லலாம். பகை நாட்டுப் பசுக்களை ஓட்டி வரும் மறவர் கள்ளுண்டு களிக்கும் காட்சிகளைக் காணலாம்.

முல்லை நில வழியில், ஆடுகள் தழையுண்ணல், மோர் விற்றுத் திரும்பும் ஆயர் மகளிர், நெய் விற்ற பணத்திற்கு எருமை வாங்கித் திரும்பும் இடைச்சியர் முதலான காட்சிகளைக் காணலாம். அங்குத் தினையரிசிச் சோறும் பாலும் பெறலாம். மேய்ச்சல் நிலத்தில் இடையர் வில் யாழ் மீட்டி ஆநிரைகளை மேய்ப்பர். முல்லை நிலச் சிற்றூர்களில் வரகரிசிச் சோறும் அவரைப் பருப்புக் கறியும் உண்ணலாம்.

மருத நிலவழியில் நாற்று நடுதல், களை பறித்தல், கதிர் அடித்தல் முதலான காட்சிகளைக் கண்டு நெற்குதிர்கள் நிற்கும் பேரூர் நெருங்கிச் செல்வச் சிறுவர் தேர் உருட்டும் பெருமனை அடைந்தால் அரிசிச் சோறும் கோழிப் பொரிய லும் பெறலாம். கரும்பாலைகளில் கருப்பச்சாறும் கற்கண் டும் கிடைக்கும். வலைஞர் மனைகளில் கள்ளும் சுட்ட மீனும் உண்டு களிக்கலாம். குளங்களில் தாமரை முதலான மலர் பறித்துச் சூடலாம். அந்தணர்தம் தூய இல்லத்தில் மாதுளங்காய்ப் பொரியலும் மாங்காய் ஊறுகாயும் பெற்று உண்ணலாம்.

வேள்வி அந்தணர் வாழும் 'நீர்ப்பெயல்' ஊரினைக் கடந்து சென்றால் பட்டினம் அடையலாம். அங்குக் குதிரை கள் வந்திறங்கும். பரதவர் மலிந்திருப்பர். கடைகளில்

கள்ளும் பன்றிக்கறியும் விற்கும். வணிகர் வாழும் வான ளாவிய மாளிகை விளக்கு கலங்கரை விளக்கம்போல் திகழும்.

பின்னர் ஆங்காங்கே உள்ள தோப்புத் தனி வீடுகளில் பலாப்பழம், இளநீர், பனை நுங்கு பெற்று ஊர் பல கடந்து திருவெஃகா எய்தி இருந்து இளைப்பாறலாம். பாம்பணைப் பள்ளியில் துயில் கொண்ட கோலத்திருமாலை வணங்கி வழி நடந்தால் காஞ்சி அடையலாம். தொண்டைமான் இளந் திரையனை அணுகிப் புகழ் பாடினால் உடை வழங்கி விருந் தோம்பிப் பொற்றாமரைப் பூவும் பொன்னரி மாலையும் பரிசில் அளித்து அம்மன்னன் புரவி நான்கு பூட்டிய தேரில் ஏற்றி அனுப்புவான்.

உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையைப் பாடுவதற்கு முன் இப்பாட்டினைப் பாடியிருத்தல் வேண்டும். தொண்டை மான் இளந்திரையனின் நாட்டமைப்பு, நகரங்கள், மக்கள், தொழில், வாழ்க்கைமுறை முதலியவற்றை இயல்புறக் கூறி யிருக்கிறார். கடற்கரைப்பட்டினம், திருவெஃகா, காஞ்சி இவற்றின் அமைப்புக்கள் அழகுறக் கூறப்பட்டுள்ளன. பட்டி னத்தில் வந்திறங்கும் பரிசுகள், மிளகுப்பொதியினைக் கழுதை மேலே ஏற்றிச்செல்லல் முதலான வாணிப நலங்களைத் தீட்டு வதில் புலவர்கள் கொண்ட ஆர்வத்தை ஆராய்ந்தால் இப் பாட்டு பட்டினப்பாலைக்கு முன்னோடியான நூல் என்று அறியலாம்.

(v) மலைபடுகடாம்: இது கூத்தராற்றுப்படை என்றும் வழங்கப்படும். பெருங்குன்றூர் பெருங் கௌசிகனார் நன்னன் மகன் நன்னன்பற்றி 583 அடிகளில் பாடிய பாட்டு ஆகும், நன்னனைத் தேடிப் போயிருக்கும் கூத்தனுக்கு நவிரமலை வழி யின் நன்மை தீமைகளையும் அதன் அருமைபெருமைகளையும் விளக்கி நன்னனிடம் சென்று பரிசில் பெறும் முறையினைக் கூத்தன் தான் பரிசில் பெற்ற அனுபவத்தால் உரைப்பதாக அமைந்துள்ளது.

வறிய கூத்தன் ஆற்று மணல்மேட்டில் விறலியும் சுற்ற மும் சூழ இருக்க, பரிசில் பெற்றுத் திரும்பும் கூத்தன் தான் நன்னனிடம் பெற்ற பரிசில்களை அவனுக்குக் காட்டி வழியும் உரைக்கிறான்.

முல்லை நில வழியில் கைப்பிடியளவில் காய் ஏழு நிற்கும் எள்ளுக்காய், பின்னிய துதிக்கை அனைய தினைக்கதிர், வளமான அவரை, வரகு, கவலைக் கிழங்கு, பாறைமேல் குத்தி நிற்கும் வாழைக்குலை, மலை நெல், நாவல்பழம், பலாப் பழம் முதலியன கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்.

மலையடியில் வேடர் குடில்களில் தங்கி வேட்டைக் கறியுண்டு செல்லலாம். மலைச்சரிவில் அசோக மர நிழலில் நடந்து மூங்கில் பள்ளத்தாக்கைக் கடந்து வேடர் சிற்றூரில் தங்கினால் நெய்யில் பொறித்த கறிப் பொரியலும் தினைச் சோறும் கள்ளும் வீடுதோறும் பெறலாம். அவர்கள் அளிக்கும் விருந்தும் சந்தனம், அகில், பொன், மாணிக்கம் முதலான பரிசில்களும் நன்னன் தரப்போகும் பரிசிலை மறக்கச் செய்து ஊருக்குத் திரும்பச் செய்யக்கூடும்.

அப்பால் உள்ள வழி ஆபத்து நிறைந்தது. பன்றிகட்கு வைத்த பொறிகள், நிலவெடிப்புக்களில் உள்ள பாம்புகள், கவண்வீசும் கற்கள், காட்டாற்றின் சுழிகள், முதலைகள், நீரோட்டம் இவற்றை நீக்கி வழி நடந்து ஏறி இறங்கி வழுக்கினைக் கவனமுடன் கடந்து பாசிக்குளத்தில் கால் வையாமல் வழி நடந்து மழை தூறும் இடத்தில் உள்ள காரியுண்டிக் கடவுளை இசைக்கருவிகளை வெளியே எடுத்து இசைக்காமல் தொழுது செல்லவேண்டும். தேனடைகளை நோக்குதல் கூடாது. வேட்டையில் வீழ்ந்துகிடக்கும் பன்றியைச் சுட்டுத் தின்று சுனைநீர் பருகிக் கற்குகையில் தங்கி யானையையும் கொல்லும் மலைப்பாம்பிற்ககப்படாமல் நச்சுப்பழங்களை நெருங்காமல் செல்லவேண்டும். திசை மயங்கும் வேளை இசைக்கருவிகளை முழக்க உச்சிமலை வேடர் ஓடி வந்து கலக்கம் போக்கிப் பழம் முதலியன தந்து வழிகாட்டி அனுப்புவர்.

பூ மிகுந்த பக்கமலையில் தங்கி வானர மகளிர் நீர் விளையாட்டோசை, முள்ளம் பன்றியால் தாக்கப்பட்டோர் அழுகை, புலியால் தாக்குண்டோர் புண்ஆறப் பாடும் ஓசை, பூக்கொய்யுமோசை, துணையிழந்த களிற்றோசை, குட்டியிழந்த குரங்கின் ஓசை, தேன் கூடு அழித்தல், குரவை, அருவியோசை, யானை அடக்குதல் முதலிய ஓசைகள் திசையெலாம் முழங்கக் கேட்கலாம்.

நன்னன் மலையூரில் சிலநாள் தங்கலாம். வழியில்காணும் தெய்வங்களைத் தொழுது தொழுது மழை பெய்யும்போது குகையில் தங்கித் தங்கி அரண் ஓரமாய் மெல்ல நடந்து நடுகல் வீரர்க்கு வணக்கம் செலுத்திக் கொடுவிலங்குக் காட்டைக் கடக்கலாம்.

முல்லைநிலத்தில் ஆயர் விருந்தளிப்பர். ஊர்களில் இரவில் தங்கி இளைப்பாறிச் செல்லலாம். மருத நிலவளங் களைக் கண்டு களித்துக் கொண்டே சேயாற்றை யடைந்ததும் அதன் கரையோரமாய்ச் சென்று நன்னன் தலைநகரை அடை யலாம்.

காவலாளிக்கு அஞ்சாமல் அரண்மனை வாயிலைக் கடந்து முற்றத்தில் குவிந்திருக்கும் விலங்குக் குட்டிகள், காய், கனி மலர் முதலான மலைப் பொருள்களைக் காணலாம். கடவுள் வாழ்த்துப் பாடிப் புதுப்பாடலைத் தொடங்கியதுமே நன்னன் வந்து அழைத்துப்போய் அமர்த்தி விரும்பி நோக்கி மிக்க பரிசில் வழங்கி அனுப்புவான்.

புலவர் நவிர மலையினையும் அதன் உயிர்த்துடிப்பையும் அழகுற எடுத்துக் காட்டியுள்ளார். வழியின் நன்மை தீமை களையும் அவ்வழியில் காண்பனவற்றையும் வருணித்திருப் பதைப் படித்தால் இதனை வழிகாட்டி (guide)யாகக்கொண்டு மலையேறிப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மனத்தே எழும், தவறான வழியெனக்கண்ட வழிப்போக்கன் பிறர் நன்மைக் காக அவ்வழியில் புல்வைத்து மூட வேண்டுமாம். மலை யோசை வருணனையும் குறவர் நன்னன் அரண்மனையில் குவித்த காணிக்கைப் பொருள்களும் சிலப்பதிகாரக் காட்சிக் காதையில் பயன்படுத்தப்பட்டிருப்பதை நோக்குங்கால், இப்பாட்டு இளங்கோவடிகளின் உள்ளத்தைக் கவர்ந்தது என்று கொள்ள வேண்டும்.

## 15. மாநகர்ப் பாட்டுக்கள்

மதுரைக் காஞ்சியையும் பட்டினப் பாலையையும்மாநகர்ப் பாட்டுக்கள் என்று அழைக்கலாம், மதுரைக் காஞ்சியில் மதுரை மாநகரின் வரலாறு முதன்மையான இடம் பெற்றுள்

ளது. பட்டினப்பாலை பெயரளவில்தான் அகப்பொருள் நூலாக உள்ளது. காவிரிப்பூம்பட்டினத்தின் பெருமையைப் பாடுவதே இப்பாட்டின் நோக்கமாகும். ஆதலால் இவ்விரு பாட்டுக்களும் இரு பெரு நகரங்களின் வரலாற்றை அறிவதற்குத் துணை புரிகின்றன,

**(i) மதுரைக் காஞ்சி :** இப்பாட்டு மாங்குடி மருதனர் தலையாலங்கானப்போர் நெடுஞ்செழியன் குறித்துப் பாடியது 782 அடிகளைக் கொண்ட இப்பாட்டே பத்துப்பாட்டில் மிகப் பெரியதாகும். புலவர் நெடுஞ்செழியனுக்கு வீடு பேறு குறித்து நிலையாமையை அறிவுறுத்தும் முறை மிகச் சிறந்ததாகும். நெடுஞ்செழியனின் கொடை, வீரம் முதலிய பண்புகளைப் பாராட்டிப் பின் நிலையாமையைச் சில அடிகளில் குறிப்பாகப் புலப்படுத்திப் பின் மதுரையைப் பாராட்டியிருப்பது புலவரின் உலகியல் அறிவையும் அரசரிடம் முறை தெரிந்து ஒழுகுதலையும் நன்கு காட்டுகிறது.

சிறு காவியம் எனத்தகும் இப்பாட்டு முதலில் நெடுஞ்செழியனின் புகழைப் பாடுகிறது, இம்மன்னன் நன்னிலையில் நாடாண்ட மரபினன். பொதிமலையினன். தலையாலங்கானப்போர்வென்றவன். நிலத்தரு திருவிற்பாண்டியன்வழித் தோன்றல். குமரி முதல் இமயம் வரை இவனே தலைவன். சாலியூர் கொண்டவன். பல்குட்டுவரை வென்றவன். கொற்கைத் தலைவன். விண்ணகமே பெறினும் பொய் சொல்லான்; மெய்யன்; தென் திசையில் வாணன் வைத்த பொருள் வரினும் பழி புரியான்.

நெடுஞ்செழியன் புலவன்; அறிஞன்; தேர்ந்த சிந்தனையாளன். ஆதலால் புலவர் 'வளர் பிறைபோல் சிறக்க' என்று வாழ்த்திப் பின் நிலையாமையைக் குறிப்பாகக் கூறுகிறுர்,

'கரைபொரு திரங்கு கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை யுலகத்து மாண்டுகழிந் தோரே' (மது. )

'புகழோங்க வாழ்ந்து கழிந்த மன்னர் கடல் மணலினும் பலர்' என்று குறிப்பாக நிலையாமையை உணர்த்திப் போர்

மயக்கத்தைத் தவிர்த்து அறப்பணியில் ஈடுபடுத்தி வீடு பேற்றை நினைக்கத் தூண்டுதல் அழகுற அமைந்துள்ளது.

புலவர் பாட்டில் மதுரையின் வனப்பையெல்லாம் விரித் துரைக்கிருர். நால்வகை நில நடுவே வையைக் கரையோரம் அமைந்த மதுரை அகழ், மதில், பெருவாயில், அகன்ற வீதி உடையது. அங்கு விழாவொலி மிகுந்திருக்கும்.

நாளங்காடியும் அல்லங்காடியும் மதுரையின் பெருமையை விளக்கும். அங்காடித் தெருவில் பல்வகைக் கொடிகள் பறந்து கொண்டிருக்கும். நால்வகைப் படைகள் வந்து போகும் போதெல்லாம் பூ, சுண்ணம், வெற்றிலை, பாக்கு விற்போர் ஒதுங்கி நிற்க நேரிடும். அவர்கள் மாடங்களின் ஓரமாக நிழலில் இருந்து விற்பர். கிழவியர் பண்டங்களைக் கொண்டு மனைதோறும் சென்று விற்பர். அல்லங்காடியில் உள்ள சைவ, சமண, பௌத்தக் கோயில் களில் வழிபாடு நிகழும். அங்கு அந்தணர் இல்லங்கள் உண்டு. அறங்கூறவையத்தார், காவிதிப் பட்டம் பெற்ற அமைச்சர், நாற்பெருங் குழுவினர், வணிகர், தொழி லாளர் முதலியோரின் ஆரவார ஒலி அங்கு மிகுந்திருக்கும். பலாப்பழம் விற்பர்; பிற நாட்டு வணிகர் திரிந்து வாங்கும் ஆரவாரம் பறவையொலி போலிருக்கும்.

மதுரையின் ஓர் இரவினைப் பாருங்கள். கதிரவன் மறைய மங்கையர் மனைதோறும் விளக்கேற்ற மதுரை புதுப் பொலிவு கொள்கிறது, இன்ப வாழ்க்கை தொடங்கு கிறது. முதற் சாமத்தில் பரத்தையர் இளையரோடு விளையாடுவர். மறவர் மகிழ்ந்து திரிவர். குழந்தை பெற்ற வர் குள நீராடுவர்; தலைச் சூலியர் தெய்வத்திற்குப் படைப் பர். முருகன் மன்றத்தில் குரவைக்கூத்து நிகழும், எங்கும் ஆரவாரம் முழங்கும்.

இரண்டாஞ் சாமத்தில் சங்கங்களில் ஒலி அடங்கும். வணிகர் கடைகளை மூடிவிட்டு மகிழ்ந்து துயில்வர். அப்ப வணிகர் உட்கார்ந்தபடியே உறங்குவர். கூத்தர் துயில் கொள்வர். எல்லோரும் இனிது உறங்குவர்.

மூன்றாஞ் சாமத்தில் பேய் திரியும். களவுக் கலையில் தேர்ந்த காவலர் கள்வரை நாடித் திரிவர். தெய்வங்கள் உலாவும். விடியற்காலத்தில் அந்தணர் வேதம் பாடுவர். பாணர் பண் பழகுவர். யானை குதிரைகளுக்கு உணவு இடுவர். கடை மெழுகுவர், கள்ளுக்கடை திறக்கும்; பள்ளி யெழுச்சி முரசு முழங்கும். பறவை ஒலிக்கும்; விலங்கு ஆரவாரிக்கும்; மகளிர் முற்றம் பெருக்குவர்; பகை நாட்டில் கொள்ளப்பட்ட யானை, குதிரை, பசுக்களும் வந்து கொண்டிருக்கும். பகைவர் தந்த காணிக்கை வந்து குவியும். இவ்வாறு மதுரையின் வனப்பெல்லாம் நன்கு விளக்கப்படுகிறது.

மன்னன் நாட் பணி வருணிக்கப்பட்டுள்ளது. வேந்தன் துயில் எழுந்து ஆடை, அணிகளைப் புனைந்து அவைக்கு எழுந்துவர, படைத்தலைவர் நின்று வெற்றி வாழ்த்து முழங்குகின்றனர். மன்னன் முதன் முதல் வெற்றியோடு திரும்பி வந்த வீரரை அழைத்துப் பாராட்டிப் பின் பாணர் புலவர் முதலியோர்க்குப் பரிசில் வழங்குகிறான்.

பாட்டின் இறுதியில் புலவர் மன்னனுக்கு முன்னோரான முதுகுடுமிப் பெருவழுதியையும் நிலந்தரு திருவிற் பாண்டியனையும் நினைப்பூட்டி, ''குடிமக்களைப் பெருக்கி, பேரற நூல்களைக் கற்றுக் கடல் நடுவே தோன்றும் கதிரவன் போல், விண்மீன் இடையே தோன்றும் திங்கள் போல், சுற்றம் தழுவக் குறுநில மன்னர் புகழ வாழ்நாள் முழுவதும் மகிழ்ந்து வாழ்க'' என்று வாழ்த்தி முடிக்கிறார்.

புலவர் இப்பாட்டில் வெறுப்பில் தோன்றும் வாழ்க்கை நிலையாமையைக் கூறவில்லை. மன்னன் மறப்புகழ் விடுத்து அறவாழ்வில் ஆழ்ந்து முழுவாழ்வு வாழ வேண்டுமென்று நிலையாமை உணர்வைப் புகட்டுகின்றார். மாதேவியையும் மறந்து மறப்போரில் மயங்கிக் கிடந்த நெடுஞ்செழியனை நாடுபுரக்கும் நற்பணிக்குத் திருப்பி அமைதியான முழு வாழ்க்கை வாயிலாக வீடுபேறு அடையத் தூண்டும் முறை தமிழ் நெறியாகும். இதனை அழகுறக் காட்டியுள்ளார். மதுரை வாழ்க்கையை வண்ணச் சொல்லோவி

யமாக்கியுள்ளார். நெடுஞ்செழியன் வரலாறும் அவன் மதுரை வரலாறும் உணர்த்தும் இப்பாட்டு வரலாற்றுச் சிறு காவியமாகக் கொள்ளத்தக்கது.

**(ii) பட்டினப்பாலை :** இப்பாட்டில் கடியலூர் உருத்திரங்கண்ணனார், 301 அடிகளில் திருமாவளவனை கரிகாலன் குறித்துப் பாடியுள்ளார். இது அகப்பொருள் வகையைச் சார்ந்தது. ஆனால் பிரிதல் என்னும் பாலை ஒழுக்கம் சில அடிகளால் கூறப்படுகிறது. காவிரிப்பூம் பட்டினத்தின் பெருமையையும் கரிகாலன் புகழையும் பாடுவதே இப்பாட்டின் நோக்கமாகும்.

பாட்டின் முன் முகப்பில் காவிரியின் கரையோரக் காட்சி காட்டப்படுகிறது. குடகில் பிறந்து கடலில் கலக்கும் பொய்யாக் காவிரிப் புனல் பரந்தோடிப் பொன் கொழிக்க, நெல்லும் கரும்பும் வயலில் தழைத்து வளரும்; வாழை, கமுகு, தென்னை, மஞ்சள், இஞ்சி, மா, பனை கரையோரம் வளமுறத் திகழும். கோழியை ஓட்டச் செல்வ மகள் எறிந்த மகரக் குழைகள் சிறுவர் உருட்டும் சிறு தேரைத் தடுக்கும். கரையில் இரு மருங்கும் இத்தகைய வளமான ஊர்கள் நிறைந்திருக்கும்.

பின்னர், பட்டினத்தின் வெளிப்புறக் காட்சி வருகிறது. உப்பை நெல்லுக்கு மாற்றிக் கொணர்ந்த படகுகள் நகர்ப்புற உப்பளங்களில் நிற்கும். சுற்றிச்சூழ சோலைகள் திகழும். வண்ணமலர்ப் பொய்கையும் சோமகுண்டம் சூரியகுண்டமெனும் இரட்டை ஏரிகளும் இலங்கும். புலி பொறித்த வலிய கதவுடைய மதிலில் செல்வம் இருக்கும். உணவு அறச்சாலைகள், மாட்டுத் தொழுவங்கள், சமண பௌத்தப் பள்ளிகள், துறவியர் பொழில்கள், காளி கோயில் எல்லாம் கண்ணுக்கினிய நகர்ப்புறக்காட்சிகளாகும்.

புறஞ்சேரியில் பன்றி, கோழிகள் திரியும். அங்கு உறைக் கிணறு உண்டு. சேரி மணல் திட்டில் வலிய இளைஞர் மற்போர், சிலம்பு விளையாட, மக்கள் திரண்டு நின்று பார்ப்பர்.

விளையாட்டு கைகலப்பில் முடிவதுமுண்டு. பரதவர் குடிசைகளில் கிடாயும் சிவல்பறவையும் விளையாடும்; அங்குத் தூண்டில்கள் சார்த்தப் பெற்றிருக்கும். முழுமதிநாளில் பரதவர் வேட்டைக்குச் செல்லார். பரதவப் பெண்கள் பெருந்துறையில் சுறுக்கொம்பு நட்டு வழிபடுவர். மைந்தரும் மகளிரும் மலர்சூடி, குடித்துக் களித்துக் கடலாடி, காவிரியாடி, விளையாடிப் போகம் துய்ப்பர், இரவில் இசை கேட்டும் நாடகம் கண்டும் மகிழ்வர். சுங்கக் காவலர் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களுக்குப் புலி முத்திரை இடுவர்.

ஆவண வீதியில், மாடம் மேல் நிற்கும் மகளிர் சன்னல் வழியாகக் கண்டு தொழ, வேலன் வெறியாட்டு நிகழும். அவ்வீதியில் பல்வகைக் கொடிகள் பறக்கும். சந்தைக் கடைத் தெருவில் கடல் மேல் வந்த குதிரை, நிலவழி வந்த மிளகு, வடமலை மணி, பொன், மேலமலை ஆரம், அகில், தென்கடல் முத்து, கீழ்க்கடல் பவளம், கங்கைப் பண்டங்கள், ஈழம், கடார நாட்டுப் பொருள்கள் வந்து குவிந்திருக்கும். நேர்மை தவறு வணிகர் தெருக்கள் அடுத்திருக்கும். பன்மொழி பேசும் அயல் வணிகர் உறவோர் போல் கலந்து வாழ்வர்.

பாட்டின் பின்பகுதியில் திருமாவளவன் பகைச் சிறையினின்று வெளியேறியதும் பகை நாட்டைப் பாழ் செய்ததும் வடவர், சேரர், பாண்டியர். பொதுவர், இருங்கோவேள் முதலியோரை வென்றதும் கூறிக் காடு அழித்து நாடாக்கிக் குளம் வெட்டி வளம் பெருக்கி உறந்தையை விரிவுபடுத்தி, இனிய இல்லற வாழ்வு நடத்திய அழகைக் கூறுகிறார்.

பட்டினப் பெருமையை விரியக்கூறிப் பாலையொழுக்கத்தை இடையில் இரண்டும், இறுதியில் மூன்றுமாக ஐந்து அடிகளில் கூறுகிறார். 'நெஞ்சே பட்டினம் பெறினும் தலைவியைப் பிரிந்து வாரேன்; ஏனெனில் திருமாவளவன் பகைவர் மேல் நீட்டிய வேலினும் கொடியது காடு; அவன் செங்கோலினும் தண்ணியது தலைவி தோள்' என்று பாடிப் பட்டினப்பாலையாக்கி விடுகிறார்.

முடத்தாமக்கண்ணியார் பொருநராற்றுப் படையில் கரிகால்வளவன் என்று குறித்து வெண்ணிப்போரை வியந்து கூறியுள்ளார். இங்குத் திருமாவளவன் என்று குறிக்கப் பெற்றுள்ளான். பகைவர் சிறையினின்று வெளியேறியதும் பகைவர் பலரை வென்றதும் விரியக் கூறப் பெற்றுள்ளன. ஆதலால் கரிகாலன் போர் முடித்து உறந்தை விரித்துப் பட்டின வாணிபம் பெருக்கிய நாளில் இது பாடப் பெற்றிருத்தல் வேண்டும். பாட்டின் சிறப்பை நோக்குங்கால், உருத்திரங் கண்ணனுர் பெரும்பாணுற்றுப்படை பாடிய பின்னரே இதனைப் பாடியிருத்தல் வேண்டும். காவிரிப்பூம் பட்டின அமைப்பு, அயல் வாணிகம், பட்டின வாழ்க்கை, வணிகர் பண்பு முதலியவற்றை விளக்கும் கண்ணுடியாக இப்பாட்டு இலங்குகிறது. வஞ்சியடி கலந்து இன்னேசை ஒழுகச் சென்று சுவை செறிந்த பாட்டாக விளங்குகிறது.

## 16. காதல் பாட்டுக்கள்

அகப்பொருள்பாட்டுக்களுள் ஒன்ருன பட்டினப்பாலையை மாநகர்ப்பாட்டாகக் கண்டாய்ந்தோம். முல்லைப்பாட்டும் குறிஞ்சிப்பாட்டும் மற்ற இரண்டு அகப்பொருள் பாட்டுக் களாகும். நெடுநல்வாடையையும் இப்பிரிவில் அடக்கிக் காண்பது தவருகாது.

முல்லைப்பாட்டு: இது முல்லைத்திணைபற்றிய பாட்டாகும். பத்துப் பாட்டில் இதுவே மிகச் சிறியது. 103 அடிகளைக் கொண்ட இப்பாட்டினைக் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வணிகரின் புதல்வரான நப்பூதனுர் பாடியுள்ளார். பகை மேல் சென்ற தலைவன் வரும்வரை தலைவி ஆற்றியிருந்த நிலையில் அவன் வரக்கண்ட தோழி முதலானேர் தங்களுக்குள் மகிழ்ந்து கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

பாட்டின் முகப்பில் தலைவியின் பிரிவுத்துயர் காட்டப் படுகிறது. பெருமழை பெய்த கார்கால மாலைப் பொழுதில் வண்டு யாழ்போல் இசைக்க, நெல்லும் நாழிமுல்லையும் அலரியும் தூவித் தொழுது, பெருமுது பெண்டிர் விரிச்சி

கேட்டு நிற்க, இடைச்சியர் கன்றுகளை நோக்கி 'இன்றே வருவர் தாயர்' என்று கூறியதை நற்சொல்லாகக் கொள்கின்றனர். தலைவியிடம் சென்று 'உன் தலைவன் வினை முடித்து வருவான்; வருந்தாதே,' என்று எவ்வளவோ சொல்லித் தேற்றியும் தலைவி தேருமல் பூப்போன்ற கண்ணினின்று முத்துப் போன்ற கண்ணீர் சிந்த வருந்துகிருள்.

அடுத்துப் பாசறைக் காட்சி வருகிறது. காட்டாற்றங் கரையில் வேட்டுவர் குடில்களை அழித்து முட்களை மதிலாக வளைத்துக் கட்டிக் கடல் போல் அகன்ற பாடி அமைத்தனர். பெருந்தெருவின் வீடுகள் தழைகளால் வேயப் பெற்றுள்ளன. தெருவில் நின்ற யானை அதிமதுரத்தழை கலந்த நெல்லும் கரும்பும் தின்னுதே கொம்பில் துதிக்கையைத் தொங்கவிட்டு நிற்க, பாகர் கவளம் ஊட்டுகின்றனர். ஊன்றிய விற்கள்மேல் அம்புக் கட்டுகள் தொங்க விடப்பட்டுள்ளன. ஊன்றிய குந்தாயுதங்கள் மீது கேடயங்கள் சார்த்தப்பட்டுள்ளன.

பாசறை நடுவில் அரசனுக்குத் தனி வீடு இருக்கிதது. வாளணிந்த மகளிர் விளக்கேற்றி அவை அவியும் போதெல்லாம் கொளுத்திச் சீர் செய்கின்றனர். மெய்காப்பாளர் திரிகின்றனர். நாழிகைக் கணக்கன் பொழுது அறிந்து கூறுகின்ருன். யவனர் வெளிச்சம் காட்ட அரசன் பள்ளியறை புகுகிருன்; ஊமை மிலேச்சர் காவல் புரிகின்றனர். மறுநாட் போரை நினைக்கவே மன்னனுக்கு உறக்கம் வரவில்லை. அந்நாட் போரில் புண்பட்ட யானை குதிரை வீரர்களை எண்ணி ஒரு கை படுக்கையில் கிடக்க மறு கையை முடிமேல் சேர்த்து நெடிது நினைந்து மறுநாட் போர் முறையை வகுத்துக்கொண்டே உறங்குகிருன்.

திருப்புக் காட்சிபோல் மீண்டும் தலைவியைக் காட்டுகிருர் புலவர். தலைவி தன் நெஞ்சத்தை மன்னன்பால் அனுப்பிவிட்டு வளையல் கழலப் பெருமூச்சுவிட்டு அம்புண்ட மானென நடுங்க, அணி நெகிழ, பாவை விளக்கெரிய, மழைநீர் அருவிபோல் விழ எழும் ஓசை கேட்டு உறக்க

மின்றிக் கிடக்கின்றாள். கார்கால மழையால் கவின் பெற்ற காட்டு நிலம் வழியே மன்னன் தேரில் வெற்றி முழக்கெழ வரும் ஒலி தலைவியின் காதில் விழுகிறது,

புலவர் பொன் வணிகனாரின் புதல்வராதலின் பொன் வாணிபச் செட்டுமையும் துல்லியமும் அழகும் பாட்டில் ஒளிர்கின்றன. காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ் சிறந்து, பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்ப' என்பது போல் சில அடிகளில் சீரிய சொல்லோவியம் வரைந்து விடுகிறார். பழங்காலப் போரின் பாசறை அமைப்பினை இயல்புற வருணித்துள்ளார். யவன மெய்காப் பாளர், ஊமை மிலேச்சர், பாவை விளக்கு முதலியன தமிழன் அயலவரை ஏவல் கொள்ளுதலையும் அயல் வாணிபச் சிறப்பையும் விளக்குகின்றன, இச்சீரிய பாட்டிற்கு மறைமலை அடிகளார் அரிய ஆராய்ச்சி நூல் எழுதியுள்ளார்.

(ii) குறிஞ்சிப்பாட்டு: கபிலர் குறிஞ்சித்திணை பற்றி **261** அடிகளில் பாடிய பாட்டு ஆகும். தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் என்னும் துறை வழி நின்று களவுக் காலத்தில் நிகழும் காதல் நிகழ்ச்சிகளை மேம்பாடு தோன்றப் பாடியுள்ளார்.

தலைவியின் நோய் மருந்தாலோ, முருகன் வழிபாட் டாலோ நீங்காமை கண்டு வருந்தும் செவிலித் தாய்க்குத் தோழி தலைவியின் காதலைத் திறம்பட வெளிப்படுத்துகிறாள். 'நீதானே தினைப்புனங்காக்க அனுப்பினாய்' என்று செவிலி மீது பழியைப் போடுகிறாள். தினைப்புனம் சென்று கிளி ஓட்டி அருவியில் ஆடி மலர் கொய்து சூடி, அசோக மர நிழலில் இருந்தால், அவர்கள்மீது தவறு இல்லையன்றோ?

தலைவிமீது தவறு இல்லை என்றே செவிலி கருதுங்கால், தோழி செவிலி நெஞ்சத்தில் அச்சத்தையும் மருட்கையையும் தோற்றுவிக்க முற்படுகிறாள். வில்லேந்தி அம்பு தேர்ந்து வந்த தலைவன் நாய்கள் வந்து சூழ அவர்கள் அஞ்சி வேறி டம் சென்றனர். குரைத்த நாய்களை அடக்கித் தலைவன்

'யானை வந்ததோ' என்றான். அவர்கள் வாய் திறக்கவில்லை. 'சொல்லொன்றுரைத்தால் பழியாமோ' என்று ஆவலோடு நின்றான். சொல் பிறக்கவில்லை.

தலைவிமீது பழியில்லை என்று செவிலி கருதுமளவில் தோழி மருட்சியூட்டும் நிகழ்ச்சியைக் கூறுகிறாள். 'கானவன் அம்புண்ட மதயானை செருக்கிவர நாணம் கைவிட்டு வெறி கொண்ட மயில்போல் கலங்கிச் சென்று அவன்பின் நின்றோம்' என்கிறாள். நாணம் மறக்க வேண்டிய சூழ்நிலை என்றே செவிலிக்குப் படுகிறது. மதயானையினின்று அவன் தானே காக்க முடியும் என்று எண்ணத் தொடங்குகிறாள். தலைவன் விட்ட அம்பு முகத்தில் அழுத்த, யானை ஓடியது. செவிலி இதில் தலைவன் தறுகண்மையைக் காண்கிறாள். கொல்லாமல் ஓரம்பால் வெருட்டினான் என்பதில் அவன் அருள் தன்மையை யும் காண்கிறாள். அவன் தலைவிக்கும் அருள் காட்டுவதில் தவறான் என்றோர் எண்ணம் செவிலி மனத்தில் மின்னி மறைகிறது.

இதுதான் தக்க வேளை என்றறிந்து காதல் செய்திகளை ஒவ்வொன்றாய்த் தோழி கூறிவிடுகிறாள். ''நாங்கள் கை கோத்து ஆற்று வெள்ளத்தில் குதித்துத் தளர்கையில் அவன் வந்து தூக்கிக் காத்தான்'' என்றாள். தலைவியின் நெற்றியைத் தடவி அச்சம் போக்கினான். தலைவியை அணைத்துத் தழுவினான். 'நீ உணவு இட, நான் உண்ணல் சிறந்தது' என்றான், முருகன்மேல் ஆணையிட்டுப் பிரியேன் என்று அருவி நீரை அள்ளிக் குடித்தான். இருவரும் பகலெல்லாம் சோலையில் கலந்து மகிழ்ந்தனர். மாலையான தும் 'நாடறிய நன்மணம் புரிவோம். நாட்சில பொறுத்திரு' என்று தேற்றி நம்மூர் நீர்த்துறைவரை வந்து விட்டுச் சென்றான் என்று ஒன்றும் ஒளியாமல் கூறிவிடுகிறாள். அன்றுபோல் ஆசையோடு அவளைப் பார்க்க வருகிறான். கட்டுப்பாடு கொண்ட இளைஞன் அவன். ஒழுக்கமுடைய செல்வனுங்கூட. இரவில் வரும் வழியில் புலி முதலியவற் றால் அவனுக்குத் தீங்கு நேருமே என்றே தலைவி அஞ்சு கிறாள்.

கபிலர் ஆரிய மன்னன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்த வேண்டி இப்பாடலைப் பாடினார் என்பர். 'தமிழ்' என்பது அகப்பொருளைக் குறிக்கிறது. அகப்பொருளிலும் களவுக் காதலே தமிழுக்குச் சிறப்பானதால், கபிலர் தமிழ்க் காதலைக் கூறவேண்டி இப்பாடலைப் பாடினார் என்று கொள்ள வேண்டும். தோழி செவிலியின் உள்ளத்து நுட்பம் அறிந்து தலைவியின் புகழிற்கோ தலைவன் பெருமைக்கோ ஊறு நேரா வண்ணம் காதலை எடுத்துரைக்கும் முறை அரியது. இப்பாட்டில் 96 வகைப் பூக்கள் குறிஞ்சி நில அழகுக்கு அழகு செய்கின்றன. இதில் சிறந்த தமிழ்க் காதல் மிக உயர்ந்த முறையில் கூறப்பட்டுள்ளது.

**(iii) நெடுநல் வாடை:** இது நக்கீரரால் பாடல் பெற்றது; 188 அடிகளைக் கொண்டது. போர் காரணமாகப் பிரிந்து சென்றான் தலைவன். அவனை நினைந்து வருந்துகிறாள் தலைவி. அவளது பிரிவுத்துயர் நீங்கும்படி வினை முடிதல் வேண்டிக் கொற்றவையைப் பரவும் தோழி அவன் விரைவில் வருவான் என்று கூறுவதாக அமைந்துள்ளது.

'வேம்பு தலை யாத்த நோன்காழ் எஃகம்' என்பதில் வேம்பு பாண்டியனைச் சுட்டுவதால் இதனைப் புறப்பாட்டாகக் கொள்வர். ஆனால் முழுதும் அகப்பொருளையே கொண்டதாதலின் அகப்பாட்டாகக் காண்பதே சிறப்பாகும். தலைவனைப் பிரிந்துறையும் தலைவிக்குப் பேரூழிபோல் நெடிய வாடையாய்த் தோன்ற, இன்பம் துய்க்கும் வாடைக்காலத்தும் அவ்வின்பத்தில் மனமின்றிப் பகைப்புலத்துத் தங்கியிருக்கும் தலைவனுக்கு நல்வாடையாயிருந்தது. ஆதலால் இப்பாட்டு நெடுநல்வாடையெனப் பெயர் பெற்றுள்ளது.

பாட்டின் முகப்பில் வாடைக்காலம் வருணிக்கப்படுகிறது. வாடைக்குளிரால் இடையர் பல்பறை கொட்ட நடுங்குகின்றனர். விலங்குகள் மேயவில்லை. குரங்குகள் கூம்பியிருக்கின்றன. வாடைக்காற்றால் பறவைகள் நிலத்தே வீழ்கின்றன. முசுண்டை, பீர்க்கு மலர்கள் விரிகின்றன. கயல் மீன்கள் வற்றிய நீரில் மேலேறுகின்றன. கொக்கும் நாரையும் அவற்றைக் கொத்தித் தின்கின்றன. மழைத்

தூறல் வீழ்கிறது. கதிர் நெல் முற்றிக் கிடக்கிறது. கமுகங் காய்கள் முற்றித் தொங்குகின்றன.

வாடைக்காலத்தில் மாநகர் வீதியில் மிலேச்சர் கள்ளுண்டு திரிகின்றனர். அந்திப்பொழுதில் மகளிர் விளக்கேற்றி வீட்டுத் தெய்வத்தை வழிபடுகின்றனர். மாடப்புறுக்கள் பலகைகளில் தங்கியிருக்கின்றன. ஏவலர் அம்மியில் கத்தூரிக் கூட்டு அரைக்கின்றனர். சந்தனக் கல் வறிதே அரைப்பின்றிக் கிடக்கிறது. மகளிர் கூந்தலுக்கு அகில் புகையூட்டுகின்றனர். விசிறிமேல் சிலந்தி கூடு கட்டியிருக்கிறது. கதவுகள் தாழிடப் பட்டுள்ளன. இளையோரும்கூட தூபமூட்டியின் நெருப்பில் குளிர்காய்கின்றனர். ஆடல் மகளிர் யாழ் நரம்பைத் தம் மார்பில் தடவி வெப்புறுத்தி யாழிசைக்கின்றனர், கணவனைப் பிரிந்தோர் கலங்கி வருந்துகின்றனர்.

மாளிகை முற்றத்து மணலில் மானும் அன்னமும் தாவித் திரியும். மாளிகையின் ஒரு பக்கம் குதிரையின் குரலொலி எழும். மற்றொரு பக்கம் மயில்கள் ஆரவாரிக்கும். அழகிய அந்தப்புரத்தில் யவனப் பாவைவிளக்கு எரிய, தந்தக் கட்டிலின்மீது பஞ்சணை மெத்தையில் மார்பில் தாலி ஒன்றே தவழ காதில் மகரக் குழையின்றிப் பொன்வளை கிடந்த கையில் சங்குவளை யணிந்து பட்டு ஒளிர்ந்த அரையில் நூல் சேலை உடுத்திப் புனையா ஓவியம்போல் அரசி திகழ்கிறாள். சேடியர் அடிவருட, செவிலியர் தேறுதல் கூறுகின்றனர். ஆனால் தேவியின் கலக்கமோ நீங்கவில்லை. திங்களைப் பிரியா உரோகிணி போல் பிரியாதிருக்கப் பெற்றிலமேயென்று நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கண்களில் பொங்கிய கண்ணீரை விரலால் தெறித்து வருந்துகிறாள். ‘தலைவியின் தனிமைத் துயர் நீக்கத் தலைவன் வருவானாக’ என்று வேண்டுகின்றனர்.

புலவர் பாசறைக் காட்சியைக் காட்டுகிறார். யானைப் போரில் புண்பட்ட வீரரைப் பார்க்க வேந்தன் புறப்படுகிறான். வீரன் ஒருவன் விளக்கேந்தி முன் நடக்க, வாடைக் காற்றால் விளக்கின் தீக்கொழுந்து தெற்கே சாய்ந்தெறிய, படைத் தலைவன் புண்பட்ட வீரரைக் காட்டிச் செல்ல, சேற்றுத் தெருவில் குதிரை உதறிய துளிகள் தன்மேல் பட

வேந்தன் நடந்து செல்கிருன். வழுவி விழும் மேலாடையை இடப்பக்கத்தே அணைத்து வாள் வீரன் தோள்மேல் வலக்கை வைத்துச் செல்கிருன். புண்பட்ட வீரரின் அகம் மலர அருளோடு நோக்குகிருன். நடுச்சாமத்திலும் பள்ளி கொள்ளாமல் உலவித் திரிகிருன்.

அகப்பாட்டில் கற்பனைத் தலைவன் தலைவியரையே காட்ட வேண்டும்: பெயர் சுட்டுதல் பொருந்தாது என்பது தொல்காப்பியர் விதி. நக்கீரர் பெரும் புரட்சியைச் செய்து விட்டார். நெடுஞ்செழியனையும் அவனது தேவியையும் அகப் பாட்டில் காட்டிவிட்டார். இதனை இலக்கணக்குறை என்ருமல் புலவரின் புதுமைப் புரட்சி என்று பாராட்டிப் பாட்டின் நயங்காணவேண்டும். வாடைக்காலம், தேவியின் தனிமை, பாசறை வேந்தன் முதலிய காட்சிகள் எழிலுறக் காட்டப் படுகின்றன. இதனைச் சொல்லோவியப் பாட்டாகவே கருதலாம். இது இயற்கை அறிவு, சிற்பக்கலைத் தெளிவு, பாசறைத் தொழில், முதலியனபற்றி ஆய்வதற்கு அரியதொரு துணையாகும்.

## 17. சங்க இலக்கியச் சிறப்பியல்புகள்

கி. பி. மூன்ரும் நூற்ருண்டோடு சங்கம் அழிந்தது என்னலாம். அதற்கு முற்பட்ட சங்க காலத்தில் பாடப் பெற்ற பாக்கள் எல்லாம் தனிப் பாடல்களே. 3 அடி முதல் 782 அடி வரையுள்ள பாடல்கள் கிடைத்துள்ளன. இப்பாக்கள் எல்லாம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்னும் ஒன்பது தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவ்விலக்கியப்பாக்கள் பிற்பட்ட அறநூல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், பக்திப்பாக்களிலிருந்து வேறுபட்டு விளங்குகின்றன. தமிழின் தனித்தன்மையும் பெருமையும் அயல் கலப்பின்றித் தூய்மையுறக் கூறப்படுகின்றன. சங்க இலக்கியம் உலகில் சிறந்த இலக்கியவகைகளுள் ஒன்ருக வைத்தெண்ணத்தகும் சிறப்புடையது.

'இலக்கியம் வாழ்க்கையைக் காட்டும் கண்ணுடி' என்பர். இவ்விலக்கியக்கொள்கை சங்க இலக்கியங்களுக்கு

நன்கு பொருந்தும். பின்னைய இலக்கியங்கள்போல் அறத்தையோ தெய்வத்தையோ பாடுவதே அழகு என்று கொள்ளாமல், சங்க இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கை அழகினை வடித்துக் கூறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. பாடுவதற்குரிய பொருளான வாழ்க்கையை அகம் புறம் என்று வரையறுத்தனர். புறத்தில் போர் முதலான பொது வாழ்க்கையையும் அகத்தில் காதல் முதலான தனிக் குடும்ப வாழ்க்கையையும் அடக்கி வாழ்க்கை நலங்களை முழுமை கனிந்திலங்கப் பாடியுள்ளனர். சங்க இலக்கியப் பாக்கள் எல்லாம் இவ்விரு பிரிவுள் அடங்கும். இவ்விரு பெரும் பிரிவுகளைத் திணைகளாகவும் துறைகளாகவும் வகுத்து அவ்வரையறைக்குள் நின்று வாழ்க்கை அழகையெல்லாம் புலவர் பாடியுள்ளனர். புறப்பாடல்களில் வேந்தர், தலைவர், மறவர் முதலியோரின் போராண்மையும் பேராற்றலும் ஒளிர்கின்றன. அகப்பாடல்களில் நெஞ்சங்கலந்த காதலரின் வாழ்க்கை நலமெலாம் வியத்தகு வகையில் காட்டப்படுகின்றன.

சங்க இலக்கியங்களில் இயல்பிறந்த நிகழ்ச்சிகளைக் காணுதல் அரிது. சிலப்பதிகாரத்தில் தொடங்கிய இயல்பிறந்த கூற்று மணிமேகலையில் வளர்ந்து பின்னைய இலக்கியங்களில் பெரிதும் போற்றப்பட்டன. ஆனால் சங்க இலக்கியங்களில் நம்பக்கூடியதும் நடக்கக் கூடியதுமான செய்திகளே கூறப்பட்டுள்ளன. அறிவியலுக்கு மாறுபட்ட இயல்பிறந்த கூற்றினைத் தமிழ்ப்புலவர் ஏற்கவில்லை. கனவிற் பாடாது நனவிற் பாடும் கபிலன் என்பதால் கற்பனைக்குச் சங்க காலத்தில் சிறப்பில்லை என்று அறிகிறோம்.

தமிழ் இலக்கிய நெறியான புலனெறி உலக வழக்கும் நாடக வழக்கும் உடையது. உலகில் வழங்குவதை உள்ளவாறு உண்மை பிறழாமல் கூறுவது உலக வழக்கு. பல்வேறிடங்களில் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளில் சுவையானவற்றைத் தேர்ந்து கற்பனை செய்து உலக இயல்போடு மாறுபடாத வகையில் கூறுதல் நாடக வழக்காகும். புறப்பாக்களெல்லாம் உண்மை நிகழ்ச்சிகளே. அகப்பாக்கள் உலக வழக்கும் நாடக வழக்கும் விளங்க, இயல்புக் கற்பனைகள் இலங்க அமைந்து

கற்போர்க்கு நீடித்த சுவையின்பம்பயக்கின்றன. இல்பொருள் கற்பனை சங்க இலக்கியங்களில் காண முடியாததாகும். அறிவியல் போற்றும் மக்கட்கு இயல்புக் கற்பனையே சீரிய இலக்கிய நெறியாக நிற்கும். சங்க இலக்கியக் கற்பனை நெறி உலக இலக்கிய நெறியாக ஏற்கத் தகும் சிறப்பு வாய்ந்தது.

பாடுதற்குரிய பொருளைக் காட்சிப்பொருள், கருத்துப் பொருள் என்று இரு பிரிவாகவும் பகுக்கலாம். ஐம்பொறியுணர்வுக்கு உட்பட்டுப் புறத்தே தோன்றும் காட்சிகளே காட்சிப்பொருளாகும். மனத்தால் மட்டும் அறியப்படுவனவாய் அகத்தில் எழும் கருத்துணர்ச்சிகள் கருத்துப் பொருளாகும். புறக் காட்சிகளைப் புனைந்து காட்டுவதைவிட அகத்துணர்ச்சிகளை வெளிப்படுத்துவதே அரிய திறனாகும். சங்கப் புலவர் பாடல்களில் இவ்விருவகைத் திறனும் இணைந்து கலந்து விளங்குகின்றன. மலையில் பொங்கிப் பாயும் அருவி மட்டுமன்று; மனத்தில் அலைமோதும் காதல் உணர்ச்சியும் பாடல்களில் காட்சி அளிக்கின்றன. காதல் பற்றிய உணர்ச்சிகளைக் கொண்ட அக இலக்கியம் கவி மலரும் சோலையாகக் காட்சியளிக்கின்றது.

சங்க இலக்கியங்களில் இயற்கை சிறந்த இடம் பெற்றுள்ளது. இயற்கையூடே வாழ்ந்து அதனோடு இரண்டறக்கலந்து பழகினர் தமிழர். அவர்தம் வாழ்வு இயற்கையால் வளமும் நலமும் நிரம்பியது. இயற்கையோடு பின்னிக்கிடந்த தமிழர் வாழ்க்கை அழகைப் புலவர் தம் பாக்களில் எழிலுறக் காட்டியுள்ளனர். முதற்பொருளான நிலமும் பொழுதும் கருப்பொருளான இயற்கைப் பொருள்களும் வாழ்வோவியத்திற்குப் பின்னணிக் காட்சியாகி அழகுக்கு அழகு பயப்பது போல் அமைந்துள்ளன. கூடும் காதலர்க்குக் குறிஞ்சியும் பிரிவுத்துன்பத்துக்குப்பாலையும் இல் இருத்தலுக்கு முல்லையும் ஊடலுக்கு மருதமும் இரங்கலுக்கு நெய்தலும் கவினிய இயற்கைக் களன்களாக அமைந்துள்ளன. இயற்கையழகில் மூழ்கிய சங்ககாலப் புலவர் அதன் பல்வகைக் கோலங்களையும் எழில் நலங்களையும் சொல்லோவியங்களாகத் தீட்டியுள்

ளனர். புன்னை மரம் தமக்கையாகிறது. தலைவி கிளி நாரையிடம் தன் துயரைக் கொட்டுகிறாள். கன்றுக்கும் பிடிக்கும் நீருட்டும் கானகக் களிறு குடும்பப் பொறுப்பைப் புகட்டும் ஆசான் ஆகிறது. இங்ஙனம் இயற்கையை உறவாகக் கொண்ட தமிழர் வாழ்வைச் சங்கப் பாக்கள் காட்டுகின்றன.

'இலக்கியம் இலக்கியத்திற்காகவே' என்பர் ஒரு சாரார். இலக்கியத்தில் 'சுவையின்பம்' அன்றி நீதி முதலான எதுவும் குறிக்கோளாய் இருத்தல் கூடாது என்பது அவர் கருத்து. 'வாழ்க்கையை உள்ளவாறு பச்சையாகக் காட்டலே' இந்நாளில் போற்றற்குரிய இலக்கியக் கொள்கையாயிருக்கிறது. சங்க இலக்கியம், இக்கொள்கைகளைச் சிறு திருத்தத்தோடு கொண்டுள்ளது. அகப்பாடல்களை ஆயுங்கால் இவ்வுண்மை விளங்கும். அப்பாக்களில் சுவை இன்பம் முதன்மை வாய்ந்து விளங்குகிறது. அறப்பயன் கருப்பஞ்சாற்றில் காணுநிலையில் கலந்த மருந்துத் துளியாகவே உள்ளது. ஆனால் வெளிப்படையாய் விரித்துரைக்கும் அறத்தினும் இச்சிறு துளியே நெஞ்சத்தில் ஒன்றி நின்று வளர்ந்து உயர் அறமாய் மலரும். சங்க இலக்கியம் உண்மை வாழ்க்கையினைச் சித்திரிக்கிறது. ஆனால் உயர்ந்த வாழ்க்கையைக் காட்டுகிறது. பெருந்திணை, கைக்கிளை முதலான தாழ்ந்த இன்ப வாழ்வைக் கூறுவதெல்லாம் அன்பின் ஐந்திணை வாழ்வோடு அவற்றை ஒப்பிட்டு அவற்றின் புன்மையை மக்கள் காண வேண்டும் என்பதற்காகவே, அகவாழ்வை மறைவின்றிக் கூறுவதெல்லாம் பச்சையாக இல்லாமல் பசுமையாகவே இருக்கிறது. உடல் உறுப்பு வருணனைகளில் ஈடுபடாமல், உள்ளத்து உணர்ச்சியைச் சித்திரிக்கும் முறை கற்போர் நெஞ்சத்துக்குக் காமக்கிளறியாக இல்லாமல் உயர் அன்புக்குத் தூண்டுகோலாகவே உள்ளது. பயில்வோர் மனநலம் பயிலும் இலக்கியத்திற்கேற்ப உருவாகிறது. சங்க இலக்கியம் பயில்வோர் நெஞ்சத்தை ஏறுதளத்தில் அமர்த்துகிறது. இலக்கியத்தில் தோன்றும் தலைவன், தலைவி முதலியோர் அவ் ஏறுதளத்தின் உச்சியிலே நின்று காட்சியளிக்கின்றனர்.

'எம்மைப்போல் இவ்வுச்சிக்கு வா' என்று அழைப்பவராக உள்ளனர்.

மெய்ப்பாடும் சுவையும் சங்கப் பாக்களுக்கு உயிர்ப்பேறு அளிக்கின்றன. உள்ளத்தின் உணர்ச்சியை மெய்யால் புலப்படுத்துதல் மெய்ப்பாட்டாகும். இம்மெய்ப்பாட்டுக்குரிய உணர்ச்சிகளைச் சிரிப்பு, அழுகை, இகழ்வு, வியப்பு, அச்சம், வீரம், கோபம், உவகை எனக் கொண்டனர். இந்த எண்வகைச் சுவைகள் ததும்பும் சங்கப் பாடல்கள் இலக்கியச் சுவைஞர்க்கு இனிய விருந்தாகின்றன. சுவை தோன்றப் பாடுவதே பாட்டாகக் கொள்ளப்பட்டது. சுவையுணர்ச்சியே பாட்டுக்கு உயிரோட்டமாய் உள்ளது. வீரச்சுவையுணர்ச்சி புறப்பாடல்களிலும் காதல் சுவையுணர்ச்சி அகப்பாடல்களிலும் பொங்கித் ததும்புவதால், சங்க இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டு ஆகியும் இன்னும் உயிர் இலக்கியமாகத் திகழ்கிறது.

சிறியபாக்களே அல்லாமல் மதுரைக் காஞ்சி போன்ற பெரிய பாடல்களும் நாடகப்பாங்கிலே அமைந்துள்ளன. காதல் பாட்டுக்களில் தலைவி, தலைவன் தோன்றித் தம் உள்ளத்து உணர்ச்சியைக் கொட்டுகின்றனர். மற்றும் தோழி, செவிலி முதலியோரும் நாடகப் பேச்சு முறையில் தம் நெஞ்சக் கருத்தை வெளியிடுகின்றனர். இந்த நாடகப் பாங்கு சங்க இலக்கியத்திற்கு, உணர்ச்சியும் ஆற்றலும் நிரம்பிய வீறுநடை அளிக்கிறது.

சங்கப் பாக்களுக்கு உவமை தனியழகு பயக்கிறது. பாடலில் தோன்றும் உறுப்பினர் தாம் அறிந்தவற்றையே உவமையாகக் கூறுவதால், அவ்வுவமை இயல்பும் ஒப்புமையும் அழகும் உடையதாய் உள்ளது. காதல் இரகசியங்களை, இறைச்சி, உள்ளுறை என்னும் அமைப்பில் மறைவாகக் கூறும் முறை மக்கள் நாகரிகப் பண்பாட்டுயர்வுக்குச் சிறப்பாய் அமைவதோடு, புலவரின் நுணுகிய அறிவையும் சுவைஞரின் சுவையறி திறனையும் விளக்குகிறது. சுருங்கக் கூறின் உவமை பாட்டிற்கு முத்தாய்ப்பாய் அணி செய்கிறது. உள்ளுறை உவமும் இறைச்சியும்

பாட்டின் புதை பொருளாய் அமைந்து படிப்போர் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. மற்றும் சிறந்த மொழிக்கு இன்றியமையாத செறிவு, நிறைவு, திட்பம், நுட்பம், சொல் வளம், கருத்து நலம், யாப்பமைப்பு, முதலிய எல்லாம் நிறைந்து, சங்க இலக்கியம் தன் நேர் இல்லாத தனிப் பெருமிதம் தோன்ற இயங்குகிறது.

தமிழர் வாழ்வு உள்ளீடு உடையது; உயரியமான ஆன்மீயம் நிறைந்தது. தமிழர் சமய, சாத்திர, சடங்குகட்கு அப்பாற்பட்ட ஆன்மீய வாழ்வு நடத்தினர். அறத்தை நிலைக்களனாய்க் கொண்டு அன்பில் தழைத்த ஆன்மீய வாழ்வு அது. இந்த ஆன்மீயத்தின் பயனாகத் தமிழர் வாழ்வில் அரும் பண்புகள் பல மலர்ந்தன. மக்கள் இனத்திற்கே என்றும் எடுத்துக் காட்டாய் ஏற்கத் தகும் வாழ்வு இது. இத்தகைய வாழ்க்கையின் அழகுகளை யெல்லாம் சங்க இலக்கியத்தில் காண்கிறோம். சங்க இலக்கியத்தை ஆய்ந்து அதன் அரிய இயல்புகளை வெளிப்படுத்தினால் உலக இலக்கியக் கொள்கைக்கு உறுதுணையாக அமையும்.

# சங்க மருவிய காலம்

## சங்க மருவிய நூல்கள்

கி. பி. மூன்றும் நூற்றுண்டின் இறுதியில் தமிழ்ச் சங்கம் அழிந்திருக்கக்கூடும். கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் ஆறும் நூற்றுண்டு முடிய உள்ள காலத்தை சங்க மருவிய காலம் எனலாம். இதனை இருண்ட காலம் எனவும் கூறுவர்.

மூவேந்தர் வலிமை குன்றவே, ஆட்சி நிலைபேறு இன்றிக் குலைந்தது. கலகமும் குழப்பமும் மலிந்தன. தான் தோன்றித் தலைவர் பெருகினர். கி. பி. மூன்றும் நூற்றுண்டின் இடையில் பல்லவர் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தமிழ் நாட்டின் வடபகுதியான தொண்டை நாட்டை ஆண்டனர். தென்பகுதியான பாண்டிய நாடு களப்பிரர் ஆட்சிக்குட்பட்டது. பின்னர்ச் சோழ நாட்டையும் வென்று ஆண்டனர். இருவருமே வேற்று மொழியினர். பிராகிருதம் அவர்கள் மொழி; ஆட்சி மொழி. பாலி மொழியும் ஆதரவு பெற்றது. பல்லவர் வடமொழியைப் பேணினர். கி.பி. மூன்றும் நூற்றுண்டின் இடைப்பகுதி முதல் ஆறும் நூற்றுண்டின் இடைப்பகுதி வரை சுமார் 300 ஆண்டுகள் தமிழ்நாட்டில் அயலார் ஆட்சி நிலவியது.

பல்லவர் சமண சமயத்தைப் பேணினர். களப்பிரர் முதலில் பௌத்த மதத்தையும் பின்னர்ச் சமண சமயத்தையும் ஆதரித்தனர். சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கால் மக்கள் சிந்தனையில் மாற்றங்கள் நேர்ந்தன. பாவ புண்ணியம், வினைப்பயன், விதி பற்றிய ஆராய்ச்சிகள் பெருகின. மது அருந்தலும் ஊனுண்டலும் பெரும்பாவங்களாகிவிட்டன. அருகித் தோன்றிய களவுக்காதல் அறத்திற்குப் பொருந்தாததாகிவிட்டது. இல்லறத்திலும் துற

வறமே ஏற்றமுடையது என்ற கருத்துப் பரவியது. ஐந்நிலப் பிரிவு வாழ்க்கை வழக்கிறந்த செய்தியானது. ஐந்நிலத் தெய்வங்கள் பழங்கதையாயினர். புதிய சமய வழிபாடுகள் தோன்றின. பௌத்தர், சமணர், சைவர், வைணவர் என்ற புதிய இனம் வகுத்தனர். போராடியே அழிந்து போயினர் மூவேந்தர். போரின் அழிவுகளைக் கண்ட சமுதாயத்திற்கு அப்போர் கொடுமையானதாகத் தோன்றியது. மக்கள் அமைதியான வாழ்க்கை பெற விரும்பினர். புதிய அறவுணர்வு உண்டாகியது. களவும் கற்பும் புலவரின் கற்பனையாகக் கருதப்பட்டன. புதிய சமுதாயம் அகம் புறம் என்ற அமைப்பைக் கடந்து சமய வகுப்பிற்குள் நிற்கத் தொடங்கியது. பொருளதிகாரம் என்ற வாழ்க்கையிலக்கணம் பழைய இலக்கியமரபாகிவிட்டது. புதிய வாழ்க்கைக்கேற்பவே இலக்கியம் தோன்றும் சூழ்நிலை உருவாகியது.

ஆதலால் சங்க மருவிய காலத்தின் இலக்கியத் தோற்றம் சங்க கால இலக்கியத்தின் தொடர்ச்சியாக அமையவில்லை. சங்க இலக்கியம் தொடர்ந்து வளரவும் வழியில்லை. புதிய வகையில் இலக்கியங்கள் எழுந்தன. அறவுரை, ஆசாரம், அருங்கருத்து, வாழ்க்கை உண்மை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறு சிறு நூல் எழுதும் முயற்சிகள் வரவேற்கப்பட்டன. பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அற இலக்கியங்கள் எல்லாம் இவ்வகையில் எழுந்தவைகளே யாகும். அகப்புற இலக்கியக் கொள்கைகளைப் புதுப்பிக்கும் முயற்சியிலும் சில அறிஞர் ஈடுபட்டனர். இதனால் புறத்திற்கொரு 'களவழி' தோன்றியது. அகத்திற்கு ஆறு திணை நூல்கள் தோன்றின.

அக்காலத்தில் வெண்பா ஏற்றம் பெற்றது. கலித்தொகையும் பரிபாடலும் நீங்கலாகச் சங்கப் பாக்களெல்லாம் ஆசிரியப் பாக்களே. சங்க மருவிய காலத்திலோ நீதிகளைக் கூறுவதற்குச் செப்பலோசை கொண்ட வெண்பா யாப்பையே கொண்டனர். அக்காலத்தில் தோன்றிய அகப்பொருள் நூல்களும் வெண்பாவால் ஆகியவைகளே. அக்காலத்ததான முத்தொள்ளாயிரமும் வெண்பாவால்

ஆயதுவே, அக்காலத்தவரான முதல் ஆழ்வார் மூவரும் வெண்பாவிலேயே பாடியுள்ளனர்.

சங்கமருவிய காலத்தில் காப்பியம் என்னும் புதிய வகை இலக்கியம் எழுந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை கொங்குவேளிர்மாக்கதை ஆய மூன்று பெருங் காவியங்கள் அக்காலத்தில் எழுந்தன. ஆனால் இம்மூன்றும் ஆசிரியப் பாவால் ஆயவை.

## 1. பதினெண் கீழ்க் கணக்கு

இது பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற தொகை நூல் அன்று. ஒவ்வொன்றும் தனித்தனி நூலாக ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்றது. ஆனால் பேராசிரியர், மயிலை நாதர் முதலியோர் பதினெண் கீழ்க்கணக்கைத் தொகை நூலாகவே கருதிக் கையாண்டனர். பழம் பாடல் ஒன்று இப்பதினெட்டு நூல்களையும் தொகுத்துக் கூறுகிறது.

'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இந்நிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு' என்னும் பாட்டின்படி

இப்பதினெட்டு நூல்களும் கீழ்க்கணக்கு என்னும் பிரிவைச் சார்ந்தனவாகும். கீழ்க்கணக்கு என்பதற்கு குறைந்த அடிகளால் ஆய பாட்டுக்களை கொண்ட நூல் என்பது பொருளாகும், திருக்குறள் குறள் வெண்பாவாலும் முது மொழிக் காஞ்சி நீங்கலான பிற நூல்கள் வெண்பாவாலும் இயற்றப் பெற்றுள்ளன. ஆதலால் கீழ்க்கணக்கு என்பது அடி அளவை வரையறையாகக் கொண்ட பிரிவாகவே அமை கிறது.

இவற்றுள் அறநூல்கள் பதினொன்று. புறம் பற்றிய நூல் ஒன்று. அகப் பொருள் நூல்கள் ஆறு. நூற் புலவருள் பலர் சமணர். சைவரும் வைணவரும் கூட நூற்புலவராயுள்ளனர். இவற்றுள் சில நூல்கள் வச்சிர நந்தி என்ற சமண முனிவர்

கி. பி. 470 ஆம் ஆண்டில் நிறுவிய திராவிட சங்கத்தில் அரங் கேற்றப் பெற்றன என்பர்.

## அறநூல்கள்

**(i) திருக்குறள் :** இதன் ஆசிரியர் திருவள்ளுவர் ஆவர். இவரது பிறப்பு, வளர்ப்பு, தொழில், மனைவி, இல்வாழ்க்கை பற்றிக் கூறப்படும் கதைகள் தக்க சான்றுகள் உடையவை அல்ல. சோதிடம் கணித்தலைத் தொழிலாகக் கொண்ட வள்ளுவக்குடியில் பிறந்த மாமேதை ஆவர். தமிழனின் இயல் பான வாழ்வே இவர் வாழ்வாயும் இருந்திருக்க வேண்டும். இயற்கையறிவும் நூலறிவும் இணையப் பெற்ற பெருஞ் சிந்தனையாளர். தமிழ்ப் பண்பு வழி நின்றே சமணத்தையும் ஆய்ந்து கண்ட பேரறிஞர். உலகப் பேரறிஞருள் ஒருவராய் வைத்து எண்ணத்தக்க பெருமகன்.

இந்நூல் பதினெண் கீழ்க் கணக்கில் 'முப்பால்' எனப் படுகிறது. 1330 குறள் வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் பெரும் பிரிவுகளை உடையது. குறித்த ஒரு பொருளைப் பத்துப் பாக்கள் கொண்ட அதிகாரமாகப் பாடியிருத்தல் இதில் காணப்படும் வரையறையாகும்.

அறத்துப்பால் 38 அதிகாரங்களைக் கொண்டது. பாயிர மான முதல் நான்கு அதிகாரங்களில் முறையே கடவுள் வாழ்த்தும் மழைச்சிறப்பும் நீத்தார் பெருமையும் அறன் வலியுறுத்தலும் பாடப் பெற்றுள்ளன. இல்லற இயலில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை, மக்கட்பேறு, விருந்து முதலிய இல்லற நலங்களும் இல்வாழ்வார்க்கு இருக்க வேண்டிய அன்பு முதலான பண்புகளும், அவர்கள் போக்க வேண்டிய பொறாமை முதலிய புல்லிய பண்புகளும் பாடப் பெற்றிருக்கின்றன. துறவறவியலில் துறவிகள் பேணத்தகும் அருள், தவம், வாய்மை. துறவு, முதலியவைகளும் நிலையா மையும் மெய்யுணர்வும் விளக்கப்பட்டுள்ளன.

பொருட்பால் 70 அதிகாரங்களைக் கொண்ட விரிவான பகுதியாகும். அரசியலில் மன்னன் பெற வேண்டிய கல்வி

கேள்வி அறிவும், அவன் மேற்கொள்ள வேண்டிய அரசியல் நெறிகளும் ஆட்சி முறைகளும் மன்னன் பண்பும் செயல் திறனும் எல்லாம் தெளிவாகக் கூறப்படுகின்றன. அமைச்சியல், அரசியல் நடத்துதற்குரிய ஆறு அங்கங்களுள் முதன்மையான அமைச்சின் தன்மையை விரியக் கூறுகிறது. இதில் அமைச்சன் குணம், கூர் அறிவு, தூது இலக்கணம் செயல் திறன் முதலியவை விளக்கப்படுகின்றன. மற்ற அங்கங்களான நாடு, அரண், பொருள், படை, நட்பு பற்றியும் கூறப்பட்டுள்ளன. அரசியலின் ஆக்க நெறிகளும் ஆழிவு நெறிகளும் நன்கு வலுயுறுத்தப் பட்டுள்ளன.

காமத்துப் பாலின் 25 அதிகாரங்களில் தமிழ் அகப்பொருளின் நலத்தையும் அழகையும் சுவையையும் திரட்டி வகுத்துத் தந்திருக்கிருர். முதற் பொருளோ, கருப்பொருளோ இன்றி ஐந்திணே உரிப்பொருளான காதல் ஒழுக்கத்தைச் சுவை நலங் கனியப் பாடியுள்ளார்.

திருக்குறள் தோன்றிய காலத்தை வரையறுத்தல் எளிதன்று. ஆயினும் இது சிலப்பதிகாரத்திற்கு முற்பட்டது. ஏனெனில் திருக்குறளேச் சிலப்பதிகாரம் எடுத்தாண்டுள்ளது. மதுவும் புலாலும் சங்க காலத்தில் விலக்கப்படவில்லே. ஆனல் திருக்குறள் அவற்றைக் கடிந்து ஒதுக்குகிறது. மற்றும் கருத்து முதிர்ச்சிகளே ஆராயுங்கால் இது சங்க கால முடிவில் தோன்றியது என்றே கொள்ள வேண்டும்.

திருக்குறள் தமிழ் அறநூல்; தமிழர் வாழ்க்கை நூல். ஆனல் இது வெறும் அற வாய்ப்பாடு அன்று; சுவை பொருந்திய இலக்கியமாகும். வள்ளுவரின் நெஞ்சச் சாயலேயும் உணர்ச்சியையும் பாடல்தோறும் பார்க்கலாம். வாய்பாடு போல் கூற வேண்டிய இடத்தில் கூடச் சுவையேற்றியிருக்கிருர். தெளிவும் ஆழமும் நுட்பமும் திட்பமும் வரையறையும் உடையனவாய்ச் செப்பலோசை ஒழுகும் பாக்கள் எல்லாம் உயிர்ப் பாடல்களாய் உள்ளன.

சங்க கால இலக்கிய மரபே திருக்குறளில் கையாளப் பெற்றுள்ளது. தமிழ் வாழ்க்கையின் பெருமை மாய்ந்தொழியாது நிலே நிறுத்த வேண்டிப் பாடப்பெற்ற நூல்

இது. உலகெலாம் புகழத் தக்க தமிழ் அறம், பொருள், இன்பமே திருக்குறளாம் பெட்டகத்தில் தொகுத்து வைக்கப்பெற்றுள்ளன.

திருக்குறளை வழி நூல் என்பது அறிவிலிகள் கூற்றாகும். குலத்துக்கொரு நீதி கூறும் மனு அறம் வெறுஞ் சடங்குகளை விரித்துரைக்க, திருக்குறள் குலவேறுபாட்டைக் கடிந்து தூய்மனத்தை அறத்தின் நிலைக்களனாய்க் கொண்டு பாடியிருக்கிறது. கௌடல்யரின் அர்த்த சாத்திரம் 'இறக்கும் நிலையில் இருப்பவர் இழிந்தன செய்தேனும் உய்யலாம்' என்று கூற, வள்ளுவம் 'பெற்ற தாய் பசியால் துடித்துச் சாகக் கண்டாலும் பழிச் செயல் புரியாதே' என்று வினைத் தூய்மை பாடுகிறது. வாத்சாயனரின் காம சூத்திரம் வெறும் உடல் இன்பத்தை விதந்தோத, குறள் அன்பின் வழிப்பட்ட இன்பத்தைக் கூறுகிறது. ஆதலால் திறக்குறள், வடநூல் மரபொடு மாறுபட்டு, முற்றிலும் தூய தமிழறத்தையே பாடியிருக்கிறது.

தமிழ்ப் புலவர் எல்லோருமே திருக்குறளைத் தலைமேற்கொண்டு பாராட்டியுள்ளனர். திருக்குறளுக்கு அண்மையவையான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் திருக்குறளை எடுத்தாண்டிருக்கின்றன. திருத்தக்க தேவர், கம்பர் போன்ற பெருங்கவிஞர்கள் குறட்கருத்துக்களைக் கையாண்டிருக்கின்றனர். சைவ, வைணவச் சான்றோர் குறளைப் போற்றியிருக்கின்றனர். தமிழ் வரலாற்றில் திருக்குறள் தனிப் பேரற நூல் என்பது வாதமின்றி ஒப்பியதாகும். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' என்னும் பாரதி வாக்குப்படி, உலக வரலாற்றிலும் திருக்குறள் உயர் பேரற நூலாகும் நாள் நெருங்கி வருகிறது.

பாரதி வாக்குப் பலித்து வருகிறது. திருக்குறளை வீரமாமுனிவர் இலத்தினில் மொழி பெயர்த்தார். ஜி. யு. போப் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்துள்ளார். கிரால் என்பவர் செருமானிய மொழியிலும் ஏரியல் போன்றோர் பிரெஞ்சு மொழியிலும் பெயர்த்துள்ளனர். இந்திய மொழி

களிலும் அயல் நாட்டு மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது.

திருக்குறளுக்குப் பழைய உரையாசிரியர் பத்துப் பேர் உரை எழுதியுள்ளனர். பரிமேலழகர், மணக்குடவர், காளிங்கர், பரிப் பெருமாள் பரிதியார் ஆகியோர் உரைகளே கிடைத்துள்ளன. தமிழில் எந்த நூலுக்கும் இத்தனை பேர் உரை எழுதியதில்லை. தமிழர் வாழ்க்கைக்கு அற நூலாக விளங்கும் திருக்குறள் உலகோர்க்குப் பொது அறநூலாய் அமையும் பெருமை உடையது.

**(ii) நாலடியார் :** நாலடி வெண்பாக்கள் நானூறு அடங்கிய அற நூலாகும். சமணப் புலவர் பலர் பாடிய பாக்களிலிருந்து தேர்ந்தெடுத்த நானூறு பாடல்களைக் கொண்ட திரட்டு இது. இந்நூல் பற்றிக் கதையொன்று வழங்குகிறது. பாண்டிய நாட்டில் பஞ்சம் ஏற்படவே, பாண்டியன் ஆதரவில் இருந்த எண்ணாயிரம் சமணப் புலவரும் ஒவ்வொரு பாடலை எழுதி வைத்து விட்டுச் சொல்லாமல் செல்ல, மன்னன் சினங்கொண்டு பாடல்களையெல்லாம் வையை யாற்றில் எறிய, வெள்ளத்தில் எதிரேறிய நானூறு பாடல்களே நாலடியாராகத் தொகுக்கப் பெற்றன என்பர்.

பதுமனார் இந்நூலைத் தொகுத்து உரை இயற்றினார் என்பர். ஆனால் அவ்வுரை கிடைத்திலது. தொகுப்பாசிரியர், திருக்குறள் போலவே, இதற்கும் பத்துப் பாக்கள் உடைய அதிகாரங்களும் அறம், பொருள், காமம் என்ற முப்பாலும் வலிந்து வகுத்துள்ளார். அதிகாரத்திற்குப் பொருந்தாத பாக்கள் சில உண்டு. ஒரு பாடற் கருத்து மற்றொரு பாடலிலும் வந்துள்ளது.

நாலடியார் திருக்குறளுக்கு அடுத்தபடி சிறந்த அற நூலாதலின் 'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி; பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்' என்னும் கூற்றுக்கள் தோன்றின. பரிமேலழகர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர் இதன் பாடல்களை மேற்கோள்களாகக் காட்டியிருக்கின்றனர். இந்நூற்புலவர் தம் உள்ளத்து உணர்ச்சியில் தோய்ந்த கருத்துக்களைச் சொல்லருமையும் பொருள்

நலமும் பொருந்தப் பாடியிருப்பதால் பாடல்களெல்லாம் சுவை மிகுந்தனவாய் உள்ளன.

இதன் அறத்துப் பாலில் தமிழ் மரபு தழுவாத கருத்துக் களும் உண்டு. இல்லற மேம்பாடும் பெண்ணின் பெருமை யும் திருக்குறளில் காணப்படும் வகையில் காட்டப்பட வில்லை. பெண்ணினம் இகழ்ந்துரைக்கவும் படுகிறது. துறவின் சிறப்பு வலியுறுத்தப்படுகிறது. சமணத்துறவே காட்டப்படுகிறது. வாழ்க்கைமீது வெறுப்பூட்டும் வகை யில் வரை கடந்த அளவில் நிலையாமை கூறப்படுகிறது. பொருட்பாலில் கல்வி, அறிவு, நட்பு முதலியன பற்றிய அருங்கருத்துக்களை நெஞ்சத்தில் நிற்கும் வண்ணம் உவமை முதலான சுவைநலம் பெருகப் பாடியிருக்கின்றனர். காமத்துப்பாலில் உள்ள பாடல்கள் பொருட் சிறப்பை முறையாக உணர்த்துவனவாக இல்லை. இன்பச்சுவை பற்றிய சில பாடல்கள் எனப்படுவதன்றிக் காதல் வாழ்க்கை யைக் காட்டுவனவாக இல்லை. இந்நூலில் உள்ள அறம், பொருள், இன்பம் பற்றிய பாடல்களால் வாழ்க்கை முழுவ தையும் அறியமுடியாது. திருக்குறள்போல் முழு வாழ்க்கைக் குரிய அற நூலாக அமையாமல் சிற்சில அறங்களைச் சுவை யுறப் பாடிச் செல்கிறது.

நாலடியாரில் வரும் உவமைகள் சுவைப் புதுமை உடையன. பேதையர்க்கு எரியும் அடுப்பின்மேல் உலைநீரில் விளையாடும் ஆமையைக் கூறுகிறார். ‘கொலைஞர் உலை யேற்றித் தீமடுப்ப ஆமை, நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே’ என்பதில் புதுமை நயம் உள்ளது. குடும்பக் குறை முடித்து அறம் செய்வோம் என்பவர் கடலில் அலையோசை அடங்கியபின் குளிப்பேன் என்பவருக்கு ஒப்பு என்கிறார். சில பாடல்களில் கதைகள் பொருள் அழகு தோன்றப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பேச்சற்ற சாகு நிலைக்கு வந்த கருமி கைச்சைகையால், தன் கட்டிப் பொன்னை வேண்ட, மனைவி அறியாதவள்போல் ‘விளாம்பழமா வேண் டும்; புளிக்குமே, இப்போது உண்ணக் கூடாதே’ என்ற கதை கருமித்தனத்தின் பேதைமையைத் தெளிவாக்கும். செல்

வத்தோடு இருக்கும்போது, இருவரும் செங்குன்றினின்று வீழ்ந்திறப்போம் என்று நடித்த காதலி வறிய நிலையில், வாதம் வந்துவிட்டதே; மலையுச்சி ஏற முடியாதே, என்ற கதை சுவையுடையது. இரண்டு இடங்களில் பெருமுத்தரை யரின் பெருமை பேசப்படுகிறது. செப்பலோசை நயமும் சொல்லழகும் கருத்துக் கவர்ச்சியும் உடையனவாய்ப் பயில் வார்க்கு நாலடியார் இன்சுவையளிக்கிறது.

**(iii) நான்மணிக்கடிகை :** இந்நூல் திருமால் வாழ்த் தோடு 101 பாடல்களை உடையது. கடிகை என்பது 'தோள் வளை' என்ற அணியாகும். நான்கு மணிகளைக் கொண்டி லங்கும் அவ் அணிபோல் பாடல்தோறும் நான்கு மணியான உண்மைகள் உள்ளமையால் நான்மணிக்கடிகை எனப் பெயர் சூட்டப்பட்டது.

இதன் ஆசிரியரான நாகனார் விளம்பி என்ற ஊரினர்; வைணவசமயத்தவர்; அந்தணகுலத்தவர்; உயிர்க்கொலையைக் கடிந்துள்ளார். புலால் உணவின்மீது வெறுப்புக் கொண்ட வர். உலகறிந்த உண்மைகளை எளிய நடையில் கூறியுள்ளார். மூன்று உண்மைகளைக் கூறிச் சென்று முடிவில் நான்காவது சிறப்பு உண்மையைக் கூறுவதைப் பாடல்தோறும் காணலாம்.

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணம் தனக்கணியாம்
தான் செல் உலகத் தறம் 12

**(iv) இன்னாநாற்பது :** இது கடவுள் வாழ்த்து உட்பட 41 வெண்பாக்களை உடையது. பாடல் தோறும் துன்பம் பயப்பனவாக நான்கு செய்திகள் கூறப்படுகின்றன: வாழ்வியலில் துன்பங்களுக்குரிய காரணங்களைத் தொகுத்துக் கூறாமல் தம் மனத்தில் பதிந்த சிற்சில துன்ப மூலங்களைக் கூறிச் செல்கிறார். 'இன்னா' என்பது துன்பத்தை மட்டும் குறிக்காமல் 'இனிமையன்று; தகுதியன்று' என்று பொருள்பட்டும் நிற்கிறது. இதில் கள் பருகுதல். ஊன் உண்ணல் கடியப்பட்டுள்ளன.

இதனைப் பாடிய கபிலர் சங்க காலக் கபிலரினின்று வேறானவர். ஆழ்ந்த புலமை வாய்ந்த அக்கபிலருக்கு இக் கபிலர் எவ்வகையிலும் ஒப்பாகார். கடவுள் வாழ்த்தில் சிவன், திருமால், பலராமன், முருகன் நால்வரும் சேர வாழ்த்தப்படுகின்றனர். ஆதலால் இப்புலவர் சமயப் பொது நோக்கு உடையவராதல் வேண்டும். பொது உண்மைகளை எளிய நடையில் கூறியிருக்கிறார்.

ஆற்ற லில்லாதான் பிடித்தபடை இன்னா
நாற்ற மிலாத மலரி னழகின்னா
தேற்ற மிலாதான் துணிவின்னா வாங்கின்னா
மாற்ற மறியான் உரை. 7,

**(v) இனியவை நாற்பது :** இது நாற்பது வெண்பாக்களை உடையது. பாடல்தோறும் இனிமை பயக்கும் செய்திகள் நான்கு கூறப்படுகின்றன. கடவுள் வாழ்த்தில் சிவன், திருமால், பிரம்மா ஆகிய மும்மூர்த்திகள் வழுத்தப் பெறுகின்றனர். பூதஞ்சேந்தனார் இதன் ஆசிரியர் ஆவர்.

இன்னா நாற்பதுக்கும் இனியவை நாற்பதுக்கும் சில ஒப்புமைப் பகுதிகள் உள்ளன. ''ஊனைத் தின்றானைப் பெருக்குதல் முன்னின்னா;'' ஊனைத்தின்றானைப் பெருக்காமை முன்னினிதே!'' ''ஓத்தில்லாப் பார்ப்பானுரை இன்னா;'' ''அந்தணர் ஓத்துடைமை ஆற்ற மிக இனிதே'' ''குழவிக ளுற்ற பிணி இன்னா; குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே''. இவற்றுள் ஒன்று மற்றொன்றைப் பார்த்துப் பாடியது போல் உள்ளது.

'இனியவை நாற்பது' என்பதில் தேர்ந்து தெளிந்த கருத்துக்களே இடம் பெற்றுள்ளன. அவற்றுள் பல அன்றாட வாழ்க்கைச் செய்திகளாகும்.

குழவி தளர்நடை காண்டல் இனிதே
அவர்மழலை கேட்டல் அமிழ்தத்தின் இனிதே
மன்றின் முதுமக்கள் வாழும்பதி இனிதே
ஊர்முனியா செய்தொழுகும் ஊக்கம் மிக இனிதே

இக்கருத்துக்கள் வாழ்க்கைக்கு மிகுதியாகப் பயன்படுவனவாகும். வாழ்க்கை பற்றிய கருத்துக்கள் நெஞ்சத்தில்

தோய்ந்தெழுந்தனவாய் அமைந்து சொல்லருமையும் ஓசை யினிமையும் பழந்தமிழ்ப் புலமையும் இலங்குவதை நோக்கின் இந்நூலைப் பார்த்தே 'இன்னா நாற்பது' பாடப் பெற்றிருத் தல் வேண்டும் என்று தெரிகிறது.

**(vi) திரிகடுகம்:** திருமால் பற்றிய கடவுள் வாழ்த் தொடு 101 பாடல்களை உடையது. இதனைப் பாடிய நல்லாதனார் வைணவராவர். ஆசிரியரே தம் முதற் பாடலில் 'இம்மூன்றும் திரிகடுகம் போலும் மருந்து' என் றுரைத்துத் தம் நூலுக்குப் பெயர்க்காரணம் கூறியுள்ளார். திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றின் கூட்டு மருந்து. இம்மருந்து உடல் நோய் நீக்கி நலம் பயப்பது போல் பாடலின் மூன்று கருத்துக்கள் மன நோயான அறியாமை போக்கி மனநலம் பயக்கும் என்பது தலைப்பின் உட் பொருளாகும். மருந்து மூன்றினையும் இடித்துத் தூளாக்கி ஒரு மருந்தாய்க் கூட்டுவதுபோல் ஒவ்வொரு பாடலிலும் மூன்று கருத்துக்களை ஒரு முடிபினுக்குள் அமைத் திருக்கும் முறை பாராட்டுக்குரியது.

> வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
> சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
> கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
> மெய்ப்பொருள் கண்டு வாழ்வார்.

புலவர் அறங்கூறுவார்க்கு உரிய உறுதியோடு வீறு தோன்ற உண்மைகளைக் கூறியுள்ளார். வெண்பாக்கள் செப்பலோசை யோடு செப்பமும் வாய்ந்து இன்பம் பயக்கின்றன.

**(vii) சிறு பஞ்ச மூலம்:** இது நூறு வெண்பாக்களை உடையது. ஆசிரியர் காரியாசான் ஆவர். இவர் வள்ளல் எனவும் 'மாக்காயன்' என்பவர் மாணவர் எனவும் பாயிரப் பாட்டில் குறிக்கப் பெற்றுள்ளார்.

நூலின் முதற்பாவில் 'சிறு பஞ்ச மூலம் சிறந்து' என்று ஆசிரியரே நூலின் பெயரைக் கூறியுள்ளார். கண்டங் கத்தரி, சிறு வழுதுணை, சிறுமல்லி, நெருஞ்சி, பெருமல்லி ஐந்தும் நோய் நீக்கும் பஞ்சமூலங்கள் ஆகும். உடல் நோய் நீக்கி நலம் பயக்கும் இப்பஞ்ச மூலங்கள் போல் நெஞ்சத்து

நோய் நீக்கி நலம் பயக்கும் ஐந்து கருத்துக்களைப் பாடல் தோறும் கூறிச் சிறு பஞ்ச மூலம் எனப் பெயரும் சூட்டி யுள்ளார். ஐந்து உண்மைகளுக்கும் ஒருமைப்பாடு கண்டு அவற்றை அம்முடிபிற்கோக்கும் திறன் அழகுடன் விளங்கு கிறது. தூக்கணங்குருவியின் கூடு, பேரெறும்பின் செம் மெழுகு, உலண்டுப் புழுவின் நூல், கோற் புழுவின் கோற் கூடு, தேனின் கூடு ஆய ஐந்தின் செயலருமை கூறிக் கருத் தைக் கூறுகிறார்.

> வான்குருவிக் கூடரக்கு வாலுலண்டு கோல்தருதல்
> தேன்புரிந் தியார்க்கும் செயலாகா—தாம்புரீஇ
> வல்லவர் வாய்ப்பன வென்றூர் ஒரோவொருவர்க்கு
> ஒல்காதோ ரொன்று படும்.

வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கிப் புலவர் அரிய உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். தலைவனை மயக்குதற்கு மருந்தாக தலைவியிடம் இருக்கத்தகும் தன்மைகளை உலகியல் படக் கூறுகிறார். இவர் ஆழ்ந்த சிந்தனையாளர். இவரது புரட்சி மனப்பான்மை பாடல்களில் ஆங்காங்கே வெளிப்படுகிறது. பிறர் சொல் பொறுக்காத துறவு பொய் வேடமே என்று கடிகின்றார். கருவுற்ற நிலையில் தாயின் துயரத்தை எண் ணிப் பார்ப்போர் பிற உயிரைக் கொல்லார் என்கிறார். எதனையும் புதுமையுறக் கூறுவதில் திறன் வாய்ந்து விளங்கு கிறார். பாடல்கள் இன்னோசை உடையனவாக, கருத்துக்கள் உள்ளத்தைக் கவரும் வகையில் கூறப்பட்டுள்ளன.

(viii) ஏலாதி: இது எண்பது வெண்பாக்களை உடையது. ஏலம் முதலாக இலவங்கம், சிறு நாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்த ஆறினையும் இடித்துக் கூட்டிய மருந்து போல் ஆறு அரிய உண்மைகள் பாடல் தோறும் கூறப்படுவ தால் இந்நூல் ஏலாதி என்று பெயர் சூட்டப் பெற்றது.

இதன் ஆசிரியர் கணி மேதாவியர் ஆவர். இவர் கணி மேதை என்றும் அழைக்கப்பட்டார். இவர் பாடிய மற் றொரு நூல் திணைமாலையாகும். இவரும் சிறு பஞ்சமூல ஆசி ரியரான காரியாசானும் மாக்காயனாரிடம் பயின்ற ஒரு சாலை மாணவர்.

'கணிமேதை' என்பது இவருக்குக் காரணப் பெயராதல் கூடும். கல்வியாராய்ச்சியைப் பாராட்டுகிறார். 'எண்ணோடு எழுத்தின் வனப்பே வனப்பு' என்கிறார். ஊக்கமுடன் கற்கும் மாணவர்க்கு உணவு, உடை, எழுத்தாணி, ஏடு முதலியன உதவுதல் அறம் என்கிறார். அறுவகைச் சமய நூல்களை உணர்ந்து மாற்றார் கூறும் மறுப்புரைகளை மாற்றி நிறுவ வல்லவனே நல்லாசிரியன் என்பது இவர் கொள்கை. மனை வாழ்க்கை தவ வாழ்க்கை இரண்டுமே மாண்புடையன என்பது இவர் கருத்து. கூத்து, நாடகம், இசை முதலான கலை நிகழ்ச்சி நிகழும் இடத்திற்குச் சென்றால் ஒழுக்கம் சிதையும் என்கிறார். ஆடல் பாடல் கலைகளின் மேலுள்ள ஆர்வம் பொது மகளிர் உறவுக் குள்ளாக்கும் என்று எச்சரிக்கிறார். அக்காலத்துக் கருத்தையெல்லாம் அச்சமின்றிக் கூறி யுள்ளார்.

**(ix) ஆசாரக்கோவை:** மூன்றடிச் சிந்தியல் வெண்பாக் களும் நான்கடி வெண்பாக்களுமாக **நூறு** வெண்பாக்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் ஆவர்.

'ஆரிடம்' என்னும் வட நூல் இதற்கு மூலம் என்று தற் சிறப்புப்பாயிரம் கூறுகிறது. இதில் கூறப்படும் ஆசாரங்கள் சுக்ரஸ்மிருதியில் உள்ளவை என்றும் கூறுவர். நன்றியறிதல், பொறையுடைமை முதலிய எட்டுக் குணங்கள் ஆசாரங் களுக்கு வித்தாகும் என்று முதற்பாடல் கூறுகிறது. ஆசாரங் களில் தவறாதவர் நற்குடிப்பிறப்பு, நீண்ட குடி வாழ்க்கை, செல்வம், வனப்பு முதலிய எட்டு வகை நன்மைகளைப் பெற லாம் என்கிறார். இவற்றில் கூறப்படுவன பெரும்பாலும் புற ஒழுக்கங்களேயாகும். இவற்றுள் சில சுத்தம் பேணுதல், பெரியோர்க்கு மதிப்பளித்தல், உயர்ந்தோர் முன் ஒழுகுதல் என்னும் வகையில் எல்லோரும் கடைப்பிடிக்கத் தக்கவை. ஆனால் 'தாழ்ந்தோரைத் தொடவும் நோக்கவும் கூடாது; பசுவுக்குக் கொடுத்து உண்ண வேண்டும். பார்ப்பார் இரு வருடே செல்லக் கூடாது. தாழ்ந்தோரை முறை சொல்லக் கூடாது, தாழ்ந்தோரிடம் நல்ல நாள் கேட்டுச் செய்யக்

கூடாது,' என்பனவெல்லாம் தமிழர்க்குப் பொருந்தா ஆசாரங்களே ஆகும். முடி வெட்டிக் கொள்ளல், கணவன் மனைவி உறவுகள் பற்றிய சில ஆசாரங்களை அறிவியல் வழி நின்று கண்டு பயனுடையன என்று கொள்ளலாம். சிந்திக்கத் தக்கவையாவை, கேள்வியுடையார் யாவர் என்பவற்றில் உள்ள ஆசாரங்கள் பயனற்றவைகளாகத் தோன்றும். இந்நூலில் வெண்பாவின் வகையெல்லாம் வருகின்றன. கனிந்த சொற்களால் இனிய ஓசை உடையனவாய் உள்ளன. தற்சிறப்புப் பாயிரத்தால் இவர் வண்கயத்தூரைச் சார்ந்தவர் என்றும் சைவர் என்றும் அறிகிறோம். இந்நூல் எழுந்த காலத்தில் குலவேறுபாடுகள் நிலைபெற்று விட்டன என்பது தெளிவாகிறது.

(x) பழமொழி: கடவுள் வாழ்த்துடன் நானூறு வெண்பாக்களை உடையது. இதன் ஆசிரியர் முன்றுறையரையனார் ஆவர். தற்சிறப்புப்பாயிரத்தில் முன்றுறை மன்னன் எனப் படுகிறார். இவர் சமண சமயத்தவர் ஆவர்.

இந்நூலின் வெண்பா ஒவ்வொன்றும் ஒவ்வொரு பழமொழியை முடிபாகக் கொண்டு திகழ்கிறது. பழமொழியை விளக்குவதற்குரிய கருத்துக்களையோ செய்திகளையோ முன்னர்க் கூறி முடிவில் பழமொழியைக் கூறி முடிக்கிறார். பழமொழியையே உள்ளத்திற்கொண்டு பாடியிருப்பதால், பாடல்கள் பால், அதிகாரம் என்ற பிரிவுகளில் அடங்காமல் தனித்தனியே நின்று தனித் தனிக் கருத்தை உணர்த்துகின்றன.

உடைப் பெருஞ் செல்வத்து உயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்

புலவர் பழமொழிகளைச் செய்யுளுக்கிசையச் சிறிது உருவம் மாற்றியும் கூறுகிறார். பண்டைக் காலத்து வழங்கப் பெற்று இன்று வழக்கில் இல்லாத பல பழமொழிகள் உள்ளன. தற்காலத்தும் வழங்கப் பெறும் பழமொழிகளும் உள்ளன. 'இருதலைக் கொள்ளி எறும்பு; குன்றின் மேல்

இட்ட விளக்கு; தனி மரம் காடாதல் இல்; நிறை குடம் நீர் தளும்பல் இல் ; பாம்பறியும் பாம்பின் கால்' முதலியன சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

இந்நூலின் கருத்துக்கள் உலகியலை ஒட்டிச் செல்கின்றன. 'தூங்கெயில் தொலைத்த தொடித் தோட் செம்பியன்; குறை களையத் தன் கை குறைத்த பொற்கைப் பாண்டியன், முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் அளித்த வள் ளல்கள், நரை முடித்து முறை செய்த கரிகாலன்' முதலி யோர் பற்றிக் கூறப்பட்ட செய்திகளால் புலவரின் நாட்டுப் பற்று வெளிப்படுகிறது. இராமாயண, பாரதக் கதைக் குறிப்புக்களும் வருகின்றன. இப்பழமொழிகள் அரிய கருத் துக்களைத் தாங்கி நிற்பதோடு அக்காலத் தமிழ் மக்களின் இயல்பை அறிவதற்கும் துணை செய்கின்றன.

(xi) முதுமொழிக் காஞ்சி: இது மதுரைக் கூடலூர் கிழா ரால் பாடப் பெற்றது. இவர் சங்க காலப் புலவராகத் தோன்றவில்லை. முது மொழிக் காஞ்சி என்பது காஞ்சித் திணையின் உட்பிரிவான ஒரு துறை. அறிஞர், உலகியலைக் குற்றம் களைந்தாய்ந்து கண்டு முடிந்த பொருளாகிய அறம் பொருள் இன்பம் ஆகியவற்றைக் கூறுவதாகும்.

இது பத்து அதிகாரங்களை உடையது. ஒவ்வொரு அதி காரத்திலும் முதுமொழியைக் கொண்ட குறட்டாழிசைகள் பத்து உடையன.

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரிற் பிறந்தமை ஈரத்தின் அறிப
ஈர முடைமை ஈகையி னறிப
சோரா நன்னட்பு உதவியி னறிப
கற்ற துடைமை காட்சி னறிப
ஏற்ற முடைமை எதிர்கோளி னறிப
சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தி னறிப
சூத்திரஞ் செய்தலின் கள்வனுத லறிப
சொற்சோர் வுடைமையிற் பிறிது சோர்வுமறிப
சீருடை யாண்மை செய்கையி னறிப

## போர்ப்பொருள் நூல்

**களவழி நாற்பது:** இது போர்க்கள வருணனை பற்றிய நாற்பது வெண்பாக்களைக் கொண்டதாகும். சோழன் செங் கணான் சேரன் கணைக்கால் இரும்பொறையைக் கழுமலத்திற் பொருத போர் வருணனையாகப் பொய்கையாரால் பாடப் பெற்றதாகும். பாடல் தோறும் 'களம்' எனும் சொல் வருவதால் களவழி எனப்பட்டது போலும். இவர் முதலாழ் வருள் ஒருவரான பொய்கையார் அல்லர். பாடல்கள் சங்க காலப் பாடல்கள் போல் செறிவும் உவமையும் சுவையும் பெற்றுள்ளனவேனும் சங்ககாலப் பொய்கையார் என்று துணிந்து கூறுவதற்குச் சான்றுகள் இல்லை.

சோழன் தோற்ற சேரனைச் சிறை வைத்தபோது பொய் கையார் 'களவழி' என்ற நூல் பாடி விடுவித்தார் என்பதற்குக் 'களவழிக் கவிதை பொய்கையுரை செய்ய வுதியன் கால்வழித்தளையை வெட்டியரசிட்டவனும்' என்னும் கலிங்கத்துப்பரணியடி சான்றாக நிற்கிறது. சிறைப்பட்ட இரும்பொறை தக்க மரியாதையுடன் தண்ணீர் தரப் பெறா மையின் உயிர் நீத்தான் என்று புறநானூறு கூறுகிறது. கள வழியால் கழுமலப்போரில் வென்றவன் செங்கண்மால் என் றும் வஞ்சிக்கோ கொல்லப்பட்டான் என்றும் அறிகிறோம்.

இதில் யானைப் போர் அழகுற வருணிக்கப்பட்டுள்ளது. பாடல்கள் சொற் செறிவும் பொருள் அழகும், வாய்ந்தவை. உவமைகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. இதில் உள்ள சில உவமைகள் சீவக சிந்தாமணியில் எடுத்தாளப் பெற்றுள்ளன. கலிங்கத்துப் பரணியின் கற்பனைக்கும் வரு ணனைக்கும் வழி காட்டியாகச் சில பாடல்கள் உள்ளன.

'அஞ்சனக் குன்றேய்க்கு யானை அமருளக்கி
இங்குலிகக் குன்றேபோல் தோன்றும்'
'கண்ணோர் கடுங்கணை மொய்ப்ப எம்மருங்கும்
எண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றவே'

என்பன போன்ற உவமைகள் இன்பம் பயப்பன.

## அகப் பொருள் நூல்கள்

**(i) கார் நாற்பது:** இது அகப்பொருளான முல்லைத்திணை பற்றிய நாற்பது வெண்பாக்களைக் கொண்டது. இதனைப் பாடியவர் மதுரைக் கண்ணங் கூத்தனார் என்பவர் ஆவர்.

கார் காலத்தில் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் வரச் சிறிது தாமதமாகிறது. கார்ப்பருவங்கண்ட தலைவி ஆற்றுமை கொள்ள, தோழி ஆற்ற முயல்கிருள். இதனை மையமாகக் கொண்டு அன்பின் பெருமையும் கற்பின் அருமையும் விளங்க இந்நூல் அமைந்துள்ளது. செய்யுட்கள் தலைவி, தோழி, தலைவன் கூற்றுக்களாக உள்ளன. பாடல் தோறும் 'கார்' என்னும் சொல் வந்துள்ளமையால் கார் நாற்பது எனப் பெற்றது.

இதில் உள்ள கார்கால இயற்கை வருணனைகள் இன்பந் தருவனவாகும். 'ஆடு மகளிரின் மஞ்ஞை அணிகொளக், காடும் கடுக்கை கவின் பெறப் பூத்தன, பாடுவண்டூது பருவம்; கருங்குயில் கையற மாமயில் ஆலப், பெருங்கலி வானம் உரரும்; நல்லார் இளநலம் போல் கவினி, வளமுடை யார் ஆக்கம் போல் பூத்தன காடு' என்பன சில எடுத்துக் காட்டுகளாகும். எளிய இன்சொல்லும் செப்பலோசை இன்பமும் கொண்டு பொருட்சுவை நிரம்பிப் பாக்கள் சிறந்து விளங்குகின்றன.

**(ii) ஐந்திணை ஐம்பது:** இது மாறன் பொறையன் என்பவரால் பாடப்பெற்றது. திணைக்குப் பத்தாக அகத்திணை ஐந்திற்கும் ஐம்பது வெண்பாக்களை உடையது. முல்லைத் திணையில் கார் காலத் தோற்றமும் வனப்பான முல்லை நிலத்து மாலைக் கால வருணனையும் கூறப்படுகின்றன. குறிஞ்சித்திணையில் புலிக்குத் தப்பிய யானை அஞ்சிப் பின் வாங்கி ஓசைப் படாமல் மெல்ல நடக்கு வழியில் வரும் தலைவனுக்குத் தீங்கு நேருமே என்று தலைவி இரவெல்லாம் உறங்காள் என்பதொரு காட்சி. நாரை குத்துதலுக்கு அஞ்சி வாளை மீன் நீலோற்பல மலர்களுக்குள்ளே ஓடி ஒளியும் காட்சியுடையது மருதத்திணை. தலைவன் தேர் சென்ற வழியைக் கண்ணுரைக் கண்டு கொண்

ருக்க விரும்பும் தலைவி, அவ்வழிமேல்நடந்து தேர்த்தடத்தைச் சிதையாதிருக்கும்படி நண்டினை வேண்டும் காட்சியினை நெய்தல் திணை காட்டுகிறது.

தனிப் பாடல்கள் பாடிய சங்க காலம் போய், தனி நூல்கள் எழுந்த காலத்தோற்றத்தில் உள்ள நூல் இது. ஒருவரே அகத்திணை ஐந்தினையும் சேரக்காட்டும் அழகினை இதில்காண்கிறோம். இன்னோசை ஒழுகும் இனிமை கனிந்த வெண்பாவில் சங்க அகப் பொருட்சுவை குன்றாத வகையில் அகவாழ்வு முழுதும் காட்டும் சிறப்புடையது.

**(iii) ஐந்திணை எழுபது:** இது மூவாதியரால் பாடப் பெற்றது. திணைக்குப் பதினான்காக அகத்திணை ஐந்தினுக்கும் எழுபது வெண்பாக்களைக் கொண்டிருப்பதால் இப்பெயர் பெற்றது.

பழுத்தபலாவின் கனிந்த சுளைகளைத் தின்று வந்த மந்தி காட்டுப்பசுவின் மடுவினை வருட, அப்பசு கன்றிற்குச் சுரந்தாற்போல் விரும்பிப் பால் சுரக்கும் என்பது குறிஞ்சி நிலக் காட்சிகளில் ஒன்றாகும். மயில் ஆலி அகவிக் காடெல்லாம் பீலி பரப்பியாடச் சூலிபோல் விரிந்த மேகம் அதிர, முல்லை நிலத் தலைவிக்கு ஆவி உருகுவது போலுமாம். யானைமேல் பாய்ந்து குறி தவறிப் போகவே புலி பாழான ஊர் மன்றத்தில் நிற்கும் பாலை வழியாம். பிள்ளைகள்மேல் கவனத்தில் சிறுமீன்களைக் கொத்தும் நாரை, தன் கனவுக் காதலுக்குச் சான்று கூறுமோ என்று நலிகிறாள் நெய்தல் நிலத்தலைவி. சங்க காலத்தில் ஆசிரியப்பாவில் காட்டிய அகப்பொருள் அழகை அப்படியே இங்கு வெண்பாவில் காட்டியுள்ளார்.

**(iv) திணைமாலை நூற்றைம்பது:** இது கணிமேதாவியாரால் பாடப்பெற்றது. திணைக்கு முப்பதாக ஐந்திணைக்கு 150 வெண்பாக்களை உடையதாதலின் இப்பெயர் வழங்கப் பெற்றது. எட்டில் எப்படியோ மூன்று திணைகளில் ஒவ்வொன்றாக 3 பாடல்கள் அதிகமாக வந்துள்ளன.

இவர் ஏலாதி பாடிய கணி மேதாவியரே ஆவர். 'முனிந்தார் முனிவொழிய செய்யுட்கண் முத்துக்களீந்தார் களவியல் கொள்கை' என்பதை நோக்குங்கால் சமணப் புலவர்க்கு அன்

பின் ஐந்திணை அழகையும் மேம்பாட்டையும் காட்ட வேண்டிப் பாடிய நூலாதல் வேண்டும். இல்லறம் துறவறம் இரண்டும் இசைவுடைய வாழ்க்கை என ஏலாதியில் இவர் கூறியிருப்பதைக் கருதுங்கால், இவர் தமிழர் வாழ்க்கையைப் புதுப்பிக்க, சமணர்நடுவே, தனியொருவராக நின்று போராடினர் என்று கொள்ளலாம்.

சிறந்த அகப்பொருள் துறைகளைத் தேர்ந்து புதிய சிந்தனையும் கற்பனையும் இலங்க வீறு நடை வாய்ந்த வெண்பாக்களில் தந்துள்ளார். அகப்பொருளை வெறுத்த சமணரின் வெறுப்பை அகற்றவும் தமிழ் அகப்பொருளை மீண்டும் உரிமைப்பீடம் ஏற்றவும் சொல்லழகும் பொருள் நலமும் இலங்க முத்துக்கள் போன்ற வெண்பாக்களில் பாடினர் என்று பாயிரம் கூறுவது முற்றிலும் உண்மையென்றே கொள்ள வேண்டும். கணிமேதாவியார்கோத்த இத்திணைமாலைதமிழ்த் தாய்க்கு உவகையளிக்கும் முத்துமாலையாகும். பின்னைய கோவை **நூ**ல்களுக்கு இது மூல நூல்போல் உள்ளது. ஐந்திணையழகையெல்லாம் சிறக்கக் கோத்துக் காட்டிய முதற் புலவர் இவரே.

**(V) திணைமொழி ஐம்பது:** இது கண்ணன் சேந்தனர் இயற்றிய நூலாகும். திணைக்குப் பத்தாக ஐம்பது பாக்களை உடையது. எளிய சொல்லும் இனிய ஓசையும் தெளிந்த நடையும் பொருள் நயமும் பாடல்களுக்குச் சிறப்பூட்டுகின்றன.

> விரைகமழ் சாரல் விளைபுனங் காப்பார்
> வரையிடை வாரன்மின் ஐய—உரைகடியர்
> வில்லினர் வேலர் விரைந்துசெல் அம்பினர்
> கல்லிடை வாழ்ந ரெமர்.

தலைவியைக் காக்கும் உறவினரின் கடுஞ்சொல் அச்சுறுத்தும்: தோளில் தொங்கும் வில் நடுங்கச் செய்யும்; கைவேலோ ஓடச் செய்யும். விரைந்தோடினும் தொடரும் வல்லம்புதரும் அச்சம் அளவிடற்கரியது. காலில் விழுந்தாலும் இரங்கா மனத்தவர். கல்லிடை வாழ்வாரல்லரோ? மனமும்

கல்லாகத்தானே இருக்கும். இது தலைவனுக்கு விடும் அன்பு எச்சரிக்கை, குறிஞ்சி, மருதத்திணைப்பாடல்களில் ஆங்காங்கே இறைச்சிப் பொருள் ஏற்றமுறக் கையாளப்பட்டுள்ளது.

**(vi)** கைந்நிலை: இது புல்லங்காடனார் பாடிய நூலாகும். திணைக்குப் பன்னிரண்டாக ஐந்திணைக்கும் அறுபது பாடல் களைக் கொண்டது. 'கைந்நிலை' என்பது ஒழுக்கநிலை யென்னும் பொருள் தந்து ஐந்திணைக்குரிய அகவொழுக்கத்தை உணர்த்தி நூலுக்கு ஆகி வந்துள்ளது. இதில் சில செய்யுட்கள் சிதைந்துள்ளன. சில கிடைக்கவில்லை.

மற்றத் திணை நூல்களைப்போலவே, கைந்நிலையும் ஐந்திணைகளையும், சங்கத் தமிழ்மரபும் அழகும் சுவையும் குன்றாமல் இனிதாகப் பாடிச் செல்கிறது. சிறந்த இயற்கைக் காட்சிகள் இடையிடையே ஒளிர்கின்றன. காந்தள் பூத்த தோற்றத்தைப் புகையென்று அஞ்சிக் களிறு தன் இனக் கூட்டம் நோக்கி ஓடுகிறதாம்.

'காந்தள் அடும்புகை யென்று கதவேழம்
ஏந்தன் மருப்பிடைக் கைவைத் தினனேக்கி
பாய்ந்தெழுந் தோடும் பயமலை நன்னாடன்'

இறைச்சியும் உள்ளுறை உவமமும், சங்கச் சுவைத்திறன் போல் விளங்கக் கூறப்பட்டுள்ளன.

'கல்வரை யேறிக் கடுவன் கனிவாழை
எல்லுறு போழ்தி னினியபழங் கவுட்கொண்டு
ஒல்லென வோடு மலைநாடன்'

மலைமேல் ஏறிச் சென்று தினைப்புனத்தில் இருந்த தலைவியைச் சமயமறிந்து கண்டு களவிற் புணர்ந்து இன்பம் துய்த்து விரைவில் நீங்கினன் என்னும் உட்பொருளைப் பாடல் கொண்டுள்ளது. இத்தகைய புதைபொருட் பாடல்கள் வெண்பாவில் அமைந்து படிப்பார்க்கு மிக்க இன்பம் பயக்கும்.

## 2. முத்தொள்ளாயிரம்

சேர சோழ பாண்டியரான மூவேந்தரையும் புகழ்ந்து பாடிய 900 வெண்பாக்களை உடையதாதலின் இப்பெயர்

பெற்றது என்பர். வேந்தருக்குத் தொள்ளாயிரமாக மூவேந்தருக்கும் மூன்று தொள்ளாயிரம் பாடப் பெற்ற தால் முத்தொள்ளாயிரம் எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர். புறத்திரட்டினின்றும் பழைய உரைகளிலிருந்தும் 115 பாடல்கள் கண்டு பிடிக்கப்பட்டு வெளி வந்துள்ளன. இது தனியொருவர் பாடிய நூலா, பல புலவர்களின் பாக்களைக் கொண்ட தொகை நூலா என்பது விளங்க வில்லை.

கிடைத்துள்ள பாடல்களை ஆராயுங்கால் மூவேந்தருள் கோதை, கிள்ளி, மாறன் முதலியோர் பெயர்களே பல இடங்களில் வருகின்றன. மற்றும் சேரன் கடுங்கோன், சோழர்களான வளவன், செம்பியன், பாண்டியர்களான வழுதி, செழியர் முதலியோர் பெயர்களும் பாடல்களில் வந்துள்ளன. பாண்டியன் உத்திரட்டாதி நாளில் பிறந்த வன் என்பதும் சோழன் ரேவதி நாளில் பிறந்தவன் என்பதும் தெரிய வருகின்றன. பாண்டியனுக்குக் கொற் கையும் கூடலும் சோழனுக்கு உறந்தையும் சேரனுக்கு மாந்தையும் முசிறியும் மாநகரங்களாகக் கூறப்படுகின்றன. இளங்கோவைப் போல் இப்புலவர் பெருமானும் மூவேந்த ரையும் அவர்தம் நாடு, படை, வீரம், கொடை, புகழ், பெருமைகளையும் ஒத்த நோக்குடன் பாடியிருக்கிறார். மூவேந்தரின் தமிழகத்தைப் பொது நோக்குடன் பார்த்த காலம் ஒன்று இருந்தது என்று கருதலாம். அக்காலத்தில் தான் சிலப்பதிகாரமும் முத்தொள்ளாயிரம் போன்ற நூல் களும் எழுந்திருக்கக்கூடும். ஆதலால் இந்நூல் சிலப்பதி காரத்திற்குச் சிறிது முன்னாகவோ பின்னாகவோ தோன்றிய நூலாயிருத்தல் கூடும்.

இந்நூற் புலவர் பெருங்கவிஞர்; புதுமை கனிந்த கற்பனைகளை உணர்ச்சியும் சுவையும் மல்கக் கையாண்டுள் ளார். அகப்பொருளில் தலைவி, தலைவன் பெயர்களைச் சுட்டக்கூடாது என்பது தொல்காப்பிய விதி. அவ்விதி யினை மீறும் முயற்சியை நெடுநல்வாடையில் காண்கிறோம். இவரும் அவ்விதியைமீறிச் சேர சோழ பாண்டியர் பெயரைச்

சுட்டி அவர்கள்மீது கன்னியர் காதலுற்ற செய்திகளைப் பாடியுள்ளார். இது திருத்தக்க தேவரின் உள்ளங் கவர்ந்த நூல். இதில் உள்ள உலாச் செய்திகள் போன்றவை சீவக சிந்தாமணியில் எடுத்தாளப் பெற்றுள்ளன. பின்னைய உலா நூற்களுக்கு இது வித்திட்டது எனலாம்.

புலவர் உளவியல் நுட்பங்களை உணர்ந்து கலையழகும் புதிய கற்பனைகளும் விளங்கக் காதல் செய்திகளை உள்ளங் கவரும் வண்ணம் பாடியுள்ளார். நாடகப்பாங்குடன் அமைந்து ஓசையினிமை, பொருள் இன்பம் பொருந்தி வெண்பாக்கள் சிறந்து விளங்குவதைக் கருதுங்கால் 'வெண்பாவில் முத்தொள்ளாயிரம்' என்று கூறலாம்.

டி. கே. சி. அவர்கள் இப்பாடல்களின் சுவையில் ஆழ்ந்து, அனுபவித்து உரையெழுதி, இதன் பெருமையைப் பரவச் செய்தார். இந்நூல் முழுதும் கிடைக்காமல் போனது நமது தவக் குறை என்றே வருந்த வேண்டியுள்ளது.

## 3. பெருங்காப்பியத் தோற்றம்

தொல்காப்பியத்திற்கு முன்னர்த் தமிழில் பெரும் காப்பியம் இருந்ததில்லை. ஆதலால் பெருங் காப்பிய இலக்கணம் தோன்றவில்லை. ஆயினும் சங்க காலத்தில் பெருங்காப்பியம் படைக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது.

வடமொழித் தொடர்பால் தமிழ்ப்புலவர் இராமாயணம் பாரதம் ஆய பெருங் காப்பியங்களை அறிந்தனர்; வடமொழிப் பயிற்சியும் தமிழ்ப் புலமையும் வாய்ந்த சிலர் அவற்றைத் தமிழில் மொழி பெயர்க்க முயன்றனர். ஆயின் அகப் புறத்துறைகளே இலக்கணமாய்த் திகழ்ந்தமையால் அவ்விரு காப்பியக் கதைகளையும் தமிழ் உலகம் ஏற்கும்படி அமைப்பதில் இன்னல்கள் பல இருந்தன. இராமாயணத்தில் வரும் தாடகை, வாலி முதலியோர் போர்களைத் தமிழின் புறத்துறைக்கேற்ப மாற்றியமைத்தல் முடியாது. பாரதத்தில் ஐவர் ஒருத்தியை மணக்கும் அக வாழ்வை, தமிழ் அகப்பொருள் பயின்றோர் ஏற்கார்,

ஆயினும் அக்காப்பியக் கதைகள் தமிழகத்தில் பரப்பப் பட்டன. அவற்றின் சிற்சில நிகழ்ச்சிகள் மக்கள் நெஞ்சத்தையும் புலவர் உள்ளத்தையும் கவர்ந்தன. இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றபோது அவள் விட்டுச் சென்ற அணிகலன்களைக் கண்டெடுத்த குரங்குகள் அவற்றை அணியத் தெரியாமல் அலங்கோலமாய் அணிந்த செய்தி புறநானூற்றில் கூறப்படுகிறது. இராமன் இலங் கைக்கு ஏகு முன்னர் ஆலமரத்தடியில் அமர்ந்து ஆலோசனை செய்தபோது, ஒலித்து இடைஞ்சல் செய்த பறவைகளைக் கைகவித்து அடக்கினுன்என்பதும் புறப்பாடலில் வந்துள்ளது. அரக்கு மாளிகை எரித்தல் போன்ற பாரதக்கதை நிகழ்ச்சி கள் கலித்தொகையில் வந்துள்ளன. நளன் சரிதை போன்ற பாரதக் கிளைக் கதைகள் மக்களுக்குத் தெரிந்தவை யாயின. இராமன் தந்தை சொல் தவருமல் அரசு நீத்துக் கானகம் செல்ல அயோத்தி மக்கள் வருந்தியுருகியதை 'அருந்திறல் பிரிந்த அயோத்திபோல' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதனுல் சங்க கால இறுதியில் பெருங்காப்பியக் கதையார்வம் மிகுந்திருந்ததும் புலவர் பெருங் காப்பிய நாட்டம் கொண்டிருந்ததும் வெளிப்படுகின்றன.

அகம் அல்லது புறம் பற்றித் தனிப்பாடல் பாடியது போக நூறு பாடல்வரை தொகுப்பாகப் பாடத் தொடங்கினர். கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற் றுப்பத்து ஆகியவை குறிப்பிடத்தக்கன. பத்துப்பாட்டில் அரசனுடைய நாடு, நகர், மலை, ஆறு, கடல், குடிகள், பண்பு முதலியவைபற்றிப் பாடும் முயற்சி காணப்படுகிறது. இவையெல்லாம் பெருங் காப்பியத் தோற்றத்துக்குரிய அறி குறிகள் எனலாம்.

விரிவாகப் பாடவேண்டும் என்ற முயற்சி இரு கிளையாகப் பிரிந்தது. சங்கமருவிய காலத்தில் அறத்தைப்பற்றி 400பாடல் வரை பாடித் தனி நூலாக்கினர். திருக்குறள் 1330 பாக் களை உடையது. அகப்பொருளை விரிவாக 150 பாடல்வரை பாடித் தனி நூலாக்கினர். இவை தனி நூலேனும் தொடர்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டிருக்கவில்லை. மற்ருெரு கிளையான தொடர்கதை நூலும் இக்காலத்தேதான் தோன்

றியது. இத்தொடர்கதை நூலே பெருங் காப்பியமாகும். அக்காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம், மணிமேகலே, பெருங் கதை ஆய பெருங்காப்பியங்களுள், சிலப்பதிகாரமே முற் றிலும் தமிழ் மரபின் வழி அமைந்தது. மணிமேகலே சமயப் பெருங்காப்பியமாகத் தோன்றியது. பெருங் கதையோ மொழி பெயர்ப்புப் பெருங்காப்பியமாய் விளங்கியது.

## 4 இரட்டைக் காப்பியங்கள்

சிலப்பதிகாரமும் மணிமேகலேயும் இரட்டைக் காப்பி யங்கள் எனப்படும். சிலப்பதிகாரம் கண்ணகி கோவலன் கதையைக் கூறும் காப்பியம். மணிமேகலேயோ கோவல னுக்கு மாதவி வயிற்றில் பிறந்த மணிமேகலேயின் கதையைக் கூறுகிறது. இது சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாய்த் தொடங்கி வளர்ந்து முடிகிறது. மணிமேகலேயின் பிறப்பை யும் கோவலன் இறந்த நிலேயில் அவள் இளநங்கையாய்இருத் தலேயும் சிலப்பதிகாரம் சுட்டிச்செல்ல, அம்மணிமேகலேயாம் இளநங்கையைக் காப்பியத் தலேவியாகக் கொள்கிறது இத் தொடர் காப்பியம்.

சிலப்பதிகாரத்தின் இறுதியில் உள்ள நூற் கட்டுரை 'மணிமேகலேமேல் உரைப்பொருள் முற்றிச் சிலப்பதிகாரம் முற்றுதும்' என்று முடிப்பதைக் காணுங்கால் புலவர் இரு வரும் கலந்து திட்டமிட்டு இரட்டைக் காப்பியங்களாய்த் திகழும் வண்ணம் பாடினர் என்று கருத இடமுண்டு.

'இரட்டைக் காப்பியங்கள்' என்பதற்கு வேறு சில சான்றுகளும் துணே வருகின்றன. சிலப்பதிகாரப்பாயிரத்தின் படி இளங்கோவடிகட்குத் தண்டமிழ்ச்சாத்தன் கண்ணகி கதையினேக் கூறி 'முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரிய காவி யத்தை அடிகளே கூறுதல் வேண்டும்' என்று வேண்டினர். முப்பது காதைகள் கொண்ட சிலப்பதிகாரத்தை அடிகள் அருள, மதுரைக் கூலவாணிகன் சாத்தனர் கேட்டனர் என்றும் பாயிரம் கூறுகிறது. மணிமேகலேயின் பாயிரம் 'இளங்கோ வேந்தன் கேட்கக் கூலவாணிகன் சாத்தன் மணி மேகலேத் துறவினே முப்பது காதையில் அறிய வைத்தான்'

என்று கூறுகிறது. இதனால் இரு புலவர்கட்கிடையே உறவும் காப்பியத் தொடர்பும் இருந்தன என்பது உண்மையாகிறது.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்பதற்குக் கதை அமைப்பிலும் பல ஒப்புமைகள் காட்டுவர். இரண்டுமே ஆசிரியப்பாவால் அமைந்து முப்பது காதைகளைக் கொண்டுள்ளன. தமிழகத்தை நிகழ்களனாகக் கொண்டவை. இரண்டும் பெண்களையே காவியத் தலைவியராகக் கொண்டுள்ளன. மேலும் இரண்டிற்குமிடையே சொல், தொடர், இலக்கணம், திருக்குறள் மேற்கோள் உவமை, உருவக நடை முதலியவற்றிலும் ஒப்புமை காட்டுவர்.

இரட்டைக் காப்பியங்கள் என்பதற்கு மாறான கருத்தும் நிலவுகிறது. இரு புலவரும் வெவ்வேறு காலத்தவர் என்பர். வெவ்வேறு காலத்து எழுந்த இந்நூல்களிடையே கதைத் தொடர்பு இல்லை என்பர். இரட்டைக் காப்பியங்கள் என இவற்றை இணைத்துக் காண்பது பொருந்தாது என்றும் கூறுவர்.

**(i)** சிலப்பதிகாரம்: 'ஐம்பெருங் காப்பியம்' என்னும் பகுப்பினைக் கூறும் பழம்பாடல் சிலப்பதிகாரத்திற்குச் சிந்தாமணிக்கு அடுத்ததான இரண்டாம் இடம் அளித்திருக்கிறது. காப்பியச் சுவை கருதிச் சிந்தாமணிக்கு முதலிடம் வழங்கப் பட்டதுபோலும். ஆனால் தமிழ் வரலாற்றில் சிலப்பதிகாரமே முதற் காப்பியமாய் நிற்கிறது.

சங்க காலப் புலவரெல்லாம் தனித்தனிப் பாடல்களே பாடிச் சென்றிருக்க, இளங்கோவடிகள் புதிய காப்பிய நெறி கண்டு முதற் பெருங் காப்பியம் படைத்துள்ளார். அக்காப்பியமும் தமிழ் மரபிற்கேற்ப அமைந்திருப்பது சிலப்பதிகாரத்திற்குள்ள தனிப் பெருமையாகும்.

பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணம் பின்னர்த் தோன்றிய தண்டியலங்காரத்தில்தான் விளக்கமாகக் காணப்படுகிறது. அவையெல்லாம் வடமொழிக் காப்பிய மரபை ஒட்டி எழுந்த வரையறைகளாகும். இளங்கோவடிகளின் காலத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்த தொல்காப்பியமோ பெருங் காப்

பியம் பற்றிப் பேசவில்லை. அடிகளார், அந்நாளில் மக்கள் மனத்தைக் கவர்ந்த இரு பெரு வடமொழிக் காப்பியங்களான இராமாயணத்தையும் பாரதத்தையும் நன்கு தெரிந்திருந்ததோடு வடமொழிக் காப்பிய இலக்கணத்தையும் அறிந்திருத்தல் வேண்டும். ஆனால் கண்மூடித்தனமாக அக்காப்பிய வரையறைகளைப் பின்பற்றாமல் பெருங்காப்பியத்திற்கு தனி இலக்கணம் கண்டு ஒப்பற்றதொரு காப்பியம் படைத்துத் தந்துள்ளார்.

சிலப்பதிகாரத்தின் இறுதியில் நிற்கும் நூற் கட்டுரையை அடிகளின் காப்பிய இலக்கணமாகக் கொள்ளலாம். இதனைப் பாடியவர் அடிகளா, பதிகம்பாடியவரா, வேறொருவரா என்பது சரிவரத் தெரியவில்லை. பிறர் பாடியிருப்பினும் அவர் அடிகளின் உள் நெஞ்சத்தையும் சிலப்பதிகார நோக்கினையும் நன்கு உணர்ந்தவராதல் வேண்டும். இந்நூற் கட்டுரையை இலக்கணமாகக் கொண்டு ஆராய்ந்தால் மட்டுமே சிலப்பதிகாரத்தின் பெருமையைக் காண முடியும்.

இக்காப்பியம் தோன்றிய வரலாறு பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது. குறவர், கண்ணகி கோவலனுடன் விண்ணகமேறிய செய்தியைக் கூற, அங்குச் சேரனோடு இருந்த இளங்கோவும் கேட்டார். சாத்தனார் குறவர் கூறிய செய்தியை விளக்கியுரைத்தார். 'சிலப்பதிகாரம்' என்னும் நூலினை இயற்றி, 'ஆட்சிமுறை தவறிய அரசனை அறமே அழிக்கும்; கற்புடைய நங்கையினை உயர்ந்தோரும் ஏத்துவர்: ஊழ்வினை உரிய காலத்தில் தோன்றித் துன்புறுத்தும்' என்பவற்றை அதில் வலியுறுத்தும் தம் நோக்கத்தை இளங்கோ வெளியிட்டார். 'மூவேந்தர்க்கும் உரிய கதையினை அடிகள் உரைத்தலே தகும்' என்று சாத்தனார் மகிழ்ந்தார். இது நூலின் தோற்ற வரலாறாகப் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது.

இது மூன்று காண்டங்களில் முப்பது காதைகளை உடையது. புகார்க்காண்டத்தின் பத்துக்காதைகளில் கோவலன் கண்ணகியை மணந்து இல்வாழ்வு நடத்தும் நாளில் அரங்கேற்றத்தில் மாதவியைக் கண்டு மயங்கியவன் அவளோடு வாழ்ந்து, ஊடி நீங்கி மீண்டும் வந்தடைந்ததும் மதுரைக்குப்

பொருள் தேடக் கண்ணகியோடு புறப்பட்டுப் போகுங்கால் கவுந்தியடிகள் துணையாகச் சென்றதும் கூறப்படுகின்றன. மதுரைக் காண்டத்தின் பதின்மூன்று காதைகளில் கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகள் துணையாகக் காடு கடந்து மதுரைப்புறத்து ஆயர் மங்கை மாதரி வீட்டில் கண்ணகியைத் தங்கவைத்துச் சிலம்பு விற்கப்போனவிடத்தில் கள்வன் எனக் கொலையுண்டதும், கண்ணகி மன்னன் முன் சென்று வழக்குரைத்து வென்று மன்னனும் தேவியும் இறந்தும் சினந் தணியாது மதுரையை எரித்து வையைக் கரையோரம்போய்க் குன்றத்தின் வேங்கை மரத்தடியில் நின்று குன்றக் குறவர் காண விண்ணகம் புகுந்ததும் கூறப்படுகின்றன. வஞ்சிக் காண்டத்தின் ஏழு காதைகளில் குன்றக் குறவர் கூறக் கண்ணகி கதை யுணர்ந்த சேரன் அவள் சிலைக்குக் கல்வேண்டி இமயம் சென்று கனக விசயரை வென்று அவர் தலைமேல் சிலையேற்றிக் கொணர்ந்து வஞ்சி நகரில் கோயில் கட்டி விழாச் செய்து வாழ்த்திய செய்தி கூறப்பட்டுள்ளது.

நூற்கட்டுரை சிலப்பதிகாரத்திற்கு நல்ல அமைப்புத் திட்டமாகத் திகழ்கிறது. இத்திட்டத்தை முன் வைத்துப் பார்த்தால் மட்டுமே சிலப்பதிகாரத்தின் பெருமையை நன்குணர முடியும். குமரி, வேங்கடம், கீழ்கடல், மேல்கடல், இவற்றிற்குட்பட்ட தமிழகமே கதை நிகழும் களனாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ் வழங்கும் இடத்தைக் காவியத்திற்கு நிலைக்களனாகக் கொண்டு தமிழகத்தின் பெருமையைக் காப்பியத்தில் நிலைநிறுத்துவதே அடிகள் நோக்கமாகும். சோழ நாட்டில் தொடங்கிய கதை வளர்ந்து பாண்டிய நாட்டில் ஓங்கிப் பின் இறங்கிச் சேர நாட்டில் முடிகிறது. கண்ணகிக்குக் கற்சிலை எடுப்பதால் தமிழ்ப்புகழ் இமயம் வரை பரவுகிறது. வாழ்த்துக் காதையில் கண்ணகி தெய்வ வடிவில் நின்று 'தென்னவன் தீதிலன்' என்றும், தான் அன்னவன் மகள், என்றும் தமிழில் பேசுவதால் தமிழ்ப் புகழ் வானகம் வரை உயர்ந்தது. தமிழின் புகழ் மண்ணும் விண்ணும் மணக்கும் வண்ணம் இளங்கோவடிகள் கண்ணகி கதையினைத் தேர்ந்தமைத்திருப்பது பாராட்டற்குரியது.

காவியச்சிறப்புக்கு நடையும் ஒரு முதன்மைக் காரணமாகும். நூற் கட்டுரைப்படி சிலப்பதிகாரம் 'செந்தமிழ், கொடுந்தமிழ்' என இரு பகுதியினை ஆய்ந்து கண்ட புதிய நடையைக் கொண்டது. ஏட்டுத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்குமுள்ள இடைவெளியை போக்கக் கருதி நெகிழ்ந்த சொற்களால் எளிய நடையைக் கண்டார். சங்க நூல் நடைக்கும் சிலப்பதிகார நடைக்குமுள்ள வேறுபாட்டினை எளிதில் அறியலாம். இது, ஆசிரியர் காலப் போக்கினை அறிந்து பழகு தமிழில் அமைத்த பண்பட்ட நடையாகும். எளிமையும் இனிமையும் நெகிழ்வும் குழைவும் தெளிவும் ஓசை இனிமையும் செப்பமும் சேர்ந்து, சிலப்பதிகார நடை புதுமை இலங்கும் தனியொரு நடையாகத் திகழ்கிறது.

சிலப்பதிகாரம் 'ஐந்திணை மருங்கின்' அமைந்தது என்பது உண்மையே. அன்பின் ஐந்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள் ஆயவை காப்பியத்தில் ஆங்காங்கே காட்டப்பட்டுள்ளன. மலைவாணர் வாழ்க்கை அழகைக் குன்றக் குரவையிலும் காட்சிக் காதையிலும் காண்கிறோம். முல்லை நிலத்தார் வாழ்க்கையை ஆய்ச்சியர் குரவை கூறுகிறது. நாடுகாண் காதையில் மருதநில வாழ்வும் வளமும் காண்கிறோம். கடலாடு காதையும் கானல் வரியும் நெய்தல் நில அழகைக் கூறுகின்றன. பாலை நிலத்தார் பாங்கினை வேட்டுவ வரி காட்டுகிறது. அறுவகைப் பருவங்களும் கூறப்பட்டுள்ளன. ஐவகை நில அமைப்புடைய தமிழகத்தின் நகர்கள், மலைகள், ஆறுகள், கடல்கள், முதலிய எல்லாம் காப்பியத்திற்கு அழகு பயக்கின்றன.

பெருங்காப்பியத்தில் அறம், பொருள், இன்பம், வீடு குறைவின்றிக் கூறப்பட வேண்டும் என்பது வடவர் விதியாகும். அறம், பொருள், இன்பம் ஆயவை மக்கள் தேவர் என இரு சாரார்க்கும் ஒத்த மரபின் ஒழுக்கத்தோடு பொருந்தக் கூறப்பட்டிருப்பதை நூற் கட்டுரை கூறுகிறது. வீட்டைத் தனித்துக் கூறுதல் தமிழ் மரபு இல்லை போலும். திருக்குறளைப்போல் இங்கும் அறம் பொருள் இன்பம் என்ற

பகுப்புப் போற்றப் படுதல், அடிகள் தமிழ் மரபைப் பேணுபவர் என்பதை வெளிப்படுத்துகிறது.

சிலப்பதிகாரம் பழந்தமிழ் இலக்கணத்தின் வழி நின்று பாடப் பெற்றிருப்பதையும் நூற் கட்டுரை குறிப்பிடுகிறது. இளங்கோவடிகள் எழுத்து, சொல், யாப்பு, இவற்றைத் தொல்காப்பியத்தில் கண்டபடி கையாண்டிருப்பதோடு அகம் புறம் எனப்பட்ட அரிய பொருள் இலக்கணத்தையும் போற்றியுள்ளார். பெரும்பாலும் ஆசிரியப்பாவால் இயன்று இசைப்பாடல் எனத்தகும் வரிப்பாடல்கள் மிகுந்து வர இடையிடையே உரைநடையும் பெற்றுச் சுவை வாய்ந்த நடைகொண்டு விளங்குகிறது. கோவலன், கண்ணகி, மாதவி இவர்களோடு நடத்திய வாழ்வில் அகப் பொருளும் செங்குட்டுவன் வடநாட்டுப் போரில் புறப்பொருளும் விளக்கப் பெறுகின்றன.

தமிழர் வாழ்க்கைக்குச் சுவையூட்டிய கலைகளையெல்லாம் இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் அமைத்துள்ளார். 'பாடலும் எழாலும் பண்ணும் பாணியும் அரங்கு விலக்கே ஆடலென் றனைத்தும், ஒருங்குடன் தழீஇ உடம்படக் கிடந்த, வரியும் குரவையும் சேதமும் என்றிவை' விளங்கும் வண்ணம் இயல்புபடச் செந்தமிழில் பாடப் பெற்றது என்று நூற் கட்டுரை கூறுகிறது.

ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் 'கட்டுரை' என்னும் பகுதியில் காண்டத்தில் கலந்து நிற்கும் செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. புகார்க்காண்டத்தில் கரிகாலன் இமயத்தில் வில்பொறித்ததும் காவிரிப்பூம் பட்டினப் பண்பும் விழாவும் குடிகளும், விளையுளும் காவிரியாற்றுச் சிறப்பும் மழையும் நாடக அரங்கும் ஆடல் வகைகளும், வரிகளும், யாழ்களும் பண்களும் பாணிகளும் கூறப்பட்டுள்ளன.

மதுரைக்காண்டத்தில் நெடுஞ்செழியனின் அறமும் மறமும் ஆற்றலும் மதுரைப்பண்பும் விழாவும் குடிகளும் பெருகிய விளைச்சலும் வையை வளமும் மழைநலமும் வரி, குரவை, முதலியனவும் ஊடாடி நின்று அழகு பயக்கின்றன.

வஞ்சிக்காண்டத்தில் செங்குட்டுவன் அறம், மறம், ஆற்றல் முதலியனவும் வஞ்சிநகர்ப்பண்பும் விழாவும் குடி மக்கள் செல்வம், உணவுப் பெருக்கம், வரி, குரவை மறத் துறைகள் முடித்த சேனை, பகைவரைக் கடல் பிறக்கோட் டியமை, கங்கைப் பேரியாற்றுக் கரை போகியமை முதலியனவும் கலந்து நின்று எழிலூட்டுகின்றன.

இத்தனை அழகு நயங்களைக் கொண்ட தமிழகம் இளங்கோவடிகளின் இதயத்தில் கொள்கையாய்—கருத்தாய் ஊறிக்கிடந்தது. கண்ணாடியில் குன்றினைக் காட்டுவார் போல் தம் நெஞ்சக் கருத்தாய் நிறைந்து கிடந்த பெரும் தமிழகத்தைச் சிலப்பதிகாரத்தில் காட்டியுள்ளார் என்று நூற் கட்டுரையில் அறிகிறோம்.

இன்றைய தமிழ் அறிஞர் சிலப்பதிகாரத்தை வெவ் வேறு கண்கொண்டு கண்டுமகிழ்கின்றனர். இதனால் சிலப்பதி காரத்தின் பல்வேறு நயங்களும் அழகுகளும் வெளிப்படு கின்றன. இதனை நாடகக் காப்பியம் என்று ஆய்ந்து கண்டு அகங்களிப்பார். இயல் இசை நாடகமெனும் முத்த மிழைக் கொண்டிலங்குவதால் முத்தமிழ்க் காப்பியம் என்பர். வணிகன் புதல்வியைக் காப்பியத் தலைவியாகக் கொண்டுள்ளதாதலின் குடிமக்கள் காப்பியம் என்பர். தமிழ்நாட்டின் பெருமையைப் பாடுவதால் தேசியக் காவியம் என்பர். மற்றும் வரலாற்றுக் காப்பியம், மூவேந்தர் காப்பியம் என்றெல்லாம் பாராட்டி மகிழ்வர்.

தமிழ் மரபு வழி நின்று தமிழகத்துப் பெருமை நலங் களெல்லாம் கொழிக்கப் பாடப் பெற்ற இத்தமிழ்ப் பெருங் காப்பியம் 'நெஞ்சை அள்ளும்' சிலப்பதிகாரமாய் விளங்கு கிறது. மற்றப் பெருங்காப்பியங்களுக்கு வழிகாட்டியாய் அமைந்துள்ளது.

**(ii) மணிமேகலை:** இது ஐம்பெருங்காப்பிய வரிசையில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இதனைப் பாடியவர் சாத்தனார் ஆவர். கூலவாணிகன் சாத்தன் என்று அழைக் கப்பட்டார். இளங்கோவேந்தன் அருளிக் கேட்கப் புலவர் மணிமேகலைத் துறவைப் பாடியதாக மணிமேகலைப் பதிகம்

கூறுகிறது. மணிமேகலையோடு முற்றிய சிலப்பதிகாரம் என்று சிலப்பதிகார நூற்கட்டுரை கூறுகிறது. இதனினின்று இரு காப்பியங்களுக்குமுள்ள தொடர்பு நன்கு விளங்குகிறது: இரு புலவரும் சம காலத்தவர் என்பதும் வெளிப்படுகிறது. சிலப்பதிகாரக் காப்பியத் தலைவனுன கோவலனுக்கு மாதவி வயிற்றில் பிறந்த மகள் மணிமேகலையைக் கூறுவதால் இரண்டையும் இணைத்து இரட்டைக் காப்பியங்கள் என்பர்.

இது முப்பது காதைகளில் மணிமேகலை வரலாற்றைக் கூறிச் செல்கிறது. இந்திர விழாவில் நாட்டியமாட மாதவியோ மணிமேகலையோ செல்லவில்லை. ஊரார் பழிப்பை மதிக்காமல் மாதவி தான் புத்த மதத்தைத் தழுவியதைக் கூறுகிருள். மணிமேகலை மலர் பறிக்க உவவனம் செல்கிருள். அவள் தவக்கோலம் கண்ட ஊரார் அவள் தாயைப் பழிக்கின்றனர். காதல் கொண்டு பின் தொடர்ந்த உதயகுமாரனுக்கு அஞ்சி, மணிமேகலை பளிக்கறை புகுகிருள். மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவத்திற்குத் தூக்கிச் செல்கிறது. அங்குப் புத்த பீடிகையைத் தொழுது பழம் பிறப்புணர்ந்து தீவதிலகை துணையால் கோமுகிப் பொய்கையில் அமுதசுரபியான பாத்திரம் பெற்றுத் தாயிடம் திரும்புகிருள். அறவண அடிகளைத் தொழுது ஆபுத்திரன் கதையும் அமுதசுரபி வரலாறும் தெரிந்து ஆதிரையிடம் முதற்பிச்சை ஏற்றுக் காயசண்டிகையின் யானைத்தீ நோய் தீர்த்து உலக அறவியில் அறம் புரிகிருள். காமுற்றுப் பின் தொடர்ந்த உதயகுமாரன் காயசண்டிகையின் கணவனுல் வெட்டுண்டிறக்க மணிமேகலை சிறைப்பட்டுப் பின் நீங்கி ஆபுத்திரன் நாடு சென்று அவனுக்குப் பழம் பிறப்புணர்த்தித் திரும்பினுள். வஞ்சிமாநகரில் சமயவாதிகளை அணுகி ஆய்ந்து கச்சி சென்று அறவண அடிகளிடம் அறங் கேட்டுப் பிறவி அற நோற்ருள்.

மணிமேகலை குறிக்கோளை வெளிப்படையாகக் காட்டிக் கொள்கையைப் பரப்ப எழுதப்பெற்றகாப்பியம். ஆதலால்

காப்பிய இலக்கணத்தையோ, இலக்கியச் சுவை நலன் களையோ எள்ளளவும் மதிக்காமல் சமயக் கருத்துக்களை விளக்குவதில் புலவர் முழுக்கவனம் செலுத்தியுள்ளார். சிலப்பதிகாரம் சிறந்த இலக்கிய அழகு கொழிக்கும் பெருங் காவியமாய்த் திகழ, இது முழுதும் சமய காப்பியமாகவே விளங்குகிறது.

இக்காப்பியத்திற்கும் தமிழகத்தின் மாநகரங்களான புகார், வஞ்சி, காஞ்சி ஆயவை கதைநிகழ்களன்களாக இருந்தாலும் தமிழ் மக்களின் வாழ்க்கை அழகைக் காட்டும் முயற்சி எவ்விடத்தும் காணப்படவில்லை. எங்குப் பார்த் தாலும் பௌத்த மணம் வீசுகிறதே அன்றித் தமிழ்ப் பண்பு என்பதை எதிலும் பார்க்க முடியவில்லை. மாபெரும் புகழ் வாய்ந்த புகாரைக் கூடச் சம்பாபதி நகர் என மாற்றிக் கதை தொடங்குவதிலே மனநிறைவு கொள்கிறார். புகார் நகரத்து வீதியின் காட்சிகளாகக் கள்விற்போன் சைனநோன்பியைக் கள் குடிக்க வற்புறுத்தலும் பேடிக்கூத்தும் போன்றவை காட்டப்படுகின்றன. பளிக்கறையினையுடைய உவவனமும் புத்தவனமாகவே காட்டப்படுகிறது. சங்க இலக்கிய மரபு தழுவப் பெறாது புத்த சமய நெறி நின்று பாடப் பெற்ற இது சமய காப்பியமேயாகும்.

புலவர் கன்னித் துறவியான மணிமேகலையைக்காப்பியத் தலைவியாகக் கொள்கிறார். பரத்தமையில் நம்பிக்கை கொண்ட சித்திராபதியின் பேர்த்தியாயினும் பரத்தமைஏற் காத மாதவிக்கு மகளாய்ப் பிறந்து கற்பரசி கண்ணகியின் மகளாகவே கருதப்பட்டு வளர்க்கப் பெற்றமை, மணிமேகலை யைக் காப்பியத் தலைவியாவதற்குரிய தகுதி உடையவளாக்கு கிறது. பரத்தை குலத்தில் பிறந்தவளைப் பெருங்காப்பியத் தலைவியாக்குதல் பெரும் புரட்சியேயாகும். காப்பியத்தின் தொடக்க முதல் இறுதி வரை மணிமேகலையின் துறவை நடத்தித் தீவதிலகை, ஆபுத்திரன், ஆதிரை, காய சண்டிகை முதலியோர்வரலாறுகளை இடையிடையே கிளைக் கதைகளாக இணைத்துப் பெருங் காப்பியமாக்கியிருப்பது புலவரின் அருந் திறனாகும்.

இதனைச் சீர்திருத்தக் காப்பியம் என்று பாராட்டுவர். பரத்தமையைத் தொழிலாகக் கொண்டு வாழ்தல் தீயது என்னும் கொள்கையை நிலை நாட்டியுள்ளார். மற்றும் மது வொழிப்பு, சிறையொழிப்பு, சாதியொழிப்பு முதலான சீர் திருத்தங்களைச் செய்துள்ளார். உணவறத்தை உயர்ந்த அற மாகக் காட்டியுள்ளார். புலவர் தம் புத்த சமயக் கொள்கை களை விளக்குவதற்கென்று இறுதியில் சில காதைகளைத் தேர்ந்து கொண்டு, மற்ற இடங்களில் எல்லாம் எல்லாச் சமயத்தவருக்கும் இசையும் வண்ணம் பொதுவான அறங் களைக் கூறியிருப்பது ஆசிரியரின் பரந்த மனப்பான்மையைக் காட்டுவதோடு, எச்சமயத்தவரும் விரும்பிப் படிப்பதற்கேற்ற தாகவுமாக்கியிருக்கிறது.

சிலப்பதிகாரத்தில் இயல்பிறந்த நிகழ்ச்சிகள் இரண் டொரு இடங்களிலேதான் கையாளப்படுகின்றன. அவை களும் காப்பியச் சுவைகளைப் பெருக்கிக் காட்டுவதற்கே அல்லாமல் கதையை நடத்துவதற்குக் கையாளப்படவில்லை. ஆனால் மணிமேகலையில் பலவிடங்களிலும் கதைக்கு இன்றி யமையாதனவாக இயல்பிறந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள் ளன. சங்க கால இயல்புத் தன்மைக்கு இது மிக்க மாறு பாடுடையதாக உள்ளது.

மணிமேகலை ஆசிரியப்பாவில் அமைந்த காப்பியம். பிற காப்பியங்களை விட எளிய நடையில் அமைந்துள்ளது. புதிய சொல் படைத்துத் தமிழுக்கு ஊட்டம் அளித்திருப்பதோடு வடசொற்களுக்குச் செப்பமான முறையில் தமிழாக்கம் செய் துள்ளார். இதுவே முதல் சமய காப்பியமாகத் திகழ்கிறது.

## 5. பெருங்கதை

இது உதயணன் வரலாற்றை விரியக்கூறும் பெருங் காப் பியம் ஆகும். இதனைப் பாடிய 'கொங்கு வேளிர்' கொங்கு நாட்டின் விசய மங்கை என்ற ஊரினர். சமணர்: அரச குலத் தைச் சார்ந்தவர் எனப்படுகிறார். குணாட்டியர் பைசாச மொழியில் எழுதிய பிருகத் கதையினை முதல்நூலாகக் கொண்டு இவர் இப்பெருங்காப்பியம் பாடியுள்ளார்.

இக்காப்பியம் உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என்னும் ஐந்து காண்டங்களாய்ப் பகுக்கப்பட்டுள்ளது. காண்டம் தோறும் காதைகள் என்ற உட்பிரிவுகளை உடையது. காப்பியக் கதை 99 காதைகளில் நடக்கிறது.

இக்காப்பியம் சுவையான கதை அமைப்புடையது. கௌசாம்பி மன்னனின் மனைவி நிறைசூலியாக இருக்கிறாள். அவள் தூங்கும் போது சிம்புள் பறவை அவளை எடுத்துச் சென்று ஒரு மலையடி வாரத்தில் போட்டு விட்டுச் சென்று விடுகிறது. அங்கு அரசி உதயணனைப் பெற்றெடுக்கிறாள். அங்கு அவளது தந்தை தவஞ் செய்தவர் வந்து கண்டு தாயையும் மகனையும் வளர்க்கிறார். உதயணன் மற்றொரு முனிவரின் மகனான யூகி என்பவனோடு வளர்ந்து தன் பாட்டனிடமே போர்ப் பயிற்சியும் மற்றும் பல கலைகளையும் கற்று யாழிசைப்பில் வல்லவனாகிறான். யாழிசையால் யானையை வசப்படுத்தி அதன் உதவியால் தந்தை நாட்டையும் தாய் மாமன் அரசையும் மீட்டு ஆள்கிறான். தனக்கு முன் யானைக்கு உணவு ஊட்டுவதான ஒப்பந்தம் தவற யானை மறைகிறது. யானையைத் தேடி அலைகையில் உச்சினி மன்னன் அவனைத் தந்திரமாகச் சிறைசெய்கிறான். யூகியின் சூழ்ச்சியால் சிறை விடுக்கப்பட்டு உச்சினி மன்னனின் மதயானையை மடக்கி அவன் மகள் வாசவத்தையை மணக்கின்றான். அரசாட்சி மறந்து வாசவத்தையுடன் இன்ப வாழ்வில் மயங்கிக் கிடக்கிறான். யூகி வாசவத்தையை அவனிடமிருந்து பிரித்து அவள் இறந்து விட்டாள் எனச்செய்தி பரப்புகிறான். இறந்தோரை உயிர்ப்பிக்கும் முனிவரைத் தேடிச் சென்ற உதயணன் பதுமாவதியை மணந்து இரு மனைவியரோடும் கௌசாம்பியை ஆள்கிறான். மற்றும் இரு மங்கையரை மணக்கின்றான். முடிவில் பதுமாவதியின் மகனான கோமுகனுக்கு அரசினை அளித்து விட்டுத் துறவு பூண்கிறான்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தமிழ் நாட்டுக் கதைகளைக் கொண்டிருக்க இக்காப்பியம் வடநாட்டு மன்னன் வரலாற்றைக் கொண்டுள்ளது. மூல நூலில் உள்ளவாறு கதை

யினேயும் நிகழ்ச்சிகளேயும் காப்பியத்தில் பாடியிருக்கிருர். ஆதலால் இது ஒரு மொழிபெயர்ப்புக் காவியமாக அமைந்துள்ளது. காப்பியத் தலேவனுன உதயணனின் பிறப்பு, வளர்ப்பு, திருமணம், முடிசூட்டல், துறவு மேற்கொள்ளல் முதலியன எல்லாம் கூறப் பெற்றுப் பெருங் காப்பிய அமைதிகள் எல்லாம் நிறைந்த காப்பியமாகும்.

புலவர் சமணராதலின் சமண சமயக் கருத்துக்களே ஆங்காங்கே கூறிச் செல்கிருர். நகை, அவலம், உவகை முதலான சுவைகள் அழகுறக் கூறப்பெற்றுள்ளன. சொற்சுவையும் பொருள் சுவையும் நிறைந்துள்ளன. அரசன் குறைகள், அவன் கடமைகள், அரசியல் சூழ்ச்சிகள் முதலிய அரசியல் செய்திகள் நன்கு கூறப்பெற்றுள்ளன. மதிநலமிக்க யூகியின் திறனும் நட்பும், நாட்டு நலனுக்கு தன் நலம் மறுக்கும் வாசவத்தையின் தியாகமும் கடமை உணர்வும் காப்பியத்திற்கு அழகு ஊட்டுகின்றன. இது சிலப்பதிகாரத்திற்கு முற்படத் தோன்றியது என்றும் பிற்படத் தோன்றியது என்றும் இதன் தோற்றம் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பெருங்காப்பிய நலமெல்லாம் பொருந்தப் பெற்ற இக்காப்பியம், ஐம்பெருங் காப்பியப் பகுப்புக் கண்டவர் கண்ணுக்குத் தப்பியது எப்படி என்பது விளங்கவில்லே.

# பக்தி இலக்கிய காலம்

## பக்தி இயக்கத் தோற்றம்

சங்க காலம் கி. பி. மூன்றும் நூற்றுண்டொடு முடிந்தது. கி. பி. ஆறும் நூற்றுண்டின் பிற்பகுதியில் பக்தி இயக்கம் தோன்றியது. இடைப்பட்ட மூன்று நூற்றுண்டுகளில் , சமயக் குழப்பங்களும் மிகுந்திருந்தன.

தமிழ் நாட்டில் மூவேந்தர் ஆட்சி மறைந்தது. மூன்றும் நூற்றுண்டின் பிற்பகுதியில் பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சி தொடங்கியது. பல்லவர் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தின் வட பகுதியை ஆண்டனர். கொங்கு நாடு கோசர் கையில் இருந்தது. களப்பிரர் ஆதரவால் பௌத்தமும் சமணமும் தமிழ் நாட்டில் பரவின. துறவோர் பள்ளிகள் அமைத்துத் தங்கியிருந்து சமயம் பரப்பினர். நகரங்களில் பௌத்த, சமணக் கோயில்கள் எழுந்தன.

பௌத்தர்கள் தமிழ் கற்றுத் தம் சமயக் கருத்துக்களைப் பரப்ப வேண்டிக் காப்பியங்களும் சிறு நூல்களும் செய்தனர். சமணர்களுள் ஒரு சாரார் தமிழைச் சமயம் பரப்பும் கருவியாகக் கொண்டாலும் மற்றொரு சாரார் தமிழ் உணர்ந்து தமிழ் மரபு போற்றினர்.

களப்பிரர் தொடக்கத்தில் பௌத்தத்தைத் தழுவியிருந்தனர். பல்லவர் பெரும்பாலும் சமணத்தை ஆதரித்தனர். சமணத் துறவிகள் தம் சமயத்தைப் பரப்புவதற்கும் வைதிக சமயத்தாரை ஒறுப்பதற்கும் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தத் தொடங்கினர். இதனுல் சைவ, வைணவப் பெரியோர்கள் உணர்ச்சி பெற்றுத் தத்தம் சமயத்தை வளர்ப்பதற்கு வழி தேடலாயினர்.

சமணத் துறவு நெறிகளுள் சில தமிழர்க்குப் பொருந்தாதவைகளாக இருந்தன. சமணத் துறவிகள் ஆடையின்றி

வீடுகட்குச் சென்று பிச்சையேற்றலைப் பலர் இகழ்ந்தனர். கொல்லாமை பேசிய சமணர் மறைவாக மீன் முதலிய புலால் உணவை உண்டனர் : தாம் கூறிய அறத்திற்கேற்ப வாழ்க்கை நடத்தவில்லை. இதனால் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்கிழந்து வந்தன.

மக்கள் மீது அன்பு கொண்ட தலைவர்கள் இல்லை. இல்லறத்தை இம்மையில் மனநிறைவுஅளிக்கும் வாழ்வாகச் சமணர் ஏற்கவில்லை. ஒழுக்கத்தை வானளாவப் புகழ்ந்த சமணர் கடவுள் பற்றிக் கூறவில்லை. தன் முயற்சியாலேயே முத்தி பெறலாம் என்பது சாதாரண மக்களுக்கு அடைய முடியாத ஒன்றாகவே பட்டது.

இந்நிலையில் சைவ வைணவச் சான்றோர் தோன்றி இறைப் பற்றின் வாயிலாக மக்களுக்கு நம்பிக்கையூட்டினர். பக்தி நெறி தலைதூக்கியது. பக்திகொண்டு இறைவனை வேண்டினால் நோய் நொடி முதலான துன்பங்கள் நீங்கப் பெற்று இன்பம்எய்தலாம் என்று நம்பினர். இல்லற வாழ்க்கையாலேயே முக்தி பெறலாம் என்று நம்பிக்கை கொண்டனர். பக்தி வளர ஒழுக்கம் தானாக ஓங்கும் என்று கருதினர். அன்புள்ள மனமே ஆண்டவனுக்கு உவகையளிக்கும் என்று கண்டனர். பக்தி நெறி வாழ்க்கையில் நம்பிக்கையும் தெம்பும் ஊட்டவே, மக்கள் சைவ, வைணவப் பெரியோர் சொல்லுக்கு விரும்பிச் செவிசாய்க்கலாயினர்.

சைவச் சான்றோர் இப்பக்தி நெறியை ஓர் இயக்கம் போல் நடத்தினர். சமணர் எதிர்ப்புக்குப் படியாமலும், தொல்லைகளுக்கு அஞ்சாமலும் அன்புக் கொடி உயர்த்திப் பதிதோறும் சென்று தம் பக்தி நெறியைப் பரப்பினர். மாசு அடைந்த சிவன்கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. கோயிலில் இசையும் கூத்தும் குடியேறின. ம்ண்கனிந்த பாடல்கள் இசைத்தன. சென்றவிடமெல்லாம் சிவனடியார்க்கு மக்கள் சிறந்த வரவேற்புகள் அளித்தனர்.

சிவன் கோயில் முத்தமிழ்க்கு உறைபதியாயிற்று. சிவனடியார் தமிழ்த்தொண்டராயினர். சிவனைத் தலைவனாகக் கொண்ட புதிய அகப் பொருள் தோன்றியது. அடி

யவர் காதலி நிலையில் நின்று நெஞ்சம் நெக்குருகப் பாடினர். சிவனார் குணம் பாடினர். அவன் அன்பினைப் பெறத் துடித்தனர். பக்தியெனும் புதிய காதலின் துடிப்புத் தோன்றப் பாவினங்கள் பாடப் பெற்றன.

தேவார மூவரும் மாணிக்க வாசகரும் அகங் குழைந்து பாடிய பாக்கள் எல்லாம் அன்புணர்ச்சியின் ஓவியங்களாகும். ஆழ்வார்களும் அகங்கனிந்து பக்திப்பாக்களைப் பாடினர். தமிழ் புத்துணர்ச்சியும் புதுமலர்ச்சியும் பெற்றுத் தழைக்கத் தொடங்கியது.

சைவ மறுமலர்ச்சி: கி. பி. ஆறும் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே சைவ மறு மலர்ச்சி தொடங்கிவிட்டது. காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகியவற்றைப் பாடினார். இவற்றில் சிவபெருமான் கூத்தும், சுடலையும் சைவ சித்தாந்தக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

கல்லாடர் கல்லாடம் என்னும் நூல் இயற்றினார். இது சிவபெருமானைப் பற்றி அகப்பொருள் பொருந்த நூறு அகவற் பாக்களால் பாடப்பெற்றது. மதுரையில் நிகழ்ந்த திருவிளையாடல்களும் இதில் கூறப்பட்டுள்ளன.

ஞானமிர்தம் என்னும் நூலை வாகீச முனிவர் இயற்றினார். இது எழுபது பாக்களைக் கொண்டது. பதி, பசு, பாசம் இவற்றின் பொது இயல்புகளை விளக்குவதால் இது சைவ சித்தாந்த நூலாகக் கருதப்படுகிறது.

திருமந்திரம்: இது திருமூலரால் இயற்றப் பெற்றது. இவர் ஆறும் நூற்றாண்டினராகக் கருதப்படுகிறார். இவர் திருவாவடுதுறையில் அரச மரத்தடியில் தவம் செய்தார் என்று தெரிகிறது. இவரைச் சித்தராகக் கொள்வர். நீண்ட நாள் தவம் செய்து தவ முடிவில் இந்நூலை இயற்றினார் போலும்.

இந்நூலில் உள்ள பாக்கள் வெண்டளை கொண்டு வெண்பாவிற்கும் ஆசிரியப் பாவிற்கும் இடைப்பட்டனவாக உள்

ளன. இதனால், தேவாரப் பாவினங்கள் பெருகுவதற்கு முன் இந்நூல் தோன்றியது என்று அறியலாம். திருஞான சம்பந்தர் திருவாவடுதுறையில் உள்ள சிவன் கோயிலுக்குச் சென்றபோது பலிபீடத்திற்கருகில் தோண்டித் திருமந்திர நூலை எடுத்தார் என்பர். இதனால் இது சம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட நூல் என்று அறிகிறோம். ஐந்தாம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்ற தில்லைப்பொன்னம்பலத்தை இதில் பாடியிருப்பதால் இது ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகும்.

இதனை ஆகம நூல் என்பர்; இது சைவ சமயக் கொள்கைகளைக் கூறும் மிகப் பழைய நூலாகும். இதன் மூவாயிரம் பாடல்களும் ஒன்பது தந்திரங்களுள் 232 அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. சிவ வழிபாடும் சக்தி வழிபாடும் நூலெங்கும் கூறப்படுகின்றன. எல்லாச் சமயத்தவருக்கும் பொது அறங்களான யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, அன்புடைமை, கல்வி, நடுநிலைமை முதலியனவும் கூறப்பட்டுள்ளன. புத்தம், சமண முதலான அறுவகைச் சமயங்களை மறுத்திருக்கிறார்.

சமயப் பகை வளர்ந்த நாளில் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்; அன்பே சிவம்; உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்; நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பன போன்ற கருத்துக்களைப் பரந்த மனப்பான்மையுடன் பாடியிருத்தல் போற்றற்குரியது.

தமிழைச் சமயம் பரப்பும் கருவியாகவே சமணரும் பௌத்தரும் கருதிய நாளில் 'என்னை நன்றாக இறைவன் படைத்தான், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்று தமிழ் முழக்கம் எழுப்பியுள்ளார்.

## 1. சைவப் பக்தி இலக்கியங்கள்

தேவாரத் திருவாசகப் பாடல்களும் நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களுமே பக்தி இலக்கியங்கள் ஆகும். இறைவன் உருவழகிலும் குணநலன்களிலும் சொக்கி அவனைப் பற்றிப் பிடித்து அவனோடு ஒன்றுவதற்குத்

துடிக்கும் உணர்ச்சிகளின் வெளியீடுகளாக உள்ளனவாத லின் பக்தி இலக்கியங்கள் எனப்படுகின்றன. சங்ககால அகப்பொருட் பாக்களில் தோன்றும் அன்பின் வழிப்பட்ட காதலுணர்ச்சியே இங்குத் தெய்வீகக் காதல் துடிப்பாக மறுமலர்ச்சியடைந்துள்ளது.

**(i)** அப்பர் தேவாரம்: *(570-655)* அப்பர் நடுநாட்டுத் திருவாமூரில் புகழனுர் மாதினி என்ற சைவப் பெற்ரேர்களுக்குப் பிறந்தார். பெற்ரேரையிழந்து இளமையில் தமக்கை திலகவதியாரை விட்டுப் பிரிந்து சமணம் தழுவினுர். சமயவாதில் தேர்ந்து தருமசேனர் என்ற பட்டம் பெற்ருர். தீராச் சூலை நோய் வந்து வருத்த தமக்கையை அடைந்து மீண்டும் சிவக்காதலராகிப் பாடலானுர். சமணர் தூண்டுதலால் கொல்ல முயன்ற சமண மகேந்திரப் பல்லவனைச் சைவனுக்கிப் பதி பல சென்று, கோயில் புதுக்கி மனமுருகிப் பதிகம் பாடினுர். பின்னர் இமயம் வரை சென்று திரும்பித் திருப்புகலூரில் முக்தி பெற்ருர். இவர் சம்பந்தரை இருமுறை சந்தித்தார். இவரது பாக்கள் **4, 5, 6** ஆம் திருமுறைகளான பகுப்பில் இடம் பெற்றுள்ளன.

இவர் பாடிய பதிகங்கள் 4900 என்பர். ஆனுல் 312 பதிகங்களில் அடங்கிய 3066 பாடல்களே கிடைத்துள்ளன. அவையெல்லாம் விருத்தப் பாக்களாகும். தொல்காப்பியத்தில் பாவினங்களாகிய துறை, தாழிசை, விருத்தம் ஆயவற்றிற்கு இலக்கணம் இல்லை. அப்பர், காக்கைபாடினியம், அபிநயம் முதவியவற்றில் பாவினங்களுக்குக் கூறப்பட்ட இலக்கணத்தைக் கொண்டு விருத்தம் பாடினுர். இவர் பக்தி இயக்கத்திற்குத் தந்தையாவதோடு விருத்தப் பாவினத்திற்கும் தந்தையெனும் வண்ணம் இசை கனிந்த விருத்தங்கள் பாடினுர். 'தாண்டகம்' என்னும் பாவினம் சிறக்கப் பாடியதால் தாண்டகவேந்தர் எனப்பட்டார். அகரம் முதல் னகரம் வரையுள்ள முப்பது எழுத்துக்களும் நிரல்பட முப்பது பாடல்களின் முதலில் வரப் பாடியிருக்கிருர். ஒன்று முதல் பத்துவரையுள்ள எண்களை வைத்துப்

பாடியிருக்கிறார். புதுமையுறப் பாடல் இயற்றும் ஆர்வம் அவரிடம் காணப்படுகிறது.

அப்பர் பாடல்களில் தத்துவக் கருத்துக்கள் நிரம்பியிருக்கும். அவர் சமணர்களைக் கடுமையாகக் காய்கிறார். அகந்தையகற்றி அனைவரும் ஒரு குலமாய்ச் சிவனை வழிபடுமாறு அழைக்கிறார். நெகிழ்ந்த சொல்லால், எளிய நடையில் இன்னிசை ஒழுக இறையன்பு பொங்கப் பாடிய பாக்கள் தேவாரம் எனப்பட்டன.

அடிகள் பதி பல சென்று பதிகங்கள் பாடியும், கைத்தொண்டு செய்தும் கோயில் புதுக்கியும், ஒழுக்க சீலராய் வாழ்ந்தும் மக்கள் மனத்தைக் கவர்ந்தார். வருத்திய மகேந்திரப்பல்லவனைத் தன் அன்பு, அஞ்சாமை, பொறுமை, உறுதியால் வணங்கச் செய்தார். மக்களுக்கு உணர்ச்சியூட்டிச் சைவ எழுச்சியைத் தோற்றுவித்துச் சோழ நாட்டில் சமண வீழ்ச்சிக்கு வித்திட்டார். தமிழ் மறுமலர்ச்சிக்கும் இவர் ஆற்றிய பெரும்பணி பாராட்டற்குரியது.

**(ii)** சம்பந்தர் தேவாரம்: சம்பந்தர் பாடிய தேவாரப் பாக்கள் முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. இவர் சீர்காழியில் அந்தணர் மரபில் சிவபாத இருதயருக்கும் பகவதியார்க்கும் மகனாய்ப் பிறந்து மூன்றாம் ஆண்டில் உமையம்மையாரின் ஞானப்பாலுண்டு திருப்பதிதோறும் சென்று பதிகம் பாடிச் சைவ எழுச்சியூட்டித் திருமண நல்லூரில் திருமண நாளன்று மணமகளோடு கோயிலினுட் சென்று இறைவனுடன் கலந்தார் என்பர்.

இவர் அப்பரின் இறுதிக் காலத்தில் வாழ்ந்தவர். அப்பரை இருமுறை கண்டு உறவாடினார். திருநீலகண்டயாழ்ப்பாணர் இவரோடு சென்று இவர் பாடல்களுக்கெல்லாம் யாழிசைத்தார். வாதாபி கண்ட சிறுத் தொண்டரைச் சந்தித்தார். மங்கையர்க்கரசியின் வேண்டுகோளுக்கு இணங்கி மதுரை சென்று சமணரை வென்றார்.

சம்பந்தர் 16000 பாடல்கள் பாடினார் என்பர். ஆனால் 384 பதிகங்களுள் அடங்கிய 4181 பாடல்களே உள்ளன. இவை இனிய ஓசை நிரம்பி இசைப்பாக்கள் எனத் தகும்

விருத்தப்பாக்கள் ஆகும். யமகம், திரிபு, மொழி மாற்று, அடிமாற்று முதலிய சொல்லணிகளைப் பாடுவதில் வல்லவர். சிவபெருமானின் உருவ அழகிலும் திருக்குணங்களிலும் ஈடு பட்டுத் தலைவி நிலையில் நின்று பாடிய பாக்கள் பல. இயற்கை வருணனைகள் பாடல்களில் ஆங்காங்கே அழகு செய்யும். நெகிழ்ந்து இனிதாய எளிய சொல்லால் இன்னோசை கொப்புளிக்க அமைந்த பாக்களாய் அமைந்துள்ளன.

பதிகம் தோறும் சிவன் இராவணன் செருக்கை அடக்கியதையும், சிவனுக்கு மாலும் அயனும் தாழ்ந்ததையும் கூறுவதோடு சமணக் கொள்கைகளையும் கடிகின்றார். பதிக இறுதியில் தன் பெயரை இணைத்துப் பாடும் புது முறையினைப் புகுத்தியுள்ளார்.

இளமைப் பொலிவும் இனிய குரலும் வாய்ந்து கேட்பாரைப் பரவசமாக்கும் பாட்டிசைத்து அடியார், மக்கள் கூட்டத்திடையே பெருஞ் செல்வாக்குப் பெற்றுச் சோழ நாட்டில் சைவத்தை உறுதி பெறச் செய்து, பாண்டிய நாட்டைச் சமணர் பிடியினின்று மீட்டி, தமிழகமெங்கும் செந்தமிழோசை முழங்கச் செய்து, சைவத்தோடு தமிழ் வளமும் பொங்கச் செய்தார்.

(iii) சுந்தரர் தேவாரம்: சுந்தரர் பாடிய தேவாரப்பாக்கள் ஏழாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன. இவர் எட்டாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மன் காலத்தில் வாழ்ந்தவர். திருமுனைப்பாடி நாட்டுத் திருநாவலூரில் சைவ அந்தணர் குலத்தில் சடையனாருக்கும் இசைஞானியார்க்கும் பிறந்து திருவெண்ணெய் நல்லூரில் திருமணத்தின்போது தடுத்தாட்கொள்ளப்பட்டு, பதிகம் பாடினார். திருவாரூர்ப் பரவையாரையும் திருவொற்றியூர்ச் சங்கிலியாரையும் மணந்தார். பதிகள் பல சென்று பாடிப் பின் இறுதியில் சேரமான் பெருமாள் நாயனாரோடு கயிலை சென்று முக்தி பெற்றார் என்பர்.

திருப்பரங்குன்றப் பதிகத்தை மூவேந்தர் முன்னிலையில் பாடியதாகக் குறிப்பிட்டுள்ளார். பாண்டியன் நெடுமாறன்

பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். திருநாவுக்கரசரையும் திருஞானசம்பந்தரையும் பாடியுள்ளார்.

இவர் பாடிய பாடல்கள் 38000 என்பர். ஆனால் 100 பதிகங்களில் அடங்கிய 1026 பாடல்களே கிடைத்துள்ளன. காதலி பாவனையில் நின்று காதலனுக்கு அஞ்சுபவள் போன்றும் அவனை அதட்டுபவள் போன்றும் எள்ளி நகையாடிக் கேலி செய்பவள் போன்றும் பாடியுள்ளார். இவர் பாடல்களில் நகைச்சுவை மிகுந்திருப்பதைக் காணலாம்.

இவருடைய பாடல்கள் இனிய எளிய விருத்தப் பாக்களாகும். இயற்கை வருணனைகள் பாடலுக்கு அழகு செய்கின்றன. இவர் பாடிய திருத்தொண்டத் தொகை பெரிய புராணத்திற்குரிய இரண்டு மூல நூல்களுள் ஒன்றாக உள்ளது. இவர் பாடல்களில் புத்தர், சமணர் பற்றிய கடிந்துரைகள் இல்லை. திருமங்கையாழ்வார் இவர் காலத்தவர் ஆவர்

**(iv) திருவாசகமும் திருக்கோவையாரும்:** இவ்விரண்டும் மாணிக்கவாசகரால் பாடப் பெற்ற பக்தி இலக்கியங்களாகும். இவர் பாண்டிய நாட்டுத் திருவாதவூரில் அந்தணர் குலத்தில் பிறந்து கற்றுத் தேர்ந்து அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சரானார். குதிரை வாங்கச் சென்றவர் திருப்பெருந்துறைக் குருந்த மரத்தடியில் தங்கிச் சிவனருள் பெற்று அரசப்பணியை மறந்து இறைப்பணியில் மூழ்கிவிட்டார். மன்னன் அவரைச் சிறைப்படுத்தித் தண்டிக்க, சிவனார் தம் திருவிளையாடல்களால் 'அடிகள் பெருமையை உலகுக்கு உணர்த்தினார் என்பர். மறைமலையடிகள் இவர் காலத்தை மூன்றாம் நூற்றாண்டெனக் காட்ட முயன்றிருப்பினும் மாணிக்கவாசகர் ஒன்பதாம் நூற்றாண்டினர் என்பதே வலுவாய்ந்த கொள்கையாகத் தெரிகிறது.

திருவாசகம் 51 பிரிவுகளில் 656 பாடல்களைக் கொண்டது; நான்கு அகவல்பாக்களாகவும் பிறவெல்லாம் விருத்தப் பாக்களாகவும் உள்ளன. பதிகத்தோடு அந்தாதி, சதகங்களும் பாடியுள்ளார். பாமர மக்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி நீராடல், அம்மானை, பூக்கொய்தல், ஊசல்

முதலிய விளையாட்டுப் போக்கில் வைத்துப் பதிகங்கள் பாடியிருக்கிறார். குயில் பத்து, கிளிப்பத்து போன்றவற்றில் இறைக் காதலை வெளியிடுகிறார். தலங்கள் பெயரில் ஒன்றிரண்டு பாடியிருத்தலால், அடிகள் இறைவனை உள்ளக் கோயிலில் வைத்து வணங்கும் நிலையில் திளைத்தவர் என்பது விளங்குகிறது.

அடிகள் தற் சிந்தனையில் ஈடுபட்டு, ஆன்ம விசாரணையில் மூழ்கித் தன் குறைகண்டு வருந்தி, இறைவன்மீது தனக்குள்ள அன்பு போதாமைக்கு இரங்கி இறையனுபவத்தில் திளைத்த இதய உணர்ச்சிகளை இனிமை கலந்த பாக்களில் வெளியிட்டுள்ளார். இப்பாக்கள் கற்பார்க்கு நெஞ்ச உருக்கமும் இறையன்பும், பேரின்பமும் விளைவிக்கின்றன. இவை, இறையன்பில் திளைத்த தாயுமானவர், சிவப்பிரகாசர் இராமலிங்க அடிகள் முதலியோர் உள்ளங் கவர்ந்துள்ளன. மேனாட்டவரான போப் ஐயர் என்பவரும் இதனை உணர்ந்து இப்பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.

அடிகள் பிறரைப்போல் சமணம் போன்ற சமயங்களைக் காய்வதைக் கருமமாகக் கருதவில்லை. தேவார மூவரைப் போல் திருத்தலங்களையோ சிவனாரின் உருவத் தோற்றத்தையோ பாடாமல் இறைவன் திருக்குணங்களையும், இறையன்பையும், சகோதரப் பான்மையையும், எல்லோரும் உய்தல் வேண்டிப் பாடியமையால், எச்சமயத்தவரும் விரும்பும் பாக்களாக உள்ளன.

தென்பாண்டி நாட்டைச் சிவலோகமாகவும் சிவனைத் தென்னவன், சேரலன், சோழனாகவும் காட்டுகிறார். நாட்டுப் பற்றோடு தமிழ்ப்பற்றையும் ஆங்காங்கே புலப்படுத்தியுள்ளார்.

தமிழ் அகப்பொருள் மரபு வழியே உணர்ச்சியின் உச்ச நிலையில் நின்று இறைக்காதலை வெளிப்படுத்தியுள்ளார். இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் வைத்து அன்பின் குழைவை எடுத்தியம்பும் திறன் அடிகட்கே உரியதாகும்.

'சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள் தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்ந்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானை.

திருக்கோவையார்: கட்டளைக் கலித்துறைப் பாடல்களால்பாடப் பெற்ற 'கோவை' என்னும் பிரபந்தமாகும். இது திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் வழங்கப் பெறும். இது நானூறு துறைகளில் தலைவன் தலைவிக்குரிய காதல் ஒழுக்கத்தைப் பாடும் பாவனையில் பேரின்பக் காதலை விளக்குகிறது. இறைவன் தலைவன்; ஆன்மா காதலி. உலகின்பக் காதல் வழி இறைப் பேரின்பக் காதலை உணர்த்தும் திறன் போற்றற்குரியது. சமணரால் இழுக்கடைந்த தமிழ் அகப்பொருளுக்கு மாணிக்கவாசகர் மறுவாழ்வு அளித்துப் பெருமையுறச் செய்துள்ளார். இதற்குப் பேராசிரியர் உரை உள்ளது.

இது மறையவர்க்கு வேதம்; சிவபோகத்தவருக்கு ஆகமம்: காமுகர்க்கு இன்பநூல்; தர்க்க நூலவர்க்கு எண்ணூல்; தமிழ்ப்புலவர்க்கு இலக்கண நூல். சிவபெருமான் திருவாசகத்தோடு இதற்கும் படியெடுத்து வைத்துக் கொண்டார் என்பர். மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளன.

## 2. வைணவப் பக்தி இலக்கியங்கள்

விஷ்ணுவை வழிபடும் நெறி வைணவமாகும். விஷ்ணுவுக்குத் தமிழ்ப்பெயர் திருமால் என்பதாகும். சங்க காலத்தில் திருமால் முல்லை நிலக் கடவுளாக வழிபடப் பெற்றார். பரிபாடலில் திருமாலின் முழுமுதல் தன்மையினை விளக்கும் பாடல்கள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் உள்ள ஆய்ச்சியர் குரவையில் திருமாலைக் கண்ணனாக வாழ்த்திப்பரவும் இனிய பாடல்கள் உள்ளன.

களப்பிரர் ஆட்சியில் பௌத்தமும் சமணமும் தலை தூக்கி நிற்கச் சைவம்போலவே வைணமும் குன்றியது. ஆறும் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சைவம் மறுமலர்ச்சி எய்தியது போலவே வைணவமும் புத்துயிர் பெறத்தொடங்கியது. திருமால் அடியவர்களும் தம்சமயம் வளர்ப்பதில் தீவிரம் கொண்டனர்.

பின்னர் ஆழ்வார்கள் தோன்றினர். தேவார மூவரைப் போலலே, பன்னிரு ஆழ்வார்களும் திருமால் அழகிலும் குணத்திலும் ஆழ்ந்து நெஞ்சுருகப் பாடினர். அவர்கள் பாடிய நாலாயிரம் பாடல்களையும் பதினொன்றாம் நூற்றாண்டில் 'நாதமுனி' என்பவர் நாலாயிர திவ்ய பிரபந்தம் என்னும் பெயருடைய நூலாகத் தொகுத்தார். பன்னிரு ஆழ்வார்களின் நூல்களே வைணவப் பக்தி இலக்கியங்கள் ஆகும்

முதலாழ்வார் மூவர்: பொய்கையார், பூதத்தார், பேயார் மூவரும் முதலாழ்வார் எனப்படுவர். திருக்கோயிலூரில் ஓர் இல்லத்தில் ரேழியில் நின்றபோது திருமால் வந்து நெருக்கினர் என்பர். இம்மூவரும் சம காலத்தவர். ஆறும் நூற்றாண்டினர் என்னும் கொள்கை வலு வாய்ந்ததாகும். இம் மூவருமே சிவனுக்கும் திருமாலுக்கும் வேறுபாடு கருதாது இருவருமே ஒன்று என்ற கருத்தைப் பாடலில் புலப்படுத்தியுள்ளனர். பிற மத நிந்தனை இவர்களுடைய பாடல்களில் இல்லை. மூவருமே வெண்பாக்களே பாடியிருக்கின்றனர். ஆதலால் பாவினம் பெருகிய ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட வெண்பாக் காலத்தில் வாழ்ந்தவர் என்பது உறுதியாகிறது.

(i) பொய்கையார்: இவர் காஞ்சிபுரத்தவர். இவர் அந்தாதி நூலாகப்பாடிய நூறுபாக்களும் முதல் திருவந்தாதி எனும் பெயரில் உள்ளது. பரிபாடல் வராக அவதாரத்தையும் சிலப்பதிகாரம் கண்ணன் அவதாரத்தையுமே சிறப்பித்துக் கூறியிருக்க, இவரே முதன் முதல் திருமாலின் பத்து அவதாரங்களையும் பாடியிருக்கிறார். கண்ணன் செயல்களும், வாமனாய் வந்து உலகளந்ததும் ஏனமாய் நிலம் அகழ்ந்ததும் இரணியன் மார்பைப் பிளந்ததும் மராமரம் எய்ததும் ஆன அவ

தாரச் செயல்களை அடிக்கடி கூறியுள்ளார். ஐம்புலன்களை அடக்க வேண்டும் என்று பாடியிருக்கிறார். திருவேங்கடத்தை விதந்து பாடியிருப்பதோடு விண்ணகரம். திருவெஃகா, கோவலூர், திருவரங்கம் முதலான திருப்பதிகளையும் கூறியுள்ளார். மலர் கொண்டு தொழுது கையில் தூபமேந்தி நெஞ்சால் வழிபடுவது இவர் காட்டும் பக்தி நெறியாகும்.

**(ii) பூதத்தாழ்வார்:** இவர் கடல் மல்லையில்பிறந்தவர். இவர் பாடிய அந்தாதி வெண்பாக்கள் நூறும் இரண்டாம் திருவந்தாதி என்னும் பெயரில் உள்ளது. 'ஞானத் தமிழ் புரிந்த நான்' என்று முதற்பாட்டில் கூறுதல் இவரது தமிழ்ப் பற்றை விளக்கும். பின்னர் ஓரிடத்தில் தன்னைப் பெருந் தமிழன் என்று குறித்திருக்கிறார். மத வேழம் இளம்பிடி முன் நின்று இள மூங்கிலை ஒடித்து அருகிலிருந்த தேனில் தோய்த்துக் கொடுக்கும் வேங்கடம், என்பதுபோன்ற வருணனைகள் வந்துள்ளன. திருமாலின் பத்து அவதாரங்களையும் பாடியிருக்கிறார். தஞ்சை, அரங்கம், மாமல்லை, திருக்கோவலூர் முதலிய திருப்பதிகளைப் பாடியிருக்கிறார்.

**(iii) பேயாழ்வார் :** இவர்திருமயிலையைச் சார்ந்தவர். இவர் பாடிய அந்தாதி வெண்பாக்கள் நூறும் மூன்றும் திருவந்தாதியாக உள்ளது. மற்றிருவர் பாக்களினும் இவருடைய பாடல்கள் செப்பமான ஓசையும் சிறந்த வருணனைகளும் கொண்டு விளங்குகின்றன. தெளிந்த கல்மேல் இருந்த காதல் மந்தி காதல் ஆண் குரங்கை நோக்கி 'வெண்மதியம் தா' என்று கேட்கும் வேங்கடம் என்பதுபோன்ற வருணனைகள் உள்ளன. கச்சி, விண்ணகரம், திருவெஃகா, வேளுக்கைப்பாடி, சோலை, கடிகை, குடந்தை, அரங்கம், முதலிய திருப்பதிகளைப் பாடியிருப்பதோடு திருவல்லிக்கேணியைச் சிறக்க ஒரு பாடலிலே பாடியுள்ளார். சிந்தையைத் திருமாலின் கோயிலாகக் கொள்ளவேண்டும் என்பது இவரது சிந்தனை வளர்ச்சியைக் காட்டுகிறது. மலைமேல் இருந்தோ, புனலில் குளித்தோ, நெருப்பில் நின்றோ தவம்செய்யாமல், மலர் தூவித் திருமாலைத் தொழுது வழிபடுமாறு தூண்டிப் பக்தி நெறியை வளர்த்துள்ளார்.

**(iv) திருமழிசையாழ்வார்:** இவர் திருமழிசை ஊரினர். 'பார்க்கவர்' என்ற முனிவர்க்கு ஒரு தேவகன்னியின் வயிற்றில் பிறந்து குறவன் மனையில் வளர்ந்தார் என்பர். இவர் தன்னை நாற்குலத்திலுஞ் சாராதவன் என்று குறிப்பிட்டிருக்கிறார். இவர் முதலாழ்வார் மூவர்க்குப் பிற்பட்ட காலத்தவர். ஏழாம் நூற்றாண்டினராதல் கூடும்.

இவர் நூறு வெண்பாக்களை உடைய நான்முகன் திருவந்தாதியையும் 120 விருத்தப்பாக்களைக் கொண்ட திருச்சந்த விருத்தத்தையும் இயற்றியுள்ளார். இவர் பாடல்களில் வைணவக் கருத்துக்கள் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காணலாம். திருமால் மகனான பிரமன் சிவனைப் படைத்தான் என்று கூறியுள்ளார்.

பௌத்த, சமண, சைவ நூல்களை ஆய்ந்தும் அமைதி பெறாமையால் திருமால் அடியாரானதாகக் கூறியிருக்கிறார். திருமாலைத் தெரிந்து எழுதி வாசித்தும் கேட்டும், வணங்கி வழிபட்டும் பூசித்தும் பொழுதுபோக்கினார். 'அறியார் சமணர், அயர்த்தார் பவுத்தர் சிறியார் சிவப்பட்டார்' என்று பிற சமயத்தவரைக் கடிந்துள்ளார். திருமாலை வழிபடாதார் இவருக்குப் பிணச் சமயரே. 'நாக்கொண்டு மானுடம்பாடேன்' என்பது இவர் வைராக்கியம். 'விதையாக நல்ல தமிழ் வித்தி யென்னுள்ளத்தை நீ விளைத்தாய்' என்பது இவர் தமிழ்ப் பற்றிற்கோர் சான்றாகும். 'என்பிலெள்கி நெஞ்சுருகி உள்கனிந்தெழுந்ததோர் அன்பில்'தான் இறைவனைக் காணமுடியும் என்பது இவர் கண்ட பக்திநெறியாகும்.

**(v) பெரியாழ்வார்:** விஷ்ணு சித்தர் என்பது இவரதுஇயற்பெயர். இவர் திருவில்லிப்புத்தூரில் நந்தவனம் வைத்து மலர்மாலை தொடுத்துத் திருமாலுக்குச் சாத்தும் திருப்பணியை மேற்கொண்டிருந்தார். இவரை எட்டாம் நூற்றாண்டினராகக் கொள்வர். மதுரையில் சீவல்லப பாண்டியன் அவையில் திருமாலே முழு முதல் என வாதிட்டுப் பொற்கிழியோடு பட்டர் பிரான் என்ற பட்டமும் பெற்றார் என்பர்.

இவரது பாடல்கள் திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி என்னும் இரு பிரிவினவாகும். திருப்பல்லாண்டு 12 பாடல்களை உடையது. இது வைணவர்களால் நாள்

தோறும் ஓதப்படுகிறது. தான் நந்தவனம் வைத்துத் திரு மாலை வழிபட்டதையும் அந்நாளில் திருமாலடியானாகத் திகழ்ந்த அபிமான துங்கன் என்ற அரசன் பற்றியும் அதில் கூறியுள்ளார். பெரியாழ்வார் திருமொழி 461 பாக்களை உடையது. தன்னை யாசோதையாகவும் கண்ணனைக் குழந்தையாகவும் பாவித்துத் தாயில்லா ஆண்டாளைத் தான் தாய்போல் இருந்து பிள்ளை வளர்த்த அனுபவங்களையெல் லாம் அப்பாக்களில் கொட்டி நிரப்பிப் பாடிய பாடல்கள் கவிதை நயங்கனிந்து இலங்குகின்றன. குழந்தையைத் தாலாட்டல், குழந்தையோடு விளையாட நிலாவை அழைத் தல், செங்கீரையாடல், சப்பாணி கொட்டல், தளர் நடை, சிற்றில் சிதைத்தல் முதலிய பிள்ளைப் பருவங்களை, 'முதல் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம்' என்று கருதும்படி இனிமையுறப் பாடியிருக்கிறார், தாயின் நிலையில் நின்று கண்ணனின் இள மைக் குறும்புகளையெல்லாம் கண்டு இயல்புறக் கற்பனைகள் ஒளிரப் பாடியுள்ளார். திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டி யூர், திருவரங்கம் ஆய திருப்பதிகளைப் பாடியுள்ளார்.

பல்வகைச் சந்தங்களால் இசைநயம் மிகுந்த கலி விருத் தம் முதலான பாக்களில் பக்தியும் அன்பும் பொங்கும். உலக அறிவும் அனுபவமும் சிறந்து விளங்கும். தமிழ்ப் பண்பாடு பழக்க வழக்கங்கள் மிளிரும். கவிதையழகும் கற் பனை நயமும் கனியும்.

(vi) ஆண்டாள் : பெரியாழ்வார் நந்தவனத்தில் கண்டெ டுத்த குழந்தைக்குக் கோதை எனப் பெயர் சூட்டிப் பசுவின் பாலொடு அன்பும் தமிழும் குழைத்தூட்டிக் கவிதைப் பெண் ணாக்கினார். அவள் வாழ்க்கையே கவிதையாயது. திருமாலுக் கிசைந்த மணப்பெண்ணை என்று அறிய அவனுக்குத் தொடுத்த மலர் மாலையைச் சூடி அவள் அழகு பார்க்க, தீட்டுப் பட்டதே யெனப் பெரியாழ்வார் கவலை கொள்ள, அம்மாலையே தமக்கு உவகையளிக்கும் எனத் திருமால் ஏற்றார் என்பர். அதனால் சூடிக்கொடுத்த நாச்சியார் என்று அவளை அழைப்பர். திருவரங்கப் பெருமானையே மணப்பேன் என்று பிடிவாதங் கொண்டு வாழ்ந்த பக்தை அவள்.

திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும் ஆண்டாள் பாடிய நூல்கள். திருப்பாவை முப்பது பாக்களை உடையது. கன்னிப் பெண்கள் நல்ல மணமகன் வாய்க்கவேண்டுமென்று மார்க்கழித் திங்களில் நோற்கும் பாவை நோன்பைப் பாடுவதாக அமைந்துள்ளது. ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் உள்ள கன்னிமகளாகப் பாவித்துக் கண்ணனைக் கணவனாகப் பெறவேண்டி நோன்பு தொடங்கி மார்கழித் திங்கள் வைகறைப்போதில் ஆயர்குலத் தோழியரை எழுப்பி நீராடிக் கண்ணனைக் கண்டு பரிசு பெறுவதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது. கற்பனைச் சுவையும் நாடகப் பாங்கும் தமிழக இயற்கைக் காட்சிகளும் பொருந்தி எளிய சொற்களால் இனிய ஓசை நிரம்பிப் பாடல்கள் பொருள் நலங்கனிந்து விளங்குகின்றன.

நாச்சியார் திருமொழி 143 பாக்களை உடையது. இதில் கண்ணன்மேல் பொங்கிப் பாயும் காதல் அன்பினைப் பல்வேறு நிலையில் புலப்படுத்துகிறார். கேசவநம்பியின் கால்பிடிக்கும்பேறு வேண்டியும் கூடல் இழைத்தும் குயில் மேகங்களைத் தூதுவிட்டும் மற்றும் இவைபோன்ற காதல் துறைகள் வாயிலாகவும் தன் காதல் வெள்ளம் கண்ணன் மீது பாய்தலைக் காட்டுகிறார்.

'மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தர்க்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன்வந் தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்'

என்பது போன்ற இன்பக் கனவுகள் காண்கிறார். திருமாலிருஞ்சோலைப் பெருமாளை வழிபடுவதாயும் திருவரங்கச் செல்வனைக் காதலிப்பதாயும் பிருந்தாவனப் பரந்தாமனைக் காண்பதாயும் பாடியுள்ளார்.

ஆண்டாள் பாடல்கள் காதல் சுவை கனிந்து கவிதை நலம் ஒழுகித் திகழ்கின்றன. ஆண்டாள் வாழ்க்கையே ஓர் ஒப்பற்ற கவிதையாகும். அவ்வாழ்க்கை பாடலில் உருவம் பெற்றுள்ளமையின் பாக்களெல்லாம் இரட்டிப்புக் கவிதை நலத்தோடு இலங்குகின்றன. ஆண்டாள் திருப்பாவை

மாணிக்க வாசகரின் திருவெம்பாவை தோன்றுதற்குக் காரணமாயிருக்கத்தக்க கவிதை நூலேயாகும். கவிதை உலகில் ஆண்டாள் ஒரு தனிப் பெண்பாற் கவிஞரேயாவர்.

**(vii) நம்மாழ்வார் :** இவர் ஆழ்வார் திருநகரியில் காரிஎன் பார்க்கும் உடைய நங்கை என்பாளுக்கும் புதல்வராய்த் தோன்றித் தாய்ப்பால் உண்ணுமல் வளர்ந்து பெருமாள் கோயில் புளிய மரத்தடியில் 16 ஆண்டுகள் தவமிருந்து திருமாலின் அருளைப் பெற்ருர் என்பர். எட்டாம் நூற்ருண்டின் இறுதியிலோ ஒன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலோ வாழ்ந்தாராதல் வேண்டும்.

இவர் பாடிய 1010 பாடல்களும் பெரிய திருவந்தாதி, திரு விருத்தம், திருவாய் மொழி, திருவாசிரியம் என்னும் பகுதிகளாக உள்ளன. இவற்றை நான்கு வேதங்களின்சாரம் என்பர். பெரிய திருவந்தாதியில் இறைவன் தன்மைகளும் அவனை வாழ்த்து முறைகளும் கூறப்பட்டுள்ளன. திருவிருத்தம் அகப்பொருள் துறைகளைக்கொண்டு வெளிப்படையில் சிற்றின்பம் கூறுவதாய்ப் பேரின்ப உள்ளுறைப் பொருள் உடையது. இதனைத் திருக்கோவையாரோடு ஒப்பிடலாம். திருவாய் மொழியின் தொடக்கத்தில் இறைவன் கருணையையும் அவனே வந்து ஆட்கொள்ளுதலையும் கூறிப் பின்னர் அகப்பொருள் துறைகளில் பாடியிருக்கிருர். தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி நாரை, குயில், அன்னம் முதலியவற்றை விளித்துத் தன் மனக்குறையைக் கொட்டும் பாவனையில் பல பாக்கள் பாடியுள்ளார். காதல் நிலையில் நிற்கும் நம்மாழ்வார்க்கு எந்தப் பொருளும் மாயோனுகவும் அவன் கையில் உள்ள பொருளாகவுமே தோன்றுகின்றது. உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் கண்ணனுகத் தோன்றுகிறதாம். அவர் இறைவன் பேரருளைப் பெற்றுத் துய்ப்பதாகப் பாடியிருக்கும் பாக்கள் நெஞ்சத்தை உருக்குவனவாகும்.

நம்மாழ்வார் தமிழ்ப்பற்றும், அகப்பொருள் நூற் பயிற்சியும் உடையவர்; சமயப் பொது நோக்கு வாய்ந்தவர்.

இயற்கையழகில் மிக்க ஈடுபாடு கொண்டவர். வைணவக் கொள்கைகள் இவ்ரால் நிரம்பி நிறைவு பெற்றன.

**(viii)** மதுர கவி ஆழ்வார் : ஒரே பதிகமே பாடியுள்ளார். பாண்டிய நாட்டுத் திருக்கோளூரில் பிறந்தவர். அயோத்திக்குச்சென்று தங்கியிருந்த காலத்தில் நம்மாழ்வாரின் புகழைக் கேட்டுத் திரும்பி வந்து அவருக்குச் சீடரானுர். 'கண்ணி நுண் சிறுதாம்பு' என்னும் பதிகத்தில், தாம் நம்மாழ்வார் மீது கொண்ட பக்தியைப் புலப்படுத்தியிருக்கிருர். நம்மாழ்வார் உருவை வைத்து வணங்கியும் அவர் பாடல் இன்பத்தில் மூழ்கியும் அவற்றை எழுதியும் அவற்றின் பெருமை பேசியும் ஐம்பதாண்டுகள் வைணவத் தொண்டு செய்தார். அவர்க்கு நம்பியின் பெயர் அமுது; அவனையன்றித் தேவு வேறு இகலை. 'அன்னையாய் அத்தனுய் என்னையாண்டவன்' என்பதால் நம்மாழ்வார் இவர் மீது தனியன்பு காட்டினுர் என்று அறியலாம்.

**(ix)** குலசேகராழ்வார் : இவர் சேர அரசர்; சேரமான் பெருமாள் நாயனுருக்குப் பிற்பட்டவர்; ஒன்பதாம் நூற்ருண்டைச் சார்ந்தவர். இராம சரிதத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர். இராமாயணப் பிரசங்கத்தில் அரக்கர் இராம பிரானை வளைந்து கொண்டனர் எனக் கேட்டதும் இராமனுக்குத் துணை புரிய வேண்டிப் போருக்கெழுந்தார் என்பர். இவர், தம் மகனுக்கு முடிசூட்டி விட்டுத் திருவரங்கம், காஞ்சி, திருவேங்கடம் முதலான திருப்பதிகளுக்குச் சென்று பக்தி வழிபாட்டில் மூழ்கி முடிவில் காட்டுமன்னுர் கோயிலில் முத்தி பெற்ருர் என்பர். வித்துவக் கோடு என்ற புதிய திருப்பதியை மிக்க கனிவுடன் பாடியிருக்கிருர்.

இவர் பாடிய 104 பாடல்கள் பெருமாள் திருமொழியாக வைக்கப்பட்டுள்ளன. இவரது பக்தி தனிச் சிறப்பு வாய்ந்தது. பிறரைப் போல் பிறப்பின்மையோ முத்தியோ வேண்டாமல் திருமால் இருக்குமிடத்தில் இருந்து வழிபாடு செய்தால் போதும் என்று பாடியுள்ளார்.

'தேனுர் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனுய்ப் பிறக்கும் விதியுடையே னுவேனே.'

இவர் அரச செல்வங்களைத் துச்சமாகக் கருதினர். வித்துவக் கோட்டுப் பெருமானைப் பற்றிப் பாடிய பாக்கள் உள்ளத்தைத் தொடுவனவாக உள்ளன.

''எங்கும் போய்க் கரை காணு தெறிகடல் வாய்
மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே''

**(X) தொண்டரடிப் பொடியாழ்வார்** : இவரது இயற்பெயர் விப்ரநாராயணர் என்பதாகும். சோழ நாட்டில் உள்ள மண் டலங்குடி இவரது ஊராகும். திருவரங்கத்தில் துளசி வனம் வைத்து அரங்கநாதருக்குப் பணிபுரிந்தார். திருமங்கை ஆழ் வார் காலத்தவராகக் கருதப்படுகிறார். திருவரங்கத்து விலை மகள் வயப்பட்டு வாழ்ந்து, பின் மயக்கம் தெளிந்து மீண்டும் திருமாலுக்கு அடியவராய் வாழ்ந்தார்.

இவர் பாடிய பாக்கள் திருமாலை, திருப்பள்ளி யெழுச்சி என்னும் இரு பிரிவுகளுள் அடங்கும். திருமாலை உருக்கமும் ஓசை நயமும் மிக்க 45 பாடல்களைக் கொண்டது. இந்திர லோகமாளும் சுவையினும் 'அச்சுதா' என்னும் திருமால் நாமச்சுவையே பெரிதெனக் கொண்டார். திருவரங்கப் பெருமானையே பாடியிருக்கிறார். சென்ற சிற்றின்ப வாழ்க் கையை நினைந்து வருந்தி வாழ்வில் கசப்புற்று அரங்கப் பெரு மானை நினைந்து உருகியிருக்கிறார். 'இறைவன் கருத்தாயின் சமணர் சாக்கியர் தலையறுப்பதே கருமம்' என்றார். இழி குலத்தாரேனும் அடியாராயின் தொழவேண்டும் என்றும் சாதியந்தணரேனும் அடியாரைப் பழிப்பாராயின் அவர் புலையர் என்றும் கூறியுள்ளார். திருமாலே கடவுள் என்னும் மதப்பற்று மிக்கவர்.

'திருப்பள்ளி' எழுச்சி என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது. மாணிக்கவாசகரின் திருப்பள்ளி எழுச்சியோடு ஒப்பிட்டின்புறத்தக்கது. காலையிளம் பொழுதில் கமுகம்பாளை விரிதல், எருமை வயலுள் பரவல், வண்டு, பறவை ஒலித்தல் முதலான இயற்கைக் காட்சிகள் விளங்குவதும் வானவர் வந்து தொழுதுசெல்லுதலும் இயல்புற வருணிக்கப்பெற்றுள் ளன. இவருக்குக் கங்கையினும் காவிரி புனிதமானது. திருப்

பள்ளி எழுச்சி, நூல் வகையில் இது முதலிடம் பெறத் தக்கது.

**(xi)** திருப்பாணாழ்வார் : உறையூரில் பாணர் குலத்தில் பிறந்தவர். இவரது காலம் தெரியவில்லை. 'இழி குலத்தா ரேனும் அடியாராயின் தொழ வேண்டும்' என்று தொண்ட ரடிப் பொடியாழ்வார் கூறியது இவரைக் குறிப்பிடுவதாகக் கொள்வர். இவர், தம் குலத்தாழ்வு கருதி அஞ்சித் திருவ ரங்கக் கோயிலினுள் புகாமல் காவிரிக்கரைமேல் கோயில் நோக்கி நின்று அரங்கப் பெருமானை வழிபட்டு வந்தார். இவரது பக்தியின் பெருமையை உலகோர்க்கு உணர்த்த வேண்டி, இவரைத் தோள்மேலேற்றிக் கோயிலுக்குள் கொண்டு செல்லுமாறு திருவரங்கப் பெருமான் அர்ச்சக ருக்கு ஆணையிட்டார் என்பர்.

இவர் பத்துப் பாடல்களே பாடியுள்ளார். அப்பாடல் களில் திருமாலின் கமல பாதம், சிவந்த ஆடை, எழில் உந்தி, திருவயிறு, உலகு கண்ட கழுத்து, செய்ய வாய், பெரிய கண்கள், நீலமேனி ஆகியவற்றின் அழகில் சொக்கிய காதல் நெஞ்சினராய் நின்று பாடியுள்ளார்.

**(xii)** திருமங்கையாழ்வார்: இவர்கலியன் என்றபெயரினர், சோழநாட்டினர். சோழ மண்டலத்துத் திரு ஆலி நாட்டில் சேனைத் தலைவனுக்குப் புதல்வனாய்த் தோன்றினார். சோழ னுக்குப் படைத்தலைவனாகவும் திரு ஆலி நாட்டிற்குச் சிற்றர சனாகவும் விளங்கினார். வைணவ நங்கையை மணந்து வாழும் நாளில், சோழனுக்குரிய பொருளையும் திருமாலடியார்க்குச் செலவிட்டமையால் சிறைப்பட்டுப் பின் விடுதலை பெற்றார். வழிப்பறி செய்தேனும் அடியவர்க்கு விருந்தூட்டத் தவற வில்லை. திருமாலும் திருமகளும் கணவன் மனைவிபோல் வழி நடந்து வந்து வழிப்பறி செய்த திருமங்கை யாழ்வார்க்குத் தம்மை உணர்த்தித் திருவருள் புரிந்தனர் என்பர்.

இவர் பாடிய 1000 பாடல்களும் சிறிய திருமடல் பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற் றிருக்கை, பெரிய திருமொழி என்னும் பகுதிகளாக உள்ளன. காதல் கைம்மிகுந்து கைகூடாத நிலையில் மடலூர்

தல் ஆடவர்க்கே உரியது எனினும் திருமங்கையார் அதனைக் காதலிக்குரியதாக்கி, மடலூரும் காதலி நிலையில் நின்று பெருமானையும் அவர் திருப்பதிகளையும் பாடுகிறார். இவற்றில் சங்க இலக்கியச்சுவையும் அழகும் ததும்புகின்றன.

ஆழ்வார் தம் பாடல்களில் தம் வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைக் கூறியிருக்கிறார். திருமாலே மேலான தெய்வம் என்பது அவர் கொள்கை. உயர்வு நவிற்சியின்றி இட வருணனைகளை இயல்புறக் காட்டியிருக்கிறார். பல திருப்பதிகளை விரியப் பாடியிருக்கிறார். சங்க நூல் பயிற்சியோடு தமிழ்ப்பற்றும் விளங்கப் பாடிய திருமங்கையார் பெரும் புலவர் வரிசையிலே இடம் பெறத்தக்கவர் ஆவர்.

சைவ வைணவப் பக்தி இலக்கியங்கள் தமிழில் மறு மலர்ச்சியைத் தோற்றுவித்தன. இருண்ட காலத்தில் ஒதுக்கப்பட்ட அகப்பொருள் மீண்டும் உயிர் பெற்றது. புதிய பாவினங்கள் தோன்றின. பல்வகைச் சந்தங்கள் பல்கின. தமிழ் மீண்டும் வாழ்வோடு ஒன்றியது. எழுச்சி யூட்டியது. மக்கள் வாழ்க்கையில் நம்பிக்கை மிகுந்தது. புதிய சிந்தனைகள், கருத்துக்கள் முதலியவற்றால் தமிழ் வளம் எய்தியது.

## 3. பன்னிரு திருமுறைகள்

இராசராச சோழ மன்னனின் வேண்டுகோளுக்கிணங்கி நம்பியாண்டார் நம்பி என்பவர் சைவ சமய நூல்களை யெல்லாம் பன்னிரு திருமுறைகளாக வகுத்தார். சம்பந்தர் தேவாரப்பாக்கள் முதல் மூன்று திருமுறைகளாக அமைக்கப் பெற்றன. அப்பர் தேவாரப் பாக்கள் அடுத்த மூன்று திருமுறைகள் ஆயின. சுந்தரர் தேவாரம் ஏழாம் திருமுறையாகவும் மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகவும் அமைக்கப் பெற்றுள்ளன.

திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர், சேந்தனார், பூந்துருத்தி நம்பி, காடவ நம்பி, கண்டராதித்தர், வேணாட் டடிகள், திருவாலியமுதனார் புருடோத்தம நம்பி, சேதி

ராயர் ஆய ஒன்பது பேர் பாடல்களும் ஒன்பதாம் திருமுறையாக உள்ளன.

திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக அமைக்கப்பெற்றுள்ளது.

திருவால வாயுடையார் திருமுகப்பாசுரமும், காரைக்காலம்மையார், ஐயடிகள், காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனுர், நக்கீரதேவர், கல்லாட தேவ நாயனுர், கபிலதேவ நாயனுர், பரணதேவர், இளம்பெருமாணடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பி ஆண்டார் நம்பி ஆகியோர் பாடல்களும் பதினோராம் திருமுறையாக அமைக்கப் பெற்றுள்ளன.

சேக்கிழார் பாடிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக வைக்கப் பெற்றுள்ளது.

# சோழர் காலம்

## 1. ஐம்பெருங் காப்பியங்கள்

பெருங்காப்பிய வளர்ச்சி : நன்னூல் மயிலைநாதர் உரையில் ஐம்பெருங்காப்பியம் என்னும் தொடர் ஆளப் பெற்றுள்ளது. ஆனால் இப்பெருங்காப்பியப் பகுப்பு எப்போது யாரால் காணப்பட்டது என்பது தெரியவில்லை. சிறந்த பெருங்காப்பியமான கம்ப ராமாயணம் இப்பகுப்பில் இடம் பெறவில்லை. கம்ப ராமாயணம் தோன்று முன்னர் இப்பகுப்புக் காணப்பட்டாலுங்கூடப் பெருங்கதை விடப் பட்டதற்குக் காரணம் விளங்கவில்லை.

முதல் பெருங்காப்பியமான சிலப்பதிகாரம் தமிழகத்தைக் கதைநிகழ் களனாகக் கொண்டு தமிழ்க் கதையினைத் தமிழ் மரபுகளின் அழகு கொழிக்கப் பாடிச் செல்கிறது. ஆனால் மணிமேகலையோ தமிழகத்தைக் களனாகவும் தமிழ்க்கதையையும் கொண்டிருந்தாலும் பௌத்த சமய வழி நின்று சமயக் கொள்கைகளையும் அறக்கருத்துக்களையும் பாடுவதில் அமைந்து விட்டது. வடநாட்டுக் கதையான பெருங்கதை தமிழ் மரபு திணிக்கப் பெறாமல் மொழிபெயர்ப்புக் காப்பியம் என்னும்படி அமைந்து, ஐம்பெருங் காப்பியப் பகுப்பில் இடம் பெறாமலே நிற்கிறது.

ஐம்பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆதிக் காப்பியங்கள் ஆகும். இரண்டும் சங்க மருவிய காலத்தில் சமகாலப் புலவர்களால் இயற்றப் பெற்றவை. ஆசிரியப்பாவால் இயன்றவை. தமிழ்க் கதைகளைக் கொண்டவை.

இவற்றிற்கும், பின்னர்த் தோன்றிய மூன்றிற்கும் இடையே சில நூற்றாண்டுகள் கழிந்திருத்தல் வேண்டும்.

இடையே சில நூற்ருண்டுகள் காப்பியப் புலவரின்றியே கழிந்தன.

ஐம்பெருங்காப்பியங்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் வரிசையில் வைக்கப்பெற்றுள்ளன. காப்பிய நயங்கருதி அமைக்கப் பெற்ற அமைப்பு முறை போலும். சிந்தாமணி, காப்பியத் தலைமை தோன்ற முதலிடத்தில் வைக்கப் பெற்றுள்ளது. காலத்தால் முந்தியும் காப்பியப்பண்பால் சிந்தாமணிக்கு அடுத்தும் விளங்கும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரண்டாம் மூன்ரும் இடத்தைப் பெற்றுள்ளன. மற்றிரண்டு காப்பியங்களான வளையாபதியும் குண்டலகேசியும் சிந்தாமணிக்கு முற்பட்டனவாதல் வேண்டும்.

(i) குண்டலகேசி: ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருக வைத்துக் கூறப் பெற்றுள்ளது. 19 செய்யுட்களே கிடைத்துள்ளன. பிற பாடல்களெல்லாம் செல்லுக்கிரையாகிப் போய்விட்டமையால், இதனைப் பற்றி விளக்கமாக அறிய வழி இல்லை. ஆயினும் இதற்கு எதிர்க் காப்பியமாகத் தோன்றிய நீலகேசியும் அதன் உரையும் இதனைப் பற்றி அறிவதற்குரிய சில குறிப்புக்கள் கொண்டுள்ளன.

குண்டலகேசி என்ற வணிகக்கன்னியே காப்பியத்தலைவி ஆவள். மாளிகை மேல் மாடியில் நின்று விளையாடும் குண்டலகேசி, சிறைப்பட்டுக் கொலைக்களம் நோக்கி நடந்து செல்லும் கள்வஞன காளனைக் கண்டு காதல் கொள்கிருள். இதை அவள் தந்தை அறிந்து அரசனை அணுகி அக்காளனை விடுவித்து அவனைத் தன் மகளுக்குத் திருமணம் செய்து வைக்கிருன். குண்டலகேசி ஊடற் சினத்தில் காளனைக் கள்வன் என்றேசி விடுகிருள். அவன் அவளை வஞ்சித்துக் கொல்லச் சமயம் பார்த்திருக்கிருன். 'வித்தை பயிற்றுகிறேன் வா' என்று அவளைத் தனியே அழைத்து மலைமேல் ஏறி உச்சி அடைந்தபோது கொல்லப் போவதாகக் கூறுகிருன். 'உம்மை வலம் சுற்றி வணங்கிச் சாவேன்' என்றுரைத்து அவனைச் சுற்றுவதுபோல் வந்து தள்ளிக் கொன்று விடுகிருள். பின்னர் மன வெறுப்புற்று வாழ்வைத்துறந்து

புத்தமதம்புகுந்து பிறசமயத்தவரையும் சமணரையும் வாதில் வென்று தன் சமயம் பரப்பினுள். இவ்வரலாறு நீலகேசியின் உரை மூலம் வெளிப்பட்டுள்ளது.

இது பௌத்த சமயக்காப்பியமாகும். மணிமேகலையைப்போல, ஒரு பெண்ணைத் தலைவியாகக் கொண்டுள்ளது. ஆனால் இங்கு வஞ்ச வஞ்சி மனம்மாறி வாதில் வல்லவளாகி புத்த சமயம் பரப்பும் பெரும் தலைவி ஆகிருள். நாடகப் பாங்குடன் கதைச்சுவையும் பெற்றிருந்தும் இக்காப்பியம் அழிந்தமைக்குக் காரணம் விளங்கவில்லை. சமண சமயத்தைப் பழித்துரைக்கும் சொற்போர் நூலாதல் வேண்டும். சமண நீலகேசி, இதற்கு எதிர் நூலாகத் தோன்ற வேண்டிய அளவுக்கு இதில் சமண் பழிப்பும் பௌத்த விளக்கமும் இருந்திருத்தல் வேண்டும்.

குண்டலகேசியின் செய்யுட்களாக 19 பாடல்களே வெளிவந்துள்ளன. இவை போக 99 செய்யுட்களின் முதல் நினைப்புக்கள் நீலகேசி உரையில் காணப்படுகின்றன. குண்டலகேசி விருத்தப்பாக்களால் இயன்ற காப்பியமேயாகும்.

வகையெழில் தோள்க ளென்றும்
மணிநிறக் குஞ்சியென்றும்
புகழெழ விகற்பிக் கின்ற
பொருளில் காமத்தை மற்றோர்
தொகை யெழுங் காதல் தன்னல்
துய்தியாம் துடைத்துமென்பார்
அகையழ லழ்வந் தன்னை
நெய்யினுல் அவிக்க லாமோ?

காம ஆசையை இன்ப நுகர்ச்சியால் அவித்துவிட முடியாது என்னும் உண்மை இப்பாட்டில் வெளிப்படுகிறது. இக்காப்பியம் புத்த சமய அறங்களும் பிற சமய வாதங்களும் கொண்டது என்பது நம்பத்தக்கதேயாகும்.

**( i) வளையாபதி:** இது சமணப் பெருங்காப்பியமாகும். புறத்திரட்டினின்றும் உரையாசிரியர் மேற்கோள்களிலிருந்தும் வளையாபதிப் பாடல்களாக 72 பாடல்களே வெளிப்படுத்தப் பட்டுள்ளன. இது விருத்தப் பாக்களால் அமைந்து செய்யுள்

அழகு நிரம்பிய இனிய காப்பியமாதல் வேண்டும். இதற்கு, தக்கயாகப் பரணியின் உரையாசிரியர் 'ஒட்டக் கூத்தர் கவி யழகு வேண்டி வளையாபதியை நினைந்தார்' என்று கூறி யிருத்தல் சான்ருக உள்ளது. அடியார்க்கு நல்லார், இளம் பூரணர், அரும்பத உரையாசிரியர் முதலானேர் இதன் செய்யுட்களை மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளன ராதலால் இது தமிழ்ப்புலவரால் விரும்பப் பெற்ற காப்பியம் என்பது தெளிவாகிறது. 'உரையாசிரி யர்கள் காலம் வரை இது சிதைவின்றி நன்னிலை யில் இருந்திருக்க வேண்டும். வைணவரும் சைவரும் பிறசமய இலக்கியங்களைப் பயில்தல் மாபெரும் பாவம் என்றெண்ணிய பிற்கால இறுதியில் இது பேணிப் பயில்வாரின்றி அழிந்தது போலும். இதனைச் சிந்தாமணிக்கு முற்பட்டதாகக் கொள் வதில் தவறு இல்லை.

கதை தமிழகத்தையே களனுகக் கொண்டுள்ளது. நவ கோடி நாராயணன் என்ற வணிகன் அயல்குலப் பெண்ணை மணந்து உற்ருர் வெறுப்பிற்கஞ்சி அவளைக் கைவிட்டு வெளி யேறிப் பொருள் சேர்த்து வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் வணிக நங்கையை மணந்து வாழ்கிருன். கைவிடப்பட்ட காரிகையின் வயிற்றில் பிறந்த மகன் வளர்ந்து தந்தையைக் கண்டறிந்து வணிகச் சான்ருேரின் ஆதரவைத் திரட்டுகிருன். அவைச் சான்ருேர் இவன் வணிகன் மகனே என்று வழக்கில் தீர்ப்பு வழங்கத் தந்தையுடன் தாயைக் கூட்டுகிருன். இது இயல்பான கதையாக உள்ளது.' சுவையானதாகவும் அமைக்க முடியும். ஆயினும் எப்படியோ இக்காவியம் அழிந்து பட்டது. நெஞ்சறிவுறூஉ என்னும் துறையாக அமைந்து, பொருள் நயங்கனிந்து இனிய ஓசை ஒழுகிச் சிறந்து விளங்கும் பாடலைப் பாருங்கள்

நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலம் குயின்ற குழல்வாழி நெஞ்சே
கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையும்
கானக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே
காலக் கனலெரியின் வேவன கண்டாலுஞ்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே

(iii) சீவக சிந்தாமணி: ஐம்பெருங் காப்பியங்களில் காலத்தால் பிந்தியதேனும் சிறப்புக் கருதி முதல் இடம் தரப்பெற்றது. விருத்தப் பாக்களால் அமைந்து, காப்பிய நலங்களெல்லாம் திரண்டு கனிந்து நிரம்பப்பெற்ற பெருங்காப்பியம் ஆகும். இதன் ஆசிரியரான திருத்தக்க தேவர் சோழ அரச மரபினர். இளமையில் பல கலைகளையும் கற்றுப் புலமை கைவரப் பெற்று அருந்துறவில் திளைத்த இளந்துறவி. சமண முனிவர் தமிழ் அகப் பொருட் பெருமையை உணரார் என்பதாகவும் வாயளவில் மட்டும் தமிழ்போற்றுவர் என்பதாகவும் நிலவிய கருத்தைத் திருத்தியமைக்க வேண்டிப் பாடப் பெற்ற பெருங்காப்பியமாதல் வேண்டும்.

இக்காப்பியம் தோன்றிய காலம் ஒன்பதாம் நூற்றுண்டு என்பர். பத்தாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இயற்றப் பெற்றது என்றும் கூறுவர். வடமொழியில் க்ஷத்திர சூடாமணி முதலான ஆறு நூல்கள் சீவகன் வரலாற்றைக் கூறுகின்றன. சமணர்கள் க்ஷத்திர சூடாமணியே சீவக சிந்தாமணிக்கு முதனூல் என்பர்.

இக்காப்பியத்தின் 3145 பாடல்களும் 13 இலம்பகங்களாக அமைந்துள்ளன. ஏமாங்கத நாட்டு மன்னனை சச்சந்தன் விசயையை மணக்கின்ருன். அவள் அழகில் மயங்கி ஆட்சியைக் கட்டியங்காரனிடம் ஒப்படைக்கிருன். அக்கயவன் அரசனைக் கொல்வதற்கு எழவே, மயில் பொறி ஏறிச்சென்ற விசயை சுடுகாட்டில் சீவகனைப் பெற்றெடுத்துப் பின் தவப் பள்ளி செல்கிருள். சீவகன் கந்துக்கடன் வீட்டில் வளர்ந்து காளையாகி ஆநிரை மீட்டுக் காந்தருவதத்தையை வீணைப் போரில் வென்று மணக்கிருன். மற்றும் குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி இவர்களை மணந்து இறுதியில் மாமன்மகளை மணந்து கட்டியங்காரனைக் கொன்று நாட்டை மீட்டு நல்லாட்சி நடத்துகிருன். முடிவில் துறந்து கடுந்தவம் புரிந்து முத்தி எய்துகிருன்.

திருத்தக்க தேவர் சீவகன் கதையைத் தம் காப்பியத்திற்குக் கதையாகத் தேர்ந்தமைக்குக் காரணம் தெரியவில்லை. ஆனல் இக்கதை அடிப்படையில் பெருங்கதையின் தலைவனை

உதயணன் கதை போன்ற அமைப்புடையது. உதயணன் மலையடிவாரத்தில் பிறக்க, சீவகன் சுடுகாட்டில் பிறக்கிறுன். இருவருமே பல மனைவியரை 'மணக்கின்றனர். முடிவில் துறந்து தவம் செய்கின்றனர். ஆனல், சீவகன், உதயணன் போல் மொழிபெயர்ப்புப் பாத்திரமாக இல்லாமல், தேவரின் நெஞ்சத்தில் தோய்ந்து கிடந்து அவரது இதயச் சாயல் உடையவனுக வெளிப்படுகிறுன். தேவரின் படைப்பாகவே விளங்குகிறுன். வடமொழிக் கதையின் தழுவல் என்ற உணர்வு கற்பார்க்குத் தோன்ருதபடி கதை நிகழ்ச்சிகள் எல்லாம் அமைக்கப்பெற்றுள்ளன. சீவக சிந்தாமணியின் சிறப்புக்கு இஃதோர் காரணமாகும்.

சிந்தாமணி மணிமேகலையைப் போலவே, சமயம் பரப்புதலை வெளிப்படையாகக் காட்டுகிறது. சீவகன் சமண நெறியைக் குறையெதுவுமின்றிப் பின்பற்றுகிறுன். அவன் அருகக் கடவுளை அன்ருடம் வழிபடுதலும் இருள் கவியுமுன் உண்ணல் போன்ற சமணப் பழக்கங்களைக் கடைப்பிடித்தலும் காட்டப்படுகின்றன. சித்திரகூட முனிவர்க்கே அன்றிக் குன்றவேடர், வழிப்போக்கன் போன்றவர்களுக்கும் சமண அறம் கூறுகிறுன். சீவகன் சமண நெறியைப் பரப்புதலைக் குறிக்கோளாகக் கொண்டாலும் தேர்ந்த கலைஞனுய் விளங்கிப் பலகலை நலங்களைப் பரப்புகின்ற காரணத்தால் சீவக சிந்தாமணி தலைசிறந்த காப்பியமாகியுள்ளது. கலை 'அழகு ஊடே சமணக் கருத்தினைக் கூறுவதால் கருத்தும் எழில் பெறுகிறது. முடிவில் சமண சமயக் கருத்துக்களை எல்லாம் முத்தியிலம்பகத்தில் தொகுத்து வெளியிட்டிருக்கிறுர். சமயக் காப்பியம் என்று ஒதுக்க முடியாத ஒப்பற்ற பெருங்காப்பியமாகப் படைக்கப் பெற்றுள்ளது.

திருத்தக்க தேவர் சிலப்பதிகாரத்தைப் பின்பற்றித் தமிழ் மரபுகளுக்குத் தம் காப்பியத்தில் உயிர் கொடுத்துள்ளார். சீவகன் கன்னிப்போரான ஆநிரை மீட்டல், அவன் கட்டியங்காரனேடு செய்த போர் முதலியவற்றில் தமிழ்ப்போர் முறைகளே காட்டப்பெற்றுள்ளன. அவன் திருமணங்களால், தமிழ் அகப்பொருள் புதிய கற்பனையுடன் மறுமலர்ச்சி

பெற்றுள்ளது. யாழ்ப் போட்டியால் இசைத் தமிழும், தேசிகப் பாவை கூத்து, சுதஞ்சணன் நாடகம் ஆகியவற்ருல் நாடகத் தமிழும் புதுப் பெருமை எய்தியிருக்கின்றன. தமிழகத்தின் கலைகளெல்லாம் சிந்தாமணியில்காட்டப்படுகின்றன. யானை யேற்றம், குதிரையேற்றம், நச்சுக்கடி தீர்த்தல், மாலை கட்டுதல், ஓவியம் தீட்டல், ஒப்பனை செய்தல், பந்தாடல் போன்ற பற்பல கலைகளுக்கும் இப்பெருங்காப்பியம் உறைபதியாய் உள்ளது. தமிழர் அரசியல், தமிழ்ப் பண்பு, தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்கள் ஆங்காங்கே அழகுசெய்கின்றன. சீவகன் துறவும் தமிழ்த் துறவாகவே உள்ளது. இவ்வாறு தமிழ் வாழ்க்கையின் அழகையெல்லாம் கொண்டு, சிந்தாமணி தமிழ் வரலாற்றில் தன்நேர் இல்லா தனிப்பெருங் காப்பியமாக இலங்குகிறது.

அக்காலத்தில் சைவ,வைணவப் பக்திகள் தழைத்தோங்கியிருந்தன. தேவர் அப்பக்தி நெறியைத் தன் காப்பியத்தில் பயன்படுத்தத் தவறவில்லை. ஆழ்வார், நாயன்மார் போலவே, சீவகன் செல்லுமிடமெல்லாம் அருகனைப் பாடிப் பரவி உருகுகிருன். அருகன் அடியில் மலரிட்டு வழிபாடும் வணக்கமும் செய்கிருன்.

ஆண்மை நலமெலாம் திரண்ட ஓர் ஆண் மகனைக் காப்பியத் தலைவனுக்கியுள்ளார். சங்க இலக்கிய இயற்கை அழகுகளையும் மற்றும் தமிழ் இலக்கிய நயங்களையும் தம் காப்பியத்தில் எடுத்தாண்டுள்ளார். பழைய மரபில் நின்று பாடியதோடு புதிய கற்பனைகளையும் வருணனைகளையும் படைத்துள்ளார். பாத்திரப் படைப்பு, சொல்வளம், சந்த இன்பம், நாடகப்பாங்கு, சுவையுணர்ச்சி, செய்யுள் நலம், கருத்துத் திட்பம் முதலான அழகுகள் எல்லாம் நிறைந்து காலத்தால் மங்காத வருணனைகள் கொண்டு காப்பியச் சுரங்கமாய் உள்ளது. கம்ப ராமாயணத்திற்கு வழிகாட்டியாய் உள்ளது. சுருங்கக் கூறின், சிந்தாமணி தமிழின் பழைய அழகுகளை நிறைத்து வைத்துப் பற்பல புதுமை எழில்களும் காட்டிப் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாயும் புதுமைக்கு வழிகாட்டியாயும் விளங்கும் பெருங் காப்பியமாகும்.

## 2. ஐஞ்சிறு காப்பியங்கள்

பெருங் காப்பியத்தினின்று சிறு காப்பியத்தை வேறு படுத்துவதற்குத் தெளிவான வரையறைகள் இல்லை. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள் ஒன்றிரண்டு விடுபட அமைக்கப் பெற்றதனைச் சிறு காப்பியம் என்பர். ஆனால் செய்யுள் அளவில் குறைந்ததைச் சிறு காப்பியம் எனக் கொண்டனர் என்பதாகவே தோன்றுகிறது. சிறு காப்பியம் ஐந்து எனப் படுதலும் வலிந்து கொள்ளப்பட்ட வகுப்பாகவே தோன்றுகிறது. சிறு காப்பியங்கள் எனப்படும் ஐந்தும் சமணக் காப்பியங்களாகும். சூளாமணி, நீலகேசி, உதயணன் கதை, யசோதர காவியம், நாககுமார் காவியம் என்பன ஐஞ்சிறு காவியங்களாகும்.

**(i)** சூளாமணி : தோலா மொழித் தேவரால் இயற்றப் பெற்றது. சிந்தாமணிக்குப் பிற்பட்டுப் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது என்பர். இது பன்னிரண்டு காண்டங்களாய் 2131 விருத்தப் பாக்களைக் கொண்டுள்ளது.

சுரமை நாட்டை ஆண்ட 'பயாபதி' என்ற மன்னனுக்குப் புதல்வனான திவிட்டன், அச்சுவகண்டன் என்ற வித்தியாதர மன்னனை வென்று, அவ்வெற்றியின் பயனாகச் சுயம்பிரபை என்ற வித்தியாதரப் பெண்ணை மணக்கின்றான். தன் தந்தை துறந்து செல்லவே, தன் தமையன் விசயனோடு நல்லாட்சி புரிந்தான். மாபுராணத்தில் உள்ளதுபோல் இக்கதை கூறப்பட்டதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். தமிழுக்குரியவனான சேந்தன் என்ற மன்னன் அவையில் இது அரங்கேற்றப் பெற்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது: கதை விண்ணுலகத்தோடு தொடர்புடையதாய் அமைந்துள்ளது. தமிழ் மரபுகள் இன்றி வெறும் மொழி பெயர்ப்புக் காவியமாக அமைந்து சமணக் கொள்கைகள் விளக்கப் பெற்றுள்ளன.

**(ii)** நீலகேசி : இது நீலகேசித் தெருட்டு எனவும் வழங்கப்பெறும். இதன் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. இது குண்டலகேசிக்கு எதிர் நூலாக எழுந்தது என்பது இந் நூலாலும் உரையாலும் வெளிப்படுகிறது. இது பத்துச் சருக்கங்களாய் 894 பாக்களைக் கொண்ட சமணக் காப்பிய

மாகும். ஆசிரியர், 'இந்நூலின் கதையினைக் கனவில் கண்டேன்' என்பதால் இக்காப்பியத் தலைவி ஆசிரியரின் கற்பனைப் படைப்பே யாவள். அவள் வாதங்களும் வெற்றிகளும் ஆசிரியரின் கற்பனைகளே!

சுடுகாட்டு முனிவரை மயக்கிக் கொல்ல வந்த பேய்ப் பெண் அம்முனிவரால் மனந் தெளிந்து சமணம் உணர்ந்து பௌத்தக் குண்டலகேசியையும் அவளது குருவான அருக்க சந்திரன், அவனுக்குக் குருவான மொக்கலன், அம்மொக்கலனுக்குக் குருவான புத்தன் முதலிய பௌத்தர்களையும் பிற சமய அறிஞர்களையும் வாதாடி வென்று சமணத்திற்குத் திருப்புவதாய் அமைந்துள்ளது. ஆசிரியர் தம் காப்பியத்தில் பிற சமயக் கொள்கைகள் பொய்யானவைஎன்றுகாட்டுகிறார். காப்பியம் நகைச்சுவை மலிந்த கற்பனையான அமைப்புக்களைக் கொண்டு விளங்குகிறது. ஆசிரியரின் கற்பனைத் திறன் சிறந்து விளங்குகிறது. ஆசிரியர் தமிழ்நாட்டுப் பற்று மிக்கவர் என்பதும் விளங்குகிறது. காப்பியத் தலைவி தென் திசை நீலகேசியாகிறாள். அவளும் உறையூர் அருகனையே வணங்குகிறாள். இவர் சோழ நாட்டுப் புலவர் போலும்.

இதற்குச் சமய திவாகர வாமன முனிவர் எழுதிய பழைய உரை உள்ளது. இவர் பல சமயக் கொள்கைகளையும் தெள்ளத் தெளியத் தெரிந்தவராகக் காணப்படுகிறார்.

**(iii)** உதயண குமார காவியம் : இதனைப் பாடிய புலவர் யார் என்பது தெரியவில்லை. இதனைக் கொங்கு வேளிர் பாடிய 'பெருங்கதையின்' வழி நூலாகக் கொள்ளலாம். பெருங்கதையில் விரிவாகக் கூறப்படும் உதயணன் கதை புலவர்கட்கே பயன்படும் என்று, எளிதில் அக்கதையை எல்லோரும் அறிதல் வேண்டும் என்பதற்காக 367 விருத்தப்பாக்களில் சுருக்கிப் பாடப்பெற்றதுபோல் தோன்றுகிறது. இந்நூலில் காப்பியச் சுவைகளோ பாநலங்களோ காணப்படவில்லை.

**(iv)** யசோதரகாவியம் : இதனைப் பாடிய புலவர் எவர் என்பது தெரியவில்லை. இது ஐந்து சருக்கங்களாய் 330 பாக்களைக் கொண்டுள்ளது.

இராச மாபுர மன்னன் காளி தேவிக்கு உயிர்ப் பலி செலுத்த வேண்டி, இரு சமணத் துறவிகளைக் கொண்டு செல்ல, அவ்விருவரும் யசோதரன் என்னும் உச்சயினி மன்னனின் பழம் பிறப்புணர்த்தி, உயிர்க் கொலையைக் கடிந்ததாக இந்நூல் அமைந்துள்ளது.

இக்கதை வடமொழியில் உள்ள உத்தர புராணத்தினின்று எடுக்கப்பட்டது. இந்நூலில் சிற்றின்பத்தின் சிறுமை விளக்கப்படுகிறது. இசை காமத்தைத் தூண்டும் என்று கடியப்படுகிறது. காமத்தின் விளைவை விளக்கிப் பேரின்பத்தின் பெருமையையும் ஒழுக்கத்தின் உயர்வையும் வற்புறுத்திக் காட்டுகிறது. இந்நூல் 11—ஆம் நூற்றாண்டிற்குப் பிற்படத் தோன்றியது என்பர்.

(V) நாக குமார காவியம் : இந்நூல் பற்றியோ இதன் ஆசிரியர் பற்றியோ எதுவும் தெரியவில்லை.

ஐஞ்சிறு காப்பியங்கள் எல்லாமே சமண நூல்களாகும். இவற்றுள் சூளாமணி நீங்கலாக மற்ற நான்கும் இலக்கியச் சுவையற்றவை. ஆனால் நீலகேசி சுவையான கதை அமைப்பைக் கொண்டுள்ளது. ஆயின் அது கொள்கை விளக்க நூலாக நின்றுவிட்டது. சைவரும் வைணவரும் பற்பல பாடல்களும் நூல்களும் பாடித் தம் சமயத்தைப் பரப்பியது கண்டு, சமணரும், தம் சமயக் கொள்கை பரப்புவதற்காக இச்சிறு காவியங்களைப் படைத்தனராதல் வேண்டும்.

## 3. சைவ, வைணவக் காப்பியங்கள்

ஐம்பெருங் காப்பியங்களுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம். வளையாபதி மூன்றும் சமணக் காப்பிபங்கள். மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்தக்காப்பியங்கள், காப்பிய வளர்ச்சியிலே சிந்தாமணி முடிநிலையாகி விட்டது. அதுவே தமிழ் அன்னைக்கு மணிமுடி போலும் அமைந்து விட்டதோடு காந்தக் காப்பியமுமாகி விட்டது. கற்பவர் நெஞ்சத்தை ஈர்க்கும் கவர்ச்சியாற்றல் நிரம்பியிருந்தது. காப்பியச்சுவையிலே ஈடுபட்டாரைக் கருத்துச்சுவையும் ஆழ்த்தும்படியாகக் காந்தத்தின் ஈர்ப்பாற்றல் கொண்டு ஓர் ஆற்றலாக விளங்

கியது. பக்திப் பாக்களிலே மூழ்கியிருந்த சைவரும் வைண வரும் தத்தம் சமயத்திற்கு ஓர் காப்பியம் தோன்ருதா என்று எதிர்நோக்கினர். சிந்தாமணிக்குப் பின் மூன்று நூற் ருண்டுகட்குப் பிறகு சைவத்திற்கோர் பெரிய புராணமும் வைணவத்திற்கோர் கம்பராமாயணமும் தோன்றின. இவ் விரண்டு பெருங்காப்பியங்களும் தோன்றுவதற்கு முன்னரே ஐம்பெருங்காப்பியப் பகுப்புக் கண்டனர் போலும். இவை யிரண்டும் அப் பகுப்பில் இடம் பெருமைக்கு வேறு காரணம் கூறினுல் ஏற்கத் தகாத காரணமாகும்.

(i) பெரியபுராணம் : இது சேக்கிழாரால் பாடப்பெற்ற பெருங்காப்பியமாகும். தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் பிறந்தவர். இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதா கும். இரண்டாம் குலோத்துங்கனுக்கு (1133-1150) அமைச்சராய் விளங்கி ‘உத்தம சோழப் பல்லவன்’ என்ற பட்டம் பெற்ருர். பெரிய புராணம் பாடித் ‘தொண்டர்சீர் பரவுவார்’ என்ற சிறப்புப் பட்டமும் பெற்ருர்.

சிந்தாமணிச் சுவையில் ஆழ்ந்திருந்த சோழ மன்னனுக்கு சிவபக்தி யூட்டுவதற்காக இக்காப்பியம் பாடப் பெற்றது என்பர். உற்று நோக்குவார்க்கு இது உண்மையாதல் கூடும் என்றே தோன்றும். ஆண்மைக்கு இலக்கணமாயும் ஆண்மக னுக்கு ஒரே எடுத்துக்காட்டுமாயும் இலங்கும் சீவகனைக் காப் பியத் தலைவனுகக் கொண்டு தமிழ் மணமும் சமண மணமும் இணை கலந்து கமழத் திகழ்ந்த சிந்தாமணிப் பெருங்காப்பியச் சுவையில் ஆழாதார் சுவையறியாதாரேயாவர். சைவ மன்னன் மட்டுமல்லன். தமிழ் உலகமே சிந்தாமணிச் சுவை யில் மூழ்கிக் கிடந்தது. சேக்கிழார் இதனை உணர்ந்து சைவத் திற்கு அரணுக இப்பெரிய புராணத்தைப் பாடியிருக்க வேண்டும்.

சேக்கிழார், சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத் தொகையையும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத் தொண்டர் திருவந்தாதியையும் ஆதாரமாகவைத்து 63 நாயன்மார்களின் வரலாற்றைப் பதின்மூன்று சருக்கங்களுள்

அடங்கிய 4286 விருத்தப் பாக்களால் பாடியிருக்கிறார். சுந்தரர் கயிலையினின்று உலகில் பிறந்து வளர்ந்து பாவையாரையும் சங்கிலியாரையும் மணந்து வாழ்ந்து மீண்டும் கயிலைக்குச் செல்லும் வரலாற்றை முதலிலும் இடையிலும் முடிவிலுமாக அமைத்து ஏனைய அடியார் வரலாறுகளை இடையிடையே கூறியிருப்பதால், சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு காப்பிய இலக்கணப்படி அமைந்த பெருங் காப்பியம் என்பர்.

முன்னைய காப்பியக் கதைகளெல்லாம் பெரும்பாலும் வடமொழிக் கதைகளின் தழுவல்களே. தமிழ்க் கதைகளான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கற்பனை கலந்த வரலாற்றுக் கதைகளாகவே உள்ளன. பெரியபுராணமோ தமிழகத்தில் வாழ்ந்த சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறுகளைக் கூறும் வரலாற்றுக் காப்பியமாக உள்ளது.

சேக்கிழார், வரலாற்று உண்மை பிறழாமல் காப்பியம் அமைதல் வேண்டிப் பெருமுயற்சி செய்துள்ளார். சிவ சமயச் சான்றோர்களின் வரலாறுகளை, முன்னோர் தொகுத்து வைத்திருந்த செய்திகளையும் செவிவழிச் செய்திகளையும் சீர்தூக்கி ஆய்ந்து வரலாற்று உண்மைக்கு மாறுபடாமல் பாடியுள்ளார். பெரிய புராணத்தில் துறவிகள், இல்லறத்தோர், நாட்டு மன்னர், காட்டு வேடன்; உயர் குலத்தோர், தாழ் குலத்தோர் முதலான பல்வேறு நிலையில் உள்ளவர்களின் வாழ்க்கைவரலாறுகள் வேறுபாடின்றிப் பாடப்பெற்றுள்ளன. தேவாரம் பாடிய பெருமக்கள் வரலாறுகளைக் கூறுங்கால் எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்வேளையில் பாடப்பெற்றன என்ற வரலாற்றுண்மைகளையும் நுணுக்கமுறக் கண்டாய்ந்து பாடியிருப்பது பாராட்டற்குரியது.

சேக்கிழார் செய்திகளைப் பாடுங்கால், இல்பொருள் கற்பனையின்றி இயல்பான வருணனைகளுடன் கையாண்டு காப்பியத்தின் மதிப்பைக் கூட்டியுள்ளார். நாடு, இடம், திருத்தலம், நாயன்மார் வாழ்க்கை முதலிய பற்றி மிகையான கூற்று இன்றி இயல்பாகக் கூறிச் செல்வதால், வரலாற்றுண்மை விரும்புவார்க்கு, இஃது உகந்த காப்பியமாக அமையும்.

இது தமிழ்ப் பெருங்காப்பியம். கதைக்கு நிகழ்களன் தமிழ் நாடு; தமிழ்ப் பண்புடைய சான்றோர்களே காப்பியத்தில் வருகின்றனர். இடைக்காலத் தமிழர் வாழ்வைப் படம் போல் காட்டும் காப்பியமாக உள்ளது. இக்காப்பியத்தில் பல்வகைச் சுவைகளும் உள்ளன. ஆங்காங்கே பக்திச் சுவை மிளிர்வதைக் காணலாம். எளிய சொல்லால் செம்மையான நடையில் இலக்கிய அழகுகளுடன் பெரிய புராணம் சிறந்த பெருங்காப்பியமாகவே அமைந்துள்ளது.

**(ii) கம்பராமாயணம் :** வடமொழியில் வான்மீகி பாடிய இராமாயணத்தைக் கம்பர் தமிழில் பாடியமையால் கம்ப ராமாயணம் என வழங்கப்படுகிறது. கம்பர் சோழ நாட்டுத் திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் பிறந்தார் என்பர். திரு வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்ருர். இவர் சோழ மன்னரை விட்டு விலகியிருந்தமைக்குத் தனிப்பட்ட பகையா, சமயக்கொள்கை வேறுபாடா காரணம் என்பது விளங்கவில்லை. இவரது காலம் பன்னிரண்டாம் நூற்ருண்டாகும். கம்பராமாயணம் சிந்தாமணிக்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றியது என்பது தெளிந்த உண்மையாதலின், இவர் ஒன்பதாம் நூற்ருண்டினர் என்பது பொருத்தமில்லாக் கொள்கையாகத் தோன்றுகிறது.

வான்மீகி இராமாயணக் கதை சங்க காலத்திலேயே தமிழ் மக்களிடையே பரவியிருந்தது. இராமன் கைகவித்துக் கட்டளையிட ஆலமரத்துப் பறவைகள் ஒலி அவிந்து அடங்கின என்பதும் இராவணனுல் தூக்கிச் செல்லப்பட்ட சீதை வீசியெறிந்த அணிகலன்களைக் குரங்குகள் அணியத் தெரியாமல் அலங்கோலமாய் அணிந்தன என்பதும் புறநானூற்றில் வந்துள்ளன.

பரிபாடலில் திருமாலின் இராமாவதாரம் குறிக்கப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் இராமன் தம்பியொடு கானகம் புகுந்து இலங்கையை அழித்த செய்தி கூறப்பட்டாலும் கண்ணன் அவதாரமே விரியப் பாடப்பெற்றுள்ளது. ஆழ்வார்கள் எல்லோருமே இராமாவதாரம் பற்றிப் பாடினுலும் குலசேகராழ்வார் மட்டுமே இராமபக்தியைப் பெருகப்பாடியுள்ளார்.

சங்கமருவிய காலத்தில் தோன்றிய வான்மீகி இராமாயண மொழிபெயர்ப்புக்கள் தமிழ்மரபிற்கிசையாமையால் வெற்றி பெறவில்லை. கம்பர்காலம் இராமபக்தி உடைய காலமாதலின் இராமனைத் திருமாலின் அவதாரமாகக் கொண்டு காப்பியம் பாடுவதற்கு வாய்ப்பான சூழ்நிலை இருந்தது. கம்பர் வான் மீகியின் கதைப்போக்கில் சிற்சில மாற்றங்கள் செய்து பெருங்காப்பியச் சுவைகள் எல்லாம் நிரம்பித்ததும்பும் இராமாயணம் பாடி முடித்தார்.

கம்பர் தாம் பாடிய இராமாயணத்திற்கு இராமாவ தாரம் எனப் பெயரிட்டார். பால காண்டம் முதல் யுத்த காண்டம் வரையுள்ள ஆறு காண்டங்களையும் பல படலங் களாகப் பகுத்து 10500 விருத்தப் பாக்களால் பாடி முடித் திருக்கிறார். வான்மீகியின் உத்தரகாண்டத்தைக் கம்பர் பாடாமைக்குக் காரணம் தெரியவில்லை. தான் படைத்த இராமன் சீதை ஆகியோரின் உயர் குணச் சிறப்பிற்கும் தமிழ்ப் பண்பிற்கும் இசைய உத்தரகாண்டத்தை மாற்றி யமைத்துப் பாடுதல் அரிது என்றும் முடிசூட்டும் மங்கல விழாவோடு முடித்தலே சிறப்பு என்று கருதியும் உத்தர காண்டத்தை விட்டுவிட்டார் போலும்.

வடமொழிக் கதையைத் தமிழ்க் காப்பியமாக்கிய கவிஞ ரெல்லாம் தமிழர்க்கு முற்றிலும் புதியதான கதையையே தேர்ந்தனர். அக்கதைகளையும், திருத்தக்க தேவர் நீங்க லாகப் பிறரெல்லாம் மொழிபெயர்ப்புப் போலவே செய் தனர். கம்பர் தேர்ந்த இராமகதை மக்களுக்குப் பழகிய கதை யேயாகும். அவரும் அக்கதையினைத் தமிழ் மரபிற்கேற்பவும் தம் குறிக்கோளுக் கிசையவும் பல இடங்களில் புதுக்கியும் திருத்தியும் செப்பம் செய்தும் அமைத்துள்ளார். வில் வளைத் தற்கு முன் இராமன் சீதையைக் கண்டு இருவரும் கண் ணோடு கண்ணிணை நோக்கித் தமிழ்க்காதல் கொள்கின்றனர். தாடகை, வாலி ஆகியோர் வதங்களில் புறப் பொருளுக் கிசைய மாற்றியமைக்க முடியாமல் அப்போர்களுக்கு விரி வான விளக்கம் கூறிச் செல்கிறார். ஆனால் கதை உறுப்பினர் களின் குணப் பண்புகளைத் தமிழ் மரபுக்கிசைய பெருக்க முறப் பாடித் தமிழ் மரபுக்கு மாறான செய்திகளை மறக்கச்

செய்துவிடுகிருர். வான்மீகியின் கதை என்ற நினைப்பே எழாதவண்ணம் கதை உறுப்பினர் யாவருமே கம்பனின் பாத்திரப் படைப்புக்களாகின்றனர். எல்லோரும் போற்றும் படியாக, அரிய பாத்திரப் படைப்புக்களைக் கொண்டு கம்ப ராமாயணம் மூல காப்பியம்போல் உள்ளது.

கம்ப ராமாயணம் எதிலும் எல்லாவற்றிலும் ஒரு பெரு மிதப்போக்கு உடையதாய் அமைந்துள்ளது. உயர்வு நவிற்சியும் இல்பொருள் கற்பனையும் மிகையான வருணனைகளும் கம்ப ராமாயணத்தின் இயல்பாகக் காணப்படும். உறுப்பினரை, நாடகத்தில் போல் நேர்க்கு நேர் நிறுத்தி உரையாடச் செய்து சொல்லில் உணர்ச்சி வேகமும் உறுதியும் தோற்றுவித்துக் காப்பியப் போக்கில் சுவையோட்டம் பெற வைக்கிருர். காப்பியத் தலைவனைத் தேவ ராமனுய்க் கொண்டாலும் அவனை மனிதப் பாங்குடன் நடக்கச் செய்கிருர். பாத்திரங்களை மனிதப்பாங்கின் அடித்தளத்தினின்று பேச வைத்து உணர்ச்சியை, வெள்ளம்போல், பெருகி ஓடவிட்டுப் பாத்திரக் குண நிலைகளை நுட்ப திட்ப முற வேறு படுத்திக் காட்டிப் பாத்திரப் படைப்பில் உலகப் பெருங் கவிஞருள் ஒருவராகத் திகழ்கிருர். பாத்திரத்தின் தனித்தன்மையை நுட்பமுற ஒரு பாட்டிலும் காட்டுவார். ஓராயிரம் பாட்டில் பெருக்கியும் காட்டுவார். இதனுல் கம்ப ராமாயணம் உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்ருக மதிக்கத்தக்க உயர்நிலை எய்துகிறது.

நெகிழ்ச்சியுடைய எளிய சொற்களால், இடம், செவ்வி, நிலைக்கேற்ப இசை ததும்பும் வண்ணமும் சந்தமும் ஒழுக, சொல் வளமும் பொருள் நயமும் செறிந்திலங்க, இனிமை சேர்ந்த பாக்களால் அமைந்து தனிப்பெருங் காப்பியமாய்ப் புகழ் பரப்பி நிற்கிறது.

கம்ப ராமாயணம் தோன்றியதுவரையில் சிந்தாமணியே காப்பியத் தலைமைப்பேறு பெற்றுத் திகழ்ந்தது. கம்பர் சிந்தாமணியின் பல்வகை அமைப்புக்களையும் பயன்படுத்தி மற்ருெரு தலைமைக் காப்பியம் படைத்தார். இவ்விரண்டுமே தமிழுக்கு இரு பெருங் காப்பியங்களாகக் கொள்ளத் தக்க

வையே. ஆயினும் பிற்காலத்தில் கம்பர் புகழ் பரந்து விளங்கியது. 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்று பாராட்டினர். பிற்காலப் புலவர் எல்லோரும் ''விருத்த மெனும் ஒண்பாவிற் குயர் கம்பன்'' என்று பாராட்டினர். 'யாமறிந்த புலவரிலே கம்பன்போல்' என்றும் 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்றும் பாரதியார் கம்பன் புகழைப் பாடிச் சென்ருர்.

**(iii) கந்த புராணம் :** இது காஞ்சிபுரத்துக் கச்சியப்ப சிவாச்சாரியால் இயற்றப்பெற்றது. இது புராண வரிசைக்குத் தள்ளப் பெருது பெருங்காப்பிய நிரலிலே இடம் பெற வேண்டிய காப்பியமாகும். பதினெராம் நூற்ருண்டின் இறுதியிலோ 12 ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலோ தோன்றியிருத்தல் கூடும்.

வடமொழிக் கந்த புராணத்தின் பகுதியான சங்கர சங்கிதையில் உள்ள அறுமுகன் வரலாற்றைத் தழுவி எழுதப் பெற்றதாகும். பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களும் ஆறு காண்டங்களில் அடங்கியுள்ளன. அறுமுகன் சரவணப் பொய்கையில் பிறந்ததும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றதும் திருவிளையாடல் புரிந்ததும், சூரபன்மன் வீர வேள்வி செய்து எண்ணிலி யாண்டுகள் அண்டங்களை ஆளும் பெரு வரம் பெற்றதும் அவன் திருமால் முதலான தேவர்களைச் சிறை செய்ததும் ஆறுமுகன் அவர்களை விடுவித்து வான்புகச் செய்ததுமான செய்திகளோடு அறுமுகன் தேவயானையையும் வள்ளியையும் மணந்ததையும் விரிவாகக் கூறுகிறது.

முருகன் தமிழ்க் கடவுள்; சங்க காலத்தில் குறிஞ்சிநிலத் தெய்வம். திருமுருகாற்றுப்படையினின்று முருக வழிபாடு பழங்காலத்தில் சிறந்து விளங்கியது என்று அறிகிருேம். ஆயினும் பிற்காலத்தில் முருகனைச் சிவபெருமான் மகனுகக் கண்டு சைவத்தோடு இணைத்து விட்டனர். ஆயினும் 'முருக சமயம்' என்னும் தனிச் சமயம் காணும் ஆர்வம் சிலருக்கேனும் இருந்து வந்தது போலும். அந்த ஆர்வம் இக் காப்பியத்தின் மூலம் வெளிப்படுகிறது. இது அறுமுகனை முழு முதல் கடவுளாகக் காட்டிச் செல்கிறது.

கந்த புராணம் எளிய சொற்களால் அமைந்துபல்வகைக் காப்பியச் சுவைகளும் கொண்டு விளங்குகிறது. முருகன் வள்ளி இவர்களின் காதல் பற்றிய பாடல்கள் அகப் பொருள் துறைகளின் மரபு தவறுமல் அமைக்கப் பெற்றுள்ளன. சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் காப்பியச் சுவையோடு கலந்து ஆசிரியர் அளித்துள்ளார்.

## 4. பிற காப்பியங்கள், புராணங்கள்

**(i)** நளவெண்பா : இது 'புகழேந்தி' என்பவரால் பாடப் பெற்ற சிறு காப்பியமாகும். இவர் தொண்டை நாட்டுப் பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். மள்ளுவ நாட்டு முரணை நகர்ச் சந்திரன் சுவர்க்கி என்ற குறுநில மன்னனுல் ஆதரிக்கப் பெற்ருர். இவர் வைணவ சமயத்தவர் ஆவர். இவரது காலம் பதின்மூன்ரும் நூற்ருண்டு என்பர். இவர் ஒட்டக்கூத்தர் காலத்தவர் என்பதற்கும் இவருக்கும் ஒட்டக் கூத்தருக்குமிடையே பகை நிலவியது என்பதற்கும் சான்ருகத் தனிப்பாடல் திரட்டில் காணப்படும் பாடல்கள் இவருடையதாமா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும்.

சூதாடி நாடு இழந்து காட்டில் இருந்த தருமருக்குத் தேறுதல் கூறும் வகையில் வியாச பாரதத்தின் கிளைக் கதையாக வரும் நளன் கதையினை முதல் நூலாகக் கொண்டு இக் காப்பியம் சுயவர காணடம், கலி தொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என்னும் மூன்று காண்டங்களில் 425 வெண்பாக்களால் பாடப்பெற்றது. இவரது வெண்பாக்கள் கனிந்த சொற்களால் இசைந்த எதுகை மோனை கொண்டு இன்னேசை ஒழுகப் பெற்று சொற்சுவையும் பொருள்நயமும் மிகுந்து விளங்குகின்றன. இவர் 'வெண்பாவிற் புகழேந்தி' என்று பாராட்டப் பெற்றதில் வியப்பில்லை. 'பொன்னி அமுதப் புதுக் கொழுந்து; பூணுக்கழகளிக்கும் பொற்ருெடி' என்பன போன்ற சொல்லாட்சியும், கற்பனை நயமும் வருணனை அழகும் இணைந்து, பாக்கள் இன்பம் பயக்கின்றன.

இவர் 'செஞ்சிக் கலம்பகம்' என்ற நூல் இயற்றியதாகத் தெரிகிறது. ஆனுல் அது கிடைக்கவில்லை. பாமர மக்களின்

காப்பியம் எனப்படும் அல்லியரசாணி மாலே, பவ்ளக்கொடி, புலேந்திரன் களவு முதலியவை இவரது பெயரில் காணப்பட்டாலும் ஆய்ந்து நோக்கின் இவருடைய நூல்கள் அல்ல என்பது விளங்கும்.

(ii) வில்லிபாரதம் : இது வில்லிபுத்தூரார் என்ற புலவர் தமிழில் பாடிய பாரதம் ஆகும். பெற்றோர் இவருக்குப் பெரியாழ்வாரின் பெயராக வில்லிபுத்தூரார் என்று பெயர் சூட்டினர். இவர் திருமுனைப்பாடி நாட்டுச் சனியூரைச் சார்ந்தவர். அந்நாட்டு மன்னன் வரபதியாட்கொண்டான் என்பவனின் வேண்டுகோட்கிணங்கி இதனைப் பாடினார். இவரது புதல்வர் இதற்குச் சிறப்புப்பாயிரம்அளித்துள்ளார். இவரது காலம் பதினான்காம் நூற்றாண்டு ஆகும்.

வியாச பாரதத்தை முதல் நூலாகக் கொண்டு, அதன் பதினெட்டுப் பருவங்களுள் பத்தினைத் தேர்ந்து 4350 விருத்தப்பாக்களில் பாடியிருக்கிறார். திருமால் அவதாரமான கண்ணன் இக் காப்பியத்தில் பாண்டவர்க்குத் துணை நிற்பதால் இதனை வைணவக் காப்பியமாகக் கொள்வர். ஒவ்வொரு பருவமும் திருமால் வாழ்த்துடன் தொடங்குகிறது. வில்லியின் விருத்தப்பாக்கள் சந்த நயம் வாய்ந்தவை, இதில் சொல்லணிகளும் பொருள் அணிகளும் நன்கு பயன்படுத்தப் பட்டுள்ளன. இக்காப்பியம் கதைப் போக்கிலே கிளைக்கதைகளையும் அரிய நீதிகளையும் உணர்த்துகிறது.

(iii) நைடதம் : இது அதிவீரராம பாண்டியனால் பாடப் பெற்றது. இவர்க்குப் பிள்ளைப்பாண்டியன், வல்லபன், குலசேகரன் முதலான சிறப்புப் பெயர்கள் உண்டு. இவன் 16ஆம் நூற்றாண்டில் கொற்கையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் ஆவன். தென்காசிக் கோயிலைக் கட்டியவன் இவனே. இவனது தமையன் வரதுங்பாண்டியன் திருக்கருவையிலிருந்து அரசாண்டான்,

அதிவீரராமன் பெரும்புலமை வாய்ந்த கவிஞன். நளன் கதையைத் தேர்ந்தமைக்குரிய காரணங்கள் குறிப்பாகப் புலப்படுகின்றன. பாண்டியரைப் போலவே நளனும் சந்திர குலத்தைச் சார்ந்தவனாதலின் சந்திரகுலம் விளங்க நைடதம்

பாடப் பெற்றது எனலாம். தமயந்தியின் சுயவரத்தில் இந்திரன் சந்திரகுலத்தைப் பழித்தபோது அவ் அவையில் இருந்த பாண்டியன் இந்திரன் தலையைத் துணிக்கச் செல்கிறான். ஆயின் பண்டு பாண்டியர்க்குத் தோற்ற இந்திரனை வெட்டுதல் வீரமன்று என்று வெளியேறுகிறான். சுயம்வரத்திற்குச் சென்ற சேரனும் சோழனும் நளனோடு போரிட்டாலும் பாண்டியன் தன் சந்திரகுல நளனோடு போராடவில்லை. சந்திரகுலத்தின் பெருமை விளக்குதற்குச் சிறு வாய்ப்பளித்தமை கருதி மன்னன் நளன் கதையைப் பாடினான் போலும்.

புகழேந்தி பாடிய நளவெண்பா இருந்ததேனும் அதிவீரராமர், ஹர்ஷகவி எழுதிய நைடதம் என்ற நூலையே தம் காப்பியத்திற்கு முதல் நூலாகக் கொண்டார். நைடதம், நாட்டுப் படலம் முதலான 28 படலங்களில் 1172 விருத்தப் பாக்களை உடையது. இதனைப் பெருங்காப்பியமாகப் பாட வேண்டி நாட்டுப்படலம் முதல் நளன் தூதுப் படலம் வரை சுவையுற விரிவாகப் பாடினார். எக்காரணத்தாலோ பிற்பகுதி சுருங்கக் கூறப்பெற்றுச் சுவை குன்றித் தோன்றுகிறது. வரதுங்கரின் மனைவி இதன் நடை, வேட்டை நாய் நடை போன்றும் அடியினின்று கரும்புதின்றாற் போன்றும் உள்ளது என்று கூற, அதிவீரராமன் சினங் கொண்டார் என்பர்.

அன்னம் தூது செல்வதற்கு முன்னரே நளனும் தமயந்தியும் ஒருவர் பற்றி யொருவர் தெரிந்து காதலுற்றனர் என்பதில் தமிழ்க்காதல் வெளிப்படுகிறது. கம்பராமாயணம், சீவக சிந்தாமணி ஆகியவற்றின் கவி நடையும் காப்பிய அழகும் ஆங்காங்கே ஒளிரக் காணலாம். கவிபாடிய கடைசி மன்னர் இவரே யாவர். பிற்காலப் புலவர் 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்று இதனைச் சிறப்பித்துள்ளனர்.

**(iv) திருவிளையாடற் புராணம்:** கி. பி. 15ஆம் நூற்றாண்டில் பெரும்பற்ற புலியூர் நம்பி என்பவர் சிவபெருமானின் 64 திருவிளையாடல்கள் பற்றிப் பாடினார். இது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் எனப்

பட்டது. பழைய திருவிளையாடல் எனவும் வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும் வழங்கப் பெறும்.

16 ஆம் நூற்றுண்டில் பரஞ்சோதி முனிவரும் திருவிளையாடற் புராணம் பாடினுர். இது செல்வாக்குப் பெறவே முன்னைய திருவிளையாடற் புராணம் போற்றப்படவில்லை.

பரஞ்சோதி முனிவர் சோழ நாட்டில் உள்ள திருமறைக் காட்டில் வேளாளர் குலத்தில் பிறந்தார். மதுரையில் சிவ பெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களையும் மூன்று காண்டங்களில் விரிவாகப் பாடினுர். வடமொழியில் உள்ள ஆலாசிய மான்மியம் இதற்கு முதல் நூலாகும். இத் திருவிளையாடல்கள் எல்லாம் பாண்டிய நாட்டில் மதுரையின்பெருமையையும் பாண்டியர் புகழையும் பாடியிருக்கிறது. மக்களை அன்றிப் பன்றி, நாரை கரிக்குருவி முதலியவையும் இறைவனடி எய்தின என்று கூறுகிறது.

இதன் மூன்று காண்டங்களும் 64 படலங்களாகப் பகுக்கப் பட்டுள்ளன. செய்யுட்கள் சுவையும் பெருமித நடையும், விரைவும், தெளிவும் கொண்டிருப்பனவாதலால் இது சிறந்த இலக்கியமாகும்.

## 5 இலக்கண நூல்கள்

(i) தொல்காப்பியம் : முதல் **நூ**லான தொல்காப்பியம் செப்பம் வாய்ந்த இலக்கண நூலாகும். தொல்காப்பியர் இலக்கிய வழக்கு, உலக வழக்கு இரண்டினையும் ஆய்ந்து எழுத்து, சொல், பொருள் இலக்கணம் அமைத்தாராதலின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் ஏற்ற இலக்கண நூலாக உள்ளது. பின்னர்த் தோன்றிய இலக்கண நூல்கள் எல்லாம் தொல்காப்பிய விதிகளைத் தெளிவாகவோ, சுருக்கமாகவோ, காலத்திற்கேற்றவிளக்க முடையதாகவோ கூறுவதற்கு எழுந்தனவே அல்லாமல் எந்த இலக்கண நூலும் தொல்காப்பியத்தைச் செல்லாத நூலாக்கவோ காலங் கடந்த நூலாக்கவோ முடியவில்லை.

**(ii) இறையனார் அகப்பொருள் :** சங்ககால இறுதியில் தோன்றிய அகப்பொருள் இலக்கண நூலாகும். இது சங்க கால இறுதியில் தோன்றிய நூலாதல் வேண்டும். இந்நூலின் தோற்றம் பற்றியும், இதற்கு உரை தோன்றிய வரலாறு பற்றியும் கூறப்படும் செய்திகள் கற்பனைகளேயாகும். சிவபெருமானும் இறையனார் செப்பேட்டில் எழுதியதைக் கோயிற் பணியாளன் கண்டெடுத்துக் கொண்டுவந்து மன்னனிடம் கொடுத்தான் என்பது பொருத்தமில்லாக் கத்பனையே. இறையனார் என்ற புலவர் இயற்றியிருக்க வேண்டும். கொங்குதேர் வாழ்க்கை என்ற குறுந்தொகைப் பாடலாசிரியரான இறையனாரா, வேறு புலவரா என்பது தெரியவில்லை. தொல்காப்பியத்தில் அகத்திணை இயல், களவியல், கற்பியல், பொருள் இயல் ஆகியவற்றில் 200க்கு மேற்பட்ட சூத்திரங்களில்பரவிக் கிடந்த அகப்பொருளை அறுபது சூத்திரங்களில் கற்பார்க்கு எளிதாகும்படி ஆசிரியர் அமைத்துள்ளார். இதில் அன்பின் வழிப்பட்ட ஐந்திணை மட்டுமே களவியல் கற்பியல் என்னும் இரு பகுதியில் கூறப்பட்டுள்ளது, பெருந்திணையும் கைக்கிளையும் தொல்காப்பியத்தில் அகப்பொருள் திணைகளாகத் கூறப் பட்டிருப்பினும் கடைச் சங்ககாலச் சான்றோர் அவற்றை விரும்பிப் பாடவில்லை. இவ்விரு திணைகளும் புறப்பொருள் வெண்பாமாலையில் புறத்திணைகளாக வகுக்கப்பட்டன. ஆதலால் இறையனார் அகப்பொருள், கடைச்சங்க இலக்கியப் போக்கினை நினைவிற்கொண்டு இயற்றப்பட்ட அகப்பொருள் இலக்கணமாக அமையும். இதற்குச் சிறந்த உரை தோன்றியது. அவ்வுரைச் சிறப்பால், நூலை உரையோடு இணைத்து 'இறையனார் அகப்பொருள் உரை' என்றே வழங்கி வருகின்றனர்.

**(iii) அகப்பொருள் விளக்கம் :** இது நாற்கவிராச நம்பி என்ற சமணப் புலவரால் இயற்றப் பெற்றது. இது நம்பி அகப்பொருள் என்று வழங்குகிறது. இவர் பாண்டிய நாட்டில் பொருநையாற்றின் கரையில் உள்ள திருப்புளிங் குடியில் பிறந்தார். 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இந்நூல் பாண்டியன் குலசேகரன் அவைக் களத்தில் அரங்கேற்றப் பெற்றது.

அகப்பொருள் விளக்கம் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஐந்து இயல்களை உடையது; 251 சூத்திரங்களைக் கொண்டது. இவர் களவியலுக்கும் கற்பியலுக்கும் இடையில் வரைவியல் என ஒன்றைப் புதிதாக அமைத்துள்ளார். தொல்காப்பிய அகப்பொருள் இலக்கணத்தையும் பாண்டிக் கோவை, திருக்கோவையார் போன்றவற்றில் உள்ள இடைக்கால இலக்கிய மரபுகளையும் தழுவி இந்நூல் இயற்றப் பெற்றுள்ளது. இதன் உரையில் தஞ்சைவாணன் கோவை முழுதும் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

(iv) **மாறனகப் பொருள்** : இது 16ஆம் நூற்றூண்டில்தோன்றிய அகப்பொருள் இலக்கண நூலாகும். சடையன் என்ற திருக் குருகைப் பெருமாள் கவிராயரால் பாடப் பெற்றது. இவர் வைணவ வேளாளர்; ஆழ்வார் திருநகரி என்னும் ஊரினர். நம்மாழ்வார் மீது கொண்ட பக்தியின் காரணமாக இந்நூலுக்கு, நம்மாழ்வாரின் பெயரான 'மாறன்' என்பதைச் சூட்டியுள்ளார். மாறன் அகப்பொருள், நம்பியகப் பொருளை முழுவதும் தழுவியது. இதிலும் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் ஆகிய ஐந்து இயல்கள் உள்ளன. இதற்குத் திருப்பதிக் கோவை இலக்கியமாய் அமைந்துள்ளது, இந்நூலின் அகத்திணை இயலும் ஒழிபியலும் இப்பொழுது காணப்படவில்லை.

(v) **புறப்பொருள் வெண்பா மாலை** : இது ஐயனரிதனரால் இயற்றப் பெற்ற புறப்பொருள் இலக்கண நூலாகும். இவர் சேர அரச மரபினர். சைவ சமய நெறியினர். இளங்கோவைப் போல் மூவேந்தரையும் ஒருசேர நோக்கும் உயர்ந்த உள்ளம் வாய்ந்தவர். அகத்தியரின் பன்னிருமாணவர் இயற்றிய பன்னிரு படலத்தின் வழிநூலாக இயற்றப்பெற்றது என்று பாயிரம் கூறுகிறது.

தொல்காப்பியத்தில் புறப்பொருள் ஏழுதிணைகளாகப் பகுக்கப்பட்டது. ஆனல் இதில் பன்னிரு திணைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. கரந்தை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஐந்தும் புதிய புறத்திணைகளாக உள்ளன. இறை

யஞர் அகப்பொருள் அன்பின் ஐந்திணையையே பாடியதால் அதில் கூறப்படாத கைக்கிளையும் பெருந்திணையும் இங்குப் புறத்திணைகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஆதலால் இறையஞர் அகப்பொருளுக்குப் பிற்பட்ட நூலாயிருத்தல் கூடும். இதன் காலம் ஏழாம் நூற்ருண்டு என்பர். இந்நூல் தொல்காப்பியப் புறத்திணையைத் தெள்ளிவாகவும் விளக்கமுறவும் கூற வேண்டிக் காலத்திற்கேற்ற மாறுதல்களுடன் எழுந்துள்ளது.

இந்நூல் பன்னிரண்டு படலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. திணையின் துறைகள் எல்லாம் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பின்னர்த் துறையிலக்கணத்தை 'கொளு' எனப் பெயரிய சூத்திரத்தில் வரையறுத்துக் கூறியிருக்கிருர். துறையை விளங்கச் செய்வதற்கு இலக்கியமாக வெண்பாவைப் பாடியிருக்கிருர். புறப்பொருள் இலக்கணத்தை அறிவதற்கு இப்பாடல்கள் பயன் உடையனவாய் உள்ளன.

**(Vi) யாப்பருங்கலம்; யாப்பருங்கலக்காரிகை** ஆய இரு நூல்களும் அமிதசாகரர் என்ற சமணப் புலவரால் இயற்றப் பெற்றன. இவர் தீபங்குடி என்ற ஊரினர். இவரது காலம் பன்னிரண்டாம் நூற்ருண்டு என்பர். சூளாமணிக்குப் பிற்பட்ட காலத்தவராவர்.

தொல்காப்பியச் செய்யுள் இயலில் கூறப்பட்ட கட்டளையடி முதலான இலக்கணங்கள் வழக்கொழிந்து போயின. ஆதலால் புலவர், தொல்காப்பியத்தோடு காக்கை பாடினியார், அவிநயஞர் போன்ற இலக்கணப் புலவர் பாடிய செய்யுள் இலக்கண நூல்களையும் ஆய்ந்து புதிய யாப்பிலக்கணமாக இவ்விரு நூல்களையும் இயற்றிஞர். யாப்பருங்கலம் நூற்பாவாலும், காரிகை கட்டளைக் கலித்துறையாலும் ஆயவை. காரிகையில் உதாரணச் செய்யுட்களின் முதல் நினைப்புக்களையும் கட்டளைக் கலித்துறையால் பாடியிருப்பது மனத்தில் வைத்திருப்பதற்கு உதவும். இவ்விரு நூல்களும் காக்கை பாடினியத்தைத் தழுவி இயற்றப் பெற்றன என்பர். பொருளதிகாரத்தில் செய்யுளியலாக இருந்த யாப்பிலக்கணம் இந்நூல் தோன்றிய பின்னர் யாப்பிலக்கணம் என்னும் செம்மையான தனிப்பிரிவாக வழங்கப்பட்டு வருகிறது.

**(vii) தண்டியலங்காரம்:** வடமொழியில் தண்டி என்பவர் இயற்றிய காவ்யதரிசனம் என்னும் அலங்கார நூலைத் தமிழ்த்தண்டி என்பவர் தமிழில் தண்டியலங்காரமாக்கியுள்ளார். அணியிலக்கணம் தொல்காப்பிய உவம இயலினின்று வளர்ந்தது என்பது பொருந்தாது. பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்றோர் அணியிலக்கணத்தை ஆதரிக்கவில்லை. முதன் முதல் வீர சோழியத்தில் ஐந்திலக்கணத்தின் ஒரு பகுதியாய் அணியிலக்கணம் கூறப்பட்டது. இவ் அணியிலக்கணமும் வடமொழி யிலக்கணத்தைத் தழுவி அமைக்கப் பெற்றதேயாகும். பின்னரே தமிழ்த் தண்டியார் இந்நூலை வடமொழி முறை தழுவி வகுத்தனர். தண்டியலங்காரச் சூத்திர விதிகட்கு உதாரணங்களாக வரும் செய்யுட்களையும் நூலாசிரியரே பாடியிருக்கிறார். இது பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் முப்பிரிவுகளில் 125 சூத்திரங்களை உடையது.

**(viii) மாறனலங்காரம்:** மாறனகப் பொருள் இயற்றிய சடையன் என்ற திருக்குருகைப் பெருமாள் கவிராயரே இதனையும் இயற்றியுள்ளார்.

இவ் அணிநூல் தண்டியலங்காரத்தினும் விரிவானதாய்ப் பொதுவியல், பொருளணியியல், சொல்லணி இயல், எச்சவியல் ஆய நான்கு பகுப்புக்களையுடையது. தண்டி அலங்காரம்போல் இது மொழிபெயர்ப்பாக அமையவில்லை. தொல்காப்பியத்தில் உள்ள குறிப்புக்களையும் வடமொழித் தண்டி அலங்கார அணிகளையும், தாம் புதிதாகப் படைத்த அணிகளையும் நன்கு ஆய்ந்து தெளிந்து செப்பமுற அமைத்துள்ளார். தண்டியலங்கார ஆசிரியர்போல் தாமே சில உதாரணச் செய்யுட்கள் பாடிச் சேர்த்துள்ளார். சங்க நூல்கள் ஐம்பெருங்காப்பியங்கள் முதலியவற்றினின்று மேற்கோள்கள் காட்டியுள்ளார். தென்திருப்பேரை ஊரினரான காரிரத்ன கவிராயர் இதற்கு உரை செய்துள்ளார்.

**(ix) ஐந்திலக்கணம்:** தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. காலப்போக்கில் யாப்பும் அணியும் தனித்தனி இலக்கணப் பிரிவுகளாக

ஐந்து பிரிவுகளுடன் ஐந்திலக்கணம் தமிழில் தோன்றலா யிற்று. வீரசோழியம் என்னும் ஐந்திலக்கண நூல் 11 ஆம் நூற்றுண்டில் புத்தமித்திரனுரால் இயற்றப் பெற்றது. இவர் புத்த சமயத்தவர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஐந்தினையும் தொகுத்துக் கூறும் முதல் இலக்கணம் இதுவே. வடமொழி இலக்கணத்துடன் தமிழ் இலக்கணத்தை இணைக்கும் முயற்சியில் இவர் ஐந்திலக்கணத்தை வடமொழி இலக்கணத்தைத் தழுவி இயற்றினுர். பின்னர், திருவாரூர் வைத்தியநாததேசிகர் இலக்கண விளக்கம் என்னும் பெயரில் ஐந்திலக்கணங்களையும் தொகுத்துக் கூறினுர். அது குட்டித் தொல்காப்பியம் என வழங்கப்பட்டது. இவரே இந்நூலுக்கு உரையும் எழுதியுள்ளார். வீரமாமுனிவர் 'தொன்னூல் விளக்கம்' என்ற ஐந்திலக்கண நூல் இயற்றினுர். அதற்கு அவரே உரையும் மேற்கோளும் எழுதியுள்ளார். சென்ற நூற்றுண்டில் உறையூரில் வாழ்ந்த முத்துவீரிய உபாத்தியாயர் முத்துவீரியம் என்னும் இலக்கண நூலை இயற்றினுர்.

**(x) பாட்டியல் :** பாட்டியல் என்பது ஐந்திலக்கணத்தில் ஒன்றுகக் கருதப்படாமல், ஒழிபியல் போல், அவற்றில் கூறப்படாதவற்றைக் கூறுவதாகும். பலர் பாட்டியல் நூல் செய்தனர். வச்சணத்தி முனிவர் வெண்பாப் பாட்டியல் செய்தார். பாட்டியலுள் சிறந்தது எனப்படும் பன்னிரு பாட்டியலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சிதம்பரப் பாட்டியல், நவநீதப் பாட்டியல் போன்ற நூல்களும் தோன்றின.

பாட்டியலில் கூறப்படும் பொருத்தங்கள் வட மொழி மரபுகளைத் தழுவியவை; குலவேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பிரபந்தம் எனப்படும் சிற்றிலக்கியம் பலவற்றிற்குப் பாட்டியலில் இலக்கணங்கள் வகுக்கப் பட்டுள்ளன. ஆனுல் பிள்ளைப் பாட்டு, பரணி, உலா, ஆற்றுப் படை முதலியவற்றிற்கு இலக்கணங்கள் தொல் காப்பியத்திலும் காணப்படுகின்றன.

**(xi) நன்னூல் :** இது பவணந்தி முனிவரால் இயற்றப் பெற்ற எழுத்து, சொல் இலக்கணத்தைக் கொண்ட நூலா

கும். ஆனால் இது ஐந்திலக்கணமாகவே பாடப்பெற்றது என்பதற்கு 'அரும்பொருள் ஐந்தும் யாவரும் உணர' என்னும் பாயிரக் கூற்று சான்றாகும். சீயகங்கன் என்ற குறுநில மன்னன் வேண்டுகோட்கிணங்கி ஐந்திலக்கணத்தையும் யாவரும் எளிதில் அறியும் வண்ணம் பாடினார் என்பதைப் பாயிரத்தில் அறிகிறோம். இவர் காலம் 13-ஆம் நூற்றாண்டு என்பர். இவர் சனகாபுரம் என்ற ஊரினர். சன்மதி முனிவரின் மகனுவர்; சமண சமயத்தவர்.

தொல்காப்பியத்தைத் தழுவியே எழுதப்பெற்ற பொருள் இலக்கணம் அக்கால வாழ்க்கை அமைப்புக்குப் பொருந்தாமையாலும் யாப்புக்கு யாப்பருங்கலமும் அணிக்குத் தண்டியலங்காரமும் சிறப்பெய்தியமையாலும் பவணந்தியாரின் பொருள், யாப்பு, அணி இலக்கணங்கள் வழக்கற்றுப் போயின போலும். ஆனால் பவணந்தியாரின் எழுத்து, சொல் இலக்கணமே இக்காலத்தவர்க்கு இலக்கணமாய் விளங்குகிறது. இதற்குச் சங்கர நமச்சிவாயர், மயிலை நாதர், முதலியோர் உரை எழுதியிருக்கின்றனர்.

(xii) நிகண்டுகள்: நிகண்டு புதுவகை நூலேயாகும். இக்கால அகராதியோடு ஒரு புடை ஒப்புடையது. ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களையும் ஒரு பொருள் குறித்த பல சொற்களையும் மனப்பாடம் செய்வதற்கு எளிதான வகையில் செய்யுட்களாகப் பாடினர். எட்டாம் நூற்றாண்டில் திவாகர முனிவர் திவாகரம் என்னும் நிகண்டினை இயற்றினார். இது பத்துத் தொகுதியுள் 9500 சொற்களைக் கொண்டது. இவரை ஆதரித்த சேந்தன் பெயரும் இணைக்கப்பெற்று இது சேந்தன் திவாகரம் என வழங்கப்பெறும். இவரது புதல்வரான பிங்கல முனிவர் இயற்றிய பிங்கலம் பத்துத் தொகுதியுள் 15791 சொற்களைக் கொண்டது. பின்னர், காங்கேயர் என்பவர் உரிச்சொல் நிகண்டு ஒன்று இயற்றினார். 16-ஆம் நூற்றாண்டில், இந்நிகண்டுகளையெல்லாம் ஆய்ந்து பெருமண்டூரைச் சார்ந்த மங்கலபுருடர் என்பவர் சூடாமணி நிகண்டு இயற்றினார்.

## 6. உரையாசிரியர்கள்

கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர்ச் சமய நூற் பயிற்சி மிகுந்து சங்க நூற் பயிற்சி குன்றியது. புலவர் புதிய இலக்கிய நெறிகளைப் போற்றிப் பிரபந்தம் போன்ற நூல்கள் இயற்றத் தொடங்கினர். சங்க இலக்கிய மரபுகள் மங்கின. நாளடைவில் தொல்காப்பியமும் சங்கநூல்களும் பயில்வதற்கு அரியனவாய்த் தோன்றின. இந்நூல்களுக்குப் பொருள் கொள்வதில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர்போன்ற பேரறிஞர் பழம்பெரு நூல்களுக்கு உரை எழுதித் தமிழ்ப் பயிற்சியிலும் ஆராய்ச்சியிலும் மறுமலர்ச்சி தோற்றுவித்தனர்.

(i) அகப் பொருள் உரையாசிரியர் : இறையனார் அகப் பொருள் உரையே முதன் முதல் தோன்றிய உரையாகும். இவ்வுரை சங்ககால நக்கீரரால் கூறப் பெற்றது என்றும், அவ்வுரை மாணவர் வழியே வாழ்ந்து வந்து எட்டாம் நூற்றாண்டில் ஏட்டில் எழுதப்பட்டது என்றும் கூறுவர். அவ்வுரை ஆற்றொழுக்கனைய போக்கும் இனிய ஓசையும், உவமையும் தேனெனத்தித்திக்கும் கவி நடையும் வாய்ந்து, பயிலுந் தோறும் இன்பம் பயப்பதாய் உள்ளது.அன்பு, கற்பு முதலான அரும் பண்புகளை வரையறுத்து விளக்கிச் செல்லும் முறை ஆசிரியர் நுண்மாண் புலமைத்திறனை விளக்குகிறது. சங்கம் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறியிருக்கும் முறை உரையாசிரியரின் வரலாற்றுணர்வைக் காட்டுகிறது

(ii) இளம்பூரணர் : இவர் சமணர்; இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பர். இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியிருக்கிறார். இவர் உரை விளக்கமும் தெளிவும் மிக்கது ; சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறன் வாய்ந்தவர். விரிக்க வேண்டிய இடத்தில் மிகுதியாகக் கூறாமல் வேண்டிய அளவுவிரித்தும்சுருக்க வேண்டிய இடத்தில் மிகச் சுருக்காமல் கருத்து விளக்கம் பெறச் சுருக்கியும் தமிழ் மரபு வழிநின்று உரை வகுத்துள்ளார். நுண்ணிய கருத்துக்

களையும் உண்மை பிறழாமல் எளிதில் உணரும்படி விளக்கியுள்ளார். பின்வந்த உரையாசிரியர்கள் இவர் உரையைத் தழுவியும், வேறுபடும் இடங்களில் இவர் உரையைச் சுட்டியுமே எழுதியுள்ளனர். இதனால் பின்னைய உரையாசிரியர்களால் நன்கு மதிக்கப் பெற்றார் என்பது விளங்குகிறது. 'எழுத்துக்கு இளம் பூரணம்' என்று பாராட்டப் பெற்றுள்ளார். தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு இன்றும் இவர் உரையே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

(iii) பேராசிரியர் : இவர் இளம் பூரணருக்குப் பிற்பட்டவர்; சைவ சமயத்தினர்; இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதினார் என்றாலும் பொருளதிகாரத்து மெய்ப்பாட்டியல் உவமவியல் செய்யுளியல், மரபியல் ஆகியவற்றிற்குரிய உரையே கிடைத்துள்ளது. குறுந்தொகையில் இருபது நீங்கலாக ஏனைய பாடல்களுக்கு இவர் உரை எழுதினார் என்பர். இவர் திருக்கோவையாருக்கு எழுதிய உரை சிறப்புடன் திகழ்கிறது. பேராசிரியர் என்பது சிறப்புக் காரணமாக ஏற்பட்ட பெயர் போலும். வரலாறுகளைக் குறிப்பிடுங்கால் தடை விடைகளைச் சுட்டித் தருக்க முறையில் எழுதிச் செல்கிறார். இவர் உரை பெருமித நடை வாய்ந்தது.

(iv) சேனாவரையர் : பாண்டியநாட்டு ஆற்றூரைச் சார்ந்தவர். பேராசிரியர்க்குப் பிற்பட்டவர். இவரது காலம் 13-ஆம் நூற்றாண்டாகும். சேனைத் தலைவராயிருந்தார் என்பர். சான்றோர் மரபினராகக் கருதப்படுகிறார். தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே இவர் உரை எழுதியிருக்கிறார். சொல்லதிகாரத்திற்கு இவர் உரையே சிறந்ததாகலின் 'சொல்லுக்குச் சேனாவரையம்' என்பர். இவரது கருத்துள் சிலவற்றை நச்சினார்க்கினியர் மறுத்துள்ளார். இவர் வடமொழிப் பயிற்சி மிக்கவராய், வடமொழி மரபுகளை ஆங்காங்கே சுட்டிச் செல்கிறார். சிவஞான முனிவர் இவர் உரையினைப் பாராட்டியிருக்கிறார்.

(v) அடியார்க்கு நல்லார் : இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளார். ஆனால் 19 காதைகட்கு உரிய உரையே கிடைத்துள்ளது. எடுத்தாண்ட மேற்கோள் நூலின் பெய

ரைக் குறிப்பிட்டிருக்கின்ருர். மறைந்துபோன நாடகம், இசை இவற்றின் இலக்கண நூல்பற்றி இவர் உரையால் அறியலாம். கலிங்கத்துப்பரணியை மேற்கோள் காட்டியுள்ளார். ஆதலால் அதற்குப் பிற்பட்ட காலத்தவர் என்பது உறுதியாகிறது. இவரது காலம் 13-ஆம் நூற்ருண்டாகும்.

(vi) **பரிமேலழகர்:** இவர் காஞ்சிபுரத்து வைணவர். இவர் திருக்குறளுக்கும் பரிபாடலுக்கும் உரை இயற்றியிருக்கிருர். திருக்குறளுக்குப் பத்துப்பேர் உரை எழுதினர் என்ருலும் இவர் உரையே திட்பமும் செறிவும் வாய்ந்து விளங்குகிறது. இவர் சில இடங்களில் வடமொழி மரபு வழி நின்று உரை கண்டிருக்கிருர். திருக்குறள் உரையாசிரியருள் ஒருவரான மணக்குடவர்க்கு இவர் பிற்பட்டவர். இவர் மணக்குடவர் உரையைச் சுட்டியும் மறுத்தும் செல்கிருர். சொற்களுக்கும் சொற்ருெடர்களுக்கும் திட்பமான வரையறை கூறி நுட்பமுறப் பொருள் விளக்கும் கூர்மதியாளர். இவரது காலம் 13-ஆம் நூற்ருண்டாகும்.

(vii) **நச்சினர்க்கினியர்:** இவர் சைவ அந்தணர். மதுரை மாநகரத்தவர். வடமொழி தமிழ்மொழி இரண்டிலும் வல்லவர். இவரது காலம் 14-ஆம் நூற்ருண்டாகும். 'உரைவேந்தன்' எனும்படி பழம்பெரு நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதியிருக்கிருர். தொல்காப்பியம் பத்துப் பாட்டு, கலித்தொகை; குறுந்தொகையின் இருபது செய்யுட்கள், சீவக சிந்தாமணி என்பவற்றிற்குச் சிறந்த உரைகள் செய்துள்ளார். நூலின் காலம், ஆசிரியர் சமயம், உள்ளப்பாங்கு, நூற்போக்கு முதலியவற்றைத் தெளிவாக அறிந்து உரை எழுதல் இவர்க்குரிய இயல்பாகும். பழைய செய்யுட்களேயோ, உரைகளேயோ நூல் பெயர், ஆசிரியர் குறிக்காமல் அப்படியே எழுதிச் செல்வது இவர் இயல்பு. தான் கொண்ட கொள்கையை நிலைநாட்ட வேண்டி வலிந்து பொருள் கண்டுரைத்தல் இவர்க்குரிய ஒரு குறை என்பர். இவரது உரைகள் எல்லாம் இலக்கியச் சுவை வாய்ந்தவை. உச்சிமேல் புலவர் கொள் நச்சினர்க்கினியர் என இவரைப் பாராட்டியதில் வியப்பில்லை.

மற்றும் பல உரையாசிரியர் உரைப்பணி புரிந்துள்ளனர். கல்லாடர், தெய்வச்சிலையார் போன்றோர் தொல்காப்பியத்திற்கும், திருக்குறளுக்கு மணக்குடவர், காளிங்கர், பரிதிபரிப் பெருமாள் முதலியோரும், சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையாசிரியரும், வீரசோழியத்திற்கு பெருந்தேவனாரும் யாப்பருங்கலம், காரிகை இரண்டிற்கும் குணசாகரரும் உரை எழுதியிருக்கின்றனர். நன்னூலுக்குச் சங்கர நமச்சிவாயர், மயிலைநாதர், முதலியோர் உரை செய்திருக்கின்றனர். புறநானூறு, ஐங்குறு, அகநானூறு போன்றவற்றிற்குப் பழைய உரையாசிரியர்களின் பெயர்கள் தெரியவில்லை.

**(viii) வைணவ உரையாசிரியர்கள் :** வைணவ உரையாசிரியர் பலர் நாலாயிர திவ்ய பிரபந்தத்திற்கு உரை எழுதியிருக்கின்றனர். வடமொழி ஆர்வம் மிக்கவராதலின் தமிழொடு வடமொழியை மிகக் கலந்து மணிப்பிரவாள நடையில் எழுதினர். தம் உரையைப் 'படி' என்ற அளவால் குறிப்பிட்டனர்.

ஒற்றெழுத்து நீங்கலாக 32 எழுத்துக்களைக் கொண்டது ஒரு கிரந்தம் அல்லது படி என வழங்கப் பெறும். வீர நாராயணபுரத்து ஆளவந்தார் திருவாய்மொழிக்கு உரை எழுதினார். 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருக்குருகைப் பெருமாள் பிள்ளான் என்பவர் திருவாய்மொழிக்கு 'ஆயிரப் படி' அளவில் உரை எழுதினார். 16-ம் நூற்றாண்டில் திருநாராயணபுரத்தில் வாழ்ந்த நஞ்சீயர் திருவாய்மொழிக்கு ஒன்பதாயிரப்படி எழுதினார். பெரிய திருமொழிக்கு வியாக்கியானம், கண்ணிநுண் சிறுத் தாம்பு உரை, திருப்பள்ளி எழுச்சியுரை ஆகியவற்றையும் அவர் இயற்றினார். 14-ஆம் நூற்றாண்டில் நம்பிள்ளை என்பவர் திருவாய்மொழிக்கு ஒன்பதாயிரப்படி எழுதியதோடு திருப்பள்ளி எழுச்சி, திருவிருத்தம், பெரிய திருமொழி ஆகியவற்றிற்கு வியாக்கியானமும் எழுதினார். 15-ஆம் நூற்றாண்டில் அழகிய மாணவாளசீயர் திருவாய்மொழிக்கு 12000 படி எழுதினார். 15-ஆம் நூற்றாண்டில் பெரியவாச்சான்பிள்ளை திருவாய்மொழி நீங்கலான பிரபந்தப் பாடல்களுக்கு 24 ஆயிரப்படி எழுதினார்.

அதே நூற்றுண்டில் வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவாய் மொழிக்கு 36 ஆயிரப்படி எழுதிஞர். இது ஈடு என வழங் கப்படும். வடக்குத் திருவீதிப்பிள்ளையின் மகன் திருப் பாவைக்கு ஆருயிரப்படியும் அமலஞதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு முதலியவற்றிற்கு வியாக்கியானமும் எழுதி ஞர். 15-ஆம் நூற்றுண்டில், பெரிய ஜீயர் எனப்பட்டுத் தென்கலையார்க்குத் தலைவராய்த் திகழ்ந்த மணவாளமுனி கள் இராமானுஜர் நூற்றந்தாதி உரை, ஞானசார உரை, தத்துவக்கிரய உரை, திருவாய்மொழி வியாக்கியானம் முதலியன எழுதிஞர். இவ்வுரைகள், வைணவ சமயக் கொள்கைகளை அறிவதற்கு நன்கு பயன்தரும்.

## 7. பௌத்தர் தமிழ்த்தொண்டு

கி.மு. மூன்றும் நூற்றுண்டினரான அசோகர் காலத்தி லேயே புத்த மதம் தமிழ் நாட்டில் பரவியிருந்தது. தமிழகத்துத் தலை நகரங்களிலெல்லாம் பௌத்தக் கோயில் களான விகாரங்கள் எழுந்தன. பௌத்தத் துறவிகள் அவற்றில் தங்கியிருந்து தம் சமயக் கொள்கைகளைப் போதித்தனர். பௌத்தத்திலுள்ள குல வேறுபாடின்மை, உயிர்கள் மேல் அன்பு, அறம் போற்றல் முதலான கொள் கைகள் தமிழ்ச் சான்ருேரைக் கவர்ந்தன. நற்றிணையின் 72—ஆம் பாட்டுக்குரிய இளம்போதியாரின் பெயரைக் கொண்டு பௌத்த சமயத்தவர் என்பர். பௌத்தக் கொள்கைகளைத் தனிப்படப் பாடியவராகச் சங்க காலப் புலவரைக் காட்டுதல் அரிது.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் பௌத்த சமயம் தமிழ்நாட்டில் வெகுவாய்ப் பரவத் தொடங்கியது. காவிரிப்பூம்பட்டினத்தில் ஏழு பௌத்தக் கோயில்கள் இருந் தன என்பதைச் சிலப்பதிகாரத்தால் அறிகிருேம். அந்நகரில் சக்கரவாளக்கோட்டம், கந்திற்பாவை, உபவனம் முதலான பௌத்த அமைப்புக்கள் இருந்தன என்று மணிமேகலை விரிவாகக் கூறுகிறது. சேரநாட்டு வஞ்சியிலும் தொண்டை நாட்டுக் காஞ்சியிலும் பௌத்த சமயம் சிறப்புற்றுத் திகழ்ந் தது என்று மணிமேகலை கூறுகிறது.

பௌத்தர்கள் நாட்டுப்பற்றுக்கும் மொழிப்பற்றுக்கும் அப்பாற்பட்டவராய்த் தம் சமயக் கொள்கைகளை அறிந்து அவற்றைப் பரப்புதலையே கருத்தாகக் கொண்டிருந்தனர். பௌத்த த்தைத் தழுவிய தமிழ் அறிஞரும் பௌத்த மொழி யான பாலி மொழியைக் கற்று அம்மொழியிலேயே சமய நூல்களையும் கற்றுணர்ந்தனர். சமணர்கள் தமிழில் நூல் எழுதித் தம் கொள்கையைப் பரப்ப முயன்றது கண்டு, பௌத் தத் தமிழர் சிலரும் தமிழில் சமய நூல் எழுத விரும் பினர். சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்குத் தமிழைக் கருவியாகக் கொண்டனரே அல்லாமல் சிறந்த இலக்கியம் படைக்க வேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கில்லை. பௌத்த நூல்களுள் மணிமேகலையே தலையாயது. பின்னர்த் தோன்றிய குண்டலகேசி என்ற மற்றொரு பெருங்காப் பியம் முழுதும் கிடைக்கவில்லை. பௌத்தப் புலவரால் இயற்றப்பெற்ற 'வீரசோழியம்' என்னும் இலக்கண நூல் முழுமையாக உள்ளது. வேறு சில நூல்கள் பெயரளவில் தான் தெரிகின்றன.

**மணிமேகலை:** கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் மதுரைக் கூலவாணிகன் சாத்தன் என்பவரால் இயற்றப் பெற்றது. இவர் தமிழில் சிறந்த புலமை வாய்ந்தவர். ஆனால் பௌத்த சமயக் கொள்கையில் மிக்க பற்று உடைய வர். இவரும் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளும் நன்கு பழகியவர்கள். இவர், இளங்கோவடிகள் சிலப்பதி காரம் பாடக் கேட்டார் என்றும் இவர் மணிமேகலையைப் பாட இளங்கோவடிகள் கேட்டார் என்றும் அறிகிறோம்.

இது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். இது கோவலனுக்கு மாதவி வயிற்றில் பிறந்த மணிமேகலையைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு அவள் வரலாற்றை முப்பது காதைகளில் பாடி முடிக்கிறது. பரத்தையர் குலத்தில் பிறந்த பெண்ணைக் காப்பியத் தலைவியாக்கி அவள் தவம் பூண்டு அறம் செய்து நோற்றுயரக் காவியம் பாடியிருத்தல் புதுமையும் புரட்சியுமாகும். இது முழுவதும் சமய காப்பியமாய்க் கொள்கையைப் பரப்பு

வதற்கென்று எழுதப் பெற்ற காப்பியம். சாத்தனுர் பெருங்காப்பிய இலக்கணத்தையோ, தமிழ் இலக்கிய மரபுகளையோ, சுவை நலங்களையோ மதிக்காமல் சமயக் கருத்துக்களை விளக்குவதிலேயே முழுக்கவனம் செலுத்தியிருக்கிருர்.

மணிமேகலை சமயகாப்பியமேயாயினும், அது சிறந்து விளங்குவதற்குச் சில காரணங்கள் உண்டு. இது தெள்ளத் தெளிந்ததும் எளியதும் இனியதுமான நடை உடையது. கதையையும் கருத்தையும் எளிதில் உணரும்படி நெகிழ்ச்சி வாய்ந்த ஆசிரியப்பாவில் அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் சிறப்பெய்தியவன் மகளும் இளநங்கையுமான மணிமேகலை காப்பியத் தலைவியாகித் தமிழகத்தில் உலவுகிருள். அவள் உணவு அறம் செய்து திரிகிருள். அறிவுரை கூறுகிருள். ஆதிரை, சுதமதி, காயசண்டிகை முதலான மகளிர் கிளைக் கதைகளாய்ச் சேருகின்றனர். பரத்தையர் குலத்தில் பிறந்து அழகு நலமெல்லாம் வாய்ந்த இளங்கன்னி துறவியாய் உலவுங்காட்சி மக்கள் உள்ளத்தைத் தொடக்கூடியதேயாகும். முதல் இருபத்தேழு காதைகளில் கதைப்போக்கில் கதையூடே எல்லோரும் விரும்பியேற்கத்தக்க பொது அறங்களையே கூறிச் சென்று இறுதியில் முன்று காதைகளில் மட்டுமே சமயக்கொள்கைகளை விளக்கி, அறவுணர்வும் கதையார்வமும் உடையோர் எல்லோரும் விரும்பிப் படிக்கும் காப்பியமாக அமைத்துள்ளார்.

குண்டலகேசி : இதுவும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகும். புறத்திரட்டினின்றும் 19 பாடல்களே கிடைத்துள்ளன. இதன் ஆசிரியர் நாதகுத்தனுர் ஆவர். மணிமேகலையைப் போலவே இதுவும் ஒரு மங்கையைக் காப்பியத் தலைவியாகக் கொண்டுள்ளது. பத்தரை என்ற பெயரினளான குண்டலகேசி காப்பியத் தலைவியாகத் திகழ்கிருள். கதையளவில் மணிமேகலையினைவிடச் சுவையோட்டம் மிகுந்துள்ளது. கொலைக்களமேகும் கள்வனைக் கண்டு காதலித்து, அவனை விடுவித்து மணந்து வாழும் நாளில் வஞ்சித்துக் கொல்ல வந்த கணவனை வஞ்சனையால் கொன்று மனவிரக்தியுற்றுச் சமணம் புகுந்து தருக்கத்தால் தோற்றுப் பின் பௌத்தம் சார்ந்து தருக்கவாதங்கள் புரிந்து பல சமயத்த

வரை வென்று பௌத்தத்தை நிலைநிறுத்துகிறாள். காப்பியச் சுவையிலோ, சுவையாகக் கதை கூறும் முறையிலோ நாட்டம் இன்றித் தருக்க முறையில் பௌத்த மதக்கோட்பாடுகளை நிலை நாட்டுதலையே நோக்கமாகக் கொண்டிருந்தது. இதனை மறுக்கவே சமண நீலகேசி எழுந்தது என்றால் இதன் தருக்கங்கள் கடுமையான சமயத் தாக்குதல்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பது வெளிப்படுகிறது. பௌத்த சமயச் செல்வாக்குக் குன்றியதும், போற்றும் பௌத்தர்கள் இல்லாமல் இந்நூல் அழிந்துபட்டது போலும்.

வீரசோழியம் : 11-ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரரால் இயற்றப் பெற்ற ஐந்திலக்கண நூலாகும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களையும் தொகுத்துக் கூறும் முதல் இலக்கணநூல் இதுவே. வடமொழி இலக்கணத்தோடு தமிழ் இலக்கணத்தை இணைத்துக் கலந்து காட்டும் ஆர்வங்கொண்டு வடமொழி மரபுகளை மிகுதியாகப் பயன்படுத்தியமையால் இவர் இலக்கணநூல் பயில்வாரின்றி வழக்கொழிந்தது போலும்.

மறைந்த பௌத்த நூல்கள் சிலவற்றின் பெயர்கள் அறிய வருகின்றன. 'விம்பசாரக் கதை' என்ற காப்பியம் இருந்தது. அக்காப்பியம், மகன் மன்னன் பிம்பிசாரனுக்குக் கொடுமை பல செய்து கொன்று, மகப்பிறப்பால் பெற்ற பாசம் அறிந்து பிழை உணர்ந்து புத்தம் சார்ந்து அருள் பெற்றுய்ந்ததாய்க் கதைஉடையது என்பர். பௌத்த சமயக் கருத்துக்களைத்தொகுத்துக் கூறியசித்தாந்தத்தொகை நூலும் புத்தன் புகழ்பாடும் பத்துச் செய்யுள்கொண்ட திருப்பதிகமும், மாணவி வேண்டுகோட் கிணங்கிப் புத்தத்தர் இயற்றிய 'அபிதர்மாவதாரம்' என்ற நூலும் இறந்தொழிந்த நூல்களாகக் கருதப்படுகின்றன.

களப்பிரர் தொடக்கத்தில் பௌத்தசமயம் தழுவி அதற்கு ஆதரவு நல்கினர். பின்னர், சமணந்தழுவவே பௌத்த சமயம் அரசினர் ஆதரவை இழந்தது. சமணர் தாக்குதல்களாலும் சைவ வைணவ எழுச்சியாலும் தமிழ்

நாட்டில் பௌத்தச் செல்வாக்குத் தேய்ந்தது. பயில்வாரின் மையால் பௌத்தர் படைத்த சில நூல்களும் மாய்ந்தன போலும். ஆயினும் மணிமேகலை அழியாப் பெருங்காவிய மாய்ப் பௌத்தர் தமிழ்ப் பணியைப் பறைசாற்றி நிற்கிறது.

## 8. சமணர் தமிழ்த்தொண்டு

கடைச்சங்க காலத் தொடக்கத்திலேயே சமணக் கருத்துக்கள் தமிழகத்தில் பரவியிருந்தன. குலவேற்றுமையின்மை, கொல்லாமை, புலால் மறுத்தல், அறிவு வேட்டல், ஒழுக்கத்தால் உயர்தல் முதலான சமணக் கொள்கைகள் தமிழ் அறிஞரின் நெஞ்சத்தைக் கவர்ந்தன. தமிழரின் சிந்தனை யுணர்வு வளர்ந்தது. தொல்காப்பியரே சமணர் என்பர். ஆயினும் சங்கநூல்களில் சமணக் கொள்கையை வெளிப்படையாகக் கூறும் பாடலைக் காண்டல் அரிது.

சமணத் துறவிகள் நகர்களுக்குப் புறம்பே பள்ளிகள் அமைத்துத் தங்கியிருந்து சமயம் வளர்த்தனர். களப்பிரர் சமணத்திற்கு ஆக்கம் அளித்தனர். பல்லவர் சமணம்போற்றினர். சங்க காலத்திற்குப்பிற்பட்ட பாண்டியர் சமணம் தழுவித் துறவோர்க்கு ஊக்க மூட்டினர். சமணர் சங்கம் அமைத்தனர். கி. பி. 470-இல் வச்சிரநந்தி என்பவர் திராவிட சங்கம் அமைத்தார். சங்க மருவிய காலத்துச் சமண நூல்கள் சில இதில் அரங்கேற்றப் பெற்றன என்பர். சமணர்கள் அறநூல், காப்பியம், புராணம், பிரபந்தம், இலக்கணம் முதலான பற்பல வகையான நூல்கள் இயற்றித் தமிழினுக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர்.

**அறநூல்கள் :** தொடக்கத்தில் சமணப்புலவர் அறநூல்கள் பாடுவதில் ஆர்வங் காட்டினர். பொய், களவு, கள், காமம், கொலை பற்றிய பொது அறங்களைப் பாடினர். சமண அறநூல்களுள் நாலடியார் தலையாயது. பல்வேறு புலவர்கள் பாடியனவாக நானூறு வெண்பாக்களைக்கொண்டது. பாடல்கள் உவமை நயமும் அனுபவ உணர்ச்சியும் சொல்லழகும் சுவை இன்பமும் வாய்ந்தவை. சிறுபஞ்ச மூலம் காரியாசானல் பாடப்பெற்று நூறு வெண்பாக்களை உடையது. ஐந்து

வேர்களால் ஆய நோய் நீக்கு மருந்துபோல் மனநோய் போக்கும் ஐயைந்து உண்மைகளை ஒவ்வொரு பாடலும் உடையது. பழமொழி நானூறு, முன்றுறை அரையனாரால் பாடப்பெற்ற நானூறு வெண்பாக்களைக் கொண்டது. பாடல் தோறும் பழமொழியொன்றமைக்கப் பெற்றுள்ளது. ஏலாதி கணி மேதாவியரால் பாடப்பெற்ற எண்பது வெண் பாக்களையுடையது. ஏலம் முதலான ஆறு மருந்துக் கூட்டுப் போல் ஆறு உண்மைகள் பாடல் தோறும் உள்ளன. இவரே திணைமாலை நூற்றைம்பது என்னும் அகப்பொருள் நூலையும் பாடியிருக்கிறார். பதிணெண் கீழ்க் கணக்கு நூல்களுள் பிற வற்றிலும் சமணக்கருத்துச் செல்வாக்கைக் காணலாம். திருக் குறள் தமிழ்ப்பண்பு வழிப்பட்டதேனும், அதிலும் சமணர் கருத்துக்கள் பொலிவதைக் காணலாம்.

பெருங்காப்பியங்கள் : சிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி மூன்றும் சமணப்புலவர் படைத்தளித்த பெருங் காப்பியங்களாகும். சீவக சிந்தாமணியைத் திருத்தக்க தேவர் பாடினார். இதில் சீவகன் வரலாறு, வடமொழி க்ஷத்திர சூடாமணியைத் தழுவப்பெற்று, பதின்மூன்று இலம் பகங்களால் மூவாயிரத்திற்கு மேற்பட்ட விருத்தப் பாக்க ளால் கூறப்பட்டுள்ளது. சீவகன் திருமணங்களில் தமிழ் அகப் பொருளும் அவன் செய்த போர்களில் தமிழ்ப் புறப் பொருளும் பொலிவு பெற்றுத் திகழ, தமிழ் இசை, நாடகம் முதலான கலைகள் சீவகன் வாயிலாக ஏற்றம்பெற, தமிழ்ப் பழக்க வழக்கங்கள் ஆங்காங்கே மிளிர, காப்பிய நலங்கள், கவிதைச் சுவைகள், சமண அறங்கள் முதலியவை அழகு செய்ய, சிந்தாமணி ஒப்பிலாப் பெருங்காப்பியமாக ஒளிர் கிறது. சிலப்பதிகாரத்தைச் சேர இளங்கோ பாடினார். இது தமிழகத்தைக் கதைக் களனாகக்கொண்டு கோவலன் கண்ணகி வாழ்க்கையை மூவேந்தர் வரலாற்றோடு பின்னித் தமிழர் அகமும், புறமும், அறமும், இசை நாடகம் முதலான கலை களும், பண், பாணி, பாடல், அரங்கு, ஆடல் ஆயவற்றின் அழகும், வரிப் பாடல்கள் குரவை முதலியவற்றின் கனிவும் எல்லாம்விளங்கக் காப்பியச் சுவைகள் கனிந்திலங்க ஆசிரியப் பாவில் முப்பது காதைகளில் நெஞ்சை அள்ளும் வகையில்

பாடப்பெற்ற முதல் பெருங்காப்பியமாகும். தமிழ்ச் சிறப்பும், தமிழன் பெருமையும் தமிழ்வேந்தர் புகழும் நிரம்பிய தமிழ்க் காப்பியமாகும். வளையாபதியின் 72 பாடல்களே கிடைத்துள்ளன. அது விருத்தப்பாக்களால் இயன்றது.

**சிறுகாப்பியங்கள் :** ஐஞ்சிறு காப்பியங்கள் எல்லாம் சமணரால் பாடப் பெற்றவைகளே. தோலாமொழித்தேவர் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட விருத்தப்பாக்களால் பாடிய சூளாமணி, சுரமை நாட்டு மன்னன் மகனை திவிட்டன் வித்தியாதரனை வென்று வித்தியாதர நங்கையை மணந்து, தந்தை துறந்தேகத் தான் தன் தமையன் விசயனோடு நாடாண்ட கதையினைக்கொண்டு ஆங்காங்கே சமணக் கருத்துக்களை விளக்கிச் செல்கிறது. நீலகேசி குண்டலகேசியாம் பௌத்தப் பெருங்காப்பியத்துக்கு எதிர் நூலாக எழுந்து, நீலகேசி என்ற பேய்ப்பெண் சமணம் தழுவிப் பௌத்தர்களைத் தருக்க வாதத்தால் வெல்வதைக் கதையாகக்கொண்டு 890 விருத்தப்பாக்களால் அமைந்துள்ளது. உதயணகுமார காவியம், கொங்கு வேளிர் பாடிய பெருங்கதையின் வழி நூலாக உதயணன் கதையினை 367 விருத்தப்பாக்களில் பாடியிருக்கிறது. யசோதரகாவியம் 330 விருத்தப்பாக்களில் சமணரை உயிர்ப்பலி கொடுக்கச் சென்ற மன்னன், மனந் திரும்பிச் சமணந் தழுவிய கதையினைக் கூறுகிறது. நாககுமார காவியம் மறைந்துபோன சிறுகாப்பியமாகும்.

**இலக்கண நூல்கள் :** தொல்காப்பியர் சமணர் என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை. ஆயினும் பிற்பட்ட இலக்கணப் பணியில் சமணரே முதன்மையராகத் திகழ்கின்றனர். 11-ஆம் நூற்றாண்டில் அமிர்த சாகரர், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை எனும் இரு யாப்பிலக்கண நூல்கள் எழுதி 'யாப்பு' என்பதைத் தனி இலக்கணப் பிரிவாக நிலை நாட்டியுள்ளார். இதனால் நால்வகைப்பாக்களுக்கே அல்லாமல் அப்பாக்களின் இனங்களுக்கும் செப்பமான இலக்கணம் அமைந்துள்ளது. குணவீர பண்டிதர் நேமிநாதம் என்னும் இலக்கண நூல் எழுதினர். இது தொல்காப்பிய எழுத்து, சொல் அதிகாரங்களின் சுருக்கமாக வெண்பாவில் அமைந்

துள்ளது. குணவீர பண்டிதர் வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியல் இலக்கணம் செய்துள்ளார். அகப் பொருள் விளக்கம் என்னும்இலக்கண நூலைப் பாண்டியநாட்டு திருப்புளிங்குடி ஊரினரான நாற்கவிராச நம்பி இயற்றினர். கோவை நூல்களுக்கு சிறந்த அகப்பொருள் இலக்கணமாக விளங்குகிறது. பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் எழுத்து, சொல் இரண்டிற்கும் எளிமையும் தெளிவும் செப்ப மும் உடையதாய். இக் காலத்தவர்க்கு இசைந்த இலக்கண நூலாய் விளங்குகிறது.

**உரை :** சமணத் தமிழ் அறிஞர் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தமிழ் நூல்களுக்கு சிறந்த உரைகள் இயற்றி யுள்ளனர். இளம் பூரணர் முதல் உரையாசிரியராகக் கருதப் படுகிறார். இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதி யிருக்கிறார். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு சிறந்த உரை இயற்றியுள்ளார். குணசாகரர் யாப்பருங்கலக் காரிகைக்கும் மயிலைநாதர் நன்னூலுக்கும் உரை வரைந் துள்ளனர். நீலகேசி யுரை ஆசிரியரான வாமன முனிவர்; நாலடியார் உரையாசிரியரான பதுமனார் போன்றவர்களும் குறிப்பிடத்தக்க சமண உரையாசிரியர்கள் ஆவர்.

**நிகண்டுகள் :** நிகண்டு என்பது சொற்பொருள் அறிய உதவும் அகராதிபோன்ற அமைப்பை உடையது. இதனைத் தமிழுக்கு அளித்தவர்சமணரே. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் திவாகர முனிவர் 9500 சொற்கள்கொண்ட நிகண்டு இயற்றி னார். அது புரவலன் பெயரோடு சேர்ந்து சேந்தன் திவா கரம் என வழங்கப்பெற்றது. திவாகர முனிவரின் மகனை பிங்கல முனிவர் இயற்றிய பிங்கல நிகண்டும், மாமண்டூரைச் சார்ந்த மண்டலி புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டும் சமணர் படைத்தளித்த நிகண்டுகளேயாகும்.

மற்றும் பல துறைப் பிரிவு நூல்களையும் சமணர் இயற்றி னர். ஸ்ரீபுராணம், மாபுராணம் மேருமந்தரபுராணம் போன்ற நூல்கள் எழுதினர். அவை மணிப்பிரவாளம் போன்ற உரை நடையில் இயற்றப் பெற்றன. திருக்கலம்பகம், திருநூற் றந்தாதி, ஆதிநாதர்பிள்ளைத் தமிழ், போன்ற பிரபந்தங்

களும் பாடப் பெற்றன. கதை வாயிலாகச் சமண் கருத்தை விளக்கும் வகையில் கிளிவிருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம் போன்ற நீதிக்கதை நூல்களும் தோன்றின. கணிதம், சோதிடம், வானியல் போன்ற கலைகள் பற்றியும் சமணர்கள் நூல்கள் எழுதினர் என்று அறிகிறோம்.

கி. பி. மூன்றும் நூற்றாண்டு தொடங்கிப் பல நூறு ஆண்டுகளாகச் சமணர் தமிழினுக்குப் பணி புரிந்து வந்திருக்கின்றனர். அறம், காப்பியம், இலக்கணம், உரை, நிகண்டு முதலான பல்வகைப் பிரிவுகளிலும் அரிய நூல்கள் படைத்தளித்தனர்.

## 9. காப்பிய வளர்ச்சி

தொல்காப்பியத்திற்கு முன்னர்த் தமிழில் பெருங்காப்பியம் இருந்ததில்லை. ஆதலால் பெருங்காப்பிய இலக்கணம் தோன்றவில்லை. ஆயினும் சங்ககாலத்திலேயே பெருங்காப்பியம் படைக்கவேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. வடமொழித்தொடர்பால், தமிழ்ப்புலவர் இராமாயணம் பாரதம் போன்ற பெருங்காப்பியங்களை அறிந்திருந்தனர். வடமொழிப் பயிற்சியும் தமிழ்ப்புலமையும் வாய்ந்த சிலர் அவற்றைத் தமிழில் மொழிபெயர்க்க முயன்றனர்.

அக்காப்பியக் கதைகள் தமிழகத்தில் பரப்பப்பட்டன. சீதை விட்டுச்சென்ற அணிகளைக் குரங்குகள் எடுத்து அலங்கோலமாய் அணிந்ததும்,ஒலித்து இடைஞ்சல் செய்த பறவைகளை 'இராமன் கை கவித்து அடக்கியதும் புறநானூற்றுப் பாடல்களில் கூறப்படுகின்றன. அரக்கு மாளிகை எரித்தல் போன்ற பாரதக் கதை நிகழ்ச்சிகள் கலித்தொகையில் கூறப்படுகின்றன. சங்ககால இறுதியில் பெருங்காப்பியக் கதையார்வம் இருந்தது. புலவர்களும் பெருங்காப்பிய நாட்டங் கொண்டிருந்தனர்.

இதனால் சங்க மருவிய காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை எனப்படும் பெருங்காப்பியங்கள் தோன்றின. சிலப்பதிகாரம் முற்றிலும் தமிழ்மரபின் வழி அமைந்தது. மணிமேகலை சமயப் பெருங்காப்பியமாக மலர்ந்

தது. பெருங்கதையோ மொழிபெயர்ப்புக் காப்பியமாய் விளங்கியது.

சிலப்பதிகாரம் : தமிழ் இலக்கிய வரலாற்றில் சிலப்பதிகாரமே முதல் காப்பியமாகும். இது இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது. கோவலன் கண்ணகி இவர்கள் கதைக்குத் தமிழகத்தைக் களனுகக் கொண்டு இப்பெருங்காப்பியத்தைப் பாடியுள்ளார். சோழ நாட்டில் தொடங்கிய கதை வளர்ந்து, பாண்டிய நாட்டில் ஓங்கி உச்சநிலை எய்திப் பின் தாழ்ந்து, சேரநாட்டில் முடிகிறது. எளிமையும் இனிமையும் நெகிழ்வும் குழைவும் தெளிவும் செவ்விய ஓசையும் வாய்ந்து, பழகு தமிழில் அமைந்துள்ளது. பண்டைத் தமிழகத்தின் ஐவகை நிலப் பிரிவுகளும் மக்கள் வாழ்க்கையும் கலையும் நகர், மலை, ஆறு, கடல் முதலியவற்றின் சிறப்பும் எல்லாம் அழகுறக் காட்டப்படுகின்றன. மூவேந்தரின் அறமும் மறமும் ஆற்றலும் பாடப்பெற்றுள்ளன. நாடக அரங்கு, ஆடல், வரி, குரவை, யாழ், பண், பாணி முதலியன கதையூடு கலந்து நின்று அழகு பயக்கின்றன. கோவலன் கண்ணகி, மாதவி இவர்களோடு வாழ்ந்த வாழ்க்கையில் தமிழ் அகப்பொருளும் செங்குட்டுவன் போரில் புறப்பொருளும் விளக்கப் பெறுகின்றன. கண்ணுடியில் குன்றினைக் காட்டுவார்போல் இளங்கோவடிகள் தம் நெஞ்சத்துக் கருத்தாய் அமைந்து கிடந்த தமிழகத்தைச் சிலப்பதிகாரத்தில் காட்டியுள்ளார். இதனை நாடகக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், மூவேந்தர் காப்பியம் எனப் பல்வேறு வகையில் ஆய்ந்து கண்டு அறிஞர் மகிழ்வர். தமிழ் மரபு வழி நின்று தமிழகத்துப் பெருமை நலங்களெல்லாம் கொழிக்கப் பாடப் பெற்ற சிலப்பதிகாரம் நெஞ்சை அள்ளுங் காப்பியமாய் அமைந்ததோடு மற்றக் காப்பியங்களுக்கு வழிகாட்டியாயும் உள்ளது.

மணிமேகலை : இது சிலப்பதிகாரக் கதையின் தொடர்ச்சியான கதையினைக் கொண்டுள்ள காப்பியமாகும். இவ்விரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்பர். இதனைப் பாடிய சீத்தலைச்சாத்தனுர் இளங்கோவின் உற்ற நண்பர். ஒருவர் காப்பியத்தை மற்றவர் கேட்டருளினுர் என்று

பாயிரத்தால் அறிகிறோம். சிலப்பதிகாரக் காப்பியத் தலைவனை கோவலனுக்கு மாதவி வயிற்றில் பிறந்த மணிமேகலை கதையினைப் புகார், வஞ்சி, காஞ்சி ஆய பதிகளைக் களன்களாகக் கொண்டு காப்பியம் பாடியுள்ளார். காப்பிய இலக்கணத்தையோ, இலக்கியச் சுவைகளையோ பொருட்படுத்தாமல் பௌத்தக் கொள்கைகளைப் பரப்பும் சமய காப்பியமாகவே பாடியுள்ளார். கணிகையர் குலத்துதித்த காரிகையைக் காவியத் தலையாக்கியிருப்பது பெரும் புரட்சியாகும். காப்பியத்தின் தொடக்கமுதல் இறுதிவரை மணிமேகலையின் துறவை நடத்தி, தீவதிலகை, ஆபுத்திரன், ஆதிரை, காயசண்டிகை முதலியோர் வரலாறுகளை இடையிடையே கிளைக் கதைகளாய் இணைத்துக் காப்பியமாக்கியுள்ளார். சமயக் கொள்கைகளை விளக்குவதற்கென்று இறுதி மூன்று காதைகளைத் தேர்ந்தெடுத்து எஞ்சிய 27 காதைகளில் பொது அறங்களை எளிய நடையில் கூறியிருப்பதால் யாவரும் விரும்பத் தக்க காவியமாய் உள்ளது. மது, சாதி, சிறை முதலியவற்றை ஒழிக்கும் சீர்திருத்தக் காப்பியமாகவும் கொள்வர்.

பெருங்கதை : இது உதயணன் வரலாற்றை விரியக் கூறும் பெருங்காப்பியமாகும். இதனைப் பாடிய ‘கொங்கு வேளிர்’ கொங்குநாட்டின் விசயமங்கை ஊரினர். அரச குலத்தவர்; குணாட்டியர் பைசாச மொழியில் எழுதிய பிருகத் கதையினை முதனூலாகக் கொண்டு உதயணன் வரலாற்றை ஐந்து காண்டங்களில் பெருங்காப்பியமாகப் பாடியுள்ளார். இது சுவையான கதை அமைப்புடையது. மூல நூலில் உள்ளவாறு கதை நிகழ்ச்சிகளும் அமைக்கப்பெற்றிருப்பதால் இது மொழி பெயர்ப்புக் காவியமாகவே உள்ளது. இது சிலப்பதிகாரத்திற்கு முற்பட்டது என்னும் கருத்தும் உண்டு. பெருங்காப்பிய இலக்கணம் பொருந்திய இக் காப்பியம் ஐம்பெருங்காப்பியப் பகுப்புக் கண்டவர் கண்ணுக்குத் தப்பியது எப்படி என்பது விளங்கவில்லை.

இம்மூன்று காப்பியங்களும் சங்க காலத்தவரால் போற்றப்பட்ட ஆசிரியப்பாவாலேயே இயற்றப்பெற்றன. ஆறும்

நூற்றுண்டில் பாவினங்கள் வளரத் தொடங்கின. 'விருத்தம்' என்னும் பாவினம் விரும்பிக் கையாளப் பெற்றது. சைவரும் வைணவரும் பக்திப் பாடல்களில் முனைந்து நின்றனர். பௌத்தரும் சமணரும் தன் சமயக் கருத்தைப் பரப்பக் காப்பியம் இயற்றுவதில் ஆர்வங்கொண்டனர். இதனுல் மேலும் பல சிறு காப்பியங்களும் பெருங்காப்பியங்களும் தோன்றின.

**ஐஞ்சிறுகாப்பியங்கள் :** சூளாமணி, நீலகேசி, உதயண குமார காவியம், யசோதரகாவியம், நாககுமார காவியம் எனப்பட்ட ஐந்துமே சமணரால் இயற்றப்பெற்ற சிறுகாவியங்களாகும். இவற்றுள் சூளாமணி நீங்கலாக மற்ற நான்கும் சிந்தாமணிக்கு முற்பட்டவையாகும். இவ்வைந்துமே விருத்தப் பாக்களால் அமைந்தவையாகும்.

**குண்டலகேசி :** ஐம்பெருங்காப்பியப் பகுப்பில் இடம் பெற்ற குண்டலகேசியும் வளையாபதியும் சிந்தாமணிக்கு முற்பட்டவையாதல் கூடும். குண்டலகேசி மறைந்துபோன பௌத்தக் காப்பியம். 19 செய்யுட்களே கிடைத்துள்ளன. இது விருத்தப்பாக்களால் இயன்றதாகும். மணிமேகலையைப் போல் ஒரு பெண்ணைத் தலைவியாகக் கொண்டுள்ளது. கள்வனைக் காதலித்து, கொல்ல வருங்கால் அவனைக் கொன்று, மனவெறுப்புற்று வாதில் வல்லவளாகிப் புத்தசமயம் பரம்பும் பெருந்தலைவியாகிறுள். 'நீலகேசி' இதற்கு எதிர் நூலாகத் தோன்றும் அளவுக்கு இதில் சமணப் பழிப்பும் பௌத்தக் கருத்துவிளக்கமும் மிகுந்திருந்தது. இது வடமொழிக் கதையினைத் தழுவி இயற்றப் பெற்ற காப்பியமேயாகும்.

**வளையாபதி :** வளையாபதி சமணப் பெருங்காப்பியமாகும். 72 பாடல்களே கிடைத்துள்ளன. இதுவும் விருத்தப் பாவால் இயன்ற காப்பியமேயாகும். தாழ்குல நங்கையை மணந்து பின் நீங்கிப் பொருள் தேடிவந்து தன் குல நங்கையுடன் வாழும் வணிகனை, தாழ்குல நங்கை வயிற்றுப் பிறந்த மகன் கண்டு வழக்காடி, தாயைத் தந்தையுடன் கூட்டி வைப்பதாய்க் கதை இருந்தது என்பர்.

காப்பிய வளர்ச்சியில் சிந்தாமணியே முடி நிலையாகும். ஆறாம் நூற்றாண்டில் வளரத் தொடங்கிய விருத்தப் பாவினம் ஆழ்வார் நாயன்மார்களால் பல்கிப் பெருகியது. பல்வகை ஓசை ஒழுக விருத்தம்பாடும் திறவோர் காணப்பட்டனர். விருத்தப் பாவினமே காப்பியத்திற்குரிய உருவம் என்பதும் உறுதி செய்யப்பட்டது, காப்பிய அமைப்பில் புலவர் கையாண்ட நெறிகளும் காப்பிய வெற்றி தோல்விக்குரிய காரணங்களும் காணக் கிடந்தன. சிலப்பதிகாரம் தமிழ் மரபு வழி நின்று தமிழக அழகைக் காட்டி வெற்றி கண்டது. தமிழ்க்கதையில் பொது அறம் பெருகச் சமய காப்பியமாய் மணிமேகலையும் வெற்றிக் காப்பியமாயது. மொழிபெயர்ப்பேயாயினும் கதைச் சுவையால் பெருங்கதையும் காப்பியப் பெருமை பெற்றது. பிறவெல்லாம் கதையின்மை, சமயக் கோட்பாட்டுச் செறிவு, தமிழ் மரபு போற்றாமை போன்ற காரணங்களால் காப்பியத் தரங்குன்றியிருந்தன. திருத்தக்கதேவர் இவற்றையெல்லாம் கண்டாய்ந்து குறை களைந்து நிறைவுடைய பெருங்காப்பியம் இயற்றினர்.

சிந்தாமணி செம்மை நலங் கனிந்த விருத்தப்பாக்களால் இயற்றப்பெற்ற பெருங் காப்பியமாகும். சமணர்களிடையே செல்வாக்குப் பெற்ற சீவகன் கதையைத் தேர்ந்துள்ளார். இக்கதை அடிப்படையில் பெருங்கதை போலவே உள்ளது. பிறப்பு, திருமணங்கள், துறவு முதலியவற்றில் சீவகனுக்கும் உதயணனுக்கும் ஒப்புமை காணக்கூடும்; ஆனால் மொழிபெயர்ப்பு உதயணன் போலின்றிச் சீவகன் கவிஞர்இதயத்தில் தோய்ந்தவனாகவெளிப்படுகிறான். மணிமேகலையைப்போலவே சிந்தாமணியும் சமயம் பரப்புதலை வெளிப்படையாகக் காட்டுகிறது. ஆனால் கவிதையழகினூடே கருத்தழகு எழில்பெறும் வகையில் கூறப்பட்டுள்ளது. சமணக் கருத்துக்களையெல்லாம் இறுதி இலம்பகத்தில் தொகுத்துக் கூறியுள்ளார். சிலப்பதிகாரத்தில் உள்ளது போலவே சிந்தாமணியில் தமிழ் மரபுகள் போற்றப்படுகின்றன. சீவகன் திருமணங்களில் தமிழ் அகப்பொருளும் அவன் செய்த போர்களில் புறப்பொருளும் புதிய

கற்பனையுடன் மறுமலர்ச்சி பெற்றுள்ளன. யாழ்ப் போட்டியில் இசைத் தமிழும் தேசிகப் பாவைக் கூத்திலும் சுதஞ் சணன்நாடகத்திலும் நாடகத் தமிழும் புதுப்பெருமை எய்து கின்றன. யானையேற்றம் மாலைகட்டுதல், ஓவியம் தீட்டல், பந்தாடல் போன்ற கலைகள் விளக்கம் பெறுகின்றன, தமிழர் அரசியல், பண்பு, பழக்க வழக்கங்கள் ஆங்காங்கே அழகு செய்கின்றன. சீவகன் தன்னேர் இல்லாத் தலைவனாக விளங் குகிறான். திருத்தக்கதேவர் தமிழின் பழைய இலக்கிய நயங் களைப் போற்றியதோடு புதிய கற்பனைகளையும் அமைத்துக் குறையிலா நிறைவு வாய்ந்த பெருங் காப்பியம் இயற்றி யுள்ளார். ஒன்பதாம் நூற்றாண்டில் சிந்தாமணி பெருங் காப்பிய இலக்கணப்படி அமைந்து காப்பிய நலமெல்லாம் நிரம்பித் தமிழுக்குத் தன்னேர் இல்லாத தனிப் பெருங் காப் பியமாய்த் திகழ்ந்ததோடு கற்றோர் நெஞ்சைக் கவரும் சக்தி வாய்ந்த தாகவும் விளங்கியது. சைவரும் வைணவரும் தத் தம் சமயத்திற்கு ஒரு காப்பியம் தோன்றாதா என்று ஏங்கத் தொடங்கினர். 300 ஆண்டுகட்குப் பின் சைவத்திற் கொரு பெரிய புராணமும் வைணவத்திற்கொரு கம்ப ராமாயண மும் எழுந்தன.

பெரிய புராணம்: பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற் பகுதியில் சேக்கிழார் பெரியபுராணம் பாடினார். இது சுந்தரர் வரலாற்றை முதல், இடை, முடிவில் கொண்டு 63 நாயன் மார்களின் பக்தி வாழ்க்கையைக் கூறும் சமய காப்பியமாய் அமைந்துள்ளது. இது பக்திச் சுவை ததும்பும் காப்பியமாய் விளங்குகிறது. சைவப் பன்னிரு திருமுறையில் இடம் பெற் றுள்ளது. தமிழ் நாட்டில் வாழ்ந்த சைவச் சான்றோர்களின் வரலாற்றைக் கூறுவதால் வரலாற்றுக் காப்பியமாகவும் கொள்ளலாம்.

சேக்கிழாருக்குப் பின் வந்த கம்பர் வான்மீகி இராமா யணத்தைத் தமிழ் மரபிற்கிசையப் பாடினார். வடமொழிக் கதையே யாயினும் இராமன் கதை நாடறிந்த கதையாகும். ஆழ்வார்கள் இராமாவதாரத்தைப் பாடி இராம பக்தியைப் பரப்பியிருந்தனர். கம்பர் தேவ இராமனைத் தலைவனாகக் கொண்டு உணர்ச்சிச் சித்திரமாய் இலங்கும் உறுப்பினர்களை

உலவ விட்டு, கற்பனை வருணனைகள், பெருமிதப் போக்குடைய பெருங் காப்பியம் பாடியுள்ளார்.

பெருங் காப்பியத்திற்கு திருத்தக்கதேவர் கண்ட யாப்பு உருவத்தையும் காப்பிய நுட்பங்களையும் கம்பர் தம் காப்பியத்தில் பெருமிதப் பாங்கிலே பயன்படுத்தியுள்ளார். பெருங் காப்பிய இலக்கணப்படி அமைந்து சொல்வளம், சந்த இன்பம், பொருள் நயம் இவற்றால் பெருமிதந் தோன்றப் பொலிந்து, குணப் படைப்பால் மிக உயர்ந்து உலகப் பெருங் காப்பியங்களுள் ஒன்றாக மதிக்கத்தக்க நிலைபேறு வாய்ந்துள்ளது.

கம்ப ராமாயணத்தோடு காப்பிய வளர்ச்சி முற்றுப் பெற்றது எனலாம். காப்பிய காலமும் முடிந்தது என்றே கொள்ளவேண்டும். மீண்டும் காப்பிய காலம் மறுமலர்ச்சி எய்தும் என்று நம்புவதற்கில்லை. பின்னர், கிறித்தவ வீரமா முனிவரும் முகமதிய உமறுப் புலவரும் தத்தம் சமயத்திற்கு ஒரு காப்பியம்வேண்டிச் சிந்தாமணியையும் கம்பராமாயணத்தையும் முன்னுருவாகக் கொண்டு பாடினர். சிலப்பதிகாரம், சிந்தாமணி, கம்ப ராமாயணம் ஆய மூன்றும் தமிழுக்கு முப்பெருங்காவியங்களாய் விளங்குகின்றன.

# பிற்காலம்

## 1. பிரபந்தங்கள்

பிரபந்தம் என்பது யாத்த அல்லது கட்டப்பெற்றதான நூல் எனப் பொருள் தரும். இதனையே சிற்றிலக்கியம் எனவும் வழங்குவர். பெருங்காப்பியம்போல் தலைவன் முழு வாழ்க்கையையோ, சிறு காப்பியம்போல் தலைவன் வாழ்க்கைப் பெரும் பகுதியையோ கூறாமல் தலைவன் வாழ்க்கையில் ஒரு பகுதியை பாடற் பொருளாகக் கொள்வது பிரபந்தம் என்னும் சிற்றிலக்கியம் ஆகும். தமிழ்ப்பிரபந்தங்கள் 96 என்பர்.

பிரபந்தங்கள் பலவற்றிற்குத் தொல்காப்பியத்தில் இலக்கணக் குறிப்புக் காட்டக் கூடுமாயினும் பாட்டியல் நூல்களே பிரபந்தங்களுக்கு முறையான இலக்கணம் கூறுகின்றன. பெருங் காப்பியங்களும் சிறு காப்பியங்களும் தோன்றிய இடைக்காலத்தில் இரண்டொரு சிற்றிலக்கியங்களே எழுந்தன. பிற்காலத்தில்தான் பெரு வாரியாக அந்தாதி, உலா, கலம்பகம், கோவை, பிள்ளைத் தமிழ், பரணி, பள்ளு, குறவஞ்சி முதலான சிற்றிலக்கியங்கள் தோன்றின.

பிரபந்தங்கள் பற்றி ஒரு குறை கூறுவர். பிரபந்தங்களுள் பல, சிறந்த இலக்கியத்திற்கு இன்றியமையாத தனித்தன்மை, படைப்பாற்றல், புதுமை நலம் முதலியன உடையன அல்ல என்பர். கலிங்கத்துப்பரணி, முக்கூடற் பள்ளு, குற்றாலக் குறவஞ்சி முதலான சிற்றிலக்கியங்களை நீக்கிப் பார்த்தால், இக்கூற்று தவறுடையது என்று கூற முடியாது.

சிற்றிலக்கியங்கள் குறுகிய இலக்கண வரம்பு கொண்டவை யாதலின் கவிஞரின் கற்பனைகளைக் கடுங்கட்டுப்பாட்டுக்குள் அடக்கி விடுகின்றன. பரந்தகன்ற வரம்பு இன்மையின் புத்தம் புதிய கற்பனைகள் தோன்ற வழியின்றி இவ்வகை

இலக்கியம் ஒன்று மற்றொன்றைப் போலவே அமைந்து விடுகிறது.

பிற்காலப் பிரபந்தங்கள் தொடக்கத்தில் மக்களைப் பாடுவதற்கென்றே எழுந்ததாயினும், பின்னர், கடவுளரைப் பாடவே பயன்பட்டன. முதற்கோவை பாண்டியனைத் தலைவனாகக் கொண்டுள்ளது. முதற் கலம்பகத்திற்கு நந்திவர்மனே தலைவன். முதல் பிள்ளைத் தமிழ் குலோத்துங்கன்பற்றிப் பாடப்பெற்றது. ஆனால் நாளடைவில், கடவுளரைப் பாடிப் பற்பல கடவுட் பிரபந்தங்களையே பாடிக் குவித்தனர்.

மனித வாழ்க்கை ஒரு மறைபொருட் சுரங்கம். ஒருவன் வாழ்க்கை மற்றவன் வாழ்க்கையின்று மாறுபட்டமைகிறது. ஆதலால் மனிதரைப் பற்றிப் பாடத் தொடங்கின் உலகில் எத்தனை மனிதர் உண்டோ அத்தனை காப்பியங்கள் இயற்றலாம். காப்பியச் சுவைக்குக் குறை நேராது. ஆனால் தெய்வங்களின் மாறாத் தன்மைகளைப் பொருளாகக் கொண்டு பல நூல்கள் படைக்குங்கால் ஒன்றன் பிரதிகளாகவே பல நூல்களும் அமைந்து விடுவதில் வியப்பில்லை.

**(i) அந்தாதி :** சங்கமருவிய காலத்தில் முதல் ஆழ்வார் மூவரும் அந்தாதி பாடியுள்ளனர். தேவாரமூவர்க்கு முற்பட்ட காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி பாடியிருக்கிறார். நூற்றுக்கு மேற்பட்ட அந்தாதி நூல்கள் தோன்றியுள்ளன. அந்தாதிகள் பெரும்பாலும் கடவுளர் பற்றியனவாகவே உள்ளன. சம்பந்தர், நம்மாழ்வார் போன்ற சமயக்குரவர்மீது பாடப்பெற்ற அந்தாதிகளும் உண்டு.

அந்தாதி இலக்கணம் மிக எளிய அமைப்பாகும். ஒரு பாடலின் இறுதி எழுத்து, அசை, சீர் அல்லது அடி, அடுத்த பாடலில் முதலாக அமைய வரும் நூறு வெண்பாக்கள் அந்தாதி எனப்படும். தொடக்கத்தில் அந்தாதி வெண்பாக்களால் அமைக்கப்பெற்றதாயினும் காலப்போக்கில் கட்டளைக் கலித்துறை, விருத்தம் முதலியவற்றிலும் அந்தாதி பாடினர்.

பிற்காலத்தில் அந்தாதியில் சிலவகைகள் ஏற்பட்டன. பத்துப்பாடல்களுக்கு ஒரு சந்தமாய்ப் பத்துச் சந்தங்களில் அமைந்த விருத்தங்களை கொண்டது பதிற்றுப்பத்தந்தாதி எனப்பட்டது. வந்த சொல்லும் தொடரும் மீட்டும் வந்து பொருள் அடிதோறும் மாறுபட அமைவது யமக அந்தாதி எனப்படும். செய்யுளின் நாலடிகளிலும் முதலெழுத்து ஒன்றே வேறுபட்டுப் பிற ஒத்து நின்று பொருள் வேறுபட அமைவது திரிபந்தாதியாகும். இதழ்கள் ஒட்டா ஒலியால் அமைவது நிரோட்டகயமக அந்தாதி எனப்படும். அந்தாதியில் கற்பனைக்கு இடமின்றி யாப்பு அமைப்பு நுணுக்கத்திற்கே முழுஇடமும் அளிக்கப்பெற்றுள்ளது. பாடல்களை நினைவில் வைத்துக் கொள்வதற்கு அந்தாதி முறை பயனுடையதாய் உள்ளது.

**(ii) கோவை :** அகப்பொருள் துறைகள் அமைய நானூறு கட்டளைக் கலித்துறைப் பாக்களால் பாடப்பெறுவது கோவையாகும்.

சங்க காலத்தில் அகப் பொருளில் தனித்தனி துறையைத் தேர்ந்து பாடுதல் இயல்பாயிருந்தது. கலித்தொகையிலும் ஐங்குறுநூற்றிலும் ஒரு புலவரே ஒரு திணையின் பல துறைகள் பற்றிப் பாடினாலும் அவை தொடர் நிகழ்ச்சிகளாக அமையவில்லை. பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள அகப்பொருள் நூல்களில் ஒரு புலவரே ஐந்திணையின் பல துறைகள் பற்றிப் பாடியுள்ளனர். கணிமேதாவியாரின் திணைமாலை நூற்றைம்பது என்னும் நூல் ஐந்து திணை பற்றிய 150 பாடல்களைக் கொண்டு கோவைக்கு வழிகாட்டியாய் உள்ளது எனலாம்.

முதல் கோவையான பாண்டிக் கோவை கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றியது. இது பாண்டிய மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளது. தேவாரப் பெரியோரும், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் போன்றோரும் அகப்பொருள் துறைவழி நின்று பேரின்பக் காதல் பாடினர். ஆண்டாள் கண்ணனைக் காதலனாகவே கொண்டு பாடினாள். மாணிக்கவாசகர் இந்நெறி வழிநின்று சிவபெருமானைப்பாட்

டுடைத் தலைவனாகக் கொண்டு அகப்பொருள் துறைகள் அமையத் திருக்கோவையார் பாடினார். இது சமயக்கோவை நூலாகும்.

ஐந்திணையின் துறைகள் பற்றிய பாடல்களைமுத்துக்களைக் கோப்பதுபோல், வரிசையுறத் தொடர்நிலைச் செய்யுளால் கோக்கப்படும் கோவை களவும் கற்புமாகிய இல்லற வாழ்க் கையைப் பொருளாகக் கொண்டு சிறு காவியம் எனும்படி அமைகிறது. ஆசிரியம், வெண்பாப் போன்ற பாவகையாலும் கோவை பாடலாமாயினும் கட்டளைக் கலித்துறையே சிறப் புடையது. கோவையில் அகப்பொருள் தலைவன் கிளவித் தலைவன் எனப்படுவான். அவன் பெயர் சுட்டப்படுவதில்லை. ஆனால் பாட்டுடைத் தலைவன்பெயர் கோவையில் கூறப்படும். ஆனால் அவனது அகவாழ்க்கை நிகழ்ச்சிகள் கோவையில் பாடப்பெறுவதில்லை. அம்பிகாபதிக் கோவைபோல் பாட் டுடைத் தலைவனைப் பெறாத கோவைகளும் உண்டு.

பாண்டிக் கோவை, குலோத்துங்கன் கோவை போன்றன மன்னர் பற்றியவையாகும். தஞ்சைவாணன் கோவை தலைவனையும் குளத்தூர் கோவை வள்ளலையும் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளன. சமயக் குரவர் மீது பாடப் பெற்ற கோவைகளும் உண்டு. திருக்கோவையார் சிவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளது. சமயம் பற்றிய கோவை நூல்களே மிகுதியாக உள்ளன.

கோவை சங்க அகப்பொருளின் மறுபதிப்பேயாகும். சங்க காலத்தில் அகப்பொருள் பாடல்கள் வாழ்வியலை ஒட்டி எழுந்தன. பிற்கால வாழ்வியல் சமய அடிப்படையில் அமைந்திருந்தது. கோவை சங்ககால அகப்பொருளை மாற் றம் எதுவுமின்றிக் கையாண்டிருப்பதால் கோவைப் பாடல் கள் வாழ்வியலினின்று விலகி நின்றன. இதனால் பாடல்கள் இயற்கைத் தன்மை குன்றிச் சுவைக்குறையுடையனவாக உள்ளன. சங்ககால அகப்பொருட் பாடல்களில் தலைவியின் குண அழகே வியந்து கூறப் பெற்றிருப்பக் கோவையில் உடல் வருணனைகள் மிகுதியாகக் கூறப்பெற்றுள்ளன. சங்ககாலத் தில் கூறப்பெற்றாற்போல், கோவையில் காதல் நுட்பமாக

வும் நாரிகமாகவும் கூறப்படவில்லே. ஆயினும் சங்க அக நூற்பயிற்சிக்கு இது சிறந்த துணேயாதல் கூடும்.

(iii) உலா : தொல்காப்பியர் பாடாண் பகுதியாக 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' என்ருர். இதற்கு நச்சினர்க்கினியர் 'உலாச் செய்யுள் போல்வன' என்று விளக்கம் கூறியுள்ளார். 'பேதை முதலான எழு வகைப் பருவப் பெண்கள் காதல் கொள்ள வீதியிலே தலே வன் வருவதாகப் பாடுதல் உலா' என்று பாட்டியல் கூறுகிறது.

வேந்தன் வீதியில் உலாவருங்கால் கன்னி இளங்காரிகை யர் கண்டு, காதல் பொங்க ஏங்கியதை முத்தொள்ளாயிரப் பாடல்கள் காட்டுகின்றன. பெருங்கதையில் உதயணன் திருமண நாளிலும் முடிசூட்டு விழா நாளிலும் உலாச் சென்ற போது மகளிர் கண்டு காதலுற்றதைக் காண்கிருேம். சீவ கன் ஆநிரை மீட்டித் திரும்பும்போதும் நாட்டை மீட்டு நக ருள் புகும்போதும் வீதி நெடுக எழு பருவ மகளிர் நெருக்கி நின்று அவனேக் காணத் துடிக்கும் வேட்கையினேச் சிந்தா மணி சுவை கனிய வருணிக்கிறது. காரிகையர் காமுற இராமன் உலாவந்த காட்சி கம்பராமாயணத்தில் உலா வியல் படலமாக அமைந்துள்ளது. காப்பியங்களில் தலேவ னின் ஆண்மை, அழகு முதலியனவற்றின் அருமை பெருமை களேப் புலப்படுத்தக் கையாண்ட நெறியே 'உலா' என்னும் தனிநூலாகி விட்டது. பாட்டியல் அதற்கெனத் தனி இலக் கணமும் வகுத்துள்ளது.

'ஆதியுலா' எனப்படும் திருக்கைலாய ஞானஉலா ஒன் பதாம் நூற்ருண்டில் சேரமான் பெருமான் நாயனுரால் இயற்றப் பெற்றது. முதல் உலா சமய உலாவாகவே தோன் றியது. பின்னர், திருப்பூவண நாதர் உலா, மதுரைசொக்க நாதர் உலாப்போன்ற சமய உலாக்கள் பல எழுந்தன. மன் னனேத் தலேவனுகக் கொண்ட உலாக்களுள், ஒட்டக்கூத்தர் பாடிய விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராசராசசோழனுலா சிறந்தனவாகும். உலா பெரும் பாலும் எழுவகைப் பருவப் பெண்களும் வந்து காணும் ஒரு

நாள் நிகழ்ச்சியாக அமையும். ஆனால் மதுரைச் 'சொக்க நாதர் உலா' எழுவகைப் பருவப் பெண்கள் முறையே வந்து காணும் ஏழுநாள் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

உலாவில் உளவியல் கலையின் நுட்பமும் அழகும் விளக்கம் பெறுகின்றன. பேதை, பெதும்பை, மங்கை மடந்தை, அரிவை தெரிவை, பேரிளம்பெண் எனப்படும் ஏழுவகையான பருவப்பெண்களுக்கு வயது வரம்பும் விளையாட்டு வகையும் கூறப்படுவதோடு அவர்கள் மையலுற்று எய்தும் மனநிலை உணர்ச்சி மாற்றங்களைக் கண்கள் வாயிலாகப் புலப்படுத்தி அழகும் இயல்புமுற வருணிக்கும் திறன் பாராட்டுக்குரியது. கள்ளமோ, காதலோ இன்றிப் பாவை வைத்து விளையாடும் ஏழுவயதிற்குட்பட்ட பேதைக்குத் தலைவனைக் கண்டதும் விளையாடத் தோன்றுகிறது. பருவநலமெல்லாம் நிரப்பிய பன்னிரண்டு ஆண்டுப் பேதைக்குத் தலைவனைக் காணக் காமம் தோன்றுகிறது. காதலைச் சுவைக்கும் பக்குவம் வாய்ந்த பதின்மூன்று வயது பருவ மங்கை தலைவனைக்கண்டு இளைத்துச் சென்று இரங்கிக் கொண்டிருக்கிறாள். மடந்தை பத்தொன்பது வயதான நிலையில் காதல் அனுபவம் உடையவளாய்த் துணிந்து கிளியைத் தலைவனிடம் தூது அனுப்புகிறாள். இருபத்தைந்து வயது உடைய அரிவை தலைவன் பொருளை நினைந்து தேற்றிக்கொள்கிறாள். முப்பத்தொரு வயதான தெரிவை தலைவன் புகழை நினைந்து தேற்றிக் கொள்கிறாள். வயது முப்பத்திரண்டாகிக் காதலில் மிகுந்த பயிற்சியும் எவரையும் ஈர்த்துக் கொள்ளும் திறனும் வாய்ந்த பேரிளம் பெண் அடங்கிய காதலளாய் நிலாமுற்றத்திலிருந்து வருந்துகிறாள்.

உலாவரும் தலைவனைக் கண்டு காதலுறுதல் மகளிர்க்கு அழகாகுமா? என்னும் வினா எழுகிறது. உலாக் காண்போர் குலமகளிர் அல்லர்; விலை மகளிரே என்னும் அமைதி காட்டுவர். மன்னன் விலைமகளிர் வீதிமட்டுந்தானா உலாச்செல்வான்? தலைவனின் ஆண்மை அழகு முதலான நலங்களின் மேன்மையை விளக்குவதற்குக் கொண்ட இயல்புக் கற்பனை நெறியே உலாவில் இடம் பெற்றுள்ளது.

**(iv) கலம்பகம்:** பல்வகை மலர்களைக் கலந்து தொடுக்கும் மாலையைக் கதம்பம் என்பர். இச்சொல்லின் உண்மையான உருவம் கலம்பகம் என்பதே. இதனைக் கலப்பு அகம் எனப் பிரித்துப் பலவகைகளின் கலப்பினை உடையது என்று பொருள் காட்டுவர்.

நிறம், வடிவம், மணத்தால் பல்வேறு வகைப்பட்ட மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை கலம்பகம் (கதம்பம்) எனப்படுவதுபோல் பல்வகைப் பாக்களும் பாவினங்களும் உறுப்புக்களும் கலந்து அகம்புறமாகிய பொருள் விரவி எண் வகைச் சுவைகள் மலிய அந்தாதித் தொடையாய் அமைக்கப் பெற்ற பாமாலை கலம்பகம் ஆகும்.

கலம்பகத்தில் புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், தழை, சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, ஊசல் முதலிய பதினெட்டு உறுப்புக்கள் பற்றிப் பாடப் பெறும். தெய்வம், அந்தணர், அரசர் முறையே 100, 95, 90 பாடல்கள் பெறுவர் என்னும் விதி பெரும்பாலும் போற்றப்படவில்லை.

கலம்பகம் புதியவகைப் படைப்பேயாகும். தொடர்பில்லா நிகழ்ச்சிகள்பற்றிய பலவகைப் பாடல்களும் பல்வகைச் சுவைகளைப் பயப்பதால், கலம்பகம் இனிய பொழுது போக்கு இலக்கியமாய் உள்ளது. அகப் பொருட்துறை பற்றிய பாடல்கள் இவ் விலக்கியத்திற்கு மெருகேற்றுகின்றன. சம்பிரதம் போன்ற துறைப் பாடல்கள் புதிய சுவைகள் பயக்கின்றன.

நந்திக் கலம்பகமே முதல் கலம்பகமாகும். ஒன்பதாம் நூற்றுண்டில் மூன்றும் நந்திவர்மனைத் தலைவனாகக்கொண்டு பாடப்பெற்ற இக்கலம்பகம் சொற்சுவையும் பொருள் சுவையும் இசை இன்பமும் நிரம்பப் பெற்றது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. புலவர் அறம் வைத்துப்பாடினுர் என்றும் பாடல்களைக்கேட்டு மன்னன் உயிர் துறந்தான் என்றும் வழங்கப் பெறும் கதைபற்றிய உண்மை தெரியவில்லை. இனிய எளிய மெல்லென்ற சொற்களால் அமைந்து அமுதனைய இன்னேசை பாய, சங்கப்பாட்டின பொருள் சுவை மல்கி விளங்க,

உளங்கவர் கற்பனை பொலிந்து இன்சுவைப் பாட்டுக்களாய் உள்ளன.

ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரியப் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அம்மென்மாக் குழல்சரிய ஆடாமோ ஊடல்

இப்பாட்டு ஊஞ்சல் காட்சியோடு அதன் ஓசையையும் கூட்டி வந்து விடுகிறதன்றோ?

ஈட்டு புகழ்நந்தி பாணநீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடியளவும்-காட்டிலெழும்
பேயென்றாள் அன்னை பிறர்நரியென் றார்தோழி
நாயென்றாள் நீயென்றேன் நான்.

தலைவி சிறிய இப்பாட்டில் பாணனைப் பழிக்கும் திறனை என்னென்பது!

முதல் கலம்பகம் மன்னனைப் பாடிப் பெரும் புகழ் பெற்றிருந்தும் பின்னைய கலம்பகங்கள் பெரும்பாலும் சமயக்கலம்பகங்களாகவே எழுந்தன. இரட்டையர் பாடிய தில்லைக் கலம்பகம், பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பகம் போன்ற சைவ வைணவக்கலம்பகங்களேயல்லாமல் சமணத்திற்கென ஒரு திருக்கலம்பகமும் தோன்றியது. இவையெல்லாம் சமயக் கலம்பகங்களாக உள்ளன.

**(V) பரணி:** பரணி நட்சத்திரம்; நாள். பரணி நாளில் கொண்டாடப் பெறும் போர் வெற்றியைப் பாடுதலின் பரணி எனப்படும். காளிக்குரிய நாள் பரணி. பரணி நாளில் காளிக்குக் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடல் பண்டைய வழக்கம். போர்த்தெய்வமான காளி பேய்களோடு பரணி நாளில் போர்க்களத்தில் கூழ் அட்டு உண்டு வெற்றி கொண்டாடுதலைப் பாடுதலாலும் பரணி எனப் பெயர் பெற்றது.

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று போர் வென்ற வீரனைப் பாடுதலே பரணி என்று பாட்டியல் கூறுகிறது. களவேள்வி, முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை

போன்ற பண்டைய மறத்துறைகளிலிருந்து மலர்ந்த சிறு காவியமே பரணி என்றும் கூறலாம்.

கலிங்கத்துப்பரணி: இதுவே முதல் பரணி நூல்; பரணிகளிலே தலை சிறந்த நூலுமாகும். கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் தீபங்குடி ஊரினரான செயங்கொண்டார், குலோத்துங்கன் பற்றிப் பாடிய இவ்வீர காவியத்தில் கருணாகரத்தொண்டைமான் செய்த கலிங்கப்போரின் வருணனைகள் உள்ளன.

கடவுள் வாழ்த்தொடு தொடங்கும் இவ்வீரகாவியத்திற்குக் 'கடை திறப்பு' என்னும் காதல் சுவை முகப்பு அழகு செய்கிறது. காளியின் காடு, கோயில், பேய் முதலியன பற்றிய வருணனைகள் முதலிலும், குலோத்துங்கன் குடி வழிப் பெருமை, பிறப்பு நடுவிலும் போர் வருணனைகள் இறுதியிலுமாக 599 கலித்தாழிசைப் பாக்களால் இப்பரணி பாடப்பெற்றுள்ளது; பண்டைக்காலத்தில் பரணி நூல்கள் இருந்தன என்றும் அவற்றைப் படித்துச் செப்பமுற அமைக்கப்பெற்றது கலிங்கத்துப்பரணி என்றும் டாக்டர் உ. வே. சா. போன்றோர் கருதுகின்றனர். ஆனால் பண்டைய பரணி பற்றிய குறிப்பெதுவும் கிடைத்திலது 'களவழி' நூலும் சிந்தாமணியின் போர்க்கள வருணனைகளும் பரணிக்கு வித்தாய் உள்ளன என்று கூறலாம்.

வீரம் மலிந்த நாளில் எழுந்த சங்ககாலப் போர்ப்பாடல்கள் போலவே, வாளை விற்றுப் புகழைத்தேடும் வீரம் செறிந்த சோழப் பேரரசில் முகிழ்த்த இப்பாடல்களும் வீர வாழ்வியலை உள்ளபடி காட்டும் கண்ணாடியாய், உயிர்த்துடிப்புடையனவாக உள்ளன. காவியமெங்கும் குலோத்துங்கன் வீரப்புகழ் பரவிக்கிடக்கிறது. வீர தேவதையான காளியே காவியத் தலைவியாய் நின்று கதைநடத்திக் குலோத்துங்கன் வீரப்புகழைப் பாடுவதுபோல் அமைந்துள்ளது. காளி, பேய்கள், போர்க்களம், கூழ் அடுதல் முதலியன பற்றிய புத்தம் புதுக் கற்பனைகளும் அரங்கக் காட்சியனைய நேர்முக வருணனைகளும் நெஞ்சத்தைக் கவர்வனவாகும். பொருளுக்குச்சந்த இசை சுவை சேர்க்கிறதா அன்றிச் சந்தத்திற்குப்

பொருள் சுவை கூட்டுகிறதா என்று மயங்கும்படி இரண்டும் இணைந்து இடம், நிலைக்கேற்ற பல்வகைச் சந்தங்கள் மலிந்து, கலித்தாழிசைப்பாக்கள் கற்பார் இதயத்தைக் களிப்பில் ஆழ்த்துகின்றன. பாட்டிற்கோர் பொற்றேங்காய் உருட்டிக் குலோத்துங்கன் புலவரைப் பாராட்டினுன் என்பது மெய்யோ, பொய்யோ அறியோம். ஆயின் பாடல் ஒவ்வொன்றும் பொன் தேங்காயினும் மதிப்பேறப்பெற்றதேயாம். புதிய கற்பனைகளும், உயிர் தவழ் வருணனைகளும் கொண்டு காதல் சுவை, வீரச்சுவை, வெகுளிச்சுவை முதலான எண் வகைச் சுவைகளும் நிரம்பி உயிர்க் காவியமாகத் திகழ்கிறது.

மற்றச் சிற்றிலக்கியங்களைப் போலவே, பரணியும் மாந்தரை விட்டுத் தேவர்க்குத் தாவியது. ஒட்டக் கூத்தர் வீரபத்திரன் வெற்றியைப் பாராட்டித் தக்கயாகப் பரணி பாடினார். காமம், குரோதம் பற்றிய ஆன்மீகப் போராட்டத்தில் வெற்றிகாணும் ஞான வீரர் பற்றிய பரணிகள் தோன்றின. பாசவதைப் பரணி, மோகவதைப்பரணி போன்றன இவ்வகைக்கு நல்ல எடுத்துக்காட்டுக்களாகும். சமயப் பரணிகள் கருத்து விளக்கமாக அமைந்தனவே அல்லாமல் இலக்கியம் என்ற வகையில் சிறக்க வழியில்லை. கலிங்கத்துப் பரணியைப் படித்தபின் மற்றொரு பரணியைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் மனத்தில் எழுவதில்லை.

**(vi) பிள்ளைத்தமிழ் :** பெற்றவளுக்குப் பிள்ளை பெருங் காவியமாகும். பிள்ளையின் மழலையும் பேச்சும் அசைவும் ஆட்டமும் நடையும் குறும்பும் எல்லாம் அவளுக்குக் காவியத்தின் ஏடுகளேயாகும். மயக்குறு மக்கள் என்றார் அறிவுடை நம்பி, மழலை யாழினும் குழலினும் இனிது என்றார் வள்ளுவர், தொல்காப்பியர் 'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்று கூறிய விதி 'தலைவனைப் பிள்ளைப் பருவத்து வைத்துப் பாடுதல்' என்பதாய்ப் பிள்ளைத் தமிழுக்கு வித்தாக உள்ளது.

பெரியாழ்வாரே பிள்ளைத்தமிழுக்கு வழிவகுத்தவர் ஆவர். யசோதை நிலையில் தன்னை வைத்துக் கண்ணனைக் குழந்தையாகக் கொண்டு, ஆண்டாள் வளர்ப்பில் பெற்ற அனுபவமும் இன்பமும் கொழிக்க, அவர் பாடிய கண்ணன் தாலாட்டு,

அவனோடு விளையாட நிலாவை அழைத்தல், அவனது செங்கீரையாடல், சப்பாணி கொட்டல், தளர்நடை, சிற்றில் சிதைத்தல் முதலியன பிள்ளைத் தமிழ்ப் பருவங்களே யாகும். குலசேகராழ்வார் தன்னை யசோதையாகவும் கோசலையாகவும் பாவித்துக் கண்ணனையும் இராமனையும் குழந்தைகளாகக் கண்டு பாடியவை பிள்ளைத் தமிழ்வளர்ச்சிக்குத் துணை புரிவனவாகும்.

பிள்ளைத் தமிழினுக்குப் பாட்டியல் தெளிவான இலக்கணம் வகுத்துள்ளது. பிள்ளையின் மூன்றும் திங்கள் தொடங்கி 21ஆம் திங்கள் வரைப்பட்ட பருவத்தைக் காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை எனப் பத்துப் பருவங்களாகப் பகுத்து ஒவ்வொன்றையும் பத்து விருத்தப் பாவில் பாடுதல் இலக்கணமாகும். பெண்பாற்பிள்ளைத் தமிழில் இறுதி மூன்று பருவங்கள் கழங்கு, அம்மானை, ஊசலான மகளிர் விளையாட்ல்களாக அமைந்திருக்கும்.

கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் குலோத்துங்கனைப் பாட்டுடைப் பிள்ளையாகக் கொண்டு முதல் பிள்ளைத் தமிழ் பாடினார். ஆனால் பின்னைய நாட்களில் தெய்வங்களைக் குழந்தைகளாகப் பாடும் சமயப் பிள்ளைத் தமிழ்களே தோன்றின. ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கு முருகனும் பெண்பாற்பிள்ளைத் தமிழுக்கு மீனாட்சியும் விரும்பிப்பாடத்தகு தெய்வக் குழந்தைகளாயினர். பகழிக்கூத்தரின் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழும் குமரகுருபரரின் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழும் முருகன் பற்றிய சிறந்த பிள்ளைத் தமிழ்களாகும். குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும் சிவஞான முனிவரின் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழும் 'உமை' பற்றிய சிறந்த பிள்ளைத் தமிழ்களாகும். வைணவப்பிள்ளைத் தமிழுக்கு அழகர் பிள்ளைத் தமிழ் நல்ல எடுத்துக்காட்டாகும். அடியார் பற்றிய பிள்ளைத் தமிழில் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் சிறந்ததாகும். காமராசர், இராசாசி போன்ற அரசியல் தலைவர் பற்றிய தற்காலப் பிள்ளைத் தமிழ் நூல்களும் உள்ளன.

பிள்ளைத் தமிழின் பத்துப் பருவங்களுமே உள்ளத்தை ஈர்த்து உணர்ச்சியை எழுப்பிக் கற்பனையைப் பெருக்கக்கூடியவையாயினும் தெய்வீகம் பற்றியே பாடப்பெற்றமையால் புதுமை யழகு வளர வழியில்லை. விருத்தப் பாவாலேயே அமைதல் வேண்டுமென்ற வரம்பும் ஒரு தடையாகும். விருத்தச் சீர்கள் பெருகினவே அல்லாமல் கற்பனை, புதுமை, நலம் போன்றவைகளில் பெருக்கம் காணப்படவில்லை. இதனால் பல பிள்ளைத் தமிழ் நூல்கள் நெஞ்சைக் கவ்வுவனவாக இல்லை.

**(vii) தூது :** தூது ஒரு சுவையான சிற்றிலக்கிய வகையாகும். இது மிகப் பிற்பட்ட காலத்தே தனி நூலாக மலர்ந்ததெனினும் பழம் பெருங் காலத்திலேயே தெளிவான வரையறை பெற்றிருந்தது, அகப்பொருளில் 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்னும் துறை நிலையில் நின்று காதல் மிக்க தலைவி தன் உள்ளத்து உணர்ச்சியாம் செய்தியை நாரை, கிளி, முதலியன வழியாகத் தலைவனுக்கு அனுப்புவதாக அமைந்த பாடல்கள் குறுந்தொகை,நற்றிணை நூல்களில் பல உள்ளன. பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனிடம் நட்புத்தூது அனுப்ப அன்னச் சேவலைக் கொண்டதைப் புறநானூற்றுப் பாடல் காட்டுகிறது. ஆழ்வாரும் நாயன்மாரும் தாம் இறைவன்மீது கொண்ட அன்பை, குயில், வண்டு, தும்பி முதலிய தூது வழியாகப் புலப்படுத்தியுள்ளனர். தலைவன் தலைவியின் ஊடல் தீர்க்கப் பாணன், விறலி முதலியோரைத் தூது அனுப்புதலை அகப்பாடல்களில் காணலாம்.

கலம்பகங்களில் தூது ஓர் உறுப்பாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. பெருங்கதையில் உதயணன் வாசவத்தைப் பிரிவால் வருந்தி மான் முதலியவற்றை நோக்கிக் கூறுதல் சுவையான நிகழ்ச்சியாகும். சிந்தாமணியில் குணமாலை அனுப்பிய தூதுக் கிளி செவ்வியறிந்து சீவகனைக் கண்டு காதலோலை கொடுத்துத் தூதினை வெற்றியுடன் முடித்துத் திரும்புகிறது. அன்னம் தமயந்தி நளனிடையே தூதுரைத்த செய்தி நளன் கதைக்கோர் உறுப்பாக உள்ளது. வடமொழியில் மேக சந்

தேசம், அம்ச சந்தேசம் போன்ற தூது இலக்கியங்கள் தோன்றின.

தொடக்கத்தில் தூதுரைத்தற்குரியனவாக அன்னம் முதலான பறவைகளும் மேகமும் தென்றலும் தோழியும் நெஞ்சமும் கொள்ளப்பட்டன. பின்னர் வரையறையின்றி மலர், நெல், புகையிலை போன்றவற்றையும் கொண்டிருக்கின்றனர். தூது கலிவெண்பாவால் அமைக்கப் பெறவேண்டும். தூது கூறும் பொருளை முன்னிலைப்படுத்திப் பிறபொருள்களைத் தேராமைக்கும் அதனையே தேர்ந்தமைக்குமுரிய காரணங்களை விளக்கித் தலைவி தன் காதலை விளங்கக் கூறித் தலைவனிடம் மாலை வாங்கி வருமாறு அனுப்பிவைத்தல் தூதின் அமைப்பாகும்.

தூதுகளுள் தமிழ் விடு தூது சிறந்தது என்பர். இதனை இயற்றியவர் யார் என்பது தெரியவில்லை. மதுரைச் சொக்கநாதர்மீது காதல் கொண்ட தலைவி, காதல் துன்பம் மிகுதலால் தமிழை அவரிடம் தூது விடுவதாய் அமைந்துள்ளது. இதில் சிவனுர் சிறப்பும் தமிழின் பெருமையும் சிறக்கக் கூறப்படுகின்றன. இவ்வாறு தெய்வக்காதலைப் பேசும் தூதுகள் பல உள்ளன.

மனிதக் காதலைப் பாடும் தூது நூல்களுள் விறலி விடு தூது சிறந்ததாகும். இது சுப்ரதீபக் கவிஞரால் இயற்றப் பெற்றது, இது வாழ்வியலோடு ஒட்டிய கதையாக அமைப்புடையது. தலைவன் பரத்தை வயப்பட்டு, மனைவியைப் பிரிந்திருந்து, பரத்தை மயக்கில் கைப்பொருள் எல்லாம் இழந்து அவமானம் பல அடைந்து அவளிடமிருந்து வெளியேறி, கூளப்ப நாய்க்கனிடம் பரிசில் பெற்றுத் திரும்புங்கால் மனைவியிடம் செல்ல எண்ணி அவள் ஊடலைத் தீர்க்க விறலியைத் தூது அனுப்புவதாக அமைந்துள்ளது. இது வாழ்க்கையை உள்ளவாறு வருணிக்கிறது. ஆனுல் இன்பம் பற்றிய செய்திகள் சங்க காலத்தில்போல் நாகரிக மேம்பாட்டு நிலைக்குகந்ததாய்க் கூறப்படாமல் பச்சையாகக்கூறப்படுகின்றன. இந்நூல் அணியழகு மலிந்து சொல்லாட்சி முறையால் இன்னிசை அலை மோதுகிறது.

தூது பெரும்பாலும், உள்ளத்தில் பொங்கியெழும் உணர்ச்சிகளை வெளிப் படுத்துவதற்குரிய இலக்கிய நெறியா கும். கவிஞர்விரும்பிய எதனையும் தூதனுப்பலாம் என்பதால் கற்பனையும் புதுமையும் காட்டிப் பாடுவதற்கு வாய்ப்பிருக் கிறது. ஆயினும் பிற சிற்றிலக்கியங்களைப்போல் தூதும் சம யச் சார்பிலே எழுந்தமையால் சிறக்கவில்லை. வாழ்விய லோடு ஒட்டி எழுந்த தூதுகள் நாகரிகத்திற்கேலா முறை யில் சிற்றின்ப வருணனைகளைக் கொண்டிருக்கின்றன வாத லால் அறிஞர் ஆதரவை யிழந்து விடுகின்றன. தூது இலக் கிய நெறி இன்றும் கையாளத்தக்க சிறப்புடையதாகவே உள்ளது.

**(viii) பள்ளு :** பிரபந்தங்களிலே புதியதும் புதுமை யானதுமாகும். இது பாமர மக்கள் பற்றிய இலக்கியம். பாமர மக்கள் விரும்பிப் படிக்கத்தக்க இலக்கியமாகும். தொல்காப்பியர் கூறிய 'புலன்' என்னும் 'வனப்பு' வகையை இந்நூல் சார்ந்ததெனக் கூறலாம். 'புலன்' தொழிலாளர் போன்ற எளிய மக்களின் பேச்சு மொழியில் ஆராய்ச்சி எதுவுமின்றி எளிதில் பொருள் விளங்கும் வண்ணம் இயற்றப் படுவதாகும். பள்ளு, பள்ளராகிய உழவுத் தொழிலாளர்கள் பெருமையைப் பாடும் காவியமாக உள்ளது.

நவநீதப் பாட்டியலில் பள்ளுப் பிரபந்தத்திற்கு இலக் கணம் கூறப்படவில்லை. பிற் காலத்தில்தான் இதற்கு வரை யறைகள் வகுக்கப்பட்டன. மற்ற சிற்றிலக்கியங்களெல்லாம் தேவரையோ, அரசனையோ, அடியாரையோ, வள்ளலையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டிருக்க, பள்ளு பாமரத் தொழிலாளியான உழவனைத்தலைவனாகக்கொண்டுள்ளது. பள் ளன் பள்ளியரை முதன்மை உறுப்பினராகவும் பண்ணைக்கார னைத்துணை உறுப்பினனாகவும் அமைத்துப் பள்ளன் பள்ளியரின் குடிச்சிறப்பு, தொழில் வளம், வாழ்க்கை நலம், சமயமேம் பாடுகளை விளக்கி இயல்பான வாழ்க்கையைக் காட்டும் எழி லான கண்ணாடி போல் உள்ளது.

முக்கூடற் பள்ளு முதல் பள்ளாகும்; முதன்மையும் தலை மையும் வாய்ந்ததுமாகும். இதன் ஆசிரியர் பெயர் தெரிய

வில்லை. 17ஆம் நூற்றூண்டில் தோன்றியது. இது இசை நாடகம் போன்ற அமைப்பினை உடையது. மூன்று ஆறுகள் கூடும் முக்கூடல் (சீவலப் பேரி) காவிய அரங்கமாகிறது. மூத்த பள்ளி. இளைய பள்ளி, அழகக் குடும்பன் முறையே வந்து தத்தம் குடிப் பிறப்புக் கூறித் தம்மைத் தாமே அறிமுகம் செய்கின்றனர். நாட்டு வளம் காட்டப்படுகிறது. மழைக் குறிகள் தோன்றுகின்றன. மின்னி மழைபொழிய நானிலமெங்கும் வெள்ளம் பரந்து பாய்கிறது. இந்நிலையில் நகுதகு தோற்றம் வாய்ந்த பண்ணைக்காரன் தோன்றுகிறுன். இளைய பள்ளியே தஞ்சமென்று கிடக்கும் பள்ளனைப்பற்றி மூத்தபள்ளி முறையிட, இளையபள்ளியோ பள்ளன் போனவிடம் தெரியாதென்று பசப்ப, பண்ணைக்காரன் கடிந்து கூறும் நிலையில் வடிவழகக் குடும்பன் வெளிப்பட்டுப்பண்ணைச் செய்தி உரைக்கிறுன். ஆட்டுக்கிடை வைக்க இடையன் வருகிறுன். மூத்த பள்ளியால் பள்ளன் தொழுவில் மாட்டப்பட்டு அவளாலேயே மீட்புறுகிறுன். உழுதொழில்தொடங்குகிறது. மாடு முட்டித் தள்ள மயங்கி விழுந்த பள்ளன் பக்கத்தில் பள்ளியர் இருவர் இருந்து புலம்பும் காட்சி அவர் தம் அன்பின் விளக்கக் காட்சியாக உள்ளது. நாற்று நடுகை, களையெடுப்பு, கதிர் அறுப்பு எல்லாம் அவர்கட்கு ஒயிலாட்டம், விளையாட்டு. பள்ளியர் ஏசல் சைவ வைணவவாக்குவாதமாய்த் திகழ்கிறது. முடிவில் பள்ளியர் இருவரும் முன்னம் போல் பகையின்றிப் பள்ளனெடு வாழ்கின்றனர்.

சங்க காலத்தில் பேரில் (பெரிய வீட்டு) உழவராயிருந்து இடைக்காலத்தில் கடைசியராகிப் பிற்காலத்தில் சேரிப் பள்ளராய்விடினும், புலவர், பள்ளன் பள்ளியரைத் தொல் குடிப் பிறப்பும் உருவக்கட்டமைப்பும், அழகும் உழைப்பும் ஒழுக்கமும், சமயமும், அறிவு நுட்பமும் விளங்கவும் உழைப் பிலாப் பண்ணைக்காரனை நகுதகு பாத்திரமாக்கியும் வாழ்க்கை இயல்பு மங்காதபடி கண் முன் கண்டாற்போன்ற காட்சியாக்கிக் காவிய நலங்களூடே உயிர்த் துடிப்பு ஊடுருவியோட அற்புத இசை நாடகக் காவியமாக்கியுள்ளார். 17-ம் ஆம் நூற்றூண்டில் ஒருசங்கப் புலவரைப் பார்க்கிறோம். ஆனுல் பெயர் கூருமல் மறைந்து கொள்கிறுர், வைணவராயி

னும் தன் கருத்தை முடிபாகக் கூறித் திணிக்காமல் பாத்திரங் களைக்கொண்டே பேசவைக்கிறார். பிற்காலப் புலவர்க்கு நல்ல வழிகாட்டியாகவும் உள்ளார். கலிப்பா, விருத்தம், சிந்து வகைப்பட்ட இசைப்பாடல்களால் அமைந்த இக்காவி யம் பிற்காலப் புலவர்களைப் பெரிதும் கவர்ந்தது. இதனை முன் வைத்து எத்தனையோ 'பள்ளுகள்' எழுந்தன. எளிய மக்க ளின் வாழ்க்கையைப் பற்றிய இப்புதுமை இலக்கியம் இலக்கிய வரலாற்றில் திருப்புமையமாக அமைந்து நிற்கிறது.

*(ix)* குறவஞ்சி : இது குறி சொல்லும் குறக்குல நங்கையைத் தலைவியாகக் கொண்ட காவியமாகும். தலைவன் உலா வரக் கண்டு காதல் கொண்ட தலைவி தலைவனின் நெஞ்ச நினைப்பு அறிய மாட்டாமல் கலங்கி அவனை அடைய முடியுமோ என்று தத்தளித்துத் தவிக்கும் நிலையில் குறவஞ்சி தோன்றித் தலைவியின் கைவரை பார்த்து அவள் உள்ளங் கவர்ந்த தலைவனின் நாடு, மலை, ஆறு. முதலியனவற்றின் வளங்களையும் அவன் குணப் பெருமைகளையும் உவக்கும் வண்ணம் கூறி அவனை அடைதல் உறுதி என்று குறி சொல்லு வதாய் அமைந்துள்ளது.

குறவஞ்சியும் 'பள்ளு' நூல் போலவே இசையும் நாடக மு‌மாய்ச் சேரிமொழிமிகுந்து, கொச்சகக் கலிப்பா, விருத்தம், சிந்து, கண்ணி முதலான இசைப்பாடல்விரவப் பெற்றுத் தீஞ் சுவை இலக்கியமாய் விளங்குகிறது.

குறவஞ்சி தமிழ் மரபின் வழி வந்த இலக்கியமாகும். கட்டுப் (குறி) பார்த்தல் என்பது தொல்காப்பியத்திலும் காணப்படுகிறது. குறி சொல்பவள் கட்டுவிச்சி என்றும் அகவல் மகள் என்றும் அழைக்கப்பட்டாள். தலைவனைக் கண்டு மன மயங்கியிருக்கும் தலைவியிடம் குறி சொல்லும் கட்டுவிச்சி தலைவன் குன்றத்தையும் புகழையும் பாடுதல் வழக்கம். காதலுற்ற தலைவி தலைவன் புகழைக் கேட்பதில் நாட்டங் கொண்டவள் என்பதை ''அகவன் மகளே பாடுக பாட்டே, இன்னும் பாடுக பாட்டே அவர், நன்னெடுங் குன் றம் பாடிய பாட்டே (23)'' என்னும் குறுந்தொகைப் பாடல் காட்டுகிறது. கையில் மாத்திரைக் கோலுடன் உலவிக்

கேட்போர் உள்ளங் குளிரக் குறி சொல்லும் நங்கையரை இன்றும் காண்கிறேம். இந்தக் குறத்தியைக் கொண்டு குமர குருபரர் 'குறம்' என்னும் இலக்கியம் பாடினர். அதில் குறத்தி குறி சொல்லும் பகுதி விளக்கமுற அமைந்துள்ளது. ஆனல் குறவஞ்சி, தலைவன் பவனி, தலைவி கண்டு ஏங்கல், குறவன் வேட்டை, குறவன் குறத்தி உரையாடல் முதலிய பல நிகழ்ச்சிகளைக் கொண்டு சிறு காவியம்போல் அமைந் துள்ளது.

திருக் குற்றாலக் குறவஞ்சி : இது திரிகூட ராசப்பக் கவி ராயரால் இயற்றப்பெற்றது. இவர் தென்காசியின் அருகில் உள்ள மேலகரம் என்னும் ஊரினர். 18ஆம் நூற்றாண்டினர். குற்றாலத் தலம்பற்றிய புராணமும் பல பிரபந்தங்களும் இயற்றியுள்ளார். இக்குறவஞ்சியைப் பாடி மதுரைநாயக்க மன்னரால் திருக் குற்றாலக் கோயில் வித்துவான் என்ற பட் டமும் 'குறவஞ்சி மேடு' எனப்பட்ட நன்செய் நிலமும் பெற்றார்.

குற்றாலக் குறவஞ்சி ஒப்பிலா ஓர் இலக்கியமாகத் திகழ் கிறது. பவனி வருகிறார் குற்றாலநாதர் (திரிகூட நாதர்). பெண்கள் வந்து பவனி கண்டு வியக்கின்றனர். ஓவியம் போலவே வந்தாள்; பந்தாடினள் வசந்தவல்லி. திரிகூட நாதரைக் கண்டு காதல் கொள்கிறாள். ஏங்குகிறாள்; தோழியர் கூறிய தேறுதல் பயனளிக்கவில்லை. தலைவனைப் பழிக்கிறாள். இவையெல்லாம் நாடகக் காட்சிகள்போல் பாடப் பெற் றுள்ளன.

தென்னவர் தமிழால் வடநாடெல்லாம் செயத் தம்பம் நாட்டிய குறத்தி வருகிறாள். குறி சொல்லும் குறவஞ்சி அவள். திரிகூட நாதரின் மலை வளமும் நாட்டு வளமும் கூறு கிறாள். இதில் குறிஞ்சி நில அழகெலாம் இயல்பு குன்றாமல் ஓவியம்போல் தீட்டப் பெற்றுள்ளன. குறத்தி குறி சொல் லுங்கால் வசந்தவல்லி தடுத்து வினவுதலும், குறத்தி நையாண்டி செய்தலும் வசந்தவல்லி பொய்க்கோபம் கொள்ளுதலும் நாடகச் சுவை மலிய அமைக்கப்பெற் றுள்ளன.

குறவன் (சிங்கன்) பறவை வேட்டையாடக் குளுவனோடு வருகிறான். பறவைகள் வருணனை கண்கொள்ளாக் காட்சியைக் கொண்டு வந்து நம் கண் முன் நிறுத்துகிறது. அவன் வெறும்வேட்டைக்காரன் அல்லன்; சைவ சித்தாந்த வல்லுநனுயும்காட்சியளிக்கிறான். குறவன் குறத்தியை நினைந்து ஏங்குகிறான். வேட்டை முடிந்ததும் குற்றாலமெல்லாம் தேடத் தொடங்குகிறான். அவளைக் காணுமல் வருந்துகிறான். பிரிந்தவர் கூடி மகிழ்கின்றனர். பரிசு பெற்ற பற்பல அணிகள் பூண்டு நிற்கும் குறத்தியோடு குறவன் வாதம் புரிவதில் குறத்தியின் திறமெல்லாம் வெளிப்படுகிறது.

திரிகூட ராசப்பர் பிறந்த நாள் முதல் குற்றால இயற்கையூடே வாழ்ந்தவர். அதன் அழகையெல்லாம் சுவைத்தவர். குறவர் வாழ்க்கையை நுட்பமாக உணர்ந்தவர். இயற்கையழகையும் வாழ்க்கை நலத்தையும் இதய உணர்ச்சியில் தோய்த்தெடுத்து நாடகப் பாங்கில் எளிய இனிய தமிழில் இசையும் தாளமும் சதிராட எண்வகைச் சுவைகளும் இலங்க உயிர்த் துடிப்புடைய ஒப்பற்ற இலக்கியமாகப் படைத்துள்ளார். குற்றால இயற்கை வருணனைகளையும் குறவர் வாழ்க்கையையும் பயிலுங்கால் சங்க கால இலக்கியத்திற்குள் புகுந்தாற்போன்ற அனுபவம் ஏற்படுகிறது. குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள் எல்லாம் சங்கப்பாடல்கள் புதிய உருவொடு வந்தாற் போன்றுள்ளன.

எளியோளாயும் இழிந்தோளாயும் கருதப்பட்ட குறத்தியை, குறிசொல்லும் தமிழ்க் கலையரசியாக்கி, கற்பொழுக்கத்தால் உயர்ந்தவளாக்கி, காவியத் தலைவியுமாக்கியுள்ளார். இலக்கிய வரலாற்றில் குற்றாலக் குறவஞ்சி ஒரு புதுமைப் படைப்பேயாகும்.

## 2. தனிப்பாடல் திரட்டுப் புலவர்

*19*-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இராமநாதபுரம் பொன்னுசாமித் தேவரால் *1735* தனிப்பாடல்கள் 'தனிப் பாடல் திரட்டு' என்னும் பெயரில் இரு பகுதிகளாகத் தொகுக்கப்பெற்றன. இதில் சுமார் ஆயிரம் ஆண்டுகட்குட்

பட்ட புலவர்களின் பாடல்கள் அடங்கியுள்ளன. இவற்றைக் கா. சுப்பிரமணியபிள்ளை கால வரிசைப்படி தொகுத்துத் தெளிவான உரை எழுதியுள்ளார்.

(i) ஔவையார்: தனிப்பாடல் திரட்டில் ஔவையார் பாடியனவாக 75 பாடல்கள் உள்ளன. இவர் சங்க கால ஔவையாரினின்று வேறானவர். பாரி மகளிர் திருமணம் பற்றிப் பாடியனவாக உள்ள பாக்களில் பிள்ளையாருக்குப் பாடிய பாடல் உள்ளது. பிள்ளையார் வணக்கம் சங்க காலத் திற்கும் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றியது. ஆதலால் அவற்றைச் சங்க கால ஔவையார் பாடியிருக்க முடியாது. பாரி, பாரி மகளிர் திருமணம் பற்றிய பாடல்கள் சங்க கால ஔவையார் கதையை மனத்தில் கொண்டு பாடப் பெற்ற கற்பனைப் பாக்களாதல் வேண்டும். உலா, பிள்ளைத் தமிழ் பற்றிப் பேசுவதால் உலா, பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றிய காலத்திற்குப் பிற்பட்டவர் ஆவர். முதல் பிள் ளைத் தமிழ் ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றது. ஆதலால் இவ் ஔவையார் காலம் 12-ஆம் நூற்றாண்டுக்கு பிற்பட் டதேயாகும். இவர் பாடிய பாக்கள் பெரும்பாலும் வெண் பாக்களேயாகும். தம் வாழ்க்கையின் அனுபவங்களைச்சுட்டிப் பாடியுள்ளார். ஆத்திசூடி. கொன்றைவேந்தன், மூதுரை, வாக்குண்டாம், நல்வழி முதலியவற்றைப் பாடிய ஔவை யாரா இத்தனிப்பாடல் ஔவையார் என்பது ஆராய வேண்டிய ஒன்றாகும். ஔவையாரின் நூல்களாக ஞானக் குறள், விநாயகரகவல், பந்தனந்தாதி முதலியனவும் உள்ளன.

(ii) ஒட்டக்கூத்தர்: 'கோவையுலா அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்' எனப் பெயர்பெற்ற புலவர் ஆவர். இவர் விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராச ராச சோழன் உலா என மூன்றும் பாடியிருப்பதால் இவரை இம் மூன்று அரசர் காலத்தும் வாழ்ந்தவராகக் கொள்ளலாம். குலோத்துங்க சோழன்மீது பிள்ளைத்தமிழ் நூலும் பாடியிருக் கிறார். புதுவைக் காங்கேயன் மீது நாலாயிரக் கோவை பாடி யுள்ளார். தக்கயாகப் பரணி இவரது சைவ சமயப் பற்றிற்கு

நல்ல எடுத்துக்காட்டாகும். அரும்பைத் தொள்ளாயிரமும் ஈட்டி எழுபதும் இவர் பாடிய மற்ற இரண்டு நூல்களாகும்.

தனிப்பாடல் திரட்டில் இவர் பெயரில் 41 பாடல்கள் உள்ளன. இவற்றில் சில புகழேந்தியும் ஒட்டக்கூத்தரும் வாதாடிய பாடல்களாக உள்ளன. இவருக்குக் கம்பர்மீது பகை இருந்ததாகவும் சில பாடல்கள் காட்டுகின்றன. புலவர்களைச் சிறைப்படுத்தித் துன்புறுத்தியதாகவும் சில பாடல்கள் கூறுகின்றன. சோழன் அரசவையில் செல்வாக்குப் பெற்றிருந்ததையே இவர் நூல்கள் காட்ட, இத் தனிப்பாடல்களோ இவரது பெருமைக்கு இழுக்குத் தருவனவாக அமைந்துள்ளன. ஒட்டக்கூத்தர் பற்றிப் பரவிய செய்திகளை நிலைநாட்டப் பிற்காலப் புலவர் பாடிய கற்பனைப் பாடல்களோ என்று ஐயுறவேண்டியுள்ளது. ஒட்டக்கூத்தர் முன்னிரண்டு அடிகள் பாடப் புகழேந்தி பின்னிரண்டடிகள் பாடியதாக உள்ள பாடலைப் பாருங்கள்;

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகுக் கிடான்கவசம்—துன்றும்
நெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று

(iii) காளமேகப்புலவர்; இவர் கவி காளமேகம் என்று அழைக்கப்படுவார். ஆசு கவி பாடுவதில் வல்லவர்; இவர் பாடிய 187 பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் உள்ளன. பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர்.

இவர் கும்பகோணத்து அந்தணர். சீரங்கக்கோயில் மடைப்பள்ளியில் வேலை பார்த்தபோது தாசி வயப்பட்டு வாழ்ந்தார் என்பர். கட்டுப்பாடு இல்லாத வாழ்வினர் என்பதை இவர் பாடல்கள் குறிப்பிடுகின்றன. தமிழ்நாடெங்கும் சுற்றித் திரிந்து பற்பல கடவுளர்களை நகைச்சுவை தோன்ற வஞ்சப் புகழ்ச்சியாகப் பாடியிருக்கிறார். இவர் இறந்த நாளில் இரட்டையர் வருந்திப் பாடிய பாடல் உளதாதலின், இவர் இரட்டையர் காலத்தவர் என்பது உறுதியாகிறது.

வினவுவார் எம்முறையில் எச்சொல்லை அமைத்துப் பாடச் சொன்னாலும் அக்கணத்தில் அப்படியே பாடும் திறன் வாய்ந்தவர். இரு பொருள்படச் சிலேடைப் பாக்கள் பாடுவதில் வல்லவர். மனம்போனபோக்கும் சுதந்திர மனப் பான்மையும் நகைச்சுவையுள்ளமும் வாய்ந்து கடவுளர், மனிதர், கவிஞர் எவரையும் நிந்திக்கும் நினைப்போடு காணும் பண்பினராதலின் இவர் பாடல்கள் வசைமாரிகளாக அமைந்துள்ளன. வசைபாடுவதில் சிவன், திருமால், விநாயகர் என்ற வேறுபாடு இவருக்கு இல்லை.

வாதக்கா லாம் தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
போதப் பெருவயிறும் புத்திரர்க்கு—யாதொன்றும்
வந்தநோய் தீர்க்க வகையறியான் வேளூரான்
எந்தநோய் தீர்த்தான் இவன்.

இங்குக் கடவுளர் குடும்பமே நிந்தனைக் குள்ளாகிறது. நாராயணனை நராயணன் என்று பாடிவிட்ட கம்பரும் இவர் கேலிக்குத் தப்பவில்லை. இவர் சமய நிபந்தனை வாய்ந்தவரல்லர். கடவுளரைப் போற்றும் பாடல்களும் பாடியிருக்கிறார்.

திருமலைராயன் பட்டணத்தில் திருமலைராயன் அவையில் செருக்கோடு வாழ்ந்து வந்த அதிமதுர கவியின் செருக்கடக்கியவர். அங்கு அவன் வினவியபடியே பல ஆசு கவிகளைப் பாடி வெற்றிபெற்றவர். போலிப் பெருமைகளையும் கற்பனைகளையும் வசை கலக்க நகையாடிய இந்நாவலர் தம் திறனைத் தனி நூலில் முறையாக வெளிப்படுத்தியிருந்தால் தமிழினுக்கோர் மோலியரை, நகைச்சுவைக் கவிஞரைப் பெற்றிருப்போம். ஆயினும் இவர் தோற்றுவித்த நகைச்சுவை பின் வந்த தனிப்பாடல் புலவர்களால் ஒரு கவிமரபாகக் கொள்ளப்பட்டிருப்பதைக்காணக்கூடும்.

(iv) இரட்டையர்: 'கலம்பகத்திற்கிரட்டையர்' எனப் பேர் பெற்றவர். காளமேகப் புலவர் இறந்தபோது 'விண்கொள் செந்தழலாய் வேகுதே ஐயையோ, மண்தின்ற பாணமென்ற வாய்' என்று இரட்டையர் வருந்திப் பாடியிருப்பதால் இவர்கள் காளமேகத்தோடு நட்புக்கொண்டு அவர்

பாடல்களில் மதிப்பு வைத்திருந்தனர் என்று தெரிகிறது. சைவம் இவர்கள் சமயமாகும்.

இரட்டையர் இளஞ்சூரியர், முதுசூரியர் என்ற பெயரினர் என்பர். குருடரும் முடவருமாய் வாழ்ந்தனர் என்றும் குருடர் முடவரைச் சுமந்து செல்வார் என்றும், ஒருவர் பாடலின் முன் பகுதியைப் பாட மற்றவர் பின் பகுதியைப் பாடி முடிப்பர் என்றும் கதை வழங்கப்படுகிறது. இவர்கள் தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர் கலம்பகம், கச்சிக் கலம்பகம் ஆய கலம்பகங்களையும் ஏகாம்பரநாதர் உலா என்னும் பிரபந்தத்தையும் பாடியிருக்கின்றனர்.

தனிப்பாடல் திரட்டில் இரட்டையர் பாடல்களாக பன்னிரண்டு உள்ளன. திருவாரூரில் சுவர்மேல் இரட்டையரில் ஒருவர் பாதிப்பாடலை மட்டுமே எழுதிவிட்டுச் செல்ல, காளமேகம் பின் பகுதியைப் பாடி முடித்ததாகப் பாடல் ஒன்று உள்ளது.

நாணென்று னஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணமே—தாணுவே
சீராரூர் மேவுஞ் சிவனேநீ யெப்படியோ
நேரார் புரமெரித்த நேர்

இந்தச் செய்தியை நினைந்துதான், சுடுகாட்டில் காளமேகப் புலவரின் உடல் எரியக்கண்டு இரட்டையர் மண்தின்ற பாணமென்ற வாய் எரிவதை நினைந்து உருகிப் பாடினர். இது உண்மையான நிகழ்ச்சியாகவே தோன்றுகிறது. வீரசம்பு, கூவராயன் என்ற வள்ளல்களைத் தம் பாடல்களில் குறிப்பிட்டிருக்கின்றனர். பாண்டியனிடம் சென்று பரிசு பெறுங்கால், கொடுக்கவிடாமல் தடுத்த மந்திரியை 'புன்குரங்கு மராமரம் விட்டிங்கு வந்த தென்னே' என்று வசை பாடினர். நகுவசை பாடுதலைக் காளமேகத்திடம் கற்றனர் போலும்.

**(v) அந்தகக் கவி வீரராகவ முதலியார்:** இவர் 17-ஆம் நூற்றாண்டுப் புலவர் ஆவர். தொண்டை மண்டலம் புதூரைச் சார்ந்தவர். பிறவிக் குருடர். பிறர், முதுகில் எழுதி உணர்த்தக் கற்றுப் புலமை எய்தினார் என்பர். 'ஏடாயிரம் கோடி எழுதாது தன்மனத் தெழுதிப் படித்த விரகர்' எனப்

போற்றப்பட்டார். இவர் சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம்பகம், திருவாரூருலா, திருக்கழுக்குன்ற மாலை, சந்திரவாணன் கோவை, திருக்கழுக்குன்ற புராணம் முதலியன எழுதியுள்ளார். இவர் இலங்கைக்குச் சென்று பரராச மன்னனைப் பாடிப் பரிசில் பெற்றுத் திரும்பினார். இலக்கண விளக்க ஆசிரியரைச் சங்கப் புலவர் போன்றவர் என்று இவர் பாராட்டியுள்ளார்.

இவர் பாடியனவாகத் தனிப்பாடல் திரட்டில் 33 பாடல்கள் உள்ளன. இவர் காஞ்சியில் தமிழ் கற்றார் என்று தெரிகிறது. இவர் பலராலும் நன்கு மதிக்கப் பெற்றார் என்று அறியலாம். இவர் இறந்தபோது மாணவர்களே அல்லாமல் கச்சியப்பர், கயத்தாற்றரசர், இலங்கைப் பரராசசிங்கர், அவர் மனைவி முதலியோர் புகழ்ந்து பாடியுள்ளனர். காளமேகம் தொடங்கிய நகைச்சுவை இவரிடமும் இலங்குகிறது. விநாயகருக்கு எவரும் பெண் கொடாமைக்குரியனவாக நகைச்சுவையுறக் காரணங்களை அடுக்கிச் செல்கிறார்:

வீரஞ் சொரிகின்ற பிள்ளா
யுனக்குப் பெண்வேண்டு மென்றால்
ஆருங் கொடா ருங்களப்பன்
கபாலி யம்மான் திருடன்
ஊருஞ் செங்காடு நின்றன்
முகம்யானை யுனக்கி ளையோன்
பேருங் கடம்ப னுன்றாய்
நீலி நிற்கும் பெருவயிறே

(vi) **படிக்காசுப் புலவர்:** 17-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். இலக்கண விளக்க ஆசிரியரான வைத்தியநாத தேசிகரின் மாணவராவர். தொண்டை மண்டலத்தில் உள்ள களந்தை என்னும் ஊரில் செங்குந்த மரபில் பிறந்தார். 'பண்பாகப் பகர் சந்தம் படிக்காச லாலொருவர் பகர் வொண்ணாதே' என்று பாராட்டப் பெற்றிருப்பதால் இவர் சந்தப் பாட்டுப் பாடுவதில் வல்லவர் என்பது விளங்குகிறது. தொண்டை மண்டல சதகம் இவர் பாடிய நூலாகும்.

தனிப்பாடல் திரட்டில் உள்ள இவருடைய இருபத்தொரு பாடல்களும் இவரது வரலாற்றை அறிய உதவுகின்றன. வல்லம் என்ற ஊரினரான காளத்தி வள்ளல், காயல் பட்டின வணிகரான சீதக்காதி வள்ளல், இராமநாதபுரத்து இரகுநாத சேதுபதி ஆகியோரைப் பாராட்டியுள்ளார். பற்பல தொழில்களுமிருக்க அறிவில்லாமல் கல்வி கற்றுவிட்டோமே என்று வருந்திப் பாடியிருக்கிறார். போலிப் புலவர்கட்குப் புத்தி புகட்டிய தமிழ்க் காவலரான பிள்ளைப்பாண்டியன், வில்லி, கவி யொட்டக்கூத்தர் முதலியோரைக் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார். சீதக்காதி இறந்ததற்கு இரங்கிப் பாடியிருக்கிறார்.

தேட்டாளன் காயற்றுரை சீதக்காதி வச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத்தான்-தமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கியவர் கள்தம்வாயி லொருபிடிமண்
போட்டா னவனுமொளிந் தான்சமாதிக் குழிபுகுந்தே

(vii) பல பட்டடைச் சொக்கநாதப் புலவர்: இவர் தொண்டை நாட்டினர். 'அழகர் கிள்ளைவிடு தூது' இயற்றியவர். 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் பாடியனவாக 65 பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் உள்ளன. மல்லைப்பல்லவன் இரட்டைக் கடுக்கன் அளித்ததைப் பாடியிருக்கிறார். போஜராஜன், வல்லைநகர்க் காளத்தி ராயன், செங்குன்றையூர்த் தலைவன் முதலியோரைப் பாராட்டியுள்ளார். தென்மாவைக் கறுப்பனுக்கு அறிவுரை கூறியிருக்கிறார். சமயப் பற்று மிக்கவர். சிவன், உமை பற்றியே பெரும்பாலும் பாடியிருக்கிறார். படிக்காசுப் புலவரின் பாடல்களைச் சுவைத்துப் பெற்ற இன்ப அனுபவத்தை அழகுறப் பாடியுள்ளார்.

மட்டாருந் தென்களந்தைப் படிக்காச
　　னுரைத்த தமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும்
　　பரிமளிக்கும் பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைமணக்குஞ் சொன்னாலும்
　　வாய்மணக்குந் துய்ய சேற்றில்

நட்டாலுந் தமிழ்ப் பயிராய்
விளைந்திடுமே பாட்டினுறு நளினந்தானே

**(viii)** கடிகை முத்துப் புலவர்: 17-ஆம் நூற்றுண்டில் எட்டயபுரம் குறுநில மன்னரின் அவைப் பாவலராய் விளங்கினுர். சிலேடை, யமகம், திரிபு அமையப் பாடுவதில் வல்லவர். 'சமுத்திரவிலாசம்' என்னும் நூல் இயற்றியுள்ளார். சிவகிரி சமீன்தார் மீது பாடிய திக்கு விசயமும், திருவிடை மருதூர் அந்தாதியும் இவருடைய பிற நூல்களாகும். இவர் பாடிய 107 பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் உள்ளன. அவையெல்லாம் வெங்கடேசுவர எட்ட பூபதியைத் தலைவனுகக் கொண்ட அகத்துறைப் பாக்களே யாகும்.

**(ix)** சீர்காழி அருணசலக் கவிராயர்: 18-ஆம் நூற்றுண்டில் சீர்காழியில் வாழ்ந்தவர். இராம நாடகம் இயற்றி நாடகத் தமிழுக்குப் புத்துயிர் அளிக்கப் பெரும் பாடுபட்டார். 'அசோமுகி' என்னும் பிறிதொரு நாடகத்தையும் இயற்றினுர். சீர்காழிக் கோவையும் அனுமார் பிள்ளைத் தமிழும் இவர் இயற்றிய மற்ற நூல்களாகும்.

இவர் இயற்றியனவாகத் தனிப்பாடல் திரட்டில் 28 பாடல்கள் உள்ளன. இராம நாடகம் அரங்கேற்றுவதற்காக மணலி முத்துக்கிருஷ்ண முதலியாரை வேண்டிப் பாடியதும் அவர் இராம நாடகம் அரங்கேற்றி இவருக்கு இராமாயணக் கவிஞன் என்ற பட்டமளித்துப் பாராட்டியதுமான செய்திகள் பாடப்பெற்றுள்ளன.

**(x)** சுப்ரதீபக் கவிராயர்: இவர் மதுரையைச் சார்ந்த திருமங்கலம் அருகில் உள்ள ஊரில் கம்மாளர் குடியில் பிறந்தவர். நிலக்கோட்டை ஜமீன்தாரான கூளப்ப நாய்க்கர் மீது விறலி விடு தூது, காதல் என்னும் இரு பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். இவரைப் பல பட்டடைச் சொக்கநாத பாவலரின் காலத்தவர் என்பர். அப்படியானுல் இவரது காலம் 18-ஆம் நூற்றுண்டாகும். இவரது விறலி விடு தூது தலைவன் தலைவிக்கு விடும் தூதாக உள்ளது. காதல் என்பது ஒரு புதுவகை இலக்கியப் படைப்பாகும். இது உலாவைப்

போல் அமைந்துள்ளது. ஆனால் ஏழுவகையான பருவப் பெண்களும் தலைவனைக் கண்டு காதல் கொண்டதாய்க் கூறாமல் குறிப்பிட்ட ஒரு தலைவி பூக் கொய்ய நந்தவனம் சென்றதும் வேட்டைக்கு வந்த தலைவனைக் கண்டு காதலுற்றதும் அவள் காதல் துன்பம் தோழியரிடம் கூறப்படுதலுமான அமைப்புடையது. சுவையான வருணனைகளும் இசையொழுகும் சொல்லமைப்பும் இன்பம் பயக்கின்றன. வீரமாமுனிவர்க்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர் ஆவர்.

## 3 பிற்காலச் சமயப் புலவர்கள்

(i) **அருணகிரிநாதர் :** 15-ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் பிறந்தார். ஒரு செட்டியார்க்குக் கணிகையிடம் பிறந்தார் என்பர். இளமையில் சிற்றின்பவாழ்வில் மூழ்கித் தொழுநோய் பெற்றார். மிக்க துன்பத்தில் ஆழ்ந்தார். முருகன் அருளால் நோய் நீங்கப் பெற்றார் என்பர்.

திருந்திய அருணகிரியார் முருகபக்தியில் ஆழ்ந்து முருகன் பதிதோறும் சென்று திருப்புகழ்ப் பாடிப் பரவி முருக பக்தியைப் பரப்பினார். இவர் பாடிய திருப்புகழ்ப் பாக்கள் 16000 என்பர். ஆனால் 1300 பாடல்களே கிடைத்துள்ளன. இவை 1008 சந்தங்களில் அமைந்துள்ளன. பாடல் தோறும் இசை முழங்கும்; இன்பப் பரவசம் பொங்கும். பாடலில் காம இன்பத்தை வெளிப்படையாக வருணித்துப் பின், அதனை ஒழித்து இறைவனை வழிபட்டு உய்தல் வேண்டும் என்று முடிப்பார். இசை நுட்பம் நிறைந்து சந்த ஓசையின்பம் பெருகி ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு திருப்புகழாகவே உள்ளது.

இவரால் பாடப்பெற்ற கந்தரலங்காரமும் கந்தரனுபூதியும் சிறப்புடைய இருசிறு நூல்களாகும். 'கந்தரனுபூதி சொன்ன எந்தை' என்று தாயுமானவர் அருணகிரியாரைப் பாராட்டியுள்ளார், கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல்விருத்தம், உடற்கூற்று வண்ணம், மயில் விருத்தம், திருவெழுக் கூற்றிருக்கை முதலியன இவர் பாடிய பிற நூல்களாகும். முருகன்

திருப்புகழ்பாடி முருக பக்தியை வளர்த்ததோடு தமிழ் இசைக்குப் புதுப் பொலிவும் அளித்துள்ளார்.

(ii) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்: 17—ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவர் ஆவர். சோழநாட்டு அந்தணர். வீர வைணவர். அழகிய மணவாளதாசர் என்றும் வழங்கப் படுவார். இவர் தமிழ்ப் புலமையும் உலகியல் அறிவும் நிரம் பப் பெற்று மதுரைத் திருமலை நாயக்கர் அவையில் சில ஆண்டுகள் அலுவலராய் அமர்ந்து பின் அதனை விடுத்துத் திருவரங்கம் சென்று திருமாலுக்குத் தொண்டு புரிந்து வந்தார். அந்நாளில் கலம்பகம், மாலை, அந்தாதி, ஊசல், தூது முதலான பிரபந்தங்கள் இயற்றினார். இவருக்குப் பல மாணவர்கள் இருந்தனர். இறுதியில் ஒருநாள் தம்மை மறந்து தியானத்தில் இருந்தபோது நொண்டிப்பசு காலிடறி அவர்மேல் விழ அவர் துன்புற்று உயிர் துறந்தார்.

இவர் இயற்றிய சிற்றிலக்கியங்களுள் திருவரங்கக் கலம் பகம் தலையாயது ஆகும். மற்றும் திருவரங்கத்தந்தாதி, திரு வேங்கடத்தந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என நான்கு அந்தாதிகளும் திருவரங்கத்து மாலை திருவேங்கடமாலையென இரு மாலைகளும் சீரங்கநாதர் ஊச லும் திருநரையூர் நம்பிமேகவிடுதூதும் இயற்றியுள்ளார். இவரது நூற்கள் கற்பவர் உள்ளத்தைக் கொள்ளைகொள் ளும் கனிவுடையவை. பக்திச் சுவை கனிந்தவைகளுமாகும்.

(iii) குமரகுருபரர்: 17—ஆம் நூற்றாண்டில் திருமலை நாயக்க மன்னர் காலத்தில் வாழ்ந்த பாண்டிய நாட்டுப் பெரும் புலவர் ஆவர். சீவைகுண்டத்தில் சைவப் பெற் றோர்க்குப் பிறந்தார். பிறந்தது முதல் வாய் பேசாதிருந்து ஐந்தாம் வயதில் திருச்செந்தூர் சென்று முருகன் அருளால் வாய் பேசத் தொடங்கிக் 'கந்தர் கலிவெண்பா' பாடினார் என்பர். தமது ஊர்க்கோயிலின் கயிலைநாதர்மீது கயிலைக் கலம்பகம் பாடினார்.

பின்னர் இவர் மதுரை சென்று 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' பாடித் திருமலை நாயக்கர் முன் அரங்கேற்றி

ணர். அப்போது மீனாட்சியம்மை குழந்தை வடிவில் தோன்றி மன்னர் கழுத்தில் இருந்த முத்துமாலையை எடுத்து இவருக்கு அணிந்தார் என்பர். இது பேர்பெற்ற பிள்ளைத்தமிழ் இலக்கியமாய்த் திகழ்கிறது. மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம் பாடிய தோடு மன்னன் வேண்டுகோட்கிணங்க நீதிநெறி விளக்கமும் பாடினார். இந்நூல் பிற்காலத்தெழுந்த சிறந்த அறநூல் களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

அடிகள் திருவாரூர் சென்று திருவாரூர் நான்மணிமாலை பாடினார். அப்பால் தருமபுரம் சென்று மாசிலாமணி தேசிகரைக் கண்டுவிட்டு வைத்தீச்சுரன் கோயில் சென்று முருகன்மீது முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடினார். அங்கிருந்த சிவனடியார்களின் வேண்டுகோளுக்கிணங்கி சிதம்பரச் செய்யுட்கோவை பாடியதோடு சிவகாமி இரட்டைமணி மாலையும் பாடினார்.

குமரகுருபரர் தருமபுரத்திற்கு மீண்டும் வந்து மாசிலா மணி தேசிகரை ஞானாசிரியராகக் கொண்டு அவர்மீது பண் டார மும்மணிக்கோவை இயற்றினார்.

தேசிகரின் கட்டளைப்படியே அடிகள் காசி சென்று காசி விசுவநாதர்மீது காசிக் கலம்பகம் பாடினார். காசியில் சமயப் பணி புரிய விரும்பி முகமதிய மன்னன் அனுமதி பெற வேண்டி இந்துஸ்தானி மொழி தெரிய வேண்டி நாமகள்மீது சகலகலாவல்லி மாலை பாடினார். தெல்லி முகமதிய மன்ன னின் நட்பையும் அனுமதியையும் பெற்றுக் குமாரசாமி மடம் கட்டிப் பணிபுரிந்தார். காசி மடத்தின் கிளையாகவே திருப் பனந்தாள் மடம் இவரால் நிறுவப் பெற்றது.

அடிகளின் தமிழ்ப் பணி அளவிடற்கரியது. தெலுங்கு நிலவிய மதுரையில் நூல் பல இயற்றி தமிழ் முழக்கம் எழச் செய்தார். வடநாட்டுக் காசியில் சமயம் கலந்த தமிழ்ப் பணியைத் தொடங்கி வைத்தார். இந்துஸ்தானி கற்று, அயல்மொழி கற்றல் தமிழ் பெருமையை விளக்குதற்கே பயன்பட வேண்டும் என்பதை உணர்த்தியுள்ளார்.

நெகிழ்ந்தும் இனிதும் எளிதுமான சொல்லால் கலம் பகம், பிள்ளைத் தமிழ், கோவை, மாலை, முதலியவற்றில் பல சிற்றிலக்கியங்கள் பாடியுள்ளார். நாயக்கரால் நலிவுற்றிருந்த தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளார். இவருடைய பாடல்களில் தமிழ் உணர்ச்சி பொங்கிக் கொண்டிருக்கும். பொதிய மலையைத் தமிழ் திளைக்கும் மலையாகவே காண்கிறார். குறக்குடிப் பண்பில் தமிழ்ப் பெருமை காண்கிறார். அங்கயற்கண்ணியைப் பாண்டியன் மகளாகப் பாடி, மதுரையைக் கொண்ட பாண்டிய நாட்டை அவள் ஆண்ட நாடாகவே காட்டுகிறார். தெலுங்கர் ஆட்சியில் மொழிப் பற்றும் நாட்டுப்பற்று மிழந்து கிடந்த தமிழர்க்கு இவர் பாடல்கள் தமிழ் உணர்ச்சியோடு தன்னுட்சி ஆர்வமும் ஊட்ட வல்லனவாகும். குமரகுருபரர் தமிழ்ப் பற்றோடு விடுதலையுணர்வும் வாய்ந்த கவிஞர் ஆவர்.

(iv) சிவப்பிரகாசர் : 17—ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவர் ஆவர். இவர் தொண்டை நாட்டுத் துறைமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்தாராதலின் துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்று அழைக்கப்பட்டார். தந்தை இறந்ததும் தம்பிமார் கருணைப் பிரகாசர், வேலையர் இருவரையும் அழைத்துக் கொண்டு திருவண்ணாமலை சென்று மடத் தலைவரிடம் தமிழ் கற்றுச் சோண சைலமாலை பாடினார்.

திருநெல்வேலி சென்று சிந்துபூந்துறையில் இருந்த தருமபுர ஆதீன வெள்ளியம்பலத் தம்பிரானிடம் தமிழ்ப் பயிற்சி பெற்றுப் புலமை நிரம்பித் தம்பிரானின் எதிரியை நிரோட்டக யமக அந்தாதி பாடி வென்றார். அது, உதடுகள் குவியாமல் பாடும் முப்பது பாடல்களைக் கொண்டது. பின்னர் மீண்டும் துறைமங்கலம் சென்று அண்ணாமலை ரெட்டியார் வேண்டுகோட்படி திருவெங்கை பற்றிக் கோவை, கலம்பகம், உலா, அலங்காரம் ஆயநான்கு நூல்கள் பாடினார். தம்பியை இல்லறம் புகுத்தித் தாம் துறவு நெறியையே மேற்கொண்டார்.

சிதம்பரம் சென்று தங்கிச் சிவப்பிரகாச விலாசம், தருக்க பரிபாஷை, சதமணிமாலை, நால்வர் மணிமாலை பாடினார்.

பின்னர், சிவஞான பாலைய தேசிகரைக் கண்டு அவர்மீது தாலாட்டு, நெஞ்சுவிடு தூது பாடினார். காஞ்சி சென்று தங்கி வேதாந்த சூடாமணி என்பதனை இயற்றியதோடு 'பிரபுலிங்கலீலை' என்ற காப்பியமும் பாடினார். இது அடிகள் இயற்றிய நூல்களுள் மிகச் சிறந்ததாகும். இது கன்னடத்தினின்று மொழிபெயர்க்கப் பெற்றது. பிரபுவாகிய லிங்கத்தின் லீலையைக் கூறுவது எனப்பொருள்படும். பிரபுவாகிய அல்லமதேவரின் (இறைவன்) காமவெற்றி இந்நூலின் உள்ளுறையாகும். மாயை அரச குமாரியாகப் பிறந்து மத்தளக்காரராய் விளங்கும் அல்லமதேவரைக் காதலித்துக் காதல் கைக்கூடாமல் போவதாக இந்நூல் அமைந்துள்ளது. ஏனைய நூல்களைப் போலின்றி இங்குப் பெண்மை ஆண்மையைக் கண்டு காதலித்தும் ஆண்மை பெண்மைக்கு இடங்கொடாமல் நிற்கும் காட்சியை அல்லம தேவர் மாயை வருணனைகளில் காணலாம். கற்பனை நயமும் சொல், பொருள் நயங்களும் செறிந்து விளங்குகிறது. வீர சைவத்தை நிலைநாட்டவே தோன்றியதாயினும் காவியச் சுவைக்காக எல்லோரும் விரும்பிக் கற்பர். இதனால் சிவப்பிரகாசர் கற்பனைக் களஞ்சியம் என்று பாராட்டப் பெற்றுள்ளார்.

சிவப்பிரகாசர் மேலும் பல நூல்கள் எழுதினார். ஏசுமதம் பரவக் கண்டு ஏசுமத நிராகரணம் என்ற நூல் எழுதினார். தம்பி கருணைப்பிரகாசர் இறந்ததற்கு வருந்தி அவர் தொடங்கிய சீகாளத்திப் புராணத்தில் இரண்டு சருக்கங்கள் பாடினார். இது வேலையரால் முடிக்கப் பெற்றது. சிவப்பிரகாசர் 32வது வயதில் உயிர் துறந்தார். இவர் ஏறத்தாழ 30 நூல்கள் எழுதினார். நன்னெறி நீங்கலாக அனைத்தும் சமயச் சார்புடைய நூல்களே. நன்னெறி பிற்காலத்தில் தோன்றிய சிறந்த அற நூல்களுள் ஒன்றாகும்.

**(v) தாயுமானவர் :** 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த பக்திச் செல்வர் ஆவர். திருமறைக்காட்டுச் சைவ வேளாளப் பெற்றோர்க்கு இரண்டாம் மகனாகப் பிறந்தார். தந்தை கேடிலியப்பபிள்ளை திரிசிரபுரத்தில் விசயரகுநாத சொக்கலிங்கநாயக்கரின் கணக்கராகஇருந்தபோது பிறந்தார். திருச்சியில் உள்ள 'தாயுமானசுவாமியின்' பெயர் இடப்பெற்

ரூர். தந்தை இறந்தபின் இவர் நாயக்கரிடம் வேலைக்கமர்ந்தார். நாயக்கர் இறக்க, அரசி இவர்மீது காதல் காட்டத் தொடங்கினாள். இவர் அஞ்சிச் சொல்லாமல் ஊரைவிட்டு இராமநாதபுரஞ் சென்று தமயனோடிருந்தார். அண்ணன் விருப்பத்திற்கிணங்கித் திருமணஞ் செய்துவாழும்நாளில் ஒரு குழந்தை பிறந்தது. மகவும் மனைவியும் இறந்ததும் துறவு பூண்டார்.

இவர் இளமையிலேயே தென்மொழி வடமொழி இரண்டும் கற்று நிரம்பிய புலமை வாய்ந்தவர். மௌன குரு தேசிகர் தொடர்பால் துறவுள்ளம் வாய்ந்து நாயக்கரிடம் வேலைபார்த்த நாளிலும் திருமணவாழ்க்கையிலும் உலகப்பற்றின்றி வாழ்ந்தார் என்றே தெரிகிறது. தாயுமானவரை அக்காலத்தவர் உணர்ந்துகொள்ளவில்லை. சைவ வைணவப் பிணக்கோடு, வீர சைவமும் சைவத் தனிக்கிளை எனும்படி தலை தூக்கி நின்றது. புறக் கோலங்களான சமய ஆசாரங்களும் கொள்கை வாதங்களுமே இறைப் பற்றெனக் கருதப்பட்டது. அந்நாளில் தாயுமானவர் 'உள்ளப் பக்தி' நெறியாளராய் விளங்கியதை அவர்கள் உணரத் தவறியதில் வியப்பில்லை.

சுவாமிகள் பாடிய 1452 பாடல்களும் 52 தலைப்புக்களில் அமைக்கப்பெற்றுள்ளன. பக்தி எழுச்சியில் அவ்வப்போது பாடிய தனிப்பாடல்கள் அல்ல. திருவாசகம் போல் முறையாக வகுத்துப் பாடிய பாடல்களாகும். தேனின் இனிமை சேர்ந்த இசையின்பமும் உள்ளத்தைத் தொடும் உணர்ச்சியும் பொருளும் நிரம்பிய விருத்தம், கண்ணி, வண்ணம் என்ற வகைப் பாக்கள் உவட்டாத அமுதப் பாடல்களாக உள்ளன. யோக நெறியில் திருமூலரையும் பக்தி நெறியில் மாணிக்கவாசகரையும் பின்பற்றியுள்ளார். தமிழகம் தந்த இரண்டாம் மாணிக்கவாசகராக விளங்கினார்.

அடிகள் சைவ மரபுகளைக் கடியவில்லை. ஆயினும் சைவத்திற்கு மேம்பட்டு நின்றே இறைவனை எங்கும் நிறைந்த முழு நிறை இன்பமாகக் (பரிபூரணானந்தம்) கருதினார். சமயங்கடந்த மோன சமரசம் அடிகள் சமயமாகும். எல்லாச்சமயங்

களையும் அதில் உட்படுத்திக் காண்கிறார். 'மைவிடா தெழு நீலகண்ட குருவே விட்ணு வடிவான ஞான குருவே, மலர் மேவி மறையோது நான்முகக் குருவே மதங்கள் தொறும் நின்ற குருவே' என்கிறார். சமயவாதப் போரினை அடிகள் அணுவளவும் விரும்பவில்லை. 'பாதரசமாய் மனது சஞ்சலப் படுகிறதே' என்கிறார். 'வாதமிகு சமயநெறிக் கரியதாகிய பொருள்' என்கிறார்.

அவர்க்குக் கடவுள் எங்கும் நிறைந்த பொருள். எதிலும் கலந்தொன்றி நின்றபொருள். 'கருதரிய மலரின்மணம் எள்ளி லெண்ணெய்போல் உடலுயிர்போல் கலந்தெந்நாளும் துரிய நடுவூடிருந்த பொருளாகும்.' 'ஆங்கே, பார்க்கின்ற மலரூடு நீயே இருந்தஅப் பனிமல ரெடுக்க மனமும் நண்ணேன்' என் கிறார், ஆணவம் அறவே நீங்கப் பெற்றவர். 'பேய்க்குண மறிந்திந்த நாய்க்கு மொரு வழி பெரிய பேரின்ப நிட்டை அருள்வாய்' என்கிறார்.

அடிகட்கு 'உள்ள வழிபாடே' உரியதாகும். 'துள்ளு மறியாம் மனதைப் பலிகொடுத்தேன்' என்கிறார். அவரது பக்திப் பெருக்கினை அளவிட முடியாது.

'உடல் குழைய என்பெல்லாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பி யூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஓருறவும் உன்னி யுன்னி
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடியாடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானேயவ் வானிலின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தி யேத்துங்
கடல்மடை திறந்தனைய அன்பரன் புக்கெளியை
கன்னெஞ்சனுக் கெளியையோ'

என்று, பக்திப் பரவசமாக வேண்டிப் பாடியிருக்கிறார். அடி

களின் 771 கண்ணிகளும் எல்லோரும் மனப்பாடம் செய்ய வேண்டிய இறையனுபவப் பாடல்களாகும். எல்லாப் புனிதர் களையும் போலவே அடிகளும் உலகில் குறை காணவிரும்பா மல் தன்னிலே குறைகண்டு கலங்குகிறுர். பாடல்கள் எல்லாம் உணர்ச்சியிலே தோய்ந்த உள் அனுபவ வெளியீடுகளாக உண்மை இயல்பும் சுவையும் ததும்பப் பாடப் பெற்ற உயி ரோவியங்களாக உள்ளன.

(vi) சிவஞான முனிவர்: 18ஆம் நூற்றுண்டின்பிற்பகுதி யைச் சார்ந்தவர். நெல்லை மாவட்டத்து விக்கிரம சிங்க புரத்தில் பிறந்தார். பெற்ருேர் இட்ட பெயர் 'முக்களா லிங்கர்' என்பதாகும். இளமையிலே துறவில் நாட்டங் கொண்டு திருவாவடுதுறை ஆதீனத் தலைவரை நாடி 'சிவ ஞான யோகி' என்ற தவப்பெயர் பெற்றுத் தமிழும் வட மொழியும் சிறக்கக் கற்றுத் தேர்ந்த புலவராகிப் பல நூல்கள் இயற்றியுள்ளார். சைவமும் தமிழும் தழைக்கப் பெரும்பணி புரிந்தார். இவரை மாதவச் சிவஞான யோகிகள் என்று பாராட்டுவர். இவரிடம் பல மாணவர் பாடங்கேட்டனர்.

இவர் பாடிய காஞ்சிப் புராணம் தொண்டை மண்டலச் சிறப்பும் சித்திரக் கவிநயமும் கொண்டது. இவர் பாடிய கலசை செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், குளத்தூர் அமு தாம்பிகை பிள்ளைத்தமிழ் முதலியனவும் கற்பனை நயஞ்சிறந்து விளங்குகின்றன. கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலான நான்கு அந்தாதி நூல்களும் யமகம் திரிபு இவற்றின் திறங் காட்டவல்லன. தொல்காப்பியச் சூத்திர விருத்தி, சங்கர நமச்சிவாயரின் நன்னூல் விருத்தியின் திருந்திய வெளியீடு, சிவஞானப் போதப்பேருரை, சிற்றுரை முதலியன இவரது உரையாசிரியத் திறனுக்குச் சான்றுகளாக உள்ளன. மற்றும் வெண்பா, கோவை, ஆனந்தக் களிப்பு, மாலை முதலான பிர பந்தங்களும் இலக்கணம், மொழிபெயர்ப்பு, சமயம், கண்ட னம், தருக்கம் முதலான வகைப்பட்ட நூல்களும் எழுதிச் சைவத்தொண்டோடு தமிழ்த் தொண்டும் புரிந்துள்ளார்.

## 4. மடங்கள்

பண்டை நாளில் மதுரைச் சங்கம் தமிழிற்குத் தாயகமாய் விளங்கியது. மூவேந்தரும் சிற்றரசரும் வள்ளல்களும் புலவர்களை ஆதரித்துத் தமிழ் வளர்ச்சிக்குத் துணைநின்றனர். களப்பிரர் காலத்திலே கூடச் சமணத் துறவிகள் தமிழின் பெருமையுணர்ந்து 'திராவிட சங்கமெனப்' பெயரிய சங்கம் வாயிலாகவும் தனித்த முறையிலும் தமிழ்ப்பணி புரிந்தனர். பக்தி இயக்கம் தோன்றவே நாயன்மாரும் ஆழ்வார்களும் பாடித் தமிழை வளப்படுத்தினர். இடைக்காலத்தில் சோழப் பேரரசு நிலைபெற்று விளங்கவே, சைவ நூல்கள், பெருங் காப்பியங்கள், பிரபந்தங்கள் பல எழுந்தன.

சோழநாடும் பாண்டியநாடும் நாயக்கர் ஆட்சிக்குள் வந்தபோது தமிழ்ப்புலவர்கள் திக்கற்ற அனாதைகளாயினர். இந்நிலையை உணர்ந்த சைவச் சான்றோர்கள் சைவத் தமிழிற்குப் புகலிடம் அமைக்க முயன்றனர். இப்பெரியார்களின் முயற்சியே மடங்களாக எழுந்தன. சைவ மடங்களெல்லாம் தமிழுக்குத் தாயகமாக விளங்கின.

(i) திருவாவடுதுறை ஆதீனம்: இது 14-ஆம் நூற்றாண்டில் நமசிவாய தேசிகரால் நிறுவப்பெற்றது. தமிழில் சிறந்த புலமை வாய்ந்தவர்களே இதற்குத் தலைவர்களாக இருந்து வந்தனர். இவர்கள் பல தமிழ் நூல்கள் இயற்றியுள்ளனர். அம்பல வாண தேசிகர், ஈசான தேசிகர், வேலப்ப தேசிகர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இம்மடத்தார் தேர்ந்த புலவர்க்குப் புகலிடம் நல்கித் தமிழ் வளர்த்தும் வந்தனர். நன்னூலுக்கு உரை வகுத்த சங்கர நமச்சிவாயர் இம்மடத்தைச் சார்ந்தவரேயாவர். பற்பல நூல்கள் இயற்றிய சிவஞான முனிவரும் இம்மடத்தவரே யாவர்.

இம்மடத்தவர் ஆண்டுதோறும் செய்யும் தமிழ்ப்பணிகள் பலவாகும். திருமந்திர மாநாடு நடத்தித் திருமந்திரத்தின் பெருமைகளை வெளியிடுகின்றனர். திருவெண்ணெய் நல்லூரில் சிவஞான போத மாநாடு நடத்தி வருகின்றனர். திருமுறை மாநாடுகளையும் சில இடங்களில் நடத்தி வருகின்றனர். இவர்கள் நிறுவியுள்ள நூலகங்கள் பலவாகும். அரிய

நூல்களைக் குறைந்த விலையில் வெளியிட்டு இலவசமாக வழங்கி வருகின்றனர். புலவர்கட்குச் சன்மானம் அளித்துப் பாராட்டுகின்றனர். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் போன்ற தமிழ்ப் பெரும் புலவர்களைப் பாராட்டிய பெருமை இவர்கட்குரிய தாகும்.

(ii) தருமபுர ஆதீனம் : குருஞான சம்பந்தர் இம் மடத்தை உருவாக்கிய பெருந்தகை ஆவர். இவர் சிறந்த புலவர்: சிவபோத சாரம் போன்ற சமய நூல்கள் இயற்றி யுள்ளார். இதன் தலைவர்களாக விளங்கிய கமலை ஞானப் பிரகாசர், வெள்ளியம்பலத் தம்பிரான் போன்றவர்கள் நூல்கள் இயற்றியுள்ளனர்.

இம்மடத்தவரும் தமிழ் வளர்ச்சிக்கென ஆக்கப்பணிகள் புரிந்து வருகின்றனர். தமிழ்க் கல்லூரியும் சித்தாந்தக் கல் லூரியும் நடத்தி வருகின்றனர். பெரிய நூல்நிலையம் அமைத் திருக்கின்றனர். 'ஞான சம்பந்தம்' என்னும் பெயர்கொண்ட வாரத்தாள் நடத்தி வருகின்றனர். சிறந்த புலவர்கட்கு ஆதீனப் புலவரெனப் பட்டம் வழங்கிப் பாராட்டி வருகின் றனர். திருநெறித் தமிழ் மாநாடு நடத்திப் புலவர்கட்கு பொன்னாடை போர்த்தி வருகின்றனர். தேவாரத் திருமுறை களுக்கு விளக்க உரை எழுதி வெளியிட்டுள்ளனர். திருக் குறள் உரைகளையெல்லாம் தொகுத்துப் பெரும் பொருட் செலவில் 'திருக்குறள் உரை வளம்' எனும் பெயரில் வெளி யிட்டுக் குறைந்த விலைக்கு விற்கின்றனர்.

(iii) திருப்பனந்தாள் மடம் : இதுவும் தஞ்சை மாவட் டத்தில் அமைந்து சைவப்பணியோடு தமிழ்ப்பணியும் புரிந்து வரும் மடமாகும். குமர குருபரர் காசியில் நிறுவிய குமார சாமி மடத்தின் கிளையாக 1720-இல் தில்லை நாயக சுவாமி களால் நிறுவப் பெற்றது. இங்கும் தமிழ்ப் பேரறிஞர்களே மடத்தலைவர்களாக இருந்து வருகின்றனர்.

இம்மடத்தினர் தமிழ்க் கல்லூரி ஒன்று நடத்தி வருகின் றனர். பல்கலைக்கழக வித்துவான் தேர்வில் முதல் மதிப் பெண் வாங்குபவர்க்கு 1000 ரூபா பரிசுக்கு அறக்கொடை

புரிந்திருக்கின்றனர். 'குமர குருபரன்' என்னும் மாதப் பத்திரிகை நடத்தி வருகின்றனர். குமர குருபரரின் பிரபந்தங்கள், பன்னிரு திருமுறைகள், பெரிய புராணம் போன்ற புராணங்கள், மற்றும் நூல்களைச் செப்பமுறப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றனர். திருக்குறள் உரைக்கொத்து, திருமந்திரம், நீதி நெறி விளக்கம் போன்ற நூல்களை ஆங்கிலம், இந்தி முதலிய மொழிகளில் பெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

இம்மூன்று பெரிய மடங்களே அல்லாமல் ஆங்காங்கே சிறிய மடங்களும் அமைக்கப் பெற்றுள்ளன. மதுரை ஆதீனம், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடம், திருவண்ணாமலை மடம் போன்றவைகள் தமிழ்ப்பணி புரிந்து வருகின்றன. காஞ்சி காமகோடி பீடம் சங்கராசாரியார் சுவாமிகள் திருப்பாவை—திருவெம்பாவை மாநாடுகள் நடத்தி வருகிறார். தமிழைப் பேணுவதற்கு மன்னர்களோ வள்ளல்களோ இல்லாத நாளில் தோன்றிச் சுமார் 500 ஆண்டுகட்கு மேலாகத் தமிழ் இலக்கிய, இலக்கண, உரைப்பணிகள் புரிந்து தமிழுக்குத் தாயகமாய் விளங்கி வந்த மடங்கள் இலக்கிய வரலாற்றில் என்றும் இடம் பெற்று விளங்கும்.

## 5. தல புராணங்கள்

சைவ மடங்கள் சமய வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாயிருந்தன. சமயப் புலவர்கட்குப் பேராதரவு நல்கின. இதனால் சிறந்த படைப்பாற்றல் கொண்ட புலவர்களும் சமய இலக்கியங்கள் படைப்பதை நோக்கமாகக் கொண்டனர். இதனால் 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் சமய அடிப்படையில் பிரபந்தங்களோடு தல புராணங்களும் தோன்றின. பலர் இலக்கியச் சுவையைப் பெரிதாகக் கருதாமல் சமயக் கொள்கைக்கு முதலிடம் தந்தனர். இதனால் ஒன்றுபோலவே மற்றொன்றும் அமைந்து தனித்திறன் அற்று இருந்தன. தலத்தின் பெயர், தெய்வத்தின் பெயர், அதன் உருவம் முதலியவற்றின் பெருமைகளைப் பாட விரும்பினர். வரலாற்றுக் கண் கொண்டு பாராமல் தம் மனக் கற்பனையால் பெருக்கி உரைத்தனர். உள்ளத்துப் பக்தியில்பொங்கிய கவிதைகளாக இல்லாமல், பிறர் தூண்டுதல் பேரில் செய்யப்பட்டனவா

தலின் இலக்கியத்திற்குரிய புதுமைத் தன்மையும் படைப் பாற்றலும் இல்லை.

உமாபதி சிவனர் பாடிய கோயிற் புராணமே முதல் தல புராணம் என்பர். சிவப்பிரகாசரும் அவர் தம்பியரும் சேர்ந்து இயற்றிய சீகாளத்திப் புராணம் சிறந்த ஒரு தல புராணமாகும். திருவிளையாடற் புராணத்தை மதுரையின் தல புராணமாகக் கொள்வர். இது சிறந்த கற்பனை வளமும் கவி நயமும் இலக்கியச் சுவைகளும் வாய்ந்ததாகும்.

குற்றுலக் குறவஞ்சி பாடிய திரிகூட ராசப்பக் கவிராயர் திருக்குற்றுலத் தல புராணம் பாடியிருக்கிறர்; குறவஞ்சியின் இலக்கிய நயங்களை இப்புராணத்திலும் காணலாம். காஞ்சித் தலம் பற்றிய காஞ்சிப்புராணமும் சிறந்ததொரு நூலாகும். இது வட மொழியினின்று மொழி பெயர்க்கப்பட்டதாகும். இதன் முன் பகுதி சிவஞான முனிவராலும் பின் பகுதி கச்சி யப்ப முனிவராலும் பாடப்பெற்றுள்ளன. கச்சியப்ப முனிவர் திருத்தணிகை என்னும் ஊரினைச் சார்ந்தவர். இவர் வேறு பல புராணங்கள் பாடியிருப்பினும் தன் ஊர் மீது பாடிய திருத்தணிகைப் புராணமே சிறந்த கற்பனை நலமும் சொல்லருமையும் வாய்ந்தது என்பர். அருணுசல புராணம் பாடிய எல்லப்ப நாவலர் வேறு பல புராணங்களும் பாடியுள்ளார். திருசிரபுரம் மீனுட்சி சுந்தரம் பிள்ளை பதினறு தல புராணங்கள் பாடியுள்ளார். செல்வர்களும் ஊரார்களும் தம் தம் ஊருக்குப் புராணம் வேண்டிப் புலவர்க்குப் பணம் கொடுத்து எழுதச் செய்தனர் என்று அறிகிறேம்.

புராணங்கள் இலக்கிய வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெறவில்லை. கற்பனை, உவமை, மற்றும் இலக்கியச் சுவை களில் புதுமை இல்லை. மக்கள் வாழ்வோடு ஒன்றுமல் விலகி நிற்கின்றன.

# தற்காலம்

## 1. மேனாட்டுத் தமிழ் அறிஞர்கள்

யவனர் தமிழரொடு கொண்ட வாணிபம் கி. பி. ஏழாம் நூற்றாண்டுவரை நிலைத்திருந்தது. பின்னர் முகமதியர் அவ்வாணிபத்தைக் கைப்பற்றினர். வாஸ்கோடகாமா இந்தியாவுக்குப் புதிய வழி காணவே, 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இந்தியாவோடு நேர்முகத் தொடர்பு கொண்டனர். போர்த்துகீசியர், டச்சுக்காரர், ஆலந்தினர், ஆங்கிலேயர், டேனிஷ்காரர், பிரெஞ்சுக்காரர் ஆய ஐரோப்பியர் வந்து வாணிபம் வளர்த்தனர். மெல்ல மெல்ல அரசு அமைக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினர். அவர்கள் தத்தம் மொழி வாயிலாகவே மேல்நிலை மக்களிடம் தொடர்பு கொள்ளத் தொடங்கினர். ஆனால் அவர்களோடு இங்கு வந்து கிறித்துவச் சமயத்தைப் பரப்பத் தொடங்கிய சமயக் குரவர்கள் எளிய மக்களோடு பழகினர். ஆதலால் தத்தம் மொழி வாயிலாகச் சமயம் பரப்ப வழியில்லாமல், இங்குள்ள மக்களின் மொழியைக் கற்றுத்தேர்ந்து இந்நாட்டு மொழிகள் வாயிலாகத் தம் கொள்கைகளைப் பரப்பினர். தமிழ் நாட்டிற்கு வந்த கிறித்துவச் சமயக் குரவர்கள் தமிழ் கற்றுப் பேசி எழுதித் தக்க புலமையும் எய்தினர். தமிழின் பெருமையை உணர்ந்தும் இலக்கியம், இலக்கணம், உரைநடை, மொழிபெயர்ப்பு நூல்கள் எழுதியும் அச்சிட்டும் அரிய தமிழ்த் தொண்டாற்றியுள்ளனர்.

**(i) தத்துவ போதகர்; (1577-1658)** இவரது இயற்பெயர் ராபர்ட்-டி-நோபிலி. இத்தாலிய நாட்டில் பிறந்த இவர், இயேசு சபைக் குருவாகி, இளந்துறவியாக 1606-இல் தமிழகம் வந்தார். தமிழ் முனிவர்போல் உண்டும் உடுத்தும் ஒழுகியும் உயர்குல மாந்தரின் உள்ளங்கவர விரும்பினார். தமிழும் வடமொழியும் கற்றுப் புலமை எய்தினார். தமிழ் மக்க

ளுக்குத் தம் சமயக் கருத்தை உணர்த்தவேண்டிப் பதினேழு உரைநடை நூல்கள் இயற்றினுர். ஞானேபதேச காண்டம், தத்துவக் கண்ணுடி, ஏசுநாதர் சரித்திரம் முதலியன சிறந்த நூல்களாகும். வடமொழி கலந்ததாயினும் அவர் எழுதிய உரைநடை வீறு வாய்ந்ததாகும். உரை நடைக்குத் தொல் காப்பியத்தில் இலக்கணம் இருந்தாலும் முழுதும் உரைநடை யால் இயன்ற நூல் இவருக்குமுன் இருந்ததாகத் தெரிய வில்லை. தமிழில் முதல் உரைநடை நூலே எழுதிய பெருமை தத்துவ போதகர்க்கே உரியது.

**(ii) சீகன் பால்கு ஐயர்:** *(1683-1719)* செருமானிய நாட்டவர். டேனிஷ்மிஷனரியாக 1705இல் தமிழகம் வந்து தரங்கம்பாடியில் அமர்ந்து சமயப் பணியைத்தொடங்கினுர். இவர் அங்கு அச்சுப் பொறி நிறுவிச் சமய நூல்களோடு பாட நூல்களும் அச்சிட்டார். காகிதப் பட்டரை அமைத்துக் காகிதமும் செய்தார். இவருக்கு முன் வந்த கத்தோலிக்கக் குருமார்கள் தமிழில் நூல்களே அச்சிட்டாரேனும் பொது மக்கள் அச்சுநூல்களே வாங்கிப் படிக்கும் நிலேயை உருவாக் கியவர் இவரே. இவர் பைபிளேத் தமிழில் மொழிபெயர்த்த தோடு தமிழ்—இலத்தீன் ஒப்பிலக்கணமும் இயற்றியுள்ளார். தாயகம் திரும்பியபோது தாம் பழகிய தமிழைமறவாதிருக்க, தமிழர் ஒருவரை உடனழைத்துச் சென்ருர். இங்கிலாந்தில் கிறித்தவச் சபையினர் இவரைப் பாராட்டி அளித்த வாழ்த் திதழுக்கு இலத்தீனில் பதிலளித்ததோடு தமிழிலும் நன்றி கூறினுர். இவர் பழகு தமிழில் ஆர்வமும் தமிழ்ப் பற்றும் உடையவர் என்பதை அறிகிருேம்.

**(iii) வீரமாமுனிவர்:** *(1680–1742)* இத்தாலி நாட்டவர். கான்ஸ்டண்டைன் ஜோசப் பெஸ்கி என்ற இயற் பெயரினர். இயேசு சபையின் குருவாகிக் கத்தோலிக்கக் கிறித்தவச்சமயம் பரப்ப வேண்டி 1710இல் தமிழகம் புகுந்தார். மதுரையில் சுப்ரதீபக் கவிராயரிடம் இலக்கண இலக்கியங்களேக் கற்றுத் தேர்ந்தார். இளமையிலேயே இலத்தீன், கிரேக்கு, எபிரே யம், இத்தாலி, பிரெஞ்சு, ஆங்கிலம், பாரசீகம் முதலான மொழிகளேப் பயின்றிருந்தார். இங்குத் தமிழோடு சமக் கிருதமும் தெலுங்கும் கற்றுத் தேர்ந்தார். தமிழ்த் துறவி

போலவே, உணவும் உடையும் கொண்டு தஞ்சை முதல் குமரிவரை சுற்றிச் சமயப் பணி புரிந்தார். சந்தாசாகிப்பின் நட்பும் தமிழ்ப்புலவர் உறவும் பெற்றுத் திகழ்ந்தார்.

**காவியம்:** முறையாகத் தமிழ் கற்றுத் தமிழ் மரபு உணர்ந்து தமிழ் நெஞ்சம் வாய்க்கப்பெற்றுத் திருக்குறளின் அறமொழியிலும் சிந்தாமணியின் பொருட் சுவையிலும் கம்பன் கவிதையிலும் மூழ்கித் தாமும் ஒரு பெருங்காப்பியம் படைத்தளித்தார். இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தை யான சூசையப்பரின் வரலாற்றைத் தேம்பாவணி என்னும் பெயரில் மூன்று காண்டங்களில் 3615 விருத்தப் பாக்களைக் கொண்ட காப்பியமாகச் சுவைகள் விளங்கப் பாடியிருக் கிறார். அக்காப்பியத்தில் ஆங்காங்கே கம்பன், திருக்கதேவர் இருவரின் சாயல்களைக் கண்டு இன்புறலாம். இக்காப்பியம் மதுரைப் புலவர் முன்னிலையில் அரங்கேற்றப் பெற்றது என் பர். மற்றும் திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல நாயகி வெண்கலிப்பா, கித்தேரி அம்மானை, அன்னை அழுங்கல் அந்தாதி முதலான பிரபந்தங்களும் பாடியுள்ளார்.

**உரைநடை:** வீரமா முனிவர் செப்பமான நடையில் பல உரைநடை நூல்கள் எழுதி வெளியிட்டார். வேதியர் ஒழுக் கம், வேத விளக்கம் முதலான சமய நூல்களும் பேதகம் மறுத்தல், லூத்தர் இனத்தியல்பு ஆய மறுப்பு நூல்களும் மற்றும்பல சிறு நூல்களும் நிருபங்களும் எழுதியிருக்கிறார். இவர் எழுதிய 'பரமார்த்த குரு' கதையினைச் சிறுகதைத் தொகுப்பு நூல் எனலாம். அங்கதச்சுவை ததும்பும் இந் நகைச்சுவை நூல் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், தெலுங்கு, கன்னடம் முதலான மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது.

**இலக்கணம்:** அக்காலத்தில் எகர ஒகரங்கள் மேற்புள்ளி யோடும் மேற் புள்ளி நீங்கிய நிலையில் (எ ஒ) ஏகார ஓகாரங்களாகவும் கொள்ளப்பட்டன. புள்ளியிடத் தவறுவ தால் நேரும் இடர்ப்பாடுகளை உணர்ந்து இன்றுள்ள வடிவங் களைச் (எ, ஒ, ஏ, ஓ) செய்துள்ளார். உயிர் மெய்களில் புள்ளி நீங்கிய நிலையில் எகர ஒகர உயிர்மெய்களாகவும் (கெ, கொ) ஏகார ஓகார உயிர்மெய்களுக்கு இரட்டைக் கொம்

பாக்கியும் (கே, கோ) இன்றுள்ள வடிவங்களைச் செய்துள்ளார், ஐந்திலக்கணங்களையும் சுருங்கக்கூறும் 'தொன்னூல் விளக்கம்' என்னும் இலக்கண நூல் எழுதித் தானே அதற்கு உரையும் வரைந்தார். பேசப் பழகும் ஐரோப்பியர்க்குப் பயன்படுமாறு 'கொடுந் தமிழ் இலக்கணம்' என்னும் பேச்சுத் தமிழ் இலக்கணம் இலத்தீனில் எழுதினார்.

அகராதி: அகராதி முறையினைத் தமிழுக்குத் தந்தவர் வீரமாமுனிவரே. இவர் வகுத்த சதுரகராதி, பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது. மேலை நாட்டவர்க்குப் பயன்படும்படி தமிழ்—இலத்தீன் அகராதியும் எழுதியுள்ளார்.

மொழிபெயர்ப்பு: வீரமாமுனிவர் திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீனில் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறளை வெளியுலகிற்குக் காட்ட வழிகாட்டிய முதல்வர் வீரமாமுனிவரே.

வீரமாமுனிவரின் தமிழ்ப் பற்றும் தமிழ் மக்கள், தமிழர் பண்பாடு, மரபு முதலியவற்றில் அவர் கண்ட பெருமைகளும் பிற ஐரோப்பியர் கண்களைத் திறந்தன. பின் வந்தோர் தமிழைப் பெருமை வாய்ந்த மொழியாகக் காணத் தொடங்கினர்.

(iv) எல்லீசுத்துரை: 19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சென்னை நகரக் கலெக்டராகப் பணியாற்றிய ஆங்கிலேயர். ஆட்சித் துறைகளில் அமர்ந்திருந்த ஆங்கிலேயர் பெரும்பாலும், சமயச் சான்றோர்களைப் போலத் தமிழை உணர்ந்து போற்றவில்லை. ஆயின் இவர் விதிவிலக்காக விளங்கினார். இவர் இராமச்சந்திர கவிராயரிடம் தமிழ் கற்றுப் புலமை எய்தினார். வடமொழியிலும் பயிற்சி பெற்றிருந்தார். வீரமாமுனிவர் மீது தனிப் பற்றுவைத்து அம்முனிவரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதச் செய்தார். அவருடைய நூல்களைத் திரட்டச் செய்தார். மற்றும் அரிய தமிழ்நூல்களைத் திரட்டிப் பாதுகாத்தார். திருக்குறளின் முதல் 13 அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதியுள்ளார். அவ்வுரையில், தமிழ் நூல்

களினின்று தக்க மேற்கோள்கள் காட்டியிருப்பது அவரது தமிழ்ப்புலமைக்குச் சிறந்த சான்ருகும்.

(v) ரேனியஸ் ஐயர் : செருமானிய நாட்டினர். லுத்தரன் மிஷன் சமயத் தொண்டராய்ப் பாளையங்கோட்டையில் தங்கிப் பணி புரிந்த நாளில் முகவை இராமாநுசக் கவிராயரிடம் தமிழ் கற்ருர். பைபிள் புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்த்தார். வேத உதாரணத் திரட்டு, தமிழ் இலக்கண நூல், ஞான நூல் முதலியனவும் இயற்றியுள்ளார். பின்னர் வந்த போப் ஐயர் இவரைப்பாராட்டியுள்ளார்.

(vi) போப் ஐயர் : (1820-1907) இவர் ஆங்கிலேயர். பத்தொன்பதாம் வயதில் கல்லூரிக் கல்வி நிரம்பப் பெற்று மிக்க ஆர்வத்தோடு தமிழகம் வந்தார். இராமாநுசக் கவிராயரிடம் தமிழை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். முதன் முதல் திருநெல்வேலியைச் சார்ந்த சாயர்புரத்தில் சமயப் பணி புரிந்தார். பின்னர், தஞ்சை, நீலகிரி முதலிய இடங்களில் தங்கிப் பணி புரிந்தார்.

தமிழின் பெருமையை மொழிபெயர்ப்பால் மேனுட்டுக்கு உணர்த்தியவர் போப் ஐயரே ஆவர். திருக்குறள், நாலடியார், திருவாசகம், சிவஞான போதம் ஆய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். புறநானூறு, புறப் பொருள் வெண்பா மாலை ஆய நூல்களினின்று சிற்சில பாடல்களை மொழி பெயர்த்தார். தமிழகப் புலவர் வரலாற்றையும் அடியார் வரலாற்றையும் (Poets of Tamil Land, the Lives of Tamil saints) மணிமேகலைக் கதையினையும் ஆங்கிலத்தில் எழுதினுர். தமிழ் கற்கும் ஐரோப்பியரும் தமிழ் மாணவரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு தமிழ் இலக்கணத்தை, Elementary Tamil Grammar என்னும் பெயரில் மூன்று பகுதிகளாக வெளியிட்டார். தமிழ் உணர்ந்து தமிழறியாத மேனுட்டவர்க்கு உணர்த்தினுர். தமிழ் அன்பிலே தோய்ந்தின்புற்று அவ்வன்பால் கட்டுண்ட ஐயர் தம் கல்லறை அமைப்பில் தமிழர் கைப்பொருளும் கலக்க வேண்டும் என்றும் 'தமிழ் மாணவன்' என்பதே தன் கல்லறை மொழியாக

இலங்க வேண்டும் என்றும் விரும்பினூர். இப்பெரியாரின் தமிழ்ப்பற்றை நம்மால் அளவிட முடியுமோ?

**(vii) டாக்டர் கால்டுவெல் :** *(1815-1891)* அயர்லாந்து நாட்டினர். இருபத்து மூன்று ஆண்டுகள் நிரம்பிய இளம் போதகராய்த் தமிழகம் புகுந்து நெல்லை மாவட்டத்து இடையன்குடியில் தங்கி மக்களோடு இணைந்து வாழ்ந்து கோயில் கட்டியும் பள்ளி அமைத்தும் சமயம் பரப்பிக் கல்வி புகட்டி அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றியபெருந் தொண்டர். அவரது உடல் இடையன்குடிக் கோயிலிலேயே இடம் பெற்றது. அவர் புகழோ தமிழறிந்த நெஞ்சமெலாம் நிலையான இடம் பெற்றுள்ளது.

அவர் இங்கு வரும்போதே மேலை நாட்டு இலத்தீன், கிரேக்கு, எபிரேயம், செருமானி, பிரெஞ்சு போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். இங்கு வந்ததும் தமிழிலும் சமக்கிருதத்திலும் புலமை பெற்றதோடு தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகம் ஆய திராவிட மொழிகளிலும் துதவம் முதலான திருந்தாத்திராவிட மொழிகளிலும் தேர்ச்சி பெற்றூர். பல ஆண்டுகள் அயராமல் ஆராய்ச்சி செய்து அரிய முடிவுகளைக் கண்டு திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் ஒப்பிலா நூலைப் படைத்தளித்தார். இது முதல் மொழியியல் நூலாகும்.

தமிழ் முதலான திருந்திய திராவிட மொழிகள் ஆறும் துதவம் முதலான திருந்தா திராவிட மொழிகள் ஆறும் திராவிட மொழிக் குடும்பம் என்னும் தனியினமாகும் என்று நிறுவியுள்ளார். இத்திராவிட மொழியினம் ஆரிய மொழிக் குழுவினின்று முற்றிலும் வேறுயது என்பதற்கு ஆணித்தரமான சான்றுகள் பல தந்துள்ளார். 'தமிழ் திராவிட மொழியினத்திற்கு முதன்மையானது; ஆரியத்தின் துணையின்றித் தனித்தியங்கவல்லது. உலகச் செம்மொழிகள் **(Classical Languages)** ஐந்தில் உயிர் மொழியான இரண்டில் (தமிழ் ஆங்கிலம்) தமிழ் ஒன்றுகும் என்னும் உண்மையின் உறுதியை உலகறியச் செய்தார். இவ்வுண்மை திராவிட மொழிகட்குப்

புத்துயிர் வழங்கித் தமிழின் மொழி நூலாராய்ச்சி நேர் வழியில் செல்ல வழி வகுத்துள்ளது.

மேலும், இவர் நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம், ஞானஸ்நானம் போன்ற உரை நடை நூல்களும் திருநெல்வேலிச் சரித்திரம் என்னும் வரலாற்று நூலும் எழுதியுள்ளார்.

மற்ற மேனாட்டறிஞர் பலரும் தமிழ்ப் பணிபுரிந்துள்ளனர். பெர்சிவல் தமிழ்ப் பழமொழிகளைத் திரட்டி ஆங்கிலத்தில் வெளியிட்டார். லாசரஸ் நன்னூலையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தேய்லர் என்பவர் வெற்றி வேற்கையை மொழி பெயர்த்தார். திருக்குறளைக் கிரால் என்பவர் செருமானியிலும் ஏரியல், லேபிலேசர் இருவரும் பிரெஞ்சு மொழியிலும் பெயர்த்துள்ளனர்.

ராட்லர் ஐயர் தமிழ்-ஆங்கில—ஆங்கில அகராதி வெளியிட்டார். உவின்ஸ்லோ ஐயர் எழுதிய உவின்ஸ்லோ அகராதியும் சிறப்பு வாய்ந்தது. பெர்சிவல் ஆங்கிலத் தமிழ்அகராதி வெளியிட்டார். லாசரஸ் தமிழ்ப் பழமொழி அகராதி வெளியிட்டார். பெப்ரீஷியஸ் இலக்கியப் பேச்சு மொழிச் சொற்களடங்கிய அகராதி வெளியிட்டார்.

மேனாட்டறிஞரின் தமிழ்த்தொண்டு தமிழ் மக்களை விழிப்படையச் செய்தது. தமிழர் தமிழின் பெருமையை உணரத் தொடங்கினர். ஆங்கிலத்தில் உள்ளதுபோல் அருந்தமிழிலும் நூல்கள் பல தோன்றுதல் வேண்டும் என்று நினைக்கத் தொடங்கினர். தமிழில் இருந்த தேக்க நிலை மாறியது; ஆக்க நிலை தோன்றியது. தமிழின் மறுமலர்ச்சிக்கு அவர்கள் தொண்டு வித்தாக அமைந்தது.

## 2. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள்

பழங்காலத்திலேயே இஸ்லாமியர் தமிழ்நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். கி. பி. ஏழாம்நூற்றாண்டு வரை யவனரே தமிழ் நாட்டுடன் வாணிபம் நடத்தினர். பின்னர் முகம்மதியர் அவ்வாணிபத்தைக் கைப்பற்றி

ஐரோப்பியர் வருகைவரை சிறக்க நடத்தி வந்தனர். தொண்டித்துறையில் வந்திறங்கிய அரபிக் குதிரைகளை வாங்க வேண்டிப் பாண்டியன் மாணிக்கவாசகரை அனுப்பிய செய்தியை நாம் அறிவோம். பாண்டியர் அரபிக் குதிரைகளுக்காகப் பெரும் பொருளைச் செலவிட்டதும் வரலாற்றுண்மையாகும். அரபிக் குதிரை வாணிபம் காரணமாகப் பல முகமதியர் இங்கு வந்து தங்கிவாழ்ந்தனர். பிற்காலப் பாண்டியர் அவையில் முகமதியர் ஒருவர் இடம் பெற்றிருந்தார் என்று கூறப்படுகிறது. ஆயினும் அந்நாளில் முகமதியர் வாணிபத் தொடர்போடு நின்றுவிட்டனரே அன்றிச் சமயம் பரப்பும் முயற்சி எதுவும் கொள்ளவில்லை.

14ஆம் நூற்றுண்டில் மாலிக்காபர் தென்னுட்டின் மீது படையெடுத்தநாளில் இந்துக்களில் சிலர் இஸ்லாம் சமயத்தைத் தழுவினர். 17, 18ஆம் நூற்றுண்டுகளில் நவாபுகள் தமிழ் நாட்டை ஆண்டனர். அக்காலத்தில் தமிழ் நாட்டில் முஸ்லிம்களின் தொகை பெருகியது. முகமதியரின் வேதமான 'குர்ஆன்' அரபுமொழியில் அமைந்திருந்தமையால் அம்மொழி புனித மொழியாகக் கருதப்பட்டது. குர்-ஆனை அம்மொழியிலே கற்க வேண்டும் என்ற விதியும் ஏற்பட்டிருந்தது. அதனைப் பிறமொழியில் பெயர்த்தல் கூடாது என்ற எண்ணம் பரவியிருந்தது. ஆதலால் தமிழ் முகமதியர் அரபுத் தமிழ் எனப்படும் புதிய எழுத்துக்களால் தமிழ் நூல் எழுதினர். தமிழை அரபு எழுத்துக்களால் அரபு முறையில் எழுதுவதே அரபுத் தமிழ் எனப்பட்டது. சிலர் தமிழிலும் நூல்கள் இயற்றினர்.

சீருப்புராணமே இஸ்லாமியப் பெருங்காப்பியமாகும். இது 17ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த உமறுப்புலவரால் பாடப்பெற்றது. இவர் இராமநாதபுரத்துக் கீழ்க்கரையில் பிறந்தவர். சீதக்காதி என வழங்கப்பெற்ற செய்யது அப்துல் காதர் மரைக்காயரால் ஆதரிக்கப் பெற்றவர். சீதக்காதி வள்ளலைப் படிக்காசுப் புலவரும் பாடியிருக்கின்றுர். ஆதலால் உமறுப் புலவரும் படிக்காசுப் புலவரும் சமக்காலத்தவர்

ஆவர். சீதக்காதியின் வேண்டுகோட்படியே இப்பெருங் காப்பியம் பாடப் பெற்றது.

சீறு என்னும் அரபுச் சொல் வாழ்க்கை என்னும் பொருள் உடையது. சீறாப்புராணம் என்பது நபிநாயகத்தின் புகழ் பெற்ற வரலாற்றைக் கூறும் காப்பியம் என்று பொருள் தந்து நிற்கிறது. நபிநாயகத்தின் புகழ் பெற்ற வரலாற்றை உமறுப் புலவர் விலாத்தத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்றத்துக் காண்டம் என்னும் முப்பெரும் பிரிவுகளில் பாடியுள்ளார். இது நாட்டுப் படலம் முதலான சிறு பிரிவுகளில் 5027 பாடல்களைக் கொண்டது. புலவர் தமிழ் மரபுகளைப் பின்பற்றிக் காவியச் சுவைகள் அமையப்பாடியுள்ளார். இஸ்லாமியக் கருத்துக்கள் விரியக் கூறப் பெற்றுள்ளன.

'நொண்டி நாடகம்' என்ற புதிய வகை இலக்கியப் படைப்பை இஸ்லாமியப் புலவர் தமிழுக்கு அளித்துள்ளனர். சீதக்காதி நொண்டி நாடகமே இவ்வகையில் முதல் இலக்கிய மாகும். இதைப் பின்பற்றி வேறுபல நொண்டி நாடகங்கள் எழுந்துள்ளன. தீமை பல செய்து வாழ்ந்த தீயோன் கால் வெட்டுண்டு நொண்டியான நிலையில் நின்று தன் கதையைத் தானே கூறுவதுபோல் சுவையான நாடக அமைப்பினைக் கொண்டது நொண்டி நாடகமாகும்.

17ஆம் நூற்றாண்டில் பற்பல சமயத்தவரும் பிரபந்தங்கள் இயற்றினாற்போலவே, முகமதியப் புலவர்களும் பிரபந்தங்களும் இயற்றியுள்ளனர். சவ்வாதுப் புலவர் முகம்மது நபி மீது ஆண்டவர் பிள்ளைத் தமிழும், சர்க்கரைப் புலவர் மெதினா அந்தாதியும் பாடியுள்ளனர்.

18-ஆம் நூற்றாண்டிலும் முகம்மதியப் புலவர்கள் சிறு சிறு நூல்கள் இயற்றியுள்ளனர். அவர்களுள் முகமது இபுராகிம் என்ற இயற்பெயர் வாய்ந்த வண்ணக் களஞ்சியப் புலவர் சிறந்தவர் ஆவர். இவர் மதுரையை அடுத்த மீசல் என்னும் ஊரில் பிறந்தவர். மதுரையில் ஒரு தம்பிரானிடம் தமிழ்க் கல்வி கற்றார். இவர் பலநூல்கள் இயற்றிய பின் நாகூர் சென்று தாம் பாடிய முகையதீன் புராணத்தை அரங்

கேற்றினர். அந்நகர் முகம்மதியச் செல்வர் ஒருவர் தம் மகளை இவருக்கு மண முடித்துக் கொடுத்தார். பின்னர் அவர் தம் வாழ்வை அங்கேயே கழித்தார். அரேபிய மொழியில் உள்ள இஸ்லாமிய இலக்கியங்களைப் பின்பற்றிச் சிலர் தமிழில் இலக்கியம் படைத்தனர். மதாறுசாகிபு என்பவர் மிதிறு சாநா என்ற காப்பியம் இயற்றினர். முகமதியப் புலவரால் படைப் போர் என்னும் புதுவகை இலக்கியம் தமிழுக்குக் கிடைத்துள்ளது. இது இஸ்லாமியருக்கும் பிறருக்கும் நிகழ்ந்த போர் நிகழ்ச்சியைக்கூறும். அவியார் என்ற முகமதியப்புலவர் இந்திராயன் படைப்போர், இபுனி ஆண்டான் படைப்போர் என்ற நூல்கள் இயற்றினர். முகமது உசெயின் என்பவர் 258 குறட்பாக்களாலாகிய பெண் புத்திமாலை என்ற நூலை இயற்றியுள்ளார். நயினுமுகம்மது என்ற புலவர் முன்கிரீன்மாலை என்ற நூலைப் பாடினர்.

பதினெட்டாம் நூற்றூண்டின் இறுதியில் சிறப்புற்றுத் திகழ்ந்த முகமதியப் புலவர் குணங்குடி மஸ்தான் ஆவர். இவர் மஸ்தான் என்ற பெயரினர். இராமநாதபுரத்துக் குணங்குடியில் பிறந்தவர். இவர் இஸ்லாமியத்தில் மிகுந்த பற்று வாய்ந்தவர். இவர் துறவியாகிச் சென்னை சென்று இராயபுரத்தில் வாழ்ந்து வந்தார். அகத்தீசர் சதகம், நந்தீசர் சதகம், நிராமயக் கண்ணி, ஆனந்தக் களிப்பு முதலிய சிற்றிலக்கியங்களும் அன்பு விளக்கும் தனிப் பாடல்களும் பாடினர். இவருடைய பாடல்கள் சமயப்பொது நோக்கு மிகுந்து காணப்பட்டமையால், இந்து சமயப் புலவர்கள் எல்லோரும் இவரைப் பெரிதும் பாராட்டினர்.

19ஆம் நூற்றூண்டில் ஐது றூசு நயினுப் புலவர் நவமணி மாலை என்ற நூலும் தனிப்பாடல்களும் பாடியுள்ளார். சேகனுலெப்பை என்றவர் பன்மொழிப் புலமையுடைவராய், புராணம், மாலை, நீதி, அந்தாதி, கலம்பகம் முதலான பல நூல்கள் இயற்றியுள்ளார். இளையான்குடிக்கு அருகில் உள்ள சோதுகுடி என்னும் ஊரில் பிறந்த அப்துல்காதிறு ராவுத்தர் நவமணிமாலை, வழிநடைச் சிந்து முதலான நூல்கள் இயற்றினர். சொர்ண கவி எனப்பட்ட நயினுர் முகமது பாவாப்

புலவர், பிள்ளைத் தமிழ் மாலை, வண்ணம், வழிநடைச் சிந்து முதலான நூல்கள் பாடியுள்ளார்.

தமிழ் சமயங்கடந்த மொழியாய் நின்றது. சைவரும் வைணவரும் தம் மொழி என்றனர். சமணரும் பௌத்தரும் தமிழைத் தயங்காமல் தமதாக்கிக் கொண்டனர். தமிழைக் கிறித்தவர் தமக்குரியதாக்கிக் கொள்ளத் தயங்கவில்லை. முக மதியரும் தமிழைத் தம் மொழியாகக் கொண்டு சிறப் புற்றனர்.

## 3. தற்காலப் புலவர் பெருமக்கள்

(i) இராமலிங்க சுவாமிகள் : *(1823-1874)* 19ஆம் நூற் றாண்டின் பெரும்புலவர் ஆவர். தென்னார்க்காட்டு மருதூரில் பிறந்து சென்னையிலும் தில்லையிலும் வாழ்ந்து இறுதி நாலாண்டுகள் வடலூரில் வாழ்ந்து வீடெய்தினார். இளமை யிலேயே கவிபாடும் திறன் வாய்ந்தவர். பதின்மூன்றாம் வய தில் பற்று நீங்கிச் சமரச மனப்பான்மைமிக்கு அருள் கனிந்த வாழ்க்கை நடத்தினார்.

இவர் பாடிய 6000-க்கு மேற்பட்ட பாடல்களை ஆறு திருமுறைகளாக வகுத்துள்ளனர். தேவார மூவர், மாணிக்க வாசகர், தாயுமான சுவாமிகள் போன்ற சான்றோர்களைப் பின்பற்றிப் பாவகையாலும், பாவினங்களாலும் பதிகம், மாலை, விண்ணப்பம், உலா, கண்ணிகள் முதலான பல தலைப் புக்களில் பாடியுள்ளார். அகப்பொருள் துறைகள் வழி நின்று காதலி நிலையில் பாடிய பாக்களும் பல. அவை எளிமை யும் இனிமையும் கனிவும் நிரம்பிக் கற்பார் உள்ளத்தில் கட வுள் அன்பைத் தோற்றுவிக்கும் தன்மை வாய்ந்தவை. இசைப்பாக்களான கீர்த்தனைப் பாடல்கள் இசை இன்பமும் பொருள் நலமும் ஒருசேரக் கனிந்து அமுதச் சுவையினவாய் உள்ளன. இவருடைய மாணவர்கள் இப்பாக்களை 'திரு அருட்பா' என்று போற்றினர். ஆறுமுக நாவலர் போன் றோர் 'அருள்பா' அன்று 'மருட்பாவே' என நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துப் போராடித் தோற்றனர்.

இவர் எழுதிய மனுமுறை கண்ட வாசகம் என்ற உரை நடை மனுநீதிச் சோழன் வரலாற்றைக் கூறுகிறது. 'ஜீவ காருண்ய ஒழுக்கம்' இவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப் பாகும். மற்றும் கட்டுரைகளும் கடிதங்களும் எழுதியுள் ளார். இனிமை கொண்டிலங்கும் உரைநடையில் அடிகளின் கருணை உள்ளம் புலப்படுகிறது.

அடிகள் சாதி, மத பேதங்களையும் பூசல்களையும் கண்டித் தார். உருவ வழிபாட்டை நீக்கி, இறைவனை அருட் பெருஞ் சோதியாய்க் கண்டார். ஜீவகாருண்யமும் சமரச சன்மார்க்க மும் அடிகளாரின் உயிர்க் கொள்கைகள் ஆகும். அக் காலத்துச் சிவநெறியாளர் அடிகளாரின் பெருமையை உணர்ந்து கொள்ளவில்லை. அன்றைய சைவர்கள் சமயப் போராட்டத் தலைவரையே எதிர் நோக்கினர். ஆனால் இவரோ சமாதானத் தூதராக விளங்கினார். இவரை அவர்கள் ஏற்காததில் வியப்பில்லை அன்றோ?

தொழுவூர் வேலாயுத முதலியாரை முதல்வராகக் கொண்ட மாணவப்பரம்பரையினர் அடிகள் ஏற்றி வைத்த அருட்பெருஞ்சோதி விளக்கை அணையாமல் காத்துநின்றனர். இன்று 'இராமலிங்கசுவாமி மிஷன்' அமைத்து இவர் கண்ட சமரசக் கொள்கைகளை வெளியுலகுக்கு உணர்த்தும் முயற்சி நடைபெறுகிறது.

அடிகள் கண்ட சமரச நிலையைக்காட்டும் ஒரு பாட்டினைக் காண்போம்.

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
அருள்நயந்த நன்மார்க்கர் ஆள்க—தெருள்நயந்த
நல்லோர் நினைத்த பெறுக நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இனிதே.

அடிகள் காண விரும்பிய யுதோப்பியவான கற்பனையுலகை நாம் காணும் நாள் எந்நாளோ அறியோம்.

(ii) ஆறுமுக நாவலர்: (1823—1879) இவர் யாழ்ப்பா ணத்து நல்லூரில் பிறந்தார். இளமை முதற்கொண்டே துறவு வாழ்க்கையில் பொருந்தி வாழ்நாளெல்லாம் சைவமும் தமிழும் வளர்க்கும் பணியில் தீவிரமாக உழைத்தார்.

மேனுட்டினின்று வந்த கிறித்தவச்சமயக் குரவர்கள் கல்வி வாயிலாகச் சமயம் பரப்புதலைக்கண்டு இவர் தமிழ்க் கல்வி வாயிலாகச் சைவத்தை வளர்க்க விரும்பி யாழ்ப்பாணத் திலும் சிதப்பரத்திலும் சைவசமயக் கல்லூரிகள் நிறுவி நிலை பெறச் செய்தார். யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் அச்சு இயந்திர சாலைகள் அமைத்து, அவற்றின் வாயிலாகப் பல உயர்ந்த தமிழ் இலக்கியங்களையும் சைவ நூல்களையும் பிழை யின்றிப் பதிப்பித்தார். இவரால் திருக்குறள் பரிமேலழ கர் உரை, திருக்கோவையார் உரை, நன்னூல் காண்டிகை உரை, தொல்காப்பியச் சேனுவரையம், பிரயோக விவேகம், கந்த புராணம், சேது புராணம், பாரதம் முதலிய நூல்கள் அச்சிடப்பெற்றன.

இவர் இனிய செப்பமான நடையில் பல உரை நடை நூல்கள் இயற்றியுள்ளார். பெரிய புராண வசனம், திருவிளை யாடற் புராண வசனம், கந்த புராண வசனம், பாலர் பாடப் பகுதிகள் (நான்கு), சைவ விஞ விடை (2 பாகம்), இலக்கணச் சுருக்கம், சிதம்பர மான்மிய வசனம் ஆகிய நூல் களை இயற்றினுர். கோயிற் புராணம், நன்னூல், சைவ நெறி, வாக்குண்டாம், நல் வழி, நன்னெறி முதலிய நூல்களுக்கு உரை எழுதினுர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரி கைகளில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதினுர். பெர்சிவல் ஐயரின் வேண்டுகோட் கிணங்கிப் பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார். மனத்தில் குறித்த கொள்கைகளைப் பொருளும் உணர்ச்சியும் புலப்பட ஆற்றல் கொண்ட உரை நடையில் எழுதவல்லவராதலின், இவர் உரை நடை உயிர் வாய்ந்த உரை நடையாக விளங்கியது. இவர் 'வசன நடை கைவந்த வல்லாளர்' எனப் பாராட்டப் பெற்றுள்ளார். 'நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல், சொல்லு தமிழெங்கே, சுருதி எங்கே?' என்றுர் சி. வை. தாமோதரனுர். பிழையிலா உரை நடை வளமுற வளர்வதற்கு இவர் பெருந்துணை புரிந்தார்.

கிறித்தவக் குருக்களைப் போலவே, தாமும் சைவத்தை வளர்க்கவேண்டிப் பற்பல இடங்களுக்குச் சென்று சைவப்

பெருமை விளக்கியும் பிற சமயக் குறைகளைக் காட்டியும் உணர்ச்சி தெறிக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். திருவாவடுதுறை ஆதீனத்துப் பண்டார சந்நதிகள் இவருக்கு 'நாவலர்' என்ற பட்டம் அளித்துப் பெருமை செய்தார்.

**(iii) மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை: *(1815 - 1876)*** இவர் திரிசிரபுரத்தவர். திருவாவடுதுறை ஆதீனப் புலவராகத் திகழ்ந்தார். விரைந்து கவி பாடுவதில் வல்லவர். நாளொன்றுக்கு 300 பாடல்கள் பாடும் திறன் வாய்ந்தவர் என்பர். முறையாகப் பாடஞ் சொல்வதில் பேரும் புகழும் பெற்றவர் ஆவர். ஆனால் சங்க நூல்களையும் பிற சமய இலக்கியங்களையும் பாடஞ் சொல்லவில்லை. பிற சமய இலக்கியங் கற்றல் குற்றமாகக் கருதப்பட்டதால், சைவ இலக்கியங்களையே பாடஞ் சொன்னார்போலும். சிறந்த மாணவர் குழாத்தை உருவாக்கினர். தியாகராச செட்டியார், உ. வே. சாமிநாத ஐயர், வல்லூர் தேவராச பிள்ளை முதலியோர் இவருக்குத் தலை சிறந்த மாணாக்கராகத் திகழ்ந்தனர். தமிழ்ப் புலவர்களை இனிய நண்பர்களாகக் கொண்டிருந்தார். மாயூரம் வேதநாயகம் பிள்ளை, கோபால கிருஷ்ண பாரதியார் போன்றோர் இவருக்குச் சிறந்த நண்பர்கள் ஆவர்.

இவர் நால்வகைக் கவியும் பாடுவதில் வல்லவர். அக்காலப் புராண, பிரபந்த மரபுகளைப் போற்றிப் பல்லாயிரமான பாடல்கள் பாடியுள்ளார். புதிய கற்பனையும் புதுமை நலமும் பெற்றிருந்தால், இவர் பிற்காலக் கம்பனாகியிருக்க முடியும். இவர் செய்த பெருநூல்கள் தல புராணங்களாகும். பதினாறு தல புராணங்கள் பாடியுள்ளார். அவற்றுள் திருநாகைக் காரோணப் புராணம் சிறந்தது என்பர். பத்துப் பிள்ளைத் தமிழ் நூல்கள் பாடினர். பெரும்பாலும் அவை, பற்பல தலங்களில் குடிகொண்டிருக்கும் கடவுளர் பற்றியவைகளே. இவரது சேக்கிழார் பிள்ளைத் தமிழ் மிகச் சிறந்தது என்பர். 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' என்று சேக்கிழாரைப் பாடியுள்ளார். இவர் பாடிய கோவைகள் மூன்று. அவற்றுள் ஒன்று மாயூரம் தேவநாயகம் பிள்ளை மீது பாடிய குளத்தூர்க் கோவையாகும்.

வேதநாயகம் பிள்ளையின் வேண்டுகோட்படி பாடப்பெற்றதே சீர்காழிக் கோவையாகும். அவர் பாடிய இரு கலம்பகங்கள் வாட்போக்கிக் கலம்பகமும் துறைசைக் கலம்பகமுமாகும். பதினறு அந்தாதிகளும் நான்கு மாலைகளும் பாடியுள்ளார். குமரகுருபரர், சிவஞான முனிவர் முதலியோர் வரலாறுகளைச் செய்யுளில் பாடியுள்ளார். இவரால் பாடப்பெற்ற தனிப் பாடல்களும் பல உண்டு.

சூதசங்கிதை, குசேலோபாக்யானம் என்னும் இரு நூல்களும் இவரால் மொழி பெயர்க்கப்பட்டு வல்லூர் தேவராச பிள்ளையின் பெயரால் வெளியிடப்பட்டன என்பர்.

இவர் சமயப்பற்று மிக்கவர். அக்கால நிலைப்படியே சைவ இலக்கியங்களையே பாடஞ் சொல்லி வந்தார். சங்க நூல்களையோ, பௌத்த சமண சமயக் காப்பியங்களையோ வைணவ நூல்களையோ பாடஞ் சொல்வதில்லை என்பது, உ. வே. சா. அவர்களால் வெளிப்பட்டுள்ளது. சைவ சமயத்தவர்க்கே பாடஞ் சொல்வது என்ற கொள்கையினர். வேங்கடராமன் என்ற பெயரைச் சாமிநாதன் என்று மாற்றியே உ. வே. சாவுக்குப் பாடந் தொடங்கினர் என்று அறிகிறோம். ஆயினும் சமயக் காழ்ப்பில்லா நட்புடையவராவார். கிறித்தவ வேதநாயகம் பிள்ளையின் தம்பிக்கு இவர் ஆசிரியராக விளங்கினர்.

**(iv) வேதநாயகம்பிள்ளை :** *(1826-1889)* இவர் திரிசிரபுரத்தை அடுத்த குளத்தூரில் கத்தோலிக்கப் பெற்றோர்க்குப் பிறந்து ஆங்கிலமும் தமிழும் கற்றுத் தேர்ந்து சீர்காழி, மாயூரம் ஆயஊர்களில் சில்லா முனிசீபாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பொது நோக்கு உடையவராய் மீனட்சி சுந்தரம்பிள்ளையோடு தமிழ்கலந்த நட்பும், திருவாவடுதுறை ஆதீனத் தலைவரோடு நட்புறவும் கொண்டு திகழ்ந்தார். போலித் தன்மையைப் பொறுக்காதவராய் உண்மையையும் நேர்மையையும் உறுதியுறக்கொண்டு, மது, புலால் கடிந்து எல்லோரும் விரும்பும்வண்ணம் இனிதாகப் பழகுபவராயும் உயர்ந்த ஒழுக்க சீலராயும் வாழ்ந்தார்.

இவர், தாம் பாடிய நீதி நூலில் எல்லோருக்கும் பொது வான நீதிகளை உள்ளத்தில் பதியும் வண்ணம் சுவையுறப் பாடியிருக்கிறார். பெண்மதி மாலையில் பெண்களுக்கு இன்றி யமையாத கல்வியறிவையும், பண்பு, ஒழுக்க நலன்களையும் அழகுறப் பாடியிருக்கிறார். இவர் பாடிய சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் பொருள் நலம் கனிந்து எல்லாச் சமயத்திற்கும் இசைந்து இசை யொழுகும் பாக்களாக உள்ளன.

பிரதாப முதலியார் சரித்திரம் இவரது பெருமையைப் புலப்படுத்தும் நாவலாகும். இதுவே தமிழில் தோன்றிய முதல் நாவலுமாகும். உரைநடை நூல் இல்லாக் குறையைப் போக்கவும் நீதி நூல், பெண்மதி மாலை இவற்றில் கூறிய நீதி களுக்கு உருவம் அளிக்க வேண்டியும் இந்நாவலைப் படைத்த தாக, நூலின் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ கத்தை நிகழ்களனாகக் கொண்டது கதை. அறிவும் நகைத் திறனும் வாய்ந்த தலைவனை பிரதாப முதலியாரே தன் கதையைக் கூறும் முறையில் அமைந்துள்ளது. முதன்மையான பாத்திரங்களான தாயும், மனைவியும் தமிழ்ப் பெண்மையின் பேரியல்புகள் பொங்கத் தோன்றுகின்றனர். நீதியும் அன்பும் இரக்கவுணர்வும் கதையெங்கும் ஊடுருவி நின்றாடுகின்றன. அன்பில் விளைந்த மனித உறவுகள் காட்டப்படுகின்றன. சுவையான கதைப் போக்கோடு நகைச்சுவைகள் நிரம்பித் தமிழ்ப்பண்பை இயல்புபட எளிய உரை நடையில் சித்தரிக் கும் சிறந்த நாவலாக அமைந்துள்ளது. சுகுண சுந்தரி இவர் எழுதிய மற்றொரு நாவலாகும். இது சிறு கதைத் தொகுப் புப்போல் அமைந்துள்ளது.

இவர் சமய நூல்களும் இயற்றியுள்ளார். கிறித்தவச் சமயத்தவர் பாடுவதற்கெனச் சத்திய வேதக் கீர்த்தனைகள் என்னும் தமிழிசை நூல் இயற்றியிருக்கிறார். தேவ மாதா அந்தாதி, திருவருள் அந்தாதி, திருவருள் மாலை, தேவ தோத்திர மாலை ஆய பிரபந்தங்களும் பெரிய நாயகி அம்மன் பதிகமும் மற்றும் தனிப்பாடல்களும் பாடியுள்ளார். சித் தாந்த சங்கிரகம் என்னும் நூலில் நீதி மன்றங்களின் சட்டங் களைத் தொகுத்துக் கூறுகிறார். மகா வித்துவான் மீனாட்சி

சுந்தரம் பிள்ளையின் கோவைக்குப் பாட்டுடைத்தலைவன் என்றால் இவர் பெருமையும் நன்மதிப்பும் பெற்றவர் என்பது நன்கு விளங்கும்.

**(v) பேராசிரியர் சுந்தரம் பிள்ளை :** *(1855-1897)* இவர் ஆலப்புழையில் சைவப் பெற்றோர்க்குப் புதல்வனாகப் பிறந்து திருவனந்தபுரத்தில் கல்லூரிக் கல்வி முடித்து, திருநெல்வேலி உயர்நிலைப்பள்ளியில் சில ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்னர் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் ஆசிரியப்பணியில் அமர்ந்து பின் தத்துவப் பேராசிரியராகத் திகழ்ந்தார்.

இவர் 'மனோன்மணீயம்' என்னும் நாடகக் காவியம் பாடிப் புகழ் பெற்றுள்ளார். லிட்டன் பிரபு ஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி (Secret way) என்ற செய்யுளைத் தழுவிப் பாண்டியன் கதையெனும்படி பாடியிருக்கிறார். இது ஆங்கில நாடகம்போல் ஐந்து அங்கங்களும் அவற்றின் உட்பிரிவுகளான இயல்களும் கொண்டுள்ளது. ஆயினும் தமிழ்க் காப்பியத்திற்குரிய தன் நேர் இல்லாத தலைவன், தலைவி, நாடு, நகர், மலை, ஆறு, கடல், மந்திரம், தூது, போர், மணம் முதலானவற்றையும் கொண்டு விளங்குகிறது. மனோன்மணி, குடிலன், சுந்தர முனிவர் போன்ற பாத்திரப் படைப்புக்கள் நாடகத்திற்கு ஏற்றம் தருகின்றன. நெல்லை, பொதியம், பொருநை, தென்றல், நஞ்செய் நாடு இவற்றில், தமிழ்நாட்டு மணமும் தமிழ் மணமும் கலந்து வீச நுகர்ந்து மகிழ்கிறோம். சுருங்கக் கூறின் மனோன்மணீயம் ஆங்கில நாடக அழகும் தமிழ்க் காப்பிய வனப்பும் இணைந்து விளங்கும் நாடகக் காப்பியம் ஆகும்.

நாடகம் தமிழ்த்தாய் வாழ்த்தோடு தொடங்குகிறது. இதில் ஆசிரியரின் அரிய ஆராய்ச்சி, உணர்ச்சி கலந்து அளிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தே இக்காலத் தனித் தமிழ் இயக்கத்திற்குக் கருவாக அமைந்து நின்றது எனலாம். 'சிவகாமி சரிதம்' சுவையான சேர்க்கையாகும். ஆங்கிலப் புலவரான கோல்டு ஸ்மித் எழுதிய The Vicar of Wakefield என்னும் ஆங்கில நூலில் உள்ள கதைப் பாட்டைத் தழுவிப் பாடப் பெற்றது. ஆசிரியர், அறிவியல், சமயம், வாழ்க்கை பற்றித்

தாம் கொண்ட நெஞ்சக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பாகவும் இந்நாடகத்தைக் கொண்டுள்ளார்.

தமிழ் மகன் பழம்பெரு நூல்களை ஆய்ந்தும் புதுப்புது நூல்களைப் படைத்தளித்தும் தமிழ்ப் பணி புரிய வேண்டு மென்பது இவர் கொள்கை.

மனோன்மணீயமாம் புதுமைப் படையலைத் தமிழ்த் தாய்க்கு அளித்ததோடு அரிய ஆராய்ச்சி நூல்களும் எழுதி யுள்ளார்.

இவர் எழுதிய 'நூற்றொகை விளக்கம்' ஆங்கிலத்திலும் தமிழிலுமுள்ள அறிவியல் நூல்களைத் தொகுத்தும் வகுத்தும் காட்டுகிறது. இவர் எழுதிய 'திருஞான சம்பந்தரின் கால நிச்சயம்' என்ற ஆங்கிலக் கட்டுரை உண்மையான தமிழ் வரலாற்றுக்குத் துணை புரிகிறது. 'திருவாங்கூர் பழைய அர சர்கள்' என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். சுந்தரம் பிள்ளை தமிழின் தனிப் பெருமையை ஆய்ந்து நிலை நிறுத்தித் தமிழ் ஆராய்ச்சி நேர் திசையிலே செல்வதற்கு வழி வகுத்துள்ளார்.

**(vi) டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் :** *(1835-1912)* உத்தமதானபுரத்தில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் இலக்கிய இலக் கணம் கற்றுத் திருவாவடுதுறை ஆதீனப் புலவராய் விளங் கினார். கும்பகோணக் கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல் லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்தார். மறைந்து கிடந்த சங்கத் தமிழ் நூல்களையும் மற்றும் பெருங் காப்பியங்களையும் செப்பமான முறையில் பதிப்பித்து அழி யாப் புகழ் எய்தியுள்ளார்.

சேலம் இராமசாமி முதலியாரால் தூண்டப்பட்டுச் சிந்தாமணிபால் நெஞ்சத்தைப் பறிகொடுத்த ஐயர் அதனை முதன் முதல் பதிப்பித்தார். முகவுரை, நூலாசிரியர், உரை யாசிரியர் வரலாறுகள், காப்பியக் கதைச்சுருக்கம், செய்யுள், முதற் குறிப்பகராதி, மேற்கோள் இவற்றைக்கொண்டு 'நூற் பதிப்பு' என்பதற்கே அரிய எடுத்துக்காட்டாய் வெளி யிடப்பட்டது. தேடக் கிடைத்த ஏட்டுப்பிரதிகளையெல்லாம்

ஒப்பிட்டு உண்மையானமூலம் கண்டு தன் கருத்தையோ திருத்தத்தையோ வலிந்து புகுத்தாமல் பதிப்பித்தார். பண்டைய நூல்கள் பழைய வடிவம் குன்றாமல் வெளிவரவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் பதிப்பித்துள்ளார். பதிப்பு என்பது தனித்ததோர் அருங்கலை என்று தமிழுலகம் போற்றும் அளவுக்கு அது அமைந்திருந்தது.

சிந்தாமணியை அடுத்துப் பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை, மணிமேகலை முதலியவற்றைத் தான் நெறிப்படுத்திய பதிப்புக் கலையின் அழகு மிளிரப் பதிப்பித்தார். ஐயரின் பதிப்புப் பணியின் பெருமையினைத் தமிழ் உலகு உணர்ந்து பாராட்டத் தொடங்கியது. மேலும் பரிபாடல், பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பெருங்கதை முதலான உயரிய இலக்கியங்களையும் பிற்கால இலக்கியங்களையும் பதிப்பித்தார். வருங்கால அறிஞர்க்கெல்லாம் இவர் பதிப்புமுறை நல்ல வழிகாட்டியாக உள்ளது.

இவர் நல்ல உரைநடை ஆசிரியராகவும் விளங்கினார். மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம், என் வாழ்க்கை வரலாறு, கண்டதும் கேட்டதும், புதியதும் பழையதும், சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் என்பன இவர் எழுதிய உரைநடை நூல்களாகும். வெற்று ஆரவாரமோ அலங்காரமோ இல்லாத சொற்களால் எளிய தமிழில் பொருளைத் தெள்வும் நயமுமுறப் புலப்படுத்தும் ஒரே நோக்கத்துடன் இவர் உரைநடை நூல்கள் இயற்றியுள்ளார்.

உ. வே. சா. சிறந்த உரையாசிரியராகவும் கருதப்படுகிறார். சங்க நூல் ஆராய்ச்சியிலும் பதிப்பிலும் பெற்ற அனுபவங்களைக் கொண்டும் இலக்கண இலக்கியங்களில் உரையாசிரியர்கள் பொருளைப் புலப்படுத்திச் செல்லும் மரபுகளை உணர்ந்தும் குறுந்தொகைக்கு அவர் எழுதிய உரை அருமையானதாகும்.

இவர் மகோபாத்தியாயப் பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகம்இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. அனைவரும் இவரைத் 'தமிழ்த் தாத்தா' என்று வாயார அழைத்து

மகிழும்படி நீண்ட கால வாழ்வும் பெற்றார். தமிழகம் இவர் பெருமை உணர்ந்து இவருக்குக் கடற்கரைச் சாலையில் சிலை நிறுவியது. பழம் புதையலாய் மறைந்து கிடந்த நூல்களை ஒவ்வொன்றாய் வெளிப்படுத்தித் தமிழரைத் தமிழ்ச்செல்வராக்கிய பெருந்தமிழ்ச் செல்வர் ஆவார்.

**(vii) சி. வை. தாமோதரம் பிள்ளை:** இவர் யாழ்ப்பாணத்துச் சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்து இளமையில் ஆங்கிலக் கல்வி கற்குங்கால் கிறித்தவச்சமயம் சார்ந்திருந்து மீண்டும் சைவராகித் தமிழ்ப் பற்றும் சைவப் பற்றும் உடையவராய்த் திகழ்ந்தார். இளமையில் ஆங்கிலம் கற்றதோடு, தமிழை முத்துக்குமார கவிராசர் என்ற ஆசிரியரிடம் கற்றுச் சிறந்த புலமை எய்தினார். யாழ்ப்பாணக் கல்வி முடித்து, சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. கற்று வெளியேறிய முதல் பட்டதாரிகளுள் ஒருவர் ஆவர். தமிழ் நாட்டில் உயர்தர அலுவலில் அமர்ந்து புதுக்கோட்டை அரசாங்கத்து நீதிபதியாக விளங்கினார். இவர் உரைநடை எழுதுவதிலும், கவிதை பாடுவதிலும் திறமை பெற்றிருந்தும் பதிப்பாசிரியராகவே பெரும் புகழ் பெற்று விளங்கினார்.

ஏட்டுச் சுவடிகளாக இருந்த பழைய இலக்கியங்கள் அழிந்து வந்தன. இதனைக் கண்டு இவர் மனம் பொங்கியது. ஆறுமுக நாவலர், தாண்டவராய முதலியார், மழவை மகாலிங்கம், களத்தூர் வேதகிரி முதலியார், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயர், திருவேங்கட முதலியார், இராசகோபாலப் பிள்ளை முதலானோர் சிற்சில பிற்கால நூல்களைப் பதிப்பித்து வந்தனர். உ. வே. சாமிநாத ஐயர் அப்பொழுது தான் சீவகசிந்தாமணியைப் பதிப்பிக்கும் முயற்சியில் போராடிக்கொண்டிருந்தார். இவரும் தன்னந்தனியே பண்டைத் தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சியில்ஈடுபட்டார். உ. வே. சாமிநாத ஐயர் இவருக்கு உற்ற நண்பர் ஆவர்.

ஏட்டுச் சுவடிகளைப் பதிப்பிக்கும் முயற்சியில் பல இடையூறுகள் நேர்ந்தன. ஏட்டுப் பிரதிகள் கிடைப்பது அரிதாயிருந்தது. இவர் மனந்தளராமல் ஊக்கங்கொண்டு தேடிக் காண வேண்டியிருந்தது. ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்

துப் படி எடுத்தலும் அரிய செயலாக இருந்தது. புலமை வாய்ந்த உதவியாளர்கள் கிடைக்கவில்லை. அவரே ஏடு பார்த்து ஆராய்ந்து பிரதி செய்தார். விளங்காத இடங்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. நூல்களைப் பதிப்பிக்க ஏற்படும் செலவு வகையில் சிலரே பொருளுதவி செய்தனர். தம் கைப்பொருளையே செலவு செய்தார். வெளியிட்ட நூல்களை வாங்குவார் இல்லை. தமிழ் கற்ற பண்டிதர் சிலர் பொறாமை கொண்டு குறைகூறிக் கொண்டிருந்தனர். இவ் இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் இவர் தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி என்ற நூல்களை வெளியிட்டுப் புகழ் பெற்றார்.

**(viii) மறைமலை அடிகள் :** *(1883-1950)* நாகபட்டினத்தின் அருகில் உள்ள கடம்பாடியில் சைவவேளாளர் குலத்தில் பிறந்தார். இளமையிலே தமிழ் இலக்கண இலக்கியப் புலமை நிரம்பப் பெற்றுச் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர், பல்லாவரத்தில் இல்லம் அமைத்துத் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆய மும்மொழிப் புலவராய்ப் பல்வகை ஆராய்ச்சி நூல்கள் வெளியிட்டுச் சங்க நூற்களின் பெருமைகளையும் தமிழர் சிறப்புக்களையும் விளக்கும் வண்ணம் தனித் தமிழ் வளர்த்துத் தமிழ் மலையாய்த் திகழ்ந்தார்.

அமுத வெள்ளம் அமைந்து பாய்வது போல் ஒழுகும் இன்சுவை கனிந்த தனித் தமிழ் உரைநடையிலே பல்வகைத் துறைகளிலும் ஆராய்ச்சி நூல்கள் எழுதினர். சங்க நூற் பெருமைகளை உணர்த்த வேண்டி முல்லைப்பாட்டாராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி நூல்களும், தமிழறத்தை விளக்கும் வகையில் திருக்குறள் ஆராய்ச்சி நூலும் மேனாட்டுத் திறனாய்வாளர் கொண்ட இலக்கிய நெறிகளைப் பின்பற்றி உறுதி தோற்றுவிக்கும் உரைகளாக எழுதியுள்ளார். இவரது கால ஆராய்ச்சித் திறனும் வரலாற்றாராய்ச்சி வளமும் மாணிக்கவாசகரின் காலமும் வரலாறும் என்னும் அரிய ஆராய்ச்சி நூலால் வெளிப்படுகிறது. வேளாளர் யாவர் என்பது மற்றுமொரு ஆராய்ச்சி நூலா

கும். பண்டைத் தமிழர் பண்பாட்டாராய்ச்சியில் சிறந்தவர் என்பதை பண்டைத் தமிழும் ஆரியரும் என்னும் நூல் காட்டுகிறது. விரிவுரை எழுதுவதில் வல்லவர் என்பது திருவாசக உரையால் விளங்குகிறது. பழமையும் புதுமையும் கலந்தொளிரப் பற்பல நுட்பங்கள் புலப்படப் படிப்போர் உள்ளத்தைப் பிணிக்கும் வகையில் கட்டுரை எழுதும் திறன் 'அறிவுரைக் கொத்து' 'சிந்தனைக் கட்டுரைகள்' முதலியவற்ருல் வெளிப்படுகிறது. சங்ககாலச் செய்யுள் நடையில் பாடுவதில் வல்லவர் என்பதைத் திருவொற்றி மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சி ஆய சிறு காவியங்களால் அறியலாம்.

அடிகளார் வடமொழி மீதோ, வடமொழிவாணர் மீதோ கடுப்புடையவரல்லர். ஆனல் வடமொழியோடு ஒப்பிட்டுத் தமிழுக்கும் தமிழ்ப்பண்புக்கும் களங்கம் கற்பிப்பதைக் கண்டு பொறுக்காது கடியும் இயல்பினர். சாகுந்தல நாடக மொழிபெயர்ப்பும், சாகுந்தல நாடக ஆராய்ச்சியும் இவரது வடமொழிப் புலமைக்குத் தக்க சான்றுகளாகும்.

மேலை நாட்டில் வெளியிடப்பெறும் சிறந்த ஆங்கில நூல்களை அடிகள் உடனுக்குடன் வாங்கிப் படித்துப் பழகியவர். மேலை நாட்டு ஆராய்ச்சி முறையினையும் உயரிய கருத்துக்களையும் தமிழர் மேற்கொண்டு தமிழர் மேலைநாட்டு இலக்கியத் துறைகளில் உள்ளவை போலத் தமிழிலும் பலவகைத் துறைகண்டு நூல் எழுதித் தமிழ் வளர்க்க வேண்டுமென்ற ஆர்வங்கொண்டு வழியும் காட்டியுள்ளார். கோகிலாம்பாள் கடிதங்கள், நாகநாட்டரசி ஆய நாவல்கள் எழுதினர். ஞான சாகரம் என்ற பெயரில் தமிழ், ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்டு அரிய சிந்தனைக் கட்டுரைகள் எழுதிவந்தார். தேனும் பாலும் கலந்தாற்போன்ற இனிய குரலில், கனிந்த தமிழில் சொற்பொழிவாற்றித் தமிழின் புகழைப் பரப்பினர். இந்தி எதிர்ப்பிற்குத் தலைவராகத் திகழ்ந்தார். அடிகள் ஆற்றிய தமிழ்ப்பணியே அன்றிச் சைவப் பணியும் அளவிடற்கரியது.

மனோன்மணீயப் புகழ்வாய்ந்த சுந்தரம்பிள்ளை தனித்தமிழ் இயக்கத்திற்கு வித்திட்டார் என்றல் அவரோடு பழகி அவரது அன்பைப் பெற்று மறைமலையடிகள் அதனை வளர்த்

துப் பேரியக்கமாக்கினர். தமிழ் ஆராய்ச்சி முறை திசை தவறிப் போகாமல் நேர் நெறியில் செவ்விய முறையில் செல்வதற்குத் தனியொருவராய் நின்று பாடுபட்டு வெற்றியும் கண்டு ஆற்றலும் உணர்ச்சியும் கொண்ட தமிழ்ப் பரம்பரையைத் தோற்றுவித்துத் தமிழ்ப் பகையைத் தடுக்கும்—மறைக்கும்—மறைமலையாவர்.

**(ix) பரிதிமாற் கலைஞர்:** (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் 1870-1903) மதுரையை அடுத்த விளாச்சேரியில் அந்தணர் குலத்தில் பிறந்தார். பசுமலையில் பள்ளிப் படிப்பும் மதுரைக்கல்லூரியில் இடைநிலை வகுப்பும் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பும் படித்துப் பட்டம் பெற்றார். கிறித்தவக் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராய் அமர்ந்து மாணவர் மனங்கொள்ள விரிவுரையாற்றிப் பேரும் புகழும் பெற்றார். தமிழார்வ மிகுதியால் தம் பெயரை பரிதிமாற் கலைஞன் என மாற்றி மகிழ்ந்தார்.

ஆங்கில நாடக இலக்கியங்களின் மேம்பாட்டை உணர்ந்த பரிதிமாற் கலைஞர் நாடகத் தமிழ் வளர்க்கப் பெரிதும் பாடுபட்டார். நாடக இலக்கணம், இலக்கியங்கள் இயற்றியதோடு அரங்கேற்றி நடித்து நாடகக் கலைக்கு உயர்வளித்தார். ரூபாவதி அல்லது காணுமற் போன மகள் என்னும் உரைநடை நாடகம் இயற்றினர். இந்நாடகம் அரங்கேற்றப் பெற்றபோது இவரே ரூபாவதி வேடந் தாங்கி நடித்தார். அடுத்தபடியாக 'கலாவதி' என்னும் நாடகம் இயற்றினர். இதனை, அவர் இயற்றிய 'நாடக வியல்' என்னும் இலக்கண நூலுக்கு இலக்கியமாக இயற்றினர் என்பர். மான விஜயம் என்னும் அவல நாடகம் ஒன்றையும் இயற்றினர். இவர் இயற்றிய நாடக இலக்கண நூல் சூத்திரமும் உரையுமாக அமைக்கப்பெற்றுள்ளது.

'மதிவாணன்' என்னும் பெயரிய நாவலை 'ஞான போதினி' என்ற திங்கட் பத்திரிகையில் வெளியிட்டுப் பின் நூலாக்கினர். ஆங்கிலப்பாவகையைத் தழுவி 14 அடிகளைக் கொண்ட தனிப்பாடல்கள் பாடினர். இவை 'தனிப் பாசுரத் தொகை'யாக வெளியிடப்பட்டன. இப்பாடல்கள் போப்

ஐயரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. இவர் பற்பல சமயங்களில் பாடிய தனிப்பாடல்கள் ‘பாவலர் விருந்து’ என்னும் தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டது. இவர் எழுதிய ‘தமிழ் மொழியின் வரலாறு’ மொழி வரலாற்றுக்கு வழிகாட்டியாக உள்ளது. தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் ஆராய்ச்சி நூலும் எழுதியுள்ளார்.

இவர் பதிப்பாசிரியராகவும் விளங்கினர். இவர் பதிப்பித்த நூல்களிலே கலிங்கத்துப் பரணியும் நளவெண்பாவும் குறிப்பிடத்தக்கவையாகும். ஞானபோதினி என்ற பத்திரிகையில் எழுதினர்; அப்பத்திரிகையின் ஆசிரியராகவும் விளங்கினர். இவர் பன்னிரண்டு மாணவர்களைத் தேர்ந்து அவர்கட்குப் பாடஞ் சொல்லிவந்தார்.

‘தமிழ் உயர் தனிச் செம்மொழியாதலின் வடமொழிக்கு எவ்வகையாலும் தாழ்ந்தது இல்லை; அன்றியும் தமிழ் வழங்கு மொழியாதலின் ஒரு வகையில் வடமொழியிலும் சிறந்தது என்று கொள்ளவேண்டும்’ என்பது பரிதிமாற் கலைஞரின் கருத்தாகும். தமது கட்டுரைகள், நூல்கள், சொற்பொழிவுகள் வாயிலாக இக் கருத்துக்களை விளக்கி வந்துள்ளார்.

**(X) திரு. வி. கலியாணசுந்தரனர்: *(1883-1953)*** தம் ஊரான திருவாரூரைக் குறிப்பதற்கு ‘திரு’ என்பதனைத் தன் பெயரோடு சேர்த்துள்ளார். வெஸ்லியன் கல்லூரிக் கதிரைவேல் பிள்ளையிடம் தமிழ் கற்றார். பின்னர் அதே கல்லூரியில் தமிழாசிரியராகப் பணி புரிந்தார். திருமணம் செய்து ஆறு ஆண்டுகள் இல்லற வாழ்வில் நின்றார். மனைவியும் பிறந்த மக்களும் இறந்த பின் அண்ணன் உலகநாதர் வீட்டில் வாழ்ந்து வந்தார். உலகப் பற்று நீக்கி வாழ்ந்தாலும் உயிர்களிடத்தும் மக்களிடத்தும் மிக்க அன்பு கொண்டு தொண்டுள்ளமே சிறந்து நிற்க வாழ்ந்தார். தூய நெஞ்சமும் அருட் பண்பும் இயல்பாய் அமையப் பெற்று அரிய சிந்தனைக் கண் கொண்டு உலகை நோக்கிச் சாதி, குல, மத வேறுபாடு இன்றிப் பலதரப்பட்ட மாந்தருடன் உளங் கலந்து ஒன்றிப் பழகி எழுத்திலும் சொல்லிலும் எப்போதும்

சமரசம் இலங்கத் தன் நேர் இல்லாத் தமிழ் நடை கண்ட சிந்தனைச் சிற்பி ஆவர். ஒழுக்கத்தால் விழுப்பம் எய்திய உயர் குணக் குன்றும் ஆவர்.

தொடக்கத்தில் திரு. வி. க. அரசியலில் ஆர்வங் கொண்டு உழைத்தார். அரசியல், பொருளாதார, சமுதாய விடுதலை விரும்பித் தேச பக்தன் பத்திரிகையில் உயர் தரமுறையில் எழுதினர். பின் நவசக்தியின் ஆசிரியராக விளங்கினர். காந்தீயத்தையும் பொது உடமையையும் இணைத்துப் புதுமை நெறி கண்டார். பெரம்பூர் ஆலைத் தொழிலாளர் நலனில் நாட்டங்கொண்டு தொழிற் சங்கம் அமைத்து நடத்தினர். இதுவே இந்திய கண்டத்தில் முதன் முதல் எழுந்த தொழிற் சங்கமாகும். திரு. வி. க. வின் பேச்செல்லாம் உணர்ச்சி கொப்புளிக்க அன்பு கலந்து இனிமையும் எழுச்சியும் ஆற்றலும் நிறைந்து வெளிப்படும். அவருடைய பேச்சுக்கள் எல்லாம் தென்றல், தமிழ்ச்சோலை என்னும் நூல்களாகத் தொகுக்கப்பட்டுச் சிறந்த இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

திரு. வி. க. வின் உரை நடை, முன்னிற்பாரை விளித்துக் கூறுவதுபோல் அமைந்திருக்கும். அவர் நடை இனியது; ஆற்றல் நிறைந்தது; உணர்ச்சி வாய்ந்தது; உண்மை வாழ்வின் ஒளியாய்த் திகழும். அளவு, காட்சி, எளிமை, எதிர் நோக்கு எல்லாம் வாய்ந்து விளங்கும். இந்தியாவும் விடுதலையும்' இந்திய நாட்டின் வளர்ச்சியைக் கூறுகிறது. 'காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்' அகிம்சைக் கொள்கைகளைக் கூறும் சத்தியாக்ரக வேத நூலாகத் திகழ்கிறது. 'பெண்ணின் பெருமை' தமிழ்ப் பெண்மையின் புகழ்பாடும் உரை நடைக் காவியமாகும். 'காதலா, முடியா, சீர்திருத்தமா' என்பது காதலுக்காக முடியினைத் துறந்த எட்டாம் எட்வர்டு மன்னரைக் கொண்டு வரையப்பெற்ற காதல் தத்துவ நூலாகும். 'என் கடன் பணி செய்து கிடப்பதே'; சீர்திருத்தம் அல்லது இளமை முதலியவை சமுதாயம் பற்றியவை. முருகன் அல்லது அழகு, உள்ளொளி, இமயமலையும் தியானமும், சைவத்திறவு, சைவத்தின் சமரசம் முதலியன சமயம் பற்றிய

நூல்களாகும். இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளமும், கடவுட் காட்சியும் தாயுமானவரும், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், நாயன்மார் வரலாறு முதலியன பெரியோர்களின் வாழ்க்கை விளக்க நூல்களாக உள்ளன. திரு. வி. க. வின் உரை இதயத் துடிப்பைக் காட்டும். தெளிவு, இசைமை, வரையறை முதலியன கொண்டிருக்கும். சிறுகிய வாக்கியங்களில் சுடர்தெறிக்கும். சிறுவாக்கியம் எரிமலையாயுமிருக்கும். தெளிவிற்காகவே சொற்களை அடுக்கிக் கூறுவார். இதயத்தினின்று இதயத்தோடு பேசி, ஏற்கும் இதயத்தை ஆட்படுத்தவல்ல புதிய தமிழ் நடையாகும்; புதுமையான நடையுங்கூட.

முருகன் அருள்வேட்டல், கிறித்து அருள்வேட்டல், திருமால் அருள்வேட்டல். புதுமை வேட்டல், அருகன் அருகே, என்பனவாகிய செய்யுள் நூல்கள் பாடியுள்ளார்.

திரு. வி. க. பெரிய புராணத்தைப் பதிப்பித்தார். திருக்குறள் அறத்துப்பால் பகுதிக்கு புதிய விளக்கத்துடன் விரிவுரை எழுதியிருக்கிறார். தமிழிலேயே நுணுகிச் சிந்தித்து அரிய நுட்பங்கண்டு அவற்றைப் பேசியும் எழுதியும் வெளியிட முடியும் என்பதை நிறுவியுள்ளார்.

**(x) இராகவ ஐயங்கார் : *(1870-1948)*** புதுக்கோட்டையைச் சார்ந்தவர். பாஸ்கர சேதுபதியின் அவைப் புலவராயிருந்து மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவுவதற்கு உறுதுணையாயிருந்தார். தமிழ்ச் சங்கம் நடத்திய செந்தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கினார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித் துறையின் தலைவராகத் திகழ்ந்தார். ஆராய்ச்சி மனப்பான்மை வாய்ந்தவர். தமிழ் வரலாறு, குறுந்தொகை உரை, சேது நாடும் தமிழும், வஞ்சிமாநகரம், என்பன இவரது ஆராய்ச்சியின் பயனாகத் தோன்றிய அரிய உரை நடை நூல்களாகும். கீதையினையும் சாகுந்தலத்தையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். பாரியின் வரலாற்றைச் செறிவுவாய்ந்த தமிழில் 'பாரி காதை' என்னும் சிறு காவியமாகப் பாடிச் செட்டி நாட்டரசரிடமிருந்து பாராட்டும் பரிசிலும் பெற்றார். புவி

எழுபது, திருவடி மாலை என்பன போன்ற பிற செய்யுள் நூல்களும் பாடியிருக்கிறார். கம்ப இராமாயணக் காவிய நலம் பற்றிச் சொற்பொழிவாற்றுவதில் பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்தார்.

**(xii) சோமசுந்தர பாரதியார்** *(1878-1959)* இவர் மதுரையை அடுத்த பசுமலையில் பிறந்தார். சட்டக் கல்வி நிரம்பப் பெற்று வழக்கறிஞராய் விளங்கினார். பின்னர் அத்தொழிலை நீத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராய் அமர்ந்து தமிழ்ப்பணி புரிந்தார். பேச்சு வன்மை வாய்ந்தவராதலின் அவருக்கு நாவலர் என்ற பட்டம் வழங்கப்பெற்றது. அரிய ஆராய்ச்சி நூல்களும் படைத்துள்ளார். திருவள்ளுவர், சேரர்தாய முறை, தொல்காப்பியப் பொருளதிகார உரை, தசரதன் குறையும் கைகேயி நிறையும், நற்றமிழ், சேரர் பேரூர் முதலியன இவரது ஆராய்ச்சி நூல்களாகும். மாரி வாயில், மங்கலக் குறிஞ்சிப் பொங்கல் என்பனவாகிய செய்யுள் நூல்களும் இயற்றியுள்ளார். நெஞ்சத்தில் உள்ளதை அஞ்சாமல் எடுத்துரைக்கும் திண்மையான சொல்லாற்றலும் எழுத்தாற்றலும் வாய்ந்து விளங்கினார். முன்னோர் கருத்தை மறுத்து எழுதுங்கால் தக்க சான்றுகள் காட்டி அறிஞர் ஏற்கும் வண்ணமும் எழுதுவது இவர் இயல்பாகும்.

**(xiii) பண்டிதமணி கதிரேசன் செட்டியார்** : *(1881-1953)* செட்டி நாட்டு மகிபாலன் பட்டியில் பிறந்தார். தமிழ் மொழி வடமொழி இரண்டிலும் சிறந்த புலமை வாய்ந்து விளங்கினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்தார். சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருவாசகம் முதலிய இலக்கியங்களில் உள்ள திட்ப, நுட்ப, நயங்களைச் சுவையுற எடுத்துரைப்பதில் வல்லவர். சுக்ர நீதி என்னும் வடமொழி நூலினைச் செந்தமிழில் பெயர்த்துள்ளார். மிருச்ச கடிகம் என்னும் வடமொழி நாடக நூலினைத் தழுவி உரை நடையும் பாட்டுமாக 'மண்ணியல் சிறு தேர்' நாடகம் இயற்றியுள்ளார். உதயணன் கதை, சுலோசனை, உரைநடைக்கோவை, இவரது உரை நடை நூல்களாகும்.

இவரது கட்டுரைகளில் ஆராய்ச்சி நுட்பமும் இலக்கிய நயமும் உறுதியும் தெளிவும் ஒருங்கே அமைந்திருக்கும். தமிழ், சமக்கிருதம் ஆய இருமொழிகளில் வல்லவராய் முதன் முதல் மகோபாத்தியாயப் பட்டம் பெற்றவர் இவரே. தமிழ் நாட்டில் நிகழ்ந்த பல இலக்கிய மாநாடுகளிலும் சைவ சித்தாந்த மாநாடுகளிலும் தலைமை தாங்கி அரிய தலைமையுரைகள் செய்துள்ளார்.

**(xiv) கா. சுப்பிரமணிய பிள்ளை** : *(1888-1945)* திருநெல்வேலியில் பட்டதாரியான காந்திமதிநாத பிள்ளையின் மகனாகப் பிறந்து சட்டம் பயின்று M. L பட்டம் பெற்று M. L. பிள்ளை என்றே அழைக்கப்பட்ட பேரறிஞர் ஆவர். சென்னைச் சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவும் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில்- தாகூர் சட்ட விரிவுரையாளராகவும் திகழ்ந்த சட்டப் புலவர். ஆயினும் அவரைத் தமிழ்த்தாய் ஆட்கொண்டாள். அவர் வாழ்நாட் பணியெல்லாம் தமிழுக்கே அமைந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். தமிழ் இலக்கிய வரலாற்றைச் செவ்விய கால வரையுடன் தெளிவாக எழுதியுள்ளார். தேவார மூவர், மாணிக்கவாசகர், சேக்கிழார் முதலியோர் வரலாற்றைத் தெள்ளிய தமிழில் வரைந்துள்ளார். 'உலகப் பெரியார் வரலாறு' எழுதியிருக்கிறார். திருஞானசம்பந்தர் தேவார இயற்கைப் பேரழகு, இறையனார் அகப்பொருள், பழந்தமிழ் நாகரிகம், மொழி நூற்றொகையும் தமிழ்மொழி அமைப்பும், இவர் இயற்றிய ஆராய்ச்சி நூல்களாகும். 'செகப்பிரியர் வரலாறும் நாடகக் கதைகளும்' என்னும் நூல் எழுதியிருக்கிறார். இவர் எழுதிய சமய நூல்கள் பலவாகும். தியானமும் வாழ்க்கை உயர்வும் போன்ற வாழ்க்கை நூல்களும் உடல் நூல், வானநூல் போன்ற அறிவியல் நூல்களும் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்களும் சட்ட நூல்களும் தெளிந்தோடும் கனி தமிழ் நடையில் இயற்றியுள்ளார். தமிழினுக்கோ தமிழர்க்கோ தீங்கு நேர்ந்தபோதெல்லாம் துடித்தெழுந்தோடிக் குறைகளைய முன்நின்ற பெருந்தகையாவர்.

செந்தமிழினுக்குப் பணிசெய்த தொண்டரெல்லாம் இவர்க்குச் சகோதரர்கள் ஆவர்.

(xv) வையாபுரிப் பிள்ளை : (1888-1956) பொருநையாற்றங்கரையில் உள்ள சிக்கநரசையன் கிராமத்தில் சரவணப் பெருமாள் பிள்ளையின் புதல்வராகப் பிறந்தார். சட்டக்கல்வி பயின்று பட்டம் பெற்றார். மனமெல்லாம் தமிழில் ஆழ்ந்து கிடந்தமையால் தமிழ்ப்பணிக்கே தம்மை யளித்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் அகராதி பதிப்பாசிரியராக இருந்துகொண்டே, உலா, கோவை, பள்ளு, தூது போன்ற பிரபந்தங்களும் புறத் திரட்டு, திரிகடுகம், சிறு பஞ்சமூலம் போன்ற நூல்களும் பதிப்பித்தார். சென்னைப் பல்கலைக் கழகத்திலுமன்றி, திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராய்த் தமிழ்ப்பணி புரிந்தார்.

இவர் பற்பல பத்திரிகைகளிலும் அவ்வப்போது அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். புலவர் பற்றியோ இலக்கியம்பற்றியோ எழுதுங்கால் கால ஆராய்ச்சிக்கு முதலிடம் அளித்துள்ளார். அற்புத நிகழ்ச்சிகளையோ கர்ண பரம்பரைக் கதைகளையோ அப்படியே கொள்ளாமல், மேல் நாட்டு ஆசிரியர்கள் கையாண்ட முறையைப் பின்பற்றிச் சிற் சில புலவர் காலம்பற்றிவரையறை செய்துள்ளார். இவர் பத்திரிகைகளில் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இலக்கிய மணிமாலை, இலக்கிய உதயம், இலக்கிய தீபம், இலக்கியச் சிந்தனைகள், இலக்கணச் சிந்தனைகள், தமிழின் மறுமலர்ச்சி, தமிழ்ச் சுடர் மணிகள், தமிழர் பண்பாடு, கம்பன்காவியம், சொற்கலை விருந்து, சொற்களின் சரிதம் முதலான நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. தாம் உண்மை எனக் கண்டதை அஞ்சாமல் எழுதும் உறுதிவாய்ந்தவர் இவர். கால ஆராய்ச்சிக்குச் சொல்லை முதன்மையாகக் கொண்டதாலும் வடமொழி பற்றி மிக்க நம்பிக்கை கொண்டதாலும் இவரது கால ஆராய்ச்சியில் காலவரை பற்றிக் கருத்து வேறுபாடுகொள்ளக் கூடுமாயினும் அறிவியல் முறையில் ஆராய்ச்சி செய்வதற்கு நல்ல வழி காட்டியாவார்.

(xvi) ரா. பி. சேதுப்பிள்ளை: (1896-1961) திருநெல்வேலியை அடுத்த இராசவல்லிபுரத்தில் 1896இல் கார்காத்த வேளாளர் குலத்தில் பிறவிப்பெருமாளின் பிள்ளையாகப் பிறந்தார். சட்டக் கல்வி முடித்து திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பணிபுரியத் தொடங்கினார். தமிழ்ப் பயிற்சியும் தமிழார்வலர் கூட்டுறவும் அவரைத் தமிழின் பக்கம் அணைத்துக் கொண்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருமுறையிலுமாக ஆறு ஆண்டுகள் தமிழ்ப்பணி புரிந்துள்ளார். சென்னையில் வையாபுரிப் பிள்ளையின் கீழ் அமர்ந்து தமிழ்ப் பணி தொடங்கி, அவருக்குப்பின் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக விளங்கினார். ரெவரண்ட் லாசரஸ் பெயரில் தமிழ்ப்பேராசிரியப் பீடம் அமைக்கப்பெற்றபோது அதன் முதல் தமிழ்ப் பேராசிரியராகி இறக்கும்வரை அப்பதவியில் இசைபடத் திகழ்ந்தார்.

பண்டிதரும் பாமரரும் விரும்பும் வண்ணம் எதுகை, மோனை நயங்களுடன் இனிமையொழுகத் தூயதமிழில் பேசிச் 'சொல்லின் செல்வர்' எனப் பாராட்டப் பெற்றுள்ளார். படிக்கத் தெவிட்டாத இனிமை வாய்ந்த செந்தமிழான நூல்கள் பல இயற்றியுள்ளார். கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். 'ஊரும் பேரும்' இவர் எழுதிய சிறந்த ஆராய்ச்சி நூலாகும். சிலப்பதிகார நூல் நயமும் திருவள்ளுவர் நூல் நயமும் அவர் தமிழாய்வுத் திறனைக் காட்டும். 'தமிழ் இன்பம்' எனப் பெயரிய கட்டுரைத் தொகுப்பு நூல் ஐயாயிர ரூபா அகாடமிப் பரிசு பெற்றுள்ளது. வேலும் வில்லும், வீரமாநகர், தமிழ் விருந்து, தமிழ்வீரம், கடற்கரையிலே, தமிழ் நாட்டு நவமணிகள் முதலான நூல்கள் இனிய செந்தமிழ் நடையில் அமைந்தவை.

சென்னைப் பல்கலைக் கழகம் நூற்றாண்டு விழாவில் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. தாம் ஈட்டிய அரும் பொருளையெல்லாம் தாம் பணிபுரிந்த இரு பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றிற்கும் 25000 ரூபாயாக அறக்கொடை வழங்கிய வள்ளலாகவும் பெயர் பெற்றுள்ளார். புலவர்களுள், தமிழுக்குப் பெரும் பொருட் கொடை வழங்கிய பெருமை இவருக்கே சாரும்.

**(xvii) பம்மல் சம்பந்த முதலியார் :** சட்டக் கல்வி பயின்று பட்டம் பெற்று நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் பல் வகையாலும் நாடகக் கலைக்குப் பணியாற்றி, 'நாடகத் தந்தை' எனப் பாராட்டப்பெற்றுள்ளார்.

இவர் 1891இல் 'சுகுணவிலாச சபை' என்ற நாடகசபை நிறுவினர். இவர் நாடகத்தைத் தொழிலாகக் கொள்ளாமல் பொழுது போக்குவதற்குரிய கலையாகவே கருதினர். தானே அரங்கேற்றி நடித்ததுடன், நண்பர்களான ஆர். கே. சண்முகஞ் செட்டியார், சி. பி. இராமசாமி ஐயர் போன்ற அறிஞர் திலகங்களை நடிக்கச் செய்தார். இதனுல் தாழ்ந்தோரே நாடகத்தில் நடித்தற்குரியர் ; உயர்ந்தோர் அரங்கேறி நடித்தல் கூடாது என்ற தவருன எண்ணத்தை மாற்றுவித்தார். நாடகத்தில் நடிப்பவர்கள் 'கூத்தாடிகள்' எனத் தாழ்வாகக் கருதப்பட்ட நிலைமாறி நடிகர் என்பதில் பெருமை கொள்வதற்கு வழிகோலியவர் ஆவர். இவரைப் பின்பற்றித் தஞ்சை,குடந்தை,திருச்சி முதலான நகரங்களில் நாடக ஆர்வலர்கள் நாடக மன்றங்கள் தோற்றுவித்து நடித்து நாடகக் கலைக்குப் பெருமையளித்தனர்.

இவர் நல்ல நாடக நூலாசிரியர் ஆவர். அரங்கத்து நாடகத்திற்கென நல்ல உரை நடை வகுத்துள்ளார் ; நடிப்பிற்கிசையாத செறிவுடைய இலக்கிய நடையாகவோ, தாழ்ந்த கொச்சை மொழி நடையாகவோ, இசைப்பாட்டாகவோ இருந்த நாடக நடையை மாற்றிப் பொது மக்கள் விரும்பி ஏற்கும் நல்ல தமிழ்ப் பேச்சு நடையான நாடகநடையில் பல நாடக நூல்கள் எழுதியுள்ளார். அனைத்தும் அரங்கில் நடிப்பதற்கென்றே எழுதப்பட்டன. ஆங்கிலத்தினின்றும் வடமொழியினின்றும் தழுவல்களாக பல நாடகங்கள் இயற்றினர். மகபதி, அமலாதித்தியன், விரும்பிய விதமே என்பன செகப்பிரியர் நாடகங்களினின்று தழுவப்பெற்ற நாடகங்களாகும். சாகுந்தலம், விக்ரமோர் வசியம், போன்றன வட மொழியினின்று தழுவப் பெற்ற நாடகங்களாகும். மனோகரா போன்ற சொந்தப் படைப்பான நாடகங்களும் இயற்றியுள்ளார். இவ்வாறு

எண்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை இயற்றி அரங்கேற்றி நாடகக்கலை நன்முறையில் வளரச் செய்துள்ளார்.

இவர் நடிப்புக் கலையின் நுட்பங்களைக் கண்டாய்ந்து அவற்றைச் செயற்படுத்தியுள்ளார். நாடக அரங்கிற்குரிய திரையமைப்புக்களைச் சிறக்க அமைக்கச் செய்தார். நடிப்பிற் கிசைய எளிதாக எழுதல், நடிகர்கட்கு முறையான பயிற்சி அளித்தல், ஒத்திகை பார்த்தல் முதலியவற்றில் ஈடுபட்டு அனுபவ வாயிலாகக் கண்டறிந்த உண்மைகளைக் கடைப் பிடித்து நாடகத்தை வரம்புடைய கலையாக்கினார். இரவில் நினைத்தநேரத்தில் தொடங்கி விடியும்வரை நடக்கும் நிலையை மாற்றிக் குறித்தவேளையில் தொடங்கி நள்ளிரவிற்கு முன்னே முடிக்கும் நாடகக் காலவரம்பை ஏற்படுத்தினார்.

நாடக ஆசிரியன், நடிகன், பயிற்றாசிரியன், பொறுப்பாளன் முதலான நாடகப் பிரிவுகளிலும் நல்ல அனுபவம் வாய்க்கப் பெற்ற இவர், நாடக மேடை நினைவுகள், நாடகத் தமிழ் என்னும் அரிய நூல்கள் எழுதியுள்ளார். நாடக நுட்பம், நாடகவரலாறு போன்றவற்றை அறிவதற்கு இந்நூல்கள் பயன்படும். நடிப்புக்கலை பற்றியும் நூல் எழுதியுள்ளார்.

## 4. தற்காலக் கவிஞர்கள்

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளிலும் 19-ஆம் நூற்றாண்டின் முற் பாதியிலும் பிரபந்தம் எனப்படும் சிற்றிலக்கியங்களே பாடப்பெற்றன. புலவர் தல புராணங்களையும் இயற்றினர். இவை பெரும்பாலும் கடவுளரைப் பற்றிய நூல்களாக இருந்தன. சில புலவர் தம் அனுபவ நிகழ்ச்சிகளைத் தனிப்பாடல்களாகப் பாடினர். இவை அனைத்தும் பழைய பாக்களாலும் பாவினங்களாலும் பாடப் பெற்றவையே யாகும்.

முக்கூடல் பள்ளும் குற்றாலக் குறவஞ்சியும் முறையே உழவர், குறவர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் மக்கள் இலக்கியங்களாகத் தோன்றின. பாமர மக்களும் விரும்பிப் பாடும் வண்ணம் இனிய, எளிய சொற்களால் நெகிழ்ச்சி

வாய்ந்த நடையில் இசைப் பாடல்கள் எனும்படி அமைக்கப்பெற்றுள்ளன. அண்ணுமலை ரெட்டியாரின் சிந்துப் பாடல்கள் பாமர மக்களின் கவிதைகளாய் விளங்கின. இவை மூன்றும் பாரதியாருக்கு முன்னேடி இலக்கியங்கள் எனலாம்.

காங்கிரஸ் வலுப்பெறவே நாட்டில் சுதந்திர உணர்ச்சி பெருகியது. மக்கள் விடுதலை வேட்கையுற்றனர். அரசியல் போராட்டங்கள் தோன்றின. நாட்டுணர்வும் சமுதாய விழிப்பும் ஏற்பட்டன. அரசியல் மக்களுக்குப் புதிய மதமாகி விட்டது. மக்கள் நிலை பற்றிப் பேசினர்; எழுதினர். இந்தச் சூழ்நிலையிலே உருவான பாரதியார் புதிய கவி மரபு கண்டு பாடினுர். பாமர மக்களும் படித்த அளவில் பொருள் உணரும்படி நெகிழ்ந்த நடையில் சிந்து போன்ற மெட்டுக் களில் மக்கள் நிலையைப் பாடினுர். பாரதியார் வகுத்த மர பிலே தேசிக விநாயகம் பிள்ளை சென்ருர். பாரதியார் தந்த புதிய மரபை பாரதிதாசன் வளர்த்து, வளமாக்கி நிலை பெறச் செய்தார். இன்றைய கவிஞர் எல்லோரும் இதனையே கவிமரபாகப் போற்றிப் பாடி வருகின்றனர்.

(i) சுப்பிரமணிய பாரதியார் : (1882-1921) எட்டய புரத்தில் சின்னசாமி ஐயரின் மகனுய்ப் பிறந்தார். எட்டு வயதிலே ரெட்டியார் சிந்திலே மூழ்கிக் கவி இயற்றினுர். இளமையில் திருமணம் செய்தார். தந்தையை யிழந்ததும் காசி சென்று அத்தையின் அரவணைப்போடு கல்வியும் பெற் ருர். எட்டயபுரத்துக் குறுநில மன்னர் அவையில் இருந்தார். சேதுபதி பள்ளியில் சில மாதம் பணிபுரிந்தார். சுதேசமித் திரன் பத்திரிகையில் அனுபவம் பெற்ருர். 'இந்தியா பத்திரி கை'யைப் பொறுப்பேற்று நடத்தினுர். அரசியல் புயலுக்கு அஞ்சிப் புதுவை புகுந்தார். சொல்லொணு இன்னல்களுக் கிடையேயும் சுதந்திர வெறியும் நாட்டுணர்ச்சியும் மங்காமல் திடமனதுடன் வாழ்ந்தார். புதுவையினின்று கடையம் சென்றும் சுகம் காணவில்லை. மீண்டும் சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் பணிபுரிந்த நாளில் பார்த்தசாரதி கோயில் யானையால் தள்ளுண்டார். காயம் ஆறியது. ஆனுல் உடலில் தெம்பு இல்லை. 1921 செப்டெம்பர் 11-இல் இவ்வுலகை நீத்தார்.

பாரதியார் பாடல்களைத் தேசியப் பாடல்கள், தெய்வப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள் என நான்கு வகையாகப் பகுக்கலாம். பாரத தேசம், பாரத நாடு, தமிழ்நாடு, சுதந்திரம், தேசீய இயக்கம், தேசீயத் தலைவர் பற்றிய பாடல்கள் தேசியப் பாடல்களாகும். விடுதலைப் பாடல்களாலேயே பாரதியை நாடு அறிந்தது. பொது மக்களைக் கவரும் எளிய மெட்டுக்களில் உணர்ச்சிவெள்ளம் பொங்கிப் பாயப் புதுமையான நடையில்பாடிப் பாரதி மரபு எனத் தனி மரபு வகுத்துவிட்டார். தேசீயப் பாடல்களில் அவர் கண்ட கனவுகள் எல்லாம் நனவாகி வருகின்றன.

தெய்வப் பாடல்கள் தோத்திரப் பாடல்களாகவும் ஞானப் பாடல்களாகவும் உள்ளன. இந்துக் கடவுளர் யாவரையும் புகழ்ந்து பாடியிருக்கிறார். வேதங்கள், வேள்வி, பிரமம் போன்றவற்றைப் பாடியவர் மாரியம்மனைப் பாடவும் தயங்கவில்லை. எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப இப் பாடல்கள் பாக்களும் பாவினங்களாகவும் உள்ளன. பாரதி யாப்பிலக்கணம் அறிந்தவர் என்பதை இப்பாடல்களால் அறியலாம். ஞானப் பாடல்களிலே அவர் வேதாந்தியாக விளங்குகிறார்.

சமுதாயப்பாடல்களில் பல்வேறு நிலையினரைப்பற்றியும், புதிய சிந்தனைகள் பொங்கிப் பாயப் பாடியிருக்கிறார்: 'பாப்பா'வுக்குப் பாட்டு உண்டு. அதனைப் பாப்பாவே பாடிப் பொருள் தெரிந்துகொள்ளும். புதுமை மாதர் பற்றிய பாடல்கள் பல. பெண்கள் விடுதலைக்கும்மி பாடியிருக்கிறார். சாதி வேற்றுமை அவர் காணப் பொறுக்காத ஒன்று. அதனை அடியோடு அழிக்கத்துடிப்பதைப் பாடல்களில் காணலாம். ஆத்தி சூடியில் புதிய சிந்தனைச் சுடர்கள் தெறிக்கின்றன. புதுமை உணர்ச்சியும் துடிப்பும் அவருடைய பாடலை உயிரோட்டமுடையனவாக்குகின்றன.

பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு மூன்றும் பாரதி பாடிய சிறு காவியங்களாகும். பாஞ்சாலி சபதம், காவியம் போலவே, கடவுள் வணக்கம், நகரம், அரசவை முதலியன கொண்டு விளங்குகிறது. வடமொழிப் பார

தம், வில்லி பாரதம் இரண்டினையும் தழுவிச் சூது போர்ச் சருக்கத்தைச் சிறு காவியமாகப் பாடியிருக்கிறார். தமிழ் மரபு வழி நின்று பாஞ்சாலியைக் கண்டு அவளை வீராங்கனை யாகப் படைத்துள்ளார். அவள் பெயராலேயே அக்காவியத் தைப் பாஞ்சாலி சபதம் என்றழைக்கிறார். இதில் பாரதியின் பாத்திரப் படைப்புத் திறனைக் காண்கிறோம். பண்டிதர்க்கே உரியதெனக் கருதப்பட்ட காவியத்தை மாற்றியமைத்துப் பாமர மக்கள் கையில் கொடுத்துச் சுவைக்கச் செய்கிறார்.

குயில் பாட்டு ஒரு நல்ல கதைப் பாட்டாகும். சங்கத் தமிழின் அகப்பொருள் நயங்கள் ஆங்காங்கே புலப்படு கின்றன. இயற்கை ஒலியினின்று எழும் இன்னோசை இன் பமும் நகைச்சுவையும் கதையோட்டமும் கொண்டு விளங்கு கிறது. 'வேதாந்தப் பொருளாய் விரித்துப் பொருள் காண்க' என்று புதிர் இன்பத்தோடு முடிக்கிறார்.

முன்னோர் எல்லோருமே கண்ணனைக் கடவுளாய், தந்தை யாய், தாயாய், குழந்தையாகக் கண்டு பாடியிருக்கின்றனர். ஆனால் பாரதியாரோ கண்ணனைக் காதலியாகக் காண்கிறார். ஏவலனாகவும் காண்கிறார். பாரதியின் பண்டை இலக்கியப் பயிற்சியும் உலகியல் அனுபவங்களும் இப்பாட்டில் வெளிப் படுகின்றன.

பாரதி எழுதிய உரை நடையும் உணர்ச்சி எழுப்பும் நடையேயாகும். சந்திரிகையின் கதை, நவ தந்திரக் கதை கள் நல்ல கற்பனைக் கதைகளாகும். ஞான ரதம் தத்துவ ஓட் டம் உடையதாகும். இவர் பல கவிதைகளைத் தமிழில் மொழி பெயர்த்தாலும் ஷெல்லியின் (Sky lark) சிட்டுக் குருவியே சிறந்த மொழி பெயர்ப்பாகும்.

பாரதி நடை சிந்து நடை எனலாம். அது சிந்திக்கச் செய்கிறது; உணர்ச்சியூட்டுகிறது; காலப்போக்கிற் கிசைந்த நடை அது. குடிமக்கள் நடையாகக் கொள்ளலாம். பாரதி யால் புதிய மரபு எழுந்தது.

**(ii) பாரதி தாசன் :** *(1891-1962)* புதுவையில் பிறந்தவர். இயற் பெயர் கனக சுப்பு ரத்தினம்! சுப்பிரமணிய பாரதி

யின் 'கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்பு ரத்தினம்' என்று பாரதியாரால் பாராட்டப்பெற்றவர். பாரதியாரோடு பத்தாண்டு பழகிய நட்பினை உடையர். முறையாக இலக்கணம் இலக்கியம் கற்றுத் தமிழாசிரியராய்ப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர்.

சின்னஞ்சிறு காவியங்கள் என்னும் வகையில் பற்பல படைப்புக்களைச் செய்துள்ளார். 'குடும்ப விளக்கு' தமிழர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் காவியமாகும். நடுத்தரமான குடும்பத்தைத் தேர்ந்து, அன்பை மூலதனமாகக் கொண்டு உழைத்துண்டுவாழும் குடும்பத்தைக் கணவன், மனைவி, பிள்ளைகள், முதிய பாட்டன், பாட்டி முதலான உறுப்பினர்களைக் கொண்டு திருமணம், மக்கட் பேறு, விருந்தோம்பல், முதியோர் காதல் என்ற பகுப்புக்களில் இயல்பான தமிழ் வாழ்வின் நிகழ்ச்சிகளை அழகும் கற்பனையும் இணைந்தோட, உவமையும் அணியும் அழகு செய்ய எங்கும் அன்பு இழைந்தோட உரை நடைபோல் ஓடும் எளிய நடையில் இக்காப்பியம் அமைந்துள்ளது. பிரெஞ்சு, இலக்கியப் பாங்கினைப் பின்பற்றிய அமைப்பு என்பர். 'இருண்ட வீடு' என்பதில் கல்வியில்லாத குடும்பம், தூக்கம், சோம்பல், மூட நம்பிக்கைமுதலியவற்றிற்கு உறைவிடமாகி அவலமுறுவதைக் காட்டுகிறுர். இவ்விரு நூல்களாலும் கவிஞர் தமிழ்க் குடும்ப வாழ்வில் கொண்டுள்ள ஆர்வம் புலப்படும்.

'தமிழியக்கம்' ஒரு தமிழ்த் திட்ட நூலாகத் திகழ்கிறது. தமிழை முதன்மையாக வைத்துப் பற்பல இயக்கங்கள் தோன்றித் தமிழ்ப்பகை யொழித்துத் தமிழ் வளர்க்க வேண்டும் என்பதை உணர்ச்சியின் உச்ச நிலையிலே நின்று பாடியுள்ளார்.

'எதிர்பாராத முத்தம்' இனிய கதைக் காவியமாகும். உறவான இரு குடும்பப் பகையூடே முளைத்த காதல் அவல முடிவைக்கொண்டு விளங்குகிறது. கதையில் பூப்பண்டாரம் கவிஞரின் நகைச்சுவைத் திறனுக்கு நற்சான்ருக விளங்குகிருன்.

'பாண்டியன் பரிசு' என்பது கவிஞர் பாடிய சிறு காவியங்களுள் சிறந்ததாகும். பாண்டியன் அளித்த உரிமைப் பட்டயத்தைக்கொண்ட பேழையை மையமாகக்கொண்டு கதை நிகழ்ச்சிகள் பல்வகைச் சுவைகளும் மல்கித் தோன்றும் வண்ணம் பின்னப்பெற்றுள்ள சுவையான காவியம். தாய் மாமன் வஞ்சகத்தால் தந்தையையும் தாயையும் கதிர் நாட்டையும் இழந்த இளவரசி அன்னம், ஆத்தாள் கிழவியின் மகன வேலனுல், களவு போன 'பாண்டியன் பரிசை'ப் பெற்று, அவனை மணந்து நாடாள்வதாகக் கதை அமைந்துள்ளது. கவிஞர் காவியங்களுள் இது சிறந்த காவிய அமைப்பும் பழமை ஒட்டிய பாணியும் உடையது. பல இடங்களில் கம்பன் பாடல்களின் ஓசை நயமும் யாப்பமைதியும் உடையது.

**அழகின் சிரிப்பு** சங்க கால இயற்கை வருணனைகள் மக்கள் வாழ்க்கையோடு பின்னிக்குடக்கும். மேலை நாட்டு இலக்கியங்களில் இயற்கை யழகுகளைத் தனித்தனியே காட்டக் கண்ட கவிஞர் இயற்கைக் காட்சிகளை அழகின் சிரிப்பாகக் காட்டுகிருர். அழகு, கடல், காடு, கிளி, பறவைகள், புரு முதலியன பற்றிப் பாடியிருக்கும் பாடல்களில் புதுமைக்கவித் திறனைக் காணலாம்.

**சஞ்சீவிச் சாரல்** இதுவே கவிஞர் பாடிய முதல் காவியமாகும். இஃதோர் தனிப்படைப்புமாகும். உள்ளத்தைக் கவரும் தன்மை வாய்ந்தது. இதன் மூலமாகவே கவிஞர் தமிழ் உலகுக்கு அறிமுகமாஞர். மாமல்லபுர யாத்திரையின் போது படகில் செல்கையில் இக்காவியத்தைப் படிப்பதாகக் கவிஞரே இந்நூலைப் பாராட்டியுள்ளார்.

**பிற நூல்கள்** பில்கணீயத்தைத் தழுவிப் பாடப்பெற்ற புரட்சிக் கவியிலே உணர்ச்சிகள் நடனமாடும். வீரத்தாய், தமிழச்சியின் கத்தி, காதலா, கடமையா முதலியவற்றில் தமிழர் உரிமை உணர்வும் மற்றும் பண்புகளும் ஏற்றம்பெறுகின்றன. 'கடல்மேற் குமிழிகள்' குலச்செருக்கை வெறுக்கும் காப்பியமாகும். குறிஞ்சித் திட்டில் சமயமில்லாக் கற்பனைத் தமிழகத்தைப் படைத்துக் கண்டு மகிழ்கிருர். காதல், வீரம்,

தமிழ், திருத்தம் இவையே இவர் காவியங்களின் உட்பொரு ளாகும். தமிழ்ப் பண்பும் ஓசை நயமும் நிறைந்து நிற்கும். கவிஞர் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் சிற்சில மாற்றங்களோடு நற்காவியங்களாகப் பாடியுள்ளார்.

இசை அமுது (தொகுதிகள்) இசையோடு தமிழ் என் றுமே இணைந்து நிற்பது இயற்கையாகும். கவிஞர் பாடல் களில் சொல்லும் கருத்துக்களை யெல்லாம் இசைப்பாடல் களில் இணைத்து விடுகிறார். உரைநடையில் சொல்லவேண்டிய சொந்தக் கருத்து, சீர்திருத்தம், மறுப்பு முதலியவற்றை இசைப்பாடல்களால் பரப்பி விடுகிறார். இப்பாடல்கள் அக் காலத் தமிழிசைக் கிளர்ச்சியிலே தோன்றிய வீரவுணர்ச்சி யிலே விளைந்தவை எனலாம்.

நாடகம் பாரதியார் முத்தமிழ்ப் புலவர் ஆவர். இவர் நாடகக் கலையிலும் மிக்க ஆர்வம் உடையவர். சேர தாண் டவம், படித்த பெண்கள் போன்ற நாடக நூல்கள் இயற்றி யுள்ளார்.

தமிழ் கவிஞரின் உயிர்; தமிழே அவர்க்கு எங்கும் நிறைந்த பரம்பொருள். செந்தமிழும் சீர் திருத்தமும் அவ ருக்கு இரு கண்கள். இவர் நடை எளிது. சாதாரண மக் களும் பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் பாடுதலே தமிழை மேன்மையுறச் செய்யும் என்பது இவர் கொள்கை. பாரதியைப் பின்பற்றியே பாடத் தொடங்கினார். பல்வேறு முறைகளில் வேறுபட்டு நின்று மேன்மையுறுகிறார்.

**(iii) தேசிகவிநாயகம் பிள்ளை (1876-1954)** இவர் நாகர் கோவிலை அடுத்த புத்தேரியில் பிறந்தார். தமிழ் இலக்கிய இலக்கணம் கற்றதோடு, கல்லூரி ஆங்கிலக் கல்வியும் பெற் றார். தொடக்கப்பள்ளியின் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். திருவனந்தபுரம் மகளிர் கல்லூரி ஆசிரிய ராக நீண்டகாலம் வேலைபார்த்து ஓய்வு பெற்றார். எளிமை யும் மென்மையும் வாய்ந்த பாடல்களால் குழந்தைகள் முதல் முதியோர் வரை பல நிலையினரின் உள்ளங்களைக் கவர்ந்தார். ஆங்கிலக் கவிதைகளைத் தமிழ் மூலமே எனும்படி மொழி பெயர்த்துப் பேரும் புகழும் பெற்றார்.

இவரது பாடல்கள் மலரும் மாலையும் என்னும் தொகுப்பாக வெளிவந்துள்ளன. இவற்றுள் பல மொழிபெயர்ப்புப் பாடல்களாகும். புத்தர் வரலாற்றை 'ஆசிய ஜோதி' எனுங் காவியமாகப் பாடியிருக்கிறார். இதில் கவிமணியின் கவியுள்ளம் நன்கு புலப்படுகிறது. மகனை இழந்த தாயின் துயரை நம் உள்ளத்தைத் தொடும் வண்ணம் பாடியிருக்கிறார். புத்தர் பவனிவருதலைக் காண ஓடிவரும் காட்சி பற்றிய வருணனையில் கவியழகு கொஞ்சுகிறது. புகழ்பெற்ற பாரசீகக் கவிஞரின் 'உமர்கயாம்' கவிதையைத் தமிழ்க்கவிதை எனும்படியாக மொழிபெயர்த்துள்ளார். அப் பாக்களில் எல்லாம் இன்னோசையும் தமிழ் மரபும் தவழ்ந்து விளையாடுகின்றன.

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசுந் தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையந் தருமிவ் வளமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?

மருமக்கள் மான்மியம் இவர் பாடிய சீர்திருத்தக் காவியமாகும். மருமக்கள் வழியைச் சார்ந்த ஒரு வேளாளர்க் குடும்ப நிலையை உள்ளவாறு அழகிய சொல்லோவியமாகப் பாடியிருக்கிறார். பஞ்ச கல்யாணிப் பிள்ளைக்கு ஐந்தாம் தாரமாக வாழ்க்கைப்பட்டுக் கைம்பெண்ணான இளம் பெண் தானே தன் கதையைக் கூறுவதுபோல் அமைந்துள்ளது. இந்தக் காவியத்தால் நாஞ்சில் வேளாளரிடையே மனமாற்றம் ஏற்பட்டு மருமக்கள் வழிச்சட்டமும் ஒழிந்ததென்றால் இக்காவியத்தின் செல்வாக்கைச் சொல்லப்போமோ.

இவர்க்கு இளமையிலேயே கல்வெட்டு, வரலாறு இரண்டின் ஆராய்ச்சியிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது. காந்தளூர்ச்சாலை, மாணிக்கவாசகர் காலம் போன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் இவர் திறனைக் காட்டும்.

**(iv) நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை:** சேலத்தை அடுத்த நாமக்கல் என்னும் ஊரினர். காந்தீயக் கோட்பாடுகளில் நம்பிக்கை வாய்ந்த கவிஞர் ஆவர். இவருடைய பாடல்கள் தமிழன் இதயம், சங்கொலி என்னும் கவிதைத் தொகுப்புக்களாக வெளியிடப்பட்டுள்ளன. நல்ல நாவலுக்குரிய கதையைக் கொண்டு அவனும் அவளும் என்ற காவியம் பாடியுள்ளார். இது 'உரை நடைப்பா' எனும்படியான நடையில் அமைந்துள்ளது. கதைத் திட்டம், அமைப்பு முதலியவற்றால் சிறந்து விளங்குகிறது.

நாமக்கல்லார் நாவல் எழுதும் திறன் மிக்கவர். தமது திறமையை முழுதும் பயன்படுத்தியிருந்தால் தமிழகத்தில் சிறந்த நாவலாசிரியராகியிருத்தல் கூடும். மலைக் கள்ளன் என்னும் நாவல் கதைத்திட்டம், அமைப்பு, கற்பனை வளன் முதலியன பெற்றுச் சிறந்த நாவலாக விளங்குகிறது. 'என் கதை'யில் எதனையும் மறையாமல் சுவையாகச் செய்திகளைக் கூறியிருக்கிறார். 'சங்கிலிக் குறவன்' சிறுகதைத் தொகுப்பு நூலாகும். 'இலக்கிய இன்பம்' என்பது இவரது மற்றொரு நூலாகும். திருக்குறளுக்கு உரையும் எழுதியுள்ளார்.

நாமக்கல் கவிஞர் சிறந்த ஓவியப் புலவர் ஆவர். ஆயினும் இவர் இத்திறனை விளங்கச் செய்து புகழ் பெறவில்லை. சில பெரியோர்களின் ஓவியங்களை வரைந்துள்ளார். சென்னை அரசினர், இராசாசி முதல்வராக விளங்கிய நாளில், இவரை அரசாங்கப் புலவராக அமர்த்திப் பெருமையளித்தனர்.

உரைநடை போன்ற பாட்டுக்கொரு சான்று.

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு"

உவமையில் புதுமை காணுதலுக்கொரு உதாரணம்,

மானென அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக் கில்லை
மீன்விழி உடையா ளென்றால்
மீனிலே கருமை இல்லை

தேன்மொழிக் குவமை சொன்ஞல்
தெவிட்டுதல் தேனுக்குண்டு
கூன்பிறை நெற்றி என்ருல்
குறைமுகம் இருண்டு போகும்

(v) **கண்ணதாசன்:** 'முத்தையா' என்னும் இயற் பெயரினர். திராவிடர் இயக்கங்களில் ஈடுபட்டுப் பாரதிதாசன் பாங்கில் வளர்ந்து, அதனைத் தழுவிக் காங்கிரஸ் கவிஞராகக் கவிதை பாடிவரும் கவிஞர் ஆவர். அரசியலில் மிகுந்த ஈடுபாடு உடையவர். பத்திரிகை நடத்துவதில் ஆர்வம் மிக்கவர். கவிதைபோல் உரை நடையையும் உணர்ச்சியைப் புலப்படுத்தக் கருவியாகக்கொண்டு வெற்றி கண்டவர். திரைப்பட இசைப்பாடல்களால் மாணவர், மகளிர் முதலியோர் உள்ளங்களைக் கவர்ந்தவராவர். அவர் வெற்றிசைப் பாடல்களாகவிருந்த திரைப்பாடல்களை பொருள்கனியும் பாடல்களாக்கிய பெருமை வாய்ந்தவர்.

## 5. கிறித்தவர் தமிழ்த்தொண்டு

பதினும் நூற்ருண்டில் வாஸ்கோடகாமா இந்தியாவிற்குப் புதிய கடல் வழி காணவே, போர்ச்சுகீசியர் முதலான ஐரோப்பியர் இங்கு வந்து வாணிகம் செய்யத்தொடங்கிப் பின் அரசு அமைக்க முயன்றனர். அந்நாளில் மேனுட்டினின்று கிறித்தவ சமயக் குரவர் வந்து தம் சமயத்தைப் பரப்பத் தொடங்கினர். அவர்கள் பொது நெறியாளர் (கத்தோலிக்கர்) மறு நெறியாளர் (புரோட்டஸ்டண்ட்) என இருவகையினர் ஆவர். தமிழ் நாட்டிற்கு வந்த இவ்விரு சாராருமே தமிழ் கற்றுப் பேசினர். சிலர் தமிழ்ப்புலமை எய்தி நூல்கள் எழுதித் தமிழுக்குப் பணி புரிந்தனர்.

பதினேழாம் நூற்ருண்டில் இத்தாலி நாட்டினின்று இயேசு சபைக் குருவாகவந்த தத்துவபோதகர் (ராபர்ட்-டி-நோபிலி) தமிழும் வடமொழியும் கற்றுப் புலமை எய்தி பதினேழு உரைநடை நூல்கள் எழுதிஞர். ஞானுபதேசக் காண்டம், தத்துவக்கண்ணுடி, ஏசுநாதர் சரித்திரம்,

முதலியன சிறந்த உரைநடை நூல்களாகும். தமிழில் முதல் உரைநடை நூல் எழுதிய பெருமை இவர்க்கே உரியது.

வீரமாமுனிவர் இத்தாலிநாட்டினின்று வந்த மற்ெருரு இயேசுசபைக் குரு ஆவர். இவரது இயற்பெயர் கான்ஸ்டாண்சியஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். மேனுட்டு மொழி பலவும் அறிந்திருந்த இவர் தமிழைச் சுப்ரதீபக் கவிராயரிடம் கற்றுப் புலமையும் கவிபாடும் திறனும் பெற்ருர். இயேசுபெருமானின் வளர்ப்புத்தந்தை யான சூசையப்பரின் வரலாற்றை மூன்று காண்டங்கள் கொண்ட தேம்பாவணி என்னும் காப்பியமாகப் பாடினுர். திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலே, அன்னே அழுங்கல் அந்தாதி, அடைக்கலநாயகி வெண்கலிப்பா, கித்தேரி அம்மாள் அம்மானே என்ற பிரபந்தங்களும் பாடினுர். வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம் போன்ற சமயநூல்களேச் செம்மையான உரைநடையில் எழுதினுர். இவர் எழுதிய பரமார்த்த குருகதை அங்கதச்சுவை கொண் டுள்ளது. ஐந்திலக்கணங்களேயும் கருங்கக்கூறும் தொன்னூல் விளக்கம் இயற்றினுர். ஐரோப்பியருக்குப் பயன்படும் வகையில் பேச்சுத்தமிழ் இலக்கணமான கொடுந்தமிழ் இலக்கணம் எழுதினுர். இவர் எழுதிய சதுரகராதியே தமிழுக்கு முதல் அகராதியாகும். மேனுட்டவர்க்குப் பயன் படத்தக்க தமிழ்-லத்தீன் அகராதி எழுதினுர். திருக் குறளின் அறத்துப்பாலேயும் பொருட்பாலேயும் இலத்தீனில் எழுதி வெளியிட்டார். தமிழ்த்துறவிபோலவே உணவும் உடையும் நடையும்கொண்டு தஞ்சை முதல் குமரிவரை உலவிச் சமயப் பணிபுரியும் போதே இத்தமிழ் நூல்களே இயற்றியுள்ளார்.

சமயப்பணியோடு தமிழ்ப்பணியும் புரிந்த மறுநெறிச் சமயக்குரவரில் (புரோட்டஸ்டண்ட்) செருமானியச் சீகன் பால்கு ஐயர் (1683-1719) முதல்வர் ஆவர். இவர் தரங்கம் பாடியில் சமயப்பணி புரியுங்கால் தமிழில் சமயநூல் களோடு பாடநூல்களும் அச்சிட்டார். பைபிளேத் தமிழில்

மொழிபெயர்த்தார். இலத்தீன் ஒப்பிலக்கணம் எழுதினர். பொது மக்களும் தமிழ் நூல் வாங்கிப் படிப்பதற்குரிய வாய்ப்பை உருவாக்கியவர் இவரே. 19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சென்னைக் கலெக்டராக விளங்கிய ஆங்கிலேய எல்லீசுத்துரை இராமச்சந்திர கவிராயரிடம் தமிழ் கற்றுர், வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினர். வீரமாமுனிவரின் நூல்களையும் பிற நூல்களையும் திரட்டிப் பாதுகாத்தார். திருக்குறளின் முதல் 13 அதிகாரங்களுக்கு உரை எழுதினர். செருமானியரான ரேனியல் ஐயர் பாளையங்கோட்டையில் இருந்து பணிபுரிந்த நாளில் பைபிள் புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்ததோடு 'வேத உதாரணத் திரட்டு' போன்ற உரைநடை நூல்கள் எழுதினர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ்த் தொண்டாற்றிய மறுநெறியாளச் சமயக் குரவர்களில் போப் ஐயரும் பிஷப் கால்டுவெல்லும் தலைசிறந்தவராவர். சாயர்புரம், தஞ்சை, நீலகிரி ஆகிய இடங்களில் சமயப்பணிபுரிந்த ஐயர் திருக்குறள், நாலடியார், திருவாசகம், சிவஞான போதம் ஆய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தமிழகப் புலவர் வரலாறும், அடியார் வரலாறும், மணிமேகலைக்கதையும் ஆங்கிலத்தில் எழுதினர். மாணவரும் தமிழ் கற்கும் ஐரோப்பியரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு தமிழ் இலக்கணத்தை மூன்று பகுதிகளாக வெளியிட்டார். 'தமிழ் மாணவன்' என்பதே தன் கல்லறை மொழியாக இலங்க வேண்டுமென்று விரும்பிய தமிழ்ப்பற்றுளர்.

அயர்லாந்து நாட்டினரான டாக்டர் கால்டுவெல் இடையன்குடியோடு ஒன்றியவர். மேனுட்டு மொழி பலவும் அறிந்த இளம் போதகராய் இங்கு வந்த அவர் சமக்கிருதமும் தமிழும் மற்றத் திராவிட மொழிகளும் கற்றுர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் ஒப்பிலா மொழியியல் நூல் எழுதினர். திராவிட மொழிக் குடும்பம் தனியினம் என்றும் தமிழ், வடமொழியின் துணையின்றித் தனித்தியங்கவல்ல செம்மொழி என்றும் நற்சான்று பலதந்து நிலை நாட்டினர்.

நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம், போன்ற உரைநடை நூல்களும் திருநெல்வேலி சரித்திரம் என்னும் வரலாற்று நூலும் எழுதினார். மற்றும் பெர்சிவல், லாசரஸ், தேய்லர், பெப்ரீஷியஸ் போன்ற மேனாட்டுத் தமிழ் அறிஞர்களும் தமிழுக்குச் சிறந்த பணியாற்றியுள்ளனர்.

தமிழ்த் தொண்டாற்றிய தமிழ் நாட்டுக் கிறித்தவர்களுள் மாயூரம் வேதநாயகம் பிள்ளையும், எச். ஏ. கிருஷ்ண பிள்ளையும் முதன்மை வாய்ந்தவராவர். முன்னவர் பொது நெறியாளர். மற்றவர் மறு நெறியாளர். வேதநாயகம் பிள்ளை 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் முதல் நாவல் எழுதிப் பேரும் புகழும் பெற்றார். சுகுண சுந்தரி இவர் எழுதிய மற்றொரு கதை நூலாகும். பொதுவான நீதிகளைக்கொண்ட நீதி நூலும், பெண் கல்வி ஒழுக்கம் பற்றிய பெண்மதி மாலையும் இவர் பாடிய செய்யுள் நூல்களாகும். எல்லாச் சமயத்தவருக்கும் இசைந்த தமிழிசைப் பாடல்களைக் கொண்ட சர்வ சமய சமரச கீர்த்தனைகளும் கிறித்தவ சமயத்தவர்க்கெனச் சத்திய வேதக் கீர்த்தனைகளும் பாடியிருக்கிறார். தேவமாதா அந்தாதி முதலான சமயப் பிரபந்தங்களும் பாடியிருக்கிறார்.

எச். ஏ. கிருஷ்ணபிள்ளை வைணவ வேளாளக் குலத்தில் பிறந்து வளர்ந்து பின்னர்க் கிறித்தவ சமயத்தைத் தழுவி வாழ்ந்தவர். தாம் இளமையில் கற்ற திவ்விய பிரபந்தம், தேவாரம், கம்பராமாயணம் போன்ற நூல்களில் கண்ட சுவையனுபவம் மிளிரக் காவியம் படைத்துள்ளார். ஆங்கிலக் கவிஞர் ஜான்பனியன் இயற்றிய Pilgrim's Progress என்னும் நூலைத் தழுவி இரட்சண்ய யாத்ரீகம் என்னும் காப்பியம் பாடியுள்ளார். இவரைக் கிறித்தவக் கம்பன் என்று பாராட்டுவர். இவர் பாடிய காவியம் 4000 விருத்தப் பாக்களைக் கொண்டது. இவர் பாடிய இரட்சண்ய மனோகரம் கிறித்தவர்களின் தேவாரம் என்று போற்றப்படும். இரட்சண்ய குறள், இரட்சண்ய சமய நிர்ணயம் எனப்படும் நூல்களும் இயற்றியுள்ளார்.

வேதநாயக சாஸ்திரியும் சிறந்த தமிழ்த் தொண்டாற்றியுள்ளார். தஞ்சை சரபோஜி மன்னரால் இவர் புரக்கப்

பெற்ருர். நல்ல தமிழிசைப் புலமை வாய்ந்தவர். இயேசு பெருமானைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்ட பெத்லேகம் குறவஞ்சி பாடினுர். சென்னைப் பட்டணப் பிரவேசம், ஞான ஏற்றப்பாட்டு, ஞானதச்சன் நாடகம் முதலான சமய நூல்கள் பபடியுள்ளார். தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் தமிழுக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார். தமிழிசையின் இயல்புகளைப் பழந்தமிழ் இலக்கியங்களில் கண்டு துருவி ஆராய்ந்து கருணுமிர்த சாகரம் என்னும் இசையாராய்ச்சி நூல் எழுதித் தமிழிசையின் தொன்மையையும் பெருமையையும் விளக்கியுள்ளார். பண்டைத் தமிழ் யாழ் செய்து தமிழ்ப்பண் இசைத்துக்காட்டித் தமிழிசைக்கு மறுமலர்ச்சியளித்துள்ளார். இவரது புதல்வரான வரகுண பாண்டியன் பாணர்கைவழி என்னும் இசையாராய்ச்சி நூல் எழுதியிருக்கிருர். மற்றும் அந்தோனிக் குட்டி அண்ணுவியார், முத்துசாமிப்பிள்ளை போன்ற தமிழ்க் கிறித்தவர் சிலர் தமிழ்ப்பணி புரிந்துள்ளனர்.

ஈழநாட்டுக் கிறித்தவச் சான்ருேரும் தமிழுக்கு நல்ல தொண்டாற்றியிருக்கின்றனர். இவர்களுள் நல்லூர் ஞானப் பிரகாசர் மாமேதையாவர். பன்மொழியாராய்ச்சியின் பயனுகத் தமிழே உலக முதல்மொழி என்று விளக்கியுள்ளார். மொழி நூல் வகையில் சிறந்த ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளார். கனகசபைப் பிள்ளை, சதாசிவம் பிள்ளை போன்ற கிறித்தவச் சான்ருேர்களும் தமிழ் நூல்களைப் படைத்தளித்துள்ளனர்.

## 6. இசைத் தமிழ் வரலாறு

தமிழ், இயல், இசை, நாடகம் ஆய முப்பிரிவினது என்னும் பொருளில் முத்தமிழ் என்பர். தலைச்சங்கம், இடைச் சங்கம் ஆய இரண்டிற்கும் இலக்கண நூலான அகத்தியம் முத்தமிழ் இலக்கணம் என்பர். அவ்விரு சங்கங்களிலும் அகத்தியத்தின் இசை இலக்கணப் பிரிவே அன்றி முதுநாரை, முது குருகு, இசை நுணுக்கம் முதலான இசை இலக்கண நூல்களும் இருந்தன என்பதை இறையனுர் அகப்பொருள்

உரையால் அறிகிறோம். இசை இலக்கண முறையில் எழுத்துக்களின் ஒலி அளவை வரையறுப்பதற்கு யாழ் நூல் இருந்தது என்பதை (இசையொடு சிவணிய நரம்பின் மறைய, என்மனார் புலவர். தொல். எழு. 33) தொல்காப்பியச் சூத்திரத்தால் அறிகிறோம்.

சங்க இலக்கியங்களில், இசை பற்றியும் இசைத் தமிழ் பற்றியும் அறிவதற்குரிய, குறிப்புக்கள் உள்ளன. ஐவகை நிலங்களுக்கும் யாழ்களும் பண்களும் இருந்தன. குறிஞ்சி நிலத்துக்கு குறிஞ்சியாழும் குறிஞ்சிப் பண்ணும் சிறந்து விளங்கினாற்போல் பிற நிலங்களுக்கும் அதனதன் பெயரால் யாழும் பண்ணும் விளங்கின. யாழ் பற்றிய வருணனைகளும் பண்ணின் கனிவு பற்றிய செய்திகளும் ஆங்காங்கே பாடப் பெற்றுள்ளன. பண் பாடுவோர் பாணன், பாணினி என்று அழைக்கப்பட்டனர். இசை, குரலிசை, கருவியிசை என்ற இரு பிரிவினதாக விளங்குகிறது. இவ்விரு இசைகளும் நாடகத்திற்கு இன்றியமையாதனவாக இருந்தன. நெடும்பல்லியத்தனார் போன்ற இசை வல்லார் இருந்தனர் என்பதும் வெளிப்படுகிறது.

சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில் இசையாசிரியன் இலக்கணம் கூறப்படுகிறது. கருவியிசையும் அதற்கிசைந்த பாட்டிசையும் இவ்விரண்டிற்கும் இசையும் கூத்து முதலியன எல்லாம் வல்ல இசையாசிரியர் வழி வழியாக இசை பயிற்றிவந்தனர் என்பது புலனாகிறது. சங்க நூலான பரிபாடல் இசைப்பாக்களைக் கொண்ட தொகுப்பு நூலாகும். அப்பாடல் ஆசிரியர் பெயர்களே அல்லாமல் அப்பாடல்களுக்குப் பண் வகுத்தவர் பெயர்களும் கூறப்பட்டுள்ளன. வரிப் பாடல்கள் எல்லாம் இசைப்பாடல்களே யாகும். இவை காதல் பற்றிய பாடல்களாக இருந்தன. இதனால் நாளடைவில் காதல் பாடலான வரிப் பாடல் பாடுதல் தாழ்வு எனக் கருதப்பட்டது. வரிப் பாடல் பாடிய அந்தணர் ஒழுக்கத்தில் குறைந்தவர் என்பதை ''வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப் புரிநூல் மார்பர்'' என்னும் சிலப்பதிகார அடியால் அறிகிறோம். சமண, பௌத்தப் பெரியோர் இக் கருத்

திற்கு ஆதரவு நல்கினர். சங்க மருவிய காலத்தில் ஆண்ட களப்பிரரும் பல்லவரும் வேற்று மொழியாளராதலின் தமிழிசை ஆதரிப்பாரின்றிக் குன்றவே, தமிழிசை நூல்களும் அழிந்தன.

ஏழாம் நூற்ருண்டில் தமிழிசை மறுமலர்ச்சி பெற்றது. தேவாரப் பாடல்களைப் பண்ணோடு பாடினர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தரை அகலாது இருந்து அவர் பாடல்களுக்கு யாழிசைத்தார் என்று அறிகிரும். ஆழ்வார் பாடல்களும் இசையொடு பாடப்பெற்றன.கண்ணன் குழலிசையைப் பெரியாழ்வார் பாடியுள்ளார். சைவக் குரவர் சிவனை இசை ஆராய்ச்சியாளராகக் கண்டனர் என்பதற்கு 'ஒண்தீந்தமிழ்த் துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ' என்பது போன்ற அடிகள் சான்று கூறுகின்றன. இடைக்காலச் சோழர் காலத்தில் கோயிலில் தேவாரம் பாடுவதற்கு மானியம் வழங்கப்பட்டது. தமிழிசை கோயில் வழிபாட்டொடு இரண்டறக் கலந்துவிட்டது.

அந்நாளில் சமணரும் இசையை மதிக்கத் தொடங்கினர். சீவக சிந்தாமணியில் காந்தருவதத்தை இலம்பகத்தில் யாழ்ப் போட்டி வாயிலாகக் கருவியிசை பாட்டிசை இரண்டின் நயங்களும் நுட்பங்களும் வெளிப்படுகின்றன. சீவகன் செல்லுமிடமெல்லாம் அருகனைப் பாடிப் பரவினுன். கேமசரி என்ற சமண நங்கை யாழிசைத்துப் பாடி அருகனை வழிபட்டாள். பரத்தையரால் பேணப்பட்டுத் தாழ்வுற்ற தமிழிசை கோயில்களில் குடி புகுந்து மேன்மையுற்றது.

பிற்காலத்தில் தமிழிசை செல்வாக்கிழக்கத் தொடங்கியது. முகமதியர், நாயக்கர், மராட்டியர் போன்ருரின் ஆட்சி தமிழிசைக்கு ஆக்கம் அளிப்பனவாக இல்லை. தெலுங்கரான விசயநகர மன்னர் ஆட்சியில் தெலுங்கிசையே ஆதரிக்கப்பெற்றது. தெலுங்கிசை வடமொழிச் சொற்களையும் மரபுகளையும் மிகுதியாகக் கொண்டிருந்தமையால் வடமொழி ஆர்வலர்க்கு இனித்தது. அதனுல் தமிழிசையும் வடமொழிச் சொல்லும் மரபும் மிகுந்து கருநாடக சங்கீதம் எனப் பெயர் பெற்றது. தமிழ்ப் பண்களும் திறங்களும்

வடமொழிப் பெயரால் வழங்கப்பெறவே, தனித் தமிழிசையே இல்லை என்னும் நச்சுக் கருத்துப் பரப்பப்பெற்றது. திருவையாறு தியாகராச சுவாமிகளால் தெலுங்கு இசை சிறப்பெய்தியது. தமிழில் இசை பாடுவதே தாழ்வு என்னும் கருத்தையும் தமிழர் நம்பத் தொடங்கினர்.

ஆயினும் தமிழிசைப் பரம்பரை அழிந்துபோகவில்லை. வடசொற்கள் இடையிடையே கலந்தனவேனும் அருணகிரியாரின் திருப்புகழ்ப் பாக்கள் எல்லாம் சிறந்த தமிழிசைப் பாக்களேயாகும். முக்கூடல் பள்ளிலும் குற்றாலக் குறவஞ்சியிலும் நல்ல தமிழிசைப்பாக்கள் மிகுந்திருக்கின்றன. சீர்காழி அருணசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், கோபால கிருஷ்ணபாரதியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை போன்றோர் இசைப் பாடல்கள் இயற்றித் தமிழிசை வளர்த்தனர். சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரின் சிந்துப் பாடல்கள் தமிழிசைக்குப் பேருக்கமாய் அமைந்தது. பாரதிதாசன் சிறந்த இசைப் பாடல்கள் இயற்றியுள்ளார்.

தமிழிசைக்குப் புத்துயிர் ஊட்டிய பெருமை தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்க்குரியதாகும். தமிழிசை, மேனாட்டிசை, வடமொழியிசை இவற்றிற்குள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்ந்து கண்டு தமிழ் மரபு வழிவந்த தமிழிசையின் பெருமையை நிலைநிறுத்த வேண்டி 'கருணாமிர்த சாகரம்' என்னும் இசையாராய்ச்சி நூல் எழுதினார். யாழ் செய்து தமிழ்ப் பண்ணிசைத்து விளக்கினார். விபுலானந்தர் யாழ் நூல் என்னும் இசைத் தமிழ் ஆராய்ச்சி நூல் எழுதினார்.

இவ்விரு ஆராய்ச்சி நூல்களும் தமிழர் உள்ளத்தைக் கிளரத் தொடங்கின. அண்ணாமலைச் செட்டியார், ஆர். கே. சண்முகஞ் செட்டியார், கல்கி முதலியோர் முயற்சியால் 1942இல் தமிழிசை இயக்கம் தோன்றியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழிசைக் கல்லூரியும் சென்னையில் தமிழிசைச் சங்கமும் எழுந்தன. பாபநாசம் சிவன், சுந்தராம்பாள், தியாகராச பாகவதர், தண்டபாணி தேசிகர் முதலியோர் தமிழிசைப் பாடல்கள் பாடி எங்கும் தமிழிசை

பரப்பினர். அண்ணுமலைச் செட்டியார் தோற்றுவித்த இசைத் தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் தமிழிசை விழா வுடன் ஆராய்ச்சியும் நடத்தி வருகிறது.

வாெனுலி, இசைத்தட்டு, திரைப்படம் முதலியவை இசை வளர்ச்சிக்குத் துணைபுரியும் சாதனங்களாயிருந்தும் இசைத் தமிழ் மரபு வழியில் வளர்கிறது என்று கூறமுடி யாது. முறையாக இசை பயிலும் வழக்கம் குன்றி வரு கிறது. இந்தி போன்ற அயல் மெட்டுக்களைத் தழுவித் திரைப்படத்திற்குப் பாடல்கள் இயற்றுகின்றனர். மக்களும் அவற்றையே விரும்பிக் கேட்கின்றனர். வானொலியும் இக் கலப்பிசைப் பாடல்களையே பரப்புகிறது. மக்களின் இசைச் சுவையின் தரம் உயர்ந்து, நல்லிசைப் பாடல்களுக்குச் செல் வாக்குப் பெருகி, தமிழ் மரபில் இசை வளர்தல் வேண்டும் என்பது கற்பனையாகவே இருந்து விடுமோ என்று நினைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

## 7. நாடகத் தமிழ்

முத்தமிழ் என்பதில் நாடகத் தமிழும் ஒரு பிரிவாகும். அகத்தியர் செய்த பேரிலக்கணத்தில் நாடக இலக்கணம் என்ற தனிப் பிரிவு இருந்தது என்பர். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் குறிப்பிட்டபடி, அவர் காலமான 13ஆம் நூற்றுண்டு வரை, நாடக இலக்கண நூல்களான இந்திர காவியம், பஞ்ச மரபு, பரத சேனுபதீயம், மதிவா ணர் நாடகத் தமிழ் ஆயவை வழக்கில் இருந்தன. முறுவல் சயந்தம், கணநூல், செயிற்றியம் என்பவற்றில் சில சூத்தி ரங்களே கிடைக்கப் பெற்றன. பரதம், அகத்தியம் முத லான பழைய நாடக இலக்கண நூல்கள் இறந்துவிட்டன என்று அவர்தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறுர். அடியார்க்கு நல்லார் காலத்தில் வழங்கிய நாடக இலக்கண நூல்கள் கூட நமக்குக் கிடைக்காமல் போய்விட்டன.

தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் நாடகக் கலையின் அடிப்படை உண்மைகளைக் கூறுகிறது. சிரிப்பு முதலான எட்டுவகைப்பட்ட சுவைகளை, கண் முகம்போன்ற உடல்

உறுப்புக்களால் புலப்படுத்தலாகிய மெய்ப்பாடு நடிப்பின் அடிப்படை உண்மையாகும். இதனைத் தொல்காப்பியர் தெளிவாக வரையறுத்துள்ளார்.

சிலப்பதிகார அரங்கேற்று காதை வாயிலாக நாடகக் கலை பற்றிச் சில செய்திகளை அறிகிறோம். கூத்து எனப்பட்ட நாடகம் வேத்தியல் பொதுவியல் என்ற இருபெரும் பிரிவுகளை உடையது. அகக் கூத்து, புறக்கூத்து என்பன போன்ற பல உட்பிரிவுகளையும் உடையதாயிருந்தது. வேத்தியல் என்பது வேந்தரவையில் நடிக்கத்தக்க உயர்தர நாடகமாகும். பொதுவியல் என்பது ஊர்மக்கள் கூடும் மன்றங்களில் நடிக்கப்பெறும் தரங்குறைந்த நாடகமாகும். ஆடல் எனப்பட்ட நடனம் கூத்தின் உட்பிரிவாக விளங்கியது. அரங்கு, தலைக்கோல், அரங்கேற்றம் ஆகியவற்றின் இலக்கணம் அரங்கேற்று காதையில் அடங்கியுள்ளது. இளங்கோ பண்டை நாடக இலக்கணங்களைத் தழுவியே இவற்றைக் கூறியுள்ளார்.

காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் இரவில் இசை கேட்டு நாடகம் பார்த்தனர் (பாடலோர்த்தும் நாடக நயந்தும்) என்று பட்டினப்பாலை கூறுகிறது. கூத்துப் பார்ப்போர் கூத்து முடிந்ததும் விரைந்து வெளியேறுதலை (கூத்தாட் டவைக் குழாத் தற்றே) வள்ளுவர் உவமையாகக் கொண் டுள்ளார். நாடக நூல்களை ஆராயும் புலவர் இருந்தனர் என்பது (நாடகப் காப்பிய நன்னூலளிப்போர்) மணிமேகலையால் வெளிப்படுகிறது. நாடகத் தமிழில் வல்ல புலவர்கள் இருந்தனர் என்பதற்கு முதுகூத்தனார், மதுரைத் தமிழ்க் கூத்தனார் என்ற புலவர் பெயர்கள் சான்றுகளாக அமையும்.

வேற்றார் ஆண்ட இருண்ட காலத்தில் இசையைப் போலவே நாடகமும் பேணுவாரின்றிக் குன்றியது. இடைக் காலச் சோழர் நிலையான அரசு அமைத்ததும் நாடகக் கலை புத்துயிர் பெற்றது. சீவகசிந்தாமணியில் கனாக் கண்டு கலங்கிய விசயையின் கவலையை மாற்ற வேண்டிச் சச்சந்தன் அவளை இசை கேட்கவும் நாடகம் பார்க்கவும் அழைத்துச் செல்கிறான். தனக்குதவிய வித்யாதரனை சுதஞ்சணனுக்குச்

சீவகன் கோயில் கட்டிச் சிலை நிறுவுவதோடு அவன் வரலாற்றை நாடகமாக்கி நடிக்கச் செய்கிறான். திருத்தக்க தேவர் சோழர் கால நாடகக் கலையையே இங்குக் காட்டியுள்ளார் என்பது தெளிவாகிறது. அக்காலத்தில் அரசர் வரலாற்றை நாடகமாக்கி நடித்தனர். இராச ராச விசயம், குலோத்துங்க சோழன் நாடகம், முதலான நாடகங்கள் நடிக்கப் பெற்றன என்று சோழர் காலக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். நாடக நடிகர்கள் மன்னரால் மான்யம் வழங்கப் பெற்றனர். கோயில்களிலும் நாடகங்கள் நடிக்கப் பெற்றன.

தமிழ் நாடகக் கலையில் நடிப்பிற்கே முதலிடம் வழங்கப் பெற்று அரங்கத்துப் பாராட்டோடு அது அமைந்து நின்று விட்டது போலும். படிப்பதற்குமுரிய இலக்கிய நாடகங்கள் தோன்றவே இல்லை. ஆயினும் பிற்காலத்தில் நொண்டி நாடகம், குறவஞ்சி, பள்ளு முதலான இலக்கிய நாடகங்கள் தோன்றின. நொண்டி நாடகம் தீயவன் நொண்டியாகித் திருந்தியநிலையில் தன் பழங்கதையினைத் தானே கூறுவது போல் அமைந்தது. பள்ளும் குறவஞ்சியும் தமிழ்ச் சமுதாயத்தின் எளிய மக்களின் வாழ்க்கையைக் காட்டுவனவாகத் தோன்றின. இது நாடகத்திற்கு நல்ல தொடக்கமாயினும் அவ்வகை இலக்கிய நாடகங்கள் சமயக் கருத்துக்கள் மிகுதியாகக் கலக்கப் பெறவே, நாடகத் தன்மைகளை இழக்கத் தொடங்கின. கீர்த்தனைகள் எனப்பட்ட இசைப்பாக்களால் ஆய நாடகங்கள் இயற்றப்பட்டன. சீர்காழி அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகம், இராமச்சந்திரக் கவிராயர் இயற்றிய சகுந்தலை விலாசம், கோபாலகிருட்டிண பாரதியார் இயற்றிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனை என்பன இவ்வகை நாடகங்களில் குறிப்பிடத் தக்கவையாகும். அருணாசலக் கவிராயர் எழுதிய இராம நாடகத்தின் அரங்கேற்றம் பற்றிய செய்திகளை நாம் அறிவோம்.

ஆங்கிலேயர் வருகைக்குப்பின் மேனாட்டு நாடக இலக்கியங்கள் கற்றோர்க்கு அறிமுகமாயின, நாடகக் கலையின் உயர்வை ஆங்கிலம் கற்றோர் அறிந்தனர். 19ஆம் நூற்றாண்

டில் நாடகக் கலையில் புதியதிருப்பம் ஏற்பட்டது. நாடோடிக் கதைகளையும் புராணக் கதைகளையும் நாடகமாக்கி நடித்தனர். சமூக நாடகங்களும் நடிக்கப் பெற்றனர். சிறந்த மேனாட்டு நாடகங்களை மொழிபெயர்த்தனர். தமிழ் அறிஞர் சிறந்த இலக்கிய நாடகங்கள் எழுதினர்.

மதுரைவீரன் விலாசம், ஆரவல்லி சூரவல்லி, பவளக்கொடி, நல்லதங்காள் முதலியன பாமர மக்களுக்குத் தெரிந்த கதைகளைக் கொண்டனவாதலின் பாமர மக்கள் நாடக அரங்கில் இவற்றை ஆர்வத்தோடு கண்டு மகிழ்ந்தனர். பாமர மக்களுக்குத் தெரிந்த புராணக் கதைகளையும் நாடகமாக்கி நடித்தனர். சீதா கல்யாணம், துரௌபதி துகிலுரிதல், தமயந்தி நாடகம், பூம்பாவை, சிறுத்தொண்டர், முதலான நாடகங்கள் நடிக்கப் பெற்றன.

நாடகக் கலையில் ஆர்வங் கொண்ட அறிஞர் சிலர் சமுதாயத்தில் காணப்படும் குறைகளைச் சுட்டி அவற்றைத் திருத்தும்வகையில் நாடகங்கள் எழுதி நாடெங்கும் நடிக்கச் செய்தனர். காசி விசுவநாத முதலியாரின் டம்பாச்சாரி விலாசம், கூலிக்கு மாரடிக்கும் கூத்தாடிச்சி என்ற நாடகங்களும், இராமசாமி ராஜாவின் பிரதாப சந்திர விலாசம் என்ற நாடகமும் உரைநடைப் பேச்சில் அமைந்து மக்கள் பாராட்டைப் பெற்றன.

ஆங்கிலம் அறிந்தோர் மேனாட்டு நாடகங்களை மொழி பெயர்த்தனர். சேக்ஸ்பீயரின் வெனிஸ் வர்த்தகன், சிம்பலின் போன்ற நாடகங்கள் மொழி பெயர்க்கப்பெற்றன, பிரெஞ்சு நாடகப் புலவர்களான மோலியர், இரசீன் எனபவர் நாடகங்களும் மொழி பெயர்க்கப்பட்டன. இவை படிப்பதற்கே அல்லாமல் அரங்கில் நடிப்பதற்கு ஆக்கப் பெறவில்லை.

ஆங்கிலப் புலமையோடு தமிழ்ப் புலமையும் நிரம்பப் பெற்ற சான்றோர் சிலர் உயர்ந்த நடையில் தமிழ் நாடகங்கள் எழுதினர். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, ஆங்கிலச் செய்யுட் கதையினைத் தழுவி 'மனோன்மணீயம்' என்னும் செய்யுள் நாடகம் இயற்றியுள்ளார். இது படிப்பதற்கென்றே படைக்கப்பெற்ற நாடகக் காப்பியம் ஆகும். பரிதி

மாற் கலைஞர் நாடக இலச்சண நூலும், ரூபாவதி, கலாவதி, மானவிசயம் என்ற உரை நடை நாடகங்களும் எழுதி அரங் கேற்றினார். தாமும் தலைமைப் பாத்திர வேடம் பூண்டு நடித்தார். விபுலானந்தர் மதங்கசூளாமணி என்ற நாடகம் எழுதினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இந்நூற் றாண்டுத் தொடக்கத்திலும் சங்கரதாஸ் சுவாமிகள் நாடகக் கலைக்கு முறையான தொண்டு செய்துள்ளார். இவர் பழைய நாடகங்களைத் திரட்டி நாடக அரங்கிற்கு இசையும்படி செம்மை செய்து எழுதினார். தாமே பல நாடகங்களை எழு தினார். நாடகக் குழுவினர்க்கு நல்ல பயிற்சியாசிரியராய் விளங்கினார். தாமும் வேடந்தாங்கி நடித்தார். தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என்று இவரைப் பாராட்டினர்.

அந்நாளில் கூத்தாடிகளின் கலையெனத் தாழ்ந்ததாய்க் கருதப்பட்ட நாடகக் கலைக்குப் பெருமை அளித்தவர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவர். ஆங்கிலம், வடமொழி இவற்றி னின்று பல நாடகங்களை மொழி பெயர்த்தும் தாமே பல புதிய நாடகங்கள் எழுதியும் எண்பதுக்கு மேற்பட்ட நாட கங்களை ஆக்கினார். சென்னையில் 'சுகுண விலாச சபை' அமைத்து அதன் வாயிலாக நாடகங்களை அரங்கேற்றினார். தாம் நடித்ததோடு, ஆர். கே. சண்முகஞ் செட்டியார் போன்றவர்களை நடிக்கச் செய்து நாடகக் கலைக்குப் பெருமை தேடினார். இவரது நாடகங்கள் பேச்சாலும், நடிப்பாலும் வெற்றி பெற்றுத் திகழ்ந்தன. மனோகரா, ரத்னவளி, வேதாள உலகம், சபாபதி போன்ற நாடகங்கள் பெருஞ் சிறப்பெய்தின. அரங்க அமைப்பு, நாடகம் எழுதல், பயிற்சி அளித்தல், ஒத்திகை பார்த்தல், குறித்த காலத்தில் முடித் தல் போன்றவற்றில் மிக்க கவனம் செலுத்தி நாடகங்கள் மேடையில் சிறந்து விளங்கச் செய்தார். இதனால் இவர் நாடகத் தந்தை என்று போற்றப்படுகிறார். இவர் இயற்றிய நாடகமேடை நினைவுகள், நாடகத் தமிழ் என்னும் இரு நூல் களும் பிற்கால நாடக நிலையைக் காட்டும்.

இருபதாம் நூற்றாண்டில் நாட்டுப்பற்று, விடுதலை வேட்கை, இன எழுச்சி, சமுதாய உணர்வு, புதிய சிந்தனை

முதலியவற்றின் விளைவாகப் பல்வகையான நாடகங்கள் தோன்றின. பல சபைகள் தோன்றி முறையான அமைப்புடன் விளங்கின. நாடகம் பயிலுவோர் (அமெச்சூர்) அவைகளும் எழுந்தன. டி. கே. எஸ். சகோதரர்களால் நடத்தப் பெற்ற ஸ்ரீ பால சண்முகானந்த சபையும், நவாப் டி. எஸ். ராஜமாணிக்கத்தின் மதுரை தேவி பால விநோத சங்கீத சபையும் முக்கியமானவையாகும், எஸ். வி. சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ், மனோகரின் நேஷனல் தியேட்டர்ஸ் சிவாஜி நாடக மன்றம் போன்ற நாடக சபைகள் உள்ளன. நாடகம் பயில்வோர் அவைகளும் உள்ளன. சிறந்த நடிகர்களைத் திரைப்பட உலகம் தத்து எடுத்துக் கொள்வதால் நாடகக் கழகம் அமைத்து முறையாக நடத்துதல் என்பது முடியாத ஒன்றாகிவிட்டது. திரைப்படத்தில் ஈடுபட்டபின் நடிகர்கள் நாடகத்தில் நடிப்பதைப் பயனற்றதாகக் கருதுகின்றனர்.

தெ. பொ. கிருஷ்ணசாமி நாட்டுணர்ச்சியை அடிப்படையாகக்கொண்ட பம்பாய் மெயில், கதரின் வெற்றி போன்ற நாடகங்களை எழுதி நாடெங்கும் நடிக்கச் செய்தார். ரா. வே. வேங்கடாசலத்தின் 'முதல் முழக்கம்' (கட்டபொம்மன் வரலாறு), 'இமயத்தில் நாம்' போன்ற நாடகங்கள் விடுதலை உணர்ச்சிக்கு விருந்தாய் அமைந்தன. டி. கே. எஸ். சகோதரர்களின் ஔவையார், இராசராச சோழன் போன்ற வரலாற்று நாடகங்களும் மக்களுக்கு உவகையூட்டின. நவாப் ராசமாணிக்கத்தின், ஏசுநாதர், சபரிமலை ஸ்ரீ ஐயப்பன், சம்பூர்ண ராமாயணம் போன்ற சமய நாடகங்களும் சிறப்புற நடித்துக் காட்டப்பட்டன. பிறமொழிக் கதைகளைத் தழுவிய முத்துசாமியின் குமாஸ்தாவின் பெண், சோமசுந்தரத்தின் மனிதன், பி. எஸ். இராமையாவின் பிரிசிடெண்ட் பஞ்சாட்சரம் போன்ற நாடகங்கள் பாராட்டப்பெற்றன.

புதிய கண்கொண்டு சமுதாயத்தை நோக்கித் தாம் கண்ட குறைகளைச் சுட்டிக் காட்டித் திருத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு பலர் நாடகங்களை எழுதி நடிக்கச்செய்தனர். கு. சா. கிருஷ்ணமூர்த்தியின் அந்தமான் கைதி, சுந்தரத்தின்

மனிதனும் மிருகமும், நாரண துரைக்கண்ணனின் உயிரோவியம், அண்ணுதுரையின் ஓர் இரவு, வேலைக்காரி போன்ற நாடகங்கள் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவையாகும். இன்று கட்சிக் கொள்கைப் பிரசார நாடகங்களிலும் அரசியல் சமூக விமர்சன நாடகங்களிலும் நடிப்பில் கருத்தின்றி உரையாடலை முதன்மையாகக் கொண்டிருக்கின்றனர்.

பிற மொழி நாடகங்கள் படிப்பதற்கென்று மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. கதிரேசஞ் செட்டியாரின் மிருச்சகடிகம், மறைமலையடிகளின் சாகுந்தலம், மற்றும் மேனுட்டு நாடக மொழி பெயர்ப்புகள் குறிப்பிடத்தக்கவையாகும். படிப்பதற்குப் புதிய நாடகங்களும் படைக்கப் பெற்றுள்ளன. பாரதிதாசனின் படித்த பெண்கள், அண்ணுதுரையின் காதல் ஜோதி, மு. வரதராசனுரின் இளங்கோ, சு. ப. மாணிக்கத்தின் மனைவியின் உரிமை போன்ற பல நாடகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இன்று நாடகம் திரைப்படத்தோடு போட்டி போட முடியாத நிலையில் உள்ளது. பெருஞ்செலவில் திரைப்படத்திற்குரிய பலவகைக் காட்சிகளையும் படம் பிடித்துப் பல படிகள் எடுத்துப் பெரும் பொருள் ஈட்டுகின்றனர். நாடக அரங்கில் சில காட்சிகளையே காட்ட முடியும். ஆதலால் மக்கள் குறைந்த செலவில் திரைப்படங்களைக் கண்டு மகிழ்கின்றனர். சிறந்த நடிகரெல்லாம் திரைப்படவுலகிற்குள் போய்விடுவதால் நிலையான நாடகக் குழு அமைத்து முறையான பயிற்சி அளிக்க வழியில்லை. அமெச்சூர் எனப்படும் நாடக ஆர்வலர் பொழுதுபோக்கிற்காகவே நடிக்கின்றனர்.

இன்றைய நாடகங்கள் அரங்க அமைப்பு, நடிப்பாற்றல், பேச்சுமுறை முதலியவற்ருல் சிறந்து விளங்குகின்றனவே அல்லாமல் சேக்ஸ்பியர், மோலியர், காளிதாசர்போன்ருேரின் நாடகப் படைப்பு அனையன தோன்றுவதற்குரிய அறிகுறி இல்லை. செல்வரும் அரசினரும் பேரூர்கள், நகரங்கள்தோறும் நாடக அரங்கு அமைத்துக் குறைந்த செலவில் நாடகம் அரங்கேற்றுதற்குரிய வாய்ப்பினைத் தந்தாலன்றி நாடகக் கலை நலிந்த நிலையிலே இருந்து வரும்.

## 8. உரைநடை வளர்ச்சி

தமிழில் நெடுங்காலமாக நூலமைப்புக்குச் செய்யுளே வடிவமாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. பனையோலையில் எழுத்தாணிகொண்டு எழுதுவதில்ஏற்பட்ட இன்னல் காரணமாகவே தமிழில் சுருங்கிய அமைப்பான செய்யுள் கையாளப்பட விரிவான அமைப்பான உரை நடை நூல்கள் தோன்றவில்லை என்பர். இதனைச் சிறந்த காரணமாகக் கொள்ள முடியாது. தமிழில் செய்யுள் இலக்கணம் செப்பமும் எளிமையும் உடையதாதலின் அறிஞர் தம் உள்ளத்துக் கருத்து எதனையும் செய்யுள் வடிவிலே புலப்படுத்த முடிந்தது. சோதிடம் மருத்துவம் போன்ற அறிவியல்களும் செய்யுளிலே அமைந்திருப்பது இதற்குத் தக்க சான்றாகும்.

தொல்காப்பியம் உரைபற்றிக் கூறியிருக்கிறது. பாட்டு முதலான ஏழு வகையான நூலமைப்புக்களுள் உரை நடையையும் ஒரு அமைப்பாகக் கொண்டுள்ளார். பேராசிரியர் இந்த உரைநடையினைப் பாட்டுக்களின் இடையே வருகின்ற குறிப்புக்கள், சூத்திரங்களுக்கு எழுதப்படும் விளக்கவுரைகள் கற்பனைக் கதை கூறும் உரை நடை, பொய்யானதாக இன்றி மெய்யானதாய் நகைச்சுவை பயக்கும் உரை நடை ஆய நான்குவகை உரைநடைகள் இருந்தன என்கிறார். தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நூல் எதுவுமே கிடைக்காத நிலையில் பழங்கால உரை நடைபற்றி எதுவும் கூறுவதற்கில்லை.

சிலப்பதிகாரத்தில்தான் முதன் முதல் உரைநடைகாணப்படுகிறது. சிலப்பதிகாரத்தைஉரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பர். ஆனால் இரண்டு இடங்களில்தான் உரை நடை அமைக்கப்பெற்றுள்ளது. நூலின் முகப்பில் உரைபெறு கட்டுரையாக ஒரு பக்க அளவு உள்ளது. அதில் பாண்டிய நாடு, கொங்கு நாடு, இலங்கை, சோழ நாடு இவற்றில் பத்தினிக்கு விழாச் செய்தமை கூறப்படுகிறது. வாழ்த்துக் காதை முகப்பில்வரும் ஒன்றரைப் பக்க அளவான 'உரைப் பாட்டு மடை' உரைநடையில் முன் கதை தொகுத்துக் கூறப்படுகிறது. ஒவ்வொரு காண்டத்தின் இறுதியில் 'கட்டுரை' என்னும் பெயரில் வரும் காண்டத் தொகுப்பு செய்யு

ளாகவே உள்ளது. சிலப்பதிகாரத்தின் உரை நடை செறிவும் இன்னேசையும் பொருந்திச் செய்யுள் போல உள்ளது. பெருந் தேவனுர் பாடிய பாரதமும், 'தகடூர் யாத்திரை' என்ற பெரு நூலும் உரைநடை கலந்த செய்யுள்களால் ஆயவை என்று உரையாசிரியர் கூறியுள்ளார். ஆனல் சிற்சில பாடல் களே அல்லாமல் இந்நூல்களுள் எதுவும் முழுமையாகக் கிடைக்கவில்லே.

பழைய நூல்களுக்கு எழுதப்பட்ட உரைகளிலிருந்தே முற்காலத்தமிழ் உரை நடையின் தன்மையை அறிய வேண்டி யுள்ளது. இறையனுர் களவியல் என்னும் அகப்பொருள் இலக்கண நூலுக்கு எழுதப் பெற்ற உரையே முந்திய உரை நடையாகும். நுட்பமும், வரையறையும், தருக்கமும், தெளிவும், ஓசையொழுக்கும், உவமையழகும், சொற்கனிவும் நிரம்பி அது கவிதைநடை போல உள்ளது. இளம் பூரணர், சேஞவரையர், பேராசிரியர், நச்சிஞர்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்ருேரின் உரை நடைகள் ஆற்றலும் செறிவும் வாய்ந்தவைகளாக உள்ளன. சமணர் போன்ருேர் எழுதிய உரைநடை நூல்கள் அயற் சொற்கள் கலந்த மணிப்பிரவாள நடையில் அமைந்தன வாதலின் அவை செல்வாக்கின்றி அழிந்தொழிந்தன. உரை நடையில் நுட்பமுறக் கருத்தை விளக்கும் திறன் வாய்ந்த உரையாசிரியர்கள் எல்லோருமே பாட்டுக்கு உரை என்ற வகையிலே எழுதிச் சென்ருர்களே ஒழிய, தனி உரைநடை நூலாக எதுவும் எழுதவில்லே.

ஐரோப்பியர் வருகையால் நம்நாட்டில் அச்சுப் பொறிகள் தோன்றலாயின. அச்சுப்பொறி உரைநடை வளர்ச்சிக்கு ஆக்கம் பயப்பதாயிற்று. 17-ஆம் நூற்ருண்டில் தமிழகத்திற்கு வந்த இத்தாலிய தத்துவ போதகர் என்னும் இயேசு சபைக்குருவானவர் சமயம் பற்றிய நூல்களே உரை நடையில் எழுதி வெளியிட்டார், செருமனியினின்று வந்த சீகன் பால்கு ஐயர் அச்சுப் பொறி நிறுவிச் சமய நூல்களோடு பாட நூல்களும் எழுதி வெளியிட்டார். இந்நாட்டவரும் தத்தம் சமயக் கொள்கையை விளக்கவும். பிற சமயங்களே

மறுக்கவும் உரைநடையில் நூல் எழுதத் தொடங்கினர். சிவப் பிரகாசரின் ஏகமத நிராகரணம் என்னும் உரைநடை நூல் இதற்குத்தக்க சான்ருகும். வரலாறு முதலியன பற்றிப் பள்ளிப் பாடநூல்கள் தோன்றலாயின. பதினேழாம் நூற்ருண்டிலேயே உரை நடை நூல் நல்ல முறையில் தோற்றம் எடுத்தது.

பதினெட்டாம் நூற்ருண்டின் முற்பகுதியில் வீரமா முனிவர் செப்பமான நடையில் பல உரை நடை நூல் எழுதி வெளியிட்டார். இத்தாலிய நாட்டினின்று இயேசு சபைக் குருவாய்க்கிறித்தவசமயம் பரப்பவந்த இவர் தமிழுக்காற்றிய தொண்டுகளுள் உரைநடைத் தொண்டும் ஒன்ருகும். வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம் முதலான சமயநூல்களும் பேதகம் மறுத்தல், லூத்தர் இனத்தியல்பு ஆயமறுப்பு நூல்களும் மற்றும் பற்பல சிறுநூல்களும் நிரூபங்களும் உரைநடையில் எழுதியிருக்கிருர். இவர் உரைநடையில் பரமார்த்த குரு கதையினையும் எழுதியுள்ளார். பின்னர் வந்த மேனுட்டறிஞரும் உரைநடை நூல்கள் எழுதியுள்ளனர். பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் சிவஞான சுவாமிகள் சிவமதக் கொள்கைகளை நிலைநாட்டவும் பிற சமயக் கொள்கைகளை மறுக்கவும் உரைநடை நூல்கள் பல எழுதினுர். இவரது நடை உரையாசிரியர்களின் நடையைப் போலவே உள்ளது.

பத்தொன்பதாம் நூற்ருண்டில் உரைநடை செவ்வனே வளரத் தொடங்கியது. இந்நூற்ருண்டின் உரை நடைத் தொண்டில் ஆறுமுக நாவலர் சிறந்து விளங்கினுர். சிறுவர்களுக்கான பாடநூல்கள் எழுதினுர். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் போன்றவற்றை நல்ல உரை நடையில் எழுதினுர். இலங்கையின் பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளியிட்டார். 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்று பாராட்டப் பெற்றுள்ளார். சிறந்த கவிஞராயினும், இராமலிங்கசுவாமிகள் உரைநடையின் இன்றியமையாமையை உணர்ந்து மனுமுறை கண்ட வாசகம், என்னும் உரை நடை நூலும் ஜீவகாருண்ய ஒழுக்கம் போன்ற கட்டுரைகளும் எழுதி வெளியிட்டிருக்கிருர். மாயூரம் வேத

நாயகம்பிள்ளை எளிய உரை நடையில் பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி வரலாறு என்னும் நாவல்களை எழுதினார். பள்ளிகளில் தமிழ்ப்பாடப் புத்தகங்கள் வைத்துப் பாடல்புகட்டினார். இதனால் யாவரும் உரைநடை இன்றியமையாதது என்று கண்டு கொண்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் யாழ்ப்பாணத்துச் சபாபதி நாவலர் இலக்கியமெனத்தக்க உரைநடை நூல்கள் எழுதினார். சென்னையில் வாழ்ந்த சோமசுந்தரநாயக்கர் சொல்வளமும் மறுப்புநயமும் ஆண்மைச் சுவையும் நிரம்பிய உரைநடை நூல்கள் எழுதினார். உரைநடையும் நல்ல இலக்கியமாகக் கூடும் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே தெளிவாகி விட்டது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே உரை நடையை ஊடகமாகக் கொண்டு உயரிய சிந்தனைகளையும் நுண்ணிய கருத்துக்களையும் இலக்கியச் சுவைபட எடுத்தியம்பமுடியும் என்ற நம்பிக்கை தமிழறிஞர்க்கு ஏற்பட்டது. பழந்தமிழ் நூல்கள் எல்லாம் நல்ல முறையில் பதிப்பிக்கப் பெற்றமையால் அந்நூல்களின் நயங்களை, உரைநடை வாயிலாக வெளிப்படுத்தும் முயற்சி பெருகியது. ஆங்கிலத்தில் உள்ள அரியநூல்களையும் கருத்துக்களையும் பின்பற்றித் தமிழில் உரைநடைநூல்கள் எழுதத் தொடங்கினர். மேனாட்டில் விரைந்து வளர்ந்தேறிக் கொண்டிருந்த சிறுகதை, நாவல்களை மொழி பெயர்ப்பாகவோ, தழுவியோ எழுதியதோடு தமிழர் வாழ்க்கை பற்றியும் எழுதத் தொடங்கினர். கல்லூரிப் பாடங்களிலும் தமிழ் நிலையான இடம் பெற்று விடவே பல்கலைக் கழகப் பேராசிரியரும் கல்லூரிப் பேராசிரியரும் பாட நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் எழுதினர். பத்திரிகைகளின் வாயிலாக நல்ல தமிழ்க்கட்டுரைகள் பெருகின. தமிழ் உரைநடை நூல்கள் பல்வகைத் துறையிலும் தோன்றத் தொடங்கின. சிறக்கச் செய்யுள் இயற்றும் திறன் வாய்ந்தவர்கூடப் பயன்கருதி, உரைநடை நூல்கள் இயற்றினர்.

கல்லூரிப் பேராசிரியராகத் திகழ்ந்த கா. நமச்சிவாய முதலியார் பள்ளிகளுக்குரிய பாடப்புத்தகங்களை நல்ல தமிழ்

நடையில் எழுதி வெளியிட்டார். டாக்டர் உ. வே. சாமி நாத அய்யர் பெருங்கதை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி போன்ற காப்பியங்களின் கதைச் சுருக்கம் எழுதியதோடு தன் வரலாற்றையும் எளிய நடையில் எழுதி உரை நடை வளர்த்துள்ளார். ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் புலமை வாய்ந்த பரிதிமாற்கலைஞன் மதிவாணன் போன்ற நாவல்களும் தமிழ் வரலாறு என்னும் ஆராய்ச்சி நூலும் கட்டுரைகளும் செந்தமிழில் எழுதியுள்ளார். க. ப. சந்தோஷம் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை நகைச் சுவை மலிய எழுதியிருக்கிறார். சமக்கிருதம் தமிழ் இரண்டிலும் புலமை நிரம்பப் பெற்றுக் கதிரேசன் செட்டியார், சுக்கிரநீதி என்னும் ஆராய்ச்சி நூலும், ஆராய்ச்சியும் இலக்கியச் சுவையும் நிறைந்த கட்டுரைகளும் எழுதித்தமிழ் வளர்த்துள்ளார். வேங்கடசாமி நாட்டார், மு. ராகவஐயங்கார், ரா. ராகவ ஐயங்கார், சோமசுந்தர பாரதியார் முதலியோர் செறிந்த நடையில் அரிய ஆராய்ச்சிநூல்கள் எழுதியுள்ளனர். கா. சுப்பிரமணியபிள்ளை செம்போக்கான தமிழ் நடையில் பல்வகைப்பட்ட உரை நடை நூல்கள் எழுதியிருக்கிறார். வையாபுரிப்பிள்ளை மேனாட்டு முறையைப் பின்பற்றி அரிய கால ஆராய்ச்சிக் கட்டுரைகளை எளிய நடையில் எழுதியுள்ளார். சேதுப்பிள்ளை எதுகை மோனைகள் இலங்க எளிமையும் இனிமையும் ததும்பும் உரைநடையில் பல உரைநடை நூல்கள் எழுதியிருக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டில் உரைநடை, செய்யுளைப் போலவே, இலக்கியத்தின் ஒரு பிரிவு என்று மதிக்கும் அளவிற்கு வளம் பெற்றுத்திகழ்கிறது. உரைநடையை இலக்கியக்கலையின் பிரிவு என்று கருதும் அளவுக்கு வளர்த்தோரில் மறைமலை அடிகளும் திரு. வி. கவும் முதன்மை வாய்ந்தவர் ஆவர். இளமையிலேயே தமிழ் கற்று நுண்மாண் புலமை எய்திச் சங்ககாலப்புலவர் போல் பாடும்திறன் பெற்றிருந்தும் மறைமலையடிகள் ஆங்கில உரைநடைக் கொப்பத் தமிழில் உரைநடை நூல்கள் படைக்க வேண்டுமென்ற பேரார்வங் கொண்டு சங்கநூல், சமயநூல்

ஆராய்ச்சிகள், வரலாறு, அறிவியல், மொழிபெயர்ப்பு, நாவல், கட்டுரை முதலான தமிழ்த்துறைகளில் கங்கைப் பேரியாற்றின் பெருக்கின் ஒழுக்கு அனைய பெரு நடையில் பல உரைநடை எழுதியுள்ளார். திரு. வி. க. இனியதும் எளியதுமான குறுவாக்கியங்களில் ஆழ்ந்த சிந்தனை உணர்ச்சி பாய்ந்தோட உள்ளம் உள்ளத்தோடு உரையாடும் பாவனையில் தேனின் இனிமையும் தென்றலின் மென்மையும் விளங்கும் செந்தமிழ் நடையில் பல உரைநடை நூல்கள் எழுதியுள்ளார்.

இன்று தமிழாசிரியப் பெருமக்களும் எழுத்தாளர்களும் நல்ல நடையில் எழுதுகின்றனர். பத்திரிகைகளும் தெளிவான நடையைக் கையாளுகின்றன. சிறு கதையும் நாவலும் உரைநடை இலக்கியத்தின் தனித்தனிப் பிரிவுகள் என்னும் படி வளர்ந்தேறி விட்டன. அறிவியல், அரசியல், பொருளியல் முதலான கலைநூல்கள் எழுதப்பட்டு வருகின்றன. பாமரர்கள் சிறு கதை, நாவல், கட்டுரைகளை விரும்பிப் படித்துவருகின்றனர். எளிமையும் தெளிவும் உரைநடையின் இலக்கணமாகக் கொள்ளப்பட்டுள்ளது. மு. வரதராசனார், மீனாட்சிசுந்தரனார் போன்ற தமிழறிஞர்கள் நல்லதமிழில் உரைநடை நூல்கள் செய்து உரைநடையை வளப்படுத்தி வருகின்றனர்

## 9. புனை கதை

உலக இலக்கிய வரலாற்றில் புனைகதை (Fict on) தனி இலக்கியத்துறையாகத் திகழ்கிறது. புனைகதை, நாவல் (புதினம்) என்றும் சிறுகதை என்றும் இருகிளைகளாகப் பிரிந்து நின்று விளங்குகின்றன.

சில நூற்றாண்டு முன்னர் வரை செய்யுளே இலக்கியத் திறனை இலங்கச் செய்வதற்குரிய உருவமாக இருந்து வந்தது. உலகெங்கும் முடியரசுகள் ஒழிந்து குடியரசுகள் தோன்றவே, சாதாரணமக்களும் விழிப்புணர்ச்சியுடன் அரசியல், சமுதாயம். கலை முதலியவற்றில் ஆர்வங் கொள்ளத்தொடங்கினர். இதனால் ‘உரைநடை’ என்பது

சிறப்பெய்தியது. உரைநடையையே உருவமாகக் கொண்டு புனைகதை தோன்றி வளர்ந்தது.

மக்கள் சமுதாயத்தில் பற்பலமாற்றங்கள் நேர்ந்தன. மக்கள் எண்ணம், சிந்தனையில் வளர்ச்சி ஏற்பட்டது. புதிய சூழல்களில் புதிய சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதற்கு உரைநடையே ஏற்றகருவியாய் அமைந்தது. படிப்போர்கூட்டம் பெருகியது. அவர்களுடைய இலக்கியத் தேவையை நிறைவு செய்ய உரைநடையை உருவமாகக் கொண்ட நாவலும் சிறுகதையும் நல்ல சாதனங்களாயின. இவ்விரண்டும், கதைகூறல், உரையாடல், வருணனை, கருத்துவிளக்கம், தனியுரை முதலானவைகளை எல்லாம் புலப்படுத்தற்குரிய கருவிகளாய் அமைந்து கிடந்தமையால் இலக்கியத்திறன் மிக்கோரும் செய்யுளை வேண்டாது சிறுகதை அல்லது நாவலில் தம் திறமைகளையெல்லாம் இலங்கச் செய்துள்ளனர்.

பழைய சமுதாயம் அரசனையோ சமயத்தலைவரையோ மையமாகக் கொண்டு சுழன்றது. மனிதன் மக்கட்தொகையில் ஓர் எண்ணிக்கையாகத் திகழ்ந்தானே அன்றி அவனது தனிப்பண்பை உலகம் மதிக்கவில்லை. மாற்றம் எய்திய புதுச் சமுதாயத்தில் தனி மனிதன் சிறப்பெய்தினான். அவனது குணநலன், குறைகளைக் கண்டுரைப்பதில் இலக்கியக் கலைஞர் ஆர்வங்கொண்டனர். தனித்துவப் பண்பு வாய்ந்த மனிதனை மையமாகக் கொண்ட சூழ்நிலையில் தனிமனிதனால் சமுதாயத்தில் ஏற்படும் தாக்கங்களையும் உறவுகளையும் சமுதாயத்தால் அவனுக்கு நேரும் பாதிப்புக்களையும் கருவாக வைத்து நாவல்கள் படைக்கப் பெற்றுள்ளன: இந்தச்சூழ்நிலையில் உள்ள மனிதன் வாழ்வில் நேரும் குறிப்பிட்ட நிகழ்ச்சியையோ, இன்னலையோ, மனஉணர்ச்சிநிலையையோ கருவாக வைத்து எழுதப்படுவது சிறு கதையாகும். மனித முழு வாழ்வைக்காட்டுவது நாவலாகும்.

புனைகதையால் மனிதனின் முழுவாழ்க்கையையும் காட்டமுடிகிறது. மனிதனின் உயர்வுகளையே அல்லாமல்

தாழ்வுகளையும், குறைகளையே அல்லாமல் நிறைவுகளையும் வடிப்பதற்குப் புனைகதை இடம் அளிக்கிறது. இதனால் யதார்த்த நெறி எனப்படும் இயல்புநெறி ஆக்கம்பெற்றுள்ளது. அனுபவத்தால் கண்டும் கேட்டும் அறிவனவற்றையே கொண்டுள்ள புனைகதை இலக்கியம் அறிவியலுக்கும் இசைந்ததாக அமைகிறது.

## I சிறு கதை

தமிழ் இலக்கிய வரலாற்றில் செய்யுளே இலக்கியத்திற்கேற்ற உருவமாக விளங்கிவந்தது. மேனாட்டார் வருகையால் 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் உரைநடை வளர்ச்சி எய்தியது. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டதனால் தமிழ்ச் சமுதாய அமைப்பில் மாற்றங்கள் நேர்ந்தன. ஆங்கிலக் கல்விகற்று அரசாங்க அலுவல் பெற்று வாழும் புதிய நடுத்தரவகுப்பு ஏற்பட்டது. ஜமீன்தார், பண்ணையார் போன்ற நிலையினரின் வாழ்வு மங்கத்தொடங்கியது. ஆங்கிலக் கல்வியின் பயனாகச் சிந்தனையில் மாற்றங்கள் நிகழ்ந்தன. புதிய கண் கொண்டு சமுதாயத்தை நோக்கத் தொடங்கினர். இந்நிலையில் உரைநடையை உருவமாகக் கொண்டு நாவலும் சிறுகதையும் தோன்றி வளர்ந்தன.

மேனாட்டார் சிறுகதைக்குத் தெளிவான வரையறைகள் வகுத்துள்ளனர். சிறுகதை ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே இயங்கும். நிகழ்ச்சியோ, நிகழ்ச்சிக்குக் காரணமான மனநிலையோதான் சிறுகதைக்கு அடித்தளமாக அமையும். 'சிறுகதை அழுத்தப் பெற்ற மனிதன் அல்லது மக்களின் குரல்' என்பார் பிராங் ஓ' கொனர். குறித்ததோர் நிகழ்ச்சியில் மனித மனம் படும் பாட்டை அல்லது உறுப்பினர் இயங்கும் முறையை வருணிப்பதே சிறுகதையாகும். படிப்பதற்குரிய காலத்தை அளவுகோலாக வைத்துச் சிறுகதை இலக்கணம் காண்பது சிறந்ததன்று.

பழங்காலக் காப்பியங்களில் கிளைக்கதைகள் வந்துள்ளன. நீதியை உணர்த்தும் கதைகளும் இருந்தன. ஆனால் இவற்றை இன்றைய சிறுகதை இலக்கணத்திற்குள் பொருத்

திப் பார்க்க முடியாது. ஆனால் சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையில் பல காதல் நிகழ்ச்சிகள் வருகின்றன. இந்தக் காதல் அனுபவங்கள் சிறுகதை போல் அமைந்து நின்று அழகு பயக்கின்றன. இவற்றை உரைநடையில் அமைத்தால் இன்றைய சிறுகதை வரம்புகளுக்குள் நின்று சுவை பயக்கும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் பரமார்த்த குரு கதை எழுதினார். இக்கதைகள் அன்றையச் சமயக் குரவர்களின் நிலையை எதிரொளி செய்வனவாய் உள்ளன. வீராசாமி செட்டியார் எழுதிய விநோதரச மஞ்சரி தமிழ்ப் புலவரின் வாழ்க்கையில் நேர்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்த பஞ்ச தந்திரக் கதைகள் கதை நிகழ்ச்சிகளின் தொகுப்பாக விளங்குகின்றன. இலக்கணப்படி இவற்றைச் சிறு கதைகள் என்றழைக்க முடியாது. ஆனால் இவை சிறுகதை தோன்றுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கின எனலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தினமணி, சுதேச மித்திரன் போன்ற பத்திரிகைகள் தோன்றி வளரத் தொடங்கின. மேனாட்டில் நாவலும் சிறுகதையும் விரைந்து வளர்ந்து கொண்டிருந்த காலம் அது. ஆங்கிலம் கற்றோர் தமிழ்ப் பத்திரிகைகளுக்குச் சிறுகதை எழுதத் தொடங்கினர். இவர்களுள் பாரதியார், மாதவையா, வ. வே. சு. ஐயர் போன்றோர் முதன்மையானவர் ஆவர். பாரதியார், தாகூர் கதைகளை மொழி பெயர்த்தார். அவர் எழுதிய கதைகள் நிகழ்ச்சிகளை உள்ளவாறு வருணிப்பனவாக உள்ளன. கட்டுக் கதைகள் என்று குறிப்பிடத் தக்க வகையிலும் அமைந்துள்ளன. மாதவையா எழுதிய சிறு கதைகள் குசிகர் குட்டிக் கதைகள் என்ற தொகுதியாக வெளியிடப்பட்டன. அவற்றில், தமிழ் நாட்டில் பெண்களுக்கு நேர்ந்த இன்னல்களை உணர்ச்சியோடு வெளிப்படுத்தியுள்ளார். வ. வே. சு. ஐயர் எழுதிய கதைகள் 'மங்கையர்க்கரசியின் காதல்' என்னும் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் மரபு தழுவித்

தமிழர் வாழ்க்கையினைச் சித்திரிக்கும் அக்கதைகளுள் 'குளத் தங்கரை அரச மரம்' சிறுகதைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்குகிறது.

**கல்கி** பாமர மக்கள் விரும்பும் வண்ணம் பல்வகைப் பொருள்களைக் கையாண்டு பத்திரிகை வாயிலாகச் சிறுகதையைப் பரப்பினார். இவரது சிறுகதைகள் சாரதையின் தந்திரம், வீணை பவானி, ஒற்றை ரோஜா, மாடத் தேவன் சுனை, கணையாழியின் கனவு, அமர வாழ்வு முதலிய தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. கல்கி செய்திகளைக் கவர்ச்சியான நடையில் எழுதிச் சிறுகதை படிப்போர் கூட்டத்தைப் பெருக்கியுள்ளார்.

**மணிக்கொடிக் குழுவினர்** சிறுகதைக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர். மேனாட்டாசிரியர்கள் கண்ட வரையறைகளுக்கிசையப் புதிய தமிழ் இலக்கியம் படைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 1933இல் மணிக்கொடி பத்திரிகை தொடங்கி 3 ஆண்டுகள் நடத்தினர். பின்னர் இருமுறை இதனை நடத்த முயன்றனர். சிறு கதைக்குச் சிறப்பான இடம் அளித்தனர். இக் குழுவினரும் இப்பத்திரிகையில் எழுதியவர்களும் சிறுகதை வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்து வந்தனர். இன்றும் சிலர் முதிர்ந்த எழுத்தாளராய்ச் சிறுகதைப் பணிபுரிந்து வருகின்றனர்.

**புதுமைப் பித்தன்** சிறு கதை வரலாற்றில் தனியிடம் பெற்றவர் ஆவர். மணிக்கொடிப் பத்திரிகைக்குத் துணை நின்றார். தமது இலக்கியத் திறனையெல்லாம் வெளிப்படுத்துவதற்குச் சிறுகதையினையே கருவியாகக் கொண்டுள்ளார். இவரால் சிறுகதை சிறந்த இலக்கியமானது. சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகளால் தனிமனிதன் இன்னலுக்காளாவதை எடுத்து விளக்கியுள்ளார். இயல்பு (யதார்த்த) நெறியில் வாழ்க்கைத் துன்பங்களை விளக்குவதில் வல்லவர். இவரது எழுத்தில் கேலியும் கிண்டலும் கலந்திருக்கும். இவரால் சிறுகதை மரபு தமிழ் மரபாகியது. இவர் உலகச் சிறுகதைகளோடு போட்டியிடத்தக்க சிறுகதைகள் படைத்துள்ளார்.

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் செய்திகளைத் தேர்ந்து அவற்றைக் கவிதை நடையில் எழுதிச் சிறந்த சிறு கதைகளாக்கியுள்ளார். அவ்வகையில் சாபவிமோசனம், அகல்யை, சிற்பியின் நகரம் முதலியன சிறந்து விளங்குகின்றன. நாரத ராமாயணம் அங்கதச் சுவையுடையது. விக்கிரமாதித்தன் கதைப்பாணியில் திருக்குறள் குமரேசம் பிள்ளை, புதிய கந்தபுராணம், கட்டிலை விட்டிறங்காத கதை முதலியன எழுதியுள்ளார். 'கடவுளும் கந்தசாமியும்' என்பதில் புதுமையையும் பழமையையும் இணைத்துக் காட்டுகிறார். பழந்தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளைப் புதிய கண்ணோட்டத்தில் கண்டு புதிய விளக்கம் தந்துள்ளார். இதற்கு வாதவூரார் மனப்போராட்டத்தை வருணிக்கும் "அன்று" சிறந்த எடுத்துக் காட்டாகும்.

உரை நடையில் இயல்புப் (யதார்த்தம்) பண்பைப் புகுத்தி வாழ்க்கைக்கும் உண்மைக்குமுள்ள உண்மையான பண்பை வெளிப்படுத்தினார். இதற்குப் பேச்சுத் தமிழைக் கையாண்டார். அதுவும் திருநெல்வேலி வேளாளர் பேச்சுத் தமிழாயிருந்தது. குறித்ததோர் உணர்ச்சி நிலையுள் முழு வாழ்க்கையைக் கொண்டு வந்து காட்டும் நனவோட்ட முறையைக் கையாண்டு வெற்றி கண்டார். கயிற்றரவு, செல்லம்மாள் போன்றன இதற்கு நல்ல எடுத்துக் காட்டுகளாகும். கதை கூறு முறையிலே நாடகப் பண்பை இணைத்துக் காட்டுதலை மனக்குகை ஓவியங்கள், இது மிஷன் யுகம், துன்பக் கேணி போன்ற கதைகளில் காணலாம். விசையான கருத்துக்கேற்ற வாகனமாகவே அவர் நடை உள்ளது. பழந்தமிழ்ச் சொல்லும் பழகுதமிழ்ச் சொல்லும் கலந்து உணர்ச்சி பொங்கச் செய்யும் கவிதை நடையாயும் உள்ளது. அவரது கதை வடிவங்கள் தமிழுக்கே உரிய கலை வடிவங்களாயின.

மணிக்கொடி எழுத்தாளரான கு. ப. ராஜகோபாலனும் சுமார் 85 சிறு கதைகள் எழுதிச் சிறுகதை வளர்த்தார். இக் கதைகள் புனர் ஜென்மம், கனகாம்பரம், காஞ்சனமாலை என்ற தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. ஆண் பெண்

உறவு பற்றிய மென்மையான உணர்வு நிலைகளை வாய்ப்பான உரை நடையில் எழுதியுள்ளார். கதைப் பொருளாலும் சிறு கதைத் துறையில் வளம் பெருக்கியுள்ளார்.

சுதந்திரத்திற்குமுன் சிறுகதைப் பொருள் விரிவடையும் படி எழுதியவர்கள் பலர் உண்டு. இராசாசி பாரதப் பண்பு வழிப்பட்ட மரபில் கருத்து விளக்கமாகச் சிறு கதைகள் எழுதியுள்ளார். கூனி சுந்தரி, முகுந்தன், அறியாக் குழந்தை போன்றன நல்ல படைப்புக்களாகும். க. நா. சுப்பிரமணியம் வரலாற்றுண்மை பிறழாதவாறு சிறுகதைகள் எழுதியுள் ளார். எஸ். வி. வி. பிராமணக் குடும்ப வாழ்க்கையில் காணும் நிகழ்ச்சிகளை நகைச்சுவைக் கதைகளாக எழுதியுள் ளார். துமிலனும் நாடோடியும் நகைச்சுவை கலந்த சிறு கதைகள் எழுதியுள்ளனர். பி. எஸ். இராமையா நடுத்தர மக்கள் வாழ்க்கையில் காணக் கூடிய உணர்ச்சிகளைச் சித்திரித் துள்ளார்.

மௌனி, குறிப்பிடத்தக்கதோர் சிறந்த சிறுகதை எழுத் தாளர் ஆவர். இவரும் மணிக்கொடியில் எழுதியவரே. இவர் எழுதிய பதினைந்து கதைகள் 'அழியாச் சுடர்' என் னும் தொகுதியாக வெளி வந்துள்ளன. மனத்தில் பொங் கும் உணர்ச்சியினை எண்ண அலைகள் மூலம் காட்டுவது இவர் இயல்பு. காதலின் சோகத்தைச் சித்திரிப்பதில் கைவரப் பெற்றவர். புதுமைப்பித்தன் கையாண்ட நனவோட்ட உத்தியைப் பயன் படுத்தியுள்ளார். இதே உத்தி வழியில் லா. ச. ராமாமிர்தம் கதை எழுதிச் சிறப்பெய்தியுள்ளார்.

இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பின்னர் பல எழுத் தாளர் தோன்றியிருக்கின்றனர். இவர்களுள் விந்தன் (வி. கோவிந்தன்) சிறந்தவர் ஆவர். ஏழைகள், தாழ்ந்தோர், தொழிலாளர் முதலியோர்களுடைய துன்பங்களுக்குரிய காரணங்களைத் தம் கதைகளில் விளக்கியிருக்கிறார். இவரது சிறு கதைகள் 'முல்லைக் கொடியாள்' என்னும் தொகுதியாக வெளி வந்துள்ளன. இவர் குட்டிக் கதைகளும் எழுதி வரு கிறார். அகிலன் மற்றொரு சிறந்த சிறுகதை எழுத்தாளர் ஆவர். காதலில் தோன்றும் சிக்கல்களையும் போராட்டங்

களையும் உணர்ச்சி புலப்படச் சித்திரித்துள்ளார். இவரது சிறு கதைகள் சக்திவேல், நிலவினிலே, அமராவதிக் கரையில், செங்கரும்பு போன்ற பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

மணிக்கொடிக் குழுவினரும் முதிர்ந்த எழுத்தாளருமான ந. பிச்சமூர்த்தி சிறுகதைகள் எழுதி வருகின்றார். இவரது தொடக்ககாலக்கதைகள் பதினெட்டாம் பெருக்கு, மோகினி, ஜம்பரும் வேஷ்டியும் முதலான தொகுதிகளாக வெளியிடப் பட்டுள்ளன. இவரது பிற்காலக் கதைகளில் வேதாந்தக் கருத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றன. மற்றொரு மணிக் கொடிக் குழு எழுத்தாளர் கு. அழகிரிசாமி ஆவர். தம் கதைகளில் மனிதப் பண்பு நிலைகளை விளக்கிச் சிறுகதையிலக் கியத்தில் வளம் பெருக்கியுள்ளார். இவரது கதைகள் சிரிக்க வில்லை, தெய்வம் பிறந்தது, கற்பக விருட்சம் போன்ற தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

ஜானகிராமன் பழகு தமிழின் பேச்சு நடையாலே சிறு கதையை நடத்திச் செல்வார். தஞ்சாவூர் வாழ்க்கையும் பேச்சு மரபும் இவர் கதைக்கு அடிப்படையாயிருக்கும். நகைச்சுவையும் கலந்திருக்கும். மனிதனிடம் காணக்கிடக்கும் தனித்துவப் பண்புகளைத் தம் கதைகளில் காட்டுகிறார்.

புதிய எழுத்தாளர்களில் முன்னணியில் நிற்பவர் ஜெய காந்தன் ஆவர். சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளைக் காத லுணர்ச்சியில் கண்டுரைக்கின்றார். மக்களுக்கு அறிமுகமான சூழ்நிலைகளையும் உறுப்பினர்களையும் தேர்ந்து இயல்பு (யதார்த்தம்) உண்மைகளையும் உணர்ச்சி நிலைகளையும் சித்தி ரிக்கின்றார். சமுதாய மரபினோடு மாறுபடுங்கால் தனி மனிதனுக்கு நேரும் துன்பங்களை வருணிக்கின்றார். இவரது தொடக்க காலக் கதைகளில் காதலுணர்ச்சி மிகுந்திருந்தது. இப்போது அதனைச் செம்மையாகக் கையாண்டு கதை எழுதி வருகிறார். புதிய சிறுகதை எழுத்தாளர்களில் சுந்தர ராம சாமியும் சிறந்து விளங்குகிறார். நாகர்கோவில் வட்டாரப் பேச்சுத் தமிழ் விளங்க, சிறு கதை அமைப்பும் அழகும் இலங்கக் கதைகள் எழுதி வருகிறார். இவரது கதைகள் அக் கரைச் சீமையிலே, பிரசாதம் முதலான தொகுதிகளாக

வெளிவந்துள்ளன. ஆர். சூடாமணி மற்றொரு சிறந்த சிறு கதை எழுத்தாளர் ஆவர். பல்வேறு சமூகச் சூழ்நிலையில் பழகும் பெண்களின் உணர்வுகளை நுட்பமாக விளக்குகிறார். இவரது கதைகள் இயல்பான நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

தொடக்கத்திலிருந்தே சிறுகதைத்துறையில், இலக்கியத் தரத்திலும் சிறுகதை யிலக்கணக்கொள்கையிலும் நம்பிக்கை வாய்ந்தவர் எழுதிவந்தனராதலின் சிறுகதையின்உருவம் செப்பம் எய்தியது; அதன் உத்திகள் வெற்றியுறக் கையாளப் பெற்றுள்ளன. தமிழ் மரபுக்குட்பட்டுப் பொருளாலும் சிறு கதை வளம் பெற்றது. உலகச் சிறு கதைகளோடு ஒப்பிடத்தக்க சிறு கதைகள் தமிழில் தோன்றியுள்ளன. சிறு கதை வளர்ச்சிக்குப் பத்திரிகைகளே காரணமாயிருந்தன. ஆயினும் இன்றைய பத்திரிகைகளில் வெளிவரும் கதைகள் பல ஆயத்த (Ready-made) கதைகளாகவே உள்ளன.

## II. நாவல்

தமிழ் இலக்கியங்கட்கு நெடுங்காலமாகவே செய்யுளே வடிவமாக இருந்தது. இலக்கியம் படைப்போர் இலக்கியத் திறனைப் புலப்படுத்துவதற்குக் காவியம் அல்லது பிரபந்தம் என்ற அமைப்பையே கருவியாகக் கொண்டனர். மேனாட்டார் வருகையால் உரைநடை தோன்றி வளர்ச்சி எய்தியது. இலக்கியத் திறனை விளங்கச் செய்வதற்கு உரை நடையைச் சாதானமாகக் கொள்ள முடியும் என்ற நிலை பிறந்தது. இந் நிலையில் உரை நடை இலக்கிய வகையான புனை கதையின் பெரும் பிரிவாகக் கருதப்படும் நாவல் தோன்றும் சூழ்நிலை உருவாகியது.

காவியம் இருந்த இடத்தை நாவல் பெறத் தொடங்கியது. தொடக்க காலத்தில் நாவலை உரை நடைக் காவியம் என்றே அழைத்தனர். ஆனால் நாவல், காப்பியம் போலவே நீண்ட கதை அமைப்பும் பற்பல பாத்திரப் படைப்புக்களையும் கொண்டிருந்தாலும் அடிப்படையில் நாவல் மரபு காவிய மரபினின்று வேறுபடுகிறது. காப்பியங்கள் நிறைகுணப் பாத்

திரங்களையும் இயல்பிறந்த கற்பனைகளையும்கொண்டு மிகைக் கூற்று நெறியில் கூறிச் செல்கின்றன. ஆனால் நாவல்கள் குறையும் நிறையும் கலந்த பாத்திரங்களின் முழு வாழ்க்கை யினையும் இயல்பு (யதார்த்தம்) நெறியில் கூறுகின்றன.

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் மேனாட் டில் நாவலும் சிறு கதையும் உரை நடை இலக்கியங்களாக வளர்ந்தன. ஆங்கில இலக்கியங்களைக் கற்ற தமிழறிஞர் தமி ழிலும் அப்புனைகதை இலக்கியங்களைப் படைக்க முயன்ற னர். நம் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி நிலைபெற்றமை யால் ஏற்பட்ட சமுதாய மாற்றமும் சூழ்நிலைகளும் கதைக் குரிய பொருளாய் அமைந்தன.

மேனாட்டறிஞர் நாவல் பற்றிப் பல வரையறைகள் வகுத்துள்ளனர். நாவல் இயல் பிறந்த நிகழ்ச்சிகளைக் கொள் ளாமல், உலக இயல்புக்கு உட்பட்டதாய் இருக்கவேண்டும். இயல்பான வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அனுபவங்களுமே கதைப் பொருளாக அமைதல் வேண்டும். நம்பத்தகாததோ நடக்கக் கூடாததோ நாவலுக்குப் பொருளாய் இருத்தல் கூடாது. உலக வாழ்க்கையைக் கண்ணாடிபோல் பிரதிபலித் துப் பெரும்பாலும் அனுபவத்தோடொத்து நிகழும் கதை யையே மேனாட்டவர் நாவல் என்று கூறுகின்றனர்.

ஆங்கிலத்தில் நாவல் இலக்கியம் பதினெட்டாம் நூற் றாண்டில் தோன்றிவிட்டது. ஆனால் தமிழில் பத்தொன் பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் முதல் நாவல் தோன்றியது. முனிசீபு வேதநாயகம்பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமே தமிழில் முதல் நாவலாகும். கற் பார்க்குச் சுவையும் போதனையும் அளிப்பதே அப்புதினத்தின் நோக்கமென்று அவரே நூலின் முன்னுரையில்கூறியிருக்கிறார். அந்நாவல் எளிய தமிழ் நடையும் இயல்பான வாழ்க்கை நிகழ்ச்சிகளும் நகைச்சுவையும் கொண்டு சிந்தனையைத் தூண்டுவதாய் அமைந்து நாவலுக்கு நல்ல தொடக்கமாய் நிற்கிறது. இவர் சுகுண சுந்தரி என்னும் மற்றொரு கதை நூலும் எழுதியுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலம் கற்றோரே தமிழில் நாவல்கள் எழுதினர். பத்திரிகையாளராய் விளங்கிய இராஜமையர் கமலாம்பாள் சரித்திரம் என்ற நாவலை எழுதினார். இது தமிழ்நாட்டின் இயல்பான வாழ்க்கையைக் கொண்டு நாவலுக்குரிய வரையறைகளுக்கிணங்க எழுதப் பெற்றது. நெஞ்சில் நிற்கத்தக்க பாத்திரங்களையும் வருணனைகளையும் கொண்டு விளங்குகிறது. ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் எழுதும் திறன் வாய்ந்த மாதவையா பத்மாவதி சரித்திரம் என்ற நாவல் எழுதிப் பேர் பெற்றார். சமூக சீர்திருத்தத்தையே நோக்கமாகக்கொண்டு தமிழ்நாட்டு வாழ்க்கை அமைப்பையே தம் நாவலில் காட்டியுள்ளார். உலக அனுபவத்தோடு ஒட்டிய கதை நிகழ்ச்சிகளைக்கொண்டு உலக வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவே இவர் நாவல் உள்ளது. அக்காலத்தில் மற்றும் சிலர் நாவல் எழுதியுள்ளனர். சரவண முத்துப்பிள்ளை, நடேச சாஸ்திரியார், பொன்னுசாமிப் பிள்ளை, சின்னப்பா பிள்ளை போன்றோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

நாவல் உலகியல் அனுபவங்களை ஒட்டிய கதை நிகழ்ச்சிகளைக் கொண்டு பழகு தமிழ் நடையில் அமையவேண்டுமென்னும் விதி தொடக்க கால நாவல்களிலே உறுதி செய்யப்பட்டது. பாத்திரப்படைப்பும் நாவலுக்கு இன்றியமையாததாகும். சமுதாயத்தில் கண்ணால் நேருக்கு நேர் காணத்தக்க பாத்திரங்களையே நாவலில் காட்டவேண்டும். தொடக்கத்திலேயே தமிழ் நாவல்களில் உண்மை மாந்தரே உருவ மாற்றம் பெற்று உலவும்படியாகக் கதைகள் அமைக்கப்பெற்றன.

ஆங்கிலக் கல்வி பெருக, ஆங்கில நாவல் படிக்கும் ஆர்வம் மிகுந்தது. தமிழ் நாவல்களுக்கும் நல்ல வரவேற்பு ஏற்பட்டது. இதனால் ஆங்கில நாவல்களைத் தழுவியும் மொழி பெயர்த்தும் தமிழில் நாவல்கள் எழுதும் முயற்சி பெருகியது. இவ்வகை நாவல்கள் நூற்றுக்கணக்காக, இந்நூற்றாண்டின் முன்பகுதியில் வெளிவந்தன. இவை துப்பறியும் கதைகளாகவும் மர்மக் கதைகளாகவும் இருந்தன. படிக்கத் தெரிந்த

இளைஞர்களில் இத்தகைய நாவல்களைப் படிக்காதவர் இல்லை என்னும்படி நாவல் ஆர்வம் பொங்கியது. வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், கோதைநாயகி போன்றோர் இத்தகைய 'பரபரப்பு' நாவல்கள் எழுதினர். இதனால் நாவல் இலக்கியம் படிப்போர் கூட்டம் பெருகியது.

நாவல் இலக்கிய வளர்ச்சியில் கல்கி தனி இடம் பெறத் தக்கவர் ஆவர். பத்திரிகை வாயிலாக நாவல் இலக்கியத்தைப் பொது மக்களிடையே பரவச் செய்த பெருமை அவர்க்கே உரியதாகும். எழுதப் படிக்கத் தெரிந்த எல்லோருமே நாவலை விரும்பிப் படிக்கும் நிலையை உருவாக்கினர். நாவல் வார, மாதப் பத்திரிகைகளில் முதல் இடம் பெற்றது. மக்களுக்கு விளங்கத்தக்கதும், கவர்ச்சியும் உணர்ச்சியும் கலந்தவருணனைகளைக் கொண்டதும், நேருக்கு நேர் பேசுவதுபோன்றதுமான நடையில் எழுதிப் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார். நாவல் பொருள் விரிவடைந்தது. பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் போன்ற வரலாற்று நாவல்களை கற்பனையும் தமிழ் உணர்வும் விளங்க எழுதினர். தியாக பூமி, பொய்மான் கரடு போன்ற சமுதாய நாவல்களைப் படைத்துள்ளார். அரசியல் உணர்வை நாவலுள் கலக்கச் செய்துள்ளார். நாட்டு விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாகக்கொண்ட அலையோசை இவ்வகை நாவலுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இவர் கையாண்ட நாவல் நெறிகளைப் பின்பற்றி எழுதி இன்று சிலர் மக்கள் உள்ளங்களைக் கவரும் நாவல் எழுத்தாளர்களாக விளங்குகின்றனர். இவர்களுள் சாண்டில்யன், பார்த்தசாரதி, ஜெகசிற்பியன், அகிலன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

திறனாய்வாளர் சிலர் கல்கியின் நாவல்களில் குறை காண்பர். இவரது நாவல்கள் பாத்திரப்படைப்பால் சிறவாமல் நீண்ட கதைகளாய்ச் செயற்கையான உரையாடலும், மிகையுணர்ச்சியும் மிகுகற்பனையான வருணனைகளும் விந்தையான மனிதர்களும் கொண்டுள்ளன என்பர்.

சமுதாயம், அரசியல் பற்றித் தாம்கொண்ட கொள்கைகளையும் கருத்துக்களையும் விளக்குவதற்கு நாவலைக் கருவியாகக் கொண்டுள்ளனர். முதன் முதல் இவ்வகையில் நாவல் எழுதியவர் வ. ரா. ஆவர். இவர் எழுதிய கோதைத்தீவு, சுந்தரி போன்றவை குறிப்பிடத்தக்கவை. அண்ணாதுரை தாம் எழுதிய பார்வதி பி. ஏ, ரங்கோன்ராதா போன்ற நாவல்களில் தாம் கொண்ட சமூக, அரசியல் கோட்பாடுகளைப் புலப்படுத்தியுள்ளார்.

இன்று நாவல் பாமரமக்களின் இலக்கியமாகத் திகழ்கிறது. பொழுது போக்கு இலக்கியமாகவும் பயன்படுகிறது. பெண்கள் பலருக்கு நாவல் படிப்பதே நல்ல பொழுது போக்காக அமைந்திருக்கிறது. இந்நிலையில் பல பெண்பால் எழுத்தாளர் குடும்ப வாழ்க்கையின் சிக்கல்களையும் பல்வேறு நிலையில் பழகும் பெண்களின் காதல் உணர்வுகளையும் இயல்பு (யதார்த்தம்) நெறிக்குட்பட்டு வருணித்துப் பல நாவல்கள் எழுதி வருகின்றனர்.

லட்சுமி, ராஜம்கிருஷ்ணன், சூடாமணி போன்றோர் சிறந்த பெண்பால் நாவலாசிரியர்கள் ஆவர். நாவல் வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்கள் தனியிடம் பெறத்தக்கவர்களே. குடும்பவாழ்க்கை நிகழ்ச்சிகளால் கதையைப்பின்னி வாழ்க்கையில் காணும் பாத்திரங்களைப் படைத்து நுண்ணுணர்வுகளை மிகை உணர்ச்சியோ மிகு கற்பனையோ இன்றி இயல்புற வருணித்துள்ளனர்.

உரைநடை இலக்கியத்துள் நாவலே சிறந்தது என்பதைத் தமிழ்ப் புலவர்கள் உணர்ந்திருக்கின்றனர். பாத்திரப் படைப்போடு பல்வகைச் சுவை விளக்கங்களுக்கும் சாதனமான நாவல் கற்றோரே அன்றிப் பாமர மக்களும் விரும்பிக் கற்கும் இலக்கியமாக உள்ளது. நாவலின் இன்றியமையாமையை உணர்ந்து கல்லூரி ஆசிரியரான பரிதிமாற்கலைஞன் நாவல்கள் எழுதினார். மறைமலையடிகள் குமுதவல்லி, கோகிலாம்பாள் கடிதங்கள் என்ற தழுவல் நாவல்கள் எழுதினார். ஆனால் இருவரும் நாவல் நடை பழகுதமிழ் நடையாயிருத்தல் வேண்டும் என்பதில் சிந்தனை செலுத்தவில்லை.

பேராசிரியர் மு. வரதராசனுர் எளிய தமிழ் நடையில், கரித்துண்டு, கயமை போன்ற நாவல்களைப் படைத்தளித்துள்ளார். ஆனால் இவரது நாவல்களில் செயலுக்குப் பதிலாகச் சிந்தனைகளே மிகுதியாக உள்ளன. நம் கண் முன் நடமாடும் பாத்திரங்களாக இல்லாமல், கருத்துக்களே பாத்திரங்களாக உருவெடுத்தாற்போல் உள்ளன.

மற்றும் பற்பலர் நாவல் எழுதிவருகின்றனர். சண்முகசுந்தரம், ஜானகிராமன், போன்ருேர் தத்தம் வட்டாரத்தின் வழக்குத் தமிழைக் கையாண்டு உரையாடல்களால் நாவலைச் சிறப்படையச் செய்துள்ளனர். க. நா. சுப்பிரமணியம் போன்ருேர் நாவல்களில் புதிய உத்திகளைக் கையாண்டுள்ளனர். ரகுநாதன், விந்தன் முதலியோர் எளிய மக்கள் தொழிலாளர் போன்ருர், வாழ்க்கையைச் சித்திரித்துள்ள்னர். வார, மாதப் பத்திரிகைகள் வாயிலாகத் தொடர்கதைகளாக வெளியிடப் படுவதால், வருணனை, மிகையுணர்ச்சி முதலியவற்றில் நாவலாசிரியர் கவனம் செலுத்துகின்றனரே அல்லாமல் பாத்திரப்படைப்பில் நாட்டம் கொள்வதில்லை.

பிறமொழியின் சிறந்த நாவல்களுள் சில மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தாகூர், பக்கிம்சந்திரர் போன்ற வங்காள நாவலாசிரியரின் படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. காண்டேகரின் மராட்டிய நாவல்களை மொழி பெயர்த்துள்ளனர். விக்டர் ஹியூகோவின் பிரெஞ்சு நாவல்கள், டால்ஸ்டாய், கார்க்கி முதலியோரின் உருசிய நாவல்கள், செருமானிய நாவல்கள், சுவீடன் நாவல்கள் முதலியவை தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கில நாவலாசிரியர்களான டிக்கன்ஸ், ஹார்டி, ஸ்காட் போன்ருரின் நாவல்கள் மொழிபெயர்ப்பு நாவல்களாய் வந்துள்ளன. மொழி பெயர்ப்பு நாவல்கள் நாவல் வாசகரின் கதைப் பசியைத் தணிப்பதல்லாமல் நாவல் வளர்ச்சியில் எந்த மாற்றமும் ஏற்படுத்தவில்லை.

நாவல் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டது. சமுதாயத்தில் நடமாடும் பாத்திரங்களின் தனித்தன்மையை

ஓவியமாக்கவேண்டும். சமுதாயத்தின் உண்மையான நிலை உள்ளவாறு காட்டப்படுவதைப் பொறுத்தே நாவல் சிறக்க முடியும். ஆதலால் நாவலாசிரியர்கள் காதல், சோகம் போன்றவற்றை மிகைபட வருணிப்பதிலே அமைந்துவிடாது சமுதாயத்தை நுணுகி நோக்க வேண்டும். நாவல் இலக்கியம் வளர்ச்சியை எதிர்நோக்கும் நிலையில்தான் உள்ளது.

இன்றுள்ள சமுதாய நிலையும் மாற்றங்களும் நாவலுக்குரிய பொருள்களாகவே உள்ளன. இந்தியா சுதந்திரம் பெற்றபின் சமுதாய அமைப்பில் மாற்றங்கள் நேர்ந்து வருகின்றன. கல்வியை மூலதனமாகக் கொண்டு அரசாங்கம், வாணிப நிலையங்கள் போன்றவற்றில் வேலை பார்த்து வாழ்க்கையைப் போராட்டமாகக் கொண்டு வாழும் கற்ற நடுத்தர வகுப்பினர் மலிந்துள்ளனர். ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாகவும் பெர்மிட், கோட்டா முறையாலும் குறுநெறியில் செல்வம் திரட்டியவர்கள் உள்ளனர். அரசியலாளர் என்னும் புதிய சமுதாயத்தில் சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், நகர்மன்ற உறுப்பினர், அமைச்சர், கட்சித் தொண்டர் போன்ற பிரிவினர்கள் உள்ளனர். இவர்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்னும் இரு பெரும் பிரிவினுள் நின்று தத்தம் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்களெல்லாம் நாவலுக்கோ சிறுகதைக்கோ நல்ல பாத்திரங்களாக நிற்கமுடியும். மனிதனினின்று மனிதன் மாறுபட்டு நிற்கிறான். ஆதலால் மனித வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட நாவல் சிறக்க வழிகள் உள்ளன.

# சென்னைப் பல்கலைக் கழக வினாக்கள்

1. சங்க காலம் (i) 'தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலமே தலைசிறந்த காலம்'—இக்கொள்கையை ஆராய்க. [ஏப்ரல். 1960]

[ii] பாண்டியர் மதுரையில் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தார்கள் என்பதற்குச் சான்று தருக. [ஏப்ரல். 1960]

2. சங்க இலக்கியம் [i] சங்கத்தமிழின் சிறப்பியல்புகளைச் சுருக்கமாக உணர்த்துக. [செப். 1960]

[ii] சங்க இலக்கியத்தின் தனிச் சிறப்புக்களைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக. [ஏப்ரல். 1961]

[iii] புறநானூறு அல்லது பத்துப்பாட்டு பற்றிய இலக்கிய வரலாறு என்ன? [ஏப்ரல். 1962]

[iv] புறநானூறு அல்லது பதிற்றுப்பத்து வரலாற்று நூலாகவும் விளங்குகிறது என்பதைத் தெளிவுபடுத்துக. [ஏப்ரல். 1963]

[v] தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியத்தின் சிறப்பை மதிப்பிடுக. [செப். 1963]

[vi] எட்டுத் தொகை அல்லது பத்துப்பாட்டுப்பற்றி ஒரு கட்டுரை வரைக. [ஏப்ரல். 1964]

[vii] பத்துப்பாட்டு அல்லது......அல்லது......பற்றி ஒரு கட்டுரை எழுதுக. [செப். 1965]

3. பதினெண் கீழ்க்கணக்கு [i] சங்ககாலத்து நீதிநூல்களின் சிறப்பை எழுதுக. [செப். 1961]

[ii] பதினெண் கீழ்க் கணக்கின் இலக்கிய வரலாறு யாது? [செப். 1963]

[iii] ........அல்லது திருக்குறள் தமிழ் இலக்கியத்தில் பெருமையுடன் விளங்குதலை ஆராய்க [செப். 46]

(vi) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அல்லது...... அல்லது.........பற்றி எழுதுக. (ஏப்ரல். 1967)

4. இரட்டைக் காப்பியங்கள். (i) சிலப்பதிகாரம் அல்லது... தமிழிலக்கியத்தில் பெருமையுடன் விளங்குதலை ஆராய்க. (செப். 1964)

5. பக்தி இலக்கியங்கள். (i) பக்தி இலக்கியம் வளர்ந்த வரலாறு பற்றி எழுதுக. (செப். 1962)

(ii) தேவார திருவாசகம் அல்லது நாலாயிரப்பிர பந்தம் பற்றிக் கட்டுரை வரைக. (ஏப்ரல் 1964)

(iii)...அல்லது பன்னிரு திருமுறை அல்லது நாலாயிர திவ்விய பிரபந்தம் பற்றி ஒரு கட்டுரை வரைக. (செப். 1965)

(iv) ...அல்லது சமய இலக்கியங்கள் அல்லது... பற்றி எழுதுக. (ஏப்ரல் 1967)

6. பெருங் காப்பியங்கள் (i) தமிழில் பெருங்காப்பியம் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறுக. (செப். 1961)

(ii) கம்பருக்கு முற்பட்ட தமிழ்க்காவியங்களைப்பற்றி ஒரு கட்டுரை வரைக. (செப். 62)

(iii) ஐம்பெருங்காவியங்கள் பற்றி விளக்கம் தருக. (செப். 1965, ஏப்ரல் 66)

(iv) காவியங்களின் வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (செப். 66)

7. கம்பர் காலம் (i) கம்பர் காலத்து இலக்கியம் பற்றி நீவிர் அறிவன யாவை. (ஏப்ரல். 62)

8. உரையாசிரியர் (i) தமிழ் இலக்கியத்தில் உரையாசிரியர் பெற்றுள்ள இடத்தையும் சிறப்பையும் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (ஏப்ரல். 66)

(ii) ...உரையாசிரியர்களின் தொண்டு பற்றி ஒரு கட்டுரை வரைக. (செப். 66)

9. பிரபந்தங்கள். (i) 'பரணி, பள்ளுப்பாட்டு' இவற்றுள் ஒன்றன் அமைப்பும் நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக. (ஏப். 1960)

(ii) பிள்ளைத்தமிழ், குறவஞ்சி இவற்றுள் ஒன்றன் அமைப்பும் நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக. [செப். 60]

10. சமயத் தமிழ்த்தொண்டு A. (i) சமணர் ஆற்றிய தமிழ்த் தொண்டு பற்றி மதிப்பிடுக. [ஏப். 64]

B (i) பௌத்தர் தமிழ்த் தொண்டு பற்றி ஒரு கட்டுரை வரைக. [ஏப்ரல் 62]

(ii) பௌத்தர்கள் தமிழ் வளர்ச்சிக்குச் செய்த தொண்டு எத்தகையது. [ஏப்ரல் '65 : 66]

C (i) முஸ்லிம் புலவர்கள் பற்றி கட்டுரை வரைக. [செப். 62]

D. (i) கிறித்தவப் புலவர்கள் தமிழிலக்கியத்திற்குச் செய்த தொண்டு பற்றி ஒரு கட்டுரை எழுதுக. [ஏப். 61]

11. மேனாட்டவர் தமிழ்த் தொண்டு (i) மேலை நாட்டறிஞர் தமிழ் மொழிக்குச் செய்துள்ள சேவையை மதிப்பிடுக. [செப். 60]

(ii) ஐரோப்பியர் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு பற்றி மதிப்பிடுக. [ஏப். 64]

(iii) வீரமாமுனிவரின் புலமையும் தொண்டும் பற்றி ஒரு கட்டுரை வரை. [ஏப். 65 : ஏப். 66]

(iv) ஐரோப்பியர் தொடர்பால் தமிழ் அடைந்த வளர்ச்சியை விளக்குக. [செப். 66]

12. இசை (i) இசைத்தமிழின் இலக்கிய வரலாறு யாது? [ஏப். 63)

13. நாடகம் (i) இருபதாம் நூற்றுண்டில் நாடக வளர்ச்சி என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. [ஏப். 61]

(ii) நாடக நூலாசிரியர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக. [ஏப். 62]

14. உரைநடை (1) உரைநடை இலக்கிய வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக. [செப். 62]

(ii) தமிழ் உரைநடையின் வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக. (செப். 63)

(iii) இருபதாம் நூற்றுண்டில் தமிழ் உரைநடை நூல் பற்றி மதிப்பிடுக. (ஏப். 64)

(iv) தற்கால உரைநடை வளர்ச்சி பற்றி விளக்கி வரைக. (ஏப். 65)

(v) தமிழ் உரைநடை வளர்ச்சி பற்றி எழுதுக. (ஏப். 67)

15. **புனைகதை** [i] சிறுகதையின் இலக்கணம் கூறி அது சிறந்த இலக்கிய வகையாகும் என்பதை ஆராய்க [செப். 61]

[ii] தமிழில் சிறுகதையும் நாவலும் பற்றிய வரலாற்றை எழுதுக. [ஏப். 64]

[iii] தமிழில் கதை இலக்கியம் என்பது பற்றி விளக்கி எழுதுக. [ஏப். 65]

[iv] சிறு கதை இலக்கியம் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. [செப். 66]

16. **கவிதை** [i] இந்நூற்றுண்டின் சிறந்த கவிஞர் ஒருவர் பற்றி விளக்கி வரைக. [செப். 66]

17. **பொது** [i] இருபதாம் நூற்றுண்டு பற்றிய இலக்கிய வரலாற்றை எழுதுக.

18. **புலவர்கள் :** இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்த் தொண்டை விளக்குக.

[i] நக்கீரர், சேக்கிழார், நச்சினுர்க்கினியர், சிவப்பிரகாசர் [செப். 65]

[ii] குமரகுருபரர், ஆறுமுகநாவலர், இராமலிங்க சுவாமிகள், வேதநாயகம் பிள்ளை, மறைமலை அடிகள், திரு. வி. கலியாணசுந்தரனுர் [ஏப். 66]

[iii] உமறுப்புலவர், சிவப்பிரகாச சுவாமிகள், மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார், திரு. வி. கலியாணசுந்தரனுர். [ஏப். 1967]

ஏப்ரல் 1968

[3] கீழ்க்கண்டவற்றுள் ஒன்று பற்றி இலக்கிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக. [20]

[அ] எட்டுத்தொகை நூல்கள்

[ஆ] பிற்காலத்துத் தோன்றிய அறநூல்கள்.

[இ] இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க்கதை நூல்கள்.

[4] திரிகூடராசப்ப கவிராயர், அருணகிரிநாதர், வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், டாக்டர். கால்டுவெல், சம்பந்த முதலியார்—இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்த்தொண்டினை விளக்குக. [10]

ஏப்ரல் 1969

[3] கீழ்க் கண்டவற்றுள் ஒன்று பற்றி இலக்கிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக. [20]

[அ] சங்ககாலம் தமிழ் இலக்கியத்தின் பொற்காலம்.

[ஆ] சமணர் தமிழ்த்தொண்டு

[இ] தமிழில் உரைநடை வளர்ச்சி.

4. ஒட்டக்கூத்தர், குமரகுருபரர், புகழேந்திப்புலவர், நக்கீரர், புதுமைப்பித்தன்—இவர்களில் இருவர் ஆற்றிய தமிழ்த் தொண்டினை விளக்குக. [10]